தொல்காப்பிய அகராதி

பதிப்பாசிரியர்
வ. ஜெயதேவன்

தொகுப்பாசிரியர்
ப.வெ. நாகராஜன்

சென்னைப் பல்கலைக்கழகம்
2004

தொல்காப்பிய அகராதி

பதிப்பாசிரியர்

வ. ஜெயதேவன்

தொகுப்பாசிரியர்

ப.வெ. நாகராஜன்

சென்னைப் பல்கலைக்கழகம்

2004

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதித் திருத்தப்பணித் திட்ட வெளியீடு : 1

© சென்னைப் பல்கலைக்கழகம்

முதல் பதிப்பு **2004**

விலை ரூ. 160/-

கணினி வடிவமைப்பு : திருமதி ஐ. ஜோசபின்

அச்சிட்டோர் : பவர்மேன் பிரிண்டர்ஸ், சென்னை - 1.
☎ : 25243591 / 25248342.

சென்னைப் பல்கலைக்கழகம்

சேப்பாக்கம் – சென்னை – 600 005

பேராசிரியர் ச. ப. தியாகராஜன்
Ph.D., M.D., D.Sc., FNASc., FAMS, FIMSA, FABMS
துணைவேந்தர்

25.06.2004

அணிந்துரை

தமிழர்தம் தலைநூலாகத் திகழும் தொல்காப்பியம் நனிதொன்மையும் தனித்தன்மையும் உடைய தமிழ் இலக்கண நூல்; உலகப்புகழ் பெற்ற ஒப்பற்ற இலக்கண நூல்; எழுத்து, சொல், பொருள் என்னும் முப்பகுப்புகளைக் கொண்டு ஒருங்கிணைந்த இலக்கணப் பார்வை உடையதாய் உலக அரங்கில் ஒளிவீசும் உன்னத நூல். இத்தகு பன்முகச் சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ள தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், பேராசிரியர் எனப் பலரும் உரை எழுதியுள்ளனர். புத்துரைகள், தெளிவுரைகள், விளக்க நூல்கள், ஆய்வு நூல்கள், மொழிபெயர்ப்புகள், வழிநூல்கள், சார்புநூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், கருத்தரங்க நூல்கள் என இந்த முதல்நூலுக்கு நூல்களும் கட்டுரைகளும் பல்கிப் பெருகியுள்ளன.

இவை எல்லாம் தொல்காப்பியப் புரிதலுக்கும் அதன் பெருமை அறிதலுக்கும் பெரிதும் உதவுவன. இந்த வரிசையில் ஓர் இன்றியமையாத நூலாக இந்நூல் சென்னைப் பல்கலைக்கழகம்வழி வெளிவருகிறது. தொல்காப்பிய அகராதி என்னும் பெயரில் அமைந்த இந்த நூலின் துணையால் தொல்காப்பிய மூலத்தைப் படித்து முழுமையாகப் பொருள் புரிந்துகொள்ள இயலும். இது இந்நூலின் தனிப்பெரும் சிறப்பாகும்.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித்துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் வ. ஜெயதேவன் அவர்களை முதன்மைப் பதிப்பாசிரியராகக் கொண்டு அவர் தலைமையில் தமிழ்ப் பேரகராதித் திருத்தப் பணித் திட்டம் செயல்பட்டுவருகிறது. இதற்குப் பல்கலைக்கழக நல்கைக் குழு நிதியுதவி அளித்துள்ளது. இத் திட்டப்பணியின் துணைவிளையுளாக மலர்ந்துள்ள தொல்காப்பிய அகராதி என்னும் இந்நூலை ஆக்கிய திரு. ப. வெ. நாகராசன் அவர்களுக்கும் பதிப்பித்த பேராசிரியர் வ. ஜெயதேவன் அவர்களுக்கும் எனது பாராட்டுகளும் வாழ்த்துகளும் உரியன. தமிழ் உலகம் இந்நூலை வரவேற்றுப் போற்றும் என நம்புகிறேன்.

பேராசிரியர் ச.ப. தியாகராசன்
துணைவேந்தர்

தொலைபேசி (அலுவலகம்) : 25360074 (இல்லம்) : 24423456
தொலைநகல் : 091-44 25367654
மின்அஞ்சல் : vcoffice@unom.ac.in / vc@unom.ac.in / vchennai@md3.vsnl.net.in
தொலை அச்சு : 41 - 6376 UNOM IN

சென்னைப் பல்கலைக்கழகம்

தமிழ் மொழித்துறை

முனைவர். வ. ஜெயதேவன்
பேராசிரியர் - தலைவர்

சென்னை - 600 005.
செப்டம்பர் 14, 2004

பதிப்புரை

சென்னைப் பல்கலைக்கழகம் தமிழ் லெக்சிகன் [Tamil Lexicon] என்னும் பெயரில் 1924-39 காலப்பகுதியில் பின்னிணைப்புத் தொகுதி உள்ளிட்ட ஏழு தொகுதிகளில் 4351 பக்கங்களில் 1, 24, 425 பதிவுகளைக் கொண்டதாய்த் தமிழ்ப் பேரகராதியை வெளியிட்டது. தமிழ் அகராதியியல் பரப்பில் ஒப்பதும் மிக்கதும் இல்லாததாக இவ்வகராதி இன்றளவும் திகழ்ந்துவருகிறது. இதன் முதன்மைப் பதிப்பாசிரியராகப் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்கள் பணியாற்றிய காலத்தில் இவ்வகராதி ஆக்கத்திற்கு உறுதுணையாம் நூல்கள் பலவற்றைத் *தமிழ் அகராதி ஆதார நூற்றொகுதி* என்னும் வரிசையில் பதிப்பித்து வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

சென்னைப் பல்கலைக்கழகம் இப்போது பல்கலைக்கழக நல்கைக் குழுவின் நிதி உதவியைக் கொண்டு தமிழ்ப் பேரகராதியைத் திருத்தியும் புதுக்கியும் பெருக்கியும் பதிப்பிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. நிலைத்த தமிழ் நூல்களுள் காலத்தால் மூத்ததாகக் கருதபபடும் தொல்காப்பியத்தின்கண் இடம்பெற்றுள்ள சொற்களை அகரவரிசையில் அமைத்துப் பொருள்விளக்கம செய்து ஓர் அகராதி உருவாக்கும் பணி தமிழ்ப் பேரகராதித் திருத்தப்பணித் திட்டம்வழி முதற்கண் மேற்கொள்ளப்பட்டது. *தொல்காப்பிய அகராதி* என்னும் பெயரிய இவ்வகராதியினைப் புலவர் ப.வெ. நாகராஜன் அவர்கள் உருவாக்கியுள்ளார். தொல்காப்பியச் சொற்கள் பல தமிழ்ப் பேரகராதியில் இடம்பெறவில்லை என்னும் உண்மை இவ்வகராதி உருவாக்கப்பட்டபின் தெளிவாகியது. தமிழ்ப் பேரகராதித் திருத்தப் பதிப்பில் இக்குறை இராது.

தமிழ்ப் பேரகராதித் திருத்தப்பணித் திட்டத்தின் துணைவிளையுளாகத் தொடர்ந்து தொல்காப்பிய அகராதி போன்று வேறு பல அகராதிகளும் வெளிவர உள்ளன. இவை அனைத்தும் தமிழ்ப் பேரகராதித் திருத்தப்

பதிப்பிற்குப் பெரிதும் உறுதுணையாக அமைவன; அன்றியும் தமிழ் மாணவர்களுக்கும் அறிஞர்களுக்கும் பயன்படுவன. தமிழ் உலகம் இந்நன் முயற்சிகளை வரவேற்கும் என நம்புகின்றேன். இத் தொல்காப்பிய அகராதியின் நிறைகுறைகள் குறித்த மதிப்பீடுகள் வரவேற்கப்படுகின்றன.

இந்நூலுக்கு அணிந்துரை நல்கி அணிசெய்த சென்னைப் பல்கலைக்கழகத்தின் மாண்பமை துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் ச.ப. தியாகராஜன் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,
வ. ஜெயதேவன்

முன்னுரை

ஒரு மொழியில் உள்ள சொற்களை எல்லாம் அகர வரிசையில் தொகுத்து அவற்றின் பொருளைத் தெளிவாக வரையறை செய்யும் நூல் அகராதி எனப்படும். இது இப்பொழுது அகரமுதலி எனவும் வழங்கப்படுகிறது அகராதி பொது, சிறப்பு என இருவகைப்படும் ஒரு மொழியில் உள்ள அனைத்துச் சொற்களையும் இயன்றவரை தொகுத்துப் பொருள் உரைப்பது பொது அகராதி ஆகும் குறிப்பிட்ட ஒரு துறை, வகை, சமயம், காலம் அல்லது நூலில் பயின்றுவரும் சொற்களை மட்டும் தொகுத்துப் பொருள் வரையறை செய்வது சிறப்பகராதி எனப்படும் தொல்காப்பியம் ஆகிய ஒரு நூலில் இடம் பெற்றுள்ள சொற்கள் அனைத்தையும் இடம் சுட்டிப் பொருள்வரையறை செய்வதால் இந்நூல் சிறப்பகராதியின்பாற்படும். இவ்வகராதியில் தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ள 3128 சொற்கள் பொருள் மற்றும் இலக்கணவகைமையோடு விளக்கப்பட்டுள்ளன.

தொல்காப்பியச் சிறப்பகராதி தமிழியல் ஆய்வுகளுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்பது அறிஞர்கள் கருத்து. 1951-ஆம் ஆண்டிற்கு முன்னரே பேரா. எஸ். வையாபுரிப் பிள்ளை தொல்காப்பியச் சொல்வரிசை ஒன்றை உருவாக்கித் தம் ஆய்வுகளுக்குப் பயன்படுத்தியதாகவும், அது அச்சிடப்படவில்லை என்றும் கூறப்படுகிறது

சென்னைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டத்திற்காகத் திருமதி ஆர் சீதாபாய் 1960-ஆம் ஆண்டு தொல்காப்பியச் சொல்லடைவைத் தொகுத்தளித்துள்ளார் திருவனந்தபுரக் கேரளப் பல்கலைக்கழகத்தில் முதுகலை வகுப்பு ஆய்வுக் கட்டுரையாகத் திருமதி சுஜெயா கே.தாஸ் 1968-ஆம் ஆண்டு ஒரு சொல்லடைவை நிறை கலை ஆய்வேடாக மிகச் சிறப்பாக ஆக்கி வழங்கியுள்ளார். (அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டத்திற்காகத் தொல்காப்பியத்தை ஆராய்ந்த பேரா க பாலசுப்பிரமணியன் 1981-ஆம் ஆண்டில் Index of Tolkappiyam ஒன்றை உருவாக்கியுள்ளார். முன்பு கூறப்பெற்ற இரு சொல்லடைவுகளில் சொற்கள் மட்டும் தொகுத்துத் தரப்பெற்றிருக்க மூன்றாவதில் பொருளும் கொடுக்கப்பெற்றுள்ளது இவை மூன்றும் இன்றுவரை அச்சாகவில்லை.)

திருவனந்தபுரப் பன்னாட்டுத் திராவிட மொழியியல் நிறுவனத்திற்காக (International School of Dravidian Linguistics) 1997-ஆம் ஆண்டில் தொல்காப்பியச் சிறப்பகராதி ஒன்றை நான் உருவாக்கினேன் இதனைத் திரு த. விஷ்ணுகுமாரன் அச்சகப்பணிகளைக் கவனித்து முடிக்க 2000-ஆம் ஆண்டில் அந்நிறுவனம் வெளியிட்டுள்ளது இந்தச் சிறப்பகராதியில் சொற்கள் பொருளுடனும் இலக்கணக் குறிப்புடனும் அவை பயிலும் நூற்பாக்களின் அடி எண்ணுடனும் தரப்பட்டுள்ளன.

இதுவரை கூறப்பெற்றுள்ள ஆய்வேடுகள், பதிப்பு ஆகிய அனைத்திலும் பெயர், வினைச் சொற்களின் எல்லா வடிவங்களும் காட்டப்பெற்றிருக்கும் எடுத்துக்காட்டாக, பெயர்ச்சொல்: பெயர், பெயரை, பெயரொடு, பெயர்க்கு, பெயரின், பெயர்வயின் என்பன இடம்பெற்றுள்ளன வினைச்சொல். சிவணும், சிவணாது, சிவணிய, சிவணும் (பெயரெச்சம்), சிவணி, சிவணல் (தொழிற்பெயர்) என்பன தனித்தனியே காட்டப்பெற்றுள்ளன

இம்முறை மொழிநூல் ஆய்வாளர்களுக்கும் இலக்கண அறிஞர்களுக்கும் மிகவும் பயன்படுவது ஆகும் ஆனால் தொல்காப்பியத்தைப் படித்து அதன் பொருளைத் தெளிவாக உணர்ந்து

கொள்ள விரும்பும் ஒருவருக்கு இவ்வளவு விரிவான பேரகராதி இன்றியமையாதது அன்று. ஒரு சொல்லின் அடிப்படை வடிவத்தையும் அதன் தெளிவான பொருளையும் சுட்டி, அது எவ்வாறு வழங்கப்பட்டுள்ளது எனக்காட்ட ஒரு மேற்கோளும் இருந்தால் போதுமானது. இந்த அகராதி அவ்வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

ஒரு சராசரி வாசகர் தொல்காப்பிய உரைகளைத் தேடாமல் மூலத்தின் பொருளை எளிதில் உணர இந்தத் தொல்காப்பிய அகராதி போதுமானதாக இருக்கும் என நம்புகிறேன். அந்த நோக்கத்தில்தான் இந்நூல் உருவாக்கப்பெற்றுள்ளது. (என்றாலும் தொல்காப்பியத் தொடர்பான ஆய்வுகளுக்குப் பழைய உரைகளைப் படித்தே ஆக வேண்டும்.)

இந்தத் தொல்காப்பிய அகராதியின் அகர வரிசையில் இரண்டாம் எழுத்தில் உயிர்மெய்க்குமுன் மெய்யெழுத்து வரும் முறை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் ஒரே வடிவத்தில் அமைந்த தலைச்சொற்கள் பெயர்ச்சொல், செயப்படுபொருள் குன்றா வினை, குன்றிய வினை, இடைச்சொல் என வரிசைப்படுத்தப் பெற்றுப் பெயர், வினையடைகள் ஆங்காங்கு அளிக்கப்பட்டுள்ளன இந்த அளவில் இலக்கணக் குறிப்புகளும் தரப்பட்டுள்ளன. மிகச்சில இடங்களில் மட்டும் விளக்கத்திற்காக முதல்நிலைத் தொழிற்பெயர் எனக் கொடுக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட ஒரு நூற்பாவில் ஒரே சொல்லிற்குப் பழைய உரையாசிரியர்கள் வேறுவேறு பொருள் கொண்டிருந்தால் அவை தெளிவாகச் சுட்டப்பட்டுள்ளன.

தொல்காப்பியத்தில் தொழிற்பெயர் வடிவில் மட்டும் ஒருவினை ஆளப்பட்டிருந்தால் அந்த வடிவம் மட்டுமே இந்த அகராதியில் காட்டப்பட்டுள்ளது.

எ-டு.: முனிதல், வெரூஉதல்.

அவ்வாறின்றித் தொழிற்பெயராகவும், வினைத்திரிபு வடிவங்களோடும் ஒரு வினை பயிலப்பட்டிருந்தால் அது வினைச்சொல்லாகவே கொடுக்கப்பெற்றுள்ளது.

எ-டு.. வருகை புரிதல் என்னும் பொருளில் வருதல் என்னும் தொழிற்பெயர் வடிவமும் வந்த, வந்தது, வந்து, வர, வரின், வரு என்னும் வினைத்திரிபுகளும் மூலத்தில் உள்ளன. இந்தப் பொருளில் இந்த அகராதியில் “வா-தல் (வருதல்)” என்னும் ஒரு தலைச்சொல்லே சுட்டப்பட்டுள்ளது. அதே சமயத்தில் வருதல் என்னும் சொல் பயிலுதல், தோன்றுதல் என்னும் பொருள்களில் தொழிற்பெயராக மட்டும் காணப்படுகிறது. எனவே இப்பொருளில் வருதல் என்னும் தொழிற்பெயர் வடிவம் மட்டுமே சுட்டப்பெற்றுள்ளது.

தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள இலக்கணக் கலைச்சொற்கள் அனைத்தும் இந்த அகராதியில் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன. கலைச்சொற்கள் தனிச்சொல்லாக அன்றிச் சொற்றொடராக அமைந்துள்ள இடங்களில் எல்லாம் தலைச்சொற்கள் தொடராகவே அமைக்கப்பட்டுள்ளன

எ-டு.: முடிந்தது காட்டல், மாறு கொளக் கூறல், புண்கிழித்து முடித்த மறம், மறுதலை சிதைத்துத் தன் துணிபு உரைத்தல்.

இந்தத் தொல்காப்பிய அகராதிக்குத் திருவனந்தபுரப் பன்னாட்டுத் திராவிட மொழியியற் கழகம் 1996-இல் வெளியிட்ட “தொல்காப்பிய மூலம் பாடவேறுபாடுகள்: ஆழ்நோக்காய்வு” என்னும் பதிப்பு அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளது. அந்தப் பதிப்பில் நூல் முழுவதற்கும் தொடர்

எண் வரிசையாகக் கொடுக்கப்பட்டிருப்பதோடு, பாட வேறுபாடுகளும் அவற்றைப் பற்றிய குறிப்புகளும் அங்கங்கேயே தரப்பட்டிருப்பதால் அது அடிப்படையாக ஏற்கப்பெற்றது. இந்த அகராதியில் இடம் பெற்றுள்ள சுருக்கக் குறியீடுகளின் விளக்கம் தனியாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

என் அறியாமையாலும், மறதியாலும், இயந்திரங்களாலும் இந்த அகராதியில் ஏதாவது பிழைகள் ஏற்பட்டிருப்பின் அவற்றை அறிஞர்கள் சுட்டிக் காட்டினால் அடுத்து வரும் பதிப்புகளுக்கும், தமிழ்ப் பேரகராதி விரிவாக்கத்திற்கும் பேருதவியாக இருக்கும். எனவே தமிழ்ப் பேராசிரியர்கள் இத்துறையில் உதவ வேண்டுகிறேன்

தொல்காப்பியப் பெருங்கடலுள் மற்றுமோர் முறை முக்குளிக்க வாய்ப்பளித்த சென்னைப் பல்கலைக்கழகத்திற்கும், குறிப்பாக, தமிழ்மொழித் துறைத்தலைவர் பேரா. வ. ஜெயதேவன் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்

இவ்வகராதி ஆக்கத்திற்குத் தொடக்கநிலையில் ஊக்கம் அளித்து வழிகாட்டிய முனைவர் வெ. முருகன் அவர்களுக்கும், உசாத்துணையாக இருந்து உதவிய திரு. கு. சிவமணி அவர்களுக்கும் என் நன்றியைப் புலப்படுத்திக் கொள்கிறேன். தொல்காப்பியப் பதிப்புகளை வழங்கிய முனைவர் மு. பாலகிருஷ்ணன், முனைவர் ந. இராணி ஆகிய இருவருக்கும் என் நன்றிகள் உரியன. நூல் முழுவதையும் தட்டச்சு நிலையில் மெய்ப்புத் திருத்த உதவி புரிந்த செல்வி ந. ஆனந்தி, பலவகைகளிலும் உதவிய செல்வன் வை. சிவநேசன், திருமதி ந. சுமதி, செல்வன் இல. கணேசன் ஆகியோருக்கும் எனது நன்றி கலந்த நல்வாழ்த்துகள்.

திருமதி ஐ. ஜோசபின் அவர்கள் விரைவாகவும், பிழையின்றியும், அழகுடனும் கணிப்பொறியில் வடிவமைத்து உதவினார்; திரும்பத் திரும்ப மாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட போதும் சளைக்காமல் அவர் மாற்றியமைத்தார். அவருக்கு எனது நன்றி கலந்த வாழ்த்துகளை உரித்தாக்கி மகிழ்கிறேன்.

தொல்காப் பியப்பெருநூல் தோற்றும் பொருள்எல்லாம்
பல்காற் பயின்றுரைத்த பண்டையோர் - நல்கார்வம்
பெற்றுவரும் இந்தப் பெரும்பனுவல் நன்றாக
முற்றவருள் செய்தானை முன்னு.

சென்னை - 600 005 ப.வெ. நாகராஜன்
23-6-2004

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

அகநா.	அகநானூறு
இடை.	இடைச்சொல்
இளம்.	இளம்பூரணர்
எ-டு.	எடுத்துக்காட்டு
ஐங்.	ஐங்குறுநூறு
கல்.	கல்லாடர்
கலி	கலித்தொகை
குறள்.	திருக்குறள்
குறிஞ்சிப்.	குறிஞ்சிப்பாட்டு
குறுந்.	குறுந்தொகை
கோவை.	திருக்கோவையார்
சி.பா.	சிறப்புப்பாயிரம்
சேனா.	சேனாவரையர்
தெய்வச்.	தெய்வச்சிலையார்
தொல்.	தொல்காப்பியம்
நச்சர்.	நச்சினார்க்கினியர்
நற்.	நற்றிணை
நன்னூ.	நன்னூல்
பதிற்றுப்.	பதிற்றுப்பத்து
பு.வெ.மா.	புறப்பொருள் வெண்பாமாலை
புறநா.	புறநானூறு
பெயர்.	பெயர்ச்சொல்
பெருங்.	பெருங்கதை
பெரும்.	பெரும்பாணாற்றுப்படை
பேரா.	பேராசிரியர்
பொருநர்.	பொருநராற்றுப்படை
பொருள்.	பொருளதிகாரம்
மதுரைக்.	மதுரைக்காஞ்சி
யா கலம்.	யாப்பருங்கலம்
யா.காரிகை	யாப்பருங்கலக் காரிகை
வினை.	வினைச்சொல்

பொருளடக்கம்

1.	*அணிந்துரை*	iii
2.	பதிப்புரை	v
3.	முன்னுரை	vii
4.	சுருக்கக் குறியீட்டு விளக்கம்	x
5.	தொல்காப்பிய அகராதி	1
6.	பிற்சேர்க்கைகள்	
	அ. பனம்பாரனார் *சிறப்புப் பாயிர அகராதி*	268
	ஆ. தொல்காப்பிய நூல் அமைப்பைப் பற்றிய பழைய பாடல்கள்	273
	இ. *அதிகார,* இயல் பெயர் விளக்கம்	275
	ஈ. தொல்காப்பிய நூற்பாத் தொகை *இயல்வாரி அட்டவணை*	279
	உ. தொல்காப்பியப் பொருளடைவு	280

அ *பெயர்*

வாயை நன்கு திறப்பதாலும் மிடற்று வளியாலும் ஒரு மாத்திரை அளவு உடையதாக ஒலிக்கப்படும் உயிர்க் குறில் ஒலி; அவ்வொலியை வரி வடிவில் சுட்டுவதும் தமிழ் நெடுங்கணக்கில் முதலாவதாக அமைவதுமான உயிரெழுத்து. *அ ஆ ஆஇரண்டு அங்காந்து இயலும்* (தொல்.85:2); *பன்னீர் உயிரும் தம்நிலை திரியா மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்* (தொல்.84:2-3); *அஇஉ எஒ என்னும் அப்பால் ஐந்தும் ஓர் அளபு இசைக்கும் குற்றெழுத்து என்ப* (தொல்.3:2-4); *ஔகார இறுவாய்ப் பன்னீர் எழுத்தும் உயிர்என மொழிப* (தொல்.8); *அகர முதல் னகர இறுவாய் முப்பஃது என்ப சார்ந்துவரன் மரபின் மூன்று அலங்கடையே* (தொல்.1:2-3).

அ *இடை*

1. இடம், காலம், பொருள் முதலியவற்றின் சேய்மையை உணர்த்தும் சேய்மைச் சுட்டு, அந்த *அ இ உ அம் மூன்றும் சுட்டு* (தொல். 31).

2. அகச்சுட்டு. *அவன் இவன் உவன் என வரூஉம் பெயரும்* (தொல். 649:2).

3. புறச்சுட்டு. *அ பொருள் கூறில் சுட்டிக் கூறல்* (தொல். 520)

4. பண்டறிசுட்டு. *கொற்றவை நிலையும் அ திணைப் புறனே* (தொல். 1009:2).

5. அசைநிலைகளுள் ஒன்று. *கடப்பாடு அறிந்த புணரியலான* (தொல். 37:2).

6. சாரியைகளுள் ஒன்று. *சார்ந்துவரின் அல்லது தமக்கு இயல்பு இல என* (தொல். 101:1).

7. ஆறாம் வேற்றுமைப் பன்மை உருபு.*அவரவர் உறுபிணி தமபோல் சேர்த்தியும்* (தொல்.1146:8).

8. பலவின்பால் வினைமுற்று விகுதி. *அப்பண் பினவே நுவலுங் காலை* (தொல் 601:4) (*பண்பின+ஏ*).

9. பலவின்பால் பெயர் விகுதிகளுள் ஒன்று. *பல்லபலசில என்னும் பெயரும்* (தொல் 655:1).

10. பெயரெச்ச விகுதிகளுள் ஒன்று. *மெய்வகை அமைந்த பதினேழ் நிலத்தும்* (தொல் 1311:2).

11. வினையெச்ச விகுதிகளுள் ஒன்று. *நாணுநெஞ்சு அலைப்ப விடுத்தற் கண்ணும்* (தொல்.1057:10).

12. வியங்கோள் விகுதி. *வாழிய என்னும் செய்வென் கிளவி* (தொல். 212:1).

13. ஆகார உயிரளபெடையைக் குறிக்கும் எழுத்து. *இடம் பெற்றுத் தழாஅல்* (தொல். 1051:2).

அஃகான் *பெயர்*

அகரம். *அஃகான் நிற்றல் ஆகிய பண்பே* (தொல். 123:2).

அஃகு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. அளவில் குறைதல். *ஆய்தம் அஃகாக் காலையான* (தொல். 40:3).

2. குறைவாகப் பயிலுதல்; அருகி வழங்குதல். *குறித்து எதிர்மொழிதல் அஃகித் தோன்றும்* (தொல். 1133).

அஃது *பெயர்*

அது; உயிரெழுத்துகளில் தொடங்கும் சொற்களுக்கு முன் வரும் சுட்டுப்பெயர். *எ-டு.:*அஃதன்று. *மருள்அறு சிறப்பின்அஃது உவமம் ஆகும்* (தொல். 1233:2).

அஃறிணை *பெயர்*

மக்கள் அல்லாத பிற உயிரினங்களும், உயிர் இல்லாத எல்லாப் பொருள்களும் அடங்கிய இலக்கணப்பகுப்பு. *அஃறிணை என்மனார் அவர்அல பிறவே* (தொல். 485:2).

அஃறிணைப்பெயர் *பெயர்*
உயர்திணை அல்லாததும், ஒன்று பல ஆகிய பாலை உணர்த்துவதுமாகிய பெயர்ச்சொல். *எ-டு.:* யானை,மரங்கள். *உயர்திணைப் பெயரே யஃறிணைப் பெயர்என்று* (தொல். 118:1).

அஃறிணையியற்பெயர் *பெயர்*
ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாய் நின்று பால் உணர்த்தாத அஃறிணைப் பெயர்ச்சொல். *எ-டு.* யானை. *தெரிநிலை உடைய அஃறிணை இயற்பெயர்* (தொல். 658:1).

அஃறிணைவிரவுப்பெயர் *பெயர்*
உயர்திணையை உணர்த்தும் ஈற்றெழுத்துகளைப் பெற்ற அஃறிணைப் பெயர்ச்சொல் *எ-டு.:* வீரன் (நாயின் பெயர்). *அஃறிணை விரவுப்பெயர் இயல்புமார் உளவே* (தொல். 156).

அக்கு *இடை*
(தொல்காப்பியர் காலத்தில் வழக்கில் இருந்து பிறகு வழக்கு இழந்துவிட்ட) ஒரு சாரியை. *ஒன்னே ஆனே அக்கே இக்கே* (தொல் 120:3)

அகக்காழ் *பெயர்*
மரத்தின் உள்வயிரம். *அகக்காழனவே மரம் என மொழிப* (தொல் 1589)

அகத்திணை *பெயர்*
பொருள் இலக்கணத்தின் இரு பெரும் பகுப்புகளுள் ஒன்று. திருமணத்திற்குமுந்தைய (களவு), பிந்தைய (கற்பு) காதல் ஒழுக்கத்தை விளக்கும் பகுதி. *அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே* (தொல் 1005.2).

அகத்தோன் செல்வம் *பெயர்*
உழிஞைத் திணையின் துறைகளுள் ஒன்று; முற்றுகையிடப்பட்டுக் கோட்டைக்குள் இருக்கும் அரசனை எளிதில் வெல்ல முடியாதபடி அமைந்துள்ளதாகிய வளமைச் சிறப்பு. *அகத்தோன் செல்வமும் அன்றி* (தொல் 1017:4)

அகத்தோன் வீழ்ந்த நொச்சி *பெயர்*
உழிஞைத் திணையின் துறைகளுள் ஒன்று; முற்றுகையிடப்பட்டோரது போர் முயற்சி உணவுப்பொருள் தட்டுப்பாடு முதலியவற்றால் தளர்ந்து போதல், அகத்தோன் செல்வம் என்னும் துறைக்கு எதிர்மாறானது. *அகத்தோன் வீழ்ந்த நொச்சியும்* (தொல் 1018:5).

அகப்படு-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*
(உள்ளத்தில்) நிலைப்பித்தல். *தன்நிலை உரைத்தல் தெளிவு அகப்படுத்தல்* (தொல் 1050:4).

அகப்படு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*
அளவில் குறைதல், சுருங்குதல் *தரவு அகப்பட்ட மரபினது என்ப* (தொல் 1394:1).

அகப்பாட்டு வண்ணம் *பெயர்*
செய்யுள் ஒன்றின் பாடுபொருள் முற்றுப்பெற்றுவிடினும் அதன் ஈற்றடியின் ஓசை, பொருள் முடியாததுபோல் நிற்கும் பாவோசை அதாவது என், ஏ, ஓ என்பனவற்றால் நிறைவுபெறாது வேறு எழுத்துகளால் முடிவடையும் செய்யுளின் ஓசை *அகப்பாட்டு வண்ணம் முடியாத் தன்மையின் முடிந்ததன் மேற்றே* (தொல். 1483)

அகம்[1] *பெயர்*

1. மனிதர்களை ஒன்றைப்பற்றி உணரவும், நினைக்கவும், விருப்பு வெறுப்புக் கொள்ளவும் செய்யும் நுண்ணுணர்வுத் திறன்; மனம்; உள்ளம். *கிழவி அகம்மலி ஊடல் அகற்சிக் கண்ணும்* (*தொல்.* 1109:1-2).

2. மக்கள் வசிப்பதற்குரிய கட்டடம், வீடு; மனை. *அகம்புகல் மரபின் வாயில்கட்கு உரிய* (*தொல்.* 1102:6).

3. உள்ளடக்கம் *வேந்துறு தொழிலே யாண்டினது அகமே* (*தொல்.* 1139)

அகம்[2] *இடை*

இட வேற்றுமை ஆகிய ஏழாம் வேற்றுமையின் சொல்லுருபுகளுள் ஒன்று *மனையகம் புகாஅக் காலையான* (*தொல்.* 1081:3).

அகரம் *பெயர்*

அ என்னும் எழுத்து. *அகர உகரம் ஒளகாரம் ஆகும்* (*தொல்* 55)

அகல்-தல்[1] (அகறல்) *செயப்படுபொருள் குன்றா வினை*

ஒன்றை அல்லது ஒருவரைவிட்டுப் பிரிந்து போதல் *அகன்ற கிழவனைப் புலம்புநனி காட்டி* (*தொல்* 1097:12)

அகல்-தல்[2] *செயப்படுபொருள் குன்றிய வினை*

விரிவாதல், பெருகுதல். *உள்நின்று அகன்ற உரையொடு புணர்ந்து* (*தொல்.* 1425:5)

அகலம் *பெயர்*

1. விரிவான இடப்பரப்பு *வியல் என் கிளவி அகலப் பொருட்டே* (*தொல்* 848).

2. மிகுதி *அன்பினது அகலமும்* (*தொல்* 991:10).

அகவல் *பெயர்*

காண்க ஆசிரியப்பா *அகவல் என்பது ஆசிரியம்மே* (*தொல்.* 13-11).

அகற்சி *பெயர்*

1. பிரிவு. *அகம்மலி ஊடல் அகற்சிக் கண்ணும்* (*தொல்.* 1109·2)

2. சமய ஒழுகலாறாக ஐம்புல இன்பங்களை வேண்டுமென்றே நீக்குதல், துறவு *அருளொடு புணர்ந்த அகற்சி யானும்* (*தொல்* 1026:22).

அகன் *பெயர்*

காண்க: அகத்திணை *மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்* (*தொல்.* 1004·1)

அகைப்பு வண்ணம் *பெயர்*

ஆற்றோட்டம் போல இயல்பாக ஒழுகாமல் இடையிடையே விட்டுவிட்டு - நின்றுநின்று நடக்கின்ற பாவோசை *அகைப்பு வண்ணம் அறுத்தறுத்து இயலும்* (*தொல்* 1488)

அங்கதச்செய்யுள் *பெயர்*

ஒரு மனிதரை அல்லது பொருளைப் புகழ்வது போலப் பழித்தல் அல்லது பழிப்பது போலப் புகழ்தல் அமைந்த பா. *வசையொடும் நசையொடும் புணர்ந்தன்றாயின் அங்கதச் செய்யுள் என்மனார் புலவர்* (*தொல்.* 1389)

அங்கதப்பாட்டு *பெயர்*

காண்க: அங்கதச்செய்யுள். *அங்கதப் பாட்டு அளவு அவற்றோடு ஒக்கும்* (தொல். 1418).

அங்கதம் *பெயர்*

காண்க: அங்கதச்செய்யுள். *அங்கதந்தானே அரில்தபத் தெரியின்* (தொல். 1384:1).

அங்கா-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

வாயைச் சிறிது திறத்தல். *அஆ ஆஇரண்டு அங்காந்து இயலும்* (தொல். 85:2).

அங்கு *பெயர்*

அவ்விடம், அப்பொழுது. *அங்கு அதன் முதல்வன் கிழவன் ஆகும்* (தொல். 1089:2).

அச்சத்தின் அகறல் *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; களவியலில் ஒழுகும் தலைவி ஊராரின் அலர்மொழிகளுக்கும் தலைவனுக்கு வழியில் ஏற்படும் இடுக்கண்களுக்கும் அஞ்சியவளாகத் தலைவனை அணுகாமல் விலகியிருத்தல். *அச்சத்தின் அகறல் அவன்புணர்வு மறுத்தல்* (தொல். 1220:2).

அச்சம் *பெயர்*

1. தன் உடலுக்கோ உடைமைக்கோ ஏதாவது தீங்கு நேரக்கூடும் என்னும் ஒருவரது உள்ளுணர்ச்சி; பயம். *அச்சமும் உவகையும் எச்சம் இன்றி* (தொல். 1040:16).

2. பெண்களுக்குரிய சிறப்புப் பண்புகள் (மகடூஉக் குணம்) நான்கனுள் ஒன்று. இதுவரை பார்த்திராத ஒன்றைப் பார்க்கும்போது ஏற்படும் உணர்ச்சி. *கண்ணே அலமரல் இமைப்பே அச்சம் என்று* (தொல். 1044:2).

அச்சுறு-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

அஞ்சச்செய்தல்; பயப்படச்செய்தல். *அஞ்சி அச்சுறுத்தலும்* (தொல். 1064:12).

அசை *பெயர்*

1. *காண்க:* அசைநிலை. *அம்ம என்னும் அசைச்சொல்* (தொல். 640:1).

2. எழுத்துகள் இணைவதால் உருவாகும் செய்யுள் உறுப்பு. *காண்க:* நேர், நிரை. *அசையும் சீரும் இசையொடு சேர்த்தி* (தொல். 1272:1).

அசை-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

அசைநிலையாக நிற்றல். *அசைக்கும் கிளவி என்ப* (தொல். 909:4).

அசைச்சீர் *பெயர்*

ஓர் அசையால் ஆன சீர்; பெரும்பாலும் வெண்பாவின் ஈற்றுச்சீர். *அசைச்சீர்த் தாகும் அவ்வழி யான* (தொல். 1333).

அசைச்சொல் *பெயர்*

காண்க: அசைநிலை. *மாஎன் கிளவி வியங்கோள் அசைச்சொல்* (தொல். 758).

அசைநிலை *பெயர்*

தனக்கெனத் தனிப்பொருளின்றிச் செய்யுளில் யாப்பு வடிவை நிறைவு செய்வதற்காகவோ, ஒலிச் செம்மைக்காகவோ வரும் பகுதி. *மற்றுஎன் கிளவி வினைமாற்று அசைநிலை* (தொல். 747:1).

அசைவு *பெயர்*
மூப்பு, உடல்நலக் குறைவு, செல்வம் பதவி முதலியவற்றில் ஒருவர் தனது பழைய உயர் நிலையிலிருந்து தாழ்தல். *இளிவே இழவே அசைவே வறுமைஎன* (தொல். 1202:1)

அஞ்சு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*
அச்சப்படுதல்; பயப்படுதல் *நின்று நனி பிரிவின் அஞ்சிய பையுளும்* (தொல் 1096:39)

அஞர் *பெயர்*
ஏற்பட்ட தீங்கு ஒன்றினால் உண்டாகும் வருத்தம்; துன்பம் *கடைக்கொண்டு பெயர்தலிற் கலங்குஅஞர் எய்தி* (தொல். 991:4).

அட்டு *பெயர்*
வெல்லக்கட்டி. *பனையின் முன்னர் அட்டுவரு காலை* (தொல் 285.1)

அடக்கம் *பெயர்*
உயர்ந்தோர்முன் பணிந்து நடக்கும் ஒழுக்கம்; பணிவு. *தன்மை அடக்கம் வரைதல் அன்பு எனாஅ* (தொல் 1209:3).

அடக்கியல் *பெயர்*
காண்க: சுரிதகம். *அடக்கியல் இன்றி அடிநிமிர்ந்து ஒழுகியும்* (தொல். 1409.4).

அடக்கியல்வாரம் *பெயர்*
காண்க: சுரிதகம் *அடக்கியல்வாரம் தரவோடுஒக்கும்* (தொல். 1404).

அடக்கு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*
குறிப்பிட்ட வரையறைக்கு உட்படுத்துதல் *செய்யா மரபில் தொழிற்படுத்து அடக்கியும்* (தொல் 1146:7).

அடங்கு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*
1. உட்படுதல்; ஏதாவது ஓர் பிரிவிற்குள் அமைதல். *ஆஇரு பாவினுள் அடங்கும் என்ப* (தொல். 1367:3)
2. கட்டுப்படுதல்; பணிந்து நடத்தல். *அடங்கா ஒழுக்கத் தவன்வயின் அழிந்தோளை* (தொல்.1100:6)

அடல் *பெயர்*
போர்புரிதல். *அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித் தன்றே* (தொல் 1012:2).

அடி[1] *பெயர்*
உயிரினங்கள் நிற்பதற்குப் பயன்படுவதும், காலின் கீழ்ப்பகுதியுமாகிய உறுப்பு; பாதம் *மெல்என் சீறடி புல்லிய இரவினும்* (தொல் 1096:34).

அடி[2] *பெயர்*
சீர்கள் சேர்ந்து உருவாகின்ற செய்யுள் அடி. *நாற்சீர் கொண்டது அடி எனப்படுமே* (தொல் 1293)

அடிசில் *பெயர்*
உணவு. *அடிசிலும் பூவும் தொடுத்தற் கண்ணும்* (தொல். 1096:14)

அடிமறி *பெயர்*

பொருள்கோள்களுள் ஒன்று; ஒரு செய்யுளின் அடிகளை இடம் மாற்றிக் கொண்டுகூட்டிப் பொருள் காணுதல். *அடிமறிச் செய்தி அடிநிலை திரிந்து* (தொல். 891 :1).

அடிமை *பெயர்*

தானாகவே இயங்கும் தன்னுரிமை அற்றவன். *அடிமை வன்மை விருந்தே குழுவே* (தொல்.541:2).

அடுக்கு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஒன்றன்மேல் ஒன்றாக ஒன்றை வைத்தல் *உருபுதொடர்ந்து அடுக்கிய வேற்றுமைக் கிளவி* (தொல். 588:1).

அடு-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. ஒன்றை அல்லது ஒருவரைச் சார்தல். *பெண்மை அடுத்த இகர இறுதியும்* (தொல் 650:3)
2. தொடர்தல்; பக்கத்தது ஆதல். *ஆண்மை அடுத்த மகன்என் கிளவியும்* (தொல் 650:1).

அடு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. உடம்பிலிருந்து உயிரைநீக்குதல், கொல்லுதல். *பட்ட வேந்தனை அட்ட வேந்தன்* (தொல் 1022:10).

2. மற்றவருக்குத் தீங்கினால் வருத்தம் ஏற்படச் செய்தல், துன்புறுத்துதல். *பசிஅட நிற்றல்* (தொல். 1219:3).

அடை[1] *பெயர்*

பெயர்ச்சொல்லின் வடிவம், வண்ணம் முதலிய பண்புகளையோ வினைச்சொல்லின் செயல்பாட்டுத் தன்மையையோ விளக்க வருகின்ற சொல், அடைமொழி; விசேடணம். *அடைசினை முதல்என முறைமூன்றும் மயங்காமை* (தொல். 510:1).

அடை[2] *பெயர்*

காண்க. அடைநிலை. *இடைநிலைப் பாட்டே தரவுபோக்கு அடைஎன* (தொல். 1392:1).

அடை[1]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. கிடைக்கப்பெறுதல் *தாயத்தின் அடையா வீயச் செல்லா* (தொல் 1170:1).
2. பொருந்துதல். *ஆங்குஅ நால்வகையினும் அடைந்த சார்போடு* (தொல். 1445:3).

அடை[2]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

செறிதல்; சேர்ந்து அழுத்துதல். *கண்ணுற்று அடைய யகாரம் பிறக்கும்* (தொல். 99:2).

அடைநிலை *பெயர்*

கலிப்பாவில் இடம் பெறுகின்ற தனிச்சொல் இது செய்யுளின் ஈற்றுப்பகுதியாகிய சுரிதகத்திற்கு முன்னர் வரும் உறுப்பு ஆகும். *அடைநிலைக் கிளவி தாழிசைப் பின்னர்* (தொல். 1395:1)

அண்ணம் *பெயர்*

வாயின் மேற்பகுதி *நுனிநா அணரி அண்ணம் வருட* (தொல். 95:1).

அண்ணு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

கிட்டுதல், அணுகுதல். *நாவிளிம்பு வீங்கி அண்பல் முதலுற* (தொல். 96.1).

அண்மை *பெயர்*

அருகு, அருகாமை; சமீபம். *அண்மைச் சொல்லே இயற்கை ஆகும்* (தொல். 614)

அணங்கு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

வருத்துதல்; துன்பப்படுத்துதல். *புறத்தோன் அணங்கிய பக்கமும்* (தொல் 1017:5).

அணங்கு *பெயர்*

பேய். *அணங்கே விலங்கே கள்வர்தம் இறைஎன* (தொல். 1205:1)

அணர்-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

மேல்நோக்கிச் செல்லுதல், மேல் எழுதல். *நுனிநா அணரி அண்ணம் வருட* (தொல். 95:1).

அணி[1] *பெயர்*

1. அழகு *அணிநிலை உரைத்தலும் கூத்தர் மேன* (தொல். 1118:5).
2. அணிகலன்; நகை. *ஊழ் அணி தைவரல்* (தொல். 1211.2)

அணி[2]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. (எண்ணெய்) தேய்த்துக் கொள்ளல்; பூசிக்கொள்ளுதல். *நெய்அணி மயக்கம் புரிந்தோள் நோக்கி* (தொல் 1096:28).
2. புணச்செய்தல், அணிவித்தல் *இன்நகைப் புதல்வனைத் தழீஇ இழைஅணிந்து* (தொல். 1101:9).

அணி[3] *வினையடை*

அண்மையில் என இடத்தை உணர்த்தும் இடைச்சொல். *இனிஅணி* என்னும் காலையும் இடனும் (தொல். 237:1).

அணிந்தவை திருத்தல் *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; முதன்முதலாகக் காதல்வயப்பட்ட தலைவி (தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்காக) தான் அணிந்துள்ள அணிகலன்களைச் சரிசெய்து கொள்ளுதல். *அல்குல் தைவரல் அணிந்தவை திருத்தல்* (தொல். 1212:1)

அணில் *பெயர்*

நீண்ட அடர்ந்த வாலையும், முதுகில் மூன்று கோடுகளையும் உடைய ஒரு சிறு விலங்கு. *மூங்கா வெருகு எலி மூவரி அணிலொடு* (தொல். 1508:1).

அணுகு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

நெருங்குதல். *அகன்றுபொருள் கிடப்பினும் அணுகிய நிலையினும்* (தொல் 1469.1).

அணை *பெயர்*

பஞ்சணை; மெத்தை. *பயம்கெழு துணைஅணைப் புல்லி* (தொல். 1096:31).

அத்து *இடை*

1. சாரியைகளுள் ஒன்று *இன்னே வற்றே அத்தே அம்மே* (தொல். 120:2)
2. அசைநிலைகளுள் ஒன்று. *பாழி கொள்ளும் ஏமத்தானும்* (தொல் 1022:8).

அதர்ப்படு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

பின்பற்றுதல், மூலநூல் ஒன்றைத் தழுவி வழிநூல் இயற்றுதல் *அதர்ப்பட யாத்தலோடு அனைமரபினவே* (தொல். 1601:2).

அதிகாரம் *பெயர்*

1. ஒரு நூலின் பெரும்பிரிவு. *எ-டு.:* எழுத்ததிகாரம், சொல்லதிகாரம்.

2. வரிசை, முறைமை. *நுதலியது அறிதல் அதிகார வகையே* (தொல். 1614:2).

அதிகாரவகை *பெயர்*

32 இலக்கிய உத்திகளுள் ஒன்று. நூலில் கூறப்படும் செய்திகளை அந்நூலின் முதலில் வரிசைப்படுத்திக் கூறுதல். *நுதலியது அறிதல் அதிகார வகையே* (தொல். 1614:2)

அதிர்வு *பெயர்*

நடுக்கம். *அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கம் செய்யும்* (தொல் 800).

அது[1] *பெயர்*

அஃறிணை ஒருமைச் சுட்டுப்பெயர், சேய்மைச்சுட்டு. *அது இது உதுஎன வரூஉம் பெயரும்* (தொல். 654:1)

அது[2] *இடை*

1. ஒன்றன்பாலுக்கு மட்டும் வரும் ஆறாம் வேற்றுமை உருபு. *அது எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி* (தொல். 564:2).

2. தான் சார்ந்துள்ள ஒன்றன்பால் பெயர்ச்சொல்லின் பொருளையே உணர்த்தி நிற்கும் சொல்; பகுதிப்பொருள் விகுதி. *எ-டு..* மனமது செம்மையானால். *ஞாலத்து வரூஉம் நடக்கையது குறிப்பில்* (தொல். 1040:19).

அந்தணன் *பெயர்*

பார்ப்பனன் *அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே* (தொல். 102:5).

அந்தண்ணாளன் *பெயர்*

பார்ப்பனன். *அந்த ணாளர்க்கு அரசுவரைவு இன்றே* (தொல். 1585)

அந்தம் *பெயர்*

விகுதி. *இவ்வென அறியும் அந்தம்தமக்கு இலவே* (தொல். 488:4).

அந்தம் *பெயர்*

முடிவு; அழிவு. *அந்தம்இல் சிறப்பின் மகப்பழித்து நெருங்கினும்* (தொல். 1097:24)

அந்தரம் *பெயர்*

வான்வெளி *அந்தரத்து எழுதிய எழுத்தின் மான* (தொல். 1096:20).

அந்தில் *இடை*

அசைநிலைகளுள் ஒன்று. *அந்தில் ஆங்கு அசைநிலைக் கிளவிஎன்று* (தொல். 752:1).

அந்து *இடை*

ஓகாரத்தோடு சேர்ந்து அந்தோ என நின்று இரக்கத்தையோ வியப்பையோ குறிக்கும் சொல். *அந்து ஈற்று ஓவும் அன் ஈற்று ஓவும்* (தொல். 767:2).

அப்பர் *பெயர்*

விலங்குகளின் ஆண்பாற்பெயர். *(வழக்கிழந்த மொழி) மோத்தையும் தகரும் உதளும் அப்பரும்* (தொல் 1504:3)

அப்பால் *வினையடை*

குறிப்பிட்ட இடம் அல்லது கால எல்லைக்குமேல். *அவ்வும் உரிய அப்பால் ஆன* (*தொல்* 552:2).

அம் *இடை*

சாரியைகளுள் ஒன்று. *நிற்றலும் உரித்தே அம்என் சாரியை* (தொல் 351:2).

அம்பல் *பெயர்*

தலைவியின் களவொழுக்கத்தை அயலார் தம் முகக்குறிப்பாலும் குறிப்புமொழிகளாலும் தம்முள் பரிமாறிக்கொள்ளும் பேச்சு *அம்பலும் அலரும் களவுவெளிப் படுத்தலின்* (தொல். 1089:1).

அம்போதரங்கம் *பெயர்*

தரவு, கொச்சகம், அராகம், சிற்றெண், வாரம் என்னும் ஐந்து உறுப்புகளைப்பெற்று, பதினைந்து அடிமுதல் அறுபது அடிவரை, கடவுள் வாழ்த்தாக வரும் கலிப்பா வகை. *அம்போதரங்கம் அறுபதிற்று அடித்தே* (தொல். 1411:1).

அம்ம *இடை*

நான் சொல்லுவதைக் கேள் என்னும் பொருளில் வரும் ஓர் அசைச்சொல் *அம்ம என்னும் அசைச்சொல் நீட்டம்* (தொல் 640:1)

அம்மை *பெயர்*

செய்யுளுக்குரிய எட்டு வகை வனப்புகளுள் ஒன்று, எளிய சொற்களையும், எண்ணிக்கையிற் குறைந்த அடிகளையும் பெற்றுவருதல். *அம்மை தானே அடிநிமிர்பு இன்றே* (தொல். 1494:3).

அமர்தல் *பெயர்*

விரும்புதல், விழைதல். *அமர்தல் மேவல்* (தொல். 864).

அமர் *பெயர்*

போர். *ஆர்அமர் ஓட்டலும் ஆபெயர்த்துத் தருதலும்* (தொல் 1010:11)

அமரர் *பெயர்*

கடவுளர். *அமரர்கண் முடியும் அறுவகை யானும்* (தொல் 1031:1).

அமலை *பெயர்*

தும்பைத் திணையின் துறைகளுள் ஒன்று; போரில் கொல்லப்பட்ட ஓர் அரசனைச் சூழ்ந்துகொண்டு வெற்றிபெற்ற வீரர்கள் கூத்தாடுதல் *பட்ட வேந்தனை அட்ட வேந்தன் வாளோர் ஆடும் அமலையும்* (தொல் 1022:10-11).

அமிழ்தம் *பெயர்*

தேவர் உணவு; அமுதம். *வானோர் அமிழ்தம் புரையுமால் எமக்குஎன* (தொல் 1096:13).

அமை[1]-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. பொருத்துதல். *நிரல்நிறுத்து அமைத்தலும் இரட்டை யாப்பும்* (தொல். 1351:1).
2. செய்து முடித்தல். *யாப்பினுள் தோன்ற யாத்து அமைப்பதுவே* (தொல். 1428:5).

அமை[2]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

பொருந்துதல். *துறைஅமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே* (தொல். 1041:5)

அமைதி *பெயர்*

பொருத்தம். *தாளாண் பக்கமும் தகுதியது அமைதியும்* (தொல். 991:8).

அமைவு *பெயர்*

தன்மை; நிலைமை. *அவன்குறி மயங்கிய அமைவொடு வரினே* (தொல். 1083:2)

அயர்-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. செய்வகை தெரியாதிருத்தல்; புரியாமல் இருத்தல். *அறிந்தோள் அயர்ப்பின் அவ்வழி மருங்கில்* (தொல். 1051:17).

2. ஒரு செயலைத் தவிர்த்தல்; செய்யாமல் இருத்தல். *இட்டுப்பிரிவு இரங்கினும் அருமைசெய்து அயர்ப்பினும்* (தொல் 1061:6).

அயர்-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

வழிபடுதல். *வெறியாட்டு அயர்ந்த காந்தளும்* (தொல். 1010:2).

அயல்[1] *பெயர்*

1. பக்கம்; அருகு. *அயல் நெடிதாயின் இயற்கை ஆகும்* (தொல். 632).
2. பக்கத்து வீட்டில் வசிப்பவர். *ஊரும் அயலும் சேரியோரும்* (தொல். 1450:1).

அயல்[2] *இடை*

இடப்பொருள் வேற்றுமைச் சொல்லுருபுகளுள் ஒன்று. *பின்சார் அயல்புடை தேவகை எனாஅ* (தொல் 567:2)

அயலோர் *பெயர்*

தம் வீட்டைவிட்டு நீங்கிப் பிரிந்து அருகிலேயே இருப்பவர் *அயலோர் ஆயினும் அகற்சி மேற்றே* (தொல் 988)

அர் *இடை*

1. பலர்பால் படர்க்கை விகுதி *அர்ஆர் பஎன வரூஉம் மூன்றும் பல்லோர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே* (தொல். 693)

2. பகுதிப்பொருள் விகுதி. *குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி* (தொல். 38:1) *முன்+அர்→ முன்னர்*

3. பலர்பால் விகுதி *அளபில் கோடல் அந்தணர் மறைத்தே* (தொல். 102:5)

அரசன் *பெயர்*

மன்னன்; ஒரு நிலப்பகுதியை ஆள்பவன். *தெரிவுகொள் செங்கோல் அரசர்க்கு உரிய* (தொல்.1574.4).

அரசர்பக்கம் *பெயர்*

வாகைத் திணையின் வகைகளுள் ஒன்று; மன்னர்களின் வெற்றியைப் புகழ்தல் *ஐவகை மரபின் அரசர் பக்கமும்* (தொல் 1025:2)

அரசு *பெயர்*

1. அரசாட்சி; ஆட்சிபுரியும் தன்மை *அந்தணாளர்க்கு அரசுவரைவு இன்றே* (தொல் 1585)
2. அரசன். *பெண்மை அரசே மகவே குழவி* (தொல். 541:3).

அரணம் *பெயர்*

கோட்டை மதில். *முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்* (தொல். 1015:1).

அரவம் *பெயர்*

ஒலி; காதிற்குப் புலனாகும் நுகர்வு. *என்றுஇவை நான்கும் அரவப் பொருள* (தொல் 833:2)

அரற்று-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

புலம்புதல். *காதல் கைம்மிகக் கனவின் அரற்றலும்* (தொல். 1065:6).

அராகம் *பெயர்*

கலிப்பாவின் ஓர் உறுப்பு; தளதள தளதள என்னும் ஓசையுடன் முடுகி வருகின்ற நான்கு சீர்களைக் கொண்ட அடிகளால் ஆனது *உருட்டு வண்ணம் அராகம் தொடுக்கும்* (தொல்.1491)

அரி *பெயர்*

புலன்களுக்கும் உள்ளத்திற்கும் மகிழ்ச்சியைத் தருகின்ற பண்பு, அழகு *அரியே ஐம்மை* (தொல். 840).

அரில் *பெயர்*

1. ஒரு செயலின் முடிவைப் பாதிக்கும்படி நேர்கின்ற தவறு; பிழை. *அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்* (தொல். 1006:1)

2. தன் ஐயத்தைப் போக்கிக்கொள்ள ஒருவரிடம் கேட்கப்படும் கேள்வி, ஐயவினா. *அதங்கோட்டாசாற்கு அரில்தபத் தெரிந்து* (தொல்.சி பா 11)

அரு[1] *பெயர்*

உடலில் ஒட்டிக்கொண்டு இரத்தத்தை உறிஞ்சும் ஒரு நீர்ப்புழு, அட்டை. *இருநிலம் தீண்டா அருநிலைவகையோடு* (தொல். 1021:3)

அரு[2] *பெயரடை*

அரிய, எளிதில் கிடைக்காத *ஆய்பெரும் சிறப்பின் அருமறை கிளத்தலின்* (தொல். 1074:1).

அருக்கு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஒருவர் மீது உள்ள அன்பையோ மதிப்பையோ புலப்படுத்துதல்; அருமை பாராட்டுதல். *இயன்ற நெஞ்சம் தலைபெயர்த்து அருக்கி* (தொல் 1097:13)

அருகு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. அளவிலோ எண்ணிக்கையிலோ குறைதல். *இசையிடன் அருகும் தெரியுங்காலை* (தொல். 13:2).

2. குறைவாகப் பயிலுதல்; அரியது ஆதல். *உருவினும் இசையினும் அருகித் தோன்றும் மொழிக்குறிப்பு* (தொல் 40:1-2).

அருங்கு *பெயர்*

அருமை. *உறல் அருங்குரைமையின் ஊடல்மிகுத்தோளை* (தொல். 1096:35).

அரும்பு *பெயர்*

பூ மலர்வதற்குமுன் உள்ள முதல் நிலை; மொட்டு; முகை. *சினையே குழையே பூவே அரும்பே* (தொல். 1591:2).

அருமை *பெயர்*

அரிதாம் தன்மை; எளிதில் கிடைக்காத நிலை. *இட்டுப்பிரிவு இரங்கினும் அருமைசெய்து அயர்ப்பினும்* (தொல். 1061:6).

அருள் *பெயர்*

1. பிற உயிர்களின் துன்பத்தைக் கண்டு இரங்கும் பண்பு. *அருளொடு புணர்ந்த அகற்சி யானும்* (தொல். 1026:22).

2. முதிர்ந்த அன்பு *நிறையே அருளே உணர்வொடு திருஎன* (தொல். 1222:3)

அருள்[1]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

கொடுத்தல். *நாடுஅவற்கு அருளிய பிள்ளையாட்டும்* (தொல் 1010:18).

அருள்[2]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

அன்பு பாராட்டுதல். *நோன்மையும் பெருமையும் மெய்கொள அருளி* (தொல். 1096:24).

அருள்மிகவுடைமை *பெயர்*

கற்புக் காலத்துக் காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; கணவனை அன்போடு மனைவி பேணிக்காத்தல் *அருள்மிக உடைமை அன்புதொக நிற்றல்* (தொல். 1221:4)

அருளொடு புணர்ந்த அகற்சி *பெயர்*

வாகைத் திணையின் துறைகளுள் ஒன்று, உயிர்களின்பால் கொண்ட இரக்கத்தால் தன் இல்வாழ்க்கையை நீத்து ஒருவர் துறவு கொள்ளுதல். *அருளொடு புணர்ந்த அகற்சியானும்* (தொல் 1026:22).

அரை *பெயர்*

1. பாதி; ஒரு பொருளின் இரண்டு ஒத்த கூறுகளுள் ஒன்று, 1/2. *அரைஅளபு குறுகல் மகரம் உடைத்தே* (தொல். 13.1)

2. மரவகை *ஆண்மரக் கிளவி அரைமர இயற்றே* (தொல். 305)

அரோ *இடை*

அசைநிலைகளுள் ஒன்று. *பிற பிறக்கு அரோ போ மாது என வரூஉம்* (தொல். 764:1).

அல்[1] *குறிப்பு வினையடி*

அல்லேன், அல்லேம், அல்லை, அல்லீர், அல்லன், அல்லர், அல்லள், அன்று, அல்ல எனும் முற்று வடிவங்களில் பயிலும் எதிர்மறைக் குறிப்பு வினையடி. *இலக்கண மருங்கின் செல்ஆறு அல்ல* (தொல். 511:4).

அல்[2] *இடை*

1. தன்மை ஒருமை விகுதி. *என்ஏன் அல்என வரூஉம்* (தொல். 690:3)

2. எதிர்மறை ஏவல் ஒருமை விகுதி *அழியல் அஞ்சல் என்று ஆ இரு பொருளினும்* (தொல். 1096:22)

3. தொழிற்பெயர் விகுதி. *தெய்வம் அஞ்சல்* (தொல். 1221:1).

4. உடன்பாட்டு வியங்கோள் விகுதி. *அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்* (தொல். 926).

5. எதிர்மறைப் பெயரெச்சம் *அன்ன இடங்கள் அல்வழி எல்லாம்* (தொல். 1154:2).

6. ஆண்பாற்பெயர் விகுதி. *நெடுந்தகை செம்மல் என்று இவை பிறவும்* (தொல். 1576:2).

அல்கு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

தங்குதல்; ஓர் இடத்தில் இருத்தல். *அல்கல் முன்னிய நிறைஅழி பொழுதின்* (தொல். 1096:33).

அல்குல் *பெயர்*

இடுப்பு; அரை; இடை. *அல்குல் தைவரல் அணிந்தவை திருத்தல்* (தொல். 1212:1).

அல்குல் தைவரல் *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; முதன்முதலாகக் காதல்வயப்பட்ட தலைவி (தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்காக) தன் இடுப்பை (இடையில் அணிந்துள்ள புடவையை) நீவிக்கொள்ளுதல். *அல்குல் தைவரல் அணிந்தவை திருத்தல்* (தொல். 1212:1)

அல்ல *பெயர்*

(குறிப்பிடப்பெற்றவை) அல்லாதவை. *சொல்லிய அல்ல ஏனைய எல்லாம்* (தொல். 203:2).

அல்லகுறி *பெயர்*

காதலன் தன் வருகையைக் காதலிக்குத் தெரிவிக்க உண்டாக்குகின்ற குறிப்பு ஒலி அவனால் செய்யப்படாமல் வேறு காரணங்களால் தானே நேர்தல். *அல்லகுறிப் படுதலும் அவள்வயின் உரித்தே* (தொல். 1083:1).

அல்லது[1] *பெயர்*

முதலில் கூறப்பட்ட பொருள் அல்லாதது. *அல்லது கிளப்பினும் வேற்றுமை இயல* (தொல். 372:2).

அல்லது[2] *இடை*

இரண்டில் ஒன்று; அல்லாவிடில்; அல்லாமல். *ஆவோடு அல்லது யகரம் முதலாது* (தொல் 65).

அல்லல் *பெயர்*

துன்பம். *அல்லல் நீத்த உவகை நான்கே* (தொல். 1208:2).

அல்லவை *பெயர்*

'அல்லது' என்பதன் பன்மை.

1. நல்லன அல்லாதவை; தீயவை. *நல்லவை உரைத்தலும் அல்லவை கடிதலும்* (தொல்.1103:2).

2. முதலில் கூறப்பெற்ற பொருள் அல்லாதவை. *குழவியும் மகவும் ஆயிரண்டு அல்லவை* (தொல். 1525:1).

அல்லா *பெயரெச்சம்*

காண்க அல்லாத. *அப்பொருள் அல்லாப் பிறிதுபொருள் கூறல்* (தொல். 519:2).

அல்வழி[1] *பெயர்*

அல்லாத இடத்தில். *அன்ன இடங்கள் அல்வழி எல்லாம்* (தொல். 1154:2)

அல்வழி[2] *பெயர்*

எழுவாய், விளி, உவமைத்தொகை, உம்மைத்தொகை, பண்புத்தொகை, இருபெயரொட்டுப் பண்புத்தொகை, முற்று, பெயரெச்சம், வினையெச்சம், இடைச்சொற்கள் ஆகியவற்றில் இடம்பெறுகின்ற புணர்ச்சி; வேற்றுமைப்புணர்ச்சி அல்லாதது அல்வழிப் புணர்ச்சி. *அல்வழி யானும் வேற்றுமைக் கண்ணும்* (தொல். 296:2)

அலங்கடை *வினையடை*

அல்லாத இடத்தில்; தவிர *சார்ந்துவரன் மரபின் மூன்றுஅலங் கடையே* (தொல் 1·3)

அலது *பெயர்*

காண்க. அல்லது. *சொல்லுங் காலை அவைஅலது இலவே* (தொல். 1528:2).

அலமரல் *பெயர்*

1. ஒரு பொருள் ஒரே இடத்தில் வேகமாகச் சுழலுதல்; சுழற்சி. *அலமரல் தெருமரல் ஆஇரண்டும் சுழற்சி* (தொல். 794)

2. ஒன்றைப் பற்றி உறுதியான முடிவு எடுக்க முடியாத மனத்தடுமாற்றம். *அலமரல் உள்ளமொடு அளவிய இடத்தும்* (தொல் 1096:19).

அலர் *பெயர்*

தலைவியின் களவொழுக்கம் பற்றி ஊரார் கூறும் பழிமொழி. *ஒ.நோ..* அம்பல். *களவுஅலர் ஆயினும் காமம்மேற் படுப்பினும்* (தொல். 1065:1).

அலை-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

வருத்துதல். *நாணுநெஞ்சு அலைப்ப விடுத்தற் கண்ணும்* (தொல் 1057:10)

அவண் *சுட்டுப்பெயர்*

அந்த இடம். *சொல்லிய அல்ல பிற அவண் வரினும்* (தொல். 1614:24).

அவர் *சுட்டுப்பெயர்*

அவன், அவள் என்னும் சொற்களின் பன்மை; படர்க்கைப் பலர்பால் *பொருள்வயிற் பிரிதலும் அவர்வயின் உரித்தே* (தொல் 982:1).

அவள் *சுட்டுப்பெயர்*

பெண்பால் படர்க்கைச் சேய்மைச் சுட்டு, அந்தப் பெண் *நெறிப்பட வாரா அவள்வயின் ஆன* (தொல் 1058:4).

அவன் *சுட்டுப்பெயர்*

ஆண்பால் படர்க்கைச் சேய்மைச் சுட்டு; அந்த ஆண் *அவன்வரம்பு இறத்தல் அறம்தனக்கு இன்மையின்* (தொல். 1070:1)

அவன்தமர் உவத்தல் *பெயர்*

தலைவியின்கண் தோன்றும் காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று, காதலனைப் பிரிந்துள்ள தலைவி அவனுடைய உறவினர்களைக் காண நேர்ந்தபோது மனம் மகிழ்தல். *ஐயம்செய்தல் அவன் தமர் உவத்தல்* (தொல் 1219:7).

அவா *பெயர்*

ஒரு பொருளைப் பெறவோ ஒரு செயலைச் செய்யவோ உள்ளத்தில் ஏற்படும் ஆசை; ஆவல்; விருப்பம். *ஐஎன் இறுதி அவாமுன் வரினே* (தொல் 289:2).

அவி-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

மனம், மொழி, மெய்களைக் கட்டுப்படுத்துதல்; அடங்குதல். *அவிதல் கடன்எனச் செவியுறுத் தன்றே* (தொல். 1374:3).

அவிப்பலி *பெயர்*

வாகைத் திணையின் துறைகளுள் ஒன்று; வேள்வியில் உணவுப் பொருள்களை இடுதலைப் போல வீரர்கள் போரில் தம் உயிரை மாய்த்துக்கொள்ளல். *தொல்உயிர் வழங்கிய அவிப்பலி யானும்* (*தொல்*. 1026:12)

அவிழ்-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

நெகிழ்தல்; இறுக்கம் தளர்தல் *நெஞ்சுதளை அவிழ்ந்த புணர்ச்சிக் கண்ணும்* (*தொல்*. 1096:2)

அவை[1] *சுட்டுப்பெயர்*

அஃறிணைப் படர்க்கைப் பன்மைச் சேய்மைச் சுட்டு, தொலைவிலுள்ள பல பொருள்களைச் சுட்டும்சொல் *அவைமுப் பெயரும் சேமர இயல* (*தொல்*. 283:2)

அவை[2] *பெயர்*

அரசனின் கொலுமண்டபம்; நாளோலக்கம் *நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து* (*தொல் சி பா*. 9)

அவையம் *பெயர்*

காண்க: அவையகம். *எட்டுவகை நுதலிய அவையத் தானும்* (*தொல்* 1026:17 *நச்சர் பாடம்*).

அவையகம்[1] *பெயர்*

அரசனின் முன்னிலையில் உள்ள சான்றோர் குழு. *எட்டுவகை நுதலிய அவையகத் தானும்* (*தொல்*.1026:17).

அவையகம்[2] *பெயர்*

வாகைத் திணையின் துறைகளுள் ஒன்று; குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், வாய்மை, தூய்மை, நடுவுநிலைமை, அழுக்காறாமை, அவாவின்மை என்னும் எட்டுப் பண்புகளையும் பெற்றுள்ள நீதிமன்றத்தின் வெற்றியைப் புகழ்தல். *எட்டுவகை நுதலிய அவையகத் தானும்* (*தொல்* 1026:17)

அவையடக்கு *பெயர்*

புலவன் ஒருவன் தன் நூலை அரங்கேற்றத் தொடங்கும்போது அவையில் உள்ள அறிஞர்களுக்குத் தன் பணிவைத் தெரிவித்துக்கொள்ளுதல்; அவையடக்கம். *வாயுறை வாழ்த்தே அவையடக்கு இயலே* (*தொல்* 1371:1)

அவையல் கிளவி *பெயர்*

மன்றத்தில் / சபையில் சொல்லத்தகாத சொற்கள், இடக்கரடக்கல் *அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்* (*தொல்* 926)

அவையல் மொழி *பெயர்*

காண்க: அவையல் கிளவி *மங்கல மொழியும் அவைஅல்மொழியும்* (*தொல்* 1193:1).

அழகு *பெயர்*

செய்யுளுக்கு உரிய எட்டு வகை வனப்புகளுள் ஒன்று, பேச்சு வழக்குச் சொற்கள் மிகுதியாகப் பயிலாமல் கவிதைக்கே உரிய சொற்களாலமைந்து யாப்புச் சிதைவின்றி அமைதல். *செய்யுள் மொழியால் சீர்புனைந்து யாப்பின் அவ்வகை தானே அழகு எனப்படுமே* (*தொல்* 1495)

அழல் *பெயர்*

நெருப்பு; தீ; அக்கினி. *நல்லோள் கணவனொடு நனிஅழல் புகீஇ* (தொல்.1029:30).

அழன் *பெயர்*

பிணம். *அழனென் னிறுதிகெட வல்லெழுத்து மிகுமே* (தொல்.355). *அழன் என்பது பிணம்* (இளம். உரை)

அழி[1]-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

இல்லாமல் செய்தல். *மன்எயில் அழித்த மண்ணுமங் கலமும்* (தொல்.1040:12)

அழி[2]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

வருந்துதல்; கவலைப்படுதல். *அழிந்து எதிர் கூறி விடுப்பினும்* (தொல்.990:6).

அழிவில் கூட்டம் *பெயர்*

ஒரு முறை புணர்ந்த பிறகு தொடர்ச்சி அற்றுப்போகாமல் பின்னரும் நீக்கமின்றிக் கூடுகின்ற கூட்டம்; அதாவது திருமணம் செய்துகொண்டு இணைதல். *ஆஇரு நான்கே அழிவுஇல் கூட்டம்* (தொல்.1220:5)

அழிவு *பெயர்*

இல்லாமல் போகை; கேடு. *அற்றம் அழிவு உரைப்பினும்* (தொல்.1100:3).

அழுகை *பெயர்*

எண்வகை மெய்ப்பாடுகளுள் ஒன்று; துயரத்தால் கண்ணீர் வடித்தல். *விளிவு இல் கொள்கை அழுகை நான்கே* (தொல்.1202).

அழுங்கு[1]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

தவிர்தல்; ஒரு செயலைச் செய்யாமல் விட்டுவிடுதல். *செலவுஉறு கிளவியும் செலவுஅழுங்கு கிளவியும்* (தொல் 1127).

அழுங்கு[2]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. தனக்கோ மற்றவர்க்கோ நேர்ந்த தீமையை எண்ணி வருந்துதல்; இரங்குதல். *அழுங்கல் இரக்கமும் கேடும் ஆகும்* (தொல்.832:2).
2. அழுதல். *விட்டுயிர்த்து அழுங்கினும்* (தொல்.1061:7)
3. கெடுதல். *அழுங்கல் இரக்கமும் கேடும் ஆகும்* (தொல்.832:2).

அள் *இடை*

பெண்பால் படர்க்கை ஒருமை விகுதி. *அன் ஆன் அள் ஆள் என்னும் நான்கும்* (தொல்.692:1).

அளக்கல் *பெயர்*

அளவீடு; அளவிடுதல். *அளக்கல் ஆகா அரும்பொருட்டு ஆகி* (தொல்.1604).

அளகு *பெயர்*

கோழி, கூகை ஆகிய இரண்டு பறவையினத்திற்கும் உரிய பெண்மைப்பெயர். *சூழுங்காலை அளகு எனல் அமையா* (தொல்.1558:2)

அள-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

எண்ணல், நீட்டல், முகத்தல், நிறுத்தல் முதலிய வகைகளில் ஏதாவது ஒன்றால் ஒரு பொருளின் அளவினைக் கணக்கிடுதல். *அளந்துஅறி கிளவியும் நிறையின் கிளவியும்* (தொல்.447).

அளபு *பெயர்*

எழுத்துகள் ஒலிக்கும் காலத்தின் அலகு; அளவு; மாத்திரை. *மெய்தெரி வளிஇசை அளபு நுவன் றிசினே* (தொல்.103).

அளபெடு-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

ஓர் எழுத்து தனக்குரிய மாத்திரைக்குமேல் ஒலித்தல். *ஒற்றுஅள பெடுப்பினும் அற்றுஎன மொழிப* (தொல்.1279)

அளபெடை *பெயர்*

தனக்குரிய கால அளவைவிட மிகுதியாக ஓர் எழுத்து ஒலித்தல். *அளபெடை நிலையும் காலத்தானும்* (தொல்.766)

அளபெடைத் தொடை *பெயர்*

ஒரு செய்யுளின் அடிதோறும் ஓரெழுத்தாவது தன் இயல்பான ஒலியளவைவிட மிக்கொலிக்கும்படி அமைதல். *அளபெழின் அவையே அளபெடைத் தொடையே* (தொல் 1357)

அளபெடை வண்ணம் *பெயர்*

ஒரு செய்யுளின் எல்லா அடிகளிலும் அளபெடைகள் மிகுதியாக இடம் பெறுவதால் ஏற்படுகின்ற பாவோசை. *அளபெடை வண்ணம் அளபெடை பயிலும்* (தொல்.1478).

அளபெழல் *பெயர்*

காண்க: அளபெடுத்தல். *அளபெழின் அவையே அளபெடைத் தொடையே* (தொல் 1357)

அளவடி *பெயர்*

1. மெய்யெழுத்துகள் அல்லாமல் பத்துமுதல் பதினான்கு எழுத்துகள்வரை பெற்றுவரும் செய்யுள் அடி (தொல். மரபு)

2. நான்கு சீர்களைப் பெற்றுவரும் செய்யுள் அடி (யா.கல.மரபு). *குறளடி முதலா அளவடிகாறும்* (தொல்.1317:1).

அளவு²-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

பொருந்துதல். *அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே* (தொல் 1005).

அளவு¹ *பெயர்*

எண்ணல், நீட்டல், முகத்தல், நிறுத்தல் முதலிய வகைகளால் வரையறை செய்யப்படும் கணக்கீடு. இச்சொல் ஓர் எழுத்தின் ஒலிப்பு வரையறை, செய்யுளியலில் பாடலுக்குரிய அடி வரையறை ஆகியவற்றையும் குறிக்கும். *வண்ணம் வடிவே அளவே சுவையே* (தொல்.563).

அளி *பெயர்*

மிகுந்த அன்புடைமையால் மற்றவர்மீது தோன்றும் அருள்உணர்வு. *காமம் சிறப்பினும் அவள் அளி சிறப்பினும்* (தொல்.1061).

அளை-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

பொருந்துதல், கூடுதல். *ஆர்வமொடு அளைஇச் சொல்லுறு பொருளின்கண்ணும்* (தொல்.1096:10-11)

அற்றம் *பெயர்*

1. வருத்தம். *அற்றம்அழிவு உரைப்பினும்...* (தொல்.1100:3).

2. குற்றம். *அற்றம் இல்லாக் கிழவோற் சுட்டிய தெய்வக் கடத்தினும்* (தொல் 1100:3-4).

அற்று *குறிப்பு வினைமுற்று*

அத்தன்மையது. *எகர ஒகரத்து இயற்கையும் அற்றே* (தொல்.16).

அறக்கழிவு *பெயர்*

உலகியல் நெறிக்குப் பொருந்தாதது. *அறக்கழிவு உடையன பொருட்பயன் வரினே* (தொல்.1167:1)

அறம்[1] *பெயர்*

உண்மை; மெய். *அறம்கரை நாவின் நான்மறை முற்றிய* (தொல். சி.பா.10 இளம்.).

அறம்[2] *பெயர்*

அறம், பொருள், இன்பம் என்னும் உறுதிப்பொருள்கள் மூன்றில் முதன்மையானது, தருமம் *அந்நிலை மருங்கின் அறம்முத லாகிய* (தொல்.1366:1)

அறத்தொடு நிற்றல் *பெயர்*

தலைவியின் பெற்றோர் அவளை அவளுடைய காதலனாகிய தலைவனைத் தவிர வேறு ஒருவனுக்கு மணம் செய்துகொடுக்க முயலும்போது, மகளிரின் தலையாய அறமாகிய கற்பினைக் காப்பதற்காக அவளுடைய களவொழுக்கத்தை வெளிப்படுத்துதல். *அறத்தொடு நிற்கும் காலத்தன்றி* (தொல். 1155:1).

அறன் *பெயர்*

காண்க: அறம். *இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு* (தொல் 1041)

அறனழிந்துரைத்தல் *பெயர்*

காதல் வயப்பட்ட தலைவியின் மெய்ப்பாடுகளுள் ஒன்று; தலைவி சில நேரங்களில் அறத்தை வெறுத்துக் கூறுதல். *அறன் அழிந்து உரைத்தல் ஆங்குநெஞ்சு அழிதல்* (தொல். 1219:8).

அறி-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. ஒரு பொருள் பற்றித் தெரிந்து கொள்ளுதல். *செல்வழி அறிதல் வழக்கத்தான* (தொல்.313).
2. ஒன்றை உய்த்துணர்ந்து கொள்ளுதல் *ஐயக் கிளவியின் அறிதலும் உரித்தே* (தொல்.1067).

அறியாமை *பெயர்*

அறிவு இல்லாமை; மடமை *எய்யாமையே அறியாமையே* (தொல். 826).

அறிவர் *பெயர்*

அறிவிற் சிறந்தோர். *சொல்லிய கிளவி அறிவர்க்கும் உரிய* (தொல் 1104).

அறிவன் *பெயர்*

1 மூன்று காலங்களின் நிகழ்ச்சிகளையும் அறிய வல்லவனாகிய கணியன் (இளம்.)
2. முழுதும் உணர்ந்த ஞானி (நச்சர்). *நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்* (தொல் 1025:5)

அறிவன் தேயம் *பெயர்*

வாகைத்திணையின் இரு வகைகளுள் ஒன்று.

1. மழை, பனி, வெயில் ஆகிய காலத்தை நெறியினால் பொறுத்த கணியனுடைய வெற்றியைப் புகழ்தல்.

2. இறப்பு, நிகழ்வு, எதிர்வு ஆகிய முக்காலத்தையும் முழுதும் உணர்ந்த ஞானியின் வெற்றியைப் போற்றுதல். *நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்* (தொல். 1025:5).

அறிவு *பெயர்*

1. ஒரு பொருளின் உண்மையான தன்மையையும், நல்லனவற்றின் நன்மையையும், தீயனவற்றின் தீமையையும் உள்ளவாறு உணரும் தன்மை; ஞானம். *அறிவும் புலனும் வேறுபட நிறீஇ (தொல். 1146:9).*

2. பொறியுணர்வு; கண் முதலிய புலன்களால் ஒன்றைப்பற்றித் தெரிந்துகொள்ளுதல் *மக்கள் தாமே ஆறுஅறிவு உயிரே* (தொல். 1535:1).

3. நினைவு; ஞாபகம். *அவன் அறிவு ஆற்ற அறியும் ஆகலின்* (தொல். 1097:1).

அறிவுடம்படு-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

தன் கருத்தைப் பிறர் ஏற்றுக் கொள்ளும்படிச் செய்தல் *நாட்டம் இரண்டும் அறிவுடம்படுத்தற்கு* (தொல். 1045:1).

அறிவுறு[1]-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

தெரியப்படுத்தல் *அவள் அறிவுறுத்துப் பின்வா என்றலும்* (தொல். 1064:9-10).

அறிவுறு[2]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

தெரிந்துகொள்ளுதல். *ஆற்றது தீமை அறிவுறு கலக்கமும்* (தொல் 1064:29)

அறிவோன் *பெயர்*

காண்க. அறிவன் *கூத்தர் விறலியர் அறிவோர் கண்டோர்* (தொல். 1143:3).

அறு *பெயரடை*

ஆறு என்னும் எண்ணைக் குறிக்கப் பெயரடையாக வரும் வடிவம். *அவ்அறு பொருட்கும் ஓரன்ன உரிமைய* (தொல் 719)

அறு[1]-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஒன்றைப் பல கூறுகளாகச் செய்தல்; அரிதல். *அறுத்தலில் குறைத்தலில் தொகுத்தலில் பிரித்தலில்* (தொல். 557).

அறு[2]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

விட்டு நீங்குதல். *மனத்தின் எண்ணி மாசுஅறத் தெரிந்து கொண்டு* (தொல் 1614).

அறை-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

சொல்லுதல்ந கூறுதல்ந உரைத்தல். *நூல்நவில் புலவர் நுவன்றுஅறைந் தனரே* (தொல். 1414).

அன் *இடை*

1. ஆண்பால் படர்க்கை ஒருமை வினைமுற்று. *அன் ஆன் அள் ஆள் என்னும் நான்கும் ஒருவர் மருங்கின் படர்க்கைச் சொல்லே* (தொல் 692).

2. சாரியைகளுள் ஒன்று. *எ-டு.* குடித்தனன். குடி+த்+அன்+அன். *அன் என் கிளவி உளப்படப் பிறவும் அன்ன என்ப சாரியை மொழியே* (தொல் 120).

அன்பு *பெயர்*

தன்னோடு தொடர்புடையவர்களிடம் ஒருவருக்கு இயல்பாகத் தோன்றும் மனநெகிழ்ச்சி; பரிவு *அன்பு இலை கொடியை என்றலும் உரியள்* (தொல். 1108:3).

அன்பு தொக நிற்றல் *பெயர்*

கற்புக் காலத்துக் காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; கணவன் செய்யும் தவறுகளைப் பொருட்படுத்தாமலும் அவன்மீது காதல் குறையாமலும் மனைவி பழகுதல். (தொல். 1221:4)

அன்மை *பெயர்*

(முதலில் குறிக்கப்பட்டது அல்லாத வேறு என உணர்த்தும் எதிர்மறைச்சொல்) அல்லாமை. *அன்மைக் கிளவி வேறிடத் தான* (தொல். 509:2).

அன்மொழித்தொகை *பெயர்*

இரண்டு சொற்கள் சேரும்போது இடையில் மறைந்துநிற்கும் சொல்லின் தொகையாற்றலால் இரு சொற்களுக்கும் உரிய பொருள் அல்லாத வேறொரு பொருளைத் தரும் தொடர் *எ-டு*.: கயல்விழி (கயல் போன்ற விழி என்னும் உவமைத்தொகைத் தொடர் மீன் அனைய கண்களை உடையாள் ஒருத்தியைக் குறிக்கும்போது அன்மொழித்தொகை ஆகிறது). *ஈற்றுநின்று இயலும் அன்மொழித் தொகையே* (தொல். 901)

அன்மொழிநிலையல் *பெயர்*

அன்மொழித்தொகை ஒன்றில் பொருளை உணர்வதற்குத் தேவையான குறிப்பு முன்சொல்லிலோ பின்சொல்லிலோ அமையாமல் இரண்டும் அல்லாத மூன்றாவது ஒரு சொல்லில் இருத்தல். *எ-டு*.: மல்லிகைப்பூ (முதல்மொழியில் சிறப்புப்பொருள்). செந்தாமரை (பின்மொழியில் சிறப்புப்பொருள்). இயலிசை (இரு மொழிகளிலும் சிறப்புப்பொருள்). பொற்றொடி (பொன்னும் அல்லாது வளையலும் அல்லாது அவற்றை அணிந்தவளாகிய மூன்றாவது பொருள் தோன்றியது. இது அன்மொழி நிலையல்). *அம்மொழி நிலையாது அன்மொழி நிலையலும்* (தொல். 902).

அன்றி *இடை*

1. முன்பு கூறப்பெற்றவை மட்டும் அல்லாமல்; அல்லாது. *குடையும் வாளும் நாள்கோள் அன்றி* (தொல். 1018)

2. முற்சொல்லப்பட்டவை தவிர; அவை நீங்கலாக. *அன்றி அனைத்தும் விளிகோள் இலவே* (தொல். 624).

3. அந்த; (அகரச்சுட்டு அன்றி என ஈறு திரிந்து நின்றது என்பது சேனாவரையம் தொல். சொல். 66). *அன்றி அனைத்தும் பெயர்ப்பய னிலையே* (தொல். 551).

அன்று *குறிப்பு வினைமுற்று*

அல்ல எனப் பொருள்தரும் ஒன்றன்பால் எதிர்மறைக் குறிப்பு வினைமுற்று. *செலவிடை அழுங்கல் செல்லாமை அன்றே* (தொல். 1135).

அன்ன[1] *குறிப்பு வினைமுற்று*

அத்தன்மையன எனப் பொருள்தரும் அஃறிணைப் பன்மைக் குறிப்பு வினைமுற்று. *வினையெஞ்சு கிளவியும் சுட்டும் அன்ன* (தொல். 237).

அன்ன[2] *இடை*

இருபொருள்களுக்கு இடையே உள்ள ஒப்புமைத் தன்மையைக் காட்டும் உவம உருபுகளுள் ஒன்று. *அன்ன என்னும் உவமக் கிளவியும்* (தொல். 211).

அன்னை *பெயர்*

தாய். *அன்னை என்னை என்றலும் உளவே* (தொல். 1195).

அனை *பெயரடை*

(குறிப்பிடப்பட்ட) அந்த. *அனை நால்வகையும் சிறப்பொடு வருமே* (தொல். 1194)

அனைத்தும் *பெயர்* (அனை+அத்து+உம்)

எல்லாமும். *அன்றி அனைத்தும் இயல்புஎன மொழிப* (தொல் 225)

ஆ

ஆ[1] *பெயர்*

வாயை நன்கு திறப்பதாலும் மிடற்று வளியாலும் இரண்டு மாத்திரை அளவு உடையதாக ஒலிக்கப்படும் உயிர் நெடில் ஒலி; அவ்வொலியை வரி வடிவில் சுட்டுவதும் தமிழ் நெடுங்கணக்கில் இரண்டாவதாக அமைவதுமான உயிரெழுத்து *அ ஆ ஆஇரண்டு அங்காந்து இயலும்* (தொல் 85:2); *பன்னீர் உயிரும் தம்நிலை திரியா மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்* (தொல் 84:2-3); *ஆஈஊ ஏஐ ஓஔ என்னும் அப்பால் ஏழும் ஈர் அளவு இசைக்கும் நெட்டேழுத்து என்ப.* (தொல் 4); *ஔகார இறுவாய்ப் பன்னீர் எழுத்தும் உயிர்என மொழிப* (தொல் 8).

ஆ[2] *பெயர்*

1. பாலுக்காக வீடுகளிலும் பண்ணைகளிலும் வளர்க்கப்படும் ஒரு விலங்கு; பசு *ஆவும் எருமையும் அது சொலப்படுமே* (தொல் 1522)

2. மாடு, எருமை, மான் ஆகிய விலங்குகளின் பெண்மைப் பெயர். *பெற்றமும் எருமையும் மரையும் ஆவே* (தொல் 1563)

ஆ[3] *இடை*

1. சொல்லின் புறத்தே வரும் சுட்டு, அந்த. *ஆஎர் இயல உயிர்த்தல் ஆறே* (தொல் 17:4).

2. சொல்லின் இறுதியில் வரும் வினா *எ-டு.:* அவனா? *ஆஏ ஓஅம் மூன்றும் வினா* (தொல்.32)

3. எதிர்மறைப் பெயரெச்ச விகுதி *அடங்கா ஒழுக்கத்து அவன்வயின் அழிந்தோளை* (தொல்.1100:6).

4. பலவின்பால் எதிர்மறை வினைமுற்று விகுதி. *சூழுங்காலை அளகுஎனல் அமையா* (தொல்.1558:2).

5. (செய்யா வாய்பாட்டு) வினையெச்ச விகுதி. *நகை நனி உறாஅ அந்நிலை அறிதல்* (தொல்.1050:2-3)

6. எதிர்மறை இடைநிலை. *பயம் கெழு துணை அணை புல்லிப் புல்லாது* (தொல். 1096:31).

ஆக்கக் கிளவி *பெயர்*

ஒரு நிலையில் உள்ள பொருள் வேறொரு நிலைக்கு மாறுவதைச் சுட்டும் சொல் *ஆக்கக் கிளவி காரணம் இன்றியும் போக்கின்று என்ப.* (தொல் 506:1-2).

ஆக்கம்[1] *பெயர்*

1. மிகுதி. *கற்பின் ஆக்கத்து நிற்றற் கண்ணும்* (தொல். 1065:9)

2. தோற்றம்; உண்டாகுகை. *உயர்திணை மருங்கின் ஆக்கம் இல்லை* (தொல். 674:2).

3. வளர்ச்சி; பரிணாமம். *ஆக்கம் என்பது ஒன்றன் பரிணாமம் கண்டு வியத்தல்* (தொல். பொருள் 251.இளம்.)

ஆக்கம்[2] *பெயர்*

எண்வகை உம்மைகளுள் ஒன்று, குறிப்பிட்ட ஒன்றுமட்டும் அன்றி மற்றொன்றும் எனப் பொருள் தரும் ஓர் இடைச்சொல்; ஆக்க உம்மை *எ-டு.:* உணவும் ஆயிற்று என்பது அதுவே மருந்தும் ஆயிற்று எனப் பொருள் தருதல். *முற்றே எண்ணே தெரிநிலை ஆக்கம் என்று அப்பால் எட்டே உம்மைச் சொல்லே* (தொல் 740:2-3)

ஆக்கு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1 செய்தல். *ஆக்கலில் சார்தலில் செலவில் கன்றலின்* (தொல் 557.7)

2. அமைதல்; இருக்கும்படிச் செய்தல் *கிழவனை நெருங்கி இழைத்து ஆங்கு ஆக்கிக் கொடுத்தற்கண்ணும்* (தொல் 1100.9-10)

ஆக *வினையெச்சம்*

அப்படியாக. *பல்லாறு ஆகப் பொருள்புணர்ந்து இசைக்கும்* (தொல். 569:1).

ஆக ஆக *இடை*

எப்பொழுதும் இரட்டித்தே வரும் மூன்று அசைநிலைகளுள் ஒன்று; இன்றைய 'சரிசரி' என்பதை ஒத்தது. *(வழக்கிழந்த மொழி) ஆக ஆகல் என்பது என்னும் ஆவயின் மூன்றும் பிரிவுஇல் அசைநிலை* (தொல் 765)

ஆகல் *பெயர்*

ஆகுதல். *லகரம் றகரஒற்று ஆகலும் உரித்தே* (தொல். 215:2).

ஆகல் ஆகல் *இடை*

எப்பொழுதும் இரட்டித்தே வரும் மூன்று அசைநிலைகளுள் ஒன்று; இன்றைய 'சரிசரி' என்பதை ஒத்தது, வழக்கில்மொழி *ஆக ஆகல் என்பது என்னும் ஆவயின் மூன்றும் பிரிவுஇல் அசைநிலை* (தொல் 765)

ஆகாரம் *பெயர்*

ஆ என்னும் எழுத்து. *ஆகாரம் வருதல் ஆவயின் ஆன* (தொல். 285:3).

ஆகு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. பொருந்துதல்; அமைதல். *எகர ஒகரம் பெயர்க்கு ஈறு ஆகா* (தொல். 273:1).

2. ஏற்படுதல்; உண்டாதல். *நிகழ்ச்சி அவர்கட்டு ஆகலான* (தொல். 1596:2)

3. ஒன்றிலிருந்து மற்றொன்றாக மாறுதல். *அன்றுவருகாலை ஆ ஆகுதலும்* (தொல் 259:1).

4. இயலுதல்; முடிதல். *அளக்கல் ஆகா அரும்பொருட்டு ஆகி* (தொல். 1604:6).

5. பொருள் தருதல்; சொல்லுக்கு அருத்தம் ஆகுதல். *உரு உட்கு ஆகும் புரை உயர்பு ஆகும்* (தொல். 785).

6. மொழியில் ஆளப்படுதல், வழங்குதல்; பயிலுதல். *தொல்நெறி மொழிவயின் ஆஅகுநவும்* (தொல். 933:3).

ஆகுபெயர் *பெயர்*

ஒரு பொருளின் பெயர் அதனோடு ஏதாவதொரு வகையில் தொடர்புடைய வேறொரு பொருளுக்குத் தொன்றுதொட்டு வழங்கிவருவது. *எ-டு..* காஞ்சிபுரம் வாங்கினான் (=காஞ்சிபுரத்தில் நெய்யப்பெற்ற பட்டுப்புடவையை வாங்கினான்). *அனைமரபினவே ஆகுபெயர்க் கிளவி* (தொல் 600:6).

ஆகோள் *பெயர்*

வெட்சித் திணையின் துறைகளுள் ஒன்று, பகைவர்களின் பசுக்களைக் கவர்தல். *ஊர்கொலை ஆகோள் பூசல்மாற்றே* (தொல். 1008·5).

ஆங்க *இடை*

உவம உருபுகளுள் ஒன்று *அன்ன ஆங்க மான இறப்ப* (தொல். 1236·1).

ஆங்கண் *பெயர்*

அந்த இடம். *புறத்தோர் ஆங்கண் புணர்வது ஆகும்* (தொல். 1126)

ஆங்கு[1] *பெயர்*

அத்தகையது. *ஆங்குஎன மொழிப அறிந்திசி னோரே* (தொல் 1472:12)

ஆங்கு[2] *வினையடை*

1. அவ்விடத்தில் *சொல்லிய அல்ல பிறவும் ஆஅங்கு அன்னவை தோன்றின் அவற்றொடும் கொளலே* (தொல். 666:4-5)

2. அக்காலத்தில். *ஆங்குஅதன் தன்மையின் வன்புறை உளப்பட* (தொல் 1064:44)

3. அவ்விதமாக, அப்படியாக. *சொல்லின் எச்சம் சொல்லியாங்கு உணர்த்தல்* (தொல் 1614:21)

ஆங்கு *இடை*

1. அசை நிலைகளுள் ஒன்று. *இன்பமும் பொருளும் அறனும் என்று ஆங்கு* (தொல் 1041:1)

2. உவம உருபுகளுள் ஒன்று *நினையுங் காலைக் கிளந்தாங்கு இயலும்* (தொல். 539:2).

ஆங்ஙனம் *வினையடை*

அப்படி; அவ்விதம்; அவ்வாறு *ஆங்ஙனம் விரிப்பின் அளவு இறந்தனவே* (தொல் 1312:1)

ஆசிரியத்தளை *பெயர்*

ஈரசைச்சீர்களில் நின்றசீரின் ஈற்றசையும் வருசீரின் முதல்அசையும் ஒன்றுவதால் வரும் தளை; மாமுன் நேர்; விளம்முன் நிரை *ஆசிரியத் தளைஎன்று அறியல் வேண்டும்* (தொல்.1316:2)

ஆசிரியப்பா *பெயர்*

பெரும்பாலும் ஆசிரியத்தளை பெற்று, மூன்றுமுதல் ஆயிரம்வரை நான்கு சீர்கொண்ட அடிகள் பெற்று, ஏ என்னும் எழுத்தில் முடியும் செய்யுள்;7 அகவல். *ஆசிரியப்பா வெண்பா என்று ஆங்கு* (தொல் 1367:2)

ஆசிரியப்பாட்டு *பெயர்*

காண்க. ஆசிரியப்பா. *ஆசிரியப் பாட்டின் அளவிற்கு எல்லை* (தொல் 1416:1).

ஆசிரியம் *பெயர்*

1. *காண்க.* ஆசிரியத்தளை. *வெண்டளை விரவியும் ஆசிரியம் விரவியும்* (தொல். 1323:1).

2. *காண்க:* ஆசிரியப்பா. *அகவல் என்பது ஆசிரி யம்மே* (தொல் 1341).

ஆசிரியர் *பெயர்*

மூல இலக்கண நூலை இயற்றியவர்; இலக்கண அறிஞர். *வரைநிலை இன்றே ஆசிரியர்க்க* (தொல். 316:3).

ஆசிரியவுரிச்சீர் *பெயர்*

காண்க. இயற்சீர். *உரியசை மயக்கம் ஆசிரிய உரிச்சீர்* (தொல். 1274:2).

ஆசை *பெயர்*

ஒரு பொருளைப் பெறவோ, ஒரு செயலைச் செய்யவோ உள்ளத்தில் எழும் உணர்வு; வேட்கை; விருப்பம். *காட்சி ஆசையில் களம்புக்குக் கலங்கி* (தொல். 1057:4).

ஆஞ்சி *பெயர்*

காஞ்சித் திணையின் துறைகளுள் ஒன்று; ஆஞ்சிக்காஞ்சி, போரில் தன் கணவனை இழந்த ஒருத்தி அவன் உயிரைப் போக்கிய அதே போர்க்கருவியைக் கொண்டு தன் உயிரை மாய்த்துக் கொள்ளுதல். *நீத்த கணவற் றீர்த்த வேலிற் பெயர்த்த மனைவி ஆஞ்சி யானும்* (தொல் 1029:12-13).

ஆஞ்சிக்காஞ்சி *பெயர்*

காண்க: ஆஞ்சி *ஆஞ்சிக் காஞ்சி மகட்பாற் காஞ்சி* (பு வெ.மா. 4:10).

ஆடி *பெயர்*

தன் எதிரில் உள்ள பொருளை (இடவல மாற்றத்துடன்) மறு ஒளிப்புச் செய்யும் (=பிரதிபலிக்கும்) தளம்; கண்ணாடி. *ஆடி நிழலின் அறியத் தோன்றி* (தொல். 1428:3)

ஆடு[1] *பெயர்*

பெரும்பாலும் இறைச்சிக்காக வளர்க்கப்படும் கெட்டியான தோல் உள்ள பால் தரும் விலங்கு; யாடு *ஆடுடை இடைமகன் சூடப்பூக்கும்* (நற். 266:3).

ஆடு[2]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. விளையாடுதல். *யாறும் குளனும் காவும் ஆடி* (தொல். 1141:1).
2. கூத்தாடுதல்; மகிழ்ச்சியால் குதித்தல் *வாளோர் ஆடும் அமலையும்* (தொல். 1022:11).
3. வெறியாடுதல். *காண்க*: வெறியாட்டு. *ஆடிய சென்றுழி அழிவு தலைவரினும்* (தொல்.1065:5).
4. வழக்கத்தில் பயிலுதல்; வழங்கிவருதல். *கூடிவரு வழக்கின் ஆடு இயற்பெயரே* (தொல்.652:6).

ஆடூஉ *பெயர்*

ஆண். *னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல்* (தொல். 489).

ஆண் *பெயர்*

1. ஆண்மகன். *ஆண்பால் எல்லாம் ஆண்எனற்கு உரிய* (தொல். 1553:1).
2. மரவகை. *ஆண்மரக் கிளவி அரைமர இயற்றே* (தொல். 305).

ஆண்டு *பெயர்*

1. பிறப்பிலிருந்து கணக்கிடப்படும் வாழ்நாள் காலஅளவு; வயது. *பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு* (தொல். 1222:1).
2. அவ்விடம். *பாழ் எனப்படினும் உறழ் ஆண்டு இல்லை* (தொல். 1509).

ஆண்பால் *பெயர்*

பெயர்ச்சொல்லிற்குரிய ஐந்து பால்களுள் ஒன்று; ஆணைக்குறிப்பது *ஆண்பால் எல்லாம் ஆண்எனற்கு உரிய* (தொல். 1553:1).

ஆண்மை *பெயர்*

ஓர் ஆணிடம் எதிர்பார்க்கப்பெறும் வீரம், வலிமை, சிந்தனை முதலிய பண்புகள் நிறைந்த தன்மை; ஆடூஉக்குணம். *பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு* (தொல். 1222:1).

ஆணம் *பெயர்*
அன்பு. *ஆணம் சான்ற அறிவர்* (தொல். 1449:2)

ஆணை *பெயர்*
குறிப்பிட்டதைச் செய்யும்படி மேலாண் உரிமை (=அதிகாரம்) செலுத்துவது, கட்டளை; உத்தரவு. *வழக்கியல் ஆணையில் கிளத்தற்கும் உரியன்* (தொல். 1453:2).

ஆதல் *பெயர்*
ஆகுதல். *நின்ற இகரம் உகரம் ஆதல்* (தொல் 238:2)

ஆதலான் *வினையடை*
காரணத்தைக் குறித்துவரும் சொல்; ஆகையால், ஆகலான், எனவே. *துணையோர் கருமம் ஆதலான* (தொல். 1073:4).

ஆதலின் *வினையடை*
காண்க: ஆதலான். *கலந்த மயக்கம் உலகம் ஆதலின்* (தொல். 1593:2)

ஆதி *பெயர்*
தொடக்கம், முதல். *நால்எழுத்து ஆதி ஆக ஆறுஎழுத்து* (தொல் 1297:1)

ஆ பெயர்த்துத் தருதல் *பெயர்*
வெட்சித் திணையின் துறைகளுள் ஒன்று, பகைவர்களால் கவர்ந்து செல்லப்பட்ட பசுக்களை மீட்டல். *ஆர் அமர் ஓட்டலும் ஆபெயர்த்துத் தருதலும்* (தொல். 1010:11)

ஆம்[1] *வினைமுற்று*
ஆகும் என்பதன் குறைவடிவம் (இடைக்குறை) *பயப்பே பயன் ஆம்* (தொல். 790).

ஆம்[2] *இடை*
தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி. *எ-டு.:* யாம் உலரத்தாம். *அம்ஆம் எம்ஏம் என்னும் கிளவியும் பன்மை உரைக்கும் தன்மைச் சொல்லே* (தொல் 689:1...5)

ஆய்[1]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*
ஆராய்ச்சி (=ஆய்வு) செய்தல். *மீட்டுவரவு ஆய்ந்த வகையின்கண்ணும்* (தொல் 1096:46)

ஆய்[2] *வினையடை*
ஆகி என்பதன் மாற்று வடிவம். *தரவே தானும் நால்அடி இழிபுஆய்* (தொல். 1393:1).

ஆய்[3] *இடை*
1. முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி. *எ-டு..* கண்டாய். *முன்னிலைக் கிளவி இஐ ஆய்என வரூஉம் மூன்றும்* (தொல் 708:2-3)
2. விளிஉருபுகளுள் ஒன்று *ஆய் ஆகும்மே விளிவயின் ஆன* (தொல். 620:2)

ஆய்தத் தொடர்மொழி *பெயர்*
ஈற்றயல் எழுத்தை ஆய்தமாகப்பெற்றுக் குற்றியலுகரத்தில் முடியும் சொல்; ஆய்தத்தொடர். *எ-டு.:* எஃகு. *ஆய்தத் தொடர்மொழி வன்தொடர் மென்தொடர்* (தொல். 407 :2).

ஆய்தத்தொடர் *பெயர்*
காண்க ஆய்தத்தொடர்மொழி *இடையொற்றுத் தொடரும் ஆய்தத் தொடரும்* (தொல் 414:1)

ஆய்தப்புள்ளி *பெயர்*

காண்க. ஆய்தம். *முன்உயிர்வரும் இடத்து ஆய்தப்புள்ளி* (தொல். 424:1).

ஆய்தம் *பெயர்*

வாய் திறக்கும்போது நெஞ்சுவளியால் பிறந்து அரைமாத்திரை அளவு ஒலிக்கும் சார்பெழுத்து. அஃகேனம்; ஆய்தப்புள்ளி; தனிநிலை *ஆய்தம் கெடுதல் ஆவயின் ஆன* (தொல். 201:3).

ஆயர் *பெயர்*

முல்லை நிலத்தில் வாழ்ந்து, ஆநிரை மேய்த்தலைத் தம் தொழிலாக உடைய மக்களுள் ஆண்கள். *ஆயர் வேட்டுவர் ஆடு உத் திணைப்பெயர்* (தொல் 970:1)

ஆயிடை *பெயர்*

அவ்விடம் *ஆயிடை வருதல் இகர ரகாரம்* (தொல். 464:5).

ஆயிரம் *பெயர்*

பத்து நூறுகளாலான எண் (=1000) *ஆயிரம் வருவழி உகரம் கெடுமே* (தொல். 392)

ஆயின் *இடை*

ஆனால்; எனின்; ஆக இருந்தால் *வேற்றுமை ஆயின் வல்லெழுத்து மிகுமே* (தொல். 236:2).

ஆயினும் *இடை*

ஆன போதிலும், எனினும்; ஆனாலும். *உயர்திணை மருங்கின் நிலையின ஆயினும்* (தொல் 541:9).

ஆர்[1] *பெயர்*

ஆத்திமலர் *போந்தே வேம்பே ஆர்என வரூஉம்* (தொல். 1010:4)

ஆர்[2] *பெயரடை*

எளிதில் கிடைக்காத; அரிய. *வருபகை பேணார் ஆர்எயில் உளப்பட* (தொல். 1017:7).

ஆர்[3] *இடை*

1. அசைநிலைகளுள் ஒன்று. *எல்லா உயிரொடும் செல்லும்ஆர் முதலே* (தொல். 61:2).
2. பலர்பால் விகுதி. *எ-டு.* என்மனார் *அர்ஆர் பஎன வரூஉம் மூன்றும் பல்லோர் மருங்கில் படர்க்கைச் சொல்லே* (தொல். 693)

ஆர்வம் *பெயர்*

1. அன்பு. *ஆர்வ நெஞ்சமொடு செப்பிய வழியினும்* (தொல் 990:4)
2. ஆசை; வேட்கை. *அல்லல் தீர ஆர்வமொடு அளைஇ* (தொல். 1096:10)

ஆரம் *பெயர்*

மணிகள் பதிக்கப்பெற்றோ பெறாமலோ செய்யப்படும் கழுத்தணி; பொன்மாலை; பொற்சங்கிலி. *தாரும் ஆரமும் தேரும் வாளும்* (தொல் 1586:2)

ஆரமர் ஓட்டல் *பெயர்*

வெட்சித் திணையின் துறைகளுள் ஒன்று; பெரிய போரை விலக்குதல். *ஆர் அமர் ஓட்டலும் ஆபெயர்த்துத் தருதலும்* (தொல் 1010:11).

ஆராய்ச்சி *பெயர்*

குறிப்பிட்ட ஒரு பொருளின் தன்மைகளைப் பலவகையாகவும் நுட்பமாகவும் நோக்கி, அதன் உண்மைகளைச் சற்றும் ஐயத்திற்கு இடமின்றித் தெளிவாக உணர்த்தல்; ஆய்வு. *கருதல் ஆராய்ச்சி விரைவுஉயிர்ப்பு எனாஅ* (தொல் 1209.7)

ஆரெயில் *பெயர்*

உழிஞைத் திணையின் துறைகளுள் ஒன்று, முற்றுகை இடப்பட்ட கோட்டையின் வலிமையைச் சிறப்பித்தல் *வருபகை பேணார் ஆரெயில் உளப்பட* (தொல் 1017:7).

ஆல்[1] *பெயர்*

சிவந்த சிறுகனிகளையும் விழுதுகளையும் உடையதும், பரந்து மிகப் பெரியதாக வளர்வதுமாகிய ஒரு மரம், ஆலமரம். *பூல்வேல் என்றா ஆல்என் கிளவியொடு*(தொல் 376.1)

ஆல்[2] *இடை*

1. காரண, கருவிப் பொருள்களில் வரும் மூன்றாம் வேற்றுமை உருபு *காரணம். செங்கடு மொழியால் சிதைவுடைத்து ஆயினும்* (தொல் 1064:26); *கருவி : செய்யுள் மொழியால் சீர்புனைந்து யாப்பின்* (தொல் 1495:1)

2. அசை நிலைகளுள் ஒன்று *கனவும் உரித்து ஆல் அவ்விடத்து ஆன* (தொல் 1147).

ஆவயின் *வினையடை*

அவ்விடத்தில். *ஆவயின் அண்ணம் ஒற்றவும் வருடவும்* (தொல் 96:2)

ஆவிரை *பெயர்*

சிறகுகளைப் போன்ற சிற்றிலைகளையும் மஞ்சள் நிற மலர்களையும் வெடித்துச் சிதறும் தட்டையான காய்களையும் பெற்ற ஒரு புதர்ச்செடி; ஆவாரை. *பனையும் அரையும் ஆவிரைக் கிளவியும்* (தொல் 284:1)

ஆள் *இடை*

பெண்பால் படர்க்கை ஒருமை வினைமுற்று விகுதி. *எ-டு.* வந்தாள் *அன்ஆன் அள்ஆள் என்னும் நான்கும் ஒருவர் மருங்கின் படர்க்கைச் சொல்லே* (தொல். 692).

ஆற்ற *வினையடை*

மிக; அதிகமாக *அவன் அறிவு ஆற்ற அறியும் ஆகலின்* (தொல் 1097:1).

ஆற்றல்[1] *பெயர்*

1. துன்பத்தை அல்லது கடுமையான பணியை உறுதியோடு தாங்கி நிற்றல்; பொறுத்தல். *அரும்பகை தாங்கும் ஆற்ற லானும்* (தொல் 1026.8)

2. வலிமை. *ஆற்றலொடு புணர்ந்த ஆண்பாற்கு எல்லாம்* (தொல் 1552:1)

3. கடைப்பிடித்தல், இடையில் தொய்வு ஏற்படாமல் தொடர்ந்து மேற்கொள்ளல் *புணர்த்தல் ஆற்றலும் அவள்வயின் ஆன* (தொல். 1079:2).

ஆற்றல்[2] *பெயர்*

வாகைத் திணையின் துறைகளுள் ஒன்று; வலிமை மிக்க பகைவனின் எதிர்ப்பைத் தாங்கி நிற்கும் மன்னனின் மனவலிமையைக் கூறுதல். *அரும்பகை தாங்கும் ஆற்றலானும்* (தொல்.1026:8)

ஆற்றாமை *பெயர்*
பொறுக்க இயலாமை; தாங்க மாட்டாமை. *பிரிவு ஆற்றாமை* (தொல். 1221:5)

ஆற்று-தல் *செயப்படுபொருள் குன்றாவினை*
பொறுத்துக்கொள்ளுதல். *நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்* (தொல் 1025:5).

ஆற்றுப்படை *பெயர்*
பாடாண் திணையின் துறைகளுள் ஒன்று; வள்ளல் ஒருவன்பால் பரிசில்பெற்ற ஒருவன் பரிசில்பெற விழையும் பிறரையும் அவ்வள்ளல்பால் வழிப்படுத்துவது. *ஆற்றுப்படை மருங்கில் போற்றல் வேண்டும்* (தொல். 946:3).

ஆறு[1] *பெயர்*
1. ஐந்திற்கும் ஏழிற்கும் இடைப்பட்ட எண் (=6). *அவ் ஆறு எழுத்தும் மூவகைப் பிறப்பின* (தொல். 92).
2. நெறி, மரபு *இலக்கண மருங்கில் சொல்ஆறு அல்ல* (தொல். 511.4)
3. வகை; விதம். *பல்ஆறு ஆகப் பொருள்புணர்ந்து இசைக்கும்* (தொல் 569:1).
4. செல்லும் வழி. *பொழுதும் ஆறும் உட்குவரத் தோன்றி* (தொல். 990:1).

ஆறு[2] *பெயர்*
ஆறாம் வேற்றுமை. *அப்பொருள் ஆறற்கு உரித்தும் ஆகும்* (தொல். 585:2).

ஆன்[1] *வினையடை*
அவ்விடத்தில்; அங்கு *ஆன்வந்து இயையும் வினைநிலையானும்* (தொல் 717:2)

ஆன்[2] *இடை*
1. காரணப்பொருள், கருவிப்பொருள், அருகி உடனிகழ்ச்சிப் பொருளிலும் வரும் மூன்றாம் வேற்றுமை உருபு. *காரணம்: அதுச்சொல் வேற்றுமை உடைமையானும்* (தொல் 700:1); *கருவி: கிளந்தவற்று இயலான் உணர்ந்தனர் கொளலே* (தொல். 781:2); *உடனிகழ்ச்சி. வணங்குஇயல் மொழியான் வணங்கற் கண்ணும்* (தொல். 1100:10).
2. இடவேற்றுமையாகிய ஏழாம் வேற்றுமை உருபுகளுள் ஒன்று. *மன்னல் வேண்டும் அல்வழி ஆன்அ* (தொல். 424:2).
3. ஆண்பால் படர்க்கை ஒருமை வினைமுற்று விகுதி *எ-டு*: சென்றான். *அன்ஆன் அள்ஆள் என்னும் நான்கும் ஒருவர் மருங்கின் படர்க்கைச் சொல்லே* (தொல். 692).
4. ஆண்பால் ஒருமைப் பெயர் ஈறு. *எ-டு.*: மனிதன், நல்லவன். *ஆன்என் இறுதி இயற்கை ஆகும்* (தொல். 619).
5. அசைநிலைகளுள் ஒன்று. *அன்ன மரபின் மொழிவயின் ஆன்அ* (தொல். 144:4).
6. சாரியைகளுள் ஒன்று. *தொழில்நிலைக் கிளவிக்கு ஆன் இடைவருதல் ஐயம் இன்றே* (தொல். 248:1-2).
7. தோறும் என்னும் பொருளில் வரும் ஒரு பின்னொட்டு. *எ-டு.*: ஊரானோர், ஊர்கள் தோறும். *வழக்கிழந்த மொழி. வினையினும் குறிப்பினும் மெய்ம்மை ஆனும் ஈர் இரண்டு ஆகும்* (தொல்.911:4-5).

இ

இ[1] *பெயர்*

மேற்பல்லின் அடியை நாக்கின் அடி விளிம்பு சென்று பொருந்துவதாலும் மிடற்றுவளியாலும் ஒரு மாத்திரை அளவு ஒலிக்கப்படும் உயிர்க்குறில் ஒலி; அவ்வொலியை வரிவடிவில் சுட்டுவதும் தமிழ்நெடுங்கணக்கில் மூன்றாவதும் ஆகிய உயிரெழுத்து. *இஈ எஏ ஐஎன இசைக்கும் அப்பால் ஐந்தும் அவற்றோர் அன்ன அவைதாம் அண்பல் முதல்நா விளிம்புஉறல் உடைய* (தொல்.86); *பன்னீர் உயிரும் தம்நிலை திரியா மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்* (தொல் 84:2-3), *அஇஉ எஒ என்னும் அப்பால் ஐந்தும் ஓர் அளபு இசைக்கும் குற்றெழுத்து என்ப* (தொல்.3:2-4); *ஔகார இறுவாய்ப் பன்னீர் எழுத்தும் உயிர்என மொழிப* (தொல்.8)

இ[2] *இடை*

1. (அ) ஓர் அகச்சுட்டு *அறியா அறிவினள் இவள் என* (தொல் 1067:1).

(ஆ) புறச்சுட்டு. *இ திணைக்கு உரிப்பொருள் என்னாது* (தொல். 1467.3)

(இ) அண்மைச்சுட்டு. *இ தெரு இறப்போன்* (அகநா 66:9)

2. வினையெச்ச விகுதி. *அச்சமும் உவகையும் எச்சம் இன்றி* (தொல். 1040:16)

3. ஈகார உயிர் அளபெடையை அறிவிக்கும் எழுத்தின் வரிவடிவம், இசை நிறைவு. *ஒரீஇக் கூறலும் மரீஇய பண்பே* (தொல் 1259).

4. ஆண், பெண், ஒன்றன் பால்களில் வரும் பெயர் விகுதி.

5. தொழிற்பெயர் விகுதி. *வெறுப்பவந்த வெகுளி நான்கே* (தொல். 1207:2).

இக்கு *இடை*

சாரியைகளுள் ஒன்று. *திங்கள் முன்வரின் இக்கே சாரியை* (தொல் 249).

இக[1]**-த்தல்** *செயப்படுபொருள் குன்றா வினை*

ஓர் இடத்தை விட்டு நீங்குதல் *பதிஇகந்து நுகர்தலும் உரிய என்ப* (தொல் 1141:2).

இக[2]**-த்தல்** *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. காலம் கழிதல். *காணாவகையில் பொழுது நனி இகப்பினும்* (தொல். 1057:2).

2. மிகுதியாதல், மேல்வரம்பு மீறுதல் *அடி இகந்து வரினும் கடிவரை இன்றே* (தொல். 1442)

இக[3] *இடை*

அசைநிலைகளுள் ஒன்று. *மியா இக மோமதி இகும்சின் என்னும் ஆவயின் ஆறும் முன்னிலை அசைச்சொல்* (தொல். 759).

இகரம் *பெயர்*

இ என்னும் எழுத்து. *அகர இகரம் ஐகாரம் ஆகும்* (தொல். 54).

இகர முனை *பெயர்*

இ என்னும் எழுத்தை ஈற்றில் பெற்று வரும் சொல். *எ-டு.*: புளி *இக்கின் இகரம் இகரமுனை அற்றே* (தொல். 127).

இகல்(லு)-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

பகைத்துக்கொள்ளுதல்; மாறுபடுதல். *இகல்மதில் குடுமிகொண்ட மண்ணுமங்கலமும்* (தொல்.1018:10).

இகழ்ச்சி *பெயர்*

பழிப்பு; இழிவு; அவமதிப்பு. *இல்லோர் செய்வினை இகழ்ச்சிக் கண்ணும்* (தொல். 1101:2)

இகும் *இடை*

அசைநிலைகளுள் ஒன்று. *(வழக்கிழந்த மொழி). இகுமும் சின்னும் ஏனை இடத்தொடும் தகுநிலை உடைய* (தொல். 760:2-3).

இசின் *இடை*

அசைநிலைகளுள் ஒன்று. *(வழக்கிழந்த மொழி). இகுமும் சின்னும் ஏனை இடத்தொடும் தகுநிலை உடைய* (தொல் 760:2-3). *நூற்பாவில் சின்என இருப்பினும் ஆட்சியில் இசின் என்றே வழங்கும் எ-டு.* கொண்டு கைவலித்தல் சூழ்ந்திசின்யானே (அகநா. 76.13).

இசை *பெயர்*

1. ஒலி. *குன்று இசைமொழிவயின் நின்று இசை நிறைக்கும்* (தொல். 41:1).
2. சொல். *இசை திரிந்து இசைப்பினும் இயையும்மன் பொருளே* (தொல் 1145:1)
3. பாட்டு; இன்னிசை; சங்கீதம். *இசையொடு சிவணிய நரம்பின் மறைய* (தொல் 33:2-3).
4. புகழ் *நல்இசை நயந்தோர் சொல்லொடு தொகைஇ* (தொல். 1097:26).

இசை[1] *பெயர்*

1. எழுத்தின் ஒலிவடிவம், உச்சரிப்பு. *உருவினும் இசையினும் அருகித் தோன்றும்* (தொல் 40.1)

2. ஒரு செய்யுள் அல்லது உரைநடையில் பொருளை முற்றுவிப்பதற்காகச் சொற்களை வருவித்துக் கொள்ளுதல், இசையெச்சம். *குறிப்பே இசையே ஆசா் ஐந்தும்* (தொல் 914:3).

இசை[2]**-த்தல்** *செயப்படுபொருள் குன்றிய வினை*

ஒலித்தல். *ஈரளபு இசைக்கும் நெட்டெழுத்து என்ப* (தொல் 4:4).

இசை[3]**-தல்** *செயப்படுபொருள் குன்றிய வினை*

பொருந்துதல் *இசைஇடன் அருகும் தெரியுங் காலை* (தொல். 13:2)

இசைநிறை *பெயர்* -

செய்யுளில் தனக்கெனத் தனிப்பொருள் இல்லாமல் பாவுக்கு உரிய ஓசையை நிறைவு செய்வதற்காகவே வருகின்ற ஏ, ஓ, தெய்ய, மாது, அம்ம, தில்ல என்னும் இடைச்சொற்கள். *இசைநிறை அசைநிலை பொருளொடு புணர்தல்என்று அவைமூன்று என்ப ஒருசொல் அடுக்கே* (தொல். 906).

இசைநிறைவு *பெயர்*

அளபெடையில் ஒரு நெடில் தனக்குரிய இரண்டு மாத்திரையைவிட மிக்கு ஒலிப்பதைக் காட்டுவதற்காக எழுதப்படும் குற்றெழுத்து *எ-டு*: தழாஅல், நிறீஇ, ஆடூஉ ஐஒள என்னும் *ஆசா் எழுத்திற்கு இகர உகரம் இசைநிறைவு ஆகும்* (தொல். 42).

இசைப்பு *பெயர்*

ஒலிப்பு. *இசைப்பு இசை ஆகும்* (தொல் 793).

இசைமை *பெயர்*

ஒலி. *ஈறுஇயல் மருங்கினும் இசைமை தோன்றும்* (தொல் 39·1)

இட்டு *பெயரடை*

சிறிய இட்டுப் பிரிவு இரங்கினும் அருமைசெய்து அயர்ப்பினும் (தொல். 1061:6).

இடக்கர் *பெயர்*

நல்லோர் அவையில் வெளிப்படையாகக் கூறத்தகாதது; மறைத்துச் சொல்லப்படுவது *நீஎன் பெயரும் இடக்கர்ப் பெயரும்* (தொல். 251:1).

இடத்து *இடை*

காலப் பொருளில் வரும் வினையெச்ச விகுதி *எ-டு.:* ஆராயுமிடத்து உண்மை விளங்கும் *பின்முன் கால்கடை வழி இடத்து என்னும்* (தொல் 714:1)

இடந்தலைப்பாடு *பெயர்*

களவியலில் இயற்கைப் புணர்ச்சியை அடுத்துத் தலைவியைத் தலைவன் தான் முதலில் சந்தித்த இடத்திலேயே கண்டு உறவாடுதல் *காமப் புணர்ச்சியும் இடந்தலைப் பாடும்* (தொல் 1445:1)

இடம்[1] *பெயர்*

1. ஒரு செயல் நிகழ்கின்ற இடம்; தானம். *இடம்வரை கிளவிமுன் வல்லெழுத்து மிகூஉம்* (தொல். 252:1).

2. இடப்பக்கம். *முன்இடை கடைதலை வலம்இடம் எனாஅ* (தொல் 567·3)

இடம்[2] *பெயர்*

சொல் இலக்கணத்தில் பயிலப்பெறும் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்கள் *தன்மை முன்னிலை ஆரர் இடத்த* (தொல். 513:3).

இடம்[3] *பெயர்*

தலைவன் முதலிய அகப்பொருள் மாந்தர்க்குக் கூற்று (=பேச்சு) நிகழும் சூழல். *புலத்தலும் ஊடலும் ஆகிய இடத்தும்* (தொல் 1107·1)

இடம்பெற்றுத் தழாஅல் *பெயர்*

களவில் தலைவியின் உடன்பாடாகிய வாய்ப்பினைக் கொண்டு தலைவன் அவளைக் கூடுதல் *இடம்பெற்றுத் தழாஅல் இடையூறு கிளத்தல்* (தொல் 1051 2).

இடன் *பெயர்*

இடம் என்னும் சொல்லின் மாற்றுவடிவம் *மூன்றே திரிபுஇடன் ஒன்றே இயல்புஎன* (தொல். 109:8)

இடி-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

கண்டித்துக் கூறுதல்; கழறுதல் *இடித்துவரை நிறுத்தலும் அவரது ஆகும்* (தொல். 1105·1)

இடு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. வைத்தல். *கவவு அகத்து இடுமே* (தொல் 841)

2 அமைத்தல். *தான் குறி இடுதல்* (தொல் 1614:14)

இடுக்கண் *பெயர்*

துன்பம் *கையாறு இடுக்கண் பொச்சாப்புப் பொறாமை* (தொல் 1209:8).

இடும்பை *பெயர்*

துன்பம். *ஏமம் சாலா இடும்பை எய்தி* (தொல் 1000:2)

இடை[1] *பெயர்*

1. நடு; நடுஇடம்; நடுப்பகுதி. *இடைச்சுர மருங்கின் கிழவன் கிழத்தியொடு* (தொல். 1453:1).
2. வேறுபாடு. *வேந்திடை தெரிதல் வேண்டி* (தொல். 1010:3)
3. இடையீடு. *இடைஇல் வண்புகழ்க் கொடையினானும்* (தொல். 1026:19)

இடை[2] *பெயர்*

1. யரலவழள என்னும் ஆறு இடையின எழுத்துகள். *இடைஒற்றுத் தொடரும் ஆய்தத் தொடரும்* (தொல். 414:1).

2. *காண்க*: இடைச்சொல். *இடை எனப்படுப பெயரொடும் வினையொடும் நடைபெற்று இயலும்; தமக்கு இயல்பு இலவே* (தொல் 734)

இடை[3] *இடை*

ஏழாம் வேற்றுமை உருபு. இடம் : *அன்னமரபின் மொழியிடைத் தோன்றி* (தொல். 482:3). காலம் : *வரையா நாளிடை வந்தோன் முட்டினும்* (தொல். 1062:2).

இடைச்சொல் *பெயர்*

தனக்கெனத் தனிப்பொருள் இன்றிப் பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் உணர்த்தும் பொருளைச் சார்ந்து வருகின்ற சொல்; சாரியை, விகுதி, வேற்றுமை உருபு, உவம உருபு, அசை முதலியன. *இடைச்சொல் கிளவியும் உரிச்சொல் கிளவியும் அவற்றுவழி மருங்கின் தோன்றும் என்ப* (தொல் 646).

இடைத்தொடர் *பெயர்*

ஈற்றயல் எழுத்து (=கடைசி எழுத்திற்கு முன்னர் உள்ள எழுத்து) இடையின மெய்களுள் (=ய், ர், ல், வ், ழ், ள்) ஒன்றைப்பெற்று முடியும் சொல். *எ-டு.*: எய்து, நல்கு. *ஈர்ஒற்றுத் தொடர்மொழி இடைத்தொடர் ஆகா* (தொல் 408:2).

இடைநிலைப்பாட்டு *பெயர்*

கலிப்பாவில் இடம்பெற்று வரும் தாழிசை. *இடைநிலைப் பாட்டே தரவுஅகப் பட்ட மரபினது என்ப* (தொல். 1394)

இடைமை *பெயர்*

இடையின எழுத்து. *மென்மையும் இடைமையும் வரூஉங் காலை* (தொல். 131).

இடையிடு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

நடுவில் அமைத்தல். *எண்ஏகாரம் இடையிட்டுக் கொளினும்* (தொல் 773.1).

இடையிடை *இடை*

நடுநடுவே. *கூற்றும் மாற்றமும் இடையிடை மிடைந்து* (தொல் 1415:1).

இடையூறு *பெயர்*

ஒரு செயலுக்கு நேரும் தடை. *இடம்பெற்றுத் தழாஅல் இடையூறு கிளத்தல்* (தொல். 1051:2).

இடையூறு கிளத்தல் *பெயர்*

களவில் இயற்கைப் புணர்ச்சிக்குத் தலைவியின் நாணமும் பயிர்ப்பும் தடையாக இருப்பதைக் கூறும் துறை; நாணிப் புறங்காட்டல். *இடம்பெற்றுத் தழாஅல் இடையூறு கிளத்தல்* (தொல்.1051:2)

இடையெழுத்து *பெயர்*

வல்லின, மெல்லின எழுத்துகளுக்கு இடைப்பட்ட ஒலியை உடையதாய் மிடற்று வளியால் தோன்றும் எழுத்து; ய,ர,ல,வ,ழ,ள ஆகிய ஆறு. *இடையெழுத்து என்ப யரலவழள* (தொல்.21).

இடையொற்று *பெயர்*

இடையினத்தைச் சேர்ந்த மெய்யெழுத்து, ய், ர், ல், வ், ழ், ள் *இடையொற்றுத் தொடரும் ஆய்தத் தொடரும்* (தொல். 414:1)

இடையொற்றுத்தொடர் *பெயர்*

காண்க: இடைத்தொடர். *இடையொற்றுத் தொடரும் ஆய்தத் தொடரும்* (தொல். 414:1)

இணை *பெயர்*

இரட்டை; இரண்டு; ஜதை;s ஜோடி *குறில் இணை உகரம் அல்வழியான* (தொல். 1266:3).

இதன்மாறு *பெயர்*

காரணம். *இதுநனி பயக்கும் இதன்மாறு என்னும்* (தொல் 1462:1)

இதழ் *பெயர்*

1. மலரின் தோடு; பூவிதழ். *ஏடே இதழே பாளை என்றா* (தொல். 1590 ·2).
2. உதடு. *பல்லும் இதழும் நாவும் மூக்கும்* (தொல். 83 :3).

இது *பெயர்*

அஃறிணை ஒருமை அண்மைச் சுட்டு. *அதுஇது உதுஎன வரூஉம் பெயரும்* (தொல். 654:1).

இம்பர் *பெயர்*

பின்னர்; பிறகு. *அகரத்து இம்பர் யகரப் புள்ளியும்* (தொல் 56:1)

இமை *பெயர்*

இயல்பாகக் கண்கள் இமைக்கும் நேரம்; ஒரு மாத்திரை. *கண்இமை நொடிஎன அவ்வே மாத்திரை* (தொல். 7:1).

இமைப்பு *பெயர்*

கண் கொட்டுகை. *அலமரல் இமைப்பே அச்சம் என்று* (தொல். 1044:2).

இமையோர் *பெயர்*

கண்கள் இமைத்தல் இல்லாதவர்களாகிய தேவர்கள். *இமையோர் தேஎத்தும் எறிகடல் வரைப்பினும்* (தொல் 1197:1)

இயக்கம் *பெயர்*

இயங்குகை; நடமாட்டம். *உயிர்த்திறம் இயக்கம் இன்மையான* (தொல் 1305.2).

இயங்கல் *பெயர்*

செல்லுதல்; உலாவல். *ஊர்ந்தனர் இயங்கலும் உரியர் என்ப* (தொல் 1161:2)

இயங்கு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

புடைபெயர்தல்; நகர்தல்; அசைதல். *இயங்குபடை அரவம் எரிபரந்து எடுத்தல்* (தொல் 1013·1)

இயங்குபடை அரவம் *பெயர்*

வஞ்சித் திணையின் துறைகளுள் ஒன்று; படையெடுத்து வந்துள்ள எதிர்ப்படைகளைச் சினந்து உள்நாட்டுப் படைகள் போருக்குப் புறப்படுதல். *இயங்குபடை அரவம் எரிபரந்தெடுத்தல்* (*தொல்* 1013·1)

இயம்பல் *பெயர்*

இசைக்கருவிகளின் ஒலிப்பு. *இயம்பலும் இரங்கலும் இசைப்பொருள் கிளவி* (*தொல்.* 842 : 1-2).

இயல் *பெயர்*

1. ஒரு பொருளை அதனோடொத்த வேறு பொருள்களினின்று தெளிவாக வேறுபடுத்திக் காட்டுமாறு அதன்கண் இயற்கையாக அமைந்துள்ள தன்மை; இயல்பு; சுபாவம். *எ-டு.*: தீயின் வெப்பம், நீரின் குளிர்ச்சி. *மெய்யோடு இயையினும் உயிர் இயல் திரியா* (*தொல்.* 61:2).
2. இலக்கணம். *இது பா என்னும் இயல்நெறி இன்றி* (*தொல்.* 1380:1)
3. நூலின் உட்பிரிவு. *கடப்பாடு அறிந்த புணரியல் ஆன* (*தொல்.* 37:2).
4. தகுதி *வழு இன்று நிலைஇய இயல்படு பொருளினும்* (*தொல்.* 1061:30).

இயல்(லு)-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

பயிலுதல், வழக்கத்தில் இருத்தல் *தொன்றுஇயல் மருங்கின் செய்யுளுள் உரித்தே* (*தொல்.*238:3)

இயல்பு[1] *பெயர்*

1. மொழி இலக்கணம். *மொழிப இயல்புஉணர்ந்தோரே* (*தொல்.* 951:2).
2. *காண்க* இயல்[1]. *உறுகண் ஓம்பல் தன் இயல்பு ஆகலின்* (*தொல்.* 1188:1).
3. வழக்கு; பயில்வு *தமக்கு இயல்பு இலவே* (*தொல்.* 734:2 *தெய்வச்*).

இயல்பு[2] *பெயர்*

இரு சொற்கள் கூடும்போது எந்தவகையான உருமாற்றமும் இல்லாமல் இருந்தபடியே சேர்ந்து நிற்கும் புணர்ச்சி; இயல்பு புணர்ச்சி. *எ-டு.*: புதுமலர், அவர்வீடு. *அல்வழி எல்லாம் இயல்புஎன மொழிப* (*தொல்.* 362).

இயலசை *பெயர்*

நேர்நிரை ஆகிய செய்யுள் அசைகள் *இயலசை முதல்இரண்டு ஏனைய உரியசை* (*தொல்.*1267)

இயற்கை *பெயர்*

ஒரு பொருளுக்குரிய இயல்பான தன்மை. *மெல்லெழுத்து இயற்கை உறழினும் வரையார்* (*தொல்.* 146:2)

இயற்சீர் *பெயர்*

ஆசிரியப்பாவிற்கு உரிய ஈரசைச்சீர்; ஆசிரிய உரிச்சீர். *இயலசை மயக்கம் இயற்சீர்* (*தொல்* 1274:1) *ஈர்அசை கூடிய சீர் இயற்சீர்* (*யா கலம்.* 11).

இயற்சீர் வெள்ளடி *பெயர்*

இரண்டு அசைகளால் ஆன நான்கு சீர்கள் வெண்டளை பெற்றுவரும் செய்யுள் அடி. *இயற்சீர் வெள்ளடி ஆசிரிய மருங்கின்* (*தொல்* 1322:1)

இயற்சொல் *பெயர்*
தமிழ்நாட்டில் வழங்கப்படுதல், இலக்கணத்தோடு பொருந்துதல், திரிபுகள் இன்றி இயற்கையாக அமைதல், எளிதில் பொருள் உணர்த்துதல் ஆகியவற்றை உடைய சொல். *ஒ.நோ.* திரிசொல்; திசைச்சொல். *இயற்சொல் தாமே செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித் தம்பொருள் வழாஅமை இசைக்கும் சொல்லே* (தொல். 882:2-4).

இயற்பெயர் *பெயர்*
ஒன்று அல்லது ஒருவருக்குக் காரணம் கருதியோ கருதாமலோ இட்டு வழங்கப்பெறும் இடுகுறிப்பெயர் *இயற்பெயர்க் கிளவியும் சுட்டுப்பெயர்க் கிளவியும்* (தொல் 522·1).

இயற்றல் *பெயர்*
செய்யுள் யாத்தல்; பாப் புனைதல். *ஒட்டுவழி அறிந்து துணித்தனர் இயற்றல்* (தொல் 890:3)

இயற்று-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*
அமைத்தல். *இயல்சீர்ப் பால்படுத்து இயற்றினர் கொளலே* (தொல் 1289 1)

இயறல் *பெயர் < இயல்+தல்*
செய்யப்படுதல். *அதனின் இயறல் அதற்குகு கிளவி* (தொல் 559.1)

இயன்மொழிவாழ்த்து *பெயர்*
பாடாண் திணையின் துறைகளுள் ஒன்று, ஒருவரின் பெருமைகளைப் பாராட்டி அவரை வாழ்த்துதல், இயன்மொழி. *அடுத்து ஊர்ந்து ஏத்திய இயன்மொழி வாழ்த்தும்* (தொல் 1039 2)

இயை-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*
ஒன்றுடன் பொருந்துதல்; சேர்தல் *இதழ்இயைந்து பிறக்கும் பகார மகாரம்* (தொல் 97)

இயைபு[1] *பெயர்*
பொருத்தம்; இசைவு. *இயைபே புணர்ச்சி* (தொல். 792).

இயைபு[2] *பெயர்*
1. இயைபுத்தொடை, செய்யுளின் எல்லா அடிகளிலும் ஈற்றில் நிற்கும் எழுத்தோ சொல்லோ ஒன்றாகவே அமைதல். *இறுவாய் ஒன்றல் இயைபின் யாப்பே* (தொல் 1356).
2. செய்யுளுக்கு உரிய எண்வகை வனப்புகளுள் ஒன்று, ஞகரம் முதல் ளகரம்வரை உள்ள பதினொரு மெய்யெழுத்துகளுள் ஒன்று கடைசி எழுத்தாக வருதல். *ஞகாரை முதலா ளகாரை ஈற்றுப் புள்ளி இறுதி இயைபு எனப்படுமே* (தொல் 1499).

இயைபுவண்ணம் *பெயர்*
செய்யுளுக்குரிய இருபது வண்ணங்களுள் ஒன்று, செய்யுளின் அடியில் இடையின எழுத்துகள் மிகுதியாக வருவதால் உண்டாகும் பாவோசை. *இயைபு வண்ணம் இடையெழுத்து மிகுமே* (தொல் 1477).

இர் *இடை*
பன்மை விகுதிகளுள் ஒன்று. *எ-டு* · மகளிர் *இர்ஈர் மின்என வரூஉம் மூன்றும்* (தொல் 709:1).

இர-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*
பணிந்து வேண்டுதல். *இரந்து குறையுற்ற கிழவனை* (தொல். 1186.1).

இரக்கம் *பெயர்*

1. பிற உயிர்களின் துன்பத்தைக் காணும்போது உள்ளத்தில் உண்டாகும் உணர்ச்சி; கருணை; தயை. *எளிமைக்காலத்து இரக்கத்தானும்* (தொல். 1100:24).

2. வருத்தம். *உரித்துஎன மொழிப வாழ்க்கையுள் இரக்கம்* (தொல். 1175:2).

இரங்கல் *பெயர்*

நெய்தல் திணைக்கு உரிய உரிப்பொருள், தலைவனின் பிரிவை ஆற்றமாட்டாத தலைவி வாய்விட்டுப் புலம்புதல். *புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் அவற்றின் நிமித்தம் என்று இவை* (தொல் 963:1-2).

இரங்கு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. இசைக்கருவிகள் ஒலித்தல் *இயம்பலும் இரங்கலும் இசைப்பொருள் கிளவி* (தொல்.842:1-2).

2. வருத்தத்தால் வாய்விட்டு அரற்றுதல்; புலம்புதல். *நீடுநினைந்து இரங்கல் கூடுதல் உறுதல்* (தொல். 1051:3).

3. கழிவிரக்கம் கொள்ளுதல், பச்சாத்தாபப்படுதல். *இன்னன் என்று இரங்கிய மன்னையானும்* (தொல் 1029:7)

இரட்டல் *பெயர்*

இரண்டுபங்கு ஆதல்; இருமடங்கு ஆதல். *குறியதன் முன்னர் தன்உரு இரட்டலும்* (தொல்.161:2).

இரட்டி *பெயர்*

இரு மடங்கு *ஒருபான் சிறுமை இரட்டிஅதன் உயர்பே* (தொல். 1410).

இரட்டு[1] *பெயர்*

இரண்டாக இருக்கை; இரண்டு ஆம் தன்மை. *இரட்டைக் கிளவி இரட்டுப் பிரிந்துஇசையா* (தொல். 532).

இரட்டு[2]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

இரு மடங்கு ஆதல். *முந்தை ஒற்றே ளகாரம் இரட்டும்* (தொல். 464:2).

இரட்டைக்கிளவி *பெயர்*

1. ஒரு சொல் எப்பொழுதும் பிரியாமல் இருமுறை சேர்ந்து வந்தே பொருள் தருவது. *எ-டு.*: பளபளத்தது, பிசுபிசுத்தது. *இரட்டைக்கிளவி இரட்டுப்பிரிந்து இசையா* (தொல் 532).

2. அடையும் அடையடுத்தபொருளும் என இரண்டு சொற்கள் சேர்ந்த நிலை. *எ-டு.*: வெண்தாமரை, வெள்ளைத்தாள். *இரட்டைக்கிளவி இரட்டை வழித்தே* (தொல். 1246)

இரட்டையாப்பு *பெயர்*

ஒரு செய்யுளின் ஓரடியில் ஒரு சொல்லே நான்கு சீர்களாகவும் வருதல், அதாவது ஒரு சொல்லே நான்கு முறை வருதல், இரட்டைத்தொடை *எ-டு*. ஒக்குமே ஒக்குமே ஒக்குமே ஒக்கும் *நிரல்நிறுத்து அமைத்தலும் இரட்டை யாப்பும்* (தொல் 1351.1).

இரண்டு *பெயர்*

ஒன்றினுக்கு அடுத்த எண் *இரண்டுஇறந்து இசைக்கும் தொடர்மொழி* (தொல். 45:2)

இரலை *பெயர்*

மான்வகை. வெண்மையான முதுகையும் பிளவுபட்டு முறுக்குண்ட கரிய கொம்புகளையும் உடைய விலங்கு; புல்வாய்; கலை. *இரலையுங் கலையும் புல்வாய்க் குரிய* (தொல். 1547).

இரவு *பெயர்*

1. ஒன்றைத் தருமாறு வேண்டுகை. *ஈதாகொடுஎனக் கிளக்கும் மூன்றும் இரவின் கிளவிஆகிடன் உடைய* (தொல். 928)

2. இராக்காலம்; இராத்திரி. *குறிஎனப் படுவது இரவினும் பகலினும்* (தொல். 1080:1).

இரவுக்குறி *பெயர்*

களவியலில் காதலர் இருவரும் இரவு நேரத்தில் சந்திப்பதற்கு ஏற்படுத்திக் கொள்ளும் இடம் *இரவுக் குறியே இல்லகத் துள்ளும்* (தொல். 1081:1).

இரா *பெயர்*

இரவுக்காலம். *இராஎன் கிளவிக்கு அகரம் இல்லை* (தொல். 228).

இருத்தல் *பெயர்*

முல்லைத் திணையின் உரிப்பொருள்; தலைவி காதலன் பிரிவுத் துன்பத்தைப் பொறுத்துக்கொண்டு தன் கடமைகளில் ஈடுபட்டுக் கொண்டிருத்தல். *புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்* (தொல். 963:1).

இரு[1] *பெயரடை*

1. இரண்டு *உச்ச காரம் இருமொழிக்கு உரித்தே* (தொல். 75).

2. பெரிய. *இருநிலம் தீண்டா அருநிலை வகையோடு* (தொல். 1021:3).

இரு[2]-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

தங்குதல். *புணர்ந்துடன் போகிய கிழவோள் மனைஇருந்து* (தொல். 1098:1).

இரு கையும் எடுத்தல் *பெயர்*

தலைவிக்குப் புணர்ச்சிக்குமுன் ஏற்படும் மெய்ப்பாடுகளுள் ஒன்று; கலவிக்கு ஆயத்தமான நிலையில் தலைவி தன் கைகளை மேலே தூக்குதல்; அவத்தைகளுள் மூன்றாவதில் நிகழ்வது. *இல்வலியுறுத்தல் இருகையும் எடுத்தலொடு* (தொல். 1212:2).

இருபெயரொட்டு *பெயர்*

பெரும்பாலும் பொதுவும் சிறப்பும் ஆக இரண்டு பெயர்ச்சொற்கள் புணர்ந்து, ஒருசொல் நீர்மைப்பட்டு வரும் சொல் *எ-டு.:* மாங்கனி. *இயன்றது மொழிதலும் இருபெயரொட்டும்* (தொல். 600:4)

இரும் *பெயரடை*

பெரிய. *மாஇரும் தூவி மயில்அலங்கடையே* (தொல். 1551:2).

இருவரும் உள்வழி அவன்வரவுணர்தல் *பெயர்*

களவில் தோழி மதியுடம்படுத்தலுக்கு உரிய துறைகளுள் ஒன்று; தலைவியும் தோழியும் சேர்ந்திருக்கும்பொழுது தலைவன் வர, அப்பொழுது காதலர்களின் செயல்பாட்டால் தோழி அவர்களின் களவொழுக்கத்தை அறிதல். *இருவரும் உள்வழி அவன்வரவு உணர்தல்என மதியுடம் படுதல் ஒருமூ வகைத்தே* (தொல். 1077:2-3).

இருவகை விடை *பெயர்*

பாடாண் திணையின் துறைகளுள் ஒன்று; ஓர் இரவலன் வள்ளலிடம் தனக்கு விடைதந்து அனுப்புமாறு கேட்டல், வள்ளல் பரிசிலும் விடையும் தரப்பெற்றுக் கொண்டு செல்லுதல் என இரண்டு வகையாக வரும். *பெற்ற பின்னரும் பெருவளன் ஏத்தி நடைவயின் தோன்றிய இருவகைவிடையும்* (தொல் 1040:14-15).

இருள் *பெயர்*

ஒளி இல்லாத நிலை; இருட்டு. *இருள்நிறப் பன்றியை ஏனம் என்றலும்* (தொல் 1571:6).

இல்[1] *பெயர்*

1. வீடு. *இரவுக்குறியே இல்லகத் துள்ளும்* (தொல். 1081:1).
2. குடிப்பெருமை. *இல்வலியுறுத்தல் இருகையும் எடுத்தலொடு* (தொல் 1212:2).
3. இன்மை. *இல்என் கிளவி இன்மை செப்பின்* (தொல். 373:1)

இல்[2] *குறிப்பு வினைமுற்று*

இல்லை. *குவ்வும் ஐயும் இல்என மொழிப* (தொல். 595:3).

இல்[3] *இடை*

1. செயப்படுபொருளில் வரும் இரண்டாம் வேற்றுமை உருபு. *கிளர்இயல் வகையில் கிளந்தன தெரியில்* (தொல். 1443:1).

2. கருவிப்பொருளில் வருகின்ற மூன்றாம் வேற்றுமை உருபு. *தெரிபு வேறு நிலையலும் குறிப்பில் தோன்றலும்'* (தொல். 644:1)

3. உடனிகழ்ச்சிப்பொருளில் வரும் மூன்றாம் வேற்றுமை உருபு. *காணாவகையில் பொழுது நனி இகப்பினும்* (தொல் 1057:2).

4. பொருட்டு என்னும் பொருளில்வரும் நான்காம் வேற்றுமை உருபு. *பரத்தையில் பிரிந்த காலை ஆன* (தொல். 1137:3).

5. காரணப்பொருளில் வரும் ஐந்தாம் வேற்றுமை உருபு. *எ-டு.*: கல்வியிற் சிறந்தவன். *கடைக்கொண்டு பெயர்தலில் கலங்கு அஞர்எய்தி* (தொல். 991:4).

6. ஒப்புப்பொருளில் வரும் ஐந்தாம் வேற்றுமை உருபும் உவம உருபும். *எ-டு.*: தேனின் இனிய மொழி. *சுட்டுப்பெயர் இயற்கையில் செறியத் தோன்றும்* (தொல். 524:2).

7. நீக்கப்பொருளில் வரும் ஐந்தாம் வேற்றுமை உருபு. *வடுஅறு சிறப்பில் கற்பில் திரியாமை* (தொல். 1097:39)

8. இடவேற்றுமை ஆகிய ஏழாம் வேற்றுமை உருபு. *எ-டு.*: மேடையில் பேசினான். *வேற்றுமை மருங்கில் போற்றல் வேண்டும்* (தொல். 157:6)

9. சாரியைகளுள் ஒன்று *எ-டு..* இரண்டுஎன் எண்ணிற்கு. *வினாவிற்கு ஏற்றல்* (தொல்.440:1).

10. அசைநிலை. *உண்டியில் குறைதல்* (தொல். 1219:4)

இல்லகம் *பெயர்*

வீட்டின் உள் எல்லை. *இரவுக்குறியே இல்லகத்துள்ளும்* (தொல். 1081:1).

இல்லது காய்தல் *பெயர்*

கற்புக்காலத்துக் காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று, கணவனிடம் இல்லாத குறைகளையும் இருப்பதாகக் கூறி மனைவி சினம் கொள்ளுதல் *இல்லது காய்தல் உள்ளது உவர்த்தல்* (தொல்.1221:2)

இல்லம் *பெயர்*

கார்காலத்தில் மலர்கின்றதும், கலங்கிய தண்ணீரைத் தெளிய வைக்கும் இயல்புடைய விதைகளை உடையதுமாகிய ஒரு மரவகை, தேற்றாமரம். *ஒ.நோ.:* தேத்தாங்கொட்டை. *இல்ல மரப்பெயர் விசைமர வியற்றே* (தொல். 314).

இல்லை *குறிப்பு வினைமுற்று*

உண்டு என்பதன் எதிர்மறைச்சொல். *மரபுநிலை திரிதல் செய்யுட்கு இல்லை* (தொல். 1594:1)

இல் வலியுறுத்தல் *பெயர்*

தலைவி புணர்ச்சியின்முன் கொள்ளும் மெய்ப்பாடுகளுள் ஒன்று; தன்னுடைய குடிப்பெருமையைச் சுட்டியும், தன்பால் இல்லாத மனவலிமையை இருப்பது போலக் காட்டிக்கொண்டும் கலவிக்கு உடன்படாதவளைப்போல மறுத்தல்; அவத்தைகளுள் மூன்றாவதில் நிகழ்வது. *இல்வலியுறுத்தல் இருகையும் எடுத்தலொடு* (தொல். 1212:2).

இல *குறிப்பு வினைமுற்று*

உண்டு என்பதன் எதிர்மறை; இல்லை. *எஞ்சுபொருட் கிளவி இல்என மொழிப* (தொல்.923:2).

இலக்கணம் *பெயர்*

ஒரு மொழியின் அமைப்பை விளக்கும் விதிகளின் தொகுப்பு *இலக்கண மருங்கில் சொல் ஆறு அல்ல* (தொல் 511:4).

இலக்கம் *பெயர்*

ஒளி. *எல்லே இலக்கம்* (தொல். 754).

இலம் *பெயர்*

வறுமை. *இலம் என் கிளவிக்குப் படுவரு காலை* (தொல் 317:1).

இலம்பாடு *பெயர்*

வறுமை. *இலம்பாடு ஒற்கம் ஆஇரண்டும் வறுமை* (தொல். 844).

இலை *பெயர்*

தாவரங்களின் கிளைகளில் தோன்றும் பட்டையான பச்சை நிற உறுப்பு; தழை; அடை; கீரை; ஓலை. *இலையே தளிரே முறியே தோடே* (தொல். 1591:1).

இவ் *பெயர்*

இவை. *இவ்என அறியக் கிளக்குங் காலை* (தொல். 108:5)

இவண் *பெயர்*

இவ்விடம் *நின்று ஆங்கு இசைத்தல் இவண் இயைபு இன்றுஏ* (தொல் 543)

இவர் *பெயர்*

பலர்பால் சுட்டுப்பெயர். *அவர் இவர் உவர் என வரூஉம் பெயரும்* (தொல். 649:4)

இவர்-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

ஏறுதல். *தொல்எயிற்று இவர்தலும் தோலின் பெருக்கமும்* (தொல். 1017:3)

இவள் *பெயர்*

பெண்பால் அண்மைச் சுட்டுப்பெயர்; இந்தப்பெண். *அவள் இவள் உவள் என வரூஉம் பெயரும்* (தொல். 649:3).

இவன் *பெயர்*

ஆண்பால் அண்மைச் சுட்டுப்பெயர், இந்த மனிதன். *அவன்இவன் உவன்என வரூஉம் பெயரும்* (தொல். 649:2).

இவை *பெயர்*

பலவின்பால் அண்மைச் சுட்டுப்பெயர்; இந்தப் பொருள்கள். *ஓதல் பகையே தூதுஇவை பிரிவே* (தொல். 974)

இழ-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

சாகக்கொடுத்தல் *நனிமிகு சுரத்திடைக் கணவனை இழந்து* (தொல். 1029:24)

இழவு *பெயர்*

1. சாவு. *இளிவே இழவே அசைவே வறுமைஎன* (தொல். 1202:1).
2. பொருளின் இழப்பு; நட்டம். *பெறலின் இழவின் காதலின் வெகுளியின்* (தொல் 557:3).

இழி-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

நிலையிலிருந்து தாழ்தல். *முதுமை இளமை சிறத்தல் இழிதல்* (தொல். 563:5).

இழிந்தோன் *பெயர்*

தாழ்ந்த நிலையில் உள்ளவன். *ஈஎன் கிளவி இழிந்தோன் கூற்றே* (தொல். 929:2).

இழிபு *பெயர்*

(குறிப்பிட்ட ஒன்றற்கு அளவு கூறும்போது) கீழ்எல்லை; குறுமம்; குறைந்த பட்சம். *தரவே தானும் நால்அடி இழிபாய்* (தொல். 1393:1).

இழிவு *பெயர்*

தாழ்வு. *இழிந்துழி இழிவே சுட்டலான* (தொல். 1043:2).

இழுக்கம் *பெயர்*

பிழை; இழுக்கு. *பழித்த மொழியான் இழுக்கம் கூறல்* (தொல். 1612:6).

இழுக்கு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

தவறுதல். *ஒழுக்கமும் என்றுஇவை இழுக்கும்நெறி இன்றி* (தொல். 1467:2)

இழும் *பெயர்*

இனிப்பு; தித்திப்பு *இழும்மென் மொழியால் விழுமியது நுவலினும்* (தொல். 1497:1).

இழை *பெயர்*

அணிகலன், நகை. *இன்னிழைப் புதல்வனை வாயில்கொண்டு புகினும்* (தொல். 1122:3).

இழை-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. பொருள் ஈட்டுதல், சம்பாதித்தல். *இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே* (தொல்.977:4).
2. சொல்லுதல். *இழைத்து ஆங்கு ஆக்கிக் கொடுத்தற்கண்ணும்* (தொல். 1100:9).

இழைபு *பெயர்*

செய்யுளின் எண்வகை வனப்புகளுள் ஒன்று; வல்லின எழுத்துகள் அதிகமாகப் பயிலாமல், குறளடிமுதல் கழிநெடிலடிவரை அமைந்த நான்கடிகள் அளவு ஒத்து வருதல். *விருந்தே இயைபே புலனே இழைபு என* (தொல். 1263:12).

இளமை *பெயர்*

சிறுபருவம்; குழந்தைப் பருவம், குமரப் பருவம் இரண்டையும் குறிக்கும் குழந்தைப்பருவம்: *காமஞ்சாலா இளமையோள்வயின்* (தொல். 1000.1), குமரப்பருவம்: *நாளது சின்மையும் இளமையது அருமையும்* (தொல் 991:7)

இளிவரல் *பெயர்*

எண்வகை மெய்ப்பாடுகளுள் ஒன்று, இழிப்புச்சுவை. *நகையே அழுகை இளிவரல் மருட்கை* (தொல். 1200:1)

இளிவரு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

இகழப்படுதல், அவமதிக்கப்படல் *நளியின் நீக்கிய இளிவரு நிலையும்* (தொல் 1097:10).

இளிவு *பெயர்*

இகழ்ச்சி *இன்மையது இளிவும் உடைமையது உயர்ச்சியும்* (தொல் 991.9)

இளையர் *பெயர்*

பணியாளர். *பாணன் பாடினி இளையர் விருந்தினர்* (தொல் 1143·2)

இளையோன் *பெயர்*

பணியாளன். *இளையோர்க்கு உரிய கிளவிஎன்ப* (தொல் 1120:5).

இற்று *குறிப்பு வினைமுற்று*

இத்தன்மையது. *இயற்கைப் பொருளை இற்றுஎனக் கிளத்தல்* (தொல். 503)

இற[1]-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

எல்லைமீறுதல், வரம்பு கடத்தல் *ஆக்கம் செப்பல், நாணுவரை இறத்தல்* (தொல் 1049:2).

இற[2]-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. மிகுதல், அதிகரித்தல். *பிறப்பும் இறப்பும் இறப்ப நோக்கி* (தொல் 1064·34)
2. காலம் கழிதல். *இறந்த போலக் கிளக்கும் கிளவி* (தொல். 1185:2)

இறந்தகாலம் *பெயர்*

வினைக்குரிய மூன்று காலங்களுள் ஒன்று, ஒரு செயல் முடிந்து விட்டதைச் சுட்டுதல்; சென்றகாலம், கடந்தகாலம்; முடிந்தகாலம் *இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்* (தொல் 726:3).

இறந்தது *பெயர்*

வழக்கொழிந்தது. *இறந்தது காத்தல் எதிரது போற்றல்* (தொல். 1614:2)

இறந்தது காத்தல் *பெயர்*

32 இலக்கிய உத்திகளுள் ஒன்று;

1 மேற்கூறப்பெற்ற நூற்பாவால் தெளிவாக விளக்கப்படாத பொருளைப் பிறகு வேறு ஒரு நூற்பாவால் விளக்குதல். (இளம்.).

2. முற்கூறிய ஒரு நூற்பாவில் சொல்லப்பெற்ற கருத்தைப் பிறகு வேறு ஒரு நூற்பாவால் மறுத்தல் (பேரா.).

3. முற்கூறியதொரு விதியை மீண்டும் கூற நேர்ந்தால் முரண்படாமல் இருத்தல்

4 வழக்கிழந்த மொழி, பொருள், மரபுகளை விலக்குதல். *இறந்தது காத்தல் எதிரது போற்றல்* (தொல் 1614:2).

இறப்ப *இடை*

உவமப்பொருளில் வரும் சொல்லுருபுகளுள் ஒன்று *அன்ன ஆங்க மான இறப்ப* (தொல்.1236·1)

இறப்பு *பெயர்*

காண்க: இறந்தகாலம் *இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா அம்முக் காலமும்* (தொல் 687:1-2)

இறாஅல் *பெயர்*

தேன்கூடு. *இறாஅல் தோற்றம் இயற்கை ஆகும்* (தொல். 344).

இறு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. முடிவுறுதல். *சீர் இயைந்து இற்றது சீர் எனப்படுமே* (தொல். 1273:2)
2. மனம்தளர்தல். *இறந்த துணையை கிழவோன் ஆங்கண்* (தொல். 1122:4)

இறுதி *பெயர்*

முடிவு. *இயற்சீர் இறுதிமுன் நேர்அவண் நிற்பின்* (தொல். 1280:1).

இறுதிஇல் உயிர் *பெயர்*

ஒரு சொல்லின் ஈற்றெழுத்தாக வராத உயிர்எழுத்தாகிய ஔகாரம். *ஈர்அளபு இசைக்கும் இறுதிஇல் உயிர்ஏ* (தொல். 766:1).

இறுவாய் *பெயர்*

முடிகின்ற இடம், ஈறு. *ஔகார இறுவாய்ப் பன்னீர் எழுத்தும்* (தொல் 8:1-2).

இறை *பெயர்*

அரசன் *அணங்கே விலங்கே கள்வர்தம் இறைஎன* (தொல். 1205:1)

இறைச்சி *பெயர்*

ஒரு செய்யுளில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்கள் தமக்குரிய நேர்பொருளை உணர்த்துவதோடு கருப்பொருளுக்குள் அமைந்த மற்றொன்றையும் உணர்த்துவது ஆகிய குறிப்புப்பொருள். *இறைச்சியில் பிறக்கும் பொருளும் ஆர் உள.ஏ.* (தொல். 1179:1).

இறைச்சிப்பொருள் *பெயர்*

காண்க: இறைச்சி *இறைச்சிப் பொருள்வயின் செய்யுளில் கிளக்கும்* (தொல் 683:1).

இறைவன் *பெயர்*

அரசன். *செருவகத்து இறைவன் வீழ்வுற* (தொல். 1022·14).

இன்[1] *பெயரடை*

இனிய. *இன்நகைப் புதல்வனைத் தழீஇ* (தொல் 1101:9).

இன்[2] *இடை*

1. இரண்டன் உருபு *ஐவகை மரபின் அரசர் பக்கமும்* (தொல். 1025:2).
2. மூன்றன் உருபு. *வேறுபடு வினையினும் இனத்தினும் சார்பினும்* (தொல். 537:3).
3. நான்கன் உருபு. *ஒத்துவரு கிளவி உருவின் உவமம்* (தொல். 1240:3)
4. ஒப்புப்பொருளில் வரும் ஐந்தன் உருபு. *இதனின் இற்று இது என்னும் அதுவே* (தொல்.562:3).

5. ஏதுப்பொருளில் வரும் ஐந்தன் உருபு. *ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின் ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப* (தொல். 1042:2-3).

6. நீக்கப்பொருளில் வந்த ஐந்தன் உருபு *பகுதியின் நீங்கிய தகுதிக் கண்ணும்* (தொல்.1097:27).

7. ஆறன் உருபு *காமத்தின் வலியும் கைவிடின் அச்சமும்* (தொல் 1096.41).

8. ஏழன் உருபு *உம்மை எண்ணின் உருபு தொகல் வரையார்* (தொல் 776)

9. உவம உருபுகளுள் ஒன்று *ஆடி நிழலின் அறியத் தோன்றி* (தொல் 1428:3)

10. சாரியைகளுள் ஒன்று. *முற்றத் தோன்றும் இன்என் சாரியை* (தொல் 196:2).

11. அசைநிலைகளுள் ஒன்று. *இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா* (தொல் 687:1)

இன்பத்தை வெறுத்தல் *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று, காதலனைப் பிரிந்துள்ள தலைவி பிரிவாற்றாமையால் மகிழ்ச்சிக்கு உரிய மலர், இசை முதலியவற்றை விரும்பாமை *இன்பத்தை வெறுத்தல் துன்பத்துப் புலம்பல்* (தொல். 1219:1).

இன்பம் *பெயர்*

கண் முதலிய புலன்களின் நுகர்ச்சியாலோ புதியதாக ஒன்றை அறிந்து கொள்வதாலோ உள்ளம் நிறைவடைகின்ற நிலை, மகிழ்ச்சி *இன்பமும் இடும்பையும் ஆகிய இடத்தும்* (தொல் 1097:7).

இன்புறல்[1] *பெயர்*

1 மகிழ்தல். *சொல்எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்* (தொல் 1000:5)

2. செருக்கடைதல் *இன்புறல் ஏழைமை மறப்போடு ஒப்புமை* (தொல். 1223:3)

இன்புறல்[2] *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; காதலர்களுக்குத் தமக்குள் உள்ள உரிமையுணர்வால் விளையும் மகிழ்ச்சி. *உடைமை இன்புறல் நடுவுநிலை அருளல்* (தொல் 1209:2)

இன்மை *பெயர்*

இல்லாமை *இன்மையது இளிவும் உடைமையது உயர்ச்சியும்* (தொல் 991:9)

இன்றி *வினையெச்சம்*

இல்லாமல் *அளபெடை இன்றித் தான்வரு காலையும்* (தொல். 766.4)

இன்றியமையாது *பெயரெச்சம்*

கட்டாயமாகத் தேவையான *இன்றியமையாது இயைபவை எல்லாம்* (தொல் 1607.2).

இன்று[1] *பெயர்*

இல்லாதது. *நிலைஇன்று ஆகும் ஐஎன் உயிர் ஏ* (தொல் 285:2).

இன்று[2] *வினையெச்சம்*

இல்லாமல் *முந்நாள் அல்லது துணைஇன்று கழியாது* (தொல் 1072:1)

இன்று[3] *குறிப்பு வினைமுற்று*

இல்லை *வண்ணப் பகுதி வரைவுஇன்று ஆங்கே* (தொல் 1032:4)

இன்ன[1] *பெயர்*

இத்தகையன *இன்ன என்னும் குறிப்புரை ஆகும்* (தொல் 905·4)

இன்ன[2] *பெயரெச்சம்*

இத்தகைய. *இன்ன பெயரே இவையெனல் வேண்டின்* (தொல் 680:1)

இன்னது *பெயர்*

இத்தன்மையது *இன்னது இதுஎன வரூஉம் இயற்கை* (தொல் 899:3).

இன்னல் *பெயர்*

துன்பம் *செல்லல் இன்னல் இன்னாமைஏ* (தொல். 787)

இன்னவை *பெயர்*

இத்தகையவை *இன்னவை நிகழும் என்மனார் புலவர்* (தொல் 1050:5)

இன்னன் *பெயர்*

இப்படிப்பட்டவன். *இன்னன்என்று இரங்கிய மன்னை யானும்* (தொல் 1029:7).

இன்னா *பெயரெச்சம்*

1. தீய. *இன்னாத் தொல்சூள் எடுத்தற் கண்ணும்* (தொல் 1097:35)
2. இனிமையற்ற *கேட்போர்க்கு இன்னா யாப்பிற்று ஆதல்* (தொல் 1612:5).

இன்னாமை *பெயர்*

துன்பம் *செல்லல் இன்னல் இன்னாமைஏ* (தொல். 787)

இனம் *பெயர்*

ஒத்த பண்புகளைக்கொண்ட உயிர்கள் அல்லது பொருள்களின் தொகுதி; வருக்கம். *எடுத்த மொழிஇனம் செப்பலும் உரித்தே* (தொல் 545)

இனி *இடை*

அடுத்து வருகின்ற காலத்தையும் இடத்தையும் குறிக்கின்ற சொல். *எ-டு*.(காலம்): இனிப் போகலாம். (இடம்) இனி ஊர்வந்துவிடும். *இனிஅணி என்னும் காலையும் இடனும்* (தொல் 237:1)

இனிது *வினையெச்சம்*

இனிமையாக, நன்றாக *தாம்இனிது பிறக்கும் தகார நகாரம்* (தொல் 93:3)

இனைத்து *பெயர்*

இவ்வளவு *இனைத்துஎனக் குறிக்கும் எண்ணுக்குறிப்பெயரும்* (தொல். 655:4)

ஈ

ஈ *பெயர்*

மேற்பல்லின் அடியை நாக்கின் அடிவிளிம்பு சென்று பொருந்துவதாலும் மிடற்றுவளியாலும் இரு மாத்திரை அளவு ஒலிக்கப்படும் உயிர்நெடில் ஒலி; அவ்வொலியை வரிவடிவில் சுட்டுவதும் தமிழ்நெடுங்கணக்கில் நான்காவதும் ஆகிய உயிரெழுத்து. *இஈ எஏ ஐஎன இசைக்கும் அப்பால் ஐந்தும் அவற்றோர் அன்ன அவைதாம் அண்பல் முதல்நா விளிம்புஉறல் உடைய* (தொல்.86); *பன்னீர் உயிரும் தம்நிலை திரியா மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்* (தொல் 84:2-3); *ஆஈஊ ஏஐ ஓஔ என்னும் அப்பால் ஏழும் ஈர் அளபு இசைக்கும் நெட்டெழுத்து என்ப* (தொல் 4), *ஔகார இறுவாய்ப் பன்னீர் எழுத்தும் உயிர்என மொழிப* (தொல் 8)

ஈதல் *செயப்படுபொருள் குன்றா வினை*

கொடுத்தல், தருதல், அளித்தல். *ஈஎன் கிளவி இழிந்தோன் கூற்றே* (தொல். 929:2).

ஈகாரம் *பெயர்*

ஈ என்னும் எழுத்து. *ஈகார இறுதி ஆகார இயற்றே* (தொல். 250)

ஈங்கு *வினையடை*

இவ்விடம். *இன்ஆன் ஏது ஈங்குஎன வரூஉம்* (தொல். 559:7)

ஈட்டம் *பெயர்*

கூட்டம்; திரள். *அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே* (தொல். 881:2).

ஈண்டு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

ஒன்று சேருதல்; கூடுதல். *எழுத்து முதலா ஈண்டிய அடியில்* (தொல் 1338:1)

ஈம் *பெயர்*

சுடுகாடு, சுடலை. *ஒ.நோ.*: ஓமம் ஆய் ஈமக் காட்டில் ஓரி பலவிட நட்டம் ஆடினானை (தேவா. 6-29-5). *ஈமும் கம்மும் உரும்என் கிளவியும்* (தொல். 329.1).

ஈர்[1] *பெயரடை*

இரண்டு ஆகிய. *தன்மை முன்னிலை ஆஈர் இடத்த* (தொல் 513:3)

ஈர்[2] *இடை*

முன்னிலைப் பன்மை விகுதி *எ-டு.*: வந்தீர். *இர்ஈர் மின்என வரூஉம் மூன்றும்* (தொல் 709:1)

ஈர்க்கு *பெயர்*

தென்னை, பனை ஓலைகளின் நரம்பு *ஈர்க்கே குலைஎன நேர்ந்தன பிறவும்* (தொல் 1590.3)

ஈரம் *பெயர்*

1. இரக்கம் *ஈரம்இல் கூற்றம் ஏற்றுஅலர் நாணல்* (தொல். 1213:2)
2. அன்பு. *எதிர்பெய்து மறுத்த ஈரத்து மருங்கினும்* (தொல். 1097:14).

ஈரெழுத்து மொழி *பெயர்*

இரண்டு எழுத்துகளால் ஆகிய சொல். *எ-டு.*: பசு, பால். *ஈரெழுத்து மொழியும் உயிர்த்தொடர் மொழியும்* (தொல். 412:1).

ஈரெழுத்தொருமொழி *பெயர்*

காண்க: ஈரெழுத்து மொழி. *ஈர்எழுத்து ஒருமொழி உயிர்த்தொடர் இடைத்தொடர்* (தொல்.407:1).

ஈற்றசை *பெயர்*

செய்யுளில் ஒரு சீரின் இறுதியில் உள்ள அசை. *வெண்சீர் ஈற்றுஅசை நிரைஅசை இயற்று ஏ* (தொல் 1290).

ஈற்றடி *பெயர்*

ஒரு செய்யுளின் இறுதி அடி. *வெண்பா ஈற்றுஅடி முச்சீர்த்து ஆகும்* (தொல். 1332).

ஈற்றயலடி *பெயர்*

ஒரு செய்யுளின் இறுதி அடிக்கு முந்தைய அடி. *ஈற்றுஅயல் அடியே ஆசிரிய மருங்கில்* (தொல். 1328:1).

ஈறு *பெயர்*

1. இறுதி. *நிறுத்த சொல்லின் ஈறு ஆகு எழுத்தொடு* (தொல். 109:2).
2. ஒரு சொல்லின் கடைசி எழுத்து. *உயிர்மெய் ஈறும் உயிர்ஈற்று இயற்றே.* (தொல். 107).

ஈன்(னு)-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

மகவு அல்லது குட்டியைப் பெற்றெடுத்தல்; கரு உயிர்த்தல். *மன்னும் சின்னும் ஆனும் ஈனும்* (தொல் 334:1)

ஈன்றணிமை *பெயர்*

பிள்ளை அல்லது குட்டியைப் பெற்றெடுத்துச் சில நாட்களே ஆன நிலை; புனிறு. *புனிறுஎன் கிளவிஈன்று அணிமைப் பொருட்டே.* (தொல். 859).

உ

உ[1] *பெயர்*

உதடுகள் குவிவதாலும் மிடற்றுவளியாலும் ஒரு மாத்திரை அளவு ஒலிக்கப்படும் உயிர்க்குறில் ஒலி; அவ்வொலியை வரிவடிவில் சுட்டுவதும் தமிழ்நெடுங்கணக்கில் ஐந்தாவதும் ஆகிய உயிரெழுத்து. *உ ஊ ஒ ஓ ஔ என இசைக்கும் அப்பால் ஐந்தும் இதழ் குவிந்து இயலும்* (தொல்.87); *பன்னீர் உயிரும் தம்நிலை திரியா மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்* (தொல். 84:2-3); *அஇஉ எஒ என்னும் அப்பால் ஐந்தும் ஓர் அளபு இசைக்கும் குற்றெழுத்து என்ப* (தொல்.3:2-4); *ஔகார இறுவாய்ப் பன்னீர் எழுத்தும் உயிர்என மொழிப.* (தொல்.8).

உ[2] *இடை*

1. ஓர் அகச்சுட்டு *அவன் இவன் உவன் என வருஉம் பெயரும்* (தொல் 649:2)
2. ஒரு புறச்சுட்டு. *ஊழையும் உப்பக்கம் காண்பர்* (தொல். 620)
3. இடைமைச்சுட்டு. *அஇஉ அம் மூன்றும் சுட்டு* (தொல். 31).
4. தொழிற்பெயர் விகுதிகளுள் ஒன்று *செலவினும் வரவினும் தரவினும் கொடையினும்* (தொல். 512:1).
5. பண்புப்பெயர் விகுதிகளுள் ஒன்று. *மழவு; மைஉருவாள் கண் மழவைத் தழுவ* (கோவை.399)
6. வினையெச்ச விகுதிகளுள் ஒன்று. *செய்து செய்யூச் செய்பு செய்தென* (தொல். 713:1).
7. சாரியைகளுள் ஒன்று. *எண் உ குறித்து இயலும்* (தொல் 773:2) *அஉஐகுன இன்ன பிறவும் பொதுச்சாரியையே* (நன்னூ 244:2-3)

உகப்பு *பெயர்*

உயர்வு; உயர்ச்சி. *உகப்பே உயர்தல்* (தொல். 789).

உகரம் *பெயர்*

உ என்னும் எழுத்து *உகர இறுதி அகர இயற்றே* (தொல். 255).

உச்சகாரம் *பெயர்*

உ என்னும் உயிர் சகர மெய்யொடு கூடி உயிர்மெய் ஆகிய சு என்னும் எழுத்து. *உச்ச காரம் இருமொழிக்கு உரித்தே* (தொல். 75).

உசாத்துணை *பெயர்*

ஒரு செய்தியைப்பற்றிக் கலந்தாலோசித்து முடிவு செய்வதற்கு ஏற்றவர். *சூழ்தலும் உசாத்துணை நிலைமையில் பொலிமே* (தொல். 1076).

உசாவு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. ஒன்றைப்பற்றி முழுமையாக விசாரித்து ஆய்வுசெய்தல். *கூறுதல் உசாஅதல் ஏதீடு தலைப்பாடு* (தொல் 1156:2)

2. வினவுதல்; கேள்வி கேட்டல். *ஒரு சிறை நெஞ்சோடு உசாவுங் காலை* (தொல். 1153:1).

உட்கு[1] *பெயர்*

அச்சம். *உரு உட்கு ஆகும்* (தொல். 785)

உட்கு[2]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

அஞ்சுதல்; பயப்படுதல் *நோனார் உட்கும் மூவகை நிலையும்* (தொல் 1022·2)

உட்பொருள் *பெயர்*

உண்மையான கருத்து *சூத்திரத்து உட்பொருள் அன்றியும்* (தொல். 1607.1)

உடம்படு[1]-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

இசைவித்தல், ஒப்புக்கொள்ளச் செய்தல் *நாட்டம் இரண்டும் அறிவு உடம்படுத்தற்கு* (தொல்.1045·1).

உடம்படு[2]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

இணங்குதல், இசைதல் *பிறன் உடம்பட்டது தான் உடம்படுதல்* (தொல் 1614 11).

உடம்படுமெய் *பெயர்*

இரண்டு சொற்களின் புணர்ச்சியில் முதல் சொல்லின் கடைசி எழுத்து, இரண்டாவதன் முதல் எழுத்து ஆகிய இரண்டும் உயிரெழுத்துகளாக இருந்தால் இடையில் தோன்றும் ய் அல்லது வ் ஆகிய ஒற்று *எ-டு*.: அவரை+இலை= அவரையிலை, மா+இலை=மாவிலை *உடம்படு மெய்யின் உருபுகொளல் வரையார்* (தொல். 141·2)

உடம்பு *பெயர்*

ஒரு மனிதன் அல்லது விலங்கின் பருஉடல், மேனி, சரீரம் *உடம்பும் உயிரும் வாடியக் கண்ணும்* (தொல் 1152:1)

உடம்பு நனி சுருங்கல் *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று, தலைவனைப் பிரிந்துள்ள தலைவி சரியாகச் சாப்பிடாததால் அவளுடைய உடல் மெலிதல் *உண்டியிற் குறைதல் உடம்புநனி சுருங்கல்* (தொல். 1219·4)

உடல்(லு)-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

சினத்தல், கோபித்தல் *உடன்றோர் வருபகை பேணார் ஆர்எயில் உளப்பட* (தொல். 1017:6-7)

உடன் *வினையடை*

ஒருங்கே *நெடியவும் குறியவும் நேர்ந்துடன் வருமே* (தொல் 1481:2).

உடன் *இடை*

உடன்நிகழ்ச்சிப் பொருளில் வரும் மூன்றன் உருபு *முன்னிய காலம் மூன்றுடன் விளக்கி* (தொல். 986 5).

உடன்படு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. இசைதல், சம்மதித்தல். *வரைவு உடன்பட்டோர்க் கடாவல் வேண்டினும்* (தொல். 1064:43).

2. பொருந்துதல். *புரைதப உடன்படக் காண்டிகை புணர்ப்பினும்* (தொல் 1603 2)

உடனிலை *பெயர்*

1. ஒன்றாகச் சேர்ந்திருத்தல். *தத்தமுள் மயங்கும் உடனிலை இலவே* (தொல் 768:2).

2. ஒரு செய்யுளில் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு இடம் மாற்றி அமைத்துக் கொள்ளாமலும், செய்யுளின் பொருள் முடிவடைவதற்கு அதில் இல்லாத மற்றொரு சொல்லைச் சேர்த்துக்கொள்ளாமலும், கூறப்பட்டுள்ள சொற்பொருள் அல்லாத மற்றவற்றைக் குறிப்பால் கொள்ளாமலும் அமைந்துள்ளவாறே கொண்டு பொருள் கூறுதல்; உடனிலை மொழிதல். *மாட்டும் எச்சமும் நாட்டல் இன்றி உடனிலை மொழியினும் தொடர்நிலை பெறுமே* (தொல். 1470).

உடனிலை மெய்ம்மயக்கம் *பெயர்*

ஒரு சொல் அல்லது தொடரில் ர,ழ அல்லாத மற்ற 16 மெய்யெழுத்துகளுள் ஒன்று; தன்னையடுத்துத் தானே வருகின்ற கூட்டம். *எ-டு:* அக்கம், அன்னை. *அம்மூ ஆறும் வழக்கியல் மருங்கின் மெய்ம்மயக்கு உடனிலை தெரியுங்காலை* (தொல் 22) எடுத்துக்காட்டில் *உடனிலை மெய்ம்மயக்கு என மொழிமாற்றிக் கொள்க.*

உடனுறை *பெயர்*

உள்ளுறைகளுள் ஒன்று; ஒரு திணைக்குரிய கருப்பொருள் ஒன்றைப்பற்றிக் கூறி அதனால் அகத்துறைக்குத் தொடர்புடைய மற்றொரு பொருளை உணர்த்துதல். *உடனுறை உவமம் சுட்டுநகை சிறப்புஎனக் கெடல்அரு மரபின் உள்ளுறை ஐந்தே* (தொல். 1191).

உடுத்து-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஆடை அணிதல். *ஊழ்அணி தைவரல் உடைபெயர்த்து உடுத்தலொடு* (தொல். 1211:2)

உடை[1] *பெயர்*

1. செல்வம்; உடைமை. *வினைப்பெயர் உடைப்பெயர் பண்புகொள் பெயரே* (தொல். 652:2).

2. ஆடை. *ஊழ்அணி தைவரல் உடைபெயர்த்து உடுத்தலொடு* (தொல் 1211:2).

உடை[2]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

சிதைதல், வலியழிதல். *ஒருவன் ஒருவனை உடைபடை புக்கு* (தொல் 1022:6).

உடை[3] *இடை*

உடைய. *உணர்வுடை மாந்தர்க்கு அல்லது தெரியின்* (தொல். 1224:2).

உடைத்து *குறிப்பு வினைமுற்று*

பெற்றுள்ளது, உடையது. *தாழிசை இன்றித் தரவுஉடைத்து ஆகியும்* (தொல். 1409:2).

உடை பெயர்த்துடுத்தல் *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; தலைவன்மீது காதல்வயப்பட்ட தலைவி நெகிழ்ந்த தன் ஆடையை இறுக்கமாக அணிந்துகொள்ளுதல். *ஊழ்அணி தைவரல் உடைபெயர்த்து உடுத்தலொடு* (தொல். 1211:2).

உடைமை *பெயர்*

(ஒன்றைப்) பெற்றிருக்கும் தன்மை. *உடைமையும் இன்மையும் ஒருவயின் ஒக்கும்* (தொல்.133:7).

உடைய *குறிப்பு வினைமுற்று*

உடையன. *குறிப்பின் வருஉம் நெறிப்பாடு உடைய* (தொல். 1234:2).

உண்(ணு)-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

உணவுப்பொருட்களை உட்கொள்ளுதல்; சாப்பிடுதல் *உண்டற்கு உரிய அல்லாப் பொருளை உண்டன போலக் கூறலும் மரபே* (தொல். 1162)

உண்டாட்டு *பெயர்*

வெட்சித் திணைக்குரிய துறைகளுள் ஒன்று; பகைவரின் பசுக்களைக் கவர்ந்து வந்த வீரர்கள் அவ்வெற்றியைக் கொண்டாடுவதற்காகக் கள் குடித்து மகிழ்தல் *தந்து நிறை பாதீடு உண்டாட்டு கொடைஎன* (தொல் 1008:7)

உண்டி *பெயர்*

உணவு. *நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும்* (தொல் 1064:1).

உண்டியிற் குறைதல் *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; தலைவனைப் பிரிந்துள்ள தலைவி சரியாகச் சாப்பிடாமல் இருத்தல். *உண்டியில் குறைதல் உடம்புநனி சுருங்கல்* (தொல். 1219:4)

உண்டு *குறிப்பு வினைமுற்று*

உள்ளது. ஐம்பால் மூவிடத்திற்கும் உரியதொரு குறிப்புச்சொல். *உரியது ஆகலும் உண்டுஎன மொழிப* (தொல். 1153:2).

உண்மை *பெயர்*

1. உளதாம் தன்மை; இருப்பு. *உண்டு என் கிளவி உண்மை செப்பின்* (தொல். 431:1).
2. வாய்மை. *உண்மை செப்பும் கிளவியொடு தொகைஇய* (தொல். 1156:3).
3. மிகுதி; சொல்லில் மிகுதல். *உண்மையும் உரித்தே அத்துஎன் சாரியை* (தொல். 306:2)

உணர்[1]-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

அறிவித்தல். *பொருட்குத் திரிபு இல்லை உணர்த்த வல்லின்* (தொல். 876).

உணர்[2]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. புரிந்து கொள்ளுதல். *ஏனை உவமம் தான்உணர் வகையே* (தொல். 999).
2. தெரிந்து கொள்ளுதல். *அன்ன வகையான் உணர்ந்தபின் அல்லது* (தொல். 1078:1).

உணர்ச்சி *பெயர்*

ஐம்புலன்களின்வழி ஒரு பொருளை அறிந்துகொண்ட மனம் அப்பொருளைப் பற்றி ஏற்படுத்திக் கொள்ளும் உணர்வு. *உணர்ச்சிவாயில் உணர்வோர் வலித்தே* (தொல் 877).

உணர்ப்பு *பெயர்*

ஊடல் நீக்கப்பெறுகை. *உணர்ப்புவயின் வாரா ஊடலுற்றோள்வயின்* (தொல். 1100:20).

உணர்வு *பெயர்*

1. *காண்க.* உணர்ச்சி. *உறுப்புடையதுபோல் உணர்வுடை யதுபோல்* (தொல். 1146:4).
2. *காண்க.* உணர்ப்பு. *மலிவும் புலவியும் ஊடலும் உணர்வும்* (தொல் 1446:3)
3. அறிகை. *உய்த்து உணர்வு இன்றித் தலைவரு பொருண்மையின்* (தொல். 1463.1).

உணவு *பெயர்*

1. உண்டி. *வேற்றுமை அல்வழி எண்என் உணவுப்பெயர்* (தொல். 309:1)
2. கூலம்; தானியம். *மெய்தெரி வகையின் எண்வகை உணவின்* (தொல். 1581.1).

உணா *பெயர்*

உண்பதற்குரியன, உணவு. *தெய்வம் உணாவே மாமரம் புள்பறை* (தொல். 967:1)

உத்தி *பெயர்*

படைப்பாளி தன் கருத்துகளைத் தெளிவாகப் புலப்படுத்துவதற்காகக் கையாளும் நூல்நெறி; 32 வகைப்படும் இலக்கிய உத்தி; தந்திர உத்தி. *முப்பத் திருவகை உத்தியொடு புணரின்* (தொல்.1602:4)

உதவு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

பயன்படுதல் *உள்ளம் போல உற்றுழி உதவும்* (தொல். 1144:3).

உதள் *பெயர்*

சில விலங்குகளின் ஆண்மைப் பெயர். *மோத்தையும் தகரும் உதளும் அப்பரும்* (தொல் 1504:3).

உதி *பெயர்*

ஒதிய மரம். *உதிமரக் கிளவி மெல்லெழுத்து மிகுமே* (தொல். 244)

உது *பெயர்*

மிக அருகிலோ தொலைவிலோ இல்லாமல் இடைப்பட்ட ஒரு பொருள். *அதுஇது உதுஎன வரூஉம் பெயரும்* (தொல். 654:1).

உந்தி *பெயர்*

கொப்பூழ்; தொப்புள் *உந்தி முதலா முந்துவளி தோன்றி* (தொல் 83:1).

உந்து *இடை*

பழந்தமிழில் எண்ணும்மையின் பொருள் தரும் ஓர் இடைச்சொல்; *வழக்கிழந்த மொழி. எ-டு.:* கூவும்-கூவுந்து. *உம்உந்து ஆகும் இடனும்ஆர் உண்டே* (தொல். 777).

உப்பகாரம் *பெயர்*

உகர உயிர் பகர மெய்யொடு கூடி உயிர்மெய் ஆகிய பு என்னும் எழுத்து. *உப்ப காரம் ஒன்று என மொழிப* (தொல். 76:1).

உம் *இடை*

1. அதுவும் இதுவும் என எண்ணுதற் பொருளில் வரும் உம்மை; எண்ணும்மை. *இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றி* (தொல். 782:2).

2. ஒரு தொகுதியில் அடங்கிய அனைத்தையும் குறிக்கும் உம்மை; முற்றும்மை. *பன்னீர் எழுத்தும் உயிர்என மொழிப* (தொல். 8:2).

3. ஒருவர் அல்லது ஒன்றன் உயர்வையோ இழிவையோ வலியுறுத்தவரும் உம்மை; சிறப்பும்மை, இழிவு சிறப்பும்மை, உயர்வு சிறப்பும்மை. *உயிரினும் சிறந்தன்று நாணே* (தொல். 1063:6).

4. நிகழ்ந்துவிட்ட ஒன்றையோ இனிமேல் நிகழ உள்ள ஒன்றையோ தழுவிவரும் உம்மை; எச்ச உம்மை, இறந்தது தழுவிய எச்ச உம்மை, எதிரது தழுவிய எச்ச உம்மை. *கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே* (தொல். 1093:1).

5. எதிர்மறைப் பொருளில் வரும் உம்மை. *காண்க:* எதிர்மறை உம்மை. *உயர்திணை ஒருமை தோன்றலும் உரித்தே* (தொல் 660:2).

6. ஐயப்பாடாக உள்ள ஒன்றை ஆராயும் பொருளில் வரும் உம்மை; தெரிநிலை உம்மை. *முற்றே எண்ணே தெரிநிலை ஆக்கம் என்று அப்பால் எட்டே உம்மைச் சொல்லே* (தொல் 740:2-3).

7. ஐயத்தை உணர்த்தும் உம்மை; ஐய உம்மை *எச்சம் சிறப்பே ஐயம் எதிர்மறை அப்பால் எட்டே உம்மைச் சொல்லே* (தொல் 740:1-3).

8. *காண்க:* ஆக்கம்[2]. *முற்றே எண்ணே தெரிநிலை ஆக்கம் என்று அப்பால் எட்டே உம்மைச்சொல்லே* (தொல். 740:1-3)

9. செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று விகுதி *இதழ் இயைந்து பிறக்கும் பகார மகாரம்* (தொல். 97)

10. பெயரெச்ச விகுதி *வினையில் தோன்றும் பால் அறி கிளவி* (தொல் 495:1).

11. வினையெச்ச விகுதி *துறைவன் வாராது அமையினும் அமைக* (குறுந். 117:4-5).

12. சாரியைகளுள் ஒன்று. *உம்மும் கெழுவும் உளப்படப் பிறவும்* (தொல் 482:2)

13. அசை நிலைகளுள் ஒன்று. *அதுவே தான் உம் இருவகைத்து ஆகும்* (தொல். 1433).

உம்மை *பெயர்*

உம் என்னும் இடைச்சொல். *அப்பால் எட்டே உம்மைச் சொல்லே* (தொல் 740:3)

உம்மைத்தொகை *பெயர்*

இரண்டு பெயர்ச்சொற்களுக்கு இடையே எண்ணும்மை மறைந்திருக்கும் தொடர். *எ-டு.:* கைகால், வில்அம்பு. *கண்ணிய நிலைத்தே உம்மைத் தொகைஏ* (தொல் 900:4)

உம்மையெச்சம் *பெயர்*

உம்மை இருக்க வேண்டிய இடத்தில் அது எஞ்சி நிற்றல். *உம்மை எச்சம் இருவீற் றானும்* (தொல். 920:1).

உய்-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. செலுத்துதல். *நோயின்று உய்த்தல் நுவல்வழித் தோற்றம்* (தொல். 1008:6).

2. ஆய்வுசெய்தல், சிந்தித்தல். *உய்த்துணர்வு இன்றித் தலைவரு பொருண்மையின்* (தொல்.1463:1).

உய்-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

கெடாது நிற்றல், அழியாது இருத்தல். *உய்தல் வேண்டும் பஃகான் மெய்யே* (தொல். 200:5).

உய்த்துக்கொண்டுணர்த்தல் *பெயர்*

32 இலக்கிய உத்திகளுள் ஒன்று; சொல்லப்பட்டுள்ள செய்திகளின் அடிப்படையில் தொடர்புடைய மற்றவற்றைப் படிப்பவர்கள் ஊகித்து அறியுமாறு விட்டுவிடுதல். *உய்த்துக்கொண்டு உணர்த்தலொடு மெய்ப்பட நாடி* (தொல். 1614:23).

உயங்கல் *பெயர்*

வருத்தம். *உயாவே உயங்கல்* (தொல் 853)

உயங்கு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

வருந்துதல். *உயங்குவள் கிடந்த கிழத்தியைக் குறுகி* (தொல் 1096:32)

உயர்-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. பெருமை அடைதல்; சிறப்புப் பெறுதல். *ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்* (தொல் 1042:1).

2. மேல்எழுதல், ஏறுதல் *உகப்பே உயர்தல்* (தொல் 789)

உயர்ச்சி *பெயர்*

மேன்மை *இன்மையது இழிவும் உடைமையது உயர்ச்சியும்* (தொல். 991 9)

உயர்திணை *பெயர்*

ஒழுக்கத்தால் மேன்மை அடைய வேண்டியவர்களாகிய மக்கட் கூட்டத்தைக் குறிக்கும் இலக்கணப் பகுப்பு. தேவர், நரகரும் இதில் அடங்குவர்; அஃறிணை அல்லாதது. *உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே* (தொல். 485:1).

உயர்ந்தோர் *பெயர்*

மேற்குலத்தோர், உயர்குடிப் பிறந்தோர். *ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன* (தொல். 975:2).

உயர்பு *பெயர்*

1. மேன்மை; சிறப்பு. *மகன்தாய் உயர்பும் தன்உயிர்பு ஆகும்* (தொல். 1124:2).

2. மேல் எல்லை, உயர் அளவு; பெருமம்; அதிகபட்சம். *ஒருபான் சிறுமை இரட்டிஅதன் உயர்பே* (தொல். 1410).

உயர்வு *பெயர்*

ஏற்றம்; மேன்மை. *மனைவி உயர்வும் கிழவோன் பணிவும்* (தொல். 1176:2).

உயர்வு சிறப்பும்மை *பெயர்*

ஒரு சொல்லுடன் இணைந்து அதனால் குறிக்கப்பெறும் பொருளின் பெருமையை உணர்த்தும் உம் என்னும் இடைச்சொல். *மெய்யோடு இயையினும் உயிர் இயல் திரியா* (தொல். 10).

உயா *பெயர்*

வருத்தம். *உயாவே உயங்கல்* (தொல். 853).

உயிர்[1] *பெயர்*

1. உடலை இயக்குகின்ற ஆற்றல்; பிராணன்; சீவன். *தொல்உயிர் வழங்கிய அவிப்பலியானும்* (தொல். 1026:12).

2. சீவனை உடையவை; உயிரினம்; விலங்கு; பிராணி. *கொள்ளவும் அமையும் ஓர் அறிவு உயிர்க்கே* (தொல். 1526:2).

உயிர்[2] *பெயர்*

காண்க: உயிரெழுத்து. *பன்னீர் எழுத்தும் உயிர்என மொழிப* (தொல். 8:2).

உயிர்[3]-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. ஒலித்தல். *ஆஈர் இயல உயிர்த்தல் ஆறே* (தொல். 17:4).

2. சொல்லுதல், கூறுதல்; செப்புதல். *நினைத்தல் சான்ற அருமறை உயிர்ப்பினும்* (தொல்.1061:13).

உயிர்த்தொடர் *பெயர்*

உயிர்க் குறில்களை ஈற்றெழுத்திற்கு அயலாகப் பெற்றுள்ள எழுத்துக் கூட்டம். *எ-டு.*: அடகு, முரசு. *ஈர்எழுத்து ஒருமொழி உயிர்த்தொடர் இடைத்தொடர்* (தொல். 407:1).

உயிர்ப்பு *பெயர்*

பெருமூச்சு. *கருதல் ஆராய்ச்சி விரைவுஉயிர்ப்பு எனாஅ* (தொல். 1209:7).

உயிர்மெய் *பெயர்*

க் முதல் ன் ஈறாகிய பதினெட்டு மெய்களோடு அகரம் முதலிய பன்னிரண்டு உயிரும் சேர்வதால் தோன்றுவனவாகிய ககரமுதல் னௌகார ஈறாகிய 216 எழுத்துகள். *உயிர்மெய் அல்லன மொழிமுதல் ஆகா* (தொல். 60).

உயிரெழுத்து *பெயர்*

மிடற்றுவளியால் தோன்றுவனவும்; தனித்து இயங்க வல்லனவுமாகிய எழுத்து; அகரம்முதல் ஔகார ஈறாகிய பன்னிரண்டு. *ஆவி என்பது உயிரெழுத்து* (யா. காரிகை. 4 உரை).

உரன் *பெயர்*

1. வலிமை. *பெருமையும் உரனும் ஆடூஉ மேன* (தொல். 1047).
2. அறிவு. *கிழவோற்கு ஆயின் உரனொடு கிளக்கும்* (தொல். 1252).

உரி[1] *பெயர்*

முகத்தல் அளவையில் அரை நாழியின் பெயர்; ஏறத்தாழ 125 மில்லி லிட்டர். *உரிவரு காலை நாழிக் கிளவி* (தொல். 241:1).

உரி[2] *பெயரடை*

உரிமை உள்ள; உரிய. *கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள்வதுவே* (தொல். 1092:3).

உரிச்சீர் *பெயர்*

குறிப்பிட்ட பாவகைக்கு உரிமையுடைய செய்யுட்சீர். எ-டு: ஆசிரிய உரிச்சீர், வெண்பா உரிச்சீர். *ஆசிரிய உரிச்சீர்* (தொல். 1284:1).

உரிச்சொல் *பெயர்*

தமிழில் உள்ள நால்வகைச் சொற்களுள் ஒன்றாய், இசை, குறிப்பு, பண்பு ஆகியவற்றின் அடியாகப் பிறந்து, பெயர், வினைச் சொற்களைப் போன்றும், அவற்றிற்கு மூலமாகவும் அமைவதோடு பெயரடை வினையடையாகவும் பயிலும் சொல். *உரிச்சொல் மருங்கினும் உரியவை உரிய* (தொல். 940).

உரித்து *குறிப்பு வினைமுற்று*

உரிமை உடையது. *பனிஎதிர் பருவமும் உரித்துஎன மொழிப* (தொல். 955).

உரிப்பொருள் *பெயர்*

குறிஞ்சிக்கு உரியனவாகிய புணர்தல், புணர்தல் நிமித்தம் போன்று திணைகள் ஐந்தினுக்கும் உரிய பாடுபொருள். *உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே* (தொல். 962).

உரிமை *பெயர்*

1. உரியது ஆகும் தன்மை. *ஒரு சொல் பலபொருட்கு உரிமை தோன்றினும்* (தொல் 782:4).
2. சொந்தம்; பாத்தியதை. *அஞ்சவந்த உரிமைக்கண்ணும்* (தொல். 1096:4).
3. சுதந்திரம். *உரிமை கொடுத்த கிழவோன் பாங்கில்* (தொல். 1097:3).

உரிய *குறிப்பு வினைமுற்று*

உரிமை உடையன. *ஐம்பாற்கும் உரிய தோன்ற லாறே* (தொல். 710:2).

உரியசை *பெயர்*

நேரசை நிரையசைகளோடு உகரம் சேர்ந்து நேர்பு, நிரைபு என்னும் வாய்பாட்டில் வரும் செய்யுள் அசைகள். *இயலசை முதல் இரண்டு ஏனைய உரியசை* (தொல். 1267).

உரியது *பெயர்*

உரிமையுடையது. *உரியது ஆகும் தோழிகண் உரனே* (தொல். 1188:2)

உரியன் *பெயர்*

உரிமை உடையவன். *வழக்கியல் ஆணையில் கிளத்தற்கும் உரியன்* (தொல். 1453:2).

உரு *பெயர்*

1. வடிவம். *உருஎன மொழியினும் அஃறிணைப் பிரிப்பினும்* (தொல். 508:1).
2. அச்சம். *உரு உட்கு ஆகும்* (தொல். 785:1).
3. நிறம். *வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவினும்* (தொல். 1249:2).
4. ஓர் எழுத்தின் வரிவடிவம். *உருவினும் இசையினும் அருகித் தோன்றும்* (தொல் 40:1).

உருட்டு வண்ணம் *பெயர்*

நெகிழ்ச்சியின்றி, முடுகியலாக அளவடிகளில் அமையும் பாவோசை; அராகம்; பிற்காலத்திய வண்ண இலக்கணத்தின்படித் தனதன தனதன என்னும் குழிப்பில் வரும் ஓசை. *உருட்டு வண்ணம் அராகம் தொடுக்கும்* (தொல். 1491).

உருபியல் *பெயர்*

பெயர்ச்சொல்லுடன் வேற்றுமை உருபு சேரும் முறை. *சுட்டு முதல் இறுதி உருபியல் நிலையும்* (தொல். 264:1).

உருபு *பெயர்*

வடிவம். *உடம்படு மெய்யின் உருபுகொளல் வரையார்* (தொல். 141:2).

உருபு *பெயர்*

வேற்றுமைப் பொருளையும் உவமைப் பொருளையும் காட்டுவதற்குப் பெயர்ச்சொல் ஒன்றின்பின் சேரும் பின்னொட்டு ஆகிய இடைச்சொல். *யாதன் உருபில் கூறிற்று ஆயினும்* (தொல் 592:1).

உரும் *பெயர்*

1. இடி. *ஈமும் கம்மும் உரும்என் கிளவியும்* (தொல். 329).
2. அச்சம். *பேம்நாம் உரும்என வரூஉம் கிளவி* (தொல். 849:1).

உருவு *பெயர்*

வடிவம். *உருவு, நிறுத்த காம வாயில்* (தொல். 1222:2).

உரை[1] *பெயர்*

1. சொல்; வார்த்தை. *அதனோடுஇயைந்த ஒப்புஅல்ஒப்பு உரை* (தொல். 559:6).
2. பேச்சு. *உரைத்திற நாட்டம் கிழவோன் மேன* (தொல். 991:24).
3. உரைநடை இலக்கியம். *பாட்டுஉரை நூலே வாய்மொழி அங்கதம்* (தொல். 1339:1).
4. காண்டிகை, ஓவிருத்தி முதலிய விரிவுரை; வியாக்கியானம். *ஒன்ற உரைப்பது உரைஎனப் படுமே* (தொல். 1607:3).

உரை[2]**-த்தல்** *செயப்படுபொருள் குன்றா வினை*

கூறுதல்; சொல்லுதல். *காவலர்க்கு உரைத்த கடைநிலை யானும்* (தொல். 1039:4).

உரைப்பொருட் கிளவி *பெயர்*

என் சொல்லைக் கேள் என்னும் குறிப்புப் பொருளில் உரையசையாக வரும் அம்ம என்னும் சொல். *உரைப்பொருள் கிளவி நீட்டமும் வரையார்* (தொல். 213).

உரையசை *பெயர்*

1. முன்னிலையில் வருகின்ற அசைச்சொல்; பெரும்பாலும் இது நான் கூறுவதைக் கேள் என்னும் குறிப்புப் பொருளைத் தரும். *எ-டு.:* மியா. *ஏவல் குறித்த உரையசை மியாவும்* (தொல்.225:3).

2. தன் பொருளை இழந்த 'ஆங்க' என்னும் இடைச்சொல். *ஆங்க என்னும் உரையசைக் கிளவியும்* (தொல். 205:3)

உலகம் *பெயர்*

1. மக்கள் வாழும் ஒரு கோள்; நில உலகம். *மலர்தலை உலகத்து மரபுநன்கு அறிய* (தொல் 1029:34).

2. நிலப்பகுதி. *சேயோன் மேய மைவரை உலகமும்* (தொல். 952:2)

உலகியல் *பெயர்*

மக்களின் அன்றாட வழக்கம், உலக இயற்கை. *நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்* (தொல் 1003:1).

உலகு *பெயர்*

மக்களின் நடைமுறை வழக்கம். *பெருமையில் பெயர்ப்பினும் உலகுஉரைத்து ஒழிப்பினும்* (தொல். 1064:8).

உவ[1]-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

விரும்புதல் *ஐயம் செய்தல் அவன்றமர் உவத்தல்* (தொல் 1219:7).

உவ[2]-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

மகிழ்ச்சி அடைதல். *கரந்திடத்து ஒழிதல் கண்டவழி உவத்தலொடு* (தொல். 1214:2).

உவகை *பெயர்*

மகிழ்ச்சி. *ஏமம் சார்ந்த உவகைக் கண்ணும்* (தொல். 1061:34).

உவப்பு *பெயர்*

மகிழ்ச்சி. *உவப்பே உவகை* (தொல். 789).

உவமக்கிளவி *பெயர்*

உவமைப் பொருளில் வரும் சொல்லுருபு. *எ-டு.:* போல. *வினையெஞ்சு கிளவியும் உவமக் கிளவியும்* (தொல். 205:1).

உவமத்தொகை *பெயர்*

உவமானம், உவமேயம் ஆகிய இருசொற்களுக்கும் இடையே இருக்கவேண்டிய உவம உருபு மறைந்து நிற்கும் சொற்றொடர்; உவமைத்தொகை. *எ-டு.:* மலர்விழியாள். *உவமத் தொகையே உவம வியல* (தொல். 897).

உவமப்பொருள் *பெயர்*

ஒன்றற்கு ஒப்பாகக் கூறப்படும் பொருள்; உவமானம். *உவமப்பொருளை உணருங் காலை* (தொல். 1245:1).

உவமப்போலி *பெயர்*

1. உவமத்தைப் போல வரும் ஏனைய உவமம் (இளம்)

2. உவமத்தோடு சேர்த்து எண்ணத்தக்க உள்ளுறை உவமம் (பேரா.). *உவமப்போலி ஐந்து என மொழிப* (தொல். 1248).

உவமம் *பெயர்*

ஒரு பொருளோடு மற்றொரு பொருளைச் செய்கையாலோ, பயனாலோ, உருவத்தாலோ, நிறத்தாலோ ஒத்திருப்பதாகக் காட்டுதல். *எ-டு.*: காளை போன்ற இளைஞன். *உவமமும் பொருளும் ஒத்தல் வேண்டும்* (தொல். 1232).

உவமை *பெயர்*

காண்க: உவமம். *வினைபயன் மெய்உரு என்ற நான்கே வகைபெற வந்த உவமைத் தோற்றம்* (தொல். 1225).

உவர்[1] *பெயர்*

பலர்பால் சுட்டுப்பெயர். *அவர்இவர் உவர்என வரூஉம் பெயரும்* (தொல். 649:4).

உவர்[2]-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

அருவருத்தல். *இல்லது காய்தல் உள்ளது உவர்த்தல்* (தொல். 1221:2).

உவள் *பெயர்*

பெண்பால் ஒருமைச் சுட்டுப்பெயர். *அவள்இவள் உவள்என வரூஉம் பெயரும்* (தொல். 649:3).

உவன் *பெயர்*

ஆண்பால் ஒருமைச் சுட்டுப்பெயர். *அவன்இவன் உவன்என வரூஉம்பெயரும்* (தொல். 649:2).

உவை *பெயர்*

பலவின்பால் சுட்டுப்பெயர். *அவைஇவை உவைஎன வரூஉம் பெயரும்* (தொல். 654:3).

உழக்கு *பெயர்*

முகத்தலளவையில் ஒன்று; இரண்டு ஆழாக்குக் கொண்டது; ஏறத்தாழ 250 மில்லி லிட்டர் அளவுடையது. *உழக்குஎன் கிளவி வழக்கத் தான* (தொல். 458:2).

உழப்பு *பெயர்*

வருத்தம். *சென்ற தேஎத்து உழப்புநனி விளக்கி* (தொல். 1096:51).

உழிஞை *பெயர்*

புறப்பொருள் திணைகளுள் ஒன்று; கோட்டையைப் பகைவர் முற்றுகை இடுதலும் அதனைக் கைப்பற்றிக் கொள்ளுதலும். *உழிஞை தானே மருதத்துப் புறனே* (தொல். 1014).

உழுதூண் *பெயர்*

பயிர்த்தொழில் செய்து வாழ்தல். *வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது* (தொல். 1583:1).

உழை[1] *பெயர்*

கொம்புகளையும் தோலில் வெண்புள்ளிகளையும் உடைய மான்வகை; கலைமான். *கலைஎன் காட்சி உழைக்கும் உரித்தே* (தொல். 1548).

உழை[2]-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

உடலை வருத்தித் தொழில் செய்தல். *உழைக்குறும் தொழிலும் காப்பும் உயர்ந்தோர்* (தொல்.1121:1).

உழை[3] *இடை*

ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபுகளுள் ஒன்று. *கண்கால் புறம்அகம் உள்உழை கீழ்மேல்* (தொல். 567:1).

உள்[1] *பெயர்*

1. அகப்பகுதி; உள்ளிடம். *உட்பெறு புள்ளி உருவா குமே* (தொல். 14).
2. மனம். *உள்ளத்து ஊடல் உண்டுஎன மொழிப* (தொல். 1182:2).

உள்[2] *குறிப்பு வினை*

1. இருத்தல் பொருளில் வரும் குறிப்பு வினைப்பகுதி. *ஒருபொருள் பொதுச்சொல் உள்பொருள் ஒழிய* (தொல். 533:1).

2. உடைமைப் பொருளில் வரும் குறிப்பு வினைமுற்றுப் பகுதி. *அஃறிணை விரவுப்பெயர் இயல்புமார் உளவே* (தொல். 156).

உள்[3] *இடை*

ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபுகளுள் ஒன்று. *கண்கால் புறம்அகம் உள்உழை கீழ்மேல்* (தொல். 567:1).

உள்ள *பெயர்*

உள்பொருளாகிய பலவற்றைக் குறிக்கும் அஃறிணைப் பன்மைப்பெயர். *உள்ள இல்ல என்னும் பெயரும்* (தொல் 655:2).

உள்ளது *பெயர்*

உள்பொருள்; இருப்பது. *கூர்ப்பும் கழிவும் உள்ளது சிறக்கும்* (தொல். 798).

உள்ளதுவர்த்தல் *பெயர்*

கற்புக் காலத்துக் காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; கணவன் உண்மையாகச் செய்யும் அன்புச் செயல்களையும் மனைவி பொய்யெனக் கூறி வெறுத்தல். *இல்லதுகாய்தல் உள்ளது உவர்த்தல்* (தொல். 1221:2).

உள்ளப்படு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

ஆராயப்படுதல்; கருதப்படுதல். *உள்ளப்பட்ட நகை நான்கு என்ப* (தொல். 1201:2).

உள்ளம் *பெயர்*

மனம். *உள்ளம் போல உற்றுழி உதவும்* (தொல் 1144:3).

உள்ளல் *பெயர்*

கருதுதல். *படரே உள்ளல்* (தொல். 824).

உள்ளு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

நினைத்தல்; எண்ணுதல். *வேட்கை ஒருதலை உள்ளுதல் மெலிதல்* (தொல். 1049:1).

உள்ளுறு-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

அகப்படுத்துதல்; உட்படுத்துதல். *நனையே உள்ளுறுத்து அனையவை எல்லாம்* (தொல்.1591:3).

உள்ளுறை *பெயர்*

காண்க. உள்ளுறை உவமம். *உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலம்என* (தொல். 997:1).

உள்ளுறை உவமம் *பெயர்*

ஒரு செய்யுளில் வெளிப்படையாக அமைந்த பொருளோடு புலவன் தான் குறிப்பாக உணர்த்த விரும்பும் செய்தியைக் கருப்பொருள்களின்மேல் ஏற்றிக் கூறுதல். *உள்ளுறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம்* (தொல். 998:2).

உள *குறிப்பு வினைமுற்று*

இருக்கின்றன. *அக்கிளை மொழியும் உள என மொழிப* (தொல். 419:2).

உளப்படு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

ஒன்றில் அடங்குதல்; உள்ளடங்கல். *குற்றிய லுகரத்து இறுதியும் உளப்பட* (தொல். 153:3).

உளர் *குறிப்பு வினைமுற்று*

இருக்கின்றனர். *தாமே செல்லும் தாயரும் உளர்ஏ* (தொல். 987:2).

உறப்பு *பெயர்*

செறிவு. *விறப்பும் உறப்பும் வெறுப்பும் செறிவே* (தொல். 831).

உறல் *பெயர்*

பொருந்துதல். *அண்பல் முதல்நா விளிம்புஉறல் உடைய* (தொல் 86:4).

உறழ் *பெயர்*

விகற்பம்; வேறுபாடு; உறழ்ச்சி. *அல்வழி எல்லாம் உறழ் என மொழிப* (தொல். 369).

உறழ்[1]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

(மற்றொன்றோடு) ஒப்பாதல்; நிகராதல் *அப்பொருள் ஆகும் உறழ்துணைப் பொருளே* (தொல்.500:2).

உறழ்[2]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

வேறுபடுதல்; விகற்பம் ஆதல். *மெல்லெழுத்து இயற்கை உறழினும் வரையார்* (தொல்.146:2)

உறழ்கலி *பெயர்*

கலிப்பாவின் வகைகளுள் ஒன்று; இருவர் உரையாடுவதாக அமைந்து சுரிதகம் இல்லாமல் வரும் கலிப்பா. *கூற்றும் மாற்றமும் இடையிடை மிடைந்து போக்கு இன்று ஆகல் உறழ்கலிக்கு இயல்பே* (தொல். 1415).

உறழ்ச்சி *பெயர்*

மாற்றம்; வேறுபாடு. *பிறப்பொடு விடுவழி உறழ்ச்சி வாரத்து* (தொல். 102:3).

உறழ்தல் *பெயர்*

சொற்கள் புணரும்போது எழுத்துகள் திரிந்தோ திரியாமல் இயல்பாக நின்றோ இருவகையாகவும் அமைதல்; விகற்பித்தல். *வல்லெழுத்து மிகுநவும் உறழ்ஆ குநவும்* (தொல். 160:5).

உறழ்பு *பெயர்*

மாறுபாடு; விகற்பம். *இயல்பு ஆகுநவும் உறழ்பு ஆகுநவும் என்று* (தொல். 152:3).

உறழ்வு *பெயர்*

காண்க. உறழ்பு. *பாழ்என் கிளவி மெல்லெழுத்து உறழ்வே* (தொல். 388).

உறழ *இடை*

உவம உருபுகளுள் ஒன்று. *என்ன உறழத் தகைய நோக்கொடு* (தொல். 1236:2).

உறு[1]-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

வலியுறுத்துதல்; வற்புறுத்துதல். *ஓம்படைக் கிளவியின் வாய் உறுத்தற்றே* (தொல். 1372:4).

உறு[2]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. அடைதல்; பெறுதல். *தம்உறு விழுமம் பரத்தையர் கூறினும்* (தொல். 1184:1)
2. தொடுதல். *ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே* (தொல். 1529:1).

உறு[3]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. ஏற்படுதல்; நேர்தல்; நிகழ்தல். *பால்மயக்கு உற்ற ஐயக் கிளவி* (தொல். 507:1).
2. தோன்றுதல். *அன்புஉற்று நகினும் அவட்பெற்று மலியினும்* (தொல். 1052:2).
3. பொருந்துதல். *உறுப்புஉற்று அமைய நெறிப்பட நாடி* (தொல் 83:5).
4. மிகுதல்; அதிகரித்தல். *நல்நயம் உரைத்தல் நகைநனி உறாஅ* (தொல் 1050:2).

உறுகண் *பெயர்*

துயரம். *உறுகண் ஓம்பல் தன்இயல்பு ஆதலின்* (தொல். 1188:1).

உறுதி *பெயர்*

உள்ளத் துணிவு. *மனைவிக்கு உறுதி உள்வழி உண்டே* (தொல். 1116:2)

உறுப்பறை *பெயர்*

உடலின் உறுப்புகளை வெட்டுதல். *உறுப்பறை குடிகோள் அலைகொலை என்ற* (தொல்.1207:1).

உறுப்பு *பெயர்*

1. உடலின் ஓர் அங்கம்; முழுப்பெயர் ஒன்றின் ஒரு பகுதி; கூறு; அவயவம். *ஒருவழி உறுப்பில் குழுவின் என்றா* (தொல். 565:4)
2. உடம்பு; உடல்; மேனி. *வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவினும்* (தொல்.1249:2).

உறுபெயர் கேட்டல் *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; தலைவனைப் பிரிந்துள்ள தலைவி தலைவனின் பெயரையும் அவனைப்பற்றிய செய்திகளையும் ஆவலோடு செவிமடுத்தல். *ஒப்புவழி உவத்தல் உறுபெயர் கேட்டல்* (தொல். 1219:10).

உறை-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

வசித்தல்; குடி இருத்தல். *ஏழும் ஆகும் உறைநிலத் தான* (தொல். 584:2).

உன்னநிலை *பெயர்*

வெட்சித் திணையின் துறைகளுள் ஒன்று; போரின் முடிவு எப்படி இருக்கும் என உன்ன மரத்தைக் கண்டு நிமித்தம் கொள்ளுதல்; ஆருடம் பார்த்தல். *உடல்வேந்து அடுக்கிய உன்னநிலையும்* (தொல். 1010:8).

ஊ

ஊ[1] *பெயர்*

உதடுகள் குவிவதாலும் மிடற்றுவளியாலும் இரண்டு மாத்திரை அளவு ஒலிக்கப்படும் உயிர்க்குறில் ஒலி; அவ்வொலியை வரிவடிவில் சுட்டுவதும் தமிழ்நெடுங்கணக்கில் ஆறாவதும் ஆகிய உயிரெழுத்து. *உஊஒஓஔ என இசைக்கும் அப்பால் ஐந்தும் இதழ் குவிந்து இயலும்* (தொல்.87); *பன்னீர் உயிரும் தம்நிலை திரியா மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்* (தொல்.84:2-3); *ஆஈஊஏஐ ஓஔ என்னும் அப்பால் ஏழும் ஈர் அளபு இசைக்கும் நெட்டெழுத்து என்ப* (தொல். 4); *ஔகார இறுவாய்ப் பன்னீர் எழுத்தும் உயிர்என மொழிப* (தொல். 8).

ஊ[2] *பெயர்*

தசை; ஊன். *ஊஎன் ஒருபெயர் ஆரொடு சிவணும்* (தொல். 270).

ஊக்கு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஆர்வம் உண்டாக்குதல்; மன எழுச்சியை உண்டாக்குதல், உற்சாகப் படுத்துதல். *ஒன்றாப் பொருள்வயின் ஊக்கிய பாலினும்* (தொல். 991:11).

ஊகம் *பெயர்*

கருத்த மேனி, வெளுத்த முகம், நீண்ட உரோமங்கள், பசிய கண்கள், கடிய பற்கள் ஆகியவற்றைக் கொண்ட ஒரு குரங்கு வகை; கருங்குரங்கு. *குரங்கும் முசுவும் ஊகமும் மூன்றும்* (தொல். 1524:1).

ஊகாரம் *பெயர்*

ஊ என்னும் எழுத்து. *நிற்றல் வேண்டும் ஊகாரக் கிளவி* (தொல். 446:4).

ஊட்டல் *பெயர்*

ஒரு பண்பை ஏற்றிக் கூறுதல் *பின்வா என்றலும் பேதைமை ஊட்டலும்* (தொல். 1064:10).

ஊடல் *பெயர்*

அன்பு மிகுதியால் தலைவன்பால் தலைவி கொள்ளும் பொய்ச்சினம்; மருதத் திணைக்குரிய உரிப்பொருள் ஆகிய புலவி. *உணர்ப்புவயின் வாரா ஊடல்உற் றோள்வயின்* (தொல்.1100:20).

ஊதியம் *பெயர்*

பயன். *ஊதியம் கருதிய ஒருதிறத் தானும்* (தொல். 991:13).

ஊர்[1] *பெயர்*

1. மிகுதியாக மக்கள் சேர்ந்து வாழும் நிலப்பரப்பு; நகரம், கிராமம் இரண்டையும் குறிக்கும் பொதுப்பெயர். *ஊரும் பேரும் கெடுதியும் பிறவும்* (தொல். 1051:11).

2. கிராம, நகரவாசிகள்; ஊரார். *ஊரும் அயலும் சேரியோரும்* (தொல். 1450:1).

ஊர்[2] *பெயர்*

களவில் தலைவியும் தோழியும் சேர்ந்திருக்கும்பொழுது தலைவன் வந்து அவர்களுடைய ஊர் எத்தகையது என்று கேட்கும் துறை; ஊர் வினாதல். *ஊரும் பேரும் கெடுதியும் பிறவும்* (தொல். 1051:11).

ஊர்[3]**-தல்** *செயப்படுபொருள் குன்றா வினை*

1. வாகனத்தைச் செலுத்துதல்; ஊர்தியில் ஏறிச்செல்லுதல். *ஊர்ந்தனர் இயங்கலும் உரியர் என்ப* (தொல். 1161:2).

2. பொருந்துதல்; சேர்தல்; கூடுதல். *குற்றியலுகரம் வல்ஆறு ஊர்ந்தே* (தொல். 36:2).

ஊர்கொலை *பெயர்*

வெட்சித் திணையின் துறைகளுள் ஒன்று; வெட்சி மறவர்கள் கரந்தை வீரர்களையும் பகை நாட்டு மக்களில் எதிர்த்தோரையும் அழித்தல். *ஊர்கொலை ஆகோள் பூசன் மாற்றே* (தொல்.1008:5).

ஊர்ச்செரு *பெயர்*

முற்றுகைக்கு உட்பட்ட ஊருக்குள் நிகழும் போர். *ஊர்ச்செரு வீழ்ந்த மற்றதன் மறனும்* (தொல். 1081:8).

ஊர்தி *பெயர்*

ஏறிச் செலுத்துவதற்குரிய வாகனம். *பேரிசை ஊர்திப் பாகர் பாங்கினும்* (தொல். 1096:48).

ஊரொடு தோற்றம் *பெயர்*

தலைவன் ஒருவன் நகரில் உலா வருதல் (ஏழுவகைப் பருவ மகளிர், பொது மகளிரோடு கூடுதல், கலிவெண்பாவில் இயன்ற உலா இலக்கியம் என்பன யாவும் பிற்கால இலக்கியங்களைக் கண்ட உரையாசிரியர் தம் சொந்தச் சேர்க்கை; தொல்காப்பியர் கருத்தன்று). *ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப* (தொல். 1035:1).

ஊழ் *பெயர்*

முறைமை; மரபு. *ஊழ்அணி தைவரல் உடைபெயர்த்து உடுத்தலொடு* (தொல். 1211:2).

ஊழணி தைவரல் *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; தலைவனை முதன்முதலாகப் பார்த்த தலைவி காதல் மிகுதியால் தான் மரபுபற்றி அணிந்து கொண்டுள்ளனவாகிய கைவளைகளைத் தடவிக் கொடுத்தல். *ஊழணி தைவரல் உடைபெயர்த்து உடுத்தலொடு* (தொல். 1211:2).

ஊறு *பெயர்*

துன்பம். *தன்னை அழிதலும் அவன்ஊறு அஞ்சலும்* (தொல். 1159).

எ

எ[1] *பெயர்*

மேற்பல்லின் அடியை நாக்கின் அடிவிளிம்பு சென்று பொருந்துவதாலும் மிடற்றுவளியாலும் ஒரு மாத்திரை அளவு ஒலிக்கப்படும் உயிர்க்குறில் ஒலி; அவ்வொலியை வரிவடிவில் சுட்டுவதும் தமிழ்நெடுங்கணக்கில் ஏழாவதும் ஆகிய உயிரெழுத்து. *இஈஎஏ ஐஎன இசைக்கும் அப்பால் ஐந்தும் அவற்றோர் அன்ன அவைதாம் அண்பல் முதல்நா விளிம்புஉறல் உடைய* (தொல்.86); *பன்னீர் உயிரும் தம்நிலை திரியா மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்* (தொல். 84:2-3); *அஇஉ எஒ என்னும் அப்பால் ஐந்தும் ஈர் அளபு இசைக்கும் குற்றெழுத்து என்ப* (தொல். 3:2-4); *ஔகார இறுவாய்ப் பன்னீர் எழுத்தும் உயிர்என மொழிப* (தொல்.8).

எ[2] *பெயரடை*

எஞ்சாமைப் பொருளில் வரும் சொல்; எல்லா. *எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வருவழி* (தொல். 129:1).

எ[3] *இடை*

1. அகவினா. *யாது எவன் என்னும் ஆஇரு கிளவியும்* (தொல். 515:1).
2. புறவினா. *எ வினை செயுங்கொல்? நோகோ யானே* (அகநா. 321:14).

எகரம் *பெயர்*

எ என்னும் எழுத்து. *எகர ஒகரம் பெயர்க்குஈறு ஆகா* (தொல். 273:1).

எகின்[1] *பெயர்*

மரவகை. *எகின் மரம் ஆயின் ஆண்மர இயற்றே* (தொல். 337).

எகின்[2] *பெயர்*

அன்னப்பறவை. *ஏனை எகினே யகரம் வருமே* (தொல். 338:1).

எங்கை *பெயர்*

என் தங்கை; தலைவி தன் கணவோடு தொடர்புள்ள பரத்தையை இவ்வாறு சுட்டுவாள்; இதில் இகழ்ச்சிக் குறிப்பும் உண்டு. *காதல் எங்கையர் காணில் நன்றுஎன* (தொல். 1097:30).

எச்சம்[1] *பெயர்*

1. மீதம்; மிச்சம். *அச்சமும் உவகையும் எச்சம் இன்றி* (தொல். 1040:16).
2. விலக்கு. *எச்சம் இலவே பொருள்வயின் ஆன* (தொல் 586:2).
3. காரணம், நிமித்தம் *பிரிவின் எச்சத்துப் புலம்பிய இருவரை* (தொல். 1096:37).
4. தனிமை. *பிரிவின் எச்சத்து மகள் நெஞ்சு வலிப்பினும்* (தொல். 1065:10).

எச்சம்[2] *பெயர்*

1. பெயரெஞ்சு கிளவி, வினையெஞ்சு கிளவி ஆகிய இரண்டு (பெயரெச்சம், வினையெச்சம்). *தத்தம் எச்சமொடு சிவணும் குறிப்பின் எச்சொல் ஆயினும் இடைநிலை வரையார்* (தொல்.722).
2. தொக்கி நிற்பது. *எச்சம் சிறப்பே ஐயம் எதிர்மறை* (தொல். 740:1).
3. செய்யுள் உறுப்புகளுள் ஒன்று; பாட்டின் பொருள் அதில் இடம்பெறாத மற்றொரு சொல்லையோ குறிப்பையோ கொண்டு முடிவது. *ஒ.நோ*: சொல்லெச்சம், குறிப்பெச்சம் சொல்லொடும் குறிப்பொடும் முடிவுகொள் இயற்கை புல்லிய கிளவி எச்சம் ஆகும். (தொல்.1465).

எச்சவும்மை *பெயர்*

நேராகக் குறிப்பிடப்பெறாமல் மறைந்துள்ள மற்றொன்றைக் குறிப்பால் உணர்த்துகின்ற உம் என்னும் இடைச்சொல். *எ-டு*.: நீயும் வா. *எச்ச உம்மையும் எதிர்மறை உம்மையும்* (தொல்.768:1).

எஞ்சு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. மீதமாதல்; மிஞ்சுதல். *முழுது என்கிளவி எஞ்சாப் பொருட்டே* (தொல். 810)
2. குறைதல். *எஞ்சா மண் நசை வேந்தனை* (தொல். 1012:1)
3. தொக்குநிற்றல்; மறைந்திருத்தல். *உம்மை எஞ்சிய இருபெயர்த் தொகைமொழி* (தொல்.224:1).
4. இல்லாமல் போதல்; ஒழிதல். *எஞ்சியோர்க்கும் எஞ்சுதல் இலவே* (தொல் 992).

எஞ்சுபொருட்கிளவி *பெயர்*

எச்சத்தை முற்றுவிக்கும் சொல்; எச்சத்தால் தழுவப்படும் சொல் *எ-டு*.: வந்த பையன் என்னும் தொடரில் பையன். *எஞ்சுபொருட் கிளவி செஞ்சொல் ஆயின்* (தொல். 769:1).

எட்டு *பெயர்*

ஏழுக்கும் ஒன்பதுக்கும் இடையில் உள்ள எண். *கண்ணிய எட்டும் வினைப்பால் உவமம்* (தொல். 1236:3).

எடு-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. மேலே தூக்குதல்; உயர்த்துதல் இல்வலியுறுத்தல் *இருகையும் எடுத்தலொடு* (தொல்.1212:2).
2. விதந்து கூறுதல்; குறிப்பாக எடுத்துச் சொல்லுதல். *எடுத்த நான்கே நான்கு என மொழிப* (தொல் 1213:4).
3. விளக்கிக் கூறுதல் *புகழும் மானமும் எடுத்து வற்புறுத்தலும்* (தொல் 991:14).
4. ஒலியை நீட்டி உச்சரித்தல். *அளபின் எடுத்த இசைய என்ப* (தொல். 746:2).

எடுத்துக்காட்டு *பெயர்*

மேற்கோள்; உதாரணம். *ஏது நடையினும் எடுத்துக் காட்டினும்* (தொல். 1606:3)

எடுத்து மொழியப்படுதல் *பெயர்*

அகப்பொருள் மாந்தர் ஒருவருடைய கூற்றினை மற்றொருவர் சுட்டித் திருப்பியுரைத்தல். *கொண்டுஎடுத்து மொழியப் படுதல் அல்லது* (தொல் 1450:3).

எண்[1] *பெயர்*

ஒன்பது வகைக் கூலங்களுள் (நவதானியம்) ஒன்று; எள். *எண் என் உணவுப்பெயர்* (தொல் 309:1)

எண்[2] *பெயர்*

1. இலக்கம்; எண்ணிக்கை. *எண்ணின் பெயரோடு அ அறு கிளவியும்* (தொல். 900:3).
2. எண்ணல் அளவை. *நிறுத்தலின் அளவின் எண்ணின் என்றா* (தொல். 557:6).

எண்[3] *பெயர்*

வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவின் ஓர் உறுப்பாகிய அம்போதரங்கம். *காண்க.* அம்போதரங்கம். *தரவே தாழிசை எண்ணே வாரம்என்று* (தொல் 1400:2)

எண்[4] *பெயரடை*

எட்டு என்னும் எண்ணிக்கைக்குரிய பெயரடை வடிவம். *அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்* (தொல் 83:4).

எண்(ணு)-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. நினைத்தல் *எண் அரும் சிறப்பில் கிழவோன் மேன* (தொல். 1096:59).
2. ஆராய்தல். *மனத்தின் எண்ணி மாசுஅறத் தெரிந்துகொண்டு* (தொல் 1614:26).
3. கணக்கிடுதல். *உயிர்இல் எழுத்தும் எண்ணப்படா* (தொல். 1305:1).

எண்ணியற் பெயர் *பெயர்*

எண்ணிக்கையால் வழங்கப்படுகின்ற பெயர். *எ-டு.:* நால்வர், ஐவர் *இன்றுஇவர் என்னும் எண்இயற் பெயரோடு* (தொல். 652:7).

எண்ணுக் குறிப்பெயர் *பெயர்*

குறிப்பிட்ட ஓர் இலக்கத்தால் குறிப்பிடப்பெறும் பெயர். *எ-டு.:* ஆயிரம். *இனைத்துஎனக் குறிக்கும்எண்ணுக்குறிப் பெயரும்* (தொல் 655:4).

எண்ணுத் திணைவிரவுப் பெயர் *பெயர்*

உயர்திணை, அஃறிணைப் பெயர்கள் கலந்து அடுக்கப்பெற்ற பெயர்ச்சொற்கள் *எ-டு.:* அறவோர், பசு, பத்தினிப்பெண்டிர், குழவி முதலியோர். *பலவயி னானும் எண்ணுத் திணைவிரவுப் பெயர்* (தொல். 535:1).

எண்ணுவண்ணம் *பெயர்*

பலபொருள்களை எண்ணேகாரமோ எண்ணும்மையோ கொடுத்து அடுக்கிக்கூறும் எண்ணுதற்பொருளால் வரும் பாவோசை *எ-டு.* நீரே வளியே நிலனே தீயே; தாயுந் தந்தையுங் குருவுந் தெய்வமும். *எண்ணுவண்ணம் எண்ணுப் பயிலும்* (தொல். 1487).

எண்ணேகாரம் *பெயர்*

அடுக்கல் பொருளில் வருகின்ற ஏ என்னும் இடைச்சொல். *எ-டு.*: ஊரே பேரே. *எண் ஏகாரம் இடையிட்டுக்கொளினும்* (தொல். 773:1).

எண்மை *பெயர்*

எளிமை. *தஞ்சக் கிளவி எண்மைப் பொருட்டே* (தொல். 751:1).

எதிர்[1] *பெயர்*

1. முன்னிடம். *பிரியும் காலத்து எதிர்நின்று சாற்றிய* (தொல். 1100:29).
2. மாறுபாடு. *எதிர்மறுத்து மொழியினும் தத்தம் மரபில்* (தொல். 593:1).
3. மறுப்பு. *அழிந்துஎதிர் கூறி விடுப்பினும்* (தொல். 990:6).
4. விடை; மறுமொழி; பதில். *சொல்எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்* (தொல். 1000:5).
5. எதிர்காலம்; வருங்காலம். *இறப்பே நிகழ்வே எதிரது என்னும்* (தொல். 1461:1).

எதிர்[2]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. பெறுதல். *சென்றுபயன் எதிரச் சொன்னபக்கமும்* (தொல். 1040:6).
2. வரவேற்றல்; எதிர்கொள்ளுதல். *வேளாண் எதிரும் விருப்பின் கண்ணும்* (தொல். 1057:8).

எதிர்[3]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. தோன்றுதல். *பனி எதிர்பருவமும் உரித்து என மொழிப* (தொல். 955).
2. முன்னே வருதல். *குறையுறற்கு எதிரிய கிழவனை மறையுற* (தொல். 1064:7).
3. நேர்தல்; நிகழ்தல். *வாளான் எதிரும் பிரிவினானும்* (தொல். 1057:9).
4. போரிடுதல். *களிறு எறிந்து எதிர்ந்தோர் பாடும்* (தொல். 1022:9).

எதிர்கோடல் *பெயர்*

ஏற்றுக்கொள்ளுதல். *வழிபாடு மறுத்தல் மறுத்துஎதிர் கோடல்* (தொல். 1061:3).

எதிர்ப்பாடு *பெயர்*

1. ஒரு செயல் நடைபெறுவதற்கு முந்தைய நேரம் (இளம்.); சந்திப்பு (நச்சர்.). *புணர்ச்சி எதிர்ப்பாடு உள்ளுறுத்து வருஉம்* (தொல். 1064:3).
2. எதிர் கொண்டழைத்தல். *தொன்மறை மனைவி எதிர்ப்பாடு ஆயினும்* (தொல். 1122:2).

எதிர்பெய்து பரிதல் *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; தலைவனின் பிரிவாற்றாத தலைவி அவனுடைய உருவெளித் தோற்றத்தைக் கண்டு அவனை நினைத்து வருந்துதல். *எதிர்கண்டு பரிதல் ஏதம் ஆய்தல்* (தொல் 1219:2).

எதிர்பொருள் உணர்த்தல் *பெயர்*

32 இலக்கிய உத்திகளுள் ஒன்று; ஒன்றற்கு இலக்கணம் கூறும்போது எதிர்கால மாற்றங்களையும் நினைத்துப் பார்த்துச் சொல்லுதல். *பொருளிடையிடுதல் எதிர்பொருள் உணர்த்தல்* (தொல்.1614:20).

எதிர்மறை *பெயர்*

உடன்பாடு அல்லாதது; மறுதலை. *எதிர்மறை எச்சம் எதிர்மறை முடிபின* (தொல். 919).

எதிர்மறையும்மை *பெயர்*

ஒரு கருத்தை முடிக்க வருகின்ற, மறுதலைப் பொருண்மையை உடைய உம் என்னும் இடைச்சொல். *எ-டு.*: படிக்கவும் செய்வான் (படிக்க மாட்டான் என்பது கருத்து). *எச்ச உம்மையும் எதிர்மறை உம்மையும்* (தொல். 768:1).

எதிர்மறையெச்சம் *பெயர்*

மறுதலைப் பொருளில் வரும் உம், ஓ என்னும் இரண்டு இடைச்சொற்கள். *எதிர்மறை எச்சம் எதிர்மறை முடிபின* (தொல். 919).

எதிர்வு *பெயர்*

வருங்காலம்; வாராக்காலம்; எதிர்காலம். *இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்ற* (தொல்.911:1).

எதிரது போற்றல் *பெயர்*

32 இலக்கிய உத்திகளுள் ஒன்று; பின்னால் கூறப்படவுள்ள விதி ஒன்றற்கு ஏற்றதோர் இலக்கணத்தை முன்னதாகக் கூறி அவ்விதியைப் பேணுதல். *இறந்தது காத்தல் எதிரது போற்றல்* (தொல். 1614:12).

எதுகை *பெயர்*

ஒரு செய்யுளின் அடி அல்லது சீர்களில் முதல் எழுத்து மாத்திரை அளவால் ஒத்து நிற்க, இரண்டாம் எழுத்து முதலிய சில ஒன்றாக வரும் தொடை; அடியெதுகை; வழியெதுகை. *எ-டு.*: கட்டம், சட்டம், பட்டம், விட்டம். *ஒருசீர் இடையிட்டு எதுகை ஆயின்* (தொல். 1358:1).

எம்[1] *பெயர்*

யாம் என்னும் தன்மைப் பன்மைப் பதிலிப் பெயர்ச்சொல் வேற்றுமை உருபேற்கும்போது திரிந்து பெறும் வடிவம். *எ-டு.*: யாம்+ஐ→எம்மை. *எம்என வரூஉம் கிழமைத் தோற்றம்* (தொல்.1170:3).

எம்[2] *இடை*

தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி. அருகியவழக்கு. *எ-டு.*: கூறினெம். *அம்ஆம் எம்ஏம் என்னும் கிளவியும்... பன்மை உரைக்கும் தன்மைச் சொல்லே* (தொல். 689:2-5).

எம்மெய்யாயினும் ஒப்புமைகோடல் *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; தலைவனின் பிரிவினால் வாடுகின்ற தலைவி எந்தப் பொருளைக் கண்டாலும் அதனைத் தலைவனோடு ஒப்பிட்டுப் பார்த்தல். *எம்மெய் ஆயினும் ஒப்புமை கோடல் ஒப்புவழி உவத்தல் உறுபெயர் கேட்டல்* (தொல். 1219:9-10).

எய்து[1]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. அணுகுதல். *இடைச்சுர மருங்கின் அவள்தமர் எய்தி* (தொல். 991:3).
2. அடைதல். *கடைக்கொண்டு பெயர்தலில் கலங்கு அஞர் எய்தி* (தொல். 991:4).

எய்து[2]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

பொருந்துதல்; உறுதல். *கொடுத்தல் எய்திய கொடைமையானும்* (தொல். 1013:3).

எய்யாமை *பெயர்*

அறியாமை. *எய்யா மையே அறியா மையே* (தொல். 826).

எயில் *பெயர்*

மதில். *வருபகை பேணார் ஆர்எயில் உளப்பட* (தொல். 1017:7).

எரி *பெயர்*

நெருப்பு. *எரிபரந்தெடுத்தல்* (தொல். 1013:1).

எரிபரந்தெடுத்தல் *பெயர்*

வஞ்சித் திணையின் துறைகளுள் ஒன்று; பகைவரின் ஊரில் இட்ட நெருப்பு கொழுந்து விட்டெரிதலைக் கூறுதல். *இயங்குபடை அரவம் எரிபரந்தெடுத்தல்* (தொல். 1013:1).

எரு *பெயர்*

உரம். *எருவும் செருவும் அம்மொடு சிவணி* (தொல். 261:1).

எருத்தடி *பெயர்*

ஒரு செய்யுளின் கடைசி அடிக்கு முதல் அடி; ஈற்றயல் அடி. *குட்டம் எருத்தடி உடைத்தும் ஆகும்* (தொல். 1376).

எருத்து *பெயர்*

1. கலிப்பாவின் ஓர் உறுப்பு ஆகிய தரவு. *எருத்தே கொச்சகம் அராகம் சிற்றெண்* (தொல்.1412:1).

2. பரிபாடலின் உறுப்புகளில் ஒன்று. *கொச்சகம் அராகம் சுரிதகம் எருத்தொடு* (தொல். 1381:1).

எருமை *பெயர்*

பாலுக்காக வீடுகளிலும் பண்ணைகளிலும் வளர்க்கப்படுவதும் கரிய உடலையும், நீண்டு வளைந்த கொம்புகளையும் உடையதும் ஆகிய ஒரு விலங்கு. *ஆவும் எருமையும் அது சொலப்படுமே* (தொல் 1522).

எல் *பெயர்*

ஒளி. எல்லே இலக்கம் (தொல். 754)

எல்லா *பெயரடை*

அனைத்து. *எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே* (தொல். 642).

எல்லாம் *பெயர்*

அனைத்தும்; முழுவதும். *மெய்யீறு எல்லாம் புள்ளியொடு நிலையல்* (தொல். 105:2).

எல்லார் *பெயர்*

அனைத்து மக்கள். *எல்லாரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்* (தொல். 651:1).

எல்லீர் *பெயர்*

முன்னிலைப் பன்மைப்பெயர். *எல்லீரும் என்னும் முன்னிலை இறுதியும்* (தொல். 192:2).

எல்லை *பெயர்*

1. ஒரு நிலப்பரப்பை ஆட்சி முதலியவற்றிற்காக மற்ற நிலப்பகுதிகளிலிருந்து நான்கு புறங்களிலும் பிரித்துக் காட்டும் கோடு அல்லது வேலி; வரம்பு. *நாற்பேர் எல்லையகத்தவர் வழங்கும்* (தொல். 1339:4).

2. நுட்பமான அல்லது பருமையான பொருளுக்கு உரிய மேல் கீழ் வரம்புகள். *ஆசிரியப் பாட்டின் அளவிற்கு எல்லை* (தொல். 1416:1)

எலி *பெயர்*

வயல்களிலும் வீடுகளிலும் தானியங்களைக் கொறித்துத் தின்பதுவும்; வேகமாக ஓடுவதுமாகிய சிறிய கரிய விலங்கு. *மூங்கா வெருகுஎலி மூவரி அணிலொடு* (தொல். 1508:1).

எவன் *பெயர்*

ஆண்பாற் படர்க்கை ஒருமை வினாப்பெயர். *யாதுஎவன் என்னும் ஆஇரு கிளவியும்* (தொல். 515:1).

எழாஅல் *பெயர்*

வறண்ட நிலத்தில் பிணங்களைத் தின்று வாழ்கின்ற உச்சிக் கொண்டையை உடைய ஒரு பறவை; புல்லூறு. *மயிலும் எழாஅலும் பயிலத் தோன்றும்* (தொல். 1546).

எழில் *பெயர்*

ஒன்றன் உறுப்புகள் அவற்றிற்குரிய அளவில் குறையாமலும் பெருகாமலும் அமைந்துள்ளபோது உண்டாவதும், அதன் பொலிவு மேலும் வளரும் எனத் தோற்றுவதுமாகிய அழகு. *கற்பும் ஏரும் எழிலும் என்றா* (தொல். 1196:2).

எழு[1] *பெயரடை*

ஏழு என்னும் எண்ணின் பெயரடை வடிவம். *எழுசீர் இறுதி ஆசிரியம் கலியே* (தொல்.1336).

எழு[2]**-தல்** *செயப்படுபொருள் குன்றிய வினை*

தோன்றுதல்; உண்டாதல். *அகத்துஎழு வளிஇசை அரில்தப நாடி* (தொல். 102:4)

எழுத்து *பெயர்*

ஒரு மொழியின் சொற்களுக்கு அடிப்படையான உறுப்பின் ஒலிவடிவத்தினைக் குறிக்கும் வரிவடிவக் குறியீடு. *எழுத்துஎனப் படுவ அகரமுதல னகர இறுவாய் முப்பஃதென்ப* (தொல் 1:1-2).

எழுது-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

எழுத்து அல்லது ஓவியங்களை ஓர் ஊடகத்தில் வரைதல். *அந்தரத்து எழுதிய எழுத்தின் மான* (தொல். 1096:20).

எழுபது *பெயர்*

ஏழு பத்துக்களாலாகிய எண். *எழுபது வகையின் வழுவில ஆகி* (தொல் 1311:3).

எழுவாய் வேற்றுமை *பெயர்*

ஒரு பெயர்ச்சொல் வேற்றுமை உருபு எதையும் ஏற்காமல், பயனிலைக்கு வினைமுதலாக இருக்கும் நிலை; முதல் வேற்றுமை. *எழுவாய் வேற்றுமை பெயர் தோன்றுநிலையே* (தொல். 550:2).

எழூஉ-தல் *பெயர்*

ஒலித்தல். *கூட்டி எழூஉதல் என்மனார் புலவர்* (தொல். 6:2).

எள்ள *இடை*

உவம உருபுகளுள் ஒன்று. *எள்ள விழையப் புல்ல பொருவ* (தொல். 1238:1).

எள்ளல் *பெயர்*

இகழ்ச்சி. *எள்ளல் இளமை பேதைமை மடன்என்று* (தொல் 1201:1).

எள்ளு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

இகழ்தல்; அவமதித்தல். *வந்தவழி எள்ளினும்* (தொல். 1061:7).

எளித்தல் *பெயர்*

தாழ்த்திக் கூறுதல். *எளித்தல் ஏத்தல் வேட்கை உரைத்தல்* (தொல். 1156:1).

எளிமை *பெயர்*

எளிதாகக் கிட்டும் தன்மை; இலகு சுலபம். *எளிமைக் காலத்து இரக்கத் தானும்* (தொல்.1100:24).

எற்பாடு *பெயர்*

பிற்பகல்; பகற்பொழுதின் மூன்றாம் பகுதி. *எற்பாடு நெய்தல் ஆதல் மெய்பெறத் தோன்றும்* (தொல். 957).

எற்று *இடை*

முன்பு இருந்து பிறகு கழிந்துவிட்ட ஒன்றை நினைத்து இரங்கும் பொருளில் வரும் ஓர் இடைச்சொல். *எற்றுஎன் கிளவி இறந்த பொருட்டே* (தொல். 748).

எறி-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. (கடல்) அலை வீசுதல். *இமையோர் தேஎத்தும் எறிகடல் வைப்பினும்* (தொல். 1197:1).
2. போரிடுதல். *தான்மீண்டு எறிந்த தார்நிலை* (தொல். 1022:4).

எறும்பு *பெயர்*

மூவறிவுடையதும் கூட்டமாக வளையில் வாழும் இயல்புடையதும் ஆகிய ஒரு சிற்றுயிர். *சிதலும் எறும்பும் மூவறி வினவே* (தொல். 1532:1).

எறுழ் *பெயர்*

வலிமை. *எறுழ்வலி ஆகும்* (தொல். 872).

என் *பெயர்*

யாது; என்ன. *என்உற் றனகொல் இவை* (தொல். 1152:2).

என்[1](னு)-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

என்று சொல்லுதல்; எனக் கூறுதல். *மெல்லெழுத்து என்ப ஙஞண நமன* (தொல். 20).

என்[2] *இடை*

தன்மை ஒருமை வினைச்சொல் விகுதி. *எ-டு.:*நிற்றுறந்து அமைகுவென். அருகியவழக்கு. *என்ஏன் அல்என வருஉம் ஏழும் தன்வினை உரைக்கும் தன்மைச் சொல்லே* (தொல்.690: 3-4).

என்ப *வினைமுற்று*

என்று கூறுவர். *அகரமுதல் னகர இறுவாய் முப்பஃது என்ப.* (தொல். 1:2).

என்பது[1] *பெயர்*

என்று சொல்லப்படுவது. *அகவல் என்பது ஆசிரி யம்மே* (தொல். 1341).

என்பது[2] *இடை*

சார்ந்து நின்ற சொல்லின் பொருளை உணர்த்துவதும் தனியாக ஆளப்படாததுமாகிய அசைநிலை; பகுதிப்பொருள் விகுதி (இளம்.); ஒரு கருத்தை ஏற்றோ மறுத்தோ கூறும்போது வருவதும்

தனியாக ஆளப்படாததுமாகிய அசைநிலை (சேனா.) (அருகியவழக்கு). *ஆக ஆகல் என்பது என்னும் ஆவலின் மூன்றும் பிரிவுஇல் அசைநிலை* (தொல் 765).

என்பு *பெயர்*

எலும்பு. *என்புநெகப் பிரிந்தோள் வழிச்சென்று* (தொல். 1064:27).

என்மனார் *வினைமுற்று*

என்று சொல்லுவார்கள். *தாம்விளி கொள்ளா என்மனார் புலவர்* (தொல். 611:2)

என்ற *இடை*

உவம உருபுகளுள் ஒன்று. *என்ற வியப்ப என்றவை எனாஅ* (தொல். 1235:5).

என்றா *இடை*

பல பொருள்களை அடுக்கி எண்ணும்போது எண்ணற்பொருளில் வரும் இடைச்சொற்களுள் ஒன்று. *தோடே மடலே ஓலை என்றா* (தொல். 1590:1)..

என்று *இடை*

1. பிறர் கூற்றை மேற்கோள் காட்டி வாக்கியத்தில் இணைக்கும்போது வரும் இணைப்பிடைச்சொல். *இன்னன் என்று இரங்கிய மன்னையானும்* (தொல். 1029:7).

2. எண்ணுப்பொருளில் வருகின்ற இடைச்சொற்களுள் ஒன்று. *மெய்யே உயிர் என்று ஆஈர் இயல* (தொல். 104:5).

என்ன[1] *பெயர்*

யாது. *என்ன கிளவியும் அதன்பால என்மனார்* (தொல். 557:10).

என்ன[2] *இடை*

உவம உருபுகளுள் ஒன்று. *என்ன உறழ தகைய நோக்கொடு* (தொல். 1236:2).

என[1] *இடை*

காண்க: என்று. *பனிஎதிர் பருவமும் உரித்துஎன மொழிப* (தொல். 955).

என[2] *இடை*

எண்ணற்பொருளில் வரும் ஓர் இடைச்சொல். *செய்யியர் செய்யிய செயின் செய செயற்கு என அவ்வகை ஒன்பதும்* (தொல். 713:2-3).

ஏ

ஏ[1] *பெயர்*

மேற்பல்லின் அடியை நாக்கின் அடிவிளிம்பு சென்று பொருந்துவதாலும் மிடற்றுவளியாலும் இரு மாத்திரை அளவு ஒலிக்கப்படும் உயிர்நெடில் ஒலி; அவ்வொலியை வரிவடிவில் சுட்டுவதும் தமிழ்நெடுங்கணக்கில் எட்டாவதும் ஆகிய உயிரெழுத்து. *இஈஎஏ ஐஎன இசைக்கும் அப்பால் ஐந்தும் அவற்றோர் அன்ன அவைதாம் அண்பல் முதல்நா விளிம்புஉறல் உடைய* (தொல்.86); *பன்னீர் உயிரும் தம்நிலை திரியா மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்* (தொல்.84:2-3); *ஆஈஊஏஐஓஔ என்னும் அப்பால் ஏழும் ஈர் அளபு இசைக்கும் நெட்டெழுத்து என்ப* (தொல். 4); *ஔகார இறுவாய்ப் பன்னீர் எழுத்தும் உயிர்என மொழிப* (தொல். 8).

ஏ[2] *பெயர்*

பெருக்கம். *ஏபெற்றாகும்* (*தொல்*. 788).

ஏ[3] *இடை*

1. ஒரு பொருளைச் சற்றும் ஐயமில்லாமல் உறுதிப்படுத்திக் கூறும் பொருளில் வரும் ஓர் இடைச்சொல்; தேற்றேகாரம். *எ-டு.*: இவனே திருடன். *இடைச்சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்ஏ* (*தொல்*. 59)

2. பலபொருள்களை அடுக்கிக் கூறும்போது எண்ணற் பொருளில் வரும் ஓர் இடைச்சொல்; எண்ணேகாரம். *இலைஏ தளிர்ஏ முறிஏ தோடுஏ* (*தொல்*. 1591:1).

3. சாரியைகளுள் ஒன்று. *எ-டு.*: ஒன்றேகால், இரண்டே முக்கால். *ஒத்தது என்ப ஏஎன் சாரியை* (*தொல்*. 165:6).

4. பலபொருள் தொகுதியில் குறிப்பிட்ட ஒன்றைத் தனியே பிரித்துக் காட்டும் ஓர் இடைச்சொல். பிரிநிலை ஏகாரம். *எ-டு.*: உரைகளில் இதுவே சிறந்தது. *அவற்றுள் விறப்புஏ வெரூஉப் பொருட்டு ஆகும்* (*தொல்*. 832).

5. அசைச்சொற்களுள் ஒன்று. *ஈற்றசை இவ்வைந்து ஏகாரம்ஏ* (*தொல்*. 742:2).

6. பாவின் இசை நிறைத்தலுக்காக வரும் ஏகாரம்; இது அசையின் ஒரு வகையே; இசைநிறை. *ஏயும் குரையும் இசைநிறை அசைநிலை* (*தொல்*. 757:1).

ஏகாரம் *பெயர்*

ஏ என்னும் எழுத்து. *ஏகார இறுதி ஒகார இயற்றே* (*தொல்*. 275).

ஏடு *பெயர்*

பனைஓலை. *ஏடே இதழே பாளை என்றா* (*தொல்* 1590:2).

ஏணி *பெயர்*

உயரமான பரண் முதலியவற்றின்மீது ஏறுவதற்காக இரு வலிமையான மூங்கில்களுக்கு இடையே படிகள் போன்று சட்டங்கள் பொருத்தப்பட்ட கருவி; சாதனம். *ஒ.நோ.*: நூலேணி. *மடை அமை ஏணிமிசை மயக்கமும்* (*தொல்*. 1018:2).

ஏணிமிசை மயக்கம் *பெயர்*

உழிஞைத் திணையின் துறைகளுள் ஒன்று; ஒரு கோட்டையை முற்றுகை இட்டுள்ள படை வீரர்கள் ஏணிவழியாக மதில்மேல் ஏற முயல்வதை உள்ளே இருப்போர் அதே ஏணிகளில் இறங்கித்தடுக்க முயலல்; ஏணிமயக்கம், ஏணிமயக்கு. *மடைஅமை ஏணிமிசை மயக்கமும் கடைஇ* (*தொல்*. 1018:2).

ஏத்து-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

புகழ்தல். *எளித்தல் ஏத்தல் வேட்கை உரைத்தல்* (*தொல்*. 1156:1)

ஏதம் *பெயர்*

குற்றம். *எண்ணிடை ஒழிதல் ஏதம் இன்றே* (*தொல்*. 1406:1).

ஏதம் ஆய்தல் *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று, தலைவி தலைவனின் குற்றத்தை ஆராய்தல் (இளம்.) தலைவனைச் சந்திப்பதற்கு ஏற்படும் தடையைத் தலைவி ஆராய்தல் (பேரா.). *எதிர்பெய்து பரிதல் ஏதம் ஆய்தல்* (*தொல்*. 1219:2).

ஏதீடு *பெயர்*

தோழி அறத்தொடு நிற்கும்பொழுது தலைவியின் காதலுக்குத் தகுந்ததோர் காரணத்தைக் காட்டி அவள் நிலையை உணர்த்துதல்; காரணம் கற்பித்து நியாயப்படுத்துதல். *கூறுதல் உசாதல் ஏதீடு தலைப்பாடு* (தொல். 1156:2).

ஏது *பெயர்*

காரணம். *ஏது நுதலிய முதுமொழி என்ப* (தொல். 1436:4).

ஏந்தல் வண்ணம் *பெயர்*

செய்யுள் ஒன்றில் ஒரே சொல் திரும்பத் திரும்பப் பலமுறை பயின்று வருவதால் தோன்றும் பாவோசை. *எ-டு.*: துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய தூஉம் மழை. *ஏந்தல் வண்ணம் சொல்லிய சொல்லில் சொல்லியது சிறக்கும்* (தொல். 1490).

ஏந்து[1]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

தாங்குதல். *மாலை ஏந்திய பெண்டிரும் மக்களும்* (தொல். 1096:55)

ஏந்து[2]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

ஓங்குதல்; வளர்தல்; உயர்தல். *ஏந்துபுகழ்ப் போந்தே வேம்பே ஆர்என வரூஉம்* (தொல்.1010:3-4).

ஏம்[1] *பெயர்*

1. காவல்; பாதுகாப்பு. *ஏம்உற இரண்டும் உளஎன மொழிப* (தொல். 1059:2).
2. மகிழ்ச்சி. *ஏம்உறு விளையாட்டு இறுதிக் கண்ணும்* (தொல். 1097:19).
3. வருத்தம். *ஏம்உறு கிளவி சொல்லிய எதிரும்* (தொல். 1096:50).
4. மயக்கம். *பாழிகொள்ளும் ஏமத்தானும்* (தொல். 1022:8 நச்சர்.).

ஏம்[2] *இடை*

தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி. *எ-டு.*: வந்தேம். *அம்ஆம் எம்ஏம் என்னும் கிளவியும்* (தொல். 689:2).

ஏமம்[1] *பெயர்*

1. பாதுகாப்பு. *ஏமம் சாலா இடும்பை எய்தி* (தொல். 1000:2).
2. இன்பம். *ஏமம் சார்ந்த உவகைக் கண்ணும்* (தொல். 1061:34).

ஏமம்[2] *பெயர்*

தும்பைத் திணையின் துறைகளுள் ஒன்று; போரில் தன் போர்க்கருவிகளை இழந்த வீரன் ஒருவன் ஊக்கம் குன்றாது மற்போர் புரிதல். *படை அறுத்துப் பாழி கொள்ளும் ஏமத்தானும்* (தொல். 1022:7-8).

ஏய்ப்ப *இடை*

உவம உருபுகளுள் ஒன்று. *கடுப்ப ஏய்ப்ப மருளப் புரைய* (தொல். 1239:1).

ஏர் *பெயர்*

கண்டார்க்கு இன்பத்தைத் தருவதோர் நிறவேறுபாடு. இது வண்ணம் பற்றி வரும் (இளம்.); எழுச்சி. அஃது எழுகின்ற நிலைமை என நிகழ்காலமே குறித்து நிற்கும் (நச்சர்.). *கற்பும் ஏரும் எழிலும் என்றா* (தொல். 1196:2).

ஏரோர் *பெயர்*

கலைப்பையைக் கொண்டு உழுகின்ற உழவர்கள், விவசாயிகள். *ஏரோர் களவழி யன்றி* (தொல்.1026:3).

ஏல்[1](ற்)-த(ற)ல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. ஒப்புக்கொள்ளுதல். *பிறிதுபிறிது ஏற்றலும்* (தொல். 590:1).

2. புலன்களால் அறிதல். *எ-டு.*: செவியேற்றல். *ஈரம்இல் கூற்றம் ஏற்றுஅலர் நாணல்* (தொல்.1213:2).

ஏல்[2](ற்)-த(ற)ல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. பொருந்துதல். *தன்மை சுட்டில் பன்மைக்கு ஏற்கும்* (தொல். 679).

2. தகுதியது ஆதல், தகுதிபெறுதல். *வினைநிலை உரைத்தல் வினாவிற்கு ஏற்றல்* (தொல்.551:2).

3. உயர்த்திக் கூறுதல். *ஏற்றற் கண்ணும் நிறுத்தற் கண்ணும்* (தொல். 1097:2).

ஏவல் *பெயர்*

1. கட்டளையிடுதல்; ஏவுதல். *ஏவல் கண்ணிய வியங்கோள் கிளவியும்* (தொல். 211:4).

2. பணிபுரிதல்; தொண்டாற்றுதல். *ஏவல்மரபின் ஏனோரும் உரியர்* (தொல். 971:1).

ஏழ்[1] *பெயர்*

ஏழு என்னும் எண்ணிக்கை. *வேற்றுமை தாமே ஏழ்என மொழிப* (தொல். 547:1).

ஏழ்[2] *பெயரடை*

ஏழு என்னும் எண்ணின் பெயரடை வடிவம். *ஏழ்எழுத்து என்ப சிந்தடிக்கு அளவே* (தொல்.1298).

ஏழைமை *பெயர்*

அறிவின்மை. *இன்புறல் ஏழைமை மறப்போடு ஒப்புமை* (தொல். 1223:3).

ஏற்பு *பெயர்*

பொருத்தம். *ஏற்பு உடைத்து என்ப எருமைக் கண்ணும்* (தொல். 1540).

ஏற்றம் *பெயர்*

1. நினைவு. *கானலஞ்சேர்ப்பன் கொடுமை ஏற்றி* (குறுந். 145:2).

2. துணிவு. *எற்றமிலாட்டி என் ஏழுற்றாள்* (கலி. 144:63)

ஏற்றம் நினைவும் துணிவும் ஆகும் (தொல். 821).

3. மிகுதல்; அதிகமாதல். *ஈர்எழுத்து ஏற்றம் அல்வழியான* (தொல். 1298:2).

ஏற்றை *பெயர்*

விலங்கின் ஆண். *ஆண்பாற்கு எல்லாம் ஏற்றைக் கிளவி உரித்துஎன மொழிப* (தொல்.1552).

ஏறு[1] *பெயர்*

விலங்கின் ஆண். *ஏறும் ஏற்றையும் ஒருத்தலும் களிறும்* (தொல். 1504:1).

ஏறு[2]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. ஊர்தியாகக் கொண்டு செலுத்துதல்; ஏறிச்செல்லுதல்; ஊர்தல். *ஏறிய மடல்திறம்* (தொல்.1001:1).

2. மிகுதியாதல். *ஆறு எழுத்து ஏறிய நிலத்தே குறளடி என்ப* (தொல். 1297).

ஏன் *இடை*

தன்மை ஒருமை வினைமுற்று விகுதி. *எ-டு.:* வந்தேன். *என்ஏன் அல்என வரூஉம் ஏழும் தன்வினை உரைக்கும் தன்மைச் சொல்லே* (தொல். 690:3-4).

ஏன *பெயர்*

பிற. *முதலா ஏன தம்பெயர் முதலும்* (தொல். 66).

ஏனது *பெயர்*

எந்த ஒரு பொருளை (இளம்.), மாறான ஒரு பொருளை (நச்சர்.). *ஏனது சுவைப்பினும் நீகை தொட்டது* (தொல். 1096:12).

ஏனம் *பெயர்*

கரிய நிறம் உடையதும் சேற்றிலே உழல்வதும் ஒரே ஈற்றில் பல குட்டிகளை ஈன்று பால் தருவதுமாகிய ஒரு விலங்கு, பன்றி. *இருள்நிறப் பன்றியை ஏனம் என்றலும்* (தொல். 1571:6).

ஏனவை *பெயர்*

மற்றவை. *ஏனவை புணரின் இயல்புஎன மொழிப* (தொல். 382).

ஏனை *பெயரடை*

மற்றைய. *ஏனைக் கிளவி பன்மைக்கு உரித்தே* (தொல். 677).

ஏனைய *பெயர்*

மற்றவை. *இயல்அசை முதல்இரண்டு ஏனைய உரியசை* (தொல். 1267).

ஏனையுவமம் *பெயர்*

உள்ளுறை உவமம் அல்லாத வெளிப்படையான உவமை; உவமம். *ஏனை உவமம் தான்உணர் வகையே* (தொல். 999).

ஏனோர் *பெயர்*

பிறர்; மற்றவர். *ஏனோர் மருங்கினும் எண்ணுங்காலை* (தொல். 971:1).

ஏனோர்பக்கம் *பெயர்*

வாகைத் திணையின் வகைகளுள் ஒன்று; அரசர் அல்லாத வணிகர்களும் வேளாளர்களும் தத்தம் துறையில் பெற்ற வெற்றியைக் கூறுவது. *இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்* (தொல்.1025:3).

ஐ

ஐ[1] *பெயர்*

மேற்பல்லின் அடியை நாக்கின் அடிவிளிம்பு சென்று பொருந்துவதாலும் மிடற்றுவளியாலும் இரு மாத்திரை அளவு ஒலிக்கப்படும் உயிர்நெடில் ஒலி; அவ்வொலியை வரிவடிவில் சுட்டுவதும் தமிழ் நெடுங்கணக்கில் ஒன்பதாவதும் ஆகிய உயிரெழுத்து. *இஈஎஏ ஐஎன இசைக்கும் அப்பால் ஐந்தும் அவற்றோர் அன்ன அவைதாம் அண்பல் முதல்நா விளிம்புஉறல் உடைய* (தொல்.86); *பன்னீர் உயிரும் தம்நிலை திரியா மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்* (தொல்.84:2-3); *ஆஈஊ ஏஐஓஔ என்னும் அப்பால் ஏழும் ஈர் அளபு இசைக்கும் நெட்டெழுத்து என்ப* (தொல். 4); *ஔகார இறுவாய்ப் பன்னீர் எழுத்தும் உயிர்என மொழிப* (தொல். 8).

ஐ[2] *பெயர்*

1. வியப்பு. *ஐவியப்புஆகும்* (தொல். 869).

2. தமையன்; அண்ணன். *தந்தையும் தன்ஐயும் முன்னத்தின் உணர்ப* (தொல். 1087).

ஐ[3] *பெயரடை*

ஐந்து என்னும் எண்ணிக்கையின் பெயரடை வடிவம். *ஐவகை அடியும் விரிக்குங் காலை* (தொல். 1311:1).

ஐ[4] *இடை*

1. இரண்டாம் வேற்றுமை உருபு. *இரண்டு ஆகுவதே ஐ எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி* (தொல். 556:1-2).

2. முன்னிலை ஒருமை விகுதி. *எ-டு.:* வந்தனை. *இஐ ஆஎன வரூஉம் மூன்றும் ஒப்பத் தோன்றும் ஒருவர்க்கும் ஒன்றற்கும்* (தொல். 708:3-4).

3. சாரியைகளுள் ஒன்று. *என்உற்றன கொல் இவை என்னின் அல்லது ஐ* (தொல். 1152:2).

4. தொழிற்பெயர் விகுதி. *நிறையே அருளே உணர்வொடு திருஎன* (தொல். 1222:3) நிறு+ஐ.

5. அசை நிலைகளுள் ஒன்று. *அப்பொருள் இரட்டாது இவண் ஐ ஆன* (தொல். 80:2).

ஐகாரம் *பெயர்*

ஐ என்னும் எழுத்து. *அகர இகரம் ஐகாரம் ஆகும்* (தொல். 54).

ஐந்திணை *பெயர்*

அகப்பொருளின் ஒழுக்கங்களைக் கூறும் குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்னும் ஐந்து திணைகள். *அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கில்* (தொல். 1014:2).

ஐந்து *பெயர்*

நான்கிற்கும் ஆறுக்கும் இடைப்பட்ட எண். *சீர்நிலை தானே ஐந்துஎழுத்து இறவாது* (தொல். 1302).

ஐம்பால் *பெயர்*

பெயர்ச்சொற்களுக்கு உரிய ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால், பலர்பால், பலவின்பால் என்னும் ஐந்து பகுப்புகள். *இருதிணைப் பிரிந்த ஐம்பாற் கிளவிக்கும்* (தொல். 648:1).

ஐம்மை *பெயர்*

நுண்மை. *அரியே ஐம்மை* (தொல். 840).

ஐயஞ்செய்தல் *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; தலைவன் தன்னைத் துறந்து விடுவானோ எனத் தக்க காரணம் இல்லாமலேயே தலைவி சந்தேகப்படுதல். *ஐயம் செய்தல் அவன்தமர் உவத்தல்* (தொல். 1219:7).

ஐயம் *பெயர்*

ஒருவன் அல்லது ஒன்றைப்பற்றிக் குறிப்பிட்ட ஒரு செயல் அல்லது கருத்து சரியோ தவறோ என்றோ, நடக்குமோ நடக்காதோ என்றோ உறுதியாகக் கூற முடியாத மனநிலை; சந்தேகம். *சிறந்துழி ஐயம் சிறந்தது என்ப* (தொல். 1043:1).

ஐயர் *பெயர்*

முனிவர். *ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியும்* (தொல். 1096:29).

ஒ

ஒ[1] *பெயர்*

உதடுகள் குவிவதாலும் மிடற்றுவளியாலும் ஒரு மாத்திரை அளவு ஒலிக்கப்படும் உயிர்க்குறில் ஒலி, அவ்வொலியை வரிவடிவில் சுட்டுவதும் தமிழ்நெடுங்கணக்கில் பத்தாவதும் ஆகிய உயிரெழுத்து. *உஊஒஓஔஎன இசைக்கும் அப்பால் ஐந்தும் இதழ் குவிந்து இயலும்* (தொல் 87), *பன்னீர் உயிரும் தம்நிலை திரியா மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்* (தொல் 84:2-3); *அஇஉ எஒ என்னும் அப்பால் ஐந்தும் ஓர் அளபு இசைக்கும் குற்றெழுத்து என்ப* (தொல் 3:2-4); *ஔகார இறுவாய்ப் பன்னீர் எழுத்தும் உயிர்என மொழிப* (தொல் 8).

ஒ[2]**-த்தல்** *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. ஓர் இனம் ஆதல் *நெட்டெழுத்து இம்பர் ஒத்த குற்றெழுத்தே* (தொல். 41:2).
2. தகுதியுடையது ஆதல்; தக்கது ஆதல். *ஒத்த மொழியால் புணர்த்தனர் உணர்த்தல்* (தொல் 873:3)
3. ஒற்றுமைப்படுதல். *ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப* (தொல். 1042:3).
4. பொருத்தமாதல் *ஒத்தது என்ப ஏஎன் சாரியை* (தொல். 165:6).

ஒகரம் *பெயர்*

ஒ என்னும் எழுத்து *எகர ஒகரத்து இயற்கையும் அற்றே* (தொல் 16).

ஒட்ட *இடை*

உவம உருபுகளுள் ஒன்று *ஒட்ட ஒடுங்க ஒட்ட நிகர்ப்ப என்று* (தொல் 1239:2).

ஒட்டகம் *பெயர்*

இளம் பழுப்பு நிறமுடையதும் நீண்ட கழுத்தையும் வேகமாக ஓடவல்ல வலிய கால்களையும் முதுகில் குமிழ்களையும் பெற்றுள்ளதும் பாலைவனத்தில் வசிப்பதுமாகிய ஒரு விலங்கு *ஒட்டகம் குதிரை கழுதை மரைஇவை* (தொல். 1555:1)

ஒட்டு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

பொருந்துதல் *ஒட்டிய மெய்ஒழித்து உகரம் கெடுமே* (தொல் 177:2)

ஒடி-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

தவிர்தல் *கொடியோர் கொடுமை சுடும்என ஒடியாது* (தொல் 1097:25).

ஒடு[1] *பெயர்*

மரவகை, நிலப்பாலை *ஒடுமரக் கிளவி உதிமர இயற்றே* (தொல். 263).

ஒடு[2] *இடை*

1. கருவிப்பொருளில் வரும் மூன்றன் உருபு *பாங்கொடு தழாஅலும் தோழியில் புணர்வும்* (தொல் 1445:2).
2. உடனிகழ்ச்சிப்பொருளில் வரும் மூன்றன் உருபு. *நல்லிசை நயந்தோர் சொல்லொடு தொகைஇ* (தொல் 1097:26)
3. எண்ணுப்பொருளில் வரும் ஓர் இடைச்சொல்; எண்ணிடைச்சொல். *ஆறு அறிவதுவே அவற்றொடு மனனே* (தொல் 1529:6).

ஒடுங்க *இடை*

உவம உருபுகளுள் ஒன்று. *ஒட்ட ஒடுங்க ஒட்ட நிகர்ப்ப என்று* (தொல் 1239:2)

ஒண்மை *பெயர்*

விளக்கம்; ஒளி. *நுண்மையொடு புணர்ந்த ஒண்மைத்து ஆகி* (தொல். 1604:4).

ஒத்தாழிசை *பெயர்*

ஒத்தாழிசைக் கலியின் உறுப்புகளுள் ஒன்றான தாழிசை. *ஒத்து மூன்றாகும் ஒத்தாழிசையே* (தொல். 1402).

ஒத்தாழிசைக்கலி *பெயர்*

கலிப்பாவின் வகைகளுள் ஒன்று; தரவு தாழிசை தனிச்சொல் சுரிதகம் ஆகிய நான்கு உறுப்புகள் அமைய வரும் கலிப்பா. *ஒத்தாழிசைக்கலி இருவகைத்து ஆகும்* (தொல். 1391:2).

ஒப்ப *இடை*

உவம உருபுகளுள் ஒன்று. *போல மறுப்ப ஒப்பக் காய்ப்ப* (தொல். 1240:1).

ஒப்பக்கூறல் *பெயர்*

32 இலக்கிய உத்திகளுள் ஒன்று; ஒருபொருளுக்கு இலக்கணம் கூறும்போது அதன் பகுதிகளுக்கும் அந்தவிதி பொருந்துமாறு கூறுதல். *ஒப்பக் கூறல் ஒருதலை மொழிதல்* (தொல்.1614:9).

ஒப்பில் போலி *பெயர்*

இருபொருள்கள் ஒன்றற்கொன்று நிகராகாதபோது சொல்லளவில் நிகரானவைபோலக் கூறப்படும் 'போலும்' என்னும் சொல். (பெரும்பாலும் இது அசையாகக் கருதப்படும்). *ஒப்பில் போலியும் அப்பொருட்டு ஆகும்* (தொல். 763).

ஒப்பு[1] *பெயர்*

நிகர்வு; ஒத்த பண்புகளைப் பெற்றிருப்பது; பொருத்தம். *காப்பின் ஒப்பின் ஊர்தியின் இழையின்* (தொல். 557:1).

ஒப்பு[2]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. ஏற்புடையது ஆகுதல். *ஒப்பத் தோன்றும் ஒருவர்க்கும் ஒன்றற்கும்* (தொல். 708:4).
2. ஒன்றாக இருத்தல். *அடிதொறும் தலைஎழுத்து ஒப்பது மோனை* (தொல். 1352).

ஒப்புமை *பெயர்*

1. நிகர்வு; ஒத்த தன்மை; சமானம். *குறியின் ஒப்புமை மருள்தற் கண்ணும்* (தொல். 1061:24).
2. வேறு ஒருவர் அல்லது ஒன்றோடு பொருத்திப் பார்த்து உயர்வு தாழ்வு கற்பித்தல்; ஒப்பீடு. *இன்புறல் ஏழைமை மறப்போடு ஒப்புமை* (தொல். 1223:3).

ஒப்புவழி உவத்தல் *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; பிரிவால் வருந்துகின்ற தலைவி தலைவனை நிகர்க்கும் வேறு பொருள்களைக் காணும்போது மகிழ்ச்சியடைதல். *ஒப்புவழி உவத்தல் உறுபெயர் கேட்டல்* (தொல். 1219:10).

ஒரு *பெயரடை*

ஒன்று என்னும் எண்ணிக்கையின் பெயரடை வடிவம். *நீஎன் ஒருபெயர் நெடுமுதல் குறுகும்* (தொல். 180:1).

ஒருங்கு *வினையடை*

ஒருசேர. *இருமொழி மேலும் ஒருங்கு உடன் நிலையலும்* (தொல். 902:3)

ஒருத்தல் *பெயர்*

விலங்கின் ஆண். *சொல்லிய கராமோடு ஒருத்தல் ஒன்றும்* (தொல். 1538:2).

ஒருத்தி *பெயர்*

ஒருபெண். *ஒன்றற்கும் ஒருத்திக்கும் ஒன்றிய நிலையே* (தொல். 667:2).

ஒருதலை[1] *பெயர்*

உறுதி. *ஒருதலை உரிமை வேண்டினும்* (தொல். 1174:1).

ஒருதலை[2] *வினையடை*

இடைவிடாமல். *வேட்கை ஒருதலை உள்ளுதல் மெலிதல்* (தொல். 1049:1).

ஒருதலை மொழிதல் *பெயர்*

32 இலக்கிய உத்திகளுள் ஒன்று; ஓர் இடத்தில் சொல்லவேண்டிய ஒன்றைத் தகுந்த காரணம்பற்றி மற்றோரிடத்தில் கூறுதல். *ஒப்பக் கூறல் ஒருதலை மொழிதல்* (தொல். 1614:9).

ஒருதலையன்மை *பெயர்*

32 இலக்கிய உத்திகளுள் ஒன்று; குறிப்பிட்ட இலக்கணம் ஒன்றை இவ்வாறு தான் இருத்தல் வேண்டும் என்று உறுதியாக விதிக்காமல், வேறு வகையாகவும் இருக்கலாம் எனக் கூறுதல். *தான்குறி இடுதல் ஒருதலை அன்மை* (தொல். 1614:14).

ஒருதான் மண்டிய குறுமை *பெயர்*

உழிஞைத் திணையின் துறைகளுள் ஒன்று; முற்றுகையிடப்பட்ட அரசனின் வீரன் ஒருவன் தன்னந் தனியனாக வெளியே வந்து புறத்தோருடன் போர்புரிதல். *ஒருதான் மண்டிய குறுமையும்* (தொல். 1017:6).

ஒருபோகு *பெயர்*

கொச்சக ஒருபோகு, அம்போதரங்க ஒருபோகு என இருவகைப்படும் கலிப்பா வகை. *ஒருபோகு இயற்கையும் இருவகைத்து ஆகும்* (தொல். 1407).

ஒருமை[1] *பெயர்*

ஒற்றுமை. *ஒருமைக் கேண்மையின் உறுகுறை தெளிந்தோள்* (தொல். 1061:18).

ஒருமை[2] *பெயர்*

பெயர்ச்சொல்லுக்குரிய எண்ணில் ஒன்று; ஒரு மனிதன் அல்லது பொருளைக் குறிப்பது. *ஒருமை சுட்டிய எல்லாப் பெயரும் ஒன்றற்கும் ஒருவற்கும் ஒன்றிய நிலையே* (தொல். 670).

ஒருவர் *பெயர்*

ஓர் ஆணையோ பெண்ணையோ குறிக்கும் உயர்திணை ஒருமைச்சொல். *ஒருவர் என்னும் பெயர்நிலைக் கிளவி இருபாற்கும் உரித்தே தெரியுங் காலை* (தொல். 678).

ஒருவழி[1] *பெயர்*

1. ஓர் இடம். *ஓர்இனப் பொருளை ஒருமொழி வைப்பது* (தொல். 1429:2).

2. ஒரு பகுதி; ஏகதேசம். *ஒருவழி உறுப்பில் குழுவின் என்றா* (தொல். 565:4). *உறுப்பாவது பொருளின் ஏகதேசம் என்பது அறிவித்தற்கு ஒருவழி உறுப்பு என்றார்* (தொல்.பொருள்.80 சேனா.).

ஒருவழி[2] *வினையடை*

ஒருவாறு *ஒட்டகம் அவற்றோடு ஒருவழி நிலையும்* (தொல். 1520).

ஒருவன் *பெயர்*

ஓர் ஆண்மகன்; ஒருத்தன். *ஒருவன் ஒருவனை உடைபடை புக்கு* (தொல். 1022:6).

ஒருவன் தாங்கிய பெருமை *பெயர்*

வஞ்சித் திணையின் துறைகளுள் ஒன்று; வீரன் ஒருவன் தன் எதிரே ஆற்றுவெள்ளம் போல வரும் படையைக் கல்லைப்போலக் கலங்காது நின்று தடுத்து நிறுத்துகின்ற சிறப்பு. *வருவிசைப் புனலைக் கல்சிறை போல ஒருவன் தாங்கிய பெருமையானும்* (தொல். 1013:8).

ஒருவு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

விலக்குதல்; நீக்குதல். *ஒரீக் கூறலும் மரீஇய பண்பே* (தொல். 1259:1).

ஒரூஉ *பெயர்*

ஓர் அடியில் இரு சீர்கள் இடையிட்டு எதுகை, மோனை, முரண் முதலிய தொடைகள் பயிலுகை; ஒரூஉத்தொடை. *இருசீர் இடையிடின் ஒரூஉஎன மொழிப* (தொல். 1359).

ஒரூஉ வண்ணம் *பெயர்*

செய்யுள் ஒன்றில் எதுகை முதலிய தொடைகள் எதுவும் அமையாமல் செந்தொடையாக அமையும் பாவோசை (இளம்.) செய்யுள் ஒன்றில் ஆற்றொழுக்குப் போலச் சொல்லப்பட்டது தன்பொருள் முற்றுதற்குப் பிறிதொன்றனை எதிர்பார்க்காதபடி அறுத்துச் செல்லும் பாவோசை (பேரா., நச்சர்.). *ஒரூஉ வண்ணம் ஒரீஇத் தொடுக்கும்* (தொல். 1486).

ஒரோவொருவழி *வினையடை*

அருகிச் சில இடங்களில் மட்டும்; சிறுபான்மையாய். *ஒன்றுதல் உடைய ஒரோவொரு வழியே* (தொல். 1292).

ஒல்லு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

பொருந்துதல். *ஒல்வழி ஒற்றுஇடை மிகுதல்* (தொல். 115:2).

ஒல்லார் *பெயர்*

பகைவர். *ஒல்லார் இடவயிற் புல்லிய பாங்கினும்* (தொல். 1026:13).

ஒழி-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. மறைதல். *உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும்* (தொல். 158:8).
2. வெளியே போகாமல் ஓர் இடத்தில் தங்குதல்; மறைந்து வாழ்தல். *கரந்திடத்து ஒழிதல் கண்டவழி உவத்தலொடு* (தொல். 1214:2).
3. (விட்டு) நீங்குதல் *எண்ணிடை ஒழிதல் ஏதம் இன்றே* (தொல். 1406:1).
4. எஞ்சுதல்; மீதம் ஆதல். *ஒருவரும் ஒழியாத் தொகைநிலைக் கண்ணும்* (தொல். 1022:13).
5. தவிர்தல். *ஈறுமெய் ஒழியக் கெடுதல் வேண்டும்* (தொல். 470:2).

ஒழியிசை *பெயர்*

காண்க. ஒழியிசையெச்சம். *பிரிநிலை வினாவே எதிர்மறை ஒழியிசை* (தொல். 741:1).

ஒழியிசையெச்சம் *பெயர்*

எச்சங்களுள் ஒன்று; வெளிப்படையாகச் சொல்லப்பட்ட பொருளை அல்லாமல் சொல்லாமல் மறைந்து நிற்கின்ற மற்றொரு பொருள் குறிப்பால் உணரப்படுதல். *எ-டு*.: நல்லாத்தான் பேசுவார்

என்றபோது சரியாகச் செயல்பட மாட்டார் என்ற பொருள் தருதல் (தான் என்பதன் ஆற்றலால்). *ஒழியிசை எச்சம் ஒழியிசை முடிபின* (தொல். 918).

ஒழுக்கத்துக்கண்ணுமை *பெயர்*

வாகைத் திணைக்குரிய துறைகளுள் ஒன்று; இல்லறத்தான் ஒருவன் தன் ஒழுக்கத்தால் சிறந்து விளங்குவதைக் கூறுதல். *கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமை யானும்* (தொல். 1026:18).

ஒழுக்கம் *பெயர்*

1. நன்னடத்தை; நல்லனவற்றைக் கடைபிடித்தும் அல்லனவற்றை நீக்கியும் வாழும் நெறி. *கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்* (தொல் 1102:1).
2. பழக்கவழக்கம். *நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும்* (தொல். 1064:1)

ஒழுக்கு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

நடப்பித்தல்; இயங்கச்செய்தல். *வழங்கியன் மருங்கின் உணர்ந்தனர் ஒழுக்கல்* (தொல். 484:4).

ஒழுகல் *பெயர்*

நேர்மை; நீளம். *வார்தல் போகல் ஒழுகல் மூன்றும் நேர்பும் நெடுமையும் செய்யும் பொருள* (தொல். 801).

ஒழுகு வண்ணம் *பெயர்*

செய்யுள் ஒன்றில் ஆற்றொழுக்கைப்போலச் சிறிதும் தடைபடாமல் பொருள் தொடர்ந்து செல்லும் பாவோசை. *ஒழுகு வண்ணம் ஓசையின் ஒழுகும்* (தொல். 1485).

ஒள் *பெயரடை*

ஒளிமிக்க. *ஒள்வாள் வீசிய நூழிலும்* (தொல் 1022:17).

ஒளி *பெயர்*

1. வெளிச்சம். *வாள்ஒளியாகும்* (தொல். 851).
2. பெருமை. *நுண்மையும் சுருக்கமும் ஒளிஉடைமையும்* (தொல். 1436:1).

ஒற்கம் *பெயர்*

வறுமை. *இலம்பாடு ஒற்கம் ஆயிரண்டும் வறுமை* (தொல். 844)

ஒற்றல் *பெயர்*

மெய்யெழுத்தாக நிற்றல். *இல்என் கிளவிமிசை றகரம் ஒற்றல்* (தொல். 356:2).

ஒற்று[1] *பெயர்*

உளவு; வேவு. *ஒற்றின் ஆகிய வேயே* (தொல். 1008:3).

ஒற்று[2] *பெயர்*

மெய்யெழுத்து. *தத்தம் ஒத்த ஒற்றுஇடை மிகுமே* (தொல். 204:3).

ஒற்று[3]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

அழுத்தமாகச் சேர்த்தல். *நாநுனி பரந்து மெய்உற ஒற்ற* (தொல். 93:2).

ஒற்றுமை *பெயர்*

இரு பொருள்களுக்கிடையே உள்ள பொருத்தம். *தெற்றென ஒருபொருள் ஒற்றுமை கொளீஇ* (தொல். 1608:4).

ஒன் *இடை*

சாரியைகளுள் ஒன்று *ஒகார விறுதிக்கு ஒன்னே சாரியை* (தொல். 181).

ஒன்ற *இடை*

உவம உருபுகளுள் ஒன்று. *ஒன்ற ஒடுங்க ஒட்ட வாங்க* (தொல். 1235:4).

ஒன்றறிசொல் *பெயர்*

ஒன்றன்பாலைச் சுட்டும் மொழி, வார்த்தை. *ஒன்றுஅறி சொல்லே பலஅறிசொல் என்று* (தொல் 487:1).

ஒன்று[1] *பெயர்*

எண்ணிக்கையில் முதல் எண் இரண்டு என்னும் எண்ணுக்கு முந்தைய எண். *ஒன்று முதல் ஆக எட்டன் இறுதி* (தொல். 434:1).

ஒன்று[2] *பெயர்*

ஒன்றன்பால் *ஒன்றற்கும் ஒருத்திக்கும் ஒன்றிய நிலையே* (தொல். 667:2).

ஒன்று[3]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

பொருந்துதல்; ஒன்றாகச் சேர்தல். *இன்றியமையாது இயைபவை எல்லாம் ஒன்ற உரைப்பது உரைஎனப் படுமே* (தொல். 1607:2-3).

ஓ

ஓ *பெயர்*

உதடுகள் குவிவதாலும் மிடற்றுவளியாலும் இரு மாத்திரை அளவு ஒலிக்கப்படும் உயிர்நெடில் ஒலி; அவ்வொலியை வரிவடிவில் சுட்டுவதும் தமிழ்நெடுங்கணக்கில் பதினொன்றாவதும் ஆகிய உயிரெழுத்து. *உஊஒஓஔஎன இசைக்கும் அப்பால் ஐந்தும் இதழ் குவிந்து இயலும்* (தொல்.87); *பன்னீர் உயிரும் தம்நிலை திரியா மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்* (தொல் 84:2-3); *ஆஈஊ ஏஐஓஔ என்னும் அப்பால் ஐந்தும் ஈர் அளபு இசைக்கும் நெட்டெழுத்து என்ப* (தொல். 4); *ஔகார இறுவாய்ப் பன்னீர் எழுத்தும் உயிர்என மொழிப* (தொல். 8).

ஓகாரம் *பெயர்*

ஓ என்னும் எழுத்து. *இருமூன்று என்ப ஓகா ரம்மே* (தொல். 741:3).

ஓங்கு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

உயர்தல். *ஓங்கிய சிறப்பின் ஒரு சிறை யான* (தொல். 1084:2).

ஓசை *பெயர்*

செவிப்புலனால் கேட்டு அறியப்படுகின்ற ஒலி. சிறப்பாகச் செய்யுட்களுக்கு உரிய ஒலிநயம். *ஒழுகு வண்ணம் ஓசையின் ஒழுகும்* (தொல். 1485).

ஓட்ட *இடை*

உவம உருபுகளுள் ஒன்று. *ஓட்ட ஒடுங்க ஓட்ட நிகர்ப்ப என்று* (தொல். 1239:2).

ஓட்டல் *பெயர்*

போக்குகை. *ஆர்அமர் ஓட்டலும் ஆபெயர்த்துத் தருதலும்* (தொல் 1010:11).

ஓட *இடை*

உவம உருபுகளுள் ஒன்று. *ஓட புரைய என்றவை எனாஅ* (தொல். 1235:13).

ஓடாக்கழனிலை *பெயர்*

வெட்சித் திணையின் துறைகளுள் ஒன்று; போரில் புறமுதுகிடேன், வெல்வேன் என வஞ்சினம் கூறி அணியப்படும் வீரக்கழலைப் புகழ்தல். *வயவர் ஏத்திய ஓடாக்கழனிலை உளப்பட* (தொல்.1010:7).

ஓடு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. **ஓட்டமாகச் செல்லுதல்** *ஓடும்புல்வாய் உளப்பட மறியே* (தொல். 1514:2).
2. **கெடுதல் (இளம்.) புறமுதுகிடுதல் (நச்சர்.).** *வயவர் ஏத்திய ஓடாக் கழல்நிலை* (தொல்.1010:7)

ஓடு *இடை*

உடனிகழ்ச்சிப் பொருளில் வரும் மூன்றன் உருபு. *முந்நீர் வழக்கம் மகடூ உவோடு இல்லை* (தொல். 984).

ஓத்து[1] *பெயர்*

கல்விப்பயிற்சி; ஓதுகை. *உயர்ந்தோர்க்கு உரிய ஓத்தினான* (தொல். 980).

ஓத்து[2] *பெயர்*

ஓர் இனத்தைச் சேர்ந்த செய்திகளை ஓரிடத்தில் தொகுத்து அமைக்கும் நூற்பகுதி. *இனமொழி கிளந்த ஓத்தி னானும்* (தொல். 1427:2).

ஓது-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

கல்வி பயிலல்; படித்தல். *ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன* (தொல் 975:2).

ஓப்பு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

(பறவைகள் முதலியவற்றை) துரத்துதல், விரட்டுதல். *ஓப்பில் புகழில் பழியின் என்றா* (தொல்.557:2).

ஓம்படை *பெயர்*

பாதுகாவல். *ஓம்படை ஆணையில் கிளந்தவற் றியலால்* (தொல். 880:6).

ஓம்படை *பெயர்*

பாடாண் திணையின் துறைகளுள் ஒன்று; நாள்கோள் ஆகியவற்றாலோ புள் முதலிய நிமித்தங்களாலோ அரசனுக்குத் தீமை நேராமல் இருக்கட்டும் என வாழ்த்துதல். *காலம் கண்ணிய ஓம்படை உளப்பட* (தொல். 1040:18).

ஓம்பு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. **போற்றுதல்.** *செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்* (தொல். 497).
2. **பாதுகாத்தல்.** *ஆதந்து ஓம்பல்* (தொல். 1007:2)
3. **(துன்பம் முதலியவற்றை) தணித்தல்.** *உறுகண் ஓம்பல் தன் இயல்பு ஆகலின்* (தொல். 1188:1).
4. **(உணவு முதலியவற்றால்) காப்பாற்றுதல்.** *விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்* (தொல்.1102:3).

ஓய்தல் *பெயர்*

ஆராய்தல்; நுட்பமாகப் பரிசீலித்தல். *ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய் ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்* (தொல் 814).

ஓர் *பெயரடை*

ஒன்று என்னும் எண்ணிக்கைக்கு (உயிரெழுத்தில் தொடங்கும் பெயர்ச்சொல்லிற்கு முன்) வரும் பெயரடைச்சொல். *புல்லும் மரனும் ஓர்அறிவினவே* (தொல். 1530:1).

ஓராங்கு *வினையெச்சம்*

ஒருபடித்தாக. *வாராக் காலத்தும் நிகழுங் காலத்தும் ஓராங்கு வருஉம் வினைச்சொற் கிளவி* (தொல். 726:1-2).

ஓரெழுத்துமொழி *பெயர்*

காண்க. ஓரெழுத்தொருமொழி. *குறியதன் முன்னரும் ஓர்எழுத்து மொழிக்கும்* (தொல். 227:1).

ஓரெழுத்தொருமொழி *பெயர்*

ஓர் எழுத்து மட்டும் தனியாக நின்று பொருள் தரும் சொல். *எ-டு.*: ஆ=பசு; கா=சோலை; காப்பாற்று. *நெட்டெழுத்து ஏழே ஓர்எழுத்து ஒருமொழி* (தொல். 43).

ஓரை *பெயர்*

ஒரு முகூர்த்தம் (1½ மணி நேரம்) (இளம்.); இராசி (நச்சர்.); *மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்* (தொல். 1085:1).

ஓலை *பெயர்*

தென்னை, பனை முதலிய மரங்களின் இலை. *தோடே மடலே ஓலை என்றா* (தொல். 1590:1).

ஔ

ஔ *பெயர்*

உதடுகள் குவிவதாலும் மிடற்றுவளியாலும் இரு மாத்திரை அளவு ஒலிக்கப்படும் உயிர்நெடில் ஒலி; அவ்வொலியை வரிவடிவில் சுட்டுவதும் தமிழ்நெடுங்கணக்கில் பன்னிரண்டாவதும் ஆகிய உயிரெழுத்து. *உஊஒஓஔஎன இசைக்கும் அப்பால் ஐந்தும் இதழ் குவிந்து இயலும்* (தொல். 87); *பன்னீர் உயிரும் தம்நிலை திரியா மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்* (தொல். 84:2-3); *ஆஈஊ ஏஐஓஔ என்னும் அப்பால் ஏழும் ஈர் அளபு இசைக்கும் நெட்டெழுத்து என்ப* (தொல். 4); *ஔகார இறுவாய்ப் பன்னீர் எழுத்தும் உயிர்என மொழிப.* (தொல். 8).

ஔகாரம் *பெயர்*

ஔ என்னும் எழுத்து. *அகர உகரம் ஔகாரம் ஆகும்* (தொல். 55).

க

க் *பெயர்*

தமிழ் நெடுங்கணக்கின் மெய்யொலிகளுள் முதலாவதும் அரைமாத்திரை அளவுள்ளதுமான ஒலி; அவ்வொலியை வரிவடிவில் சுட்டும் எழுத்து. *னகார இறுவாய்ப் பதினெண் எழுத்தும் மெய்என மொழிப* (தொல். 9) *மெய்யின் அளபே அரை என மொழிப* (தொல். 11).

க *பெயர்*

க் என்னும் மெய்மேல் அகரம் ஏறத் தோன்றும் உயிர்மெய்; நாவின் அடிப்பகுதி அடிஅண்ணத்தைப் பொருந்துவதாலும் நெஞ்சுவளியாலும் ஒரு மாத்திரை அளபு ஒலிக்கப்படும் வல்லின உயிர்மெய்க்குறில்; அவ்வொலியை வரிவடிவில் சுட்டுவதும் தமிழ் நெடுங்கணக்கின் உயிர்மெய்யின் முதலாவதும் ஆகிய எழுத்து. *ககார ஙகாரம் முதல்நா அண்ணம்* (தொல்.89); *வல்லெழுத்தென்ப கசட தபற* (தொல். 19).

ககாரம் *பெயர்*

க என்னும் எழுத்து. *ககார ஙகாரம் முதல்நா அண்ணம்* (தொல். 89).

கட்டு[1] *பெயர்*

வரையறுக்கப்படுகை; கட்டுப்பாடு. *கட்டு அமை ஒழுக்கத்துக் கண்ணுமையானும்* (தொல்.1026:19).

கட்டு[2] *பெயர்*

எதிர்கால நிகழ்வை முதலிலேயே அறிந்து கூறும்பொருட்டு, கட்டுவிச்சியால் சிறிய முறத்தில் கொஞ்சம் நெல்லைப் பரப்பி வைத்துக்கொண்டு சொல்லப்படும் குறி; கட்டுப்பார்த்தல். *எ-டு.:* கட்டுஅறி மகடூஉக் கடிமுறத்திட்ட வட்ட நெல்லும் மாண்பு இல பெரிது என (பெருங்.1-37:236-237). *கட்டினும் கழங்கினும் வெறிஎன இருவரும்* (தொல். 1065:3)

கட்டுரை *பெயர்*

உரைநடை; பாட்டின்றித் தொடுக்கப்படுவது. *கட்டுரை வகையான் எண்ணொடு புணர்ந்தும்* (தொல். 1383:1)

கட்டுரையின்மை *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; தலைவனோடு இல்லறத்தில் இணைய விரும்பும் தலைவி காதல் மிகுதியால் ஒன்றும் பேசாமல் இருத்தல். *காதல் கைம்மிகல் கட்டுரை இன்மை என்று ஆஇரு நான்கே அழிவுஇல் கூட்டம்* (தொல். 1220:4).

கடப்பாட்டாண்மை *பெயர்*

ஒப்புரவு. *காதல் சோர்வில் கடப்பாட்டாண்மையில்* (தொல். 1101:6).

கடப்பாடு *பெயர்*

1. மரபு. *கடப்பாடு அறிந்த புணரியலான* (தொல். 37:2).
2. இன்றியமையாமை; கட்டாயம். *பன்மை கூறும் கடப்பாடு இலவே* (தொல். 546:3).

கடப்பு *பெயர்*

அளவு மீறுதல். *காமக் கடப்பினுள் பணிந்த கிளவி* (தொல். 1110:1).

கடம் *பெயர்*

நேர்த்திக்கடன்; பிரார்த்தனை செலுத்துகை. *கிழவோற் சுட்டிய தெய்வக் கடத்தினும்* (தொல்.1100:4).

கடமை *பெயர்*

1. மான்வகை. *யானையும் குதிரையும் கழுதையும் கடமையும்* (தொல். 1517:1).
2. சில விலங்குகளின் பெண் *மூடும் கடமையும் யாடு அல பெறா* (தொல். 1567).

கடல் *பெயர்*

உலகத்தைச் சுற்றி உள்ள உப்புநீர்ப் பரப்பு; ஆழி; சமுத்திரம். *கடல்வாழ் சுறவும் ஏறு எனப்படுமே* (தொல். 1543).

கடவுள் *பெயர்*

தெய்வம். *ஏமுறு கடவுள் ஏத்திய வகையினும்* (தொல். 1096:9)

கடவுள் வாழ்த்து *பெயர்*

தெய்வத்தைப் போற்றும் செய்யுட் பொருண்மை. *கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே* (*தொல்*. 1037:3).

கடன் *பெயர்*

1. முறைமை. *இன்ன என்னும் எழுத்துக்கடன் இலவே* (*தொல்*. 143:3).
2. கடமை. *மடனொடு நிற்றல் கடன்என மொழிப* (*தொல்*. 1154:3).
3. மரபு. *வழக்குவழிப் படுதல் செய்யுட்குக் கடனே* (*தொல்*. 1166:2).

கடாஅ *பெயர்*

வினா. *மறுதலைக் கடாஅ மாற்றமும் உடைத்தாய்* (*தொல்*. 1608:1).

கடாவுதல் *செயப்படுபொருள் குன்றா வினை*

விரைவுபடுத்துதல். *வரைவுஉடன் பட்டோர்க் கடாவல் வேண்டினும்* (*தொல்*. 1064:43).

கடி[1] *பெயர்*

1. வரைவு; திருமணம். *நல்மனை அரும்கடி அயர* (*ஐங்*. 292:4).
2. கூர்மை. *கடிநுனைப்பகழி எனக் கூர்மையும்* (*தொல்.சொல்* 383 *சேனா*).
3. பாதுகாவல். *கடிமதில் அரண்பல கடந்த* (*புறநா*. 92:5).
4. புதுமை. *சிறுதிணைக் கடிஉண் கடவுட்கு* (*குறுந்*. 105:1-2).
5. விரைவு. *கடிசெல் புரவி முடுகும் வீதியும்* (*பெருங்*. 3-4-22).
6. விளக்கம். *கடிசுனைத் தெளிந்த மணிமருள் தீம்நீர்* (*அகநா*. 368:10).
7. மிகுதி. *மாரிகடிகொள காவலர் கடுக* (*ஐங்*. 29:1).
8. சிறப்பு. *அருங்கடி மாமலை தழீஇ யொருசார்* (*மதுரைக்*. 301).
9. அச்சம். *கறுத்த தெவ்வர் கடிமுனை அலற* (*பதிற்றுப்*. 39:4).
10. முன்றேற்று. (உரையாசிரியர் தேற்றத்திற்குக் கடும் என்பதைக் காட்டுகின்றனர். கடி என்னும் வடிவத்திற்கு மேற்கோள் கிடைக்கவில்லை).

கடியென் கிளவி
வரைவே கூர்மை காப்பே புதுமை
விரைவே விளக்க மிகுதி சிறப்பே
அச்ச முன்றேற் றாயீ ரைந்தும்
மெய்ப்படத் தோன்றும் பொருட்டா கும்மே (*தொல்*. 867)

கடி[2]**-தல்** *செயப்படுபொருள் குன்றா வினை*

நீக்குதல். *கடிநிலை யின்றே யாசிரி யர்க்க* (*தொல்*. 390:3).

கடிமனைநீத்த பால் *பெயர்*

வாகைத் திணையின் துறைகளுள் ஒன்று; பிறர்மனை நயவாமை (இளம்.); அரசன் அரச உரிமையைக் கைவிட்டது (நச்சர்.) *கடிமனை நீத்த பாலின் கண்ணும்* (*தொல்*. 1026:16).

கடு *பெயர்*

நஞ்சு. *வேம்பும் கடுவும் போல வெம்சொல்* (*தொல்*. 1372:2).

கடுப்ப *இடை*

உவம உருபுகளுள் ஒன்று. *கடுப்ப ஏய்ப்ப மருளப் புரைய* (*தொல்*. 1239:1).

கடுமை *பெயர்*

1. கடினத்தன்மை. *வன்மை மென்மை கடுமை என்றா* (தொல். 563:4).

2. கண்டிப்பு. *காப்பின் கடுமை கையற வரினும்* (தொல். 1064:30).

கடுவன் *பெயர்*

1. விலங்கின் ஆண். *போத்தும் கண்டியும் கடுவனும் பிறவும் யாத்த ஆண்பால் பெயர்என மொழிப* (தொல். 1504:4-5).

2. ஆண் குரங்கின் பெயர். *குரங்கின் ஏற்றினைக் கடுவன் என்றலும்* (தொல். 1571 :1).

கடை *இடை*

1. இடப்பொருளில் வரும் ஏழன் சொல்லுருபுகளுள் ஒன்று. *முன் இடை கடை தலை வலம் இடம் எனாஅ* (தொல். 567:3)

2. காலப்பொருளில் வரும் வினையெச்ச விகுதி. *எ-டு..* தன் நோய்போல் போற்றாக்கடை. *பின்முன் கால்கடை வழி இடத்து என்னும்* (தொல். 714:1).

கடைஇ *வினையெச்சம்*

செலுத்தி. *கடைஇச், சுற்றுஅமர் ஒழிய வென்று கைக்கொண்டு* (தொல். 1018:2-3)

கடைஇய *பெயரெச்சம்*

வற்புறுத்திக்கேட்ட. *பரிசில் கடைஇய கடைக்கூட்டு நிலையும்* (தொல். 1040:13).

கடைக்கூட்டு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

செய்து முடித்தல். *மறம்கடை கூட்டிய குடிநிலை சிறந்த* (தொல் 1009:1).

கடைக்கூட்டுநிலை *பெயர்*

பாடாண் திணையின் துறைகளுள் ஒன்று; இரவலர்கள் வள்ளல்களிடம் சென்று தம் பரிசில் வேட்கையைத் தெரிவித்தல்; பரிசில் கடாநிலை. *பரிசில் கடைஇய கடைக்கூட்டு நிலையும்* (தொல். 1040:13)

கடைக்கொள்(ளு)-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

மீட்டுக்கொண்டுபோதல். *இடைச்சுர மருங்கின் அவள்தமர் எய்திக் கடைக்கொண்டு பெயர்தலில் கலங்குஅஞர் எய்தி* (தொல். 991:3-4).

கடைக்கோள் *பெயர்*

முடிவடைதல் (இளம்.); தீதாகக் கருதுதல் (நச்சர்.). *காமம் சான்ற கடைக்கோட் காலை* (தொல்.1142:1).

கடைநிலை *பெயர்*

பாடாண் திணையின் துறைகளுள் ஒன்று; இரவலர்கள் வள்ளல்களின் வாயிற்காவலர்களிடம் தாம் வந்த நோக்கத்தைக் கூறுதல்; வாயில் நிலை. *சேய்வரல் வருத்தம் வீட வாயில் காவலர்க் குரைத்த கடைநிலை யானும்* (தொல். 1039:4).

கடைப்பிடி-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

மேற்கொண்டொழுகுதல்; பின்பற்றுதல். *வரம்புதமக்கு இன்மையின் வழிநனி கடைப்பிடித்து* (தொல். 880:5).

கண்[1] *பெயர்*

1. முகத்தில் இணையாக அமைந்து பார்க்க உதவும் உறுப்பு; ஐம்புலன்களுள் ஒன்று. *கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்* (தொல். 1224:1).

2. கண்ணோட்டம்; மற்றவர் வேண்டுகோளைப் புறக்கணிக்கத் தயங்கும் மனநிலை; தாட்சணியம். *காத்த தன்வயின் கண்இன்று பெயர்ப்பினும்* (தொல். 1100:28)

கண்[2] *இடை*

இடப்பொருள் வேற்றுமையாகிய ஏழாம் வேற்றுமை உருபு. *ஏழாகுவதே கண்எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி* (தொல். 566:2).

கண்ணு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. கருதுதல். *நல்லார் நாணப் பெரியவர்க் கண்ணி* (தொல். 1026:10).

2. பொருந்துதல். *அவ்அறு கிளவியும் கண்ணிய நிலைத்தே உம்மைத் தொகையே* (தொல் 900:3-4).

கண்ணுறு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

எதிர்ப்படுதல். *கண்ணுற்று அடைய யகாரம் பிறக்கும்* (தொல். 99:2).

கண்டது *பெயர்*

வழக்காறு *கண்டோர் மொழிதல் கண்டது என்ப* (தொல். 1452:2).

கண்டவழி உவத்தல் *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; தலைவி தலைவனைப் பார்த்தபொழுது மகிழ்ச்சியடைதல். *கரந்திடத்து ஒழிதல் கண்டவழி உவத்தலொடு* (தொல். 1214:2).

கண்டி *பெயர்*

1. விலங்கின் ஆண். *போத்தும் கண்டியும் கடுவனும் பிறவும் யாத்த ஆண்பால் பெயர்என மொழிப* (தொல். 1504 : 4-5).

2. ஆண் எருமை; எருமைக்கடா. *எருமையுள் ஆணினைக் கண்டி என்றலும்* (தொல். 1571:7).

கண் துயில் மறுத்தல் *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; தலைவனின் பிரிவைப் பொறுக்கமுடியாத தலைவி உறங்காதிருத்தல் *கண் துயில் மறுத்தல் கனவொடு மயங்கல்* (தொல். 1219:5).

கண்டோர் *பெயர்*

உடன்போக்கின்போது காதலர்களை வழியில் பார்த்த மற்றவர்கள். *சேய்நிலைக்கு அகன்றோர் செலவினும் வரவினும் கண்டோர் மொழிதல் கண்டது என்ப* (தொல். 990:9).

கண்ணி *பெயர்*

தொடராகத் தொடுக்கப்பெற்ற மலர்ச்சரம். *கண்ணியும் தாரும் எண்ணினர் ஆண்டே* (தொல்.1582).

கண்ணிமை *பெயர்*

விழிகளின் இமைகள் இயல்பாக மூடித்திறக்கும் நேரம்; கண்கொட்டும் நேரம். *கண்இமை நொடிஎன அவ்வே மாத்திரை* (தொல். 7:1).

கண்ணீர் *பெயர்*

விழிகளிலிருந்து ஒழுகுகின்ற நீர்மம். *கையறு தோழி கண்நீர் துடைப்பினும்* (தொல்.1061:22).

கண்ணுமை *பெயர்*

பொருந்துகை. *கட்டுஅமை ஒழுக்கத்துக் கண்ணுமை யானும்* (தொல். 1026:18).

கண்படை *பெயர்*

தூக்கம். *கண்படை கண்ணிய கண்படை நிலையும்* (தொல். 1039:5).

கண்படைநிலை *பெயர்*

பாடாண் திணையின் துறைகளுள் ஒன்று; அரசன் அமைதியாகத் தூங்கவேண்டி அவனுடைய சிறப்புகளைப் புகழ்ந்து பாடுதல் *கண்படை கண்ணிய கண்படை நிலையும்* (தொல் 1039:5).

கணவன் *பெயர்*

மணவாளன். *நீத்த கணவற் தீர்த்த வேலில்* (தொல் 1029:12).

கணை *பெயர்*

வில்லிற் பூட்டிச் செலுத்தப்படும் அம்பு. *கணையும் வேலும் துணைஉற மொய்த்தலில்* (தொல் 1021:1).

கதழ்வு *பெயர்*

விரைவு. *கதழ்வும் துனைவும் விரைவின் பொருள* (தொல். 799)

கந்தழி *பெயர்*

பாடாண் திணையின் துறைகளுள் ஒன்று; ஒரு பற்றுக்கோடும் இன்றி அருவாகித் தானே நிற்கும் தத்துவம் கடந்த பொருளைப் பரவுதல். *கொடிநிலை கந்தழி வள்ளி என்ற* (தொல். 1037:1).

கபிலை கண்ணிய வேள்வி நிலை *பெயர்*

பாடாண் திணையின் துறைகளுள் ஒன்று; செந்நிறப் பசுவை வழங்கிய கொடையைப் புகழ்தல். *கபிலை கண்ணிய வேள்வி நிலையும்* (தொல். 1039:5).

கம் *பெயர்*

கைத்தொழில். *ஈமும் கம்மும் உரும்என் கிளவியும்* (தொல். 329:1).

கம்பலை *பெயர்*

ஆரவார ஒலி. *கம்பலை சும்மை கலியே அழுங்கல்* (தொல். 833).

கமம் *பெயர்*

நிறைவு. *கமம் நிறைந்து இயலும்* (தொல். 839:1).

கய *பெயரடை*

1. பெரிய. *களிற்றுஇரை பிழைத்தலின் கயவாய் வேங்கை காய் சினம் சிறந்து* (அகநா. 221:11-12)
2. மென்மையான. *கயந்தலைச் சிறாஅர் கணைவிளையாடும்* (புறநா. 325:12).

தடவும் கயவும் நளியும் பெருமை (தொல். 804); *கயஎன் கிளவி மென்மையும் செய்யும்* (தொல். 806).

கயந்தலை *பெயர்*

குழந்தை *கயந்தலை தோன்றிய காமர் நெய்யணி* (தொல். 1097:8).

கர[1]-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஒளித்துவைத்தல்; மறைத்தல். *மொழிகரந்து மொழியின் அது மொழிகரப்பு ஆகும்* (தொல். 1386).

கர[2]-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

மறைதல். *செம்பொருள் கரந்தது எனஇரு வகைத்தே* (தொல். 1384:2).

கரகம் *பெயர்*

சிறிய கைச்செம்பு. *நூலே கரகம் முக்கோல் மணையே* (தொல். 1573:1).

கரணம் *பெயர்*

1. திருமணச் சடங்கு. *கற்புஎனப் படுவது கரணமொடு புணர* (தொல். 1092:1)
2. திருமணம். *கரணத்தின் அமைந்து முடிந்த காலை* (தொல். 1096:1).

கரந்திடத்தொழிதல் *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; தலைவனைக் காணவேண்டும் என்னும் விருப்பத்தால் தலைவி மறைந்திருத்தல் (இளம்.); தலைவியின் களவொழுக்கத்தைக் குறிப்பாலுணர்ந்த தாய் அவளை வீட்டிற்கு வெளியே செல்லவிடாமல் பாதுகாத்து வருதலால் தலைவி தலைவனுக்கு எதிரில் வராமல் மறைந்திருத்தல் (பேரா.). *கரந்திடத்து ஒழிதல் கண்டவழி உவத்தலொடு* (தொல்.1214:2).

கரந்தை *பெயர்*

வெட்சித் திணையின் ஒரு பகுதி. அது பகைவர்களால் கவர்ந்து செல்லப்பெற்ற ஆநிரைகளைப் போரிட்டுத் திரும்பக் கொண்டுவருதலைக் கூறுவது. *அனைக்குரி மரபினது கரந்தை அன்றியும்* (தொல். 1010:14).

கரப்பு *பெயர்*

பிறருக்குத் தெரியாமல் மறைந்துள்ள நிலை. *கரப்பு இன்றி முடிவது காண்டிகை யாகும்* (தொல்.1605:2).

கரம் *இடை*

எழுத்துகளைத் தனியே எடுத்துக் கூறும்பொழுது, அந்த எழுத்துடன் சேர்க்கப்படும் சாரியை; எழுத்துச்சாரியை *எ-டு.*: அகரம், ககரம். *காரமுங் கரமுங் கானொடு சிவணி நேரத் தோன்று மெழுத்தின் சாரியை* (தொல். 135).

கராம் *பெயர்*

வெப்ப மண்டலப் பகுதிகளின் நீர்நிலைகளில் வாழ்வதும், கெட்டியான கரிய தோலையும் நீண்ட கவுளையும் உடையதும், முட்டை இடுவதுமான ஒரு விலங்கு; முதலை. *கவரியும் கராமும் நிகர் அவற்றுள்ளே* (தொல். 1519).

கரிப்பு *பெயர்*

நாவால் அறியப்படும் காரச்சுவை. *எ-டு.*: மிளகின் சுவை. *ஐயமும் கரிப்பும் ஆகலும் உரித்தே* (தொல். 868).

கரு *பெயர்*

குறிஞ்சி முதலிய அகத்திணைகளுக்கு உரியனவாகக் கூறப்படும் தெய்வம், உணவு முதலிய சிறப்புப்பொருள்கள்; கருப்பொருள். *தெய்வம் உணாவே மா, மரம் புள், பறை, செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ அவ்வகை பிறவும் கருஎன மொழிப* (தொல். 967).

கருதல் *பெயர்*

ஒருவர் தன் நினைப்பை வெளிப்படையாகக் கூறாமல் குறிப்பால் தெரிவித்தல்; குறிப்பின் உணர்த்தல். *கருதல் ஆராய்ச்சி விரைஉயிர்ப்பு எனாஅ* (தொல். 1209:7).

கருது-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. நினைத்துக் கொள்ளுதல். *தன்னான் ஒருபொருள் கருதிக் கூறல்* (தொல். 1612:7).
2. ஒன்றை எதிர்பார்த்தல். *ஊதியம் கருதிய ஒருதிறத் தானும்* (தொல். 991:13).
3. விரும்புதல். *பரவலும் புகழ்ச்சியுங் கருதிய பாங்கினும்* (தொல். 1032:2).

கருமம் *பெயர்*

செயல். *ஆற்றது பண்பும் கருமத்து விளைவும்* (தொல். 1120:1).

கருவி *பெயர்*

ஒரு செயலைச் செய்வதற்குத் துணைபுரியும் சாதனம். *நிலனும் பொருளும் காலமுங் கருவியும்* (தொல். 719:1).

கல்கோள் *பெயர்*

வெட்சித் திணையின் துறைகளுள் ஒன்று; போரில் இறந்த வீரனுக்கு நினைவுச்சின்னமாக ஒரு நடுகல் நிறுவத் தகுதியான பாறையைத் தேர்ந்தெடுத்தல். *காட்சி கல்கோள் நீர்ப்படை நடுகல்* (தொல். 1010:19).

கல்வி *பெயர்*

1. குறிப்பிட்ட ஒரு துறையில் அறிவையும் திறமையையும் நூல்களைக் கற்பதாலோ, பயிற்சியாலோ பெறுதல். *வேண்டிய கல்வி யாண்டுமூன்று இறவாது* (தொல். 1138).
2. கற்றதனால் பெற்ற அறிவு. *கல்வி தறுகண் புகழ்மை கொடைஎனச் சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே* (தொல். 1207).

கல[1]-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

சந்தித்தல்; நேர்படுதல். *கலந்த பொழுதும் காட்சியும் அன்ன* (தொல். 965).

கல[2]-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

சேர்தல், கூடுதல். *நிலம்தீ நீர்வளி விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் ஆதலின்* (தொல். 1593:1-2).

கலக்கம் *பெயர்*

1. ஒரு செயலின் விளைவு என்ன ஆகுமோ என நினைத்து மனம் குழம்புதல். *ஆற்றது தீமை அறிவுறு கலக்கமும்* (தொல். 1064:29).
2. காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; தம் காதலரின் பிரிவாற்றாமையால் மனம் மயங்குதல்; இரு பாலார்க்கும் பொதுவாகிய மனமயக்கம். *நலத்தக நாடில் கலக்கமும் அதுவே* (தொல். 1219:11).

கலங்கி மொழிதல் *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; காதல் மிகுதியின் விளைவாகச் சொற்கள் தடுமாறுதல். *கலங்கி மொழிதல் கையறவு உரைத்தல்* (தொல். 1215:2).

கலங்கு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

வருந்துதல். *மனைப்பட்டுக் கலங்கிச் சிதைந்தவழி* (தொல். 1061:12).

கலம்[1] *பெயர்*

முகத்தலளவையில் ஒன்று; 12 மரக்கால் கொண்டது; 96 படி - ஏறத்தாழ 90 லிட்டர் உடையது. *அத்து இடை வருஉம் கலம்என் அளவே* (தொல். 169).

கலம்[2] *பெயர்*

விற்பனை முதலியவற்றின் பத்திரம்; ஆவணம். *கருவியில் துணையில் கலத்தில் முதலில்* (தொல். 565:3).

கலி[1] *பெயர்*

பேரோசை. *கம்பலை சும்மை கலியே அழுங்கல்* (தொல். 833).

கலி[2] *பெயர்*

நால்வகைப் பாக்களுள் ஒன்று; *காண்க:*கலிப்பா. *கலியே பரிபாட்டு ஆஇரு பாவினும்* (தொல்.1003:3).

கலி[3]**-த்தல்** *செயப்படுபொருள் குன்றிய வினை*

செருக்கு அடைதல்; கருவம் கொள்ளுதல். *புள்இயல் கலிமா உடைமை யான* (தொல். 1144:4).

கலித்தளை *பெயர்*

எழு வகைத் தளைகளுள் ஒன்று; காய்ச்சீர்முன் நிரைஅசை வருவதால் நேரும் தளை. *எ-டு.:* வெண்கோட்டுக் களிறுகைக்கும். *கலித்தளை மருங்கிற் கடியவும் பெறாஅ* (தொல். 1285).

கலிவெண்பாட்டு *பெயர்*

ஒரே பொருண்மை பற்றி வெண்பா நடையில் பல அடிகளைப் பெற்றுவரும் பா; கலி வெண்பா. *கலிவெண்பாட்டே கைக்கிளைச் செய்யுள்... முடிபொருள் அல்லாது அடிஅளவு இலவே* (தொல். 1419:1-4).

கலுழ்-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

தடுமாறுதல். *நோய்மிகப் பெருகித் தன் நெஞ்சு கலுழ்ந்தோளை* (தொல். 989:6).

கலை *பெயர்*

மான்வகை; கலைமான். *கலைஎன் காட்சி உழைக்கும் உரித்தே* (தொல். 1548).

கவர்-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

மாறுபடுதல். *பல்வேறு கவர்பொருள் நாட்டத் தானும்* (தொல். 1064:6).

கவர்வு *பெயர்*

விருப்பம் *கவர்வு விருப்பு ஆகும்* (தொல் 846).

கவவு[1] *பெயர்*

அணைப்பு; தழுவல். *கவவொடு மயங்கிய காலை யான* (தொல். 1123:3).

கவவு[2]**-தல்** *செயப்படுபொருள் குன்றிய வினை*

இடம் ஆகுதல். *கழூஉவிளங்கு ஆரம் கவைஇய மார்பே* (புறநா.19:18); *கவவு அகத்திடுமே* (தொல்.841).

கவிழ்-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

இறத்தல், சாதல். *வாள்வாய்த்துக் கவிழ்தல் என்று* (தொல். 1010:15).

கவின் *பெயர்*

அழகு. *யாணுக் கவின் ஆம்* (தொல். 865).

கழங்கு *பெயர்*

பூசாரி ஆகிய வேலன் கழற்காய்களை வைத்துக்கொண்டு சொல்கின்ற குறி. *கட்டினும் கழங்கினும் வெறிஎன இருவரும்* (தொல். 1065:3).

கழல் *பெயர்*

வீரர்களால் வீரத்திற்கு அடையாளமாகத் தம் காலில் அணியப்படும் அணிகலன் ; வீரக்கழல். *வில்லும் வேலும் கழலும் கண்ணியும்* (தொல். 1586:1).

கழறு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. கூறுதல்; சொல்லுதல். *முட்டுவயிற் கழறல்* (தொல். 1220:1).

2. தவறு நேர்ந்தபோது இடித்துக் கூறுதல்; கண்டித்துச் சொல்லல். *தாய்போல் கழறித் தழீஇக் கோடல்* (தொல். 1123:1).

கழனிலை *பெயர்*

வெட்சித் திணையின் துறைகளுள் ஒன்று; போர்க்களத்தில் எந்த நிலையிலும் புறமுதுகிடாத வீரத்தைச் சிறப்பித்து வழங்கப்பெறும் வீரக் கழலைப் புகழ்தல். *ஓடாக் கழல்நிலை உளப்பட* (தொல். 1010:7).

கழி-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. மிகுதல்; அதிகம் ஆதல் *கழிபெரும் சிறப்பின் துறைபதின் மூன்றே* (தொல். 1013:13)

2. காலம் கடத்தல் *இரங்கல் கழிந்த பொருட்டும் ஆகும்* (தொல். 843:2).

3. இறத்தல்; சாதல். *கழிந்தோர் தேஎத்துக் கழிபடர் உறீஇ* (தொல். 1029:26).

கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமை *பெயர்*

காஞ்சித் திணையின் துறைகளுள் ஒன்று; அறிஞர்கள் இளைஞர்களுக்குத் தம் பட்டறிவால் கண்ட உண்மைகளைச் சொல்லுதல்; முதுகாஞ்சி. *கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும்* (தொல். 1029:2).

கழிவு[1] *பெயர்*

அழிவு. *அறக்கழிவு உடையன பொருட்பயன் வரினே* (தொல். 1167:1).

கழிவு[2] *பெயர்*

இறந்த காலம் *கழிவினும் நிகழ்வினும் எதிர்வினும் வழிகொள* (தொல். 1103:1).

கழுதை *பெயர்*

பாரம் சுமக்கப் பயன்படுத்தப்படுவதும்; நீண்ட செவிகளையும் குட்டையான கால்களையும் உடையதுமாகிய ஒரு விலங்கு. *ஒட்டகம் குதிரை கழுதை மரை இவை* (தொல். 1555:1).

கழும் *பெயர்*

மயக்கம் *கழும்என் கிளவி மயக்கம் செய்யும்* (தொல். 835).

கள் *இடை*

பன்மை விகுதி. *எ-டு.:*ஆடுகள், மனிதர்கள். *கள்ளொடு சிவணும் அவ்வியல் பெயரே* (தொல்.656·1).

கள்வன் *பெயர்*

திருடன். *அணங்கே விலங்கே கள்வர்தம் இறைஎன* (தொல். 1205:1).

கள்ள *இடை*

உவம உருபுகளுள் ஒன்று. *எ-டு.*: கார் கள்ள உற்ற பேரிசை உதவி (இளம்.தொல்.உவமை.14). *கள்ள மதிப்ப வெல்ல வீழ* (தொல். 1238:2).

களம் *பெயர்*

1.காதலர்கள் களவில் சந்திக்கும் இடம். *களம் சுட்டுக் கிளவி கிழவியது ஆகும்*(தொல்.1070:2).

2.கட்டு, கழங்கு, வெறியாட்டு ஆகியன நடைபெறும் இடம். *அவள்விலங் குறினும் களம்பெறக் காட்டினும்* (தொல். 1064:39).

களவழி *பெயர்*

வாகைத் திணையின் புறத்துறைகளுள் ஒன்று; ஏர்க்களத்தில் தானியங்களைக் குவிக்கும் ஏர்க்களவழி, போர்க்களத்தில் பகைவர்களைக் கொன்று குவிக்கும் போர்க்களவழி என இருவகை. *ஏரோர் களவழி அன்றிக் களவழித் தேரோர் தோற்றிய வென்றியும்* (தொல். 1026:3-4).

களவு[1] *பெயர்*

திருட்டு.*வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின் ஆதந்து ஓம்பல்* (தொல். 1007:1-2).

களவு[2] *பெயர்*

காதலர் இருவர் தாமே அன்பு கொண்டு பிறர் அறியாமல் காதலிக்கும் ஒழுக்கம். *அம்பலும் அலரும் களவுவெளிப் படுத்தலின்* (தொல். 1089:1).

களன்[1] *பெயர்*

இடம். *நனவே களனும் அகலமும் செய்யும்* (தொல். 860).

களன்[2] *பெயர்*

1. *காண்க*: களம். *பகல்புணர் களனே புறன்என மொழிப* (தொல். 1082:1).

2. அகப்பொருள் செய்யுள் உறுப்புகளுள் ஒன்று; கூற்று நிகழ்த்துவதற்கான சூழல். *கேட்போர் களனே காலவகை எனாஅ* (தொல். 1263:6).

களிறு *பெயர்*

1. யானை. *நடைநவில் புரவியும் களிறும் தேரும்* (தொல். 1574:2).

2. விலங்குகள் சிலவற்றிற்குரிய ஆண்பாற் பெயர். *ஏறும் ஏற்றையும் ஒருத்தலும் களிறும்* (தொல். 1504:1).

களிறெறிந்தோர் பாடு *பெயர்*

தும்பைத் திணையின் துறைகளுள் ஒன்று; யானையை எதிர்த்துப் போர் செய்யும் வீரன் ஒருவனின் பெருமையைக் கூறுவது. *களிறு எறிந்தோர் பாடும்* (தொல். 1022:9).

களை-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. நீக்குதல்; அகற்றுதல். *நின்றவை களையும் கருவி என்ப* (தொல். 1044:3).

2. ஆடை; அணிகலன் முதலியவற்றைக் கழற்றுதல். *கூழை விரித்தல் காதொன்று களைதல்* (தொல். 1211:1).

கற்பு[1] *பெயர்*

பயிலப்படுவது; கற்கப்படுவது. *செறலின் உவத்தலின் கற்பின் என்றா* (தொல். 557:4).

கற்பு[2] *பெயர்*

காதலர்கள் இருவரும் மணந்துகொண்டு வாழ்தல். *கற்பு எனப்படுவது கரணமொடு புணரக் கொளற்குஉரி மரபில் கிழவன் கிழத்தியைக் கொடைக்குஉரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே* (தொல். 1092).

கறுப்பு *பெயர்*

சினம்; கோபம். *கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள* (தொல். 856).

கன் *பெயர்*

உலோகத்தொழில். *மின்னும் பின்னும் பன்னும் கன்னும் அந்நாற் சொல்லும் தொழிற்பெயர் இயல* (தொல். 346).

கன்று[1] *பெயர்*

விலங்கு மற்றும் தாவரங்களின் இளமைப் பெயர். *எ-டு.:* பசுக்கன்று, மாங்கன்று. *கன்றும் பிள்ளையும் மகவும் மறியும் என்று* (தொல். 1503:3).

கன்று[2]**-தல்** *செயப்படுபொருள் குன்றிய வினை*

முதிர்ச்சி அடைதல்; மிகுதல். *கன்றலும் செலவும் ஒன்றுமார் வினையே* (தொல். 572).

கனவின் அரற்றல் *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; பிரிவாற்றாத தலைவி தான் கண்ட கனவை உண்மையான நனவாகக் கருதி மயங்குதல். *காதல் கைம்மிகக் கனவின் அரற்றலும்* (தொல். 1065:6).

கனவு *பெயர்*

தூங்கும்பொழுது மனத்தில் தோன்றும் உருவங்கள், நிகழ்ச்சிகள், உணர்வுகள் முதலியன; கனா; சொப்பனம். *காதல் கைம்மிகக் கனவின் அரற்றலும்* (தொல். 1065:6).

கா

கா[1] *பெயர்*

க் என்னும் மெய்யின்மேல் ஆ என்னும் உயிர் ஏறுவதால் பிறக்கும் உயிர்மெய் நெட்டெழுத்து.

கா[2] *பெயர்*

1. நூறு பலம் கொண்ட நிறையளவு; ஏறத்தாழ 3.5 கிலோ கிராம் எடை. *பனைஎன் அளவும் காஎன் நிறையும்* (தொல். 170:1).
2. சோலை; பொழில்; பூங்கா. *யாறும் குளனும் காவும் ஆடி* (தொல். 1141:1).

கா[3]**-த்தல்** *செயப்படுபொருள் குன்றா வினை*

1. வெளியே எங்கும் செல்லவிடாமல் வீட்டிற்குள்ளேயே இருக்கச் செய்தல்; இற்செறித்தல். *தமர்தற்காத்த காரண மருங்கினும்* (தொல். 1061:26)
2. தடுத்தல்; ஒரு செயலை நடக்கவிடாமல் செய்தல். *நீத்த கிழவனை நிகழுமாறு படீஇயர் காத்த தன்வயின் கண்இன்று பெயர்ப்பினும்* (தொல். 1100:27-28).
3. பாதுகாத்தல்; பேணுதல்; காப்பாற்றுதல். *இறந்தது காத்தல்; எதிரது போற்றல்* (தொல். 1614:12).

கா[4] *இடை*

அசைநிலைகளுள் ஒன்று. அருகியவழக்கு. *எ-டு.:* காண்டிகா. *யாகா பிற பிறக்கு அரோபோமாது என வரூஉம் ஆஏழ் சொல்லும் அசைநிலைக் கிளவி* (தொல். 764).

காஞ்சி *பெயர்*

நிலையாமையை வலியுறுத்தும் புறத்திணை. *காஞ்சி தானே பெருந்திணைப் புறனே* (தொல்.1027).

காட்சி[1] *பெயர்*

1. வெட்சித் திணையின் துறைகளுள் ஒன்று; போரில் உயிர்நீத்த வீரனின் நினைவுச் சின்னமாக ஒரு நடுகல் நிறுவ ஏற்ற கல்லைக் காணுதல்.

2. நடுகல் நாட்டப்பெற்ற பிறகு வழிபட்டுத் தரிசித்தல்; கற்காண்டல். *காட்சி கல்கோள் நீர்ப்படை நடுதல் சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தல் என்று* (தொல்.1010:19-20).

காட்சி[2] *பெயர்*

1. எதிர்வரக் காணுகை; சந்திப்பு. *ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றி* (தொல். 1040:4).

2. அறிவு, மெய்யுணர்வு. *செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்றுஎன* (தொல். 1063:2).

3. பெயர்; நாமம். *கலைஎன் காட்சி உழைக்கும் உரித்தே* (தொல். 1548).

4. தோற்றம். *ஒத்த காட்சி யுத்திவகை விரிப்பின்* (தொல். 1614:1).

காட்டு[1]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. பார்க்கச்செய்தல்; காண்பித்தல். *சொல்வரைந்து அறியப் பிரித்தனர் காட்டல்* (தொல்.947:4).

2. தெரிவித்தல்; அறியச்செய்தல். *நாட்டியன் மரபின் நெஞ்சுகொளின் அல்லது காட்டல் ஆகாப் பொருள என்ப* (தொல். 1196:7).

3. விளக்குதல். *தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி* (தொல். 1425:4).

4. சுட்டிக் கூறுதல்; குறிப்பிட்டுக் காட்டுதல். *ஒழுக்கம் காட்டிய குறிப்பினும்* (தொல். 1096:17).

காடு *பெயர்*

1. மரம் செடிகொடிகள் இயற்கையாக மிக நெருங்கி வளர்ந்துள்ள பெரிய நிலப்பரப்பு; முல்லை நிலம்; கானகம்; வனம். *மாயோன் மேய காடுஉறை உலகமும்* (தொல். 952:1)

2. பிணங்களை எரிக்கவோ புதைக்கவோ செய்யும் இடம்; சுடுகாடு; இடுகாடு; ஈமக்காடு. *பலர்செலச் செல்லாக் காடுவாழ்த்தொடு* (தொல். 1029:35).

காடுவாழ்த்து *பெயர்*

காஞ்சித் திணையின் துறைகளுள் ஒன்று; நிலையாமை பெற்ற உலகில் என்றும் நிலைத்துள்ள ஈமக்காட்டை வாழ்த்துதல். *பலர்செலச் செல்லாக் காடு வாழ்த்தொடு* (தொல். 1029:35).

காண்[1](ணு)-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. பார்த்தல். *ஆற்றிடைக் கண்ட பொருளும் இறைச்சியும்* (தொல். 1120:3).

2. ஆய்வு செய்தல்; ஆராய்ந்து பார்த்தல். *நுண்ணிதின் உணர்ந்தோர் கண்டவாறே* (தொல். 7:2).

காண்[2](ணு)-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

இயற்றுதல்; செய்யப்பெறுதல். *முனைவன் கண்டது முதனூலாகும்* (தொல். 1598:2).

காதல் *பெயர்*

1. ஒருவர் மாட்டுச் செலுத்தப்படும் ஆழமான அன்பு; சிறந்த நேசம். *காதல் சிறப்பே செறல்சொல் விறல்சொல்* (தொல். 541:5)

2. ஓர் ஆணும் பெண்ணும் இன்ப விழைவுடன் தமக்குள் கொள்ளும் அன்பு. *காதல் கைம்மிகக் கனவின் அரற்றலும்* (தொல். 1065:6).

காதலன் *பெயர்*

கணவன். *காதலன் இழந்த தாபத நிலையும்* (தொல். 1029:29).

காதலி *பெயர்*

மனைவி. *காதலி இழந்த தபுதார நிலையும்* (தொல். 1029:28).

காது *பெயர்*

காதணி. *கூழை விரித்தல்; காதுஒன்று களைதல்* (தொல். 1211:1).

காதொன்று களைதல் *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; தலைவனை முதன்முதலிற் கண்டு காதல்கொண்ட தலைவி தன் காதணிகளுள் ஒன்றை விழச்செய்து அதனைத் தேடுகின்றாள்போல நிற்றல். *கூழை விரித்தல்; காதொன்று களைதல்* (தொல். 1211:1).

காந்தள் *பெயர்*

வெட்சித் திணையின் துறைகளுள் ஒன்று; புறப்பொருள் தொடர்பாக வேலனின் வெறியாட்டைக் கூறுதல். *வெறிஅறி சிறப்பின் வெவ்வாய் வேலன் வெறி ஆட்டு அயர்ந்த காந்தளும்* (தொல். 1010:1-2).

காப்பு *பெயர்*

1. பேணுகை; பத்திரம். *காப்பின் ஒப்பின் ஊர்தியில் இழையின்* (தொல். 557:1).
2. காவல்; இற்செறிப்பு *காப்பின் கடுமை கையற வரினும்* (தொல். 1064:30).

காமக்கிழத்தி *பெயர்*

வரைந்து கொள்ளப்படாத துணைவி; வைப்பாட்டி. *காமக் கிழத்தி நலம்பா ராட்டிய தீமையின் முடிக்கும் பொருளின் கண்ணும்* (தொல். 1097:36-37).

காமக்கிழவன் *பெயர்*

களவில் ஒழுகுகின்ற தலைவன். *காமக் கிழவன் உள்வழிப் படினும்* (தொல் 1063:4).

காமக்கூட்டம் *பெயர்*

தலைவனும் தலைவியும் முதன்முதலில் சந்தித்துக் காதல்கொண்டு கூடும் கூட்டம்; இயற்கைப் புணர்ச்சி. *காமக் கூட்டம் தனிமையில் பொலிதலின்* (தொல். 1069:1).

காமத்திணை *பெயர்*

களவொழுக்கம். *காமத்திணையின் கண்நின்று வரூஉம்* (தொல். 1058:1).

காமம் *பெயர்*

ஓர் ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் இன்பவிழைவோடு நேசித்தல்; காதல். *காமம் சொல்லா நாட்டம் இன்மையின்* (தொல். 1059.1).

காமப்புணர்ச்சி *பெயர்*

காண்க: காமக்கூட்டம். *காமப் புணர்ச்சியும் இடந்தலைப் பாடும்* (தொல். 1445:1).

காமம்நீத்த பால் *பெயர்*

வாகைத் திணையின் துறைகளுள் ஒன்று; ஆசையைத் துறத்தலின் அருமைபெருமைகளைக் கூறுதல். *காமம்நீத்த பாலினானும்* (தொல். 1026:23).

காமர் *பெயர்*

அழகு. *கயந்தலை தோன்றிய காமர் நெய்யணி* (தொல். 1097:8).

காய்[1] *பெயர்*

பழுப்பதற்கு முந்தைய நிலையில் உள்ள தாவரப்பயன். *காயே பழமே தோலே செதிளே* (தொல். 1592:1).

காய்[2]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

வெறுத்தல். *காய்தலும் உவத்தலும் பிரித்தலும் பெட்டலும்* (தொல். 1097:40).

காய்ப்ப *இடை*

உவம உருபுகளுள் ஒன்று. *போல மறுப்ப ஒப்பக் காய்ப்ப* (தொல். 1240:1).

காய்வு *பெயர்*

வெறுப்பு. *தாய்போல் கழறித் தழீஇய மனைவியைக் காய்வுஇன்று அவன்வயிற் பொருத்தற்கண்ணும்* (தொல். 1101:8).

காயம் *பெயர்*

வானம்; ஆகாயம். *விண்என வரூஉம் காயப் பெயர்வயின்* (தொல். 306:1).

கார் *பெயர்*

ஓர் ஆண்டின் ஆறு பருவங்களுள் ஒன்று; ஆவணி புரட்டாசி மாதங்கள் அடங்கிய மழைக்காலம். *காரும் மாலையும் முல்லை* (தொல். 953).

காரணம் *பெயர்*

1. ஒரு செயல் நிகழ்வதற்கான ஏது. *ஆக்கம் தானே காரண முதற்றே* (தொல். 505).
2. பயனைத் தருகின்ற கருவி (நச்சர்.) *நோக்குதற் காரணம் நோக்கு எனப்படுமே* (தொல்.1364:2).

காரம் *இடை*

எழுத்துச் சாரியைகளுள் ஒன்று. *எ-டு.:* ஏகாரம். *காரமும் கரமும் கானொடு சிவணி நேரத் தோன்றும் எழுத்தின் சாரியை* (தொல். 135).

காரை *இடை*

எழுத்துச் சாரியைகளுள் ஒன்று. *ஔகாரையும் அற்றே* (தொல். 80:1).

கால் *இடை*

1. காலப்பொருளில் வரும்போது வினையெச்சம் போலச் செயல்படும் ஒரு சொல். *எ-டு.:* பெற்றக்கால் என்னாம். *பின்முன் கால்கடை வழிஇடத்து என்னும் அன்ன மரபில் காலம் கண்ணிய என்ன கிளவியும் அவற்றியல் பினவே* (தொல். 714).
2. இடவேற்றுமையாகிய ஏழாம் வேற்றுமையின் சொல்லுருபு. *கண்கால் புறம்அகம் உள்உழை கீழ்மேல்* (தொல். 567:1).

காலக் கிளவி *பெயர்*

வினைச்சொல். *காலக் கிளவி உயர்திணை மருங்கின்* (தொல். 701:3).

காலம்[1] *பெயர்*

1. நேரம்; வேளை; சமயம். *வினைசெய் இடத்தின் நிலத்தின் காலத்தின்* (தொல். 566:3).

2. பருவம். *எ-டு.:* கோடைக்காலம். *பனிஎன வரூஉம் கால வேற்றுமைக்கு* (தொல். 242:1).

3. காலக் கடவுள். *காலம் உலகம் உயிரே உடம்பே* (தொல். 542:1)

காலம்[2] *பெயர்*

ஒரு செயலின் நிகழ்நேரத்தை உணர்த்தும் இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் மூன்று வகை நேரம். *இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா அம்முக் காலமும் குறிப்பொடும் கொள்ளும்* (தொல். 687·1-2).

காலை[1] *பெயர்*

நேரம்; பொழுது. *இனிஅணி என்னும் காலையும் இடனும்* (தொல்.237:1).

காலை[2] *இடை*

கால் என்பதன் திரிபாகக் கொள்ளப்படுவதும் வினையெச்ச விகுதிபோலக் கருதப்படுவதுமாகிய ஒரு சொல். *அப்பண் பினவே நுவலுங் காலை* (தொல் 735:9).

காவல் *பெயர்*

தமக்குப் பிறர் செய்யும் தீமைகளைப் பொறுத்துக் கொள்ளும் பொறுமை. *பிழைத்தோர்த் தாங்கும் காவலானும்* (தொல்.1026:20).

காவலர் *பெயர்*

பாதுகாப்பவர்; வாயிற் காவலர். *சேய்வரல் வருத்தம் வீட வாயில் காவலர்க்கு உரைத்த கடைநிலை யானும்* (தொல்.1039:3-4).

காழ் *பெயர்*

1. விதை. *சார்என் கிளவி காழ்வயின் வலிக்கும்* (தொல்.365).

2. அடிமரம், கிளை முதலியவற்றின் உள்ளீடு; மரவயிரம். *அகக்கா ழனவே மரம்என மொழிப* (தொல்.1589).

காறும் *இடை*

வரையினும். *குறளடி முதலா அளவடி காறும்* (தொல்.1317:1).

கான் *இடை*

எழுத்துச் சாரியைகளுள் ஒன்று. *எ-டு.:* ஃகான். *காரமும் கரமும் கானொடு சிவணி நேரத் தோன்றும் எழுத்தின் சாரியை* (தொல்.135).

கானல் *பெயர்*

கடற்கரையில் அமைந்துள்ள மலர்ச்சோலை. *கடலே கானல் விலங்கே மரனே* (தொல்.1459:2).

கி

கி *பெயர்*

க் என்னும் மெய்யின்மேல் இ என்னும் உயிர் சேரத் தோன்றும் உயிர்மெய்க் குறில்.

கிட-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. படுத்துக்கொள்ளுதல். *உயங்குவள் கிடந்த கிழத்தியைக் குறுகி* (தொல்.1096:32).

2. அமைந்திருத்தல். *அகன்றுபொருள் கிடப்பினும் அணுகிய நிலையினும்* (தொல்.1469:1).

கிழக்கிடு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

தாழ்தல், நிலையிலிருந்து இறங்குதல்; இழிதல். *கிழக்கிடு பொருளோடு ஐந்தும் ஆகும்* (*தொல்*.1229).

கிழத்தி *பெயர்*

அகப்பொருட் செய்யுளில் இடம்பெறும் தலைவி. (இவளை ஊர், மரபு, பெயர் முதலியவற்றால் சுட்டிக் கூறுதல் தமிழ் இலக்கிய வழக்கு அன்று). *ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப* (*தொல்*.1042:3).

கிழமை *பெயர்*

1. இயல்பு; பண்பு. *வழிபடு கிழமை அவட்குஇய லான* (*தொல்*.1110:3).
2. உரிமை. *அப்பெயர்க் கிழமை மயிற்கும் உரித்தே* (*தொல்*.1559:2).

கிழவது *பெயர்*

உரியது; உரிமை உடையது. *கிழவோன் செப்பல் கிழவது என்ப* (*தொல்*.1097:43).

கிழவன்[1] *பெயர்*

உரிமையாளன். *ஆயர் வேட்டுவர் ஆடுஉத் திணைப்பெயர் ஆவயின் வரூஉங் கிழவரும் உளரே* (*தொல்* 970:2).

கிழவன்[2] *பெயர்*

அகப்பொருட் செய்யுளில் இடம் பெறும் தலைவன். (இவனை ஊர், மரபு, பெயர் முதலியவற்றால் சுட்டிக் கூறுதல் தமிழ் இலக்கிய வழக்கு அன்று). *ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப* (*தொல்*.1042:3).

கிழவி *பெயர்*

காண்க: கிழத்தி. *கிழவி சொல்லின் அவள் அறி கிளவி* (*தொல்*.1250).

கிழவோள் *பெயர்*

காண்க: கிழத்தி. *கிழவோள் பிறள்குணம் இவைஎனக் கூறி* (*தொல்*.1183:1).

கிழவோன் *பெயர்*

காண்க: கிழவன். *உரிமை கொடுத்த கிழவோன் பாங்கில்* (*தொல்*.1097:3).

கிழி-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

உடம்பில் ஏற்பட்டுள்ள புண்ணைப் பெரிதாகக் கீறுதல். *புண்கிழித்து முடியும் மறத்தி னானும்* (*தொல்*.1029:4).

கிள்ளை *பெயர்*

கிளி. *செவ்வாய்க் கிள்ளையைத் தத்தை என்றலும்* (*தொல்*.1571:3).

கிள-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

கூறுதல்; சொல்லுதல். *ஈதா கொடுஎனக் கிளக்கும் மூன்றும்* (*தொல்*.928:1).

கிளப்பு *பெயர்*

கூற்று; சொல்; உரை. *கிழத்தியைச் சுட்டாக் கிளப்புப் பயன்இலவே* (*தொல்*.1457:2).

கிளவி *பெயர்*

1. சொல்; வார்த்தை. *இராஎன் கிளவிக்கு அகரம் இல்லை* (*தொல்*.228).

2. சொல்லால் உணர்த்தப்படும் பொருள். *பால்மயக்குஉற்ற ஐயக்கிளவி* (தொல்.507:1).

3. அகப்பொருட் செய்யுள் உறுப்புகளுள் ஒன்று; இன்னாரால் சொல்லப்படுவது என்பது; கூற்று. *களவினில் கிளவிக்கு உரியர் என்ப* (தொல்.1448:4).

கிளை[1] *பெயர்*

1. பகுப்பு; பிரிவு; ஒரு பொருளின் பகுதி. *பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே* (தொல்.1530:2).

2. எழுத்துகளுக்கு உரிய வல்லினம் முதலிய இனம். *வல்லொற்று இறுதி கிளைஒற்று ஆகும்* (தொல்.415:4).

கிளை[2] *பெயர்*

உறவு. *கிளைநுதற் பெயரும் பிரிப்பப் பிரியா* (தொல்.894:2).

கிளைநுதற்பெயர் *பெயர்*

உறவு முறையைக் கூறும் சொல். *எ-டு.*: எங்கை, நுந்தை. *கிளைநுதற் பெயரும் பிரிப்பப் பிரியா* (தொல்.894:2).

கிளையெழுத்து *பெயர்*

தமிழ் எழுத்துகளில் ஒரு வருக்க எழுத்திற்கு இனமான எழுத்து. *எ-டு.*. க-கா; கி-கீ; கெ-கே. *ஆஇரு தொடைக்கும் கிளைஎழுத்து உரிய* (தொல்.1354).

கீ

கீ *பெயர்*

க் என்னும் மெய்யின்மேல் ஈ என்னும் உயிர் ஒன்றுவதால் தோன்றும் உயிர்மெய் நெட்டெழுத்து.

கீழ் *பெயர்*

இடப்பொருள் வேற்றுமை ஆகிய ஏழன் சொல்உருபுகளுள் ஒன்று. *கண்கால் புறம்அகம் உள்உழை கீழ்மேல்* (தொல். 567:1).

கீழோர் *பெயர்*

வேளாளர். *கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டே* (தொல்.1094:2).

கு

கு[1] *பெயர்*

க் என்னும் மெய்யோடு உ என்னும் உயிர் சேர்வதால் உண்டாகும் உயிர்மெய்க்குறில்.

கு[2] *இடை*

1. நான்காம் வேற்றுமை உருபு. *நான்கு ஆகுவதே குஎனப் பெயரிய வேற்றுமைக் கிளவி* (தொல்.560:1-2).

2. தன்மை ஒருமை வினைமுற்று. *எ-டு.*: உண்கு. *கடதற என்னும் அந்நான்கு ஊர்ந்த குன்றிய லுகரமொடு. . தன்வினை உரைக்கும் தன்மைச் சொல்லே* (தொல். 690).

3. தொழிற்பெயர் விகுதி. *போக்கும் வரைவும் மனைவிகண் தோன்றும்* (தொல்.1174:6). *போ+கு.*

4. பண்புப்பெயர் விகுதி. *புலன்நன்கு உணர்ந்த புலமை யோரே* (தொல். 961:3) நல்+கு.

குகரம் *பெயர்*

கு என்னும் எழுத்து. *அதுஎன் உருபு கெடக் குகரம் வருமே* (தொல்.580:2).

குஞ்சரம் *பெயர்*

யானை. *குஞ்சரம் பெறுமே குழவிப் பெயர்க்கொடை* (தொல். 1521).

குட்டம் *பெயர்*

கலிப்பாவின் உறுப்புகளுள் ஒன்றாகிய தரவு. *குட்டம் எருத்தடி உடைத்தும் ஆகும்* (தொல்.1376).

குட்டி *பெயர்*

விலங்கின் இளமைப் பெயர். *கோடுவாழ் குரங்கும் குட்டி கூறுப* (தொல். 1515).

குடி *பெயர்*

குலம். *நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின் பெயரே* (தொல். 652:1).

குடிகோள் *பெயர்*

ஒரு குலத்தோர் அனைவருக்கும் செய்யப்படும் தீமை. *உறுப்பறை குடிகோள் அலைகொலை என்று* (தொல். 1207:1).

குடிநிலை *பெயர்*

வெட்சித் திணையின் துறைகளுள் ஒன்று; வீரர்களின் குலப்பெருமையைப் புகழ்ந்து கூறுதல். *மறங்கடை கூட்டிய குடிநிலை* (தொல். 1009:1).

குடிப்பெயர் *பெயர்*

குலத்தால் ஏற்பட்ட பெயர். *நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின் பெயரே* (தொல். 652:1).

குடிமை *பெயர்*

குலத்திற்கு உரிய ஒழுக்கம். *பிறப்பே குடிமை ஆண்மை யாண்டொடு* (தொல். 1222:2).

குடுமி *பெயர்*

(கோட்டை மதிலின்) உச்சி. *இகன்மதில் குடுமிகொண்ட மண்ணுமங்கலமும்* (தொல்.1018:10).

குடை *பெயர்*

1. மன்னர்களுக்கு உரிய அரச சின்னங்களுள் ஒன்று; வெண்கொற்றக்குடை. *படையும் குடையும் கொடியும் முரசும்* (தொல். 1574:1).

2. உழிஞைத் திணையின் துறைகளுள் ஒன்று; முற்றுகையிட்டுள்ள மன்னன் கோட்டைக்குள் புகுவதற்குக் குறிப்பிட்ட நாளில் தன் வெண்கொற்றக் குடையை முன்னே செல விடுத்தல்; குடை நாள்கோள். *குடையும் வாளும் நாள்கோள்* (தொல். 1018:1).

குடைநாள்கோள் *பெயர்*

காண்க: குடை. *குடைநாள்கோள், வாள்நாள்கோள் என வருவனவும்* (தொல். 1018:1 இளம்.).

குடைநிழன் மரபு *பெயர்*

பாடாண் திணையின் துறைகளுள் ஒன்று; அரசன் ஒருவனின் பெருமையை அவனுடைய வெண்கொற்றக் குடையின்மேல் ஏற்றிப் புகழ்தல்; குடை வாழ்த்து. *நடைமிகுந் தேத்திய குடைநிழன் மரபும்* (தொல். 1040:10).

குணம் *பெயர்*

ஒரு பொருளுக்கு அது தோன்றும்போதே உடன் தோன்றி அதனுடனேயே அழிந்து விடுவது; ஒன்றற்குச் சிறப்புத் தன்மை வாய்ந்து பிறவற்றினின்று அதைப் பிரித்துக் காட்டுவது; பண்பு; இயல்பு. *தலைமைக் குணச் சொலும் தத்தமக்கு உரியதுஓர்* (*தொல்*. 1578:1).

குதிரை *பெயர்*

ஏறிச்செலுத்தவும், வண்டியில் பூட்டவும், போரிலும் பயன்படுகிற, விரைவாக ஓடவல்லதும் பிடரி மயிர் உள்ளதுமாகிய பெரிய விலங்கு; பரி; அசுவம். *தேரும் யானையும் குதிரையும் பிறவும்* (*தொல்*. 1161:1).

குதிரைநிலை *பெயர்*

தும்பைத் திணையின் துறைகளுள் ஒன்று; குதிரைப் படையின் பெருமையைக் கூறுதல். *தானை யானை குதிரை என்ற நோனார் உட்கும் மூவகை நிலையும்* (*தொல்*. 1022:1-2).

குமிழ் *பெயர்*

மரவகை; பெருங்குமிழ். *குமிழ்என் கிளவி மரப்பெயர் ஆயின்* (*தொல்*. 387).

குயின் *பெயர்*

மேகம். *குயின்என் கிளவி இயற்கை ஆகும்* (*தொல்*. 336).

குரங்கு *பெயர்*

வெப்ப மண்டலத்தில் மரங்களில் கூடி வாழ்வதும், எப்பொழுதும் இயங்கிக் கொண்டே இருப்பதுமாகிய நீண்ட வால் உள்ள விலங்கு. *குரங்கும் முசுவும் ஊகமும் மந்தி* (*தொல்*.1570).

குரவை *பெயர்*

வீரர்கள் வெற்றிக்களிப்பால் ஆடும் ஆட்டம். *வென்ற கோமான் முன்தேர்க் குரவையும்* (*தொல்*. 1026:5).

குரு *பெயர்*

நிறம். *குருவும் கெழுவும் நிறன்ஆ குும்மே* (*தொல்*. 786).

குருளை *பெயர்*

விலங்கின் இளமைப் பெயர். *பார்ப்பும் பறழும் குட்டியும் குருளையும்* (*தொல்*. 1503:1)

குரை *இடை*

அசைநிலைகளுள் ஒன்று. *ஏயும் குரையும் இசைநிறை அசைநிலை* (*தொல்*. 757:1).

குலை *பெயர்*

தென்னை, பனை போன்ற காய்களின் கொத்து. (சில சமயங்களில் காந்தட் குலை என்பது போலப் பூங்கொத்துக்களும் குலை எனப்படும்). *ஈர்க்கே குலைஎன நேர்ந்தன பிறவும்* (*தொல்*. 1590:3).

குவி-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

உதடுகள் ஒன்றோடொன்று கூடுதல். *அப்பால் ஐந்தும் இதழ்குவிந்து இயலும்* (*தொல்*. 87:2).

குழ *பெயரடை*

இளமையான. *மழவுங் குழவும் இளமைப் பொருள* (*தொல்*. 795).

குழவி *பெயர்*

1. குழந்தை. *பெண்மை அரசே மகவே குழவி* (தொல். 541:3).
2. இளமைப்பெயர். *குஞ்சரம் பெறுமே குழவிப் பெயர்க்கொடை* (தொல். 1521).

குழு *பெயர்*

ஒரே துறையைச் சேர்ந்த பலபேர் இணைந்த கூட்டம். *எ-டு.* இசைக்குழு, விளையாட்டுக்குழு. *நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின் பெயரே* (தொல். 652:1).

குழை *பெயர்*

இலையின் தொடக்கப்பருவம்; தளிர். *இலையே தளிரே முறியே தோடே* (தொல். 1591:1).

குளன் *பெயர்*

நான்கு பக்கங்களிலும் இறங்குவதற்குப் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுத் தண்ணீர் உள்ளே வந்து நிரம்பவும்; வெளியேறவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நீர்நிலை; குளம். *யாறும் குளனும் காவும் ஆடி* (தொல். 1141:1)

குற்றம் *பெயர்*

1. ஒருவருடைய சொல் அல்லது செயலின் தவறு. *வழுவின் ஆகிய குற்றம் காட்டலும்* (தொல் 990:2)

2. ஒரு நூலில் ஏற்படக் கூடிய தவறு, குன்றக் கூறல் முதலிய பத்துவகைப்பட்ட நூற்குற்றங்கள். *ஈர்ஐங் குற்றமும் இன்றி* (தொல் 1602:3).

குற்றியலிகரம் *பெயர்*

இயல்பாகத் தனக்கு உரிய ஒரு மாத்திரை அளவிலிருந்து குறைந்து அரை மாத்திரையளவே ஒலிக்கும் 'இ' என்னும் எழுத்து. *ஒற்றெழுத்து இயற்றே குற்றிய லிகரம்* (தொல். 1269).

குற்றியலுகரம் *பெயர்*

இயல்பாகத் தனக்கு உரிய ஒரு மாத்திரையிலிருந்து குறைந்து அரை மாத்திரையளவே ஒலிக்கும் 'உ' என்னும் எழுத்து. *குற்றிய லுகரமும் முற்றிய லுகரமும்* (தொல். 1271:1).

குற்றெழுத்து *பெயர்*

காண்க: குறில். குற்றெழுத் திம்பரும் ஓர்எழுத்து மொழிக்கும் (தொல். 268:1).

குற்றொற்று *பெயர்*

குறிலையடுத்த மெய்யெழுத்து. *எ-டு.*.நெல்.*கூறிய குற்றொற்று இரட்டல் இல்லை* (தொல்.162:2).

குறளடி *பெயர்*

இரண்டு சீர்களால் ஆகிய செய்யுள்அடி; தொல்காப்பியச் செய்யுளியலின்படி ஒற்றெழுத்து நீங்க நான்குமுதல் ஆறு எழுத்துகள்வரை பயின்றுவரும் செய்யுள்அடி. *நால்எழுத்து ஆதி ஆக ஆறு எழுத்து ஏறிய நிலத்தே குறளடி என்ப* (தொல். 1297).

குறி[1] *பெயர்*

1. இலக்கணம். *உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலம்எனக் கொள்ளும் என்ப குறி அறிந் தோரே* (தொல். 997).

2. ஒருவர் அல்லது ஒன்றின் பெயர். *தான் குறி இடுதல்* (தொல் 1614:14).

குறி[2] *பெயர்*

1. களவில் காதலர்கள் இரவிலும் பகலிலும் சந்தித்துக் கொள்ள ஏற்படுத்திக் கொள்ளும் இடம். *குறிஎனப் படுவது இரவினும் பகலினும் அறியக் கிளந்த ஆற்றது என்ப* (தொல். 1080).

2. களவில் தலைவியைச் சந்திக்க வரும் தலைவன் தன் வருகையை அவளுக்கு உணர்த்துவதற்காகச் செய்யும் ஒலி; சங்கேதம். *குறியின் ஒப்புமை மருள்தற் கண்ணும்* (தொல்.1061:24)

குறி[3]-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. கருதுதல். *ஒருபொருள் குறித்த வேறுபெயர்க் கிளவி* (தொல் 526:1).

2. சுட்டுதல் *சுட்டுநிலை ஒழிய இனம்குறித் தன்றே* (தொல். 749:2).

3. குறிப்பிட்ட ஒரு பொருள் அல்லது கருத்தைப் பற்றுதல். *குறித்து எதிர் மொழிதல் அஃகித் தோன்றும்* (தொல் 1133).

குறிஞ்சி[1] *பெயர்*

மலையும் மலைசார்ந்த இடமும் அமைந்த நிலப்பகுதி *முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என* (தொல். 952.5)

குறிஞ்சி[2] *பெயர்*

அன்பின் ஐந்திணைகளுள் ஒன்று; புணர்தலையும், புணர்தல் நிமித்தத்தையும் தன் உரிப்பொருளாகவும், மலையையும் மலை சார்ந்த இடத்தையும் நிலமாகவும் கொண்டது *வெட்சி தானே குறிஞ்சியது புறனே* (தொல். 1006:3).

குறித்துவரு கிளவி *பெயர்*

இரு சொற்களின் புணர்ச்சியில் வருமொழி, இரண்டாவது சொல். *எ-டு*.. நாடகத் தமிழ் என்பதில் தமிழ். *நிறுத்த சொல்லே குறித்துவரு கிளவிஎன்று* (தொல். 108:6).

குறிப்பறி-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

மற்றவர்களின் உள்ளக் கருத்தை ஊகித்துத் தெரிந்து கொள்ளுதல் *அவன் குறிப்பறிதல் வேண்டியும்* (தொல். 1109:1)

குறிப்பு *பெயர்*

1. கருத்து. *அனைவகைக் குறிப்பில் தோன்றும் அதுவே* (தொல். 566:4).

2. ஒன்றை வெளிப்படையாகச் சொல்லாமல் மறைத்து உணர்த்துகை; மனத்தால் உணரப்படுவது. *நீரில் குறிப்பில் நிரம்பக் கூறி* (தொல். 1051:12)

3. சொல்லப்பட்ட சொற்களின் பொருள் அல்லாமல் சொல்பவனின் உள்ளக் கருத்து மறைந்து நிற்பது; குறிப்பெச்சம். *குறிப்பே இசையே ஆஈர் ஐந்தும் நெறிப்படத் தோன்றும் எஞ்சுபொருட் கிளவி* (தொல். 914:3-4); *குறிப்பெச்சமாவது சொற்படுபொருள் அன்றிச் சொல்லுவான் குறித்தபொருள் எஞ்சி நிற்பது* (தொல். 914. தெய்வச்.).

குறிப்புமொழி *பெயர்*

எழுத்து முடிந்த முறையாலும், சொல் தொடர்ந்த நெறியாலும் சொல்லின்கண் தோன்றும் பொருளாலும், நேரடியாகப் பொருளை அறிந்துகொள்ள முடியாதபடி, சொல்லுக்கு அப்பால் உள்ளதொரு பொருளை உடைய சொல். *எ-டு*.: அவன் ஓர் அகராதி *எழுத்தொடும் சொல்லொடும் புணரா தாகிப் பொருட்புறத் ததுவே குறிப்பு மொழியே* (தொல் 1438)

குறிப்புரை *பெயர்*

சொல்லின் நேர்பொருள் அல்லாமல் சொல்லுபவனின் கருத்தைப் பொருளாக உடைய மொழி. *எ-டு.:* தலை போகிற அவசரம். *அன்னவை எல்லாம் அவற்றவற்று இயலான் இன்ன என்னும் குறிப்புரை ஆகும்* (தொல். 905:2-3).

குறிப்புவினை *பெயர்*

காலத்தைக் காட்டாத வினைச்சொல். *குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றி* (தொல். 688:1).

குறிப்பொடு வரூஉம் காலக்கிளவி *பெயர்*

காண்க: குறிப்பு வினை. *அன்ன மரபில் குறிப்பொடு வரூஉம் காலக் கிளவி உயர்திணை மருங்கின்* (தொல். 701:2-3).

குறியது *பெயர்*

காண்க: குறில். *குறியதன் முன்னரும் ஓரெழுத்து மொழிக்கும்* (தொல். 227:1).

குறில் *பெயர்*

ஒரு மாத்திரை ஒலிக்கும் குற்றெழுத்து. *எ-டு.:* அ,க. *குறிலே நெடிலே குறில்இணை குறில்நெடில்* (தொல். 1265:1).

குறுக்கம் *பெயர்*

அளவு குறைந்த நிலை. *கூறிய நெடுமுதல் குறுக்கம் இன்றே* (தொல். 393:2).

குறுக்கு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

குறைத்தல். *நீட்டும்வழி நீட்டலும் குறுக்கும்வழிக் குறுக்கலும்* (தொல். 887:4).

குறுகு[1]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

அணுகுதல். *உயங்குவள் கிடந்த கிழத்தியைக் குறுகி* (தொல். 1096:32).

குறுகு[2]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

அளவில் சிறுமைப்படுதல்; குறைதல். *ஆஇரு மூன்றே உகரம் குறுகு இடன்* (தொல். 407:3).

குறுஞ்சீர் வண்ணம் *பெயர்*

செய்யுள்அடி ஒன்றில் குற்றெழுத்துகள் மிகுதியாகப் பயின்றுவருவதால் உண்டாகும் பா ஓசை. *எ-டு.:* கரிய பெரிய எருமை கடவு. *குறுஞ்சீர் வண்ணம் குற்றெழுத்துப் பயிலும்* (தொல்.1480).

குறுந்தொழில் *பெயர்*

எடுபிடி வேலை; குற்றேவல். *உழைக்குறுந் தொழிலும் காப்பும்* (தொல். 1121:1).

குறுமை[1] *பெயர்*

அளவிற் சிறுமை. *குறுமையும் நெடுமையும் அளவிற் கோடலில்* (தொல். 50:1).

குறுமை[2] *பெயர்*

உழிஞைத் திணையின் துறைகளுள் ஒன்று; நெருங்கிப் புரியும் போர், குற்றுழிஞை (இளம்.); தன் அரண் அழிந்தபோது வெளியேறிப் போர்புரியும் சிறுமை (நச்சர்.). *திறல்பட ஒருதான் மண்டிய குறுமையும்* (தொல். 1017:5-6).

குறுவெண்பாட்டு *பெயர்*

இரண்டு அடிகளில் ஏழுசீர்கள் வெண்டளை பெற்றுவரும் பா; குறள்வெண்பா. *குறுவெண் பாட்டிற்கு அளவுஏழ் சீரே* (தொல். 1417:2).

குறை[1] *பெயர்*

1. தேவையான அளவு இல்லாமை. *உரிச்சொல் எல்லாம் பொருட்குறை கூட்ட* (தொல்.880:3).

2. மனத்தில் ஏற்படும் நிறைவின்மை; மனக்குறை. *ஒருமைக் கேண்மையின் உறுகுறை தெளிந்தோன்* (தொல். 1061:18).

குறை[2]-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஒன்றன் அளவைச் சுருக்குதல்; சிறியது ஆக்குதல். *குறைச்சொற் கிளவி குறைக்கும்வழி அறிதல்* (தொல். 937).

குறை[3]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. அளவில் சுருங்குதல்; சிறியது ஆகுதல். *உண்டியில் குறைதல் உடம்புநனி சுருங்கல்* (தொல்.1219:4).

2. மனநிறைவின்மையால் வருந்துதல். *குறைந்துஅவட் படரினும்* (தொல். 1064:17).

3. ஒன்றை விட்டு நீங்குதல். *குறையாது ஆகும் இன்என் சாரியை* (தொல். 437:2).

குறைச்சொற்கிளவி *பெயர்*

ஒரு பகுதி குறைக்கப்பட்ட சொல். *எ-டு.*: தாமரை > மரை; என்னும் > எனும். *நெறிப்பட வாராக் குறைச்சொற் கிளவியும்* (தொல். 483:3).

குறையறவுணர்தல் *பெயர்*

களவில் மதியுடம்படுதலுக்கு உரிய துறைகளுள் ஒன்று; தலைவன் தலைவிமீது கொண்டுள்ள காதலை அவன் தன்னிடம் தெரிவித்தபிறகு தோழி அறிதல். *குறையற உணர்தல் முன்னுற உணர்தல்* (தொல். 1077:1).

குறையுறு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

மனக்குறையை வெளிப்படுத்துதல். *இரந்து குறையுற்ற கிழவனை* (தொல். 1186:1).

குறைவு *பெயர்*

தேவையான அளவு இல்லாமை; இருக்க வேண்டிய அளவைவிடக் குறைந்த இருப்பு. *முற்றுஅடி இன்றிக் குறைவுசீர்த்து ஆகியும்* (தொல். 1383:2).

குன்றக்கூறல் *பெயர்*

பத்துவகையான நூற்குற்றங்களுள் ஒன்று; ஒன்றற்கு இலக்கணம் கூறும்போது முழுமையாகச் சொல்லாமல் சில கூறுகளை விட்டுவிடுதல். *குன்றக் கூறல் மிகைபடக் கூறல்* (தொல். 1612:3).

குன்றல் *பெயர்*

இரு சொற்களின் புணர்ச்சியில் மெய்யெழுத்துக் கெடுதல். *எ-டு.*: மரம்+ நட்டான்>மரநட்டான். *மெய்பிறிது ஆதல் மிகுதல் குன்றல்என்று* (தொல். 110:2).

குன்றியலுகரம் *பெயர்*

காண்க: குற்றியலுகரம். *குன்றிய லுகரத்து இறுதி ஆகும்* (தொல். 492:2).

குன்று-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. எண்ணிக்கையில் குறைவுபடுதல். *குன்றலும் மிகுதலும் இல்என மொழிப* (தொல். 1304:2).

2. அளவில் குறைவுபடுதல். *வழக்கியல் மருங்கில் குன்றவ குன்றும்* (தொல். 599:2).

கூ

கூ *பெயர்*

க் என்னும் மெய்யின்மேல் ஊ என்னும் உயிரெழுத்து ஏறுவதால் தோன்றும் உயிர்மெய்நெடில்.

கூகை *பெயர்*

பிற பறவைகளை இரவில் வேட்டையாடி உண்ணுகின்ற பெரிய கண்களை உடைய பறவை; கோட்டான். *மரம்பயில் கூகையைக் கோட்டான் என்றலும்* (தொல். 1571:2).

கூட்டம் *பெயர்*

மெய்யுறு புணர்ச்சி, கலவி. *காமக் கூட்டம் தனிமையில் பொலிதலின்* (தொல். 1069:1).

கூட்டு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

பலவற்றை ஒன்று சேர்த்தல்; தொகுத்தல். *நாட்டிம் இரண்டும் அறிவுடம் படுத்தற்குக் கூட்டி உரைக்கும் குறிப்புரை ஆகும்* (தொல். 1045).

கூடா *பெயரெச்சம்*

ஆகாத *மயங்கல் கூடா வழக்குவழிப் பட்டன* (தொல். 534:2).

கூடு^{1}-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

புணர்தல். *நீடு நினைந்து இரங்கல், கூடுதல் உறுதல்* (தொல். 1051:3).

கூடு^{2}-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

ஒன்றாகச் சேர்தல்; குழுமுதல்; திரளுதல். *கூடிவரு வழக்கின் ஆடுஇயற் பெயரே* (தொல்.652:6).

கூத்தன் *பெயர்*

இசைப்பாடல்களின் பொருளைத் தன் அங்க அசைவுகளால் விளக்கித் தாளத்திற்கு ஏற்றபடி ஆடும் கலைஞன்; நாட்டியக்காரன்; கூத்தாடி. *அணிநிலை உரைத்தலும் கூத்தர் மேன* (தொல் 1118:5)

கூதிர் *பெயர்*

அறுவகைப் பருவங்களுள் ஒன்றாகிய குளிர்காலம்; ஐப்பசி, கார்த்திகை மாதங்களைக் கொண்டது. *கூதிர் யாமம் என்மனார் புலவர்* (தொல். 954:2).

கூர்ப்பு *பெயர்*

உள்ள ஒன்று நாளடைவில் சிறப்படையும் வளர்ச்சி; பரிணாமம் *கூர்ப்பும் கழிவும் உள்ளது சிறக்கும்* (தொல். 798).

கூர்மை *பெயர்*

எதிர்ப்பட்ட பொருளைத் துளைக்கின்ற அளவு அமைந்த தன்மை; கூர். *வையே கூர்மை* (தொல். 871).

கூழை *பெயர்*

1 படைவகுப்பில் பின்னணியில் உள்ள சேனை. *கூழை தாங்கிய பெருமையும்* (தொல். 1022:7).

2. பெண்களின் கூந்தல். *கூழை விரித்தல், காதுஒன்று களைதல்* (தொல். 1211:1)

கூழை தாங்கிய பெருமை *பெயர்*

தும்பைத் திணையின் துறைகளுள் ஒன்று; படைத்தலைவன் ஒருவன் எதிரியோடு மோதும்போது தலைவனின் நண்பன் அவன் உதவிக்கு வருதல்; கூழை தாங்கிய எருமை. (நச்சர்.). *ஒருவன் ஒருவனை உடைபடை புக்குக் கூழை தாங்கிய பெருமையும்* (தொல். 1022:6-7)

கூழை விரித்தல் *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; முதன் முதலாகக் காதல்வயப்பட்ட தலைவி தன் கூந்தலைத் தடவியும் குலைத்தும் தடுமாறுதல். *கூழை விரித்தல் காதொன்று களைதல்* (தொல். 1211:1).

கூற்றம் *பெயர்*

1. சொல்; பேச்சு; வார்த்தை *குறித்தோன் கூற்றம் தெரித்துமொழி கிளவி* (தொல். 540).
2. இயமன், கூற்றுவன். *மாற்ற அரும் கூற்றம் சாற்றிய பெருமையும்* (தொல். 1029:1)

கூற்றம்சாற்றிய பெருமை *பெயர்*

காஞ்சித் திணையின் துறைகளுள் ஒன்று, வாழ்க்கையின் நிலையாமையை அறிவுறுத்துவது; பெருங்காஞ்சி *மாற்றரும் கூற்றம் சாற்றிய பெருமையும்* (தொல். 1029:1)

கூற்று *பெயர்*

1. சொல், பேச்சு; வார்த்தை. *கூற்றிடை வைத்த குறிப்பினான* (தொல். 1424:6).
2. அகப்பொருட் செய்யுளின் உறுப்புகளுள் ஒன்று; இந்தப் பேச்சைப் பேசியவர் இவர் என உணர்த்தும் குறிப்பு *தாஇன்று உரிய தத்தம் கூற்றே* (தொல். 1190:2)
3. இயல்பு; பண்பு *தாஇல் கொள்கைத் தத்தம் கூற்றைப் பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப* (தொல் 1024).

கூற்றுவகை *பெயர்*

காண்க: கூற்று. *திணையே கைகோள் கூற்றுவகை எனாஅ* (தொல். 1263:5).

கூறியது கூறல் *பெயர்*

நூற்குற்றங்களுள் ஒன்று, இலக்கண நூல் ஒன்றில் ஏற்கெனவே கூறப்பட்டுவிட்ட செய்தி ஒன்றைத் தக்க காரணங்கள் இன்றி மறுபடியும் திரும்பச் சொல்லுதல். *சிதைவெனப் படுவது வசையற நாடின் கூறியது கூறல் மாறுகொளக் கூறல்* (தொல். 1612:2).

கூறிற்றென்றல் *பெயர்*

32 இலக்கிய உத்திகளுள் ஒன்று; ஒரு நூலில் முன்பே சொல்லப்பட்டுவிட்ட செய்தி ஒன்றை, வேறு ஓர் இடத்தில் மற்றொரு காரணத்திற்காக மறுபடியும் சொல்லும்பொழுது அச்செய்தி ஏற்கெனவே சொல்லப்பட்டுள்ளது எனச் சுட்டுதல். *மொழிவாம் என்றல்; கூறிற்று என்றல்* (தொல் 1614:13)

கூறு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

உரைத்தல்; சொல்லுதல்; கழறுதல்; விளம்புதல். *உண்டன போலக் கூறலும் மரபே* (தொல் 1162:2)

கூன் *பெயர்*

ஒரு செய்யுளின் தொடக்கத்திலோ இறுதியிலோ ஓர் அசை அல்லது சீர் தனியாக நிற்கும்பொழுது பெறும் பெயர். *சீர்கூன் ஆதல் நேரடிக்கு உரித்தே* (தொல். 1310).

கெ

கெ *பெயர்*

க் என்னும் மெய்யெழுத்தோடு எகர உயிர் சேரப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

கெடவரல் *பெயர்*

விளையாட்டு. *கெடவரல் பண்ணை ஆஇரண்டும் விளையாட்டு* (தொல். 803).

கெடு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. அழிதல்; ஒழிதல்; பாழ் ஆகுதல்; நிலையழிதல். *வந்த குற்றம் வழிகெட ஒழுகலும்* (*தொல்*.1096:21).

2. சொற்புணர்ச்சியில் மறைதல்; விடப்படுதல். *துவரக் கெட்டு வல்லெழுத்து மிகுமே* (*தொல்*.311:2).

3. சரியாகப் பணிபுரியாமை. *புடைகெடப் போகிய செலவே, புடைகெட ஒற்றின் ஆகிய வேயே* (*தொல்*. 1008:2-3).

கெடுதி *பெயர்*

தலைவியும் தோழியும் தனித்திருக்கும் இடத்திற்குத் தலைவன் வந்து தன் வேட்டையில் தப்பிய யானை அல்லது மான் இப்பக்கமாக வந்ததா என வினாவுதல்; கெடுதி வினாதல் துறை. *ஊரும் பேரும் கெடுதியும் பிறவும்* (*தொல்*. 1051:11).

கெழு *பெயர்*

நிறம். *குருவும் கெழுவும் நிறன்ஆகும்மே* (*தொல்*. 786).

கெழுதகை *பெயர்*

உரிமை. *முறைப்பெயர் மருங்கில்நல் கெழுதகைப் பொதுச்சொல்* (*தொல்*. 1169:1).

கெழுவு[1]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

பொருந்துதல்; சேர்தல்; கூடுதல். *போக்குடன் அறிந்தபின் தோழியொடு கெழீஇ* (*தொல்*.1065:8).

கெழுவு[2]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

மிகுதல்; நிறைதல். *பயங்கெழு துணைஅணைப் புல்லி* (*தொல்*. 1096:31).

கே

கே *பெயர்*

க் என்னும் மெய்யெழுத்தோடு ஏ என்னும் உயிரெழுத்து கூடுவதால் தோன்றும் உயிர்மெய் நெடில்.

கேட்போர் *பெயர்*

அகப்பொருள் செய்யுளுக்கு உரிய உறுப்புகளுள் ஒன்று; அகப்பொருள் மாந்தரின் பேச்சைச் செவிமடுப்பவர் யார் என்னும் குறிப்பு. *கேட்போர் களனே காலவகை எனாஅ* (*தொல்*. 1263:6).

கேட்போர்க்கின்னா யாப்பிற்றாதல் *பெயர்*

நூற்குற்றங்களுள் ஒன்று; செய்யுள் தனக்கே உரிய ஆற்றொழுக்கான இனிய ஓசையுடன் அமையாமல், அசைகளும் சீர்களும் பொருத்தமற்றுப் புணர்ந்திருப்பதால் செவிமடுப்போரின் காதுகளுக்குத் துன்பம் உண்டாக்குதல். *கேட்போர்க்கு இன்னா யாப்பிற்று ஆதல்* (*தொல்*.1612:5)

கேடு *பெயர்*

அழிவு. *அழுங்கல் இரக்கமும் கேடும் ஆகும்* (*தொல்*. 834:2).

கேண்மை *பெயர்*

நட்பு; உறவு. *ஒருமைக் கேண்மையின் உறுகுறை தெளிந்தோள்* (*தொல்*. 1061:18).

கேழல் *பெயர்*

கருநிறமும் குட்டையான கால்களும் அகன்ற மூக்கும் உடைய ஒரு விலங்கு, பன்றி. *கேழற்கண்ணும் கடிவரை இன்றே* (தொல். 1537).

கேள்[ட்]-த[ட]ல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஓசைஒலிகளைச் செவிப்புலனால் நுகர்தல்; காதால் ஓசை ஒலிகளை அறிதல். *மனையோர் கிளவி கேட்கும்வழி யதுவே* (தொல். 1081:2).

கேளிர் *பெயர்*

உறவினர். *கேளிர் ஒழுக்கத்துப் புகற்சிக் கண்ணும்* (தொல். 1096:56).

கை

கை *பெயர்*

க் என்னும் மெய்யும் ஐ என்னும் உயிரும் சேர்ந்து தோன்றிய உயிர்மெய் நெடில்.

கை *பெயர்*

மனித உடலின் ஓர் உறுப்பு; தோளிலிருந்து முழங்கை, அங்கை, விரல்கள் என அமைந்துள்ள பகுதி; தொழில் செய்வதற்குரிய ஐந்து கருவிகளுள் ஒன்று; கரம். *ஏனது சுவைப்பினும் நீகை தொட்டது* (தொல். 1096:12).

கைக்கிளை *பெயர்*

1. அகப்பொருளின் ஏழுதிணைகளுள் ஒன்று; ஒருதலைக் காதல். *கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய் முற்படக் கிளந்த எழுதிணை என்ப* (தொல். 948).

2. தலைவன் தலைவியரின் பெயர் சுட்டப்பெறுதல், கடவுளை மானிடப் பெண்டிர் நயத்தல் முதலியவற்றால் அகப்பொருள் கைக்கிளையின் இலக்கணத்துக்கு மாறுபட்டுவரும் ஒருதலைக் காதல். (இது புறப்பொருளின் பாடாண்திணையின் ஒரு துறையாகக் கருதப்படும்). *கைக்கிளை வகையோடு உளப்படத் தொகைஇ* (தொல்.1039:10).

கைக்கொள்(ளு)-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

வசப்படுத்துதல். *சுற்றுஅமர் ஒழிய வென்று கைக்கொண்டு* (தொல். 1018:3).

கைகோள் *பெயர்*

அகப்பொருளின் களவு, கற்பு என்னும் இரு பெரும் பிரிவுகள். *திணையே கைகோள் கூற்றுவகை எனாஅ* (தொல். 1263:3).

கைப்படு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

அகப்படுதல். *கைப்பட்டுக் கலங்கினும் நாணுமிக வரினும்* (தொல். 1061:5).

கைம்மிகு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

மிகுதி ஆதல்; அதிகரித்தல். *காதல் கைம்மிகக் கனவின் அரற்றலும்* (தொல். 1065:6).

கையறவு *பெயர்*

துன்பத்தின் மிகுதியால் ஒன்றும் செய்ய இயலாத நிலை. *கலங்கி மொழிதல், கையறவு உரைத்தல்* (தொல். 1215:2).

கையறவுரைத்தல் *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; காதலின் பிரிவை ஆற்றமாட்டாத தலைவி தன்னால் ஒன்றும் செய்ய இயலாத நிலையைக் கூறுதல். *கலங்கி மொழிதல் கையறவு உரைத்தல்* (தொல். 1215:2).

கையறு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

அளவு மீறுதல். *காப்பின் கடுமை கையற வரினும்* (தொல். 1064:30).

கையறுநிலை *பெயர்*

காஞ்சித் திணையின் துறைகளுள் ஒன்று; இயற்கையாக இறந்தவர்களைக் குறித்துப் புலம்புதல். *கழிந்தோர் தேயத்துக் கழிபடர் உறீஇ ஒழிந்தோர் புலம்பிய கையறு நிலையும்* (தொல் 1029:26-27)

கையாறு *பெயர்*

துன்பம் கையாறு இடுக்கண் பொச்சாப்புப் பொறாமை (தொல். 1209:8).

கையிகு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

எல்லை மீறுதல், வரம்பு கடத்தல் *சென்று கையிகந்து பெயர்த்து உள்ளிய வழியும்* (தொல்.1096:40).

கைவிடு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

நீக்கி விடுதல்; விலக்கி விடுதல். *காமத்தின் வலியும் கைவிடின் அச்சமும்* (தொல். 1096:41).

கொ

கொ *பெயர்*

க் என்னும் மெய்யெழுத்தின்மீது ஒகர உயிர் ஏறத் தோன்றும் உயிர்மெய்க் குறில்.

கொச்சகக் கலி *பெயர்*

பெரும்பாலும் தரவு, தாழிசை, முடுகியலடி, சொற்சீரடி, தனிச்சொல், சுரிதகம் என்னும் ஆறு உறுப்புகளைப் பெற்றுவரும் செய்யுள்; கொச்சகக் கலிப்பா. *பாநிலை வகையே கொச்சகக் கலிஎன* (தொல். 1414:4)

கொச்சகம் *பெயர்*

1. கலிப்பாவிலும் பரிபாடலிலும் பயின்றுவரும் ஓர் உறுப்பு; ஐந்து சீர்கள் அடுக்கி வருவனவும், ஆசிரியம் வெண்பா வஞ்சி கலியடிகள் வருவனவும், சொற்சீர் முடுகியல் அடிகளான் வருவனவும் ஆகும். *கொச்சகம் அராகம் சுரிதகம் எருத்தொடு* (தொல். 1381:1)

2. *காண்க:* கொச்சகக்கலி. *கொச்சகம் உறழொடு கலிநால் வகைத்தே* (தொல். 1390:2).

கொச்சகவொருபோகு *பெயர்*

கலிப்பாவின் ஒரு வகை; ஒத்தாழிசைக் கலிப்பாவின் உறுப்புகளுள் ஓரிரண்டு குறைந்து வரும் செய்யுள் *யாப்பினும் பொருளினும் வேற்றுமை உடையது கொச்சக ஒருபோகு ஆகும் என்ப* (தொல். 1409:6).

கொடா(அ)ர்ப் பழித்தல் *பெயர்*

பாடாண் திணையின் துறைகளுள் ஒன்று; பரிசில் வழங்காத உலோபிகளை இழித்துரைத்தல். *கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தலும்* (தொல் 1039:1).

கொடி *பெயர்*

மன்னர்கள் அல்லது நாடுகளின் அதிகாரபூர்வமான அடையாளங்களுள் ஒன்று ஆகிய பதாகை; சிறப்பாகக் கூறப்படும் பத்து அங்கங்களுள் (தசாங்கம்) ஒன்று. *படையும் குடையும் கொடியும் முரசும்* (தொல். 1574:1).

கொடிநிலை *பெயர்*

பாடாண் திணையின் துறைகளுள் ஒன்று; அரசர்களின் பதாகையைப் புகழ்தல் (இளம்.); கீழ்த்திசைக் கண்ணே நிலைபெற்றுத் தோன்றும் வெஞ்சுடர் மண்டிலம் (நச்சர்). *கொடிநிலை கந்தழி வள்ளி என்ற* (தொல். 1037:1).

கொடியோன் *பெயர்*

தீயவன். *கொடியோர் கொடுமை சுடும்என ஒடியாது* (தொல் 1097:25).

கொடு-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

வழங்குதல்; ஈதல்; தருதல். *உரிமை கொடுத்த கிழவோன் பாங்கின்* (தொல். 1097:3)

கொடுப்பவை கோடல் *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; காதல் வயப்பட்ட தலைவி தலைவனால் வழங்கப்படும் மலர்மாலை முதலியவற்றை மகிழ்ந்து ஏற்றுக்கொள்ளுதல். *கொடுப்பவை கோடல் உளப்படத் தொகைஇ* (தொல். 1213:3).

கொடுப்போர் ஏத்தல் *பெயர்*

பாடாண் திணையின் துறைகளுள் ஒன்று; பரிசில் வழங்கும் வள்ளல்களைப் புகழ்தல். *கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தலும்* (தொல் 1039:1).

கொடுமை *பெயர்*

1. பிறருக்குச் செய்யப்படும் தீமை; அன்பும் நீதியும் அற்ற தன்மை. *கொடியோர் கொடுமை சுடும்என ஒடியாது* (தொல். 1097·25)

2. முரட்டுத்தனம், கடுமை *கொடுமை ஒழுக்கம் கோடல் வேண்டி* (தொல். 1097:28).

3. கணவனின் புறத்தொழுக்கம்; மனைவிமீது அன்பற்ற நிலை. *மனைவி தலைத்தாட் கிழவோன் கொடுமை* (தொல். 1115.1).

கொடை *பெயர்*

1. ஒருவருடைய கல்வி, கலைத் திறமைகளுக்காகவோ, வீரம் முதலிய பண்புகளுக்காகவோ வறுமை கருதியோ கைம்மாறு கருதாது வழங்குதல்; ஈகை; வள்ளன்மை. *கல்வி தறுகண் புகழ்மை கொடைஎன* (தொல். 1206:1).

2. வெட்சித் திணையின் துறைகளுள் ஒன்று, பகைவர் நாட்டிலிருந்து கவர்ந்து வந்த பசுக்களைப் பலருக்கும் பகிர்ந்தளித்தல். *தந்துநிறை பாதீடு உண்டாட்டு கொடைஎன* (தொல். 1008:7).

3. வாகைத் திணையின் துறைகளுள் ஒன்று, அரிய பரிசில்களை இடையீடு இல்லாமல் வழங்கும் ஈகை. *இடைஇல் வண்புகழ்க் கொடையி னானும்* (தொல். 1026:19).

4. ஒரு பொருளுக்குப் பெயரீடு. *ஒன்றிய என்ப பிணவு என் பெயர்க்கொடை* (தொல். 1561:2).

கொடைமை[1] *பெயர்*

ஈகைத்தன்மை, வள்ளன்மை. *கொடுத்தல் எய்திய கொடைமை யானும்* (தொல். 1013:3).

கொடைமை[2] *பெயர்*

வஞ்சித் திணையின் துறைகளுள் ஒன்று; மன்னன் ஒருவனின் வள்ளல்தன்மையைக் கூறுதல்; கொடை வஞ்சி. *கொடைமையானும்* (தொல். 1013:3).

கொடையெதிர் கிளவி *பெயர்*

ஈகையை விரும்பி மேற்கொள்வதை உணர்த்தும் சொல்; நான்கன் உருபு ஏற்ற பெயர். *எ-டு.:* அவனுக்கு. *குத்தொக வரூஉம் கொடையெதிர் கிளவி* (தொல். 585:1).

கொண்டு தலைக்கழிதல் *பெயர்*

தலைவன் உடன்போக்காகத் தலைவியை அழைத்துச் செல்லுதல். *கொண்டுதலைக் கழிதலும் பிரிந்து அவண் இரங்கலும்* (தொல். 964:1).

கொண்டெடுத்து மொழியப்படுதல் *பெயர்*

அகப்பொருள் மாந்தரில் ஒருவரின் கூற்றாக வேறு ஒருவரால் எடுத்துச் சொல்லப்படுதல். *கொண்டெடுத்து மொழியப் படுதல் அல்லது கூற்று அவண் இன்மை யாப்புஉறத் தோன்றும்* (தொல். 1450:3-4)

கொல் *இடை*

1. இரக்கத்தை உணர்த்தும் ஓர் அசைநிலை. *என்உற்றனகொல் இவைஎனின் அல்லதை* (தொல். 1152:2)
2. ஐயத்தைக் காட்டும் ஓர் இடைச்சொல். *கொல்லே ஐயம்* (தொல். 753).

கொலை *பெயர்*

ஓர் உயிரை அதன் உடலிலிருந்து பிரிக்கும் செயல்; கொல்லும் தொழில். *உறுப்பறை குடிகோள் அலைகொலை என்ற வெறுப்ப வந்த வெகுளி நான்கே* (தொல். 1207).

கொழுப்பு *பெயர்*

மக்கள் அல்லது விலங்குகளின் உடலில் உள்ள நிணம்; ஊன். *செழுமை வளனும் கொழுப்பும் ஆகும்* (தொல். 836).

கொள்(ளு)-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. கைப்பற்றுதல், பறித்தல். *இகன்மதில்குடுமி கொண்ட மண்ணுமங்கலமும்* (தொல். 1018:10).
2. தனக்குள் உடைத்தாயிருத்தல்; தன்னுள் கொள்ளுதல். *நால்சீர் கொண்டது அடிஎனப் படுமே* (தொல். 1293).
3. மணந்து உரிமை ஆக்குதல்; திருமணம் செய்துகொள்ளுதல். *கொண்டான் தலையொடு முடிந்த நிலையொடு தொகைஇ* (தொல். 1029:16).
4. கையில் எடுத்தல், தூக்குதல். *இன்னிழைப் புதல்வனை வாயில் கொண்டு புகினும்* (தொல்.1122:3).
5. பொருந்துதல்; ஏற்றுக்கொள்ளுதல். *முன்னும் பின்னும் கொள்வழிக் கொளாஅல்* (தொல்.893:3).
6. சிந்தித்தல்; கருதுதல்; யோசித்தல். *வந்ததுகொண்டு வராதது முடித்தல்* (தொல். 1614:7).

கொள்கை *பெயர்*

1. இயல்பு; பண்பு. *விளிவுஇல் கொள்கை அழுகை நான்கே* (தொல். 1202:2).
2. ஒருவருடைய சிந்தை மற்றும் செயல்களின்மீது தன் தாக்கத்தைக் காட்டுகின்ற ஆழ்ந்த நம்பிக்கையின்பாற்பட்ட எண்ணம்; கோட்பாடு. *தாஇல் கொள்கைத் தத்தம் கூற்றை* (தொல்.1024:1).

கொள்ளார் *பெயர்*

பகைவர்; ஒருவரைத் தலைவராக ஏற்றுக் கொள்ளாதவர்களும் அவருடைய ஆணைக்கு அடங்காதவர்களும். *கொள்ளார் தேஎம் குறித்த கொற்றமும்* (தொல். 1017:1).

கொற்றம் *பெயர்*

1. வெற்றி. *கொள்ளார் தேஎம் குறித்த கொற்றமும்* (தொல். 1017:1).

2. வஞ்சித் திணையின் துறைகளுள் ஒன்று; பகைவர் பலருடன் நெருங்கிப் போரிட்டு அவர்களைக் கொன்ற வீரத்தைப் பாராட்டுதல். *அடுத்து ஊர்ந்து அட்ட கொற்றத்தானும்* (தொல். 1013:14).
3. உழிஞைத் திணையின் துறைகளுள் ஒன்று; மன்னன் ஒருவன் பகைநாட்டைக் கொள்ளக் கருதிய வெற்றி (இளம்.), பகைநாட்டைக் கைக்கொள்வதற்கு முன்னரே ஒரு மன்னன் அதைக் கைப்பற்றியதாகக் கருதி வேண்டியோர்க்கு வழங்குதலைக் கருதிய வெற்றி (நச்சர்.). *கொள்ளார் தேஎம் குறித்த கொற்றமும்* (தொல். 1017:1).

கொற்றவள்ளை *பெயர்*
வஞ்சித் திணையின் துறைகளுள் ஒன்று, போரில் தோல்வியுற்ற மன்னன் செலுத்தும் திறைப்பொருளைப் புகழ்தல் (இளம்.); பகைவனின் நாடு அழிவதற்கு இரங்கிக் கூறும் வள்ளைப் பாட்டு (நச்சர்.), இது துறைப்பொருள் கருதி வராமல் கடவுள் வாழ்த்தொடு சேர்ந்து வந்தால் பாடாண் திணை ஆகும். *குன்றாச் சிறப்பில் கொற்ற வள்ளையும்* (தொல். 1013:11) *கொற்ற வள்ளை ஓர் இடத்தான* (தொல். 1038).

கொற்றவை நிலை *பெயர்*
வெட்சித் திணையின் துறைகளுள் ஒன்று; நேர்த்திக்கடன் செலுத்தும்போது கொற்றவையின் பெருமையைச் சொல்லுதல். *கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே* (தொல். 1009:2).

கொன் *இடை*
அச்சம், பயன் இல்லாமை, காலம், பெரியது என்னும் நான்கு பொருள்களைச் சுட்டவரும் ஓர் இடைச்சொல். *அச்சம் பயம்இலி காலம்பெருமை என்று அப்பால் நான்கே கொன்னைச் சொல்லே* (தொல் 739).

கோ

கோ *பெயர்*
க் என்னும் மெய்யெழுத்தின்மீது ஓ என்னும் உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

கோட்டம் *பெயர்*
வளைவு. *தடஎன கிளவி கோட்டமும் செய்யும்* (தொல். 805:2)

கோட்டான் *பெயர்*
காண்க. கூகை. *மரம்பயில் கூகையைக் கோட்டான் என்றலும்* (தொல். 1571:2).

கோடல் *பெயர்*
1. கொள்ளுதல். *பல்பொருட்கு ஏற்பின் நல்லது கோடல்* (தொல். 1614:16).
2. கைப்பற்றிக்கொள்ளுதல். *முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்* (தொல். 1015:1).
3. பொறுத்துக்கொள்ளுதல். *கொடுமை ஒழுக்கம் கோடல் வேண்டி* (தொல். 1097:26).

கோடு *பெயர்*
1. யானைத்தந்தம். *வார்கோட்டு யானையும் பன்றியும் அன்ன* (தொல். 1539)
2. மரக்கிளை. *கோடுவாழ் குரங்கும் குட்டி கூறுப* (தொல். 1515)

கோமான் *பெயர்*
அரசன். *வென்ற கோமான் முன்தேர்க் குரவையும்* (தொல். 1026:5).

கோழி *பெயர்*

சேவலின் பெண்மைப்பெயர்; பறவை வகை. *கோழி கூகை ஆஇரண்டு அல்லவை* (தொல்.1558:1).

கோள் *பெயர்*

1. கொள்ளுகை; ஒன்றை ஏற்றுக்கொள்ளும் தன்மை. *அன்றி அனைத்தும் விளிகோள் இலவே* (தொல். 624:3).
2. கைப்பற்றிக் கொள்ளுகை. *ஊர்கொலை ஆகோள் பூசல் மாற்றே* (தொல். 1008:5).
3. எடுத்து வருகை; கொண்டு வருகை. *காட்சி கல்கோள் நீர்ப்படை நடுதல்* (தொல்.1010:19).
4. சொற்களின் பொருளை உணர்தல்; பொருள்கோள். *நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே* (தொல். 1224:3).
5. கோட்பாடு; கொள்கை. *தன்கோள் கூறல்* (தொல். 1614:10).

கௌ

கௌ *பெயர்*

க் என்னும் மெய்யின்மீது ஔகார உயிர் ஏறப்பிறக்கும் உயிர்மெய் நெடில்.

கௌவை *பெயர்*

அலர் (இளம்.); களவு வெளிப்பாடு (நச்சர்.). *கற்பொடு புணர்ந்த கௌவை உளப்பட* (தொல்.991:5).

ங

ங் *பெயர்*

தமிழ் நெடுங்கணக்கின் மெய்யொலிகளுள் இரண்டாவதும் அரைமாத்திரை அளவுள்ளதுமான ஒலி; அவ்வொலியை வரிவடிவில் சுட்டும் எழுத்து.

ங *பெயர்*

ங் என்னும் மெய்யும் அகரமும் சேர உண்டாகும் உயிர்மெய்; நாவின் அடிப்பகுதி அடிஅண்ணத்தைப் பொருந்த மூக்குவளியால் பிறக்கும் ஒரு மாத்திரை அளவுள்ள மெல்லின உயிர்மெய்க் குறில். *ககார ஙகாரம் முதல்நா அண்ணம்* (தொல். 89); *மெல்லெழுத்து ஆறும் பிறப்பின் ஆக்கம் சொல்லிய பள்ளி நிலையினவாயினும் மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும்* (தொல் 100); *மெல்லெழுத்து என்ப ஙஞண நமன* (தொல். 20).

ஙகரம் *பெயர்*

ங என்னும் எழுத்து. *முதலாகு எழுத்து ஙகரமொடு தோன்றும்* (தொல். 29:1).

ஙகாரம் *பெயர்*

ங என்னும் எழுத்து *ககார ஙகாரம் முதல்நா அண்ணம்* (தொல். 89)

ஙா

ஙா *பெயர்*

ங் என்னும் மெய்யின்மீது ஆகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ஙி

ஙி *பெயர்*

ங் என்னும் மெய்யின்மீது இகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

ஙீ

ஙீ *பெயர்*

ங் என்னும் மெய்யின்மீது ஈகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ஙு

ஙு *பெயர்*

ங் என்னும் மெய்யின்மீது உகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் குறில்

ஙூ

ஙூ *பெயர்*

ங் என்னும் மெய்யின்மீது ஊகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ஙெ

ஙெ *பெயர்*

ங் என்னும் மெய்யின்மீது எகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

ஙே

ஙே *பெயர்*

ங் என்னும் மெய்யின்மீது ஏகார உயிர் ஏறப் பிறக்கும் *உயிர்மெய்* நெடில்.

ஙை

ஙை *பெயர்*

ங் என்னும் மெய்யின்மீது ஐகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ஙொ

ஙொ *பெயர்*

ங் என்னும் மெய்யின்மீது ஒகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

ஙோ

ஙோ *பெயர்*

ங் என்னும் மெய்யின்மீது ஓகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ஙௌ

ஙௌ *பெயர்*

ங் என்னும் மெய்யின்மீது ஒளகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ச

ச் *பெயர்*

தமிழ் நெடுங்கணக்கின் மெய்யொலிகளுள் மூன்றாவதும் அரைமாத்திரை அளவுள்ளதுமான ஒலி; அவ்வொலியை வரிவடிவில் சுட்டும் எழுத்து.

ச *பெயர்*

ச் என்னும் மெய்யெழுத்தோடு அகர உயிர் சேரப் பிறக்கும் உயிர்மெய், நாக்கின் நடுப்பகுதி நடுஅண்ணத்தைப் பொருந்த நெஞ்சு வளியால் பிறக்கும் ஒருமாத்திரை அளவுள்ள வல்லின உயிர்மெய்க் குறில். *சகார ஞகாரம் இடைநா அண்ணம்* (தொல். 90); வல்லெழுத்தென்ப *கசட தபற* (தொல். 19).

சகரம் *பெயர்*

ச என்னும் எழுத்து. *சகரக் கிளவியும் அவற்றோர் அற்றே* (தொல். 62:1).

சகாரம் *பெயர்*

ச என்னும் எழுத்து. *சகார ஞகாரம் இடைநா அண்ணம்* (தொல். 90).

சா

சா[1] *பெயர்*

ச் என்னும் மெய்யின்மேல் ஆ என்னும் உயிரெழுத்து ஏறுவதால் உண்டாகும் உயிர்மெய்நெடில்.

சா[2]**-தல்** *செயப்படுபொருள் குன்றிய வினை*

இறத்தல்; மரணம் அடைதல். *சாவ என்னும் செயஎன் எச்சத்து* (தொல். 210:1).

சாஅய்-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

குறைதல்; அளவிற் சுருங்குதல்; கெடுதல். *எ-டு.*: வரையர மகளிரில் சாஅய் விழைதக (குறிஞ்சிப். 195). *ஒய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய் ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்* (தொல்.814).

சாக்காடு *பெயர்*

இறப்பு; சாவு *மறத்தல் மயக்கம் சாக்காடு என்று* (தொல். 1049:4).

சாதி *பெயர்*

இனம். *நீர்வாழ் சாதியுள் அறுபிறப்பு உரிய* (தொல். 1545).

சாயல் *பெயர்*

1. நுகர்வதற்குரிய நலம். *புகன்ற உள்ளமொடு புதுஓர் சாயற்கு* (தொல். 1097:11).
2. மென்மை *சாயல் மென்மை* (தொல். 809).

சார்[1] *பெயர்*

மரவகை. *சார் என் கிளவி காழ்வயின் வலிக்கும்* (தொல். 365).

சார்[2] *பெயர்*

இடம்; சார்பு. *மருட்பா ஏனை இருசார் அல்லது* (தொல். 1345:1).

சார்[3]**-தல்** *செயப்படுபொருள் குன்றா வினை*

1. நேர்தல்; சென்று அடைதல். *நன்மை தீமை அச்சம் சார்தல் என்று* (தொல். 986:3).
2. (தனித்து நிலைபெற இயலாமல் பிறிதொன்றுடன்) சேர்தல்; அண்டி நிற்றல். *சார்ந்துவரின் அல்லது தமக்கு இயல்புஇல என* (தொல். 101:1).

சார்[4] *இடை*

இடவேற்றுமை ஆகிய ஏழாம் வேற்றுமையின் சொல் உருபுகளுள் ஒன்று. *பின்சார் அயல்புடை தேவகை எனா* (தொல். 567:2).

சார்த்து-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

இணைத்தல்; பொருத்துதல்; சேர்த்தல். *பயிலாத வற்றைப் பயின்றவை சார்த்தி* (தொல். 782:6).

சார்பு *பெயர்*

1. பிறிதொன்றை ஒட்டி அமையும் தன்மை. *வேறுபடு வினையினும் இனத்தினும் சார்பினும்* (தொல்.537:3)
2. அணிமை, அண்மை, சமீபம். *ஊரது சார்பும் செல்லும் தேயமும்* (தொல். 990:3).

சாரியை *பெயர்*

வேறுவேறாக இருக்கின்ற இரண்டு சொற்கள் ஒன்றாக இணையும்பொருட்டு அவற்றைச் சார்ந்துவரும் இடைச்சொல். *அவற்றுவழி மருங்கில் சாரியை வருமே* (தொல் 119).

சால்(லு)-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

பொருந்துதல்; சேர்தல் *சீர்சால் வேந்தன் சிறப்புஎடுத்து உரைத்தலும்* (தொல். 1010:12).

சாற்று-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

சொல்லுதல்; கூறுதல்; பகர்தல். *மாற்றரும் கூற்றம் சாற்றிய பெருமையும்* (தொல் 1029:1).

சான்ற *பெயரடை*

சிறந்த. *தோன்றல் சான்ற மாற்றோர் மேன்மையும்* (தொல். 991:18).

சான்றோர் பக்கம் *பெயர்*

வாகைத் திணையின் துறைகளுள் ஒன்று; குற்றம் நீங்கிய சிறப்பினை உடைய தகுதி மிக்கவர்களின் பெருமையைக் கூறுதல். *துகள்தபு சிறப்பின் சான்றோர் பக்கமும்* (தொல். 1026:15).

சான்றோன் *பெயர்*

நற்பண்புகள் நிறையப்பெற்றவன். *அந்தணர் திறத்தும் சான்றோர் தேஎத்தும்* (தொல். 1026:15).

சி

சி *பெயர்*

ச் என்னும் மெய்யின்மேல் இ என்னும் உயிரெழுத்து ஏறுவதால் தோன்றும் உயிர்மெய்க் குறில்.

சித்திரவண்ணம் *பெயர்*

நெட்டெழுத்தும் குற்றெழுத்தும் மாறிமாறிப் பயில்வதால் தோன்றும் பாவோசை, தானதான தானதான என்னும் குழிப்பில் வரும் செய்யுளோசை *சித்திர வண்ணம் நெடியவும் குறியவும் நேர்ந்துடன் வருமே* (தொல். 1481)

சிதர்-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

பிரிதல், தனியாதல். *சொற்சிதர் மருங்கின் வழிவந்து விளங்காது* (தொல். 133:5).

சிதல் *பெயர்*

வெப்ப நாடுகளில் ஈரப்பதமான இடங்களில் பல்லாயிரக் கணக்கில் வாழ்ந்து புத்தகம், துணிகள், மரப்பொருள்கள் ஆகியவற்றைச் சாப்பிட்டுப் பாழாக்கும் வெண்மையான புழு; கறையான். *சிதலும் எறும்பும் மூவறி வினவே* (தொல் 1532:1).

சிதை[1]-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. கூறுபடுத்துதல்; நிலைகுலையச் செய்தல். *முற்றிய லுகரமும் மொழிசிதைத்துக் கொளாஅ* (தொல். 1270:1).
2. களைதல்; நீக்குதல். *மறுதலை சிதைத்துத் தன்துணிபு உரைத்தல்* (தொல். 1614:18).

சிதை[2]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. வருந்துதல். *புறம்செயச் சிதைதல்* (தொல். 1215:1).
2. திரிபு அடைதல்; நிலைமாறுதல். *சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்* (தொல். 886)

சிதைவு[1] *பெயர்*

அழிவு. *செங்கடு மொழியால் சிதைவு உடைத்தாயினும்* (தொல். 1064:26)

சிதைவு[2] *பெயர்*

ஒரு நூலில் நேரக் கூடாத குன்றக்கூறல், கூறியது கூறல் முதலிய நூற்குற்றம். *சொல்லப்பட்டன எல்லா மாண்பும் மறுதலை ஆயின் மற்றுஅது சிதைவே* (தொல். 1609).

சிதைவு பிறர்க்கின்மை *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; முதன்முதலாகக் காதல்வயப்படும் தலைவி தன் உள்ளத்தின் நிறையழிவை வெளியே தெரியாமல் மறைத்துக்கொள்ளுதல். *நகுநயம் மறைத்தல் சிதைவு பிறர்க்கு இன்மையொடு* (தொல். 1210:2).

சிந்தடி *பெயர்*

மூன்று சீர்களாலான செய்யுளடி. தொல்காப்பியச் செய்யுளியலின்படி ஒற்று நீக்கி ஏழு எழுத்து முதல் ஒன்பது எழுத்துவரை உள்ள செய்யுள்அடி. *ஏழ்எழுத்து என்ப சிந்தடிக்கு அளவே* (தொல்.1298:1).

சிந்து *பெயர்*

காண்க: சிந்தடி. *அளவும் சிந்தும் வெள்ளைக்கு உரிய* (தொல். 1318:1).

சிந்தை *பெயர்*

கவலை. *அழிவு தலைவந்த சிந்தைக் கண்ணும்* (தொல். 1061:32).

சில் *பெயரடை*

சிலவாகிய. *சில்மென் மொழியால் சீர்புனைந்து யாப்பின்* (தொல். 1494:2).

சில *பெயர்*

எண்ணிக்கையில் குறைவு; கொஞ்சம். *பல்ல பலசில என்னும் பெயரும்* (தொல். 655:1).

சிலை-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

ஒலி எழுப்புதல்; முழங்குதல். *துவைத்தலும் சிலைத்தலும் இயம்பலும் இரங்கலும் இசைப்பொருட் கிளவி என்மனார் புலவர்* (தொல். 842).

சிவண்(ணு)[1]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

நிகர்தல்; இணை ஆதல்; சமம் ஆதல். *உச்ச காரமொடு நகாரம் சிவணும்* (தொல். 79).

சிவண்(ணு)[2]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

பொருந்துதல்; சேர்தல். *வற்றொடு சிவணல் எச்சம் இன்றே* (தொல். 175:2).

சிவப்பு *பெயர்*

சினம்; வெகுளி; கோபம். *கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள* (தொல். 856).

சிற்றெண் *பெயர்*

கலிப்பாவின் ஓர் உறுப்பு; அம்போதரங்கத்தில் இடம்பெறும் முச்சீர், இருசீர் அடிகள். (நால்வகைப்பட்ட அம்போதரங்கங்களுள் இறுதியான ஒன்று மட்டுமே சிற்றெண் ஆகும் என்பாரும் உளர்). *எருத்தே கொச்சகம் அராகம் சிற்றெண்* (தொல். 1412:1).

சிற-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

மேம்படுதல்; உயர்வு அடைதல் *கூர்ப்பும் கழிவும் உள்ளது சிறக்கும்* (தொல். 798).

சிறகு *பெயர்*

பறவைகளுக்குப் பறக்க உதவும் உறுப்பு; இறகு; இறக்கை. *சிறகொடு சிவணும் மாயிருந் தூவி மயில் அலங்கடையே* (தொல். 1551:1-2).

சிறப்பு[1] *பெயர்*

1. அரசு மற்றும் பிற நிறுவனங்களால் ஒருவரின் பணிகளைப் பாராட்டி வழங்கப்பெறும் பட்டம்; விருது. *சிறப்பின் ஆகிய பெயர்நிலைக் கிளவி* (தொல்.525:1).

2. செல்வம்; வளமை. *துகள்தபு சிறப்பின் சான்றோர் பக்கம்* (தொல். 1026:15).

3. தலைமை. *துன்னரும் சிறப்பின் வஞ்சினத் தானும்* (தொல். 1029:9).

4. உயர்ச்சி; மேன்மை. *வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்* (தொல். 1037:2)

5. குறிப்பிட்ட ஒன்று அல்லது ஒருவருக்கே உரியது; பொது அல்லாதது, தனித்துவமானது. *யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப* (தொல். 1143:4).

6. கட்டாயமாகத் தேவைப்படுவது; இன்றியமையாதது *நட்பில் பகையில் காதலில் சிறப்பின் என்று* (தொல் 561:4).

சிறப்பு[2] *பெயர்*

1. உவமை தோன்றுவதற்குரிய நிலைக்களன்கள் நான்கில் ஒன்று. அஃதாவது ஒன்றற்கு அல்லது ஒருவற்கு இயல்பாக அமைந்ததாக அல்லாமல் குறிப்பிட்ட காரணம் பற்றி ஏற்பட்ட மேன்மை. *சிறப்பே நலனே காதல் வலியோடு அந்நாற் பண்பும் நிலைக்களம் என்ப* (தொல். 1228).

2. உள்ளுறை உவமங்கள் ஐந்தனுள் ஒன்று; ஒரு பொருளைச் சிறப்பித்துக் கூறுவதன்வழி மற்றோர் கருத்தை உணர்த்துவது. *உடனுறை உவமம் சுட்டுநகை சிறப்புஎனக் கெடல்அரு மரபின் உள்ளுறை ஐந்தே* (தொல். 1191).

சிறிது *பெயர்*

அளவிலும் எண்ணிக்கையிலும் குறைவு. *வறிது சிறிது ஆகும்* (தொல். 820).

சிறுமை *பெயர்*

1. நோய். *பையுளும் சிறுமையும் நோயின் பொருள* (தொல். 825).

2. குறைவு. *நன்மை தீமை சிறுமை பெருமை* (தொல். 563:3).

3. குறைந்த அளவு; கீழ் எல்லை; குறைந்த பட்சம். *தன்சீர் எழுத்தின் சிறுமை மூன்றே* (தொல். 1307)

சிறை *பெயர்*

1. ஆற்றின் குறுக்கே கட்டப்பெறும் அணை. *வருவிசைப் புனலைக் கற்சிறை போல* (தொல்.1013:7).

2. மதில்; வீட்டின் வெளிப்புறச்சுவர். *சிறைப்புறம் குறித்தன்று என்மனார் புலவர்* (தொல்.1129:2).

சின் *இடை*

அசைநிலைகளுள் ஒன்று. *இகுமும் சின்னும் ஏனை இடத்தொடு* (தொல். 760:2).

சின்மை *பெயர்*

சிலவாம் தன்மை; குறைந்த எண்ணிக்கை. *நாளது சின்மையும் இளமையது அருமையும்* (தொல் 991:7).

சின்னம் *பெயர்*

கவிப்பாவில் இடம்பெறும் தனிச்சொல். *எண்இடையிட்டுச் சின்னம் குன்றியும்* (தொல். 1409:3).

சின-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

கோபப்படுதல். *செருவகத்து இறைவன் வீழ்வுறச் சினைஇ* (தொல். 1022:14).

சினன் *பெயர்*

காண்க: சினம். *சினனே பேதைமை நிம்பிரி நல்குரவு* (தொல். 1194:1).

சினை *பெயர்*

1. (ஒரு முதற்பொருளின்) உறுப்பு. *அடைசினை முதல்என முறைமூன்றும் மயங்காமை* (தொல் 510:1).
2. சொல்லின் உறுப்பாகிய எழுத்து. *யாவென் சினைமிசை உரையசைக் கிளவிக்கு* (தொல்.34:2).
3. மரத்தின் கிளை. *சினையே குழையே பூவே அரும்பே* (தொல். 1591:2)

சினைநிலைக்கிளவி *பெயர்*

உறுப்பின் தன்மையைச் சுட்டும் சொல். *கண்ணும் தோளும் முலையும் பிறவும் பன்மை சுட்டிய சினைநிலைக் கிளவி* (தொல். 546:1-2)

சினைப்பெயர் *பெயர்*

ஓர் உறுப்பின் காரணமாக அதனை உடைய முதலுக்கு வரும் பெயர். *நான்கே சினைப்பெயர்* (தொல். 662:2)

சினைமுதற்பெயர் *பெயர்*

உறுப்பின் பெயரோடு தொடர்ந்து வரும் முதலின் பெயர். *நான்குஎன மொழிமனார் சினைமுதற் பெயரே* (தொல் 662:3).

சீ

சீ *பெயர்*

ச் என்னும் மெய்யெழுத்தோடு ஈகார உயிர் கூடுவதால் தோன்றும் உயிர்மெய் நெடில்.

சீர்[1] *பெயர்*

1. தலைமை; சிறப்பு. *சீர்சால் வேந்தன் சிறப்பு எடுத்து உரைத்தலும்* (தொல். 1010:12).
2. மிகுதி. *சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தல்* (தொல். 1010:20).

சீர்[2] *பெயர்*

செய்யுளின் உறுப்புகளுள் ஒன்று; அசைகளால் ஆகி அடியின் பகுதியாக அமைவது. *ஈர்அசை கொண்டும் மூவசை புணர்ந்தும் சீர்இயைந்து இற்றது சீர்எனப் படுமே* (தொல். 1273)

சீர்த்தி *பெயர்*

பெரும்புகழ். *சீர்த்தி மிகுபுகழ்* (தொல். 796).

சீர்மை *பெயர்*

சிறப்பு. *விழுமம் சீர்மையும் சிறப்பும் இடும்பையும்* (தொல். 837).

சு

சு *பெயர்*

ச் என்னும் மெய்யின்மேல் உ என்னும் உயிரெழுத்து ஏறுவதால் உண்டாகும் உயிர்மெய்க் குறில்.

சுட்டிக்கூறா உவமம் *பெயர்*

உவம உருபு இல்லாமல் வருகின்ற உவமை; எடுத்துக்காட்டுவமை (இளம்.); உவமானம் உவமேயம் ஆகிய இரண்டிற்கும் அமைந்த பொதுத் தன்மையைக் குறிப்பிட்டுக் கூறாத உவமை (பேரா.). (இதனைத் தொகை உவமை எனத் தண்டிஅலங்காரம் கூறும்). *சுட்டிக் கூறா உவமம் ஆயின் பொருள்எதிர் புணர்த்துப் புணர்ந்தன கொளலே* (தொல் 1231).

சுட்டு[1] *பெயர்*

1. சுட்டெழுத்து. *அஇ உஅம் மூன்றும் சுட்டு* (தொல். 31)
2. *காண்க*: சுட்டுப்பெயர்க்கிளவி. *வினையெஞ்சு கிளவியும் சுட்டும் அன்ன* (தொல். 237:2).

சுட்டு[2] *பெயர்*

உள்ளுறை வகைகள் ஐந்தனுள் ஒன்று; ஒரு பொருளைக் குறிப்பிட்டுக் கூற அதனால் வேறொரு கருத்து வெளிப்படுவது. *உடனுறை உவமம் சுட்டுநகை சிறப்புஎனக் கெடல்அரு மரபின் உள்ளுறை ஐந்தே* (தொல் 1191)

சுட்டு[3]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஒன்றை அல்லது ஒருவரைக் குறிப்பிட்டுக் காட்டுதல். *அளவும் நிறையும் எண்ணும் சுட்டி* (தொல். 165:2).

சுட்டுச்சினை *பெயர்*

காண்க: சுட்டு[1] *சுட்டுச் சினை நீடிய மென்தொடர் மொழியும்* (தொல். 428:1).

சுட்டுப்பெயர்க் கிளவி *பெயர்*

ஒன்றை அல்லது ஒருவரைக் குறிப்பிட்டுவரும் பெயர்ச்சொல். *எ-டு*.: அது, அவர். *சுட்டுப்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்* (தொல். 522:3).

சுட்டுமுதற்பெயர் *பெயர்*

அஇஉ என்னும் சுட்டெழுத்துகளை முதலாகப் பெற்ற பெயர்ச்சொல் *எ-டு*.: அவன். *சுட்டுமுதற் பெயரும் வினாவின் பெயரும்* (தொல். 635:1).

சுடு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

வருத்துதல்; துன்புறுத்துதல். *கொடியோர் கொடுமை சுடும்என ஒடியாது* (தொல். 1097:25).

சுண்ணம் *பெயர்*

பொருள்கோள்வகை நான்கனுள் ஒன்று; நாற்சீரடிகள் இரண்டினைக் கொண்ட செய்யுட் பகுதியில் உள்ள எட்டுச் சீர்களையும் பொருள் தொடர்புக்கு ஏற்ப இடம்மாற்றிப் பொருள் கொள்ளுதல் *சுண்ணம் தானே பட்டாங்கு அமைந்த ஈர்அடி எண்சீர் ஒட்டுவழி அறிந்து துணித்தனர் இயற்றல்* (தொல் 890)

சும்மை *பெயர்*

ஓசை; ஒலி; சத்தம். *கம்பலை சும்மை கலியே அழுங்கல்* (தொல். 833:1).

சுரம் *பெயர்*

பாலை நிலத்தில் அமைந்த நடத்தற்கு அரிய வழி. *இடைச்சுர மருங்கில் அவள்தமர் எய்தி* (தொல். 991:3).

சுரிதகம் *பெயர்*

கலிப்பா, பரிபாடல் ஆகிய இருவகைச் செய்யுள்களிலும் இடம்பெறும் இறுதி உறுப்பு; ஆசிரியப்பா அல்லது வெண்பாவாக அமையும். *கொச்சகம் அராகம் சுரிதகம் எருத்தொடு* (தொல். 1381:1).

சுருக்கம் *பெயர்*

அளவில் சிறியது ஆம் தன்மை; குறுமை. *நுண்மையும் சுருக்கமும் ஒளிஉடை மையும்* (தொல் 1436:1).

சுருங்கு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. அளவில் சிறியது ஆதல். *தரவில் சுருங்கித் தோன்றும் என்ப* (தொல். 1403).

2. குறிப்பிட்ட ஒன்றில் அடங்குதல்; உள்ளடங்குதல். *சொல்லிய வகையால் சுருங்க நாடி* (தொல்.1614:25).

சுவை[1] *பெயர்*

ஒரு பொருளை வாயிலிட்டு நாக்கின் துணையால் அறியப்படும் அதன் தன்மை; இனிப்பு, காரம், துவர்ப்பு முதலியனவாக அறுவகைப்படும் உருசி. *வண்ணம் வடிவே அளவே சுவையே* (தொல். 563:1).

சுவை[2]**-த்தல்** *செயப்படுபொருள் குன்றா வினை*

ஒரு பொருளின் இனிப்பு, கசப்பு முதலியவற்றை நாக்கினால் நுகர்தல்; உருசி பார்த்தல். *ஏனது சுவைப்பினும்* (தொல். 1096:12).

சுழற்சி *பெயர்*

மனத்தடுமாற்றம். *அலமரல் தெருமரல் ஆஇரண்டும் சுழற்சி* (தொல். 794).

சுற்றம் *பெயர்*

1. ஒருவருக்குத் தாய், தந்தை, மனைவி அல்லது கணவன் வழியாக அமையும் உறவினர்; தன்னைச் சார்ந்தோர். *விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்* (தொல். 1102:3).

2. (போரில் சூழ இருக்கின்ற) வீரர்கள். *இருபெரு வேந்தர் தாமும் சுற்றமும்* (தொல். 1022:12).

சுற்று-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஒன்றை அல்லது ஒருவரைச் சூழ்ந்துகொள்ளுதல். *மாய்ந்த மகனைச் சுற்றிய சுற்றம்* (தொல்.1029:19).

சுறவு *பெயர்*

கூர்மையான பற்களை உடைய வலிமை மிக்கதொரு கடல்மீன்; சுறா. *கடல்வாழ் சுறவும் ஏறு எனப்படுமே* (தொல். 1543).

சூ

சூ *பெயர்*

ச் என்னும் மெய்யோடு ஊகார உயிர் சேர்வதால் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

சூத்திரம் *பெயர்*

அளவில் சுருங்கித் தெளிவாகவும் நுட்பமாகவும் ஒரு செய்தியை மறுக்க முடியாத உறுதிப்பாட்டுடன் கூறும் பாவகை; இலக்கணங்களுக்குச் சிறப்புரிமை உடைய நூற்பா. *சூத்திரந் தானே ஆடி நிழலின் அறியத் தோன்றி நாடுதல் இன்றிப் பொருள்நனி விளங்க யாப்பினுள் தோன்ற யாத்து அமைப்பதுவே* (தொல். 1428:2-5).

சூதர் *பெயர்*

அரசனின் பள்ளியறைக்கு வெளியே நின்றுகொண்டு, காலையில், அவன் பெருமையைப் பாடித் துயில் எழுப்பும் பாடகர். *சூதர் ஏத்திய துயிலெடை நிலையும்* (தொல். 1040:2).

சூழ்-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

கருதுதல்; யோசித்தல்; ஆலோசனை செய்தல்; சிந்தித்தல். *சூழ்தலும் உசாத்துணை நிலைமையில் பொலிமே* (தொல். 1076).

சூழ்ச்சி *பெயர்*

சிந்தனை; ஆலோசனை *கைம்மிகல் நலிதல் சூழ்ச்சி வாழ்த்தல்* (தொல். 1209:4).

சூள் *பெயர்*

தனக்கு எவ்வளவு இடையூறுகள் நேர்ந்தாலும் ஒரு செயலை முடித்தே தீருவேன், சற்றும் தவற மாட்டேன் என உறுதி கூறும் வஞ்சினம்; ஆணை, சபதம். *சூள்வயின் திறத்தால் சோர்வுகண்டு அழியினும்* (தொல். 1100:15).

செ

செ *பெயர்*

ச் என்னும் மெய்மீது எகர உயிர் சேரப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

செங்கோல் *பெயர்*

நேர்மையான ஆட்சியைக் குறிக்கும் அரச சின்னங்களுள் ஒன்று. *தெரிவுகொள் செங்கோல் அரசர்க்கு உரிய* (தொல். 1574:4).

செஞ்சொல் *பெயர்*

எண்ணும்மை சேராத வார்த்தை. *எஞ்சுபொருட் கிளவி செஞ்சொல் ஆயின்* (தொல். 769:1).

செதிள் *பெயர்*

அடி மரத்திலும் கிளைகளிலும் உள்ள பட்டை; மரப்பட்டை. *காயே பழமே தோலே செதிளே* (தொல். 1592:1).

செந்தமிழ் *பெயர்*

செப்பமான தமிழ்மொழி *செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்* (தொல் 884:1).

செந்துறை வண்ணப் பகுதி *பெயர்*

பாடாண்வகையைச் சேர்ந்த இசைப்பாடல். ஒருவரை வரம்பு கடந்து புகழாமல் அவருடைய இயல்புகளை உள்ளபடி போற்றும் இசைப்பாடல். *பரவலும் புகழ்ச்சியும் கருதிய பாங்கினும் முன்னோர் கூறிய குறிப்பினும் செந்துறை வண்ணப் பகுதி வரைவுஇன்று ஆங்கே* (தொல்.1032:2-4).

செந்தூக்கு *பெயர்*

காண்க. ஆசிரியப்பா *வஞ்சித்தூக்கே செந்தூக்கு இயற்றே* (தொல். 1331).

செந்தொடை *பெயர்*

செய்யுள் ஒன்றில் எதுகை முதலிய எந்தத் தொடையும் அமையாத நிலை. *சொல்லிய தொடையொடு வேறுபட்டு இயலில் சொல்லியற் புலவர் செந்தொடை என்ப* (தொல். 1360).

செப்பு[1] *பெயர்*

மறுமொழி; விடை. *ஏவல் முடிபும் வினாவும் செப்பும்* (தொல். 1120:2).

செப்பு[2]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

கூறுதல்; சொல்லுதல்; பகர்தல். *வரைதல் வேண்டித் தோழி செப்பிய* (தொல். 1057:11).

செம் *பெயரடை*

1. திருந்தமான. *செம்கடு மொழியால் சிதைவு உடைத்து ஆயினும்* (தொல். 1064:26).
2. வெளிப்படையான *செம்பொருள் கரந்தது என இரு வகைத்தே* (தொல். 1384:2).

செம்பால் *பெயர்*

சரிபாதி. *செம்பால் வாரம் சிறுமைக்கு எல்லை* (தொல். 1411:2).

செம்பொருள் *பெயர்*

ஒரு சொல் அல்லது தொடரின் நேரான பொருள். *செம்பொருள் கரந்தது என இருவகைத்தே* (தொல். 1384:2).

செம்மல் *பெயர்*

1. சிறப்பு அடைதல்; பெருமை பெறுதல். *அருந்தொழில் முடித்த செம்மற் காலை* (தொல்.1096:53).
2. பெருமை பெற்றவன்; சிறப்பு அடைந்தவன். *நெடுந்தகை செம்மல் என்று இவை பிறவும்* (தொல். 1576:2).

செம்மை *பெயர்*

உள்ளத்தின் நேர்மை *செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்* (தொல். 1158:1).

செய்-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. ஒரு செயலைப் புரிதல்; இயற்றுதல். *செய்வினை மறைப்பினும் செலவினும் பயில்வினும்* (தொல். 1064:2).
2. ஒப்பனை செய்தல்; அலங்கரித்தல். *புறம்செயச் சிதைதல்* (தொல். 1215:1).

செய்கு *வினையெச்சம்*

வினையெச்ச வாய்பாடுகளுள் ஒன்று. *செய்குஎன் கிளவி வினையொடு முடியினும்* (தொல் 691:2).

செய்குறி *பெயர்*

காதலர்கள் களவில் தாம் சந்தித்துக்கொள்வதற்கு வாய்ப்பாக ஏற்படுத்திக்கொள்ளும் குறியீட்டு ஒலி; சங்கேத ஒலி. *உணர்ப்புவரை இறப்பினும் செய்குறி பிழைப்பினும்* (தொல். 1106:1).

செய்கை *பெயர்*

செயல்; காரியம் *சிறந்த செய்கை அவ்வழித் தோன்றி* (தொல். 1097:20).

செய்த *பெயரெச்சம்*

பெயரெச்ச வாய்பாடுகளுள் ஒன்று. *செய்த என்னும் பெயரெஞ்சு கிளவியும்* (தொல். 211:5).

செய்தது *பெயர்*

எழுவாய். *செயப்படு பொருளைச் செய்தது போல* (தொல். 731:1).

செய்தி *பெயர்*

1. கூறப்படுவது; இயற்றப்படுவது, செயல். *அடிமறிச் செய்தி அடிநிலை திரிந்து* (தொல்.891:1).
2. தொழில் *செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ* (தொல். 967:2).

செய்து *வினையெச்சம்*

வினையெச்ச வாய்பாடுகளுள் ஒன்று *செய்துஎன் எச்சத்து இறந்த காலம்* (தொல் 724:1).

செய்தென *வினையெச்சம்*

வினையெச்ச வாய்பாடுகளுள் ஒன்று. *செய்து செய்யூச் செய்பு செய்தென* (தொல். 713:1).

செய்பு *வினையெச்சம்*

வினையெச்ச வாய்பாடுகளுள் ஒன்று *செய்து செய்யூச் செய்பு செய்தென* (தொல் 713:1).

செய்ம்மன *வினைமுற்று*

வினைமுற்று வாய்பாடுகளுள் ஒன்று. *செய்ம்மன என்னும் தொழில்இறு சொல்லும்* (தொல்.211:3).

செய்யா *வினையெச்சம்*

வினையெச்ச வாய்பாடுகளுள் ஒன்று. *செய்யா என்னும் வினையெஞ்சு கிளவியும்* (தொல்.223:1)

செய்யிய *வினையெச்சம்*

வினையெச்ச வாய்பாடுகளுள் ஒன்று. *செய்யிய என்னும் வினையெஞ்சு கிளவியும்* (தொல்.211:6).

செய்யியர் *வினையெச்சம்*

வினையெச்ச வாய்பாடுகளுள் ஒன்று *செய்யியர் செய்யிய செயன்செய செயற்குஎன* (தொல் 713:2).

செய்யும் *பெயரெச்சம்*

பெயரெச்ச வாய்பாடுகளுள் ஒன்று *செய்யும் என்னும் பெயரெஞ்சு கிளவிக்கு* (தொல். 723:2).

செய்யுள் *பெயர்*

எழுத்து, அசை முதலிய உறுப்புகளைக் கொண்டு, அகம் புறம் என்னும் இரு பொருள்களில் ஒன்றைக் கூறுவதாக, வெண்பா முதலிய பாவகையினால் இயற்றப்பெறும் கவிதை. *செய்யுள் தாமே இரண்டுஎன மொழிப* (தொல். 1387).

செய்யூ *வினையெச்சம்*

வினையெச்ச வாய்பாடுகளுள் ஒன்று *செய்து செய்யூச் செய்பு செய்தென* (தொல். 713:1).

செய்வது *பெயர்*

எழுவாய் *வினையே செய்வது செயப்படு பொருளே* (தொல். 598:1).

செய *வினையெச்சம்*

வினையெச்ச வாய்பாடுகளுள் ஒன்று *செய்யியர் செய்யிய செயின்செய செயற்கென* (தொல்.713·2)

செயப்படுபொருள் *பெயர்*

ஒரு வாக்கியத்தில் வினைப்பயனிலையின் செயற்பாட்டுக்கு உள்ளாகும் ஒருவரை அல்லது ஒன்றைக் குறிக்கும் பெயர், பதிலிப்பெயர் அல்லது தொடர்; (இது பெரும்பாலும் இரண்டாம் வேற்றுமை உருபைப்பெற்று வரும்) *செயப்படு பொருளைச் செய்தது போலத் தொழிற்படக் கிளத்தலும் வழக்கியல் மரபே* (தொல் 731)

செயற்கு *வினையெச்சம்*

வினையெச்ச வாய்பாடுகளுள் ஒன்று. *செய்யியர் செய்யிய செயின்செய செயற்கென* (தொல்.713:2).

செயற்கை *பெயர்*

இயற்கை அல்லாதது; ஒருவரால் செய்யப்பட்டது. *செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல்* (தொல். 504).

செயிர் *பெயர்*

குற்றம். *செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந் தன்றெனு* (தொல். 1063:2).

செயின் *வினையெச்சம்*

வினையெச்ச வாய்பாடுகளுள் ஒன்று. *செய்யியர் செய்யிய செயின்செயச் செயற்கென* (தொல்.713:2).

செரு *பெயர்*

போர். *செருவகத்து இறைவன் வீழ்வுறச் சினைஇ* (தொல். 1022:14).

செல்(லு)-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. போதல். *சென்ற தேஎத்து உழப்புநனி விளக்கி* (தொல். 1096:51).
2. சாதல்; இறத்தல். *சென்ற உயிரின் நின்ற யாக்கை* (தொல். 1021:2).
3. ஏற்புடையது ஆதல். *பொருள்செல் மருங்கில் வேற்றுமை சாரும்* (தொல். 592:2).

செல்லல் *பெயர்*

துன்பம் *செல்லல் இன்னல் இன்னா மையே* (தொல் 787).

செல்வம் *பெயர்*

மிகுதியான பணம், பொருள்கள் முதலியன; சொத்து; வளமை. *செல்வம் புலனே புணர்வுவிளை யாட்டு என* (தொல். 1208:1).

செல்வன் *பெயர்*

அகப்பொருள் தலைவன்; காதலன். *செல்வன் பணிமொழி இயல்பு ஆகலான* (தொல். 1124:3).

செலவு *பெயர்*

1. போகை; பயணம்; போக்கு. *செலவுஉறு கிளவியும் செலவுஅழுங்கு கிளவியும்* (தொல்.1127:4).
2. வெட்சித் திணையின் துறைகளுள் ஒன்று; நிரை கவரச் செல்லும் வீரர்கள் பகைவர்களுக்குத் தெரியாமல் தடையின்றிச் செல்லுதல். *புடைகெடப் போகிய செலவே* (தொல். 1008:2).

செவ் *பெயரடை*

சிவந்த. *செவ்வாய்க் கிள்ளையைத் தத்தை என்றலும்* (தொல். 1571:3).

செவ்விது *குறிப்பு வினைமுற்று*

செம்மையானது; தக்கது. *அவ்வியல் நிலையில் செவ்விது என்ப* (தொல். 553:2).

செவ்வெண் *பெயர்*

எண்ணும்மை பெறாது எண்ணப்படும் சொற்கள். *எ-டு*.: ஒன்று இரண்டு மூன்று. *பெயர்க்குரி மரபின் செவ்வெண் இறுதியும்* (தொல். 775:2).

செவி *பெயர்*

1. முகத்தின் இரு புறங்களிலும் உள்ளதும், ஒலிகளைக் கேட்பதற்கு உரியதுமான அறிகருவி; காது. *கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்* (தொல். 1224:1).
2. காதாகிய அறிகருவியால் அறியப்படுவது. *ஐந்து அறிவு அதுவே அவற்றொடு செவியே* (தொல். 1529:5)

செவியறி *பெயர்*

காண்க: செவியறிவுறூஉ. *செவியறி வாயுறை புறநிலை என்று இவை* (தொல். 1419:2).

செவியறிவுறூஉ *பெயர்*

பாடாண் திணையின் துறைகளுள் ஒன்று; பெரியோரிடம் பணிவாக நடந்துகொள்ள வேண்டும் என ஒருவருக்கு உணர்த்துதல். *வாயுறை வாழ்த்தும் செவியறி வுறூஉம்* (தொல். 1039:8).

செவியுறை *பெயர்*

காண்க: செவியறிவுறூஉ. *செவியுறை தானே பொங்குதல் இன்றிப் புரையோர் நாப்பண் அவிதல் கடன்எனச் செவியுறுத் தன்றே* (தொல் 1374:3).

செவிலி *பெயர்*

அகப்பொருளில் தலைவிக்கு வளர்ப்புத் தாயாகவும் தோழிக்குப் பெற்ற தாயாகவும் இருப்பவள். *தோழி தானே செவிலி மகளே* (தொல். 1075)

செழுமை *பெயர்*

1. வளப்பம் *செழுஞ்செய் நெல்லின் விளை கதிர்கொண்டு* (அகநா. 78:17).
2. கொழுப்பு. *செழுங்கன்று யாத்த சிறுதாட் பந்தர்* (பெரும். 297).

செழுமை வளனும் கொழுப்பும் ஆகும் (தொல். 836).

செற்றம் *பெயர்*

சினம்; கோபம். *சிறந்த நாளினில் செற்றம் நீக்கி* (தொல். 1040:7).

செறல் *பெயர்*

கொல்லல். *செறலின் உவத்தலின் கற்பின் என்றா* (தொல். 557:4).

செறி-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

சரியாகப் பொருந்துதல். *சுட்டுப்பெயர் இயற்கையில் செறியத் தோன்றும்* (தொல் 524).

செறிவு *பெயர்*

1. நெருக்கம் *நளிஎன் கிளவி செறிவும் ஆகும்* (தொல் 807).
2. அடக்கம். *செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும் அறிவும் அருமையும் பெண்பா லான* (தொல். 1158).
3. நிறைவு *விறப்பும் முறப்பும் வெறுப்பும் செறிவே* (தொல். 831).

செறு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

கொல்லுதல், சாகடித்தல். *செறலின் உவத்தலின் கற்பின் என்றா* (தொல். 557:4)

சே

சே[1] *பெயர்*

ச் என்னும் மெய்யோடு ஏகார உயிர் சேர்வதால் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

சே[2] *பெயர்*

1. அழிஞ்சில் மரம். *சேஎன் மரப்பெயர் ஒடுமர இயற்றே* (தொல் 279).
2. பறவை, விலங்குகளின் ஆண்மைப் பொதுப்பெயர். *சேவும் சேவலும் இரலையும் கலையும்* (தொல். 1504:2).

சேய் *பெயர்*

நெடுந்தொலைவு; நீண்ட தூரம். *சேய்வரல் வருத்தம் வீட* (தொல். 1039:3).

சேய்மை *பெயர்*

தொலைவு; தூரம் *சேய்மையின் இசைக்கும் வழக்கத் தான* (தொல். 639:3).

சேயோன் *பெயர்*

செந்நிறம் வாய்ந்த முருகப் பெருமான். *சேயோன் மேய மைவரை உலகமும்* (தொல். 952:2).

சேர்[1] *பெயர்*

திரட்சி *சேரே திரட்சி* (தொல் 847).

சேர்[2]-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

இணைத்தல்; கூட்டுதல். *அசையும் சீரும் இசையொடு சேர்த்தி* (தொல். 1272:1).

சேர்[3]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

புணர்தல், கலவி செய்தல். *துஞ்சிச் சேர்தல்* (தொல். 1220:3)

சேர்[4]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

சென்றடைதல் *செய்பெரும் சிறப்பொடு சேர்தற் கண்ணும்* (தொல். 1096:30).

சேரி *பெயர்*

மக்கள் சேர்ந்து வாழும் பகுதி. *ஏமப் பேரூர்ச் சேரியும் சுரத்தும்* (தொல். 987:1).

சேவல் *பெயர்*

1. பறவைகளின் ஆண்பாற் பெயர். *எ-டு.:*அன்னச்சேவல். (புறநா. 67:1). *சேவற் பெயர்க்கொடை சிறகொடு சிவணும் மாயிருந் தூவி மயிலலங் கடையே* (தொல். 1551).
2. குதிரையின் ஆண்பாற் பெயர். *குதிரையுள் ஆணினைச் சேவல் என்றலும்* (தொல். 1571:5)

சேறல் *பெயர்*

போதல், செல்லுதல். *தானே சேறலும் தன்னொடு சிவணி ஏனோர் சேறலும் வேந்தன் மேற்றே* (தொல். 976).

சை

சை *பெயர்*

ச் என்னும் மெய்யெழுத்தின்மீது ஐகார உயிர் ஏறுவதால் தோன்றும் உயிர்மெய் நெடில்.

சொ

சொ *பெயர்*

ச் என்னும் மெய்யெழுத்தின்மீது ஒகர உயிர் ஏறுவதால் தோன்றும் உயிர்மெய்க் குறில்.

சொல் *பெயர்*

பொருளை உணர்த்தும் எழுத்துகளின் கூட்டம்; கிளவி; வார்த்தை. *நின்ற சொல்முன் எளிதா கும்மே* (தொல் 145:4).

சொல்(லு)-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

கூறுதல். *சொல்லிய முறையால் சொல்லவும் படுமே* (தொல். 952:6)

சொல்லென் எச்சம் *பெயர்*

சொல் என்னும் சொல் எஞ்சி நிற்பது (இளம்.); என்றான், என்று, என, என்னும், என்ற போன்ற சொற்களில் சொல் என்பது எஞ்சி நிற்பதாகக் கொள்ளுதல் (நச்சர்.); ஒரு சொல்லுக்கு முன்போ பின்போ ஏதாவது ஒருசொல் மட்டும் எஞ்சி நிற்பது (சேனா.); பிறிதுமொழிதல் அணியே சொல்லெச்சம் (தெய்வச்.). *சொல்என் எச்சம் முன்னும் பின்னும் சொல் அளவு அல்லது எஞ்சுதல் இன்றே* (தொல் 925).

சொற்சீர் *பெயர்*

யாப்பியல் முறையில் அசைகளால் அலகிட்டுச் சீர் கொள்ளாமல் முழுச்சொல்லாகக் கொள்ளப்படும் செய்யுள் உறுப்பு; சொல் ஒன்றே சீராக நிற்கும் நிலை; நூற்பாவிற்குச் சிறப்புரிமை உடையது *சொல்சீர்த்து இறுதல் சொற்சீர்க்கு இயல்பே* (தொல் 1383·4).

சொற்சீரடி *பெயர்*

சொற்சீர் பயின்றுவந்த செய்யுள்அடி *சொற்சீர் அடியும் முடுகியல் அடியும்* (தொல். 1382:1)

சொன்மை *பெயர்*

சொல்லின் தன்மை *பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்* (தொல். 643:1).

சோ

சோ *பெயர்*

ச் என்னும் மெய்யெழுத்தின்மீது ஓகார உயிர் கூடுவதால் உண்டாகும் உயிர்மெய் நெடில்.

சோர்வு *பெயர்*

1. மறதி *காதற் சோர்வில் கடப்பாட்டாண்மையில்* (தொல் 1101:6).
2. நெகிழ்ச்சி. *சூள்வயின் திறத்தால் சோர்வுகண்டு அழியினும்* (தொல்.1100:15).
3. இழிவு. *அவன்சோர்வு காத்தல் கடன்எனப் படுதலின்* (தொல்.1124:1).

சௌ

சௌ *பெயர்*

ச் என்னும் மெய்யெழுத்தின்மீது ஔ என்னும் உயிரெழுத்து ஏறுவதால் உண்டாகும் உயிர்மெய் நெடில்.

ஞ

ஞ்[1] *பெயர்*

தமிழ் நெடுங்கணக்கில் நான்காவது மெய்யெழுத்து.

ஞ்[2] *இடை*

பெயர் இடைநிலை *வேந்துவிடு வினைஞர் வேற்றுப்புலக் களவின்* (தொல்.1007:1).

ஞ *பெயர்*

ஞ் என்னும் மெய்யும் அகர உயிரும் சேரத் தோன்றும் உயிர்மெய்யெழுத்து; நாவின் நடுப்பகுதி நடுஅண்ணத்தைப் பொருந்த மூக்குவளியால் பிறக்கும் ஒரு மாத்திரை அளவுள்ள மெல்லின உயிர்மெய்க் குறில். *சகார ஞகாரம் இடைநா அண்ணம்* (தொல்.90); *மெல்லெழுத்து ஆறும் பிறப்பின் ஆக்கம் சொல்லிய பள்ளி நிலையின வாயினும் மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும்* (தொல்.100); *மெல்லெழுத்து என்ப ஙஞண நமன* (தொல்.20)

ஞகாரம் *பெயர்*

ஞ என்னும் எழுத்து. *ஏஓ எனும் உயிர் ஞகாரத்து இல்லை* (தொல்.73).

ஞகாரை *பெயர்*

ஞ என்னும் எழுத்து. *உப்ப காரமொடு ஞகாரையும் அற்றே* (தொல்.80:1).

ஞா

ஞா *பெயர்*

ஞ் என்னும் மெய்யின்மீது ஆகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ஞாங்கர் *வினையடை*

முன்னர்; முன்பு. *ஞாங்கர்க் கிளந்த மூன்று பொருளாக* (தொல்.1091:2).

ஞாபகம்கூறல் *பெயர்*

32 இலக்கிய உத்திகளுள் ஒன்று; இரட்டுற மொழிந்து இரண்டு சொற்கும் பொருள் கொள்ளுதல் (இளம்.); அரிதும் பெரிதுமாக நலிந்து செய்து அதனானே வேறு பல பொருள் உணர்த்தல் (பேரா.) (தொல். 1614:22)

ஞாயிறு *பெயர்*

சூரியன். *ஞாயிறு திங்கள் அறிவே நாணே* (தொல்.1459:1).

ஞாலம் *பெயர்*

உலகம். *ஞாலத்து வரூஉம் நடக்கையது குறிப்பில்* (தொல்.1040:19).

ஞி

ஞி *பெயர்*

ஞ் என்னும் மெய்யின்மீது இகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

ஞீ

ஞீ *பெயர்*

ஞ் என்னும் மெய்யின்மீது ஈகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ஞு

ஞு *பெயர்*

ஞ் என்னும் மெய்யின்மீது உகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் குறில்.

ஞூ

ஞூ *பெயர்*

ஞ் என்னும் மெய்யின்மீது ஊகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ஞெ

ஞெ *பெயர்*

ஞ் என்னும் மெய்யின்மீது எகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

ஞெமிர்-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

பரந்துபடுதல், பரத்தல் *ஞெமிர்தலும் பாய்தலும் பரத்தற் பொருள* (தொல். 845).

ஞெமை *பெயர்*

வெண்மை நிற மரவகை. *வெண்ஞெமைவியன் காட்டு* (அகநா.145:5). *விசைமரக் கிளவியும் ஞெமையும் நமையும்* (தொல்.283:1)

ஞே

ஞே *பெயர்*

ஞ் என்னும் மெய்யின்மீது ஏகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ஞை

ஞை *பெயர்*

ஞ் என்னும் மெய்யின்மீது ஐகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ஞொ

ஞொ *பெயர்*

ஞ் என்னும் மெய்யின்மீது ஒகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

ஞோ

ஞோ *பெயர்*

ஞ் என்னும் மெய்யின்மீது ஓகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ஞௌ

ஞௌ *பெயர்*

ஞ் என்னும் மெய்யின்மீது ஔகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ட

ட் *பெயர்*

தமிழ் நெடுங்கணக்கில் ஐந்தாவது மெய்யெழுத்து.

ட *பெயர்*

ட் என்னும் மெய்யோடு அகர உயிர் சேரப் பிறக்கும் உயிர்மெய்யெழுத்து; நாக்கின் நுனி அடிஅண்ணத்தைப் பொருந்த நெஞ்சுவளியால் தோன்றும் ஒருமாத்திரை அளவுள்ள வல்லின உயிர்மெய்க் குறில். *டகார ணகாரம் நுனிநா அண்ணம்* (தொல்.91). *வல்லெழுத்து என்ப கசட தபற* (தொல் 19).

டகரம் *பெயர்*

ட என்னும் எழுத்து. *டகரம் ஒற்றும் ஆவயி னான* (தொல்.241:3).

டகாரம் *பெயர்*

ட என்னும் எழுத்து. *டகார ணகாரம் நுனிநா அண்ணம்* (தொல்.91).

டா

டா *பெயர்*

ட் என்னும் மெய்யின்மீது ஆகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

டி

டி *பெயர்*

ட் என்னும் மெய்யின்மீது இகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

டீ

டீ *பெயர்*

ட் என்னும் மெய்யின்மீது ஈகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

டு

டு *பெயர்*

ட் என்னும் மெய்யின்மீது உகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் குறில்.

டூ

டூ *பெயர்*

ட் என்னும் மெய்யின்மீது ஊகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

டெ

டெ *பெயர்*

ட் என்னும் மெய்யின்மீது எகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

டே

டே *பெயர்*

ட் என்னும் மெய்யின்மீது ஏகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

டை

டை *பெயர்*

ட் என்னும் மெய்யின்மீது ஐகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

டொ

டொ *பெயர்*

ட் என்னும் மெய்யின்மீது ஒகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

டோ

டோ *பெயர்*

ட் என்னும் மெய்யின்மீது ஓகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

டௌ

டௌ *பெயர்*

ட் என்னும் மெய்யின்மீது ஔகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ண

ண் *பெயர்*

தமிழ் நெடுங்கணக்கில் ஆறாவது மெய்யெழுத்து.

ண *பெயர்*
ண் என்னும் மெய்யோடு அகர உயிர் சேரப் பிறக்கும் உயிர்மெய்யெழுத்து; நாக்கின் நுனி அடிஅண்ணத்தைப் பொருந்த மூக்கின் வளியால் பிறக்கும் ஒருமாத்திரை அளவுள்ள மெல்லின உயிர்மெய்க் குறில். *டகார ணகாரம் நுனிநா அண்ணம்* (தொல் 91). *மெல்லெழுத் தென்ப ஙஞண நமன* (தொல் 20)

ணகாரம் *பெயர்*
ண என்னும் எழுத்து. *டகார ணகாரம் நுனிநா அண்ணம்* (தொல். 91).

ணா

ணா *பெயர்*
ண் என்னும் மெய்யின்மீது ஆகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ணி

ணி *பெயர்*
ண் என்னும் மெய்யின்மீது இகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

ணீ

ணீ *பெயர்*
ண் என்னும் மெய்யின்மீது ஈகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ணு

ணு *பெயர்*
ண் என்னும் மெய்யின்மீது உகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் குறில்.

ணூ

ணூ *பெயர்*
ண் என்னும் மெய்யின்மீது ஊகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ணெ

ணெ *பெயர்*
ண் என்னும் மெய்யின்மீது எகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

ணே

ணே *பெயர்*
ண் என்னும் மெய்யின்மீது ஏகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ணை

ணை *பெயர்*
ண் என்னும் மெய்யின்மீது ஐகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ணொ

ணொ *பெயர்*
ண் என்னும் மெய்யின்மீது ஒகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

ணோ

ணோ *பெயர்*

ண் என்னும் மெய்யின்மீது ஓகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ணௌ

ணௌ *பெயர்*

ண் என்னும் மெய்யின்மீது ஔகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

த

த் *பெயர்*

தமிழ் நெடுங்கணக்கின் மெய்யொலிகளுள் ஏழாவதும் அரை மாத்திரை அளவுள்ளதுமான ஒலி; அவ்வொலியை வரிவடிவில் சுட்டும் எழுத்து.

த *பெயர்*

த் என்னும் மெய்யோடு அகர உயிர் சேரத் தோன்றும் உயிர்மெய் எழுத்து; மேல்அண்ணத்தில் பல்லின் அடிப்பகுதியில் நாக்கின் நுனி பரந்து நன்கு அழுந்த நெஞ்சுவளியால் பிறக்கும் ஒரு மாத்திரை அளவுள்ள வல்லின உயிர்மெய்க் குறில். *அண்ணம் நண்ணிய பல்முதல் மருங்கில் நாநுனி பரந்து மெய்யுற ஒற்றத் தாம் இனிது பிறக்கும் தகார நகாரம்* (தொல். 93). *வல்லெழுத்தென்ப கசட தபற* (தொல். 19).

தகர் *பெயர்*

விலங்குகளின் ஆண்பாற் பெயர் *மோத்தையும் தகரும் உதளும் அப்பரும்* (தொல்.1504:3).

தகரம் *பெயர்*

த என்னும் எழுத்து. *தகரம் வரும்வழி ஆய்தம் நிலையலும்* (தொல்.370:1).

தகாரம் *பெயர்*

த என்னும் எழுத்து. *தாம்இனிது பிறக்கும் தகார நகாரம்* (தொல்.93:3).

தகு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

ஏற்றது ஆதல். *சொலத்தகு கிளவி தோழிக்கு உரிய* (தொல்.1107:2).

தகுதி[1] *பெயர்*

ஒரு செயலைச் செய்வதற்கு வேண்டிய அறிவாற்றல்; தகைமை. *தன்னின் ஆகிய தகுதிக் கண்ணும்* (தொல்.1096:26).

தகுதி[2] *பெயர்*

ஒரு கருத்தை நேரடியாகக் கூறாது ஏற்கத் தகுந்த வேறொரு சொல்லால் கூறுதல், தகுதிவழக்கு; *எ-டு*.. செத்தாரைத் துஞ்சினார் என்பது. *தகுதியும் வழக்கும் தழீஇயின ஒழுகும்* (தொல்.501:1).

தகை[1] *பெயர்*

தன்மை; இயல்பு. *உறுதகை இல்லாப் புலவியின் மூழ்கிய* (தொல்.1100:18).

தகை[2]-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

தடுத்தல் *பல்லாற் றானும் ஊடலில் தகைத்தலும்* (தொல்.1118:2).

தகைய *இடை*

உவம உருபுகளுள் ஒன்று. *என்ன உறழ தகைய நோக்கொடு கண்ணிய எட்டும் வினைப்பால் உவமம்* (தொல் 1236 : 2-3).

தங்கு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

நிலைபெறுதல் *தங்கிய ஒழுக்கத்துத் தலைவனை வணங்கி* (தொல். 1097 :15)

தஞ்சம் *பெயர்*

எளிமை. *தஞ்சக் கிளவி எண்மைப் பொருட்டே* (தொல். 751).

தட்டு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

செய்யுளில் தளை தப்புதல்; உரிய தளை அமையாதிருத்தல். *நிரை முதல் வெண்சீர் வந்து நிரை தட்டல் வரைநிலை இன்றே அவ்வடிக்கு என்ப* (தொல் 1320).

தட *பெயரடை*

1. பெரிய *தடவும் கயவும் நளியும் பெருமை* (தொல்.804)
2. வளைந்த. *தடஎன் கிளவி கோட்டமும் செய்யும்* (தொல். 805:2)

தடு-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஒன்றன் இயக்கத்தை நிறுத்துதல், தடை செய்தல் *தாய் நிலை கண்டு தடுப்பினும் விடுப்பினும்* (தொல்.990:7).

தடுமாறு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. பல பொருள்களுக்கு இடையே எதைப்பற்றுவது எனத் தெரியாமல் அலமருதல்; திண்டாடுதல். *தடுமாறு தொழிற்பெயர்க்கு இரண்டும் மூன்றும்* (தொல். 581:1).

2. இயல்பு நிலையினின்றும் வேறுபடுதல்; மாறுபடுதல். *உருபினும் பொருளினும் மெய்தடுமாறி* (தொல். 587:2).

தடுமாறு தொழிற்பெயர் *பெயர்*

முன்னும் பின்னும் நின்ற பெயர்கள் இரண்டினுள் ஒன்றுக்கு மட்டுமே உறுதியாகப் பொருந்தும் என்னும் நிலை இல்லாமல் எழுவாய் செயப்படுபொருள் ஆகிய இரண்டினொடும் பொருந்திப் பொருள் மயக்கத்தை ஏற்படுத்துகின்ற தொடர். *எ-டு*.: புலிகொல்யானை. *தடுமாறு தொழிற்பெயர்க்கு இரண்டும் மூன்றும்* (தொல்.581:1).

தடுமாறுவமம் *பெயர்*

உவமையை ஐயவாய்பாட்டால் கூறுதல்; ஐய உவமை. *எ-டு*.: சொல் தேனோ (இளம்.); உவமையைப் பொருளாக்கியும் பொருளை உவமையாக்கியும் நிலைமாற்றிச் சொல்லுதல், விபரீத உவமை. *எ-டு*.: தாமரை முகம் போல மலரும் (பேரா.). *தடுமாறு உவமம் கடிவரை இன்றே* (தொல். 1261).

தண் *பெயரடை*

குளிர்ந்த. *வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்* (தொல். 1339:3).

தண்டு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

மன நிறைவு பெறுதல். *தண்டாது இரப்பினும்* (தொல். 1051:15).

தண்மை *பெயர்*

குளிர்ச்சி. *தண்மை வெம்மை அச்சம் என்றா* (தொல். 563:2).

தத்தம் *பெயர்* (தம்+தம்→ தந்தம்→தத்தம்)

அவர்அவர்களுக்கு அல்லது அவ்வவற்றுக்கு உரியது. *தத்தம் திரிபே சிறிய என்ப* (தொல்.88).

தத்தை *பெயர்*

சிவந்து வளைந்துள்ள கூர்மையான அலகையும், பசுமையான உடலையும் பேசுவதைப் போன்ற இனிய குரலையும் உடைய வெப்ப மண்டலப் பறவை; கிளி; பச்சைக்கிளி; கிள்ளை. *செவ்வாய்க் கிள்ளையைத் தத்தை என்றலும்* (தொல். 1571:3).

தந்துநிறை *பெயர்*

வெட்சித் திணையின் துறைகளுள் ஒன்று; பகை நாட்டிலிருந்து கவர்ந்துவந்த கால்நடைகளைத் தம் ஊரில் கொண்டுவந்து நிறுத்துதல். *தந்துநிறை பாதீடு உண்டாட்டு கொடைஎன* (தொல்.1008:7)

தந்துபுணர்ந்துரைத்தல் *பெயர்*

32 இலக்கிய உத்திகளுள் ஒன்று. முன்னோ பின்னோ உள்ள நூற்பாச் செய்தியைப் பொருந்தும் இடத்திற்குக் கொண்டுவந்து சேர்த்துப் பொருள் முடிவு கொள்ளுதல். *தந்து புணர்ந்து உரைத்தல் ஞாபகம் கூறல்* (தொல். 1614:22).

தந்தை *பெயர்*

தகப்பன். *தந்தையும் தன்னையும் முன்னத்தின் உணர்ப* (தொல். 1087).

தபு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. கெடுதல். *புரைதப நாடிப் புணர்க்கவும் படுமே* (தொல். 1603:4).
2. இறத்தல். *தாய்தப வரூஉம் தலைப்பெயல் நிலையும்* (தொல். 1029:33).

தபுதார நிலை *பெயர்*

காஞ்சித் திணையின் துறைகளுள் ஒன்று; மனைவியை இழந்தவனின் நிலைமையைக் கூறுவது. *காதலி இழந்த தபுதார நிலையும்* (தொல். 1029:28).

தபுதி *பெயர்*

1. அழிவு. *இருவர் தலைவர் தபுதிப் பக்கமும்* (தொல். 1022:5).
2. தும்பைத் திணைக்குரிய துறைகளுள் ஒன்று; போரிட்ட இரு தரப்புப் படைத்தலைவர்களும் போரில் இறந்துபட்டதைக் கூறுதல். *இருவர் தலைவர் தபுதிப் பக்கமும்* (தொல். 1022:5).

தம்[1] *பெயர்*

அவர்கள் எனப் பொருள்தரும் தாம் என்னும் பதிலிப்பெயர் வேற்றுமை உருபு ஏற்கும்போது திரிந்து பெறும் வடிவம். தாம்+ஐ→தம்மை. *தம்உறு விழுமம் பரத்தையர் கூறினும்* (தொல்.1184:1)

தம்[2] *இடை*

படர்க்கைப் பன்மைச் சொல்லுடன் பெரும்பாலும் இணைந்துவரும் ஒரு சாரியை. *எ-டு.*: அவர்தம்மை. *தம்இடை வரூஉம் படர்க்கை மேன* (தொல். 192:6).

தமர் *பெயர்*

உறவினர்; சுற்றத்தார். *ஐயம்செய்தல் அவன்தமர் உவத்தல்* (தொல். 1219:7).

தமரிற் பெறுதல் *பெயர்*

தலைவியை அவளுடைய உறவினர்கள் கற்பொழுக்கமாகத் திருமணம் செய்துகொடுக்கத் தலைவன் ஏற்றுக்கொள்ளுதல். *மறைவெளிப் படுதலும் தமரிற் பெறுதலும்* (தொல்.1446:1).

தமிழ் *பெயர்* தமிழ் ' என் கிளவியும் அதனோ ரற்றே (௧௦) .

தமிழ்மொழி. *செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்* (தொல். 884:1).

தரவு[1] *பெயர்*

ஈகை; தருகை. *செலவினும் வரவினும் தரவினும் கொடையினும்* (தொல். 512:1)

தரவு[2] *பெயர்*

கலிப்பாவின் முதல் உறுப்பு; துள்ளலோசை பெற்ற 4,6,8 அல்லது 12 அளவடிகளால் அமைவது. *தரவே தானும் நால்அடி இழிபாய் ஆறுஇரண்டு உயர்வும் பிறவும் பெறுமே* (தொல். 1393).

தருக்கு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

பெருகச் செய்தல்; விரியச் செய்தல் *தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்து* (தொல்.1000:4)

தருதல் *பெயர்*

கொடுத்தல். *ஆர்அமர் ஓட்டலும் ஆபெயர்த்துத் தருதலும்* (தொல். 1010:11).

தலை[1] *பெயர்*

1. கழுத்துக்கு மேல் உள்ளதும் முகத்திற்கும் மூளைக்கும் இடமானதுமான உறுப்பு; சிரம். *தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇ* (தொல். 83:2).

2. ஒன்றன் தொடக்கப் பகுதி, முதல் பாகம். *அடிதொறும் தலை எழுத்து ஒப்பது மோனை* (தொல். 1352).

3. அகப்பொருள் தலைவன்; காதலன்; கணவன். *தலைத்தாள் கழறல் தம் எதிர்ப்பொழுது இன்றே* (தொல். 1184).

4. செருக்கு, கருவம். *மைந்துபொருளாக வந்த வேந்தனைச் சென்று தலை அழிக்கும் சிறப்பிற்று என்ப* (தொல். 1020).

5. இடம். *மலர்தலை உலகத்து மரபு நன்கு அறிய* (தொல். 1029:34).

தலை[2] *இடை*

இடவேற்றுமையாகிய ஏழன் சொல்லுருபுகளுள் ஒன்று. *முன்இடை கடைதலை வலம் இடம் எனாஅ* (தொல். 567:3)

தலைக்கழிதல் *பெயர்*

பிரிதல். *கொண்டு தலைக்கழிதலும் பிரிந்து அவண் இரங்கலும்* (தொல் 964:1).

தலைதடுமாற்று *பெயர்*

32 இலக்கிய உத்திகளுள் ஒன்று, முன்னர் ஒரு வரிசையில் கூறியவற்றைப் பின்னர் வேறு காரணம் பற்றி வரிசை மாற்றிக் கூறுதல்; தலை தடுமாற்றம். *முந்து மொழிந்ததன் தலைதடுமாற்றே* (தொல் 1614:8)

தலைப்படு[1]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

இணைதல்; ஒன்று கூடுதல். *மெய்த்தலைப்பட்ட வழக்கொடு சிவணி* (தொல். 172:3).

தலைப்பாடு[2] *பெயர்*

தற்செயலாக நிகழும் செயல். *கூறுதல் உசாஅதல் ஏதீடு தலைப்பாடு* (தொல். 1156:2).

தலைப்பெய்-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. சிலவற்றைச் சேர்த்துக் கூறுதல். *வாய்மை கூறலும் பொய்தலைப் பெய்தலும்* (தொல். 1186:3).
2. சந்தித்தல்; எதிர்உறுதல். *அளவுமிகத் தோன்றினும் தலைப்பெய்து காணினும்* (தொல்.1065:2).

தலைப்பெயர்-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

மீளச்செய்தல். *தாய்நிலை நோக்கித் தலைப்பெயர்த்துக் கொளினும்* (தொல். 989:5).

தலைப்பெயல் நிலை *பெயர்*

காஞ்சித் திணையின் துறைகளுள் ஒன்று; போரில் இறந்துபட்ட மகனிடத்து அவனுடைய தாய் வருதல் (தாயும் இறந்துபடுதல் எனக்கூறும் நச்சினார்க்கினியர் சிறுபான்மை மீண்டுவருதலும் உண்டு என்பார்). *அரும்பொருள் இறப்பின் புதல்வற் பயந்த தாய்தப வரூஉம் தலைப்பெயல் நிலையும்* (தொல்.1029:33).

தலைமை *பெயர்*

முதன்மை. *தலைமைக் குணச்சொலும் தத்தமக்கு உரியதுஓர் நிலைமைக்கு ஏற்ப நிகழ்த்துப என்ப* (தொல் 1578:1)

தலையிடு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

கூட்டுதல்; சேர்த்தல் *ஆறு தலையிட்ட அந்நால் ஐந்தும்* (தொல். 1263:10)

தலையொடு முடிந்த நிலை *பெயர்*

காஞ்சித் திணையின் துறைகளுள் ஒன்று; போரில் இறந்துபட்ட கணவனின் தலையை ஏந்திக்கொண்டு, தானும் இறந்துபடும் மனைவியைப்பற்றிக் கூறுதல். *முலையும் முகனும் சேர்த்திக் கொண்டான் தலையொடு முடிந்த நிலையொடு தொகைஇ* (தொல்.1029:16-17).

தலைவன் *பெயர்*

அரசன்; படைத்தலைவன் எனினும் ஆம். *இருவர் தலைவர் தபுதிப் பக்கமும்* (தொல்.1022:5).

தலைவா[வரு]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. தோன்றுதல். *தலைவரு விழுமநிலை எழுத்துரைப்பினும்* (தொல். 989:1).
2. நெருங்குதல் *வரைவு தலைவரினும்* (தொல். 1065:5).
3. மிகுதல். *ஆடிய சென்றுழி அழிவு தலைவரினும்* (தொல் 1065:5).

தலைவை-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

தொடக்கம் ஆதல், ஆரம்பம் ஆதல். *பொழுது தலைவைத்த கையறு காலை* (தொல்.1185:1).

தவ *இடை*

மிகவும் *உறுதவ நனிஎன வரூஉம் மூன்றும் மிகுதி செய்யும் பொருள என்ப* (தொல் 784:2,3)

தவல் *பெயர்*

குறைவு; கேடு *தவல் அரும் சிறப்பின் அத் தன்மை நாடின்* (தொல். 1249:1).

தவழ்-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

உடலால் ஊர்ந்து செல்லுதல். *தவழ்பவை தாமும் அவற்று ஓரன்ன* (தொல். 1507).

தவழ்பவை *பெயர்*

கால்களால் நடந்து செல்லாமல் உடலால் ஊர்ந்து செல்லும் உயிரினங்கள். *தவழ்பவை தாமும் அவற்று ஓரன்ன* (தொல். 1507).

தவிர்-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

தங்குதல்; இருத்தல் *இடைச்சுர மருங்கில் தவிர்தல் இல்லை* (தொல். 1144:2).

தவிர்ச்சி *பெயர்*

இடையீடு; ஒத்திப்போடுதல். *வன்புறை குறித்தல் தவிர்ச்சி ஆகும்* (தொல். 1135:2).

தழாஅல் *பெயர்*

1. அணைத்தல், தழுவுதல். *இடம்பெற்றுத் தழாஅல் இடையூறு கிளத்தல்* (தொல் 1051:2).
2. மேற்கொள்ளுதல்; ஏற்றுக்கொள்ளுதல். *திரிவு இல் சொல்லொடு தழாஅல் வேண்டும்* (தொல் 1593:4).

தழிஞ்சி *பெயர்*

வஞ்சித் திணையின் துறைகளுள் ஒன்று; போரில் புண்பட்ட வீரர்களைச் சோர்வு அகற்றியும் ஊக்கியும் அரசன் தழுவிக் கொள்வதைக் கூறுதல். *அழிபடை தட்டோர் தழிஞ்சியொடு தொகைஇ* (தொல். 1013:12)

தள்(ளு)-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

தவறிப்போதல்; தப்பு ஆதல் *தள்ளாது ஆகும் திணைஉணர் வகையே* (தொல். 996:2).

தளா *பெயர்*

மரவகை. *யாமரக் கிளவியும் பிடாவும் தளாவும்* (தொல். 230:1).

தளிர் *பெயர்*

இலையின் தொடக்கப்பருவம், துளிர் *இலையே தளிரே முறியே தோடே* (தொல். 1590:1).

தளை[1] *பெயர்*

கட்டுப்பாடு. *நெஞ்சு தளை அவிழ்ந்த புணர்ச்சிக் கண்ணும்* (தொல். 1096:2).

தளை[2] *பெயர்*

செய்யுள் உறுப்புகளுள் ஒன்று; முதலில் நின்ற சீரின் ஈற்றசையும் வரும் சீரின் முதல் அசையும் தம்முள் ஒன்றியோ ஒன்றாமலோ இணைவதால் தோன்றுவது. *அடியுள் எனவே தளையொடு தொடையே* (தொல். 1294)

தளை[3]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

கூட்டுதல்; சேர்த்தல். *தன்னொடும் அவளொடும் முன்னம்முன் தளைஇ* (தொல். 1064:18).

தறுகண் *பெயர்*

வீரம். *கல்வி தறுகண் புகழ்மை கொடை என* (தொல். 1206:1).

தன்[1] *பெயர்*

தான் என்னும் படர்க்கை ஒருமைப்பெயர் வேற்றுமை உருபு ஏற்கும்போது திரியும் வடிவம். தான்+ஐ→தன்னை. *தன்வயின் வருதலும் வகுத்த பண்பே* (தொல். 1192:2).

தன்[2] *இடை*

தனக்கெனத் தனிப்பொருளின்றித் தான் சார்ந்த சொல்லின் பொருளையே கொள்ளும் சொற்களுள் ஒன்று, பகுதிப்பொருள் விகுதிகளுள் ஒன்று. *கிழவோன்றன்னை வாரல் என்றலும்* (தொல்.1159:5).

தன்கோட்கூறல் *பெயர்*

32 இலக்கிய உத்திகளுள் ஒன்று; குறிப்பிட்ட ஒன்றைப் பற்றிய தன் கொள்கையை உறுதியாக வலியுறுத்தல். *தன்கோள் கூறல் முறைபிற றூமை* (தொல். 1614:10).

தன்மை *பெயர்*

பெயர்ச்சொல்லுக்குரிய மூன்று இடங்களுள் ஒன்று; பேசுபவர் தம்மைக் குறிக்கும் இடம். *தன்மை முன்னிலை படர்க்கை என்னும் அம்மூ இடத்தும் உரிய என்ப* (தொல். 512:3-4).

தன்மை *பெயர்*

1. இயல்பு. *உவமைத் தன்மையும் உரித்து எனமொழிப* (தொல். 1260:1).
2. நிலைமை. *தளைவகை சிதையாத் தன்மை யான* (தொல். 1289:2)
3. மெய்ம்மை; உண்மை. *ஆங்கதன் தன்மையின் வன்புறை உளப்பட* (தொல். 1064:44)

தன்னான் ஒருபொருள் கருதிக் கூறல் *பெயர்*

நூற் குற்றங்களுள் ஒன்று; மரபு வழிப்படாமலும், இலக்கணநெறிக்கு அமையாமலும் தானாகவே ஒரு கருத்தை நினைத்துக்கொண்டு சொல்லுதல். *தன்னான் ஒருபொருள் கருதிக் கூறல்* (தொல்.1612:7).

தன்னை *பெயர்* (தன்+ஐ)

தமையன்; அண்ணன் *தந்தையும் தன்னையும் முன்னத்தின் உணர்ப* (தொல். 1087).

தனி *பெயரடை*

துணையற்ற; ஒருமையாய் நிற்கின்ற, ஒற்றை *தனிக்குறில் முதல்அசை மொழிசிதைந்து ஆகாது* (தொல். 1268)

தனிமை *பெயர்*

வேறுயாரும் இல்லாத சூழல் *காமக் கூட்டம் தனிமையில் பொலிதலின்* (தொல். 1069:1).

தா

தா *பெயர்*

த் என்னும் மெய்யின்மேல் ஆகார உயிர் ஏறத் தோன்றும் உயிர்மெய் நெடில்.

தா-தல் (தருதல்) *செயப்படுபொருள் குன்றா வினை*

1. கொடுத்தல். *தாஎன் கிளவி ஒப்போன் கூற்றே* (தொல். 930).
2. கைப்பற்றுதல். *ஆதந்து ஓம்பல் மேவற்றாகும்* (தொல். 1007:2).

தாஅ வண்ணம் *பெயர்*

செய்யுள் அடியில் ஒரு சீர் இடையிட்டுவரும் எதுகையால் அமைகின்ற பாவோசை. *தாஅ வண்ணம் இடையிட்டு வந்த எதுகைத் தாகும்* (தொல். 1474).

தாங்கரும் பையுள் *பெயர்*

காஞ்சித் திணையின் துறைகளுள் ஒன்று; போரில் சிறைப்பட்டவர்கள் பொறுத்தற்கரிய தம் துன்பத்தை விளக்குதல் (இளம்.), போரில் இறந்த வீரனைச் சுற்றத்தார் யாருமே இல்லாமல் அவனுடைய மனைவி மட்டும் தழுவி அழுவதைப் பார்த்தவர்களின் துன்பத்தைக் கூறுதல் (நச்சர்.). *தாமே எய்திய தாங்கரும் பையுளும்* (தொல். 1029:21).

தாங்கு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. பொறுத்துக் கொள்ளுதல், சகித்தல் *தாமே எய்திய தாங்க அரும் பையுளும்* (தொல். 1029:21).
2. உள்ளத்தில் ஏற்றல்; நினைத்தல் *தாங்க அரும் சிறப்பின் தோழி மேன* (தொல் 1064:46).
3. தடுத்தல்; முன்னேறாமல் நிறுத்தல், தடை செய்தல். *வரு தார் தாங்கல்* (தொல். 1010:15).

தாபத நிலை *பெயர்*

காஞ்சித் திணையின் துறைகளுள் ஒன்று; கைம்பெண் ஒருத்தியின் தவவாழ்க்கையைக் கூறுதல். *காதலன் இழந்த தாபத நிலையும்* (தொல். 1029:29).

தாபதப் பக்கம் *பெயர்*

வாகைத் திணைக்குரிய துறைகளுள் ஒன்று; எட்டு வகையான ஒழுக்கங்களால் சிறந்த தவத்தாரைப் போற்றுதல். *நால்இரு வழக்கில் தாபதப் பக்கமும்* (தொல். 1025:6).

தாம்[1] *பெயர்*

1. அவை. *தொடர்அல் இறுதி தம்முன் தாம்வரின்* (தொல் 215:1)
2. அவர்கள். *தாமே செல்லும் தாயரும் உளரே* (தொல். 987:2).

தாம்[2] *இடை*

1. ஒரு பெயர்ச்சொல்லை அடுத்துத் தனக்குத் தனிப்பொருளின்றி அந்தப் பெயரையே குறித்து நிற்கும் சொல். பகுதிப் பொருள் விகுதிகளுள் ஒன்று. *உரைபடு நூல்தாம் இருவகை இயல* (தொல். 1597·2)
2. அசைநிலைகளுள் ஒன்று. *தாம் இனிது பிறக்கும் தகார நகாரம்* (தொல் 93:3).

தாய் *பெயர்*

அன்னை. *தாய்க்கும் வரையார் உணர்வுடம் படினே* (தொல். 1066).

தாயம் *பெயர்*

ஒருவருக்குப் பிறப்பு முறையால் ஏற்படும் குடும்பச் சொத்தின் உரிமை; சொத்துரிமை. *தாயத்தின் அடையா ஈயச் செல்லா* (தொல் 1170·1)

தார் *பெயர்*

1. முன்னணிப்படை; கொடிப்படை. *வருதார் தாங்கல்* (தொல். 1010:15).
2. மலர்மாலை. *கண்ணியும் தாரும் எண்ணினர் ஆண்டே* (தொல். 1582).

தார்நிலை *பெயர்*

தும்பைத் திணையின் துறைகளுள் ஒன்று; பகைவர்களுக்கு நடுவே சிக்குண்ட அரசனைக் காக்க அவனுடைய வீரன் ஒருவன் விரைந்து சென்று பகைவர்களைத் தாக்குதலைக் கூறுதல். *வேன்மிகு வேந்தனை மொய்த்தவழி ஒருவன் தான்மீண்டு எறிந்த தார்நிலை அன்றியும்* (தொல். 1022:3-4).

தாரம் *பெயர்*

மனைவி. *காதலி இழந்த தபுதார நிலையும்* (தொல். 1029:28).

தாவு[1] *பெயர்*

1. கேடு; குறைவு. *தாவுஇல் கொள்கைத் தத்தம் கூற்றை* (தொல். 1024:1).
2. வருத்தம்; வலி. *தாவே வலியும் வருத்தமும் ஆகும்* (தொல். 828).

தாவு[2]**-தல்** *செயப்படுபொருள் குன்றிய வினை*

கெடுதல். *தாவா விழுப்புகழ் பூவை நிலையும்* (தொல். 1010:10).

தாழ் *பெயர்*

மூடிய கதவைத் திறக்க முடியாதவாறு நிலைப்படியில் அமைக்கப்பட்டுள்ள கண்ணியில் பொருந்தும்படிப் பொருத்தப்பெறும் தண்டு, தாழ்ப்பாள், தாள். (இரட்டைக் கதவுகளில் இது ஒரு கதவில் கண்ணியும் மற்றொன்றில் தண்டுமாக இருக்கும்). *தாழ்என் கிளவி கோலொடு புணரின்* (தொல். 385:1).

தாழக்கோல் *பெயர்*

திறவுகோல்; சாவி. *தாழ்என் கிளவி கோலொடு புணரின் அக்கு இடைவருதல் உரித்தும் ஆகும்* (தொல். 385).

தாழிசை *பெயர்*

தரவைவிட அடியளவில் சுருங்கியதாகவும், ஒரு பொருள்மேல் மூன்றடுக்கியும் வருகின்ற கலிப்பாவின் உறுப்புகளுள் ஒன்று. (மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவில் அராகத்தை அடுத்து மறுபடியும் இவ்வுறுப்பு வருவதும் உண்டு. அங்கு ஆறு தாழிசையும் இடம் பெறலாம்). *தரவே தாழிசை எண்ணே வாரம் என்று* (தொல். 1400:2).

தாள் *பெயர்*

முயற்சி. *தலைத்தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்தலும்* (தொல். 1010:13)

தாளாண் *பெயர்*

முயற்சி. *தாளாண் பக்கமும் தகுதியது அமைதியும்* (தொல். 991:8).

தான்[1] *பெயர்*

படர்க்கை ஒருமைப் பெயர் *தான்அறி பொருள்வயின் பன்மைகூறல்* (தொல். 507:2).

தான்[2] *இடை*

ஒரு பெயர்ச்சொல்லை அடுத்துவந்து தனக்கெனத் தனிப்பொருள் இல்லாமல் அப்பெயரின் பொருளையே உணர்த்தும் சொல்; பகுதிப்பொருள் விகுதிகளுள் ஒன்று. *பின்பனிதானும் உரித்து என மொழிப* (தொல். 959).

தான் குறியிடுதல் *பெயர்*

32 இலக்கிய உத்திகளுள் ஒன்று. குறிப்பிட்ட கொள்கை ஒன்றை விளக்கப் பழைய சொற்கள் இருந்தபோதும் நூலாசிரியன் தெளிவான புதிய கலைச்சொல் ஒன்றைப் படைத்துக்கொண்டு ஆளுதல். *தான்குறி இடுதல் ஒருதலை அன்மை* (தொல். 1614:14).

தானை *பெயர்*

1. நால்வகைப் படைகளுள் ஒன்று; காலாட் படை. *தானை யானை குதிரை என்ற* (தொல்.1022:1).

2. *காண்க:* தானைநிலை. *தானை யானை குதிரை என்ற* (தொல். 1022:1)

தானைநிலை *பெயர்*

தும்பைத் திணையின் துறைகளுள் ஒன்று; காலாட் படையின் பெருமையைக் கூறுதல். *தானை யானை குதிரை என்ற நோனார் உட்கும் மூவகை நிலையும்* (தொல். 1022:1-2)

தானையர் *பெயர்*

படைவீரர்கள். *மாபெரும் தானையர் மலைந்த பூவும்* (தொல். 1010:5).

தி

தி *பெயர்*

த் என்னும் மெய்யின்மேல் இகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

திங்கள் *பெயர்*

நிலவு; வான்மதி; சந்திரன். *ஞாயிறு திங்கள் அறிவே நாணே* (தொல். 1459:1).

திசை *பெயர்*

வானத்தில் சூரியனின் இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டு கூறப்பெறும் கிழக்கு முதலிய பக்கம்; திக்கு. *இருதிசை புணரின் ஏஇடை வருமே* (தொல். 432).

திசைச்சொல் *பெயர்*

தமிழகத்தைச் சேர்ந்த பன்னிரண்டு உட்பிரிவுகளுள் ஏதாவது ஒரு பகுதியில் மட்டும் வழங்கப்பெறும் சொல், வட்டார வழக்கு *செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும் தம்குறிப் பினவே திசைச்சொற் கிளவி* (தொல் 884).

திண்ணிதின் *வினையடை*

தெளிவாக *கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்* (தொல். 1224:1).

திணை *பெயர்*

1. உயர்திணை, அஃறிணை எனப்படும் சொற்களின் இலக்கணப் பகுப்பு. *ஆஇரு திணையின் இசைக்குமன் சொல்லே* (தொல். 485:3).

2. பொருளிலக்கணத்தில் மக்களின் ஒழுக்கத்தின் அடிப்படையில் அமைந்து, அகம், புறம் என இரண்டாகப் பிரித்துக் கைக்கிளைமுதல் பெருந்திணைவரையான ஏழு அகப்பொருளுக்கும், வெட்சி முதல் பாடாண்வரையான ஏழு புறப்பொருளுக்கும் உரியன என வரையறுக்கப்பட்ட ஒழுக்கம். *கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய் முற்படக் கிளந்த எழுதிணை என்ப* (தொல் 948)

திணைமயக்கு *பெயர்*

ஒரு நிலத்திற்குரிய காலம், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியன மற்ற நிலத்திற்குரிய அப்பொருள்களுடன் கலந்து வருதல்; திணைமயக்கம். *திணைமயக்கு உறுதலும் கடிநிலை இலவே* (தொல். 961:1).

திரட்சி *பெயர்*

கூடுகை, சேர்கை. *சேரே திரட்சி* (தொல். 847).

திரி-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. வடிவம் மாறுதல்; வேறுபடுதல் *தன்மை திரிபெயர் உறுப்பின் கிளவி* (தொல். 541:4).
2. கெடுதல்; அழிதல். *மரபுநிலை திரிதல் செய்யுட்கு இல்லை* (தொல். 1594:1).

திரிசொல் *பெயர்*

ஒருசொல் பல பொருளாகவும், பலசொல் ஒரு பொருளாகவும் பெரும்பாலும் செய்யுளில் பயிலும் வார்த்தை. *இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்று* (தொல். 881:1).

திரிபிடன் *பெயர்* (திரிபு+இடன்)

சொற்புணர்ச்சியில் எழுத்துகள் மாறுதற்கு உரிய இடம். *வேற்றுமை அல்வழித் திரிபிடன் இலவே* (தொல் 148:3).

திரிபு *பெயர்*

மாற்றம். *திரிபு வேறு கிளப்பின்* (தொல். 433:1).

திரிவு *பெயர்*

மாற்றம். *திரிவு இல்சொல்லொடு தழாஅல் வேண்டும்* (தொல். 1593:4).

திரு *பெயர்*

செல்வம்; கண்டாரால் விரும்பப்படும் தன்மை (பேரா.). *நிறையே அருளே உணர்வொடு திருவே* (தொல். 1222:3).

திருத்து-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

சரியாக இருப்பதை மேலும் செப்பம் செய்தல். *அல்குல் தைவரல் அணிந்தவை திருத்தல்* (தொல் 1212:1)

திரை *பெயர்*

கடல் *படுதிரை வையம் பாத்திய பண்பே* (தொல். 949:1)

தில் *இடை*

விருப்பம், காலம், ஒழியிசை ஆகிய பொருளில் வரும் ஓர் இடைச்சொல்; அசைநிலைகளிலும் ஒன்று. *எ-டு.:* (விழைவுப்பொருள்) *நோய்இலன் ஆகிப் பெயர்கதில் அம்ம* (புறநா. 13:9); (காலப்பொருள்) *வருகதில் வல்லே வருகதில் வல்லே* (புறநா. 284:1); (ஒழியிசை) *வருகதில் அம்ம எம் சேரிசேர* (அகநா. 276:7), (அசைநிலை) *நோய்இலன் ஆயின் நன்றுமன்தில் என* (புறநா 229.15) *விழைவே காலம் ஒழியிசைக் கிளவி என்று அம் மூன்று என்ப தில்லைச் சொல்லே* (தொல் 738).

தில்லை *பெயர்*

விருப்பம், காலம், ஒழியிசை ஆகிய பொருண்மையில் வரும் தில் என்னும் இடைச்சொல்லின் பெயர். *விழைவின் தில்லை தன்னிடத்து இயலும்* (தொல். 745).

திளைப்புவினை மறுத்தல் *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று, தலைவியின் களவொழுக்கம் வெளிப்பட்ட பிறகு அவள் நாணம், அச்சம் காரணமாகத் தலைவனைக் கூடி மகிழ்தலைத் தவிர்த்தல். *தெரிந்துடம் படுதல் திளைப்புவினை மறுத்தல்* (தொல். 1214:1)

திறம்[1] *பெயர்*

1. இயல்பு, தன்மை. *உயிர்த்திறம் இயக்கம் இன்மையான* (தொல். 1305:2).

2. நிலைமை. *ஏறிய மடல் திறம் இளமை தீர்திறம்* (தொல். 1001:1).

3. வகை, கூறுபாடு. *புறநிலை வாயுறை செவியறி வுறூஉ எனத் திறநிலை மூன்றும் திண்ணிதின் தெரியின்* (தொல் 1420:1-2).

4. செம்மை. *புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்* (தொல். 1006:2).

5. மேன்மை. *பாகனொடு விரும்பிய வினைத்திற வகையினும்* (தொல் 991:20).

திறம்[2] *இடை*

இடவேற்றுமையாகிய ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு. *அந்தணர் திறத்தும் சான்றோர் தேஎத்தும்* (தொல் 1096:15)

திறல் *பெயர்*

வலிமை. *திறல்பட ஒருதான் மண்டிய குறுமையும்* (தொல். 1017:5-6).

தீ

தீ *பெயர்*

1. த் என்னும் மெய்யின்மேல் ஈகார உயிர் ஏற உண்டாகும் உயிர்மெய் நெடில்.
2. நெருப்பு. *நிலம்தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்* (தொல் 1593:1).

தீண்டு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

தொடுதல். *இருநிலம் தீண்டா அருநிலை வகையொடு* (தொல். 1021:3).

தீம் *பெயரடை*

இனிய. *வேந்தன் மேய தீம்புனல் உலகமும்* (தொல். 952:3)

தீமை *பெயர்*

கெடுதி; நன்மை அல்லாதது *நன்மையும் தீமையும் என்றுஇரு திறத்தால்* (தொல். 1000:3).

தீர்[1]**-த்தல்** *செயப்படுபொருள் குன்றா வினை*

1. விட்டுவிடுதல். *தீர்தலும் தீர்த்தலும் விடற்பொருட்டு ஆகும்* (தொல். 802).
2. கொல்லுதல். *நீத்த கணவற் றீர்த்த வேலில்* (தொல். 1029:12).

தீர்[2]**-தல்** *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. நீங்குதல் *இளமை தீர் திறம்* (தொல். 1001:1).
2. இல்லையாதல். *புரைதீர் காமம் புல்லிய வகையினும்* (தொல். 1031:2).

து

து *பெயர்*

த் என்னும் மெய்யின்மேல் உகர உயிர் சேரத் தோன்றும் உயிர்மெய்க் குறில்.

துகள் *பெயர்*

குற்றம். *துகள்தபு சிறப்பின் சான்றோர் பக்கம்* (தொல். 1026:15).

துஞ்சு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

தூங்குதல். *தூதுமுனிவின்மை துஞ்சிச் சேர்தல்* (தொல். 1220:3).

துடை-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

கையால் தடவி நீக்குதல். *கையறு தோழி கண்ணீர் துடைப்பினும்* (தொல் 1061:22).

துணி-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

வெட்டுதல்; நறுக்குதல்; துண்டாக்குதல். *ஒட்டுவழி அறிந்து துணித்தனர் இயற்றல்* (தொல்.890:3).

துணி-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

தெளிவடைதல்; ஐயமின்றி அறிதல். *ஏதுவின் உரைத்தலும் துணியக் காட்டலும்* (தொல்.1118:4).

துணிபு *பெயர்*

கொள்கை முடிவு. *மறுதலை சிதைத்துத் தன் துணிபு உரைத்தல்* (தொல். 1614:18).

துணிவு *பெயர்*

உறுதி; நிச்சயம். *தோன்றுவது கிளந்த துணிவி னானும்* (தொல். 1435:2).

துணை[1] *பெயர்*

1. ஒப்புமை; இணை *அப்பொருள் ஆகும் உறழ் துணைப் பொருளே* (தொல். 500:2) துணைப் பொருளாவது ஒப்புமை கூறப்படுவது (சேனா. மேற்படி).

2. உதவி *கருவியில் துணையில் கலத்தின் முதலின்* (தொல். 565:3).

துணை[2] *பெயர்*

1. அகப்பொருள் தலைவனின் தோழன்; பாங்கன். *முந்நாள் அல்லது துணைஇன்று கழியாது* (தொல். 1072:1).

2. அகப்பொருள் தலைவியின் தோழி; பாங்கி. *துணைச்சுட்டுக் கிளவி கிழவியது ஆகும்* (தொல். 1073:3).

துணைமையோர் *பெயர்*

ஒத்த தன்மையராகிய இருவர் *துறைஅமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே* (தொல் 1041:15)

தும்பி *பெயர்*

வண்டினத்தில் உயர்ந்த ஒன்று. *நண்டும் தும்பியும் நான்கறி வினவே* (தொல். 1533:1).

தும்பை *பெயர்*

புறத் திணைகள் ஏழனுள் ஒன்று; பெருவீரத்தோடு பகைவருடன் போரிடுதலைக் கூறுதல். *தும்பை தானே நெய்தலது புறனே* (தொல். 1019).

துயவு *பெயர்*

அறிவின் மயக்கம், கலக்கம். *துயவுஎன் கிளவி அறிவின் திரிபே* (தொல். 852).

துயில் *பெயர்*

தூக்கம் *கண் துயில் மறுத்தல்* (தொல். 1219:5).

துயிலெடைநிலை *பெயர்*

பாடாண் திணையின் துறைகளுள் ஒன்று; காலையில் அரசனைத் துயில் எழுப்ப அவனைப் புகழ்ந்து பாடுதல்; திருப்பள்ளியெழுச்சி. *சூதர் ஏத்திய துயலெடை நிலையும்* (தொல். 1040:2).

துவர்-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

முழுவதுமாதல். *துவரக் கெட்டு வல்லெழுத்து மிகுமே* (தொல் 311:2).

துவன்று[1] *பெயர்*

நிறைவு. *துவன்று நிறைவு ஆகும்* (தொல். 816)

துவன்று[2]**-தல்** *செயப்படுபொருள் குன்றிய வினை*

நிரம்புதல். *ஏமம் சார்ந்த மக்களொடு துவன்றி* (தொல். 1142:2).

துவை-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

ஒலி எழுப்புதல்; ஆரவாரித்தல் *துவைத்தலும் சிலைத்தலும் . . இசைப்பொருட் கிளவி* (தொல் 842·1-2).

துள்ளலோசை *பெயர்*

காய்ச்சீர்முன் நிரையசைவருவதாகிய கலித்தளையால் பிறக்கும் பாவோசை *துள்ளல் ஓசை கலிஎன மொழிப* (தொல் 1343).

துளக்கு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

அசைத்தல். *துளக்கல் ஆகாத் துணைமை எய்தி* (தொல். 1604:5).

துற-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

நீக்கி விடுதல்; கைவிடுதல். *இன்பம் நாணொடு துறந்த ஒழுக்கம்* (தொல் 1164:1-2).

துறை[1] *பெயர்*

அகம், புறம் ஆகிய இரு திணைகளிலும் செய்யுளில் அமையும் பொருட்கூறு; பாடுபொருள். *தத்தம் இயலான் மரபொடு முடியின் அத்திறன் தானே துறைஎனப் படுமே* (தொல். 1468:3-4).

துறை[2] *பெயர்*

இசைக் கருவியை மீட்டலுக்குரிய ஒழுங்கு. *துறைஅமை நல்யாழ்* (தொல். 1041:5).

துன்னு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

நெருங்குதல், அணுகுதல் *துன்அரும் சிறப்பின் வஞ்சினத் தானும்* (தொல். 1029:9)

துன்பத்துப் புலம்பல் *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; பிரிவாற்றாத தலைவி தான்மட்டுமே மிக வருந்துவதாகக் கூறி நொந்து கொள்ளுதல். *இன்பத்தை வெறுத்தல் துன்பத்துப் புலம்பல்* (தொல். 1219:1).

துன்பு *பெயர்*

வருத்தம், துன்பம் *துன்புஉறுபொழுதினும்* (தொல். 1134:1)

துனி *பெயர்*

1. புலவி, ஊடல் நீட்டம் *இனிதுறு கிளவியும் துனிஉறு கிளவியும்* (தொல். 1254:1).
2. துன்பம். *இன்ப துன்பங்கள் தோன்றச் சொல்லவும் படும்* (பேரா தொல். 1254 உரை).

துனைவு *பெயர்*

விரைவு. *கதழ்வும் துனைவும் விரைவின் பொருள* (தொல். 799).

தூ

தூ *பெயர்*

த் என்னும் மெய்யின்மேல் ஊகார உயிர் ஏறத் தோன்றும் உயிர்மெய் நெடில்

தூக்கு *பெயர்*

சீர், அடிகளின் அமைப்பால் ஒரு செய்யுளில் தோன்றும் பாவோசை. *வஞ்சித் தூக்கே செந்தூக்கு இயற்றே* (தொல். 1331).

தூங்கல் வண்ணம் *பெயர்*

செய்யுள் ஒன்றில் நான்கசைச் சீரின்முன் நேர் அல்லது நிரையசை வருவதாகிய வஞ்சித்தளையால் தோன்றும் பாவோசை. *தூங்கல் வண்ணம் வஞ்சி பயிலும்* (தொல். 1489).

தூங்கலோசை *பெயர்*

வஞ்சித் தளையால் செய்யுளில் ஏற்படும் பாவோசை. *தூங்கல் ஓசை வஞ்சி ஆகும்* (தொல்.1344).

தூங்கு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

ஒலித்தல் *வாள் மலைந்து எழுந்தோனை மகிழ்ந்துபறை தூங்க* (தொல். 1010:17).

தூணி *பெயர்*

முகத்தலளவையில் ஒன்று; நான்கு மரக்கால் கொண்டது; 32 படி; ஏறத்தாழ 30 லிட்டர் கொண்ட அளவு. *பதக்குமுன் வரினே தூணிக் கிளவி* (தொல். 240:1).

தூது *பெயர்*

ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குச் செய்தியைக் கொண்டு செல்லுகை. *ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன* (தொல் 975:2)

தூதுவர் *பெயர்*

ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குச் செய்தியைக் கொண்டு செல்பவர். *தாமே தூதுவர் ஆகலும் உரித்தே* (தொல். 1069:2).

தூவி *பெயர்*

பறவையின் இறகு. *மாஇரும் தூவி மயில் அலங்கடையே* (தொல். 1551:2).

தெ

தெ *பெயர்*

த் என்னும் மெய்யின்மீது எகர உயிர் ஏற உண்டாகும் உயிர்மெய்க் குறில்.

தெய்வக்கடம் *பெயர்*

கடவுள்களுக்குச் செலுத்தவேண்டிய வேண்டுதல்; நேர்த்திக்கடன். *கிழவோற் சுட்டிய தெய்வக் கடத்தினும்* (தொல். 1100:4).

தெய்வம் *பெயர்*

மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டதும், இயற்கையின் நிகழ்வுகள் அனைத்தையும் கட்டுப்படுத்துவதாக நம்பப்படுவதும், வழிபடுபவர்களுக்கு நன்மை தருவதாகக் கருதப்படுவதும் ஆகிய ஓர் ஆற்றல் (இதற்குப் பெயரும் வடிவமும் கொடுத்துப் போற்றுவதும் உண்டு); கடவுள். *வழிபடு தெய்வம் நிற்புறம் காப்ப* (தொல். 1370:1).

தெய்வமஞ்சல் *பெயர்*

கற்புக்காலத்துக் காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; தலைவன் சூள்மொழி பொய்த்தது, பரத்தையர் கூட்டம் எனச் செய்த தவறுகளுக்காகக் கடவுளின் தண்டனை பெற்றுவிடுவானோ என்று தலைவி பயப்படுதல் *தெய்வம் அஞ்சல் புரையறத் தெளிதல்* (தொல் 1221:1).

தெரி[1]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. அறிதல். *தெரிந்த கிளவி ஆதலும் உரித்தே* (தொல். 516:4).
2. ஆராய்தல் *அவையடக் கியலே அரில்தபத் தெரியின்* (தொல். 1373:1)

தெரி[2]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

விளங்குதல்; புலப்படுதல். *தேறத் தோன்றும் பொருள்தெரி நிலையே* (தொல் 537:4)

தெரிந்துடம்படுதல் *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று, தலைவனின் பரிசை (கையுறை) ஏற்றுக்கொண்ட தலைவி, களவொழுக்கத்தால் ஏற்படும் பின்விளைவுகளை நன்கு ஆராய்ந்து, அவற்றை எதிர்கொள்ளத் துணிந்து பிறகு தலைவனின் கருத்தை ஒப்புதல்; விருப்பத்திற்கு இணங்குதல் என்பது கருத்து. *தெரிந்துடம் படுதல் திளைப்புவினை மறுத்தல்* (தொல். 1214:1).

தெரிநிலை *பெயர்*

1. எளிதில் தெளிவாக உணரப்படும் தன்மை. *தெரிநிலை உடைய அஃறிணை இயற்பெயர்* (தொல் 658:1)

2. ஆராய்ந்து ஒரு பொருளை உறுதி செய்து கொள்ளும் தன்மை *தெரிநிலைக் கிளவி சிறப்பொடு தொகைஇ* (தொல் 741:2)

தெரிபு *பெயர்*

(பொருள்) விளக்கம்; தெளிவு. *பல்வகை யானும் பயன்தெரிபு உடையது* (தொல். 1604:7).

தெரிவு *பெயர்*

அறியப்பட்டது. *தெரிவுகொள் செங்கோல் அரசர்க்கு உரிய* (தொல். 1574:4)

தெருமரல் *பெயர்*

சுழற்சி. *அலமரல் தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி* (தொல் 794).

தெருள்(ளு)-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

ஐயம் இல்லாமல் தெளிதல்; தெளிவாகப் புரிந்து கொள்ளுதல். *தன்குறி தள்ளிய தெருளாக் காலை* (தொல். 1061:27).

தெவ்வு *பெயர்*

பகை. *தெவ்வுப் பகையாகும்* (தொல் 830).

தெவு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

கைப்பற்றிக் கொள்ளுதல்; கவர்தல் *தெவுக் கொளற் பொருட்டே* (தொல். 829).

தெள்(ளு)-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

நன்றாகப் புரிந்து கொள்ளல், தெளிவாக அறிந்து கொள்ளல். *சினைமுன் வருதல் தெள்ளிது என்ப* (தொல். 574.2)

தெளி-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஊடல் உணர்த்துதல்; மற்றவரின் சினத்தை மாற்றுதல் *இரத்தலும் தெளித்தலும் என இருவகை யோடு* (தொல். 991:23).

தெளி-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

தெளிவாதல்; விளங்குதல் *தெளிநிலை உடைய ஏகாரம் வரலே* (தொல் 638:4)

தெளிவு *பெயர்*

1. ஐயமற்ற அறிவு; உறுதியான கருத்து. *தன்நிலை உரைத்தல் தெளிவு அகப்படுத்தல்* (தொல்.1050:4).

2. மற்றவர் கொண்ட சினத்தை மாற்ற ஒருவர் தருகின்ற தன்நிலை விளக்கம்; ஊடல் உணர்த்த உரைக்கும் உரை. *நொந்து தெளிவு ஒழிப்பினும்* (தொல். 1061:8).

தெற்கு *பெயர்*

நான்கு பெரும் திசைகளுள் ஒன்று; உதிக்கின்ற சூரியனைப் பார்த்துக்கொண்டு நிற்கும்போது வலப்புறம் உள்ள திசை. *தெற்கொடு புணருங் காலையான* (தொல். 433:4).

தெற்றென்(னு)-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

தெளிதல்; ஐயம் இல்லாமல் அறிதல். *ஒற்றுமெய் கெடுதல் தெற்றென்றற்றே* (தொல்.134:2).

தெற்றென *வினையடை*

தெளிவாக. *தெற்றென ஒருபொருள் ஒற்றுமை கொளீஇ* (தொல். 1608:4)

தெறல் *பெயர்*

சினத்தல்; கோபம் கொள்ளல். *தெறற்குஅரு மரபின் சிறப்பின் கண்ணும்* (தொல். 1100:2).

தே

தே *பெயர்*

த் என்னும் மெய்யின்மீது ஏகார உயிர் ஏறுவதால் தோன்றும் உயிர்மெய் நெடில்.

தேஎத்து *இடை*

ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபுகளுள் ஒன்று; மாட்டு. *அந்தணர் திறத்தும் சான்றோர் தேஎத்தும்* (தொல். 1096:15)

தேஎம் *பெயர்*

நாடு; தேயம்; தேசம் *கொள்ளார் தேஎம் குறித்த கொற்றமும்* (தொல். 1017:1).

தேய்வு *பெயர்*

நிலைகேடு; இழிவு; தகுதிக்குறைவு. *வென்றோர் விளக்கமும் தோற்றோர் தேய்வும்* (தொல்.1013:10).

தேயம் *பெயர்*

1. நாடு; தேசம் *ஊரது சார்பும் செல்லும் தேயமும்* (தொல். 990:3).

2. கூறுபாடு; பக்கம்; சார்வு. *நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்* (தொல். 1025:5).

தேர்[1] *பெயர்*

குதிரைகளால் இழுத்துச் செல்லப்படுவதும் மேற்கூரை அமைந்ததுமான ஊர்தி; இரதம்; நால்வகைப் படைகளுள் ஒன்று. *தேரும் யானையும் குதிரையும் பிறவும்* (தொல். 1161:1).

தேர்[2]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஆராய்ந்தறிதல், ஆய்ந்து தெளிதல் *தேர்ந்து வெளிப்படுத்த ஏனை மூன்றும்* (தொல். 101:2).

தேரோர் தோற்றிய வென்றி *பெயர்*

வாகைத் திணையின் துறைகளுள் ஒன்று; போர்க்களத்தைப் பாடும்போது அவ்விடத்தின் தொழிலை உழவுத் தொழிலுடன் ஒப்பிட்டுக் கூறுதல். *ஏரோர் களவழி அன்றிக் களவழித் தேரோர் தோற்றிய வென்றியும்....* (தொல். 1026:3-4).

தேவகை *பெயர்*

திசையை உணர்த்தும் இடவேற்றுமைக் கூறுபாடு அருகிய வழக்கு. *பின்சார் அயல்புடை தேவகை எனாஅ* (தொல். 567:2); *தேவகை என்பது திசைக்கூறு அரங்கின் வடக்கிருந்தான் தெற்கிருந்தான் என்ற வழி, வடக்கு தெற்கென ஒருபொருள் தோன்றி நின்றது* (தொல். 567:2 தெய்வச்.)

தேவர் *பெயர்*

கடவுளர், தெய்வங்கள், அமரர் *தேவர்ப் பராஅய முன்னிலைக் கண்ணே* (தொல் 1398:2).

தேற்றம் *பெயர்*

1. ஒரு பொருள் இத்தன்மையதுதான் எனக் கொள்ளும் உறுதி, நிச்சயம் *மன்றென் கிளவி தேற்றம் செய்யும்* (தொல் 750)

2. ஒரு பொருளில் ஏற்பட்ட ஐயம்தீர்ந்து ஏற்படும் தெளிவு *தீராத் தேற்றம் உளப்படத் தொகைஇ* (தொல் 1051·5).

தேற்றவெகரம் *பெயர்*

ஒரு பெயர்ச்சொல்லுடன் சேர்ந்து பொருளை உறுதிப்படுத்துகின்ற இடைச்சொல்லாகிய ஏகாரம்; தேற்றேகாரம் *தேற்ற எகரமும் சிறப்பின் ஒவ்வும்* (தொல். 274:1).

தேறு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

தெளிவடைதல்; ஐயம்நீங்குதல். *தேறத் தொன்றும் பொருள்தெரி நிலையே* (தொல். 537:4) .

தேன் *பெயர்*

மலர்களிலிருந்து தேனீக்களால் சேகரிக்கப்படுவதும், இனிப்புச் சுவையுடையதும், மருத்துவப்பயன் மிக்கதும் ஆகிய ஒரு நீர்மம். *தேன்என் கிளவி வல்லெழுத்து இயையின்* (தொல். 341:1)

தை

தை *பெயர்*

த் என்னும் மெய்யின்மீது ஐகார உயிர்ஏற உண்டாகும் உயிர்மெய் நெடில்.

தைவா[வரு]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

வருடுதல்; நீவுதல். *ஊழ்அணி தைவரல்* (தொல் 1211:2)

தொ

தொ *பெயர்*

த் என்னும் மெய்யின்மீது ஒகர உயிர் ஏற உண்டாகும் உயிர்மெய்க் குறில்

தொகு[1]-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

சுருக்குதல். *தொகுத்த மொழியான் வகுத்தனர் கோடல்* (தொல். 1614:17).

தொகு[2]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. உருபு முதலியன மறைதல். *பண்புதொக வருஉம் கிளவியானும்* (தொல். 901:1)

2. ஒன்றாதல், சேர்தல், கூடுதல். *தொக்க நான்கும் உள்என மொழிப* (தொல். 1039:11).

தொகுத்த மொழியான் வகுத்தனர் கோடல் *பெயர்*

32 இலக்கிய உத்திகளுள் ஒன்று; பலவாக வகுத்துச் சொல்லியவற்றை ஒரு சொல்லால் தொகுத்துக் கூறுதல் *தொகுத்த மொழியான் வகுத்தனர் கோடல்* (தொல் 1614:17)

தொகுத்துக் கூறல் *பெயர்*

32 இலக்கிய உத்திகளுள் ஒன்று; பல இடங்களில் கூறப்பெற்ற செய்திகளை ஓரிடத்தே சுருக்கிக் கூறுதல். *தொகுத்துக் கூறல் வகுத்து மெய்ந் நிறுத்தல்* (தொல். 1614:3).

தொகுதி *பெயர்*

பல பொருள்களின் சேர்க்கை. *எண்ணின் தொகுதி உளப்படப் பிறவும்* (தொல். 483:9).

தொகை *பெயர்*

எண்ணிக்கை *யாவயின் வரினும் தொகைஇன் றியலா* (தொல். 775:4).

தொகைநிலை *பெயர்*

1. உழிஞைத் திணையின் துறைகளுள் ஒன்று; போரில் வென்ற வேந்தன், தன் படையினரைச் சிறப்பிக்க ஓர் இடத்தில் கூட்டுதல். *வென்ற வாளின் மண்ணொடொன்றத் தொகைநிலை என்னும் துறையொடு தொகைஇ* (தொல். 1018:11-12).

2. தும்பைத் திணையின் துறைகளுள் ஒன்று; போரில் இருதரப்பினரும் முற்றிலுமாக இறந்து விடுவதைக் கூறுதல். *இருபெரு வேந்தர் தாமும் சுற்றமும் ஒருவரும் ஒழியாத் தொகைநிலைக் கண்ணும்* (தொல். 1022:12-13).

தொகைநிலை *பெயர்*

சுருக்கம். *பரிபா டல்லே தொகைநிலை வகையின்* (தொல். 1380:1).

தொகைமொழி *பெயர்*

வேற்றுமை உருபு முதலியன தொக்கு நிற்கும் சொற்றொடர்; வேற்றுமைத்தொகை முதலிய அறுவகை. *அவ் ஆறு என்ப தொகைமொழி நிலையே* (தொல். 895:4).

தொகை *பெயர்*

காண்க: தொகைமொழி *எல்லாத் தொகையும் ஒருசொல் நடைய* (தொல். 903).

தொகைவிரி *பெயர்*

முதல்நூலைச் சில இடங்களில் சுருக்கியும், சில இடங்களில் விரித்தும் இயற்றப்பெறும் வழிநூல்வகை. *தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்து* (தொல். 1601:1).

தொடக்கம் *பெயர்*

ஒரு பொருளின் முதல்நிலை; ஆரம்ப நிலை. *தொடக்கம் குறுகும் பெயர்நிலைக் கிளவி* (தொல் 321:2)

தொடர்[1] *பெயர்*

ஒன்றற்கு மேற்பட்ட சொற்கள் சேர்ந்துவரும் சொற்கோவை; சொற்றொடர். *தொடர்அல் இறுதி தம்முன் தாம்வரின்* (தொல். 215:1).

தொடர்[2]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

பின்பற்றுதல். *உருபு தொடர்ந்து அடுக்கிய வேற்றுமைக் கிளவி* (தொல். 588:1).

தொடர்[3]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

இடையறாது ஒழுகுதல், தடையில்லாமல் செய்தல். *பொதுமொழி தொடரின் அதுபடலம் ஆகும்* (தொல் 1430:2)

தொடர்நிலை *பெயர்*

பலபொருள் தொடரால் பல அடிகளைப் பெற்றுவரும் நீண்ட பா அல்லது பல சொற்களைப் பலபொருள் தொடரால் பெற்றுவரும் பாத்தொகை ஆகிய தொடர்நிலைச் செய்யுள் (நச்சர்.). *எ-டு.:* முல்லைப்பாட்டு, சீவகசிந்தாமணி. *மாட்டும் எச்சமும் நாட்டல் இன்றி உடனிலை மொழியினும் தொடர்நிலை பெறுமே* (தொல். 1476).

தொடாக்காஞ்சி *பெயர்*

காஞ்சித் திணையின் துறைகளுள் ஒன்று; போரில் புண்பட்ட கணவனைப் பேய்கள் தொட்டுவிடாமல் அவனுடைய மனைவி பாதுகாக்கும் சிறப்பு. *இன்னகை மனைவி பேஎய் புண்ணோன் துன்னுதல் கடிந்த தொடாஅக் காஞ்சியும்* (தொல். 1029:10-11).

தொடி *பெயர்*

பொன், வெள்ளி முதலிய உலோகங்களாலோ, சங்கு, தந்தம் முதலிய உயிரினப் பொருள்களாலோ (இக்காலத்தில் கண்ணாடி, நெகிழ்மம் (பிளாஸ்டிக்) முதலிய செயற்கைப் பொருள்களாலோ) வளையமாகச் செய்யப்பட்டுப் பெண்கள் முன்கைகளில் அணிந்து கொள்ளும் ஓர் அணிகலன், வளையல் *ஒண்தொடி மாதர் கிழவன் கிழத்தியொடு* (தொல். 1452:1)

தொடு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. கைகளால் தீண்டுதல். *மெய்தொட்டுப் பயில்தல்* (தொல். 1051:1).
2. செய்யுள் இயற்றுதல். *அந்நாற் சொல்லும் தொடுக்கும் காலை* (தொல். 887:1)

தொடை *பெயர்*

1. மோனை முதலிய ஐந்தும் செந்தொடையும் ஆகிய செய்யுள் உறுப்பு *மோனை எதுகை முரணே இயைபுஎன நால்நெறி மரபின தொடைவகை என்ப* (தொல். 1348).
2. செய்யுளின் பகுதி. *முதல்தொடை பெருகிச் சுருங்கும்மன் எண்ணே* (தொல். 1405).

தொண்டு *பெயர்*

ஒன்பது *தொண்டு தலையிட்ட பத்துக் குறை எழுநூற்று* (தொல் 1361:3).

தொல் *பெயரடை*

பழமையான *தொல்உயிர் வழங்கிய அவிப்பலி யானும்* (தொல். 1026:12)

தொல்லெயிற்று இவர்தல் *பெயர்*

உழிஞைத் திணையின் துறைகளுள் ஒன்று; மதிலின் அருகே நெருங்கியும் அதன்மேல் ஏறியும் போர்புரிதல். *தொல்எயிற்று இவர்தலும் தோலின் பெருக்கமும்* (தொல். 1017:3)

தொழில் *பெயர்*

1. செயல் *அரும் தொழில் முடித்த செம்மற் காலை* (தொல். 1096:53).
2. வினைச்சொல். *தொழிலொடு பெயரைப் புணர்க்குங் காலும்* (தொல். 109:5).

தொழிற்பெயர் *பெயர்*

ஒரு செயல் நிகழ்தலைச் சுட்டுகின்ற பெயர்ச்சொல். *எ.டு.:-* நிகழ்தல்; படித்தல். *தொழிற்பெயர் எல்லாம் தொழிற்பெயர் இயல* (தொல். 307).

தொறும் *இடை*

ஒரு சொல்லின் பொருண்மையைப் பல ஆக்கி அடுத்தடுத்து, ஆங்காங்கு என்னும் பொருளைத் தரும் ஒரு பின்னொட்டு. *எ.டு.-* ஊர்தொறும், நாள்தொறும். *அடிதொறும் தலைஎழுத்து ஒப்பது மோனை* (தொல் 1352)

தொன்மை *பெயர்*

செய்யுள் வனப்புகள் எட்டனுள் ஒன்று; பழைய வரலாறு ஒன்றைப் பாடுபொருளாகக் கொள்ளுதல். *தொன்மை தானே சொல்லுங் காலை உரையொடு புணர்ந்த பழமை மேற்றே.*(*தொல்.* 1496)

தொன்று *பெயர்*

பழமை. *தொன்று இயல் மருங்கின் செய்யுளில் உரித்தே.* (*தொல்* 238:3).

தோ

தோ *பெயர்*

த் என்னும் மெய்யெழுத்தின்மேல் ஓகார உயிர் ஏறத் தோன்றும் உயிர்மெய் நெடில்.

தோடு *பெயர்*

தென்னை, பனை, ஈந்து ஆகியவற்றின் இலை, ஓலை; மடல். *தோடே மடலே ஓலை என்றா* (*தொல்.* 1590:1).

தோல்[1] *பெயர்*

1. விலங்குகள், காய், கனிகளின் புறப்போர்வை; புறணி. *காயே பழமே தோலே செதிளே* (*தொல்* 1592:1).

2. தன் மேல் எய்யப்பெறும் படைக்கலங்களிலிருந்து ஒருவன் தற்காத்துக்கொள்ளப் பயன்படும் கேடகம், கேடயம். *தொல் எயிற்று இவர்தலும் தோலின் பெருக்கமும்* (*தொல்.* 1017:3).

தோல்[2] *பெயர்*

செய்யுளுக்கு உரிய வனப்புகள் எட்டனுள் ஒன்று;

1. மென்மையான சொற்களால் அறம் பொருள் இன்பம் ஆகிய சிறந்த பொருள்களைக் கூறுவது.

2. அனைத்துவகைச் சொற்களையும் தன்பாற் பெற்றுப் பல அடிகளை உடையது.

இழும்என் மொழியான் விழுமியது நுவலினும் பரந்த மொழியான் அடிநிமிர்ந்து ஒழுகினும் தோல் என மொழிப தொல்நெறிப் புலவர் (*தொல்.* 1497).

தோல்[ற்][3]**-த[ற]ல்** *செயப்படுபொருள் குன்றிய வினை*

வெற்றி பெறாமற் போதல்; தோல்வியடைதல். *வென்றோர் விளக்கமும் தோற்றோர் தேய்வும்* (*தொல்.* 1013·10)

தோலின் பெருக்கம் *பெயர்*

உழிஞைத் திணையின் துறைகளுள் ஒன்று, கேடகத்தால் தம்மைத் தற்காத்துக்கொண்டு மதிலை நெருங்கிப் போரிடும் வீரர்களைப் பாராட்டுதல். *தொல்எயிற்று இவர்தலும் தோலின் பெருக்கமும்* (*தொல்.* 1017:3).

தோழி *பெயர்*

அகப்பொருள் தலைவியின் பாங்கியும் செவிலித்தாயின் மகளுமாகிய பெண். *தோழி தானே செவிலி மகளே* (*தொல்* 1075)

தோள் *பெயர்*

கைகளுக்கு மேலும் கழுத்துக்குக் கீழும் அமைந்துள்ள உடற்பகுதி; புயம். *கண்ணும் தோளும் முலையும் பிறவும்* (*தொல்.* 546:1).

தோற்றம் *பெயர்*

1. வெளிப்படுதல்; புலப்படுதல். *தோற்றந் தாமே வினையொடு வருமே* (தொல் 494:3)
2. உண்டாதல். *தோற்றம் வேண்டும் அக்குஎன் சாரியை* (தொல். 330:2)
3. வடிவம். *தோற்றம் ஒக்கும் கன்என் கிளவி* (தொல். 347:2)

தோற்று-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

கண்ணுக்குத் தெரிதல். *தேரோர் தோற்றிய வென்றியும்* (தொல். 1026:4).

தோன்று-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. வெளிப்படுதல், புலப்படுதல். *யாப்பினுள் தோன்ற யாத்தமைப் பதுவே* (தொல். 1423.5)
2. வழங்கப்பெறுதல்; பயிலப்பெறுதல் *நிலத்துவழி மருங்கில் தோன்றல் ஆன* (தொல். 683:3)
3. மிகுதிப்படுதல்; அதிகம் ஆதல். *தோன்றல் சான்ற மாற்றோர் மேன்மையும்* (தொல். 991:18)
4 காட்சியளித்தல்; காணப்படுதல். *புறம்செயச் சிதைதல் புலம்பித் தோன்றல்* (தொல். 1215:1)

தௌ

தௌ *பெயர்*

த் என்னும் மெய்யின்மீது ஔகார உயிர் ஏறத் தோன்றும் உயிர்மெய் நெடில்.

ந

ந் *பெயர்*

தமிழ் நெடுங்கணக்கின் எட்டாவது மெய்யெழுத்து.

ந *பெயர்*

ந் என்னும் மெய்யெழுத்தோடு அகர உயிர் சேரத் தோன்றும் உயிர்மெய்யெழுத்து; மேல்அண்ணத்தில் பல்லின் அடிப்பகுதியில் நாக்கின் நுனி பரந்து நன்கு அழுந்த மூக்குவளியால் பிறக்கும் ஒரு மாத்திரை அளவுள்ள மெல்லின உயிர்மெய்க் குறில். *அண்ணம் நண்ணிய பல்முதல் மருங்கின் நாநுனி பரந்து மெய்யுற ஒற்றத் தாம் இனிது பிறக்கும் தகார நகாரம்* (தொல். 93); *மெல்லெழுத்து என்ப ஙஞண நமன* (தொல். 20).

நகரம் *பெயர்*

ந என்னும் எழுத்து. *நகர இறுதியும் அதனோ ரற்றே* (தொல். 299).

நகாரம் *பெயர்*

ந என்னும் எழுத்து. *மூன்றன் ஒற்றே நகாரம் ஆகும்* (தொல். 462).

நகு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

சிரித்தல். *அன்புற்று நகினும்* (தொல். 1052:2)

நகுநயம் மறைத்தல் *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; முதன்முதலாகக் காதல் வேட்கையை அறிந்துகொண்ட மகிழ்ச்சியால் தோன்றும் தன் புன்முறுவலைப் பிறர் காணாதபடி தலைவி மறைத்துக்கொள்ளுதல். *நகுநயம் மறைத்தல் சிதைவு பிறர்க்கு இன்மையொடு* (தொல். 1210:2).

நகை *பெயர்*

1. எண்வகை மெய்ப்பாடுகளுள் ஒன்றாகிய சிரிப்பு. *உள்ளப் பட்ட நகைநான்கு என்ப* (தொல் 1201:2).

2. உள்ளுறை உவமம் ஐந்தனுள் ஒன்று; சிரிப்பினால் வேறு ஒரு குறிப்புப் பொருள் தோன்றுதல் (இளம்.); நகையாடி ஒன்று நினைத்து ஒன்று கூறுதல் (நச்சர்.). *உடனுறை உவமம் சுட்டுநகை சிறப்பு என* (தொல். 1191:1)

நசை *பெயர்*

விருப்பம். *எஞ்சா மண்நசை வேந்தனை* (தொல். 1012:1).

நட்பு *பெயர்*

இரு நண்பர்களுக்கிடையே உள்ள உறவு; கேண்மை. *நட்பில் பகையில் காதலில் சிறப்பில்* (தொல் 561:4).

நட-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

நிகழ்தல்; பயிலுதல். *எழுசீர் அடியே முடுகியல் நடக்கும்* (தொல். 1325).

நடக்கை *பெயர்*

ஒழுகலாறு; ஒழுக்கம் *உயர்ந்தோர் நடக்கை எல்லாம்* (தொல். 1121:1-2).

நடுக்கம் *பெயர்*

அச்சம், சினம் போன்ற உணர்வுகளால் ஒருவரின் உடலில் உண்டாகும் அதிர்வு. *அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கம் செய்யும்* (தொல் 800).

நடுக்கு *பெயர்*

யாதானும் ஒரு பொருளை இழக்கின்றோமே எனும் மனநிகழ்ச்சி (இளம்.). *வியர்த்தல் ஐயம் மிகை நடுக்கு எனாஅ* (தொல் 1209:9).

நடுங்க *இடை*

உவம உருபுகளுள் ஒன்று. *நாட நளிய நடுங்க நந்த* (தொல். 1235:12).

நடுதல் *பெயர்*

வெட்சித் திணையின் துறைகளுள் ஒன்று; போரில் இறந்த வீரனின் நினைவாகக் கல்லினை ஊன்றுதல். *காட்சி கல்கோள் நீர்ப்படை நடுதல்* (தொல். 1010:19).

நடுவுநிலை *பெயர்*

ஒருவன் தன் சொந்த விருப்பு வெறுப்பின் காரணமாக ஒரு பக்கமாகச் சாயாமல் உண்மையாக ஒரு பொருளை நுனித்தறியும் உளப்பாங்கு. *உடைமை இன்புறல் நடுவுநிலை அருளல்* (தொல்.1209.2).

நடை *பெயர்*

1. ஒருவர் அல்லது ஒன்று கால்களைப் பயன்படுத்தி இடம்பெயரும் செயல். *நடைநவில் புரவியும் களிறும் தேரும்* (தொல் 1574:2).
2. ஒழுக்கம். *நடைமிகுத்து ஏத்திய குடைநிழல் மரபும்* (தொல். 1040:10).
3. வழக்கம். *நடைவயின் தோன்றிய இருவகை விடையும்* (தொல். 1040:15).
4. உரைநடை. *உரைவகை நடையே நான்குஎன மொழிப* (தொல். 1432:5).

நண்டு *பெயர்*

கெட்டியான ஓட்டினையும் எட்டுக் கால்களையும் இரண்டு கொடுக்குகளையும் உடைய நீர்வாழ் உயிரினம். *நண்டும் தும்பியும் நான்கு அறிவினவே* (தொல். 1533:1).

நண்(ணு)-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

பொருந்துதல். *அண்ணம் நண்ணிய பல்முதல் மருங்கின்* (தொல். 93:1).

நந்த *இடை*

உவம உருபுகளுள் ஒன்று. *நேர வியப்ப நளிய நந்த என்று* (தொல் 1240:2).

நந்து *பெயர்*

முதுகில் கெட்டியான ஓட்டுக்கூட்டினைச் சுமந்துகொண்டிருப்பதும் மிகமிக மெதுவாக இயங்குவதுமாகிய ஒரு நீர்வாழ் உயிரினம் *நீர்வாழ் சாதியுள் நந்து நாகே* (தொல். 1566).

நம் *பெயர்*

நாம் என்னும் பதிலிப்பெயர் வேற்றுமை உருபேற்கும்போது திரியும் வடிவம். *எ-டு.:* நாம்+உடைய→நம்முடைய. *நம்மூர்ந்து வரூஉம் இகரவை காரமும்* (தொல். 650:4).

நம்பு *பெயர்*

விருப்பம். *நம்பும் மேவும் நசை ஆகும்மே* (தொல். 813)

நமை *பெயர்*

மரவகை; வெக்காலி. *வினைமரக் கிளவியும் ஞெமையும் நமையும்* (தொல். 283:1).

நய-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

விரும்புதல். *காமர் நெய்யணி நயந்த கிழவனை* (தொல் 1097:8-9)

நயம் *பெயர்*

1. இனிமை. *நல்வகை உடைய நயத்தில் கூறியும்* (தொல். 1186:4).
2. அன்பு. *நல்நயம் பெற்றுழி நயம்புரி இடத்தினும்* (தொல். 1064:20).
3. நுட்பம் *நல்நயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே* (தொல். 1224:3).

நரம்பு *பெயர்*

1. யாழ் போன்ற இசைக்கருவிகளின் தந்தி.
2. இசைக்கருவிகளின் நரம்பில் எழுகின்ற இன்னிசை. *இசையொடு சிவணிய நரம்பின் மறைய* (தொல். 33·2-3)

நரம்பின் மறை *பெயர்*

இசை இலக்கணம், சங்கீத சாத்திரம். *இசையொடு சிவணிய நரம்பின் மறைய* (தொல். 33:3).

நரி *பெயர்*

கூர்மையான முகத்தையும் அடர்த்தியான வாலையும் பெற்றுள்ள செம்பழுப்பு நிறம் உடைய காட்டு விலங்கு *நரியும் அற்றே நாடினர் கொளினே* (தொல் 1569:1)

நல் *பெயரடை*

நல்ல. *நல்இசைப் புலவர் செய்யுள் உறுப்புஎன* (தொல். 1263:14)

நல்குரவு *பெயர்*

ஐம்புலன்களால் நுகரப்படுவதற்குரிய பொருள் ஒன்றும் இல்லாமை, சிறப்பாகப் பணம் இன்மை, வறுமை. *சினனே பேதைமை நிம்பிரி நல்குரவு* (தொல். 1194:1)

நல்லது *பெயர்*

1. பொருத்தமானது; ஏற்புடையது. *பல்பொருட்கு ஏற்பின் நல்லது கோடல்* (தொல். 1614:16).
2. இனியது. *விருந்தொடு நல்லவை வேண்டற் கண்ணும்* (தொல். 1096:54).

நல்லிசைநிலை *பெயர்*

தும்பைத் திணைக்குரிய துறைகளுள் ஒன்று; போர்க்களத்தில் தன் மன்னன் இறந்ததால் சினமுற்ற படைத்தலைவன் ஒருவன் தான் நெருங்கிப் போரிட்ட புகழ்மிக்க நிலையைக் கூறுதல். *செருவகத் திறைவன் வீழ்வுறச் சினைஇ ஒருவனை மண்டிய நல்லிசை நிலையும்* (தொல்.1022:14-15).

நல்லோள் *பெயர்*

மனைவி. *நல்லோள் கணவனொடு நனியழல் புகீஇ* (தொல். 1029:30).

நலம் *பெயர்*

நன்மை, சிறப்பு. *காமக் கிழத்தி நலம்பா ராட்டிய* (தொல். 1097:36)

நலன் *பெயர்*

அழகு. *சிறப்பே நலனே காதல் வலியொடு* (தொல். 1228:1).

நலிதல் *பெயர்*

மெலிதல். *கைம்மிகல் நலிதல் சூழ்ச்சி வாழ்த்தல்* (தொல். 1209:4).

நலிபு வண்ணம் *பெயர்*

செய்யுள் அடிகளில் ஆய்த எழுத்து அதிகம் பயின்று வருவதால் தோன்றும் ஓசை. *நலிபு வண்ணம் ஆய்தம் பயிலும்* (தொல். 1482).

நவ்வி *பெயர்*

நீண்ட கால்களைப் பெற்று மிக விரைவாக ஓடுவதும் மரக்கறி உணவை உண்ணுவதுமாகிய ஒரு விலங்கு; மான்வகை *புல்வாய் நவ்வி உழையே கவரி* (தொல்.1560:1).

நவில்(லு)-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

சொல்லுதல்; கூறுதல். *உஊகாரம் நவவொடு நவிலா* (தொல் 74).

நள் *பெயரடை*

நடுவாகிய. *நடுவு நிலைத் திணையே நண்பகல் வேனிலொடு* (தொல். 958:1).

நளி *பெயர்*

1. பெருமை. *தடவும் கயவும் நளியும் பெருமை* (தொல். 804).
2. செறிவு. *நளிஎன் கிளவி செறிவும் ஆகும்* (தொல். 807).

நளிய *இடை*

உவம உருபுகளுள் ஒன்று. *நளிய நந்த என்று ஒத்துவரு கிளவி உருவின் உவமம்* (தொல்.1240:2-3).

நற்றாய் *பெயர்*

(பெரும்பாலும்) தலைவியின் பெற்ற தாய். *நற்றாய் கூறல் முற்றத்தோன்றாது* (தொல். 1451:2).

நன்கு *வினையடை*

தெளிவாக; நன்றாக. *புலன்நன்கு உணர்ந்த புலமை யோரே* (தொல். 961:3).

நன்மை *பெயர்*

நலம். *நன்மையும் தீமையும் என்றுஇரு திறத்தால்* (தொல். 1000:3).

நன்று *பெயர்*

1. பெரிது. *நன்று பெரிதாகும்* (தொல். 827)
2. நல்லது. *காதல் எங்கையர் காணில் நன்றுஎன* (தொல். 1097:30).

நனவு *பெயர்*

1. ஆடுகளம் *மயில் நனவுப் புகு விறலியில் தோன்றும் நாடன்* (அகநா. 82:9-10).
2. அகலம். *நனவு உறு கட்சியின் நல் மயில் ஆல* (அகநா. 392: 17)

நனவே களனும் அகலமும் செய்யும் (தொல் 860).

நனி *பெயர்*

மிகுதி. *உறுதவ நனிஎன வரூஉம் மூன்றும் மிகுதி செய்யும் பொருள என்ப*(தொல்.784:2-3).

நனி *வினையடை*

நன்றாக. *வழிநனி கடைப்பிடித்து* (தொல். 880:5)

நனை *பெயர்*

மலரின் முதல் பருவம்; அரும்பு. *நனையே உள்ளுறுத்து அனையவை எல்லாம்*(தொல்.1591:3).

நா

நா[1] *பெயர்*

ந் என்னும் மெய்யின்மேல் ஆகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

நா[2] *பெயர்*

எலும்புகள் இல்லாமல் வாயில் அமைந்து ஓசை எழுப்பிப் பேச உதவும் உறுப்பு, நாக்கு. *சகார ஞகாரம் முதல்நா அண்ணம்* (தொல் 89)

நாகு *பெயர்*

விலங்கின் பெண்மைப் பெயர் *எருமையும் மரையும் பெற்றமும் நாகே* (தொல். 1565).

நாட்டம் *பெயர்*

1. ஆராய்ச்சி. *நன்மதி நாட்டத்து என்மனார் புலவர்* (தொல். 484:5).
2. நிலைநிறுத்தம். *உரைத்திற நாட்டம் கிழவோன் மேன* (தொல். 991:24).
3. கண்; விழி. *காமம் சொல்லா நாட்டம் இன்மையின்* (தொல். 1045:1)

நாட்டு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

நிலைநிறுத்துதல் *குறித்த பொருளை முடிய நாட்டல்* (தொல் 1338:2).

நாட *இடை*

உவம உருபுகளுள் ஒன்று *நாட நளிய நடுங்க நந்த* (தொல். 1235:12).

நாடகம் *பெயர்*

ஒரு கதையைத் தழுவி அமைந்து, பார்ப்பவர்களுக்குக் களிப்பை உண்டாக்குகின்ற கூத்து. *நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்* (தொல். 1003:1).

நாடக வழக்கு *பெயர்*

உலகில் பல காலங்களில் பல இடங்களில் பற்பல நிலையினராக வாழும் மக்களின் காதல் ஒழுக்கத்தில் நல்லனவற்றை ஏற்று, அல்லனவற்றைக் களைந்து, சுவைபடக் கற்பனை செய்து படைக்கும் அகப்பொருள் மரபு. *நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்* (தொல் 1003:1).

நாடு[1] *பெயர்*

ஓர் அரசனால் அல்லது அரசாங்கத்தால் ஆளப்படும் நிலப்பகுதி. *எ-டு.:* பாண்டிய நாடு, பாரத நாடு. *வேற்று நாட்டு அகல்வயின் விழுமத்தானும்* (தொல். 1096:45).

நாடு[2]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஆராய்ச்சி செய்தல்; ஆய்தல். *ஒப்ப நாடி உணர்தல் வேண்டும்* (தொல். 1408:2).

நாண் *பெயர்*

பெண்களுக்குரிய சிறப்புப் பண்புகளுள் ஒன்று; தன் காதல் உணர்வு மற்றவர்களுக்குத் தெரியும்போது ஏற்படும் மனநிலை; நாணம்; வெட்கம். *உயிரினும் இறந்தன்று நாணே* (தொல். 1063:1).

நாண்(ணு)-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

வெட்கப்படுதல்; பழிபாவங்களுக்கு அஞ்சுதல். *நல்லார் நாணப் பெரியவர்க் கண்ணி* (தொல் 1026:10)

நாணு *பெயர்*

காண்க: நாண். *ஆக்கம் செப்பல் நாணுவரை யிறத்தல்* (தொல். 1049:2).

நாப்பண் *இடை*

நடுவே என்னும் பொருள்தரும் ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு. *பொங்குதல் இன்றிப் புரையோர் நாப்பண்* (தொல். 1374:2).

நாம்[1] *பெயர்*

உளப்பாட்டுத் தன்மைப் பன்மைப் பெயர். *யான்யாம் நாம்என வரூஉம் பெயரும்* (தொல்.649:5).

நாம்[2] *பெயர்*

அச்சம். *நாமக் காலத்து உண்டுஎனத் தோழி* (தொல் 1096:8)

நாய்[1] *பெயர்*

வீட்டில் வளர்க்கப்படும் மிகவும் நன்றியுள்ள ஒரு விலங்கு; ஞமலி. *பாட்டி என்பது பன்றியும் நாயும்* (தொல். 1568).

நாய்[2] *பெயர்*

வட்டாட்டத்தில் (சொக்கட்டான்) பயன்படுத்தப்படும் காய். *நாயும் பலகையும் வரூஉங் காலை* (தொல் 375.1)

நால் *பெயரடை*

நான்கு என்பதன் பெயரடை வடிவம். *அந்நால் மொழியும் தம்நிலை திரியா* (தொல். 430).

நாழி *பெயர்*

இரண்டு ஆழாக்குக் கொண்ட முகத்தல் அளவை; கால்படி, ஏறத்தாழ 250 மில்லி லிட்டர். *உரிவரு காலை நாழிக் கிளவி* (தொல் 241:1).

நாள் *பெயர்*

1. விண்மீன். *நாட்பெயர்க் கிளவி மேற் கிளந்தன்ன* (தொல். 332:1).
2. ஒரு பகலும் இரவும் சேர்ந்த காலப்பகுதி; 24 மணி நேரம்; தினம். *முந்நாள் அல்லது துணைஇன்று கழியாது* (தொல். 1072:1)

3. வாழும் காலம், ஆயுட் காலம், ஆயுள். *நாளது சின்மையும் இளமையது அருமையும்* (தொல். 991:7).

நாற்றம் *பெயர்*

மூக்கினால் உணரப்படும் நுகர்வு; மணம்; வாசம்; வாசனை. *நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும்* (தொல். 1064:1)

நான்கு *பெயர்*

மூன்றை அடுத்த எண். *அவை நான்கு என்ப மொழிபுணர் இயல்பே* (தொல் 888:2).

நி

நி *பெயர்*

ந் என்னும் மெய்யெழுத்தின்மேல் இகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

நிகர்[1] *பெயர்*

ஒப்புமை. *கவரியும் கராமும் நிகர்அவற் றுள்ளே* (தொல். 1519).

நிகர்[2]-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஒத்தல்; போலுதல்; இணையாதல். *மகர அளவொடு நிகரலும் உரித்தே* (தொல். 481:3).

நிகர்[3]-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

மாறுபடுதல்; பகைமை கொள்ளுதல். *நிகர்த்து மேல்வந்த வேந்தனொடு* (தொல். 1029:14).

நிகர்ப்ப *இடை*

உவம உருபுகளுள் ஒன்று. *ஒட்ட ஒடுங்க ஒட்ட நிகர்ப்ப என்று* (தொல். 1239:2).

நிகழ்-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

நடைபெறுதல். *நிகழ்ந்தது நினைத்தற்கு ஏதுவும் ஆகும்* (தொல். 993).

நிகழ்ச்சி *பெயர்*

1. நடைபெறும் ஒன்று; நிகழ்வு; சம்பவம். *கரும நிகழ்ச்சி இடம்என மொழிப* (தொல்.1460:2).

2. பொருள் ஈட்டும் தொழில்; வேலை; பணி; உத்தியோகம். *இல்என மொழிப பிறவகை நிகழ்ச்சி* (தொல். 1583:2).

நிகழ்த்து-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

சொல்லுதல்; கூறுதல். *நிலைமைக்கு ஏற்ப நிகழ்த்துப என்ப* (தொல் 1578:2).

நிகழ்வு *பெயர்*

1. நிகழ்காலம். *இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்று* (தொல். 911:1).

2 நடைபெறுகை, நிகழ்ச்சி. *பொருள்நிகழ்வு உரைப்பது காலம் ஆகும்* (தொல். 1461:3).

நிச்சம் *வினையடை*

எப்போதும்; எந்நாளும். *நிச்சமும் பெண்பாற்கு உரியது என்ப* (தொல். 1048:2).

நிம்பிரி *பெயர்*

பொறாமை. *நிம்பிரி கொடுமை வியப்பொடு புறமொழி* (தொல். 1223:1).

நிமித்தம் *பெயர்*

1. ஒரு செயல் நடைபெற முதலாக இருப்பது; காரணம். *ஊடல் அவற்றின் நிமித்தம் என்று இவை* (தொல். 963:2).

2. பின்னர் நடைபெற உள்ள ஒரு நிகழ்ச்சியின் முன் அறிவிப்பு; சகுனம். *ஆவொடு பட்ட நிமித்தம் கூறலும்* (தொல் 1127:3).

நிமிர்-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

நீளுதல்; நீளம் ஆதல். *அடக்கியல் இன்றி அடி நிமிர்ந்து ஒழுகியும்* (தொல். 1409:4).

நிமிர்வு *பெயர்*

நீட்டம். *அம்மை தானே அடிநிமிர்வு இன்றே* (தொல். 1494:3)

நிரம்பு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

நிறைதல், முழுமையாதல். *நிரம்ப நாடின் அப்பெயர்க்கு உரிய* (தொல். 1524:2).

நிரல் *பெயர்*

வரிசை. *நேர் இன மணியை நிரல்பட வைத்தாங்கு* (தொல். 1429:1).

நிரனிறை *பெயர்*

பொருள்கோள் நான்கனுள் ஒன்று, பெயர்ச்சொற்களையும் வினைச்சொற்களையும் தனித்தனியே அடுக்கி நிறுத்த முறையில் சொற்களைக் கொண்டுகூட்டிப் பொருள்கொள்ளுதல். *நிரல்நிறை சுண்ணம் அடிமறி மொழிமாற்று* (தொல். 888:1).

நிரை *பெயர்*

செய்யுளுக்குரிய அசைகளுள் ஒன்று; குறிலிணைஅல்லது குறில்நெடில் தனித்தோ ஓரிரு ஒற்றடுத்தோ வருகின்ற அசை; நிரையசை. *எ-டு*.: பசு, கடா, விளம், படாம், கலுழ்ம். *நேர்ஈற்று இயற்சீர் நிரையும் நிரைபும்* (தொல். 1334:1).

நிரையசை *பெயர்*

காண்க: நிரை. *வெண்சீர் ஈற்றசை நிரையசை இயற்றே* (தொல். 1290).

நிரைபு *பெயர்*

தொல்காப்பியச் செய்யுளியல் மரபின்படி செய்யுளுக்கு உரிய நான்கு அசைகளுள் ஒன்று; உகரம் சேர்ந்த நிரையசை. *எ-டு*. உலகு. *நேர்ஈற்று இயற்சீர் நிரையும் நிரைபும்* (தொல்.1334:1).

நில்[ற்]-த[ற]ல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

நிலைபெறுதல்; இருத்தல். *நில்லா உலகம் புல்லிய நெறித்தே* (தொல். 1028:2).

நிலப்பெயர் *பெயர்*

ஒருவருக்கு அவர் பிறந்த நிலத்தின் காரணமாக வழங்கும் பெயர். *எ-டு*.: சோழியன். *நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின் பெயரே* (தொல். 652:1).

நிலம் *பெயர்*

1. ஐம்பெரும் பூதங்களுள் ஒன்று; கடலோ வானமோ அல்லாத கடினமான உலகப் பரப்பு; பூமி; தரை. இருநிலம் *தீண்டா அருநிலை வகையொடு* (தொல். 1021:3).

2. குறிஞ்சி முதலிய ஐவகை நிலப்பகுதி. *முதல்எனப் படுவது நிலம்பொழுது இரண்டின்* (தொல் 951:1).

3. நின்ற நிலை; இடம். *அங்கதம் முதுசொல் அவ்வேழ் நிலத்தும்* (தொல். 1339:2).

4. வகை. *தவல்அரும் சிறப்பின் ஐந்நிலம் பெறுமே* (தொல். 1056:2).

நிலவு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

வழங்கப்படுதல்; பயிலுதல். *நெறிபடு பொருள்வயின் நிலவுதல் வரையார்* (தொல். 589:2)

நிலன் *பெயர்*

காண்க: நிலம். *நிலனே காலம் கருவி என்றா* (தொல். 598:2).

நிலா *பெயர்*

சந்திரனின் ஒளி; நிலவு *நிலாஎன் கிளவி அத்தொடு சிவணும்* (தொல். 229)

நிலை[1] *பெயர்*

1. நிற்கும் தன்மை; இருக்கும் இடம்; நிலைமை. *பாநிலை வகையே கொச்சகக் கலிஎன* (தொல். 1414:4).

2. வழக்கு. *மரபு நிலை திரிதல் செய்யுட்கு இல்லை* (தொல் 1594:1)

நிலை[2]-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

அகலாமல் இருத்தல்; உறுதியாக இருத்தல். *வழுஇன்று நிலைஇய இயற்படு பொருளினும்* (தொல் 1061:30).

நிலைக்களம் *பெயர்*

ஒரு பொருள் தோன்றுவதற்கு அடிப்படையான சூழல். *அந்நால் பண்பும் நிலைக்களம் என்ப* (தொல். 1228:2).

நிலைபெறு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

தங்குதல்; இருத்தல். *வேற்றுமை உருபு நிலைபெறு வழியும்* (தொல் 133:2).

நிலைமை *பெயர்*

தன்மை; இருக்கும் இயல்பு *நிலைமைக்கு ஏற்ப நிகழ்த்துப என்ப* (தொல். 1578:2).

நிலைமொழி *பெயர்*

சொற்புணர்ச்சியில் முதலில் நிற்கும் சொல். *எ-டு.:* `தமிழிசை' என்பதில் 'தமிழ்'. *அப்பால் ஆறன் நிலைமொழி முன்னர்* (தொல் 174:2)

நிழத்து-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

முதலில் இருந்த நிலையிலிருந்து நுட்பமாதல். ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய் ஆவயின் *நான்கும் உள்ளதன் நுணுக்கம்* (தொல் 814) *அருவி மாமலை நிழத்தவும்* (பொருநர். 235).

நிழல் *பெயர்*

1. குளிர்ச்சியாகவும் வெயில் படாமலும் இருக்கும் நிலை நடைமிகுத்து ஏத்திய குடைநிழல் *மரபும்* (தொல். 1040:10)

2. ஒரு பொருள் கண்ணாடியில் எதிரொளிக்கும் வடிவம்; பிரதிபிம்பம். *ஆடி நிழலின் அறியத் தோன்றி* (தொல். 1428:3)

நிறம் *பெயர்*

பசுமை; கருமை முதலிய வண்ணம். *நிறத்துஉரு உணர்த்தற்கும் உரிய என்ப* (தொல் 857).

நிறன் *பெயர்*

காண்க: நிறம். *பசப்பு நிறன் ஆகும்* (தொல். 791).

நிறுத்தசொல் *பெயர்*

காண்க: நிலைமொழி. *நிறுத்த சொல்லின் ஈறு ஆகு எழுத்தொடு* (தொல். 109:2).

நிறுத்து-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. இருக்கச்செய்தல்; நிலைநாட்டுதல். *அறிவும் புலனும் வேறுபட நிறீஇ* (தொல். 1146:9).
2. மேற்செல்லாமல் தடுத்தல். *நிரம்ப நீக்கு நிறுத்தல் அன்றியும்* (தொல். 1186:2).
3. துலாக்கோலில் வைத்து எடை போடுதல்; தராசில் நிறை அறிதல். *நிறுத்தலின் அளவின் எண்ணின் என்றா* (தொல். 557:6).

நிறை[1] *பெயர்*

காதலர்களாகிய இரு பாலாரிடமும் இருக்க வேண்டிய பண்பு நலன்; அடக்கம், மறை பிறர் அறியாமை, மனத்திண்மை, நெஞ்சைத் தன்வயத்தில் நிறுத்தல் என்னும் பண்புகளின் கூட்டம். *நிறையே அருளே உணர்வொடு திருஎன* (தொல். 1222:3).

நிறை[2] *பெயர்*

1. ஒரு பொருளைத் துலாக்கோலில் நிறுத்துப்பார்த்து அறியப்படும் எடை. *நிறைப்பெயர்க் கிளவி* (தொல். 900:2).
2. ஒப்பு; இணை; சமானம். *நிறை அரும் சிறப்பில் துறை இரண்டு உடைத்தே* (தொல்.1029:36).

நிறை[3]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. முழுமை ஆகுதல்; நிரம்புதல். *இசைநிலை நிறைய நிற்குவ தாயின்* (தொல். 1288:1).
2. மிகுதல்; அதிகமாதல். *நிறைந்த காதலில் சொல்எதிர் மழுங்கல்* (தொல். 1061:2).

நிறைபு *பெயர்*

காண்க: நிறைவு. *குற்றெழுத்து ஐந்தும் மொழிநிறைபு இலவே* (தொல். 44).

நிறைவு *பெயர்*

1. மிகுதி. *துவன்று நிறைவு ஆகும்* (தொல். 816).
2. மன அமைதி. *செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்* (தொல். 1158:1).

நின் *பெயர்*

நீ என்னும் முன்னிலை ஒருமைப்பெயர் வேற்றுமை உருபு ஏற்கும்போது கொள்ளும் வடிவம். *எ-டு.:* நீ+ஐ→நின்னை. *வழிபடு தெய்வம் நிற்புறம் காப்ப* (தொல். 1370:1).

நின்றசொல் *பெயர்*

காண்க: நிலைமொழி. *நின்றசொல்முன் இயல்பு ஆகும்மே* (தொல். 145:4).

நின்றை *வினைமுற்று*

நின்றனை. (அருகிய வழக்கு). *கேட்டை என்றா நின்றை என்றா* (தொல். 910:1) *நின்றை காத்தை என்பன இக்காலத்துப் பயின்று வாரா.* (சேனா. தொல். சொல்.426 உரை).

நினை-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

சிந்தித்தல்; கருதுதல், யோசித்தல். *நீடு நினைந்து இரங்கல் கூடுதல் உறுதல்.*(தொல். 1051:3).

நினைவு *பெயர்*

எண்ணம்; கருத்து. *ஏற்றம் நினைவும் துணிவும் ஆகும்* (தொல். 821).

நீ

நீ[1] *பெயர்*

ந் என்னும் மெய்யின்மீது ஈகார உயிர் ஏற உண்டாகும் உயிர்மெய் நெடில்.

நீ[2] *பெயர்*

முன்னிலை ஒருமைப் பெயர். *நீஎன் கிளவி ஒருமைக்கு உரித்தே* (தொல். 676:2).

நீ[3]-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. துறந்துவிடுதல்; ஒன்றன்மேல் உள்ள பற்றை விட்டுவிடுதல். *கடிமனை நீத்த பாலின் கண்ணும்* (தொல். 1026:16).

2. பிரிந்து செல்லுதல். *நீத்து அகன்று உறையார் என்மனார் புலவர்* (தொல். 1137:2).

நீ[4]-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. நீங்குதல். *அல்லல் நீத்த உவகை நான்கே* (தொல். 1208:2)

2. இறத்தல்; சாதல். *நீத்த கணவற் றீர்த்த வேலில்* (தொல். 1029:12)

நீக்கு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

விட்டுப்பிரிதல். *நீக்கலின் வந்த தம்உறு விழுமமும்* (தொல்.989:3).

நீங்கு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

விலகுதல்; பிரிந்து செல்லுதல்; அகலுதல். *வினையின் நீங்கிய விளங்கிய அறிவின்* (தொல்.1598:1).

நீட்டம் *பெயர்*

உச்சரிப்பில் ஓர் எழுத்தின் கால அளவாகிய மாத்திரை மிகுதல். *நின்ற ஈற்றயல் நீட்டம் வேண்டும்* (தொல். 631:2).

நீடு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

நீளுதல். *சுட்டுச் சினை நீடிய மென்தொடர் மொழியும்* (தொல் 428:1).

நீடு நினைந்திரங்கல் *பெயர்*

தலைவியை அணையப்பெறாமல் காலம் வீணாகக் கழிவதை எண்ணித் தலைவன் மிகவும் வருந்துவதைக் கூறும் அகத்துறை *நீடு நினைந்திரங்கல் கூடுதல் உறுதல்* (தொல். 1051:3)

நீயிர் *பெயர்*

நீர் என்னும் முன்னிலைப் பன்மைப் பெயர். (அருகிய வழக்கு). *நீயிர் நீஎன வரூஉம் கிளவி* (தொல். 675:1).

நீர் *பெயர்*

1. ஐம்பெரும் பூதங்களுள் ஒன்றும், உயிரினங்களின் வாழ்வுக்கு மிக இன்றியமையாததும், மழையால் பெறப்படுவதும் ஆகிய நீர்மம்; தண்ணீர். *நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்* (தொல் 1593:1)

2. குளம், ஏரி, ஆறு, கடல் முதலிய நீர்நிலை. *நீர்வாழ் சாதியுள் அறு பிறப்பு உரிய.* (தொல். 1545)

3. பண்பு; தன்மை; குணம். *பிறநீர் மாக்களின் அறிய ஆயிடை* (தொல். 1068:3)

நீர்ச்செரு *பெயர்*

உழிஞைத் திணையின் துறைகளுள் ஒன்று; கோட்டையின் அகழியைத் தாண்டி உள்ளே நுழைய முயலும் பகைவரின் படையும், அதனைத் தடுத்து நிறுத்த முயலும் கோட்டைக்கு உரியவரின் படையும் அந்த அகழியைச் சூழ்ந்து புரியும் போர்; நீர்ச்செரு வீழ்ந்த பாசி. *நீர்ச்செரு வீழ்ந்த பாசியும்* (தொல் 1018:3)

நீர்ப்படை *பெயர்*

வெட்சித் திணையின் துறைகளுள் ஒன்று; போரில் இறந்துபட்டவனின் நடுகல்லை வழிபடுவதற்காக நீராட்டுதல். *காட்சி கல்கோள் நீர்ப்படை நடுதல்* (தொல். 1010:19)

நு

நு *பெயர்*

ந் என்னும் மெய்யோடு உகர உயிர் சேரத் தோன்றும் உயிர்மெய்க் குறில்.

நுகர்-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஐம்புலன்களில் ஒன்றாலோ பலவற்றாலோ ஒரு பொருளைத் துய்த்தல்; அனுபவித்தல். *பதி இகந்து நுகர்தலும் உரிய என்ப* (தொல். 1141:2)

நுகர்ச்சி *பெயர்*

ஐம்புலன்களுள் ஒன்றாலோ பலவற்றாலோ ஒரு பொருளைத் துய்க்கின்ற அனுபவம்; துய்ப்பு. *சொல்லிய நுகர்ச்சி வல்லே பெற்றுழி* (தொல். 1051:4)

நுகர்வு *பெயர்*

துய்ப்பு. அனுபவம். *நோயும் வேட்கையும் நுகர்வும் என்று ஆங்கு* (தொல். 1196:4)

நுண்ணிமை *பெயர்*

நுட்பம்; கூர்மை; நுண்மை. *நுண்ணிதின் உணர்ந்தோர் கண்டவாறே* (தொல். 7:2)

நுண்மை *பெயர்*

நுட்பம். *நுண்மையொடு புணர்ந்த ஒண்மைத் தாகி* (தொல். 1604:4)

நுணங்கு[1] *பெயர்*

நுட்பம் *நொசிவும் நுழைவும் நுணங்கும் நுண்மை* (தொல். 858)

நுணங்கு[2]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

நுட்பமாதல் *நூல் என மொழிப நுணங்கு மொழிப் புலவர்* (தொல்: 1602:5).

நுணுக்கம் *பெயர்*

நுட்பம். *ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்* (தொல். 814:2)

நுதல்[1] *பெயர்*

நெற்றி. *புகுமுகம் புரிதல் பொறிநுதல் வியர்த்தல்* (தொல். 1210:1).

நுதல்[1](லு)-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

சொல்லுதல்; கூறுதல். *ஒருபொருள் நுதலிய சூத்திரத் தானும்* (தொல். 1427:1).

நும் *பெயர்*

நீர் என்னும் முன்னிலைப் பன்மைப்பெயர் வேற்றுமை உருபு ஏற்கும்பொழுது பெறும் வடிவம். *எ-டு.* நீர்+ஆல்→ நும்மால். *நும்என் இறுதி இயற்கை ஆகும்.* (*தொல்.* 188).

நுவல்-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

சொல்லுதல்; கூறுதல். *அப்பண் பினவே நுவலுங் காலை* (*தொல்.* 735:9)

நுவல்வழித் தோற்றம் *பெயர்*

வெட்சித் திணையின் துறைகளுள் ஒன்று; பகைவர்களின் ஆநிரைகளைக் கவரச் சென்ற மறவர்கள், அவற்றைக் கவர்ந்துகொண்டு தம் ஊர் எல்லையில் வருதல். *நோய் இன்று உய்த்தல் நுவல்வழித் தோற்றம்.* (*தொல்* 1008:6)

நுழைவு *பெயர்*

நுண்மை; நுட்பம் *நொசிவும் நுழைவும் நுணங்கும் நுண்மை* (*தொல்.* 858).

நுனி[1] *பெயர்*

ஒன்றன் இறுதிப்பகுதி. *நாநுனி பரந்து மெய்யுற ஒற்ற* (*தொல்.* 93:2).

நுனி[2]-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஆழ்ந்து நோக்குதல்; நுட்பமாக ஆய்வு செய்தல். *நுனித்தகு புலவர் கூறிய நூலே* (*தொல்.*1614:28).

நூ

நூ *பெயர்*

ந் என்னும் மெய்யின்மேல் ஊகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

நூல்[1] *பெயர்*

1.செய்யுள் வகைகளுள் ஒன்று; இலக்கணம் போன்ற அறிவியற் செய்திகளைக் கூறுவது. *பாட்டு உரை நூலே வாய்மொழி பிசியே* (*தொல்.* 1339:1) பாட்டுச் செய்யுள் உரைச்செய்யுள் நூற்செய்யுள் எனத் தமிழ்நாட்டார் வழங்கியவாறே பெயர் பெறும் என்றவாறு (நச்சர்.).

2. குறிப்பிட்ட ஒரு பொருளை அதன் கருத்து மாறுபடாமல் தொகுத்தும் வகுத்தும் காட்டி விரிவாகப் பொருள் காண வாய்ப்பு இருக்கும்படி நுட்பமாக விளக்கும் புத்தகம்; இலக்கணம். *நூல்நவில் புலவர் நுவன்று அறைந்தனரே.* (*தொல்.* 1414:5).

நூல்[2] *பெயர்*

சில இனத்தார் உரிய சடங்கு செய்து தம் மார்பில் அணியும் முப்புரி நூல்; பூணூல். *நூலே கரகம் முக்கோல் மணையே* (*தொல்.* 1573:1).

நூழில் *பெயர்*

தும்பைத் திணையின் துறைகளுள் ஒன்று; வீரன் ஒருவன் போரில் பகைவர் பலரைக் கொன்று குவித்த சிறப்பைக் கூறுதல். *ஒள்வாள் வீசிய நூழிலும்* (*தொல்* 1022:17).

நூறு *பெயர்*

பத்துப் பத்துகள் சேர்ந்த எண். *நூறு முன் வரினும் கூறிய இயல்பே.* (*தொல்.* 461).

நெ

நெ *பெயர்*

ந் என்னும் மெய்யின்மீது எகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

நெகு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

மனம் உருகுதல். *என்புநெகப் பிரிந்தோள் வழிச்சென்று* (தொல். 1064:27).

நெஞ்சம் *பெயர்*

உள்ளம். *ஆர்வ நெஞ்சமொடு செப்பிய வழியினும்* (தொல். 990:4).

நெஞ்சழிதல் *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; பிரிவாற்றாத தலைவி தலைவன்மேல் அன்பு இல்லாதவள் போலப் பேசியதற்காகப் பிறகு வருந்துதல். *அறன் அழிந்துரைத்தல் ஆங்கு நெஞ்சு அழிதல்* (தொல். 1219:8).

நெஞ்சு *பெயர்*

1. மார்பு. *தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலை இ* (தொல். 83:2).
2. உள்ளம்; மனம். *நாட்டு இயல் மரபில் நெஞ்சு கொளின் அல்லது* (தொல். 1196:6).

நெட்டெழுத்து *பெயர்*

காண்க: நெடில். *நெட்டெழுத் திம்பரும் தொடர்மொழியீற்றும்* (தொல். 36:1).

நெடிது *பெயர்*

காண்க: நெடில். *அயல் நெடிது ஆயின் இயற்கை ஆகும்.* (தொல். 632).

நெடியது *பெயர்*

காண்க: நெடில். *நெடியதன் முன்னர் ஒற்றுமெய் கெடுதலும்* (தொல். 161:1).

நெடில் *பெயர்*

இரண்டு மாத்திரை அளவு ஒலிக்கின்ற எழுத்து. *குறிலே நெடிலே குறில் இணை குறில்நெடில்* (தொல் 1265:1)

நெடிலடி *பெயர்*

ஒற்றொழித்துப் பதினைந்துமுதல் பதினேழுவரையான எழுத்துகளானியன்ற செய்யுளடி. *மூவைந்து எழுத்தே நெடிலடிக்கு அளவே* (தொல். 1300:1).

நெடு *பெயரடை*

நீண்ட. *நெடுமுதல் குறுகும் மொழிமுன் னான* (தொல். 162:4).

நெடுஞ்சீர் வண்ணம் *பெயர்*

செய்யுளில் நெட்டெழுத்துகள் மிக அதிகமாகப் பயின்று வருவதால் உண்டாகும் பாவோசை. *நெடுஞ்சீர் வண்ணம் நெட்டெழுத்துப் பயிலும்* (தொல். 1479:1).

நெடுந்தகை *பெயர்*

மேன்மையானவன். *நெடுந்தகை செம்மல் என்று இவை பிறவும்* (தொல். 1576:2).

நெடும் *பெயரடை*

நீண்ட. *ஐஎன் நெடும்சினை மெய்பெறத் தோன்றும்* (தொல். 56:2).

நெடுமை *பெயர்*

நீட்சி; நீளம். *நேர்பும் நெடுமையும் செய்யும் பொருள* (தொல். 801:2).

நெடுமொழி *பெயர்*

1. வெட்சித் திணையின் துறைகளுள் ஒன்று; அரசன் ஒருவன் தன் படைவலிமையையும் போராற்றலையும் எண்ணிப்பார்த்துப் பகைவனைத் தாழ்த்திக் கொடுஞ்சொல் கூறல். *தலைத்தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்தலும்* (தொல். 1010:13).

2. வஞ்சித் திணையின் துறைகளுள் ஒன்று; மன்னனால் சிறப்புப்பெற்ற வீரன் ஒருவன் தன்னைத்தானே புகழ்ந்து கொள்வதாகவோ பிறர் அவனைப் புகழ்வதாகவோ அமையும் உரை; புகழ்ச்சொல். *மாராயம் பெற்ற நெடுமொழி யானும்* (தொல். 1013:5).

நெடுவெண்பாட்டு *பெயர்*

ஆறு அடிகள்முதல் பன்னிரண்டு அடிகள்வரை பெறும் வெண்பா. *நெடுவெண் பாட்டே முந்நான்கு அடித்தே* (தொல். 1417:1).

நெய் *பெயர்*

தாவரத்தின் விதைகளிலிருந்தும், விலங்குகளின் பாலிலிருந்தும் எடுக்கப்படும் கெட்டியான நீர்மம்; எண்ணெய். *கயந்தலை தோன்றிய காமர் நெய்யணி* (தொல். 1097:8)

நெய்தல் *பெயர்*

1. தமிழ் அகப்பொருளின் முதற்பொருளாகிய நிலப்பிரிவுகள் ஐந்தனுள் ஒன்று; கடலும் கடல் சார்ந்த பகுதியும். *முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என* (தொல்.952:5)

2. ஐந்திணைகளுள் ஒன்று, இரங்கலையும், இரங்கல் நிமித்தத்தையும் தன் உரிப்பொருளாக உடையது. *தும்பை தானே நெய்தலது புறனே* (தொல்.1019)

நெய்யணி *பெயர்*

(குழந்தை பெற்ற தாய்க்கு உரிய நாளில்) எண்ணெய் தேய்த்து நீராட்டல். *புதல்வற் பயந்த புனிறுதீர் பொழுதின் நெய்யணி மயக்கம் புரிந்தோள் நோக்கி* (தொல். 1096:28).

நெருங்கு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

அழுத்தமாக வலியுறுத்திக் கூறுதல்; இடித்துரைத்தல். *அந்தம் இல் சிறப்பின் மகப்பழித்து நெருங்கினும்* (தொல். 1097:24).

நெல் *பெயர்*

வெப்பமண்டலத்தில் நீர்வளம் மிகுந்த நன்செய் நிலங்களில் விளைவதும் தென்னிந்திய மக்களின் முதன்மை உணவாகிய அரிசியைத் தருவதுமாகிய கூலம்; நவதானியத்துள் ஒன்று. *நெல்லும் புல்லும் நேரார் ஆண்டே* (தொல். 1527:1).

நெறி *பெயர்*

1. மரபு. *இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமை* (தொல் 1593:3)
2. வகை. *நால்நெறி மரபின தொடைவகை என்ப* (தொல் 1348:2)
3. வழி. *நல்நெறிப் படரும் தொன்நலப் பொருளினும்* (தொல் 1096:5)

நெறிப்படு-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஒழுங்குபடுத்துதல், முறைப்படுத்துதல். *நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே* (தொல்.1529:7).

நெறிப்பாடு *பெயர்*

முறைமை; ஒழுங்கு. *குறிப்பின் வருஉம் நெறிப்பாடு உடைய* (தொல். 1234:2).

நெறிமை *பெயர்*

மரபு. *பொற்புடை நெறிமை இன்மை யான* (தொல். 985:2).

நே

நே *பெயர்*

ந் என்னும் மெய்யெழுத்தின்மேல் ஏகார உயிர் ஏறத்தோன்றும் உயிர்மெய் நெடில்.

நேர்[1] *பெயர்*

செய்யுள் உறுப்பாகிய அசைகளுள் ஒன்று; குறிலோ நெடிலோ தனித்தும் ஒற்றடுத்தும் வருவதாகிய அசை; நேரசை. *எ-டு*.: கு,செல், ஆ, ஆன். *நேர் அவண் நிற்பின் இயற்சீர்ப்பால* (தொல்.1276).

நேர்[2]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஒத்தல்; நிகர்த்தல். *நேர் இனமணியை நிரல்பட வைத்தாங்கு* (தொல். 1429:1).

நேர்[3]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. பொருந்துதல். *நேரத் தோன்றும் எழுத்தின் சாரியை* (தொல். 135:2).
2. நிரம்புதல். *நேரத் தோன்றும் பலர் அறி சொல்லே* (தொல். 491:3).

நேர்நிலைவஞ்சி *பெயர்*

இரு சீர்கள் வஞ்சித்தளை பெற்று வரும் செய்யுளடி. *எ-டு* பார்பரவிய பருவரைத்தாய். *நேர்நிலை வஞ்சிக்கு ஆறும் ஆகும்*. (தொல். 1303).

நேர்பு[1] *பெயர்*

நேர்மை. *நேர்பும் நெடுமையும் செய்யும் பொருள* (தொல் 801:2)

நேர்பு[2] *பெயர்*

உகரம் சேர்ந்து வரும் நேரசை *எ-டு*: காசு. *நிரை அவண் நிற்பின் நேரும் நேர்பும்* (தொல்.1335:1)

நேர *இடை*

உவம உருபுகளுள் ஒன்று *நேர வியப்ப நளிய நந்த என்று* (தொல். 1240:2)

நேரடி *பெயர்*

நான்கு சீர்களாலான செய்யுளடி, தொல்காப்பியச் செய்யுளியலின்படி மெய்யெழுத்து நீங்கப் பத்துமுதல் பதினான்குவரையான எழுத்துகளைப் பெற்றுவரும் அடி; அளவடி. *பத்தெழுத் தென்ப நேரடிக்கு அளவே* (தொல் 1299:1).

நேரிதின் *வினையெச்சம்*

நுட்பமாக. *நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே* (தொல் 1529:7).

நேரீற்றியற்சீர் *பெயர்*

நேரசையால் முடியும் ஈரசைச் சீராகிய மாச்சீர் (தேமா, புளிமா). *கலித்தளை அடிவயின் நேர்ஈற்று இயற்சீர்* (தொல். 1286:1).

நை

நை *பெயர்*

ந் என்னும் மெய்யின்மேல் ஐகாரம் ஏற உண்டாகும் உயிர்மெய் நெடில்

நொ

நொ *பெயர்*

ந் என்னும் மெய்யின்மீது ஒகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

நொச்சி *பெயர்*

புறத் திணைகளுள் ஒன்று; முற்றுகையிடப்பட்ட கோட்டையின் தலைவன் தன் மதிலைப் பாதுகாக்க விரும்பிச் செய்யும் போரினைக் கூறுதல். (உழிஞைத் திணையின் ஒரு பகுதியாக இருந்த இது பிற்காலத்தே தனித்திணை ஆயிற்று) *அசுத்தோன் வீழ்ந்த நொச்சியும்* (தொல் 1018·5).

நொசிவு *பெயர்*

நுண்மை. *நொசிவும் நுழைவும் நுணங்கும் நுண்மை* (தொல் 858)

நொடி *பெயர்*

1. கைவிரல்களைச் சொடுக்குப் போடுவதற்கு (நொடித்தலுக்கு) ஆகும் நேரம். *கண் இமை நொடிஎன அவ்வே மாத்திரை* (தொல் 7:1)

2. விடுகதை; புதிர் *நொடியொடு புணர்ந்த பிசியின் ஆன* (தொல் 1424:3).

நொந்து-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

தூண்டுதல் *நொந்து தெளிவு ஒழிப்பினும்* (தொல் 1061·8)

நோ

நோ *பெயர்*

ந் என்னும் மெய்யின்மேல் ஓகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்

நோக்கம் *பெயர்*

ஆராய்ச்சி, கருத்து *இரண்டன் மருங்கில் நோக்கு அல் நோக்கம்* (தொல். 579:1)

நோக்கு[1] *பெயர்*

1. பார்வை. *இரண்டன் மருங்கில் நோக்கு அல் நோக்கம்* (தொல். 579:1).

2. கருத்து *நோக்கு ஓர் அனைய என்மனார் புலவர்* (தொல். 578:3).

நோக்கு[2] *பெயர்*

செய்யுளின் உறுப்புகளுள் ஒன்று, இன்னோசை முதலிய செய்யுட் சிறப்புகளால் ஒருமுறை பயின்றோரை மீண்டும் மீண்டும் பயிலச் செய்யும் தன்மை. *மாத்திரை முதலா அடிநிலை காறும் நோக்குதற் காரணம் நோக்கு எனப்படுமே* (தொல் 1364)

நோக்கு[1]**-தல்** *செயப்படுபொருள் குன்றா வினை*

1. (கண்களால்) பார்த்தல். *வந்து அவன் பெயர்ந்த வறும்களம் நோக்கி* (தொல். 1061:28).

2. கருதுதல்; சிந்தித்தல்; யோசித்தல். *பண்பு உற வருஉம் பகுதி நோக்கி* (தொல் 1029:3).

நோக்கு[4] *இடை*

உவம உருபுகளுள் ஒன்று. *என்ன உறழ தகைய நோக்கொடு* (தொல். 1236:2).

நோய் *பெயர்*

துன்பம்; வருத்தம்; வேதனை. *நோயும் வேட்கையும் நுகர்வும் என்று ஆங்கு* (தொல். 1196:4).

நோயின்று உய்த்தல் *பெயர்*

வெட்சித் திணையின் துறைகளுள் ஒன்று; பகைவரின் ஆநிரைகளைக் கவர்ந்தபின் அவற்றை வருத்தமின்றித் தம் ஊருக்குக் கொண்டு வருதல். *நோயின்று உய்த்தல் நுவல்வழித் தோற்றம்* (தொல். 1008:6).

நோன்மை *பெயர்*

பொறுமை. *நோன்மையும் பெருமையும் மெய்கொள அருளி* (தொல். 1096:24).

நோனார் *பெயர்*

பகைவர் *நோனார் உட்கும் மூவகை நிலையும்* (தொல் 1022:2)

நௌ

நௌ *பெயர்*

ந் என்னும் மெய்யின்மீது ஔகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ப

ப் *பெயர்*

தமிழ் நெடுங்கணக்கில் ஒன்பதாவது மெய்யெழுத்து.

ப[1] *பெயர்*

ப் என்னும் மெய்யெழுத்தோடு அகர உயிர் சேரத் தோன்றும் உயிர்மெய்யெழுத்து; இரு உதடுகளும் இயைய நெஞ்சுவளியால் பிறக்கும் ஒரு மாத்திரை அளவுள்ள வல்லின உயிர்மெய்க் குறில் *இதழ் இயைந்து பிறக்கும் பகார மகாரம்* (தொல். 97). *வல்லெழுத் தென்ப கசட தபற* (தொல். 19).

ப[2] *இடை*

பலர்பால் படர்க்கை வினைமுற்று விகுதிகளுள் ஒன்று. *எ-டு.*: கூறுப. *அர் ஆர் பஎன வரூஉம் மூன்றும் பல்லோர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே* (தொல். 693).

பஃகான் *பெயர்*

ப என்னும் எழுத்து. *உய்தல் வேண்டும் பஃகான் மெய்யே* (தொல். 200:5).

பஃது *பெயர்*

பத்து *பஃதென் கிளவி ஆய்த பகரங் கெட* (தொல் 446:3).

பக்கம் *பெயர்*

பகுதி, பிரிவு. *ஐவகை மரபின் அரசர் பக்கமும்* (தொல் 1025:2)

பகடு *பெயர்*

எருது; காளை *பகட்டி னானும் ஆவி னானும்* (தொல். 1026:14).

பகரம் *பெயர்*

ப என்னும் எழுத்து. *ரஃகான் ஒற்றும் பகர இறுதியும்* (தொல். 491:1).

பகல் *பெயர்*

சூரியன் உதிப்பதில் இருந்து மறைவதுவரை கதிர்ஒளி உள்ள பொழுது *நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு* (தொல் 958:1)

பகாஅ *பெயரெச்சம்*

நீக்க வொண்ணாத. *பகாஅ விருந்தின் பகுதிக் கண்ணும்* (தொல். 1057:7).

பகாரம் *பெயர்*

ப என்னும் எழுத்து. *இதழ் இயைந்து பிறக்கும் பகார மகாரம்* (தொல் 97)

பகுதி *பெயர்*

பிரிவு; பக்கம். *பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே* (தொல் 1030:1)

பகை *பெயர்*

1. மாறுபாடு; விரோதம். *நட்பில் பகையில் காதவில் சிறப்பில் என்று* (தொல். 561:4).
2. மாற்றார்; தெவ்வர்; விரோதி. *அரும்பகை தாங்கும் ஆற்ற லானும்* (தொல். 1026:8).

பசப்பு *பெயர்*

நிறம் *பசப்பு நிறன் ஆகும்* (தொல். 791)

பசலை *பெயர்*

காதலனின் பிரிவாற்றாமையால் மகளிரின் மேனியில் ஏற்படுகின்ற நிறவேறுபாடு. *பசியட நிற்றல் பசலை பாய்தல்* (தொல் 1219.3)

பசி *பெயர்*

ஏதாவது சாப்பிடவேண்டும் எனத் தோன்றும் உணர்வு. *பசியட நிற்றல்* (தொல். 1219:3).

பசியட நிற்றல் *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று, தன்னைப் பசி வருத்தவும், பிரிவாற்றாமை காரணமாகத் தலைவி உணவு கொள்ள மறுத்தல். *பசியட நிற்றல் பசலை பாய்தல்* (தொல் 1219:3).

பட்டாங்கு *வினையெச்சம்*

உள்ளபடி *பட்டாங் கமைந்த ஈரடி எண்சீர்* (தொல். 890:2).

படர்[1] *பெயர்*

துன்பம். *கழிந்தோர் தேஎத்துக் கழிபடர் உறீஇ* (தொல் 1029:26)

படர்[2] *பெயர்*

1. நினைவு
2. செலவு; போக்கு.

படரே உள்ளல்; செலவும் ஆகும் (தொல் 824).

படர்-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

போதல், செல்லுதல். *குறைந்தவட் படரினும்* (தொல் 1064:17).

படர்க்கை *பெயர்*

சொல் இலக்கணத்தின் மூவிடங்களுள் ஒன்று; பேசுபவரையும் எதிரில் இருப்பவரையும் தவிர்த்து ஏனையோரையோ ஏனையவற்றையோ குறிக்கும் சொல். *எல்லாரும் என்னும் படர்க்கை இறுதியும்* (தொல் 192:1).

படர்ச்சி *பெயர்*

செலவு; போக்கு. *கணவனொடு முடிந்த படர்ச்சி நோக்கி* (தொல் 1029:22).

படலம் *பெயர்*

ஓர் இனத்தைச் சேர்ந்த பல பொருள்களுக்கும் பொதுவான இலக்கணத்தைக் கூறும் நூற்பகுதி. *பொதுமொழி கிளந்த படலத் தானும்* (தொல் 1427:3).

படிமை *பெயர்*

தன்மை. *மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய* (தொல். 977.1).

படு[1]-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1 தோன்றச்செய்தல். *தேர்ந்து வெளிப்படுத்த ஏனை மூன்றும்* (தொல். 101:2).

2. ஒழுகவைத்தல்; பின்பற்றச் செய்தல். *சொல்வழிப் படுத்தல்* (தொல். 1050:1).

3. பொருத்துதல்; பொருந்தச் செய்தல். *உவம வாயிற் படுத்தலும்* (தொல். 1146:11).

4 அடக்குதல்; உள்ளாக்குதல். *இயற்சீர்ப் பாற்படுத்து இயற்றினர் கொளலே* (தொல். 1289:1).

5 எழுத்துகளை இயல்பான ஒலியைவிடச் சற்றுத் தாழ்த்தி உச்சரித்தல். *மொழிப்படுத்து இசைப்பினும் தெரிந்து வேறு இசைப்பினும்* (தொல். 53:1)

படு[2]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. நிகழ்தல்; சம்பவித்தல் *ஆவொடுபட்ட நிமித்தம் கூறலும்* (தொல். 1127:3).

2. தோன்றுதல். *வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா* (தொல் 783:1).

3. அகப்படுதல்; அடங்குதல் *எண்ணின் தொகுதி உளப்படப் பிறவும்* (தொல் 483:9).

4. இறத்தல்; சாதல். *பட்ட வேந்தனை அட்ட வேந்தன்* (தொல். 1022:10).

5. உண்டாதல்; ஏற்படுதல் *நாற்சொல் இயலான் யாப்புவழிப் பட்டன்று* (தொல். 1340:2).

6. ஒலித்தல்; ஓசை எழுப்புதல். *படுதிரை வையம் பாத்திய பண்பே* (தொல் 949:3).

படை[1] *பெயர்*

1. ஒரு நாட்டின் பாதுகாப்பிற்குரியதும், காலத்திற்கேற்றவாறு பல பிரிவுகளைக் கொண்டதும், அரசின் மிக இன்றியமையாத பிரிவுகளுள் தலைமையானதுமாகிய பாதுகாவற்சேனை; இராணுவம். *இயங்குபடை அரவம்* (தொல். 1013:1)

2 போர்க்கருவி *படை அறுத்துப் பாழிகொள்ளும் ஏமத்தானும்* (தொல். 1022:7-8).

படை[2]-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. (இறைவழிபாட்டின் ஒரு கூறாக உணவுப்பொருள் முதலியவற்றை) அன்போடு கடவுளுக்கு வழங்குதல். *சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தல் என்று* (தொல். 1010:20).

2. புனைந்து கூறுதல், இல்லாததைக் கற்பித்துச் சொல்லுதல். *பல்வகையானும் படைக்கவும் பெறுமே* (தொல். 1186:5)

படையியங்கரவம் *பெயர்*

வெட்சித் திணையின் துறைகளுள் ஒன்று; பகைவரின் ஆநிரைகளைக் கவர்ந்துவரச் செல்லும் சேனையால் ஏற்படும் ஒலிகளைக் கூறுதல். *படையியங்கு அரவம் பாக்கத்து விரிச்சி* (தொல்.1008:1).

பண்டு *பெயர்*

பழங்காலம். *பண்டுஇயல் மருங்கின் மரீஇய மரபே* (தொல் 576·2)

பண்ணு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

செய்தல்; இயற்றுதல். *பண்ணமை பகுதிப் பதினொரு மூன்றும்* (தொல். 1096:58).

பண்ணத்தி *பெயர்*

இசைப்பாட்டு. ('பிற நூலாசிரியர் விரித்துக் கூறின இசைநூலின் பாவினம் ஆமாறு உணர்த்துதலின்' என இளம்பூரணர் கூறுவதால் அவர் தாழிசை, துறை, விருத்தம் ஆகிய பாவினங்களைக் கருதுகிறார் எனத் தெரிகிறது). 'மெய்வழக்கு அல்லாத புற வழக்கினைப் பண்ணத்தி என்ப. இது எழுதும் பயிற்சி இல்லாத புற உறுப்புப் பொருள்களைப் பண்ணத்தி என்ப' (பேரா.). *பாட்டின் இயல பண்ணத்தி இயல்பே* (தொல் 1439.2)

பண்ணை *பெயர்*

விளையாட்டு *கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு* (தொல். 803).

பண்பு *பெயர்*

1. ஒருவர் அல்லது ஒன்றன் இயல்பு; இயற்கைத் தன்மை, குணம், சுபாவம். *ஆற்றது பண்பும்* (*தொல்.* 1120:1).

2. ஒன்றற்கு உரிய இலக்கணம் *தன்வயின் வருதலும் வகுத்த பண்பே* (தொல். 1192:2).

பண்புதொகு மொழி *பெயர்*

ஒரு பொருளின் குணத்தை விளக்கும் ஆகிய என்னும் பண்புருபு தொக்கு நிற்கும் தொடர்; பண்புத்தொகை *எ-டு*: செம்மை ஆகிய தாமரை→செந்தாமரை. *ஐம்பால் அறியும் பண்புதொகு மொழியும்* (தொல் 483 5)

பண்பின்தொகை *பெயர்*

காண்க: பண்புதொகுமொழி *இன்னது இதுஎன வரூஉம் இயற்கை என்ன கிளவியும் பண்பின் தொகையே* (தொல் 899:4)

பண்புகொள் கிளவி *பெயர்*

குணத்தைச் சுட்டுகின்ற சொல் *எ-டு*.. கரிது, கரிய, செய்யது, செய்ய. *பண்புகொள் கிளவியும் உளஎன் கிளவியும்* (தொல் 706:3)

பண்புகொள்பெயர் *பெயர்*

குணத்தால் அமையும் பெயர் *எ-டு* கரியவர், நெடியவர் *பண்புகொள் பெயரும் அதனோ ரற்றே* (தொல் 627)

பணி-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

கீழ்ப்படுதல்; தாழ்தல். *காமக் கடப்பினுட் பணிந்த கிளவி* (தொல். 1110:1).

பணிவு *பெயர்*

தாழ்ச்சி *மனைவி உயர்வும் கிழவோன் பணிவும்* (தொல் 1176:1)

பணை-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. பிழைத்தல்; குறிதவறுதல்

2 பருத்தல், பெரியது ஆதல் *பணையே பிழைத்தல்; பெருப்பும் ஆகும்* (தொல். 823).

பத்து *பெயர்*

ஒன்பதற்கும் பதினொன்றுக்கும் இடைப்பட்ட எண். *எல்லா எண்ணும் பத்தன் முன்வரின்* (தொல். 432:2).

பதக்கு *பெயர்*

2 குறுணி அல்லது 16 படி கொண்ட முகத்தலளவு; சற்றேறக் குறைய 15 லிட்டர் அளவு. *பதக்குமுன் வரினே தூணிக் கிளவி* (தொல். 240:1).

பதி *பெயர்*

ஊர். *பதி இகந்து நுகர்தலும் உரிய என்ப* (தொல். 1141:2)

பய[1]-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

மகப்பெறுதல்; ஈன்றெடுத்தல். *புதல்வற் பயந்த புனிறுதீர் பொழுதின்* (தொல். 1096:27).

பய[2]-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

உண்டாதல். *வழிநனி பயக்கும் என்று* (தொல். 1372:3).

பயப்பு *பெயர்*

பயன் பயப்பே பயன்ஆம் (தொல். 790).

பயம் *பெயர்*

பயன்; பலன், பிரயோசனம் *சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே* (தொல். 1142:4).

பயன் *பெயர்*

1 செய்யுள் உறுப்புகளுள் ஒன்று. இந்தக் கூற்றினால் இந்தச் செயல் விளையும் என வெளிப்படுதல். *இதுநனி பயக்கும் இதன்மாறு என்னும் தொகைநிலைக் கிளவி பயன்எனப் படுமே* (தொல். 1462)

2. பாவின் சொற்பொருள். *பல்வகையானும் பயன்தெரிவு உடையது* (தொல். 1604:7).

பயனிலையுவமம் *பெயர்*

நான்குவகை உவமைகளுள் ஒன்று; செயலின் பயனால் இருபொருள்கள் ஒத்திருத்தல். *என்றுஆங்கு எட்டே பயனிலை உவமம்* (தொல். 1238:3).

பயனிலை *பெயர்*

ஒரு வாக்கியத்தில் எழுவாயின் செயற்பாட்டைச் சுட்டும் சொல். *அன்றியனைத்தும் பெயர்ப்பய னிலையே* (தொல் 551:4).

பயனெதிரச் சொன்ன பக்கம் *பெயர்*

பாடாண் திணையின் துறைகளுள் ஒன்று. பரிசில் பெற்ற கூத்தர் பாணர் முதலியோர் தாம் வழியில் கண்ட பிற பரிசிலரிடத்துத் தான் பெற்ற பரிசில்களைக் கூறி வள்ளலிடத்து ஆற்றுப்படுத்தல்; ஆற்றுப்படை. *பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇ சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கமும்* (தொல். 1040:6).

பயில்[1]-தல் [பயிறல்] *செயப்படுபொருள் குன்றா வினை*

கூறுதல்; சொல்லல் *மயிலும் எழாஅலும் பயிலத் தோன்றும்* (தொல். 1546).

பயில்[2]-தல் [பயிறல்] *செயப்படுபொருள் குன்றிய வினை*

1 இருத்தல்; தங்குதல். *மரம்பயில் கூகையைக் கோட்டான் என்றலும்* (தொல். 1571:2).

2. வழக்கில் இருத்தல். *பயிலாதவற்றைப் பயின்றவை சார்த்தி* (தொல். 782:6).

3. பழகுதல் *மெய்தொட்டுப் பயில்தல்* (தொல். 1051·1)

பயில்வு *பெயர்*

பேச்சு. *செய்வினை மறைப்பினும் செலவினும் பயில்வினும்* (தொல்.1064:2).

பயிற்று-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

வழக்கமாகக் கொள்ளுதல். *சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே* (தொல்.1142:4).

பர-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. பரவுதல். *ஞெமிர்தலும் பாய்தலும் பரத்தற் பொருள* (தொல் 845)
2. விரிவு ஆகுதல் *பரந்த மொழியான் அடிநிமிர்ந்து ஒழுகினும்* (தொல். 1497:2).
3. தட்டையாக ஆகுதல். *நாநுனி பரந்து மெய்உற ஒற்ற* (தொல் 93:2).

பரத்தை[1] *பெயர்*

ஒருவனுக்கு முறையான மனைவியாக வாழாமல் ஒழுகுபவள்; பொதுமகள்; (இற்பரத்தை, காதற்பரத்தை, சேரிப்பரத்தை, காமக்கிழத்தி). *பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே* (தொல்.1173:1).

பரத்தை[2] *பெயர்*

அந்நியத் தன்மை; அன்புரிமை அற்ற நிலை *தன்வயின் உரிமையும் அவன்வயின் பரத்தையும்* (தொல்.1061:35)

பரவு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

வாழ்த்துதல்; போற்றுதல் *பரவலும் புகழ்ச்சியும் கருதிய பாங்கினும்* (தொல். 1032:2)

பராஅவு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

போற்றுதல்; வாழ்த்துதல். *தேவர்ப் பராஅய முன்னிலைக் கண்ணே* (தொல்.1398:2).

பரி-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

வருந்துதல் *எதிர்பெய்து பரிதல் ஏதம் ஆய்தல்* (தொல் 1219:2)

பரிசில் *பெயர்*

புலமை, இசை, கூத்து போன்ற கலைகளிற் சிறந்தவர்களுக்கு வள்ளல்களால் வரிசை அறிந்து வழங்கப்படும் கொடை, அன்பளிப்பு; சன்மானம். *பரிசில் கடைஇய கடைக்கூட்டு நிலையும்* (தொல் 1040:13)

பரிபாட்டு *பெயர்*

தெளிவான வரையறையின்றிப் பொதுவாக இயற்றப்படும் ஒரு பாவகை; கொச்சகம், அராகம், சுரிதகம், எருத்து ஆகிய உறுப்புகளைப் பெற்று, சொற்சீரடி முடுகியலடிகளும் சேர்ந்து 25 அடிமுதல் 400 அடிவரை அகப்பொருள் பற்றி வரும் ஓர் இசைப்பாவகை. *கைக்கிளை பரிபாட்டு அங்கதச் செய்யுளொடு* (தொல் 1378:2)

பரிபாடல் *பெயர்*

காண்க. பரிபாட்டு. *பரிபா டல்லே நால்ஈர்ஐம்பது உயர்பு அடி ஆக* (தொல். 1421:1-2).

பரிவு *பெயர்*

துன்பம். *பரிவு நீக்கிய பகுதிக் கண்ணும்* (தொல். 1096:38).

பருவம் *பெயர்*

1. காலம்; பொழுது; சமயம். *தான்அவட் பிழைத்த பருவத் தானும்* (தொல்.1096:23).

2. இரு மாதங்கள் அடங்கிய காலப்பகுதி; இருது. *பனிஎதிர் பருவமும் உரித்தென மொழிப* (தொல்.955)

பருவரல் *பெயர்*

துன்பம். *பொறையின்று பெருகிய பருவரற் கண்ணும்* (தொல். 1101:5).

பல்[1] *பெயர்*

வெண்மையும் கடினத்தன்மையும் பெற்று வாயில் அமைந்து உணவைக் கடித்து மெல்லுவதற்குப் பயன்படும் உறுப்பு. *பல் இதழ் இயைய வகாரம் பிறக்கும்* (தொல். 98).

பல்[2] *பெயரடை*

ஒன்றுக்கு மேற்பட்ட; பல. *ஒரு சொல் பல்பொருட்கு உரிமை தோன்றினும்* (தொல்.782:5).

பல்பொருட்கேற்பின் நல்லது கோடல் *பெயர்*

32 இலக்கிய உத்திகளுள் ஒன்று, ஒரு சொல்லோ, தொடரோ, வாக்கியமோ பல பொருள்களைத் தருமாறு இருப்பினும் இடம் நோக்கிச் சிறந்த பொருளைக் கொள்ளுதல். *பல்பொருட்கு ஏற்பின் நல்லது கோடல்* (தொல்.1614:16).

பல்ல *பெயரடை*

காண்க பல. *பல்ல பலசில என்னும் பெயரும்* (தொல். 655:1).

பல்லவை *பெயர்*

பன்மைப்பொருள். *பல்லவை நுதலிய அகர இறுபெயர்* (தொல். 175:1).

பல்லோர் *பெயர்*

பலபேர். *பல்லோர் மருங்கினும் பலவற்று மருங்கினும்* (தொல். 709:2).

பல்லோர்க் குறித்த சினைநிலைப்பெயர் *பெயர்*

உயர்திணைப் பெயர்ச்சொற்களுள் ஒன்று; உடல் உறுப்பை அடிப்படையாகக் கொண்டு ஒரு கூட்டத்தாரை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மனிதர்களைக் குறிக்கும் பெயர். *எ-டு.*: சப்பை மூக்கர், சுருள் முடியர். *பல்லோர்க் குறித்த சினைநிலைப்பெயரே* (தொல். 652:4).

பல்லோர்க் குறித்த திணைநிலைப்பெயர் *பெயர்*

உயர்திணைப் பெயர்ச்சொற்களுள் ஒன்று; ஒரு தொழில் புரியும் கூட்டத்தாரின் பொதுப்பெயர். *எ-டு.* ஆயர், வேட்டுவர். *பல்லோர்க் குறித்த திணைநிலைப் பெயரே* (தொல். 652:5).

பல்லோர்க் குறித்த முறைநிலைப்பெயர் *பெயர்*

உயர்திணைப் பெயர்ச்சொற்களுள் ஒன்று; உறவு முறைகளின் அடிப்படையில் அமையும் பொதுப்பெயர். *எ-டு* தந்தையர், தமையன்மார் *பல்லோர்க் குறித்த முறைநிலைப் பெயரே* (தொல் 652.3)

பல்வேறு *பெயரடை*

பலவகையான, வேறுவேறான *பல்வேறு செய்தியின் நூல்நெறி பிழையாது* (தொல். 947:3)

பல *பெயரடை*

ஒன்றுக்கு மேற்பட்ட. *பலசொல் ஒருபொருட்கு உரிமை தோன்றினும்* (தொல். 782:5)

பலகை *பெயர்*

வட்டு எனப்படும் சூதாட்டம் ஆடுவதற்குரிய கட்டங்கள் கீறப்பட்ட பலகை; முக்காலி நாற்காலியாகவும் இருக்கலாம் *நாயும் பலகையும் வருஉங் காலை* (தொல். 375:1).

பலபொருளொருசொல் *பெயர்*

ஒன்றுக்கு மேற்பட்ட அருத்தங்களைத் தருகின்ற ஒரு வார்த்தை. *எ-டு.:* மாலை=மாலைக்காலம், பூமாலை *ஆ இரு வகைய பலபொரு ளொருசொல்* (தொல். 536.3).

பலர் *பெயர்*

ஒன்றுக்கு மேற்பட்ட மனிதர்கள் *நேரத் தோன்றும் பலர் அறி சொல்லே* (தொல். 491:3)

பலரறிசொல் *பெயர்*

பலர்பாலைக் குறிக்கும் வார்த்தை. *பலரறிசொல் முன் யாவர் என்னும்* (தொல் 173:1).

பலவறிசொல் *பெயர்*

பலவின்பாலைச் சுட்டும் வார்த்தை *ஒன்றறி சொல்லே பலவறி சொல் என்று* (தொல். 487:1).

பலி *பெயர்*

வழிபாடு, வேள்வி, முதலிய சடங்குகளில் வழங்கப்படும் உணவுப்பொருள், உயிர்ப்பலியும் ஆம். *தொல்லுயிர் வழங்கிய அவிப்பலியானும்* (தொல் 1026·12)

பழகு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

பயிலுதல்; வழங்குதல் *திணையொடு-பழகிய பெயர் அலங்கடையே* (தொல். 684).

பழம் *பெயர்*

ஒரு தாவரத்தின் விதையைத் தன்பால் பெற்றதும் பெரும்பாலும் உண்ணத்தக்கதும் ஆகிய தாவரப்பயன்; பழுத்தகாய்; கனி. *காயே பழமே தோலே செதிளே* (தொல். 1592:1).

பழமை *பெயர்*

தொன்மை. *உரையொடு புணர்ந்த பழமை மேற்றே* (தொல். 1496.2).

பழி *பெயர்*

1 குற்றம். *பழிதீர் செல்வமொடு வழிவழி இறந்து* (தொல். 1370:2)

2. வசை; நிந்தை. *மொழி கரந்து மொழியின் அது பழிகரப்பாகும்* (தொல். 1386)

பழிகரப்பு *பெயர்*

இருவகை அங்கதங்களுள் ஒன்று; ஒருவரை வெளிப்படையாக அல்லாமல் மறைத்த சொற்களால் இகழ்தல். *மொழிகரந்து மொழியின் அது பழிகரப்பு ஆகும்* (தொல்.1386).

பழிச்சு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

புகழ்தல் *பரவும் பழிச்சும் வழுத்தின் பொருள* (தொல். 866)

பழி-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

குற்றம் கூறுதல், நிந்தனை செய்தல் *அந்தம் இல் சிறப்பின் மகப்பழித்து நெருங்கினும்* (தொல்.1097:24)

பழிப்பு *பெயர்*

குற்றம். *பழிப்பு இல் சூத்திரம் பட்ட பண்பில்* (தொல். 1605:1).

பழுது *பெயர்*

பயன்படாத நிலை. *பழுது பயம் இன்றே* (தொல். 808)

பள்ளி *பெயர்*

இடம். *சொல்லிய பள்ளி நிலையின வாயினும்* (தொல். 100:2)

பற்று *பெயர்*

தொடர்பு. *பற்றுவிடு கிளவியும்* (தொல். 596:7)

பற-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

வானத்தில் சிறகுகளின் உதவியால் இயங்குதல். *பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற்று இளமை* (தொல். 1506:2)

பறழ் *பெயர்*

எலி அணில் முதலிய சில உயிரினங்களின் இளமைப்பெயர். *மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்பும்* (தொல். 1516:1)

பறை *பெயர்*

இசைக்குரிய தாளக் கருவிகளுள் ஒன்று. *தெய்வம் உணாவே மா மரம் புள்பறை* (தொல்.967:1)

பன்மை *பெயர்*

தமிழ் இலக்கணத்தில் பெயர்ச்சொற்களுக்குரிய எண்கள் இரண்டில் ஒன்று; உயர்திணை அஃறிணை ஆகிய இரண்டிலும் ஒன்றுக்கு மேற்பட்டவற்றைச் சுட்டும் சொல். *தாம் என் கிளவி பன்மைக்கு உரித்தே* (தொல். 671)

பன்றி *பெயர்*

குட்டையான கால்கள் அகன்ற மூக்கு சிறிய வால் ஆகியனவற்றை உடையதும், சேற்றில் புரளும் இயல்புடையதுமாகிய கரிய/வெள்ளிய விலங்கு. *பாட்டி என்பது பன்றியும் நாயும்* (தொல்.1568)

பன்னல் *பெயர்*

ஆராய்கை *பன்னல் சான்ற வாயிலொடு பொருந்தி* (தொல். 1096:25)

பன்னு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

கூறுதல் *பாங்குற உணர்ந்தோர் பன்னுங்காலை* (தொல் 1312:2)

பனி *பெயர்*

மார்கழி, தை, மாசி, பங்குனி ஆகிய பனிபொழியும் முன்பனி, பின்பனிக் காலங்கள். *பனிஎன வருஉம் கால வேற்றுமைக்கு* (தொல் 242:1)

பனுவல் *பெயர்*

சொல், வார்த்தை. *ஏற்றுப்பெயர் முன்னர் மெய்யறி பனுவலின்* (தொல். 582:1)

பனை[1] *பெயர்*

மணற்பாங்கான நிலங்களில் நீண்டு வளர்வதும், கிளைகள் இல்லாமல் விசிறி போன்ற ஓலைகளை உடையதும், மூன்று நுங்குகள் கொண்ட காய்களைத் தருவதும், அகக்காழ் இல்லாததுமாகிய மரவகை. *பனையின் முன்னர் அட்டுவரு காலை* (தொல்: 285.1)

பனை[2] *பெயர்*

முகத்தல் அளவையில் ஒரு பேரளவு. *பனை என் அளவும்* (தொல் 170:1)

பா

பா *பெயர்*

ப் என்னும் மெய்யெழுத்தின்மீது ஆகார உயிர் ஏறப்பிறக்கும் உயிர்மெய் நெடில்.

பா *பெயர்*

1 எழுத்து, அசை, சீர், அடி, தொடை ஆகியவற்றாலான செய்யுள். *நால் இயற்று என்ப பாவகை விரியே* (தொல். 1365:2)

2 செய்யுளுக்கு உரிய ஓசை "சேட் புலத்திருந்த காலத்தும் ஒருவன் எழுத்தும் சொல்லும் தெரியாமல் பாடம் ஓதுங்கால் அவன் சொல்லுகின்ற செய்யுளை விகற்பித்து இன்ன செய்யுள் என்று உணர்த்தற்கு ஏது ஆகிய பரந்துபட்டுச் செல்வதோர் ஓசை" (பேரா.தொல் பொருள்.313) *நோக்கே பாவே அளவியல் எனாஅ* (தொல். 1263:4)

பாஅ வண்ணம் *பெயர்*

சொற்சீர்களால் இயன்ற செய்யுளின் ஓசை (ஓரளவு நூற்பா ஓசை எனலாம்). *பாஅவண்ணம் சொற்சீர்த்து ஆகி நூற்பாற் பயிலும்* (தொல் 1473.2,3)

பாக்கம் *பெயர்*

சிற்றூர். *படை இயங்கு அரவம் பாக்கத்து விரிச்சி* (தொல் 1008:1)

பாகன் *பெயர்*

தேரோட்டி *பாகனொடு விரும்பிய வினைத்திற வகையினும்* (தொல் 991:20)

பாகுபடு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

வகைப்படுதல்; பிரிவாதல். *பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப* (தொல் 1024:2)

பாங்கன் *பெயர்*

தோழன், நண்பன் *மொழியெதிர் மொழிதல் பாங்கற்கு உரித்தே* (தொல். 1132)

பாங்கு *பெயர்*

1. பக்கம்; அருகு. *மன்னர் பாங்கிற் பின்னோர் ஆகுப* (தொல் 979)
2. பகுதி. *பரவலும் புகழ்ச்சியும் கருதிய பாங்கினும்* (தொல் 1032:2)
3. ஒப்புமை *பாங்கு அரும் சிறப்பிற் பல்நெறி யானும்* (தொல் 1028:1)
4. முறைமை. *பாங்குஉற உணர்தல் என்மனார் புலவர்* (தொல். 880:7)
5. தோழன், பாங்கன் *பாங்கொடு தழாஅலும் தோழியிற் புணர்வும் என்று* (தொல். 1445:2)

பாங்கொடு தழாஅல் *பெயர்*

களவியலின் பிரிவுகளுள் ஒன்று; தலைவியை இயற்கையாகக் கண்டு அளவளாவிய தலைவன் அடுத்து அவளைத் தன் நண்பனின்வழிச் சந்திப்பதைக் கூறும் பகுதி, பாங்கற் கூட்டம் *பாங்கொடு தழாஅலும் தோழியிற் புணர்வும் என்று* (தொல் 1445:2)

பாசறை *பெயர்*

1. போர்க்காலத்தில் படைத்தலைவர்களும் வீரர்களும் தங்கும் இடம். *எண்ணரும் பாசறை பெண்ணொடும் புணரார்* (தொல். 1125)

2. வாகைத் திணையின் துறைகளுள் ஒன்று, கூதிர்ப் பாசறை, வேனிற் பாசறை என

இருவகைப்படும்; போரில் ஈடுபட்டுள்ள தலைவனின் உள்ளம் இன்ப நுகர்ச்சியை எண்ணாமல் கடமையிலேயே கண்ணாயிருத்தலைக் கூறுதல்; பாசறை நிலை. *கூதிர்வேனில் என்று இரு பாசறை* (தொல். 1026:1)

பாசறைப் புலம்பல் *பெயர்*

பாசறையில் இருக்கும் தலைவன், தலைவியின் பிரிவாற்றாமல் வருந்துதலைக் கூறும் துறை. *பாசறைப் புலம்பலும் முடிந்த காலத்து* (தொல். 991:19)

பாசி *பெயர்*

உழிஞைத் திணையின் துறைகளுள் ஒன்று, மதிலின் இரு பக்கங்களிலும் உள்ள படைகள் உள்ளும் புறமும் பரவிநின்று போரிட விரும்புவதைக் கூறுதல். *நீர்ச்செரு வீழ்ந்த பாசியும்* (தொல். 1018:7)

பாசிமறன் *பெயர்*

உழிஞைத் திணையின் துறைகளுள் ஒன்று; வீரர்கள் மதிலிடத்து மட்டும் அல்லாமல் ஊரின் கண்ணும் போரிடுதல் (நீரின்கண் உள்ள பாசியைப் போல இருபடையினரும் ஒதுங்கியும் நெருங்கியும் போர்புரிதலால் பாசிமறன்). *ஊர்ச்செரு வீழ்ந்த மற்று அதன் மறனும்* (தொல். 1018:8) (*நூற்பாவில் அதன் என்னும் சுட்டு முன் அடியில் பயின்ற பாசி என்னும் சொல்லைச் சுட்டுவதால் பாசிமறன்*)

பாட்டி *பெயர்*

விலங்கின் பெண்மைப் பெயர்களுள் ஒன்று, குறிப்பாகப் பன்றி, நாய் இவற்றின் பெண்மைப் பெயர். *பாட்டி என்பது பன்றியும் நாயும்* (தொல்.1568)

பாட்டியல் *பெயர்*

செய்யுளுக்குரிய இலக்கணம், யாப்பிலக்கணம் (இலக்கியவகைகளைக் கூறும் பாட்டியல் நூல்கள் பிற்காலத்தன). *மாட்டுஎன மொழிப பாட்டியல் வழக்கின்* (தொல் 1469)

பாட்டு *பெயர்*

செய்யுள் *பாட்டிடை வைத்த குறிப்பி னானும்* (தொல். 1432:1)

பாடல் *பெயர்*

செய்யுள். *பாடலுட் பயின்றவை நாடுங்காலை* (தொல். 950:3)

பாடாண் *பெயர்*

புகழை விரும்புகின்ற தலைவன் ஒருவனை ஏதாவது ஒரு பயன் கருதிப் புலவர் ஒருவர் புகழ்ந்துபாடும் திணை. *பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே* (தொல்.1030:1)

பாடாண்டிணை *பெயர்*

காண்க: பாடாண். *பரிசில் பாடாண்டிணைத் துறைக்கிழமைப் பெயர்* (தொல். 1576:1)

பாடினி *பெயர்*

இசையில் வல்லவளாகிய பாணர்குலமகள்; பாணனின் மனைவி. *பாணன் பாடினி இளையர் விருந்தினர்* (தொல்.1143:2)

பாடு *பெயர்*

1. கொடை. *மகட்பாடு அஞ்சிய மகட்பாலானும்.* (தொல். 1029:15)
2. சாவு, இறப்பு. *களிறு எறிந்து எதிர்ந்தோர் பாடும்* (தொல். 1022:9)

பாணன் *பெயர்*

இசைக்கலையில் தேர்ந்த ஒரு மரபினன். *கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்* (தொல்.1040:3)

பாத்தி *பெயர்*

பகுதி. *மருவின் பாத்தியில் திரியும்மன் பயின்றே* (தொல். 173:5)

பாத்து-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

பகுத்தல். *படுதிரை வையம் பாத்திய பண்பே* (தொல்.949:3)

பாதீடு *பெயர்*

வெட்சித் திணையின் துறைகளுள் ஒன்று; பகைவர் நாட்டிலிருந்து கவர்ந்துவந்த ஆனிரைகளை வீரர்கள் தமக்குள் பங்கிட்டுக்கொள்ளுகை *தந்துநிறை பாதீடு உண்டாட்டு கொடை என* (தொல் 1008:7)

பாய்-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

விரிந்து பரவுதல். *ஞெமிர்தலும் பாய்தலும் பரத்தற் பொருள* (தொல் 845)

பார்ப்பனப் பக்கம் *பெயர்*

வாகைத் திணையின் துறைகளுள் ஒன்று; பார்ப்பனர்களின் ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் ஆகிய ஆறு தொழில்களின் திறனைப் பாடுதல். *அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்* (தொல் 1025:1)

பார்ப்பான் *பெயர்*

அந்தணன். *பார்ப்பான் பாங்கன் தோழி செவிலி* (தொல்.1448:1)

பார்ப்பு *பெயர்*

பறவைகளின் இளமைப் பெயர்களுள் ஒன்று. *பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற்று இளமை* (தொல். 1506:2)

பாராட்டு *பெயர்*

புகழ்ச்சி *மெய்பெற உணரும் கிழவி பாராட்டே* (தொல்.1181·2)

பாராட்டு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

புகழ்தல் *காமக் கிழத்தி நலம்பாராட்டிய* (தொல். 1097:36)

பாராட்டெடுத்தல் *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; இயற்கைப் புணர்ச்சிக்குப் பிறகு காதலர் இருவரும் ஒருவர் மற்றவரின் பண்பு நலன்களைப் போற்றுதல். *பாராட்டெடுத்தல் மடம்தப உரைத்தல்* (தொல்.1213:1)

பால்[1] *பெயர்*

பகுதி. *அரை என வரூஉம் பால்வரை கிளவிக்கு.* (தொல். 166:1)

பால்[2] *பெயர்*

1. ஊழ். *பால்வரை தெய்வம் வினையே பூதம்* (தொல். 542:2)
2. நிலம் *பால்வரை கிளவியும்.* (தொல். 596:5)

3. குடி; குலம். *கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்* (தொல். 1102:1)

4. பக்கம். *ஆங்கு அவை ஒருபால் ஆக.* (தொல். 1209:1)

5. பாகுபாடு. *பாலறி மரபிற் பொருநர் கண்ணும்* (தொல் 1025:7)

6 பெயர்ச்சொற்களுக்குரிய ஆண், பெண், பலர், ஒன்று, பல என்னும் ஐவகைப் பிரிவு. *இருதிணை மருங்கின் ஐம்பால் அறிய* (தொல். 494:1)

பால்[3] *இடை*

இட வேற்றுமையாகிய ஏழாம் வேற்றுமையின் சொல்லுருபுகளுள் ஒன்று. *சொற்சீர்த்து ஆகி நூற்பாற் பயிலும்* (தொல் 1473:3)

பாலை *பெயர்*

அன்பின் ஐந்திணைகளுள் ஒன்று; பிரிதல், பிரிதல் நிமித்தம் என்பனவற்றைத் தன் உரிப்பொருளாகப் பெற்ற திணை. *வாகைதானே பாலையது புறனே* (தொல். 1023:1)

பாலைநிலை *பெயர்*

காண்க. மாலைநிலை. *சொல் இடையிட்ட பாலை நிலையும்* (தொல்.1029:31 நச்சர். பாடம்).

பாழ் *பெயர்*

அழிவு. *பாழ் என் கிளவி மெல்லெழுத்து உறழ்வே* (தொல்.388)

பாழி *பெயர்*

போர். *பாழி கொள்ளும் ஏமத் தானும்* (தொல். 1022:8)

பாளை *பெயர்*

தென்னை, பனை முதலியவற்றில் மலர்களை மூடியுள்ள மடல் *தோடே மடலே ஓலை என்றா* (தொல் 1590:1)

பான் *பெயர்*

பத்து. *ஒரு பான் சிறுமை இரட்டி அதன் உயர்வே* (தொல்.1410:1).

பி

பி *பெயர்*

ப் என்னும் மெய்யின்மேல் இகர உயிர் ஏறத் தோன்றும் உயிர்மெய்க் குறில்.

பிசி *பெயர்*

விடுகதை. *நொடியொடு புணர்ந்த பிசியினான* (தொல். 1424:3).

பிடா *பெயர்*

நறுமணம் மிக்க வெள்ளை மலர்களையும் முட்களையும் கொண்ட அடர்ந்த புதர்ச்செடி; பிடவம்; பிடவு; புதவு; புடன். *யாமரக் கிளவியும் பிடாவும் தளாவும்* (தொல். 230:1).

பிடி *பெயர்*

பெண்யானை. *பிடிஎன் பெண்பெயர் யானை மேற்றே* (தொல். 1554).

பிண்டம் *பெயர்*

1. பல பொருள்களின் தொகுதி. *பிண்டப் பெயரும் ஆஇயல் திரியா* (தொல். 576:1).

2. திரட்சி. *பிண்டம் மேய பெருஞ் சோற்று நிலையும்* (தொல். 1013:9).

3. நூற்பா, ஓத்து, படலம் என்னும் மூன்று உறுப்புகளையும் உடைய நூல். *மூன்று உறுப்பு அடக்கிய பிண்டத்தானும் என்று* (தொல். 1427·4).

பிணங்கல் *பெயர்*
மாறுபாடு. *பிணங்கல் சாலா அச்சம் நான்கே* (தொல். 1205:2).

பிணவல் *பெயர்*
விலங்கினத்தின் பெண்மைப் பெயர்களுள் ஒன்று. *பிணவல் எனினும் அவற்றின் மேற்றே* (தொல். 1562).

பிணவு *பெயர்*
நாய், பன்றி, புல்வாய் ஆகிய விலங்குகளின் பெண்மைப் பெயர் *ஒன்றிய என்ப பிணவுஎன் பெயர்க்கொடை* (தொல். 1561:2)

பிணா *பெயர்*
உயர்திணைப் பெண்பாற்குரிய பெயர் *பெண்ணும் பிணாவும் மக்கட்கு உரிய* (தொல். 1564).

பிணி *பெயர்*
1. நோய். *மூப்பே பிணியே வருத்தம் மென்மையொடு* (தொல். 1203:1).
2. துன்பம். *அவரவர் உறுபிணி தமபோற் சேர்த்தியும்* (தொல் 1146:8).

பிணை *பெயர்*
1. விலங்கினத்தின் பெண்மைப் பெயர்களுள் ஒன்று. *சொல்வாய் நாடிற் பிணைஎனப் படுமே* (தொல். 1560:2)
2. விழைவு, விருப்பம். *பிணையும் பேணும் பெட்பின் பொருள* (தொல். 822)

பிரி[1]-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*
1. விட்டு நீங்கச் செய்தல், பிரியச் செய்தல் *அறுத்தலில் குறைத்தலில் தொகுத்தலில் பிரித்தலில்* (தொல் 557:5).
2. பகுத்தல். *சொல்வரைந்து அறியப் பிரித்தனர் காட்டல்* (தொல் 947:4).

பிரி[2]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*
விட்டு விலகுதல்; நீங்குதல். *பெற்றவழி மகிழ்ச்சியும் பிரிந்தவழிக் கலங்கலும்* (தொல்.1051:7).

பிரி[3]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*
1. வேறுபடுதல். *உயர்திணை மருங்கிற் பால் பிரிந்து இசைக்கும்* (தொல். 488:5)
2. பகுக்கப்படுதல். *கிளைநுதற் பெயரும் பிரிப்பப் பிரியா*(தொல் 894:2).
3. வகைப்படுதல். *இருதிணைப் பிரிந்த ஐம்பாற் கிளவிக்கும்* (தொல். 648:1).

பிரிநிலை *பெயர்*
இரு பொருட்களை வேறுபடுத்திக் காட்டுகின்ற தன்மை; பிரிநிலை ஏகாரக் குறிப்பு. *தேற்றம் வினாவே பிரிநிலை எண்ணே* (தொல். 742:1).

பிரிநிலையெச்சம் *பெயர்*
வேறுபடுத்திப் பொருள் புலப்படுத்துகின்ற இடைச்சொற்களாகிய ஏ, ஓ ஆகிய இரண்டில் ஏதாவது ஒன்று எஞ்சிநிற்றல். *பிரிநிலை எச்சம் பிரிநிலை முடிபின* (தொல். 915:2).

பிரிவாற்றாமை *பெயர்*
கற்புக் காலத்துக் காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; களவுக் காலத்தில் தன் பிரிவுத் துயரை வெளிக்காட்டாமல் மறைத்து ஒழுகியதைப் போல, மனைவி இப்பொழுது ஒழுக வேண்டாமையின்

தலைவனின் பிரிவால் ஏற்படும் துயரத்தால் வெளிப்படையாக வருந்துதல். *பிரிவாற்றாமை மறைந்தவை உரைத்தல்* (தொல் 1221:5).

பிரிவிலசைநிலை *பெயர்*

இரட்டித்து நின்ற அசைநிலை (இளம்., சேனா., தெய்வச்.); தாம் சார்ந்த சொற்களின் பொருளே தமக்குப் பொருளாகக் கொண்டு வரும் அசைநிலை (நச்சர்.) *ஆவயின் மூன்றும் பிரிவுஇல் அசைநிலை* (தொல். 765:2)

பிரிவு *பெயர்*

நீக்கம்; அகற்சி *ஏனைப் பிரிவும் அவ்வியல் நிலையும்* (தொல். 1140:3).

பிழைத்தோர்த் தாங்கும் காவல் *பெயர்*

வாகைத் திணையின் துறைகளுள் ஒன்று; தமக்குத் தீமை செய்தவர்களையும் பொறுத்துக் கொள்ளும் பண்பைப் பாராட்டுதல் *பிழைத்தோர்த் தாங்கும் காவலானும்* (தொல். 1026:20).

பிழை-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

தவறு செய்தல். *தான் அவட்பிழைத்த நிலையின்கண்ணும்* (தொல். 1096:42).

பிழைப்பு *பெயர்*

தவறு. *பிள்ளைப் பெயரும் பிழைப்பு ஆண்டு இல்லை* (தொல். 1513:1)

பிள்ளை *பெயர்*

இளமைப் பெயர் *பிள்ளை குழவி கன்றே போத்துஎன* (தொல். 1526:1).

பிள்ளைநிலை *பெயர்*

வெட்சித் திணையின் துறைகளுள் ஒன்று; தன்மேல் வரும் கொடிப்படையைத் தானே தாங்குதல், தன் வாள் ஆற்றலால் பகைவரைக் கொன்று தானும் போரில் மடிதல் என இருவகைப்படும். *இருவகைப் பட்ட பிள்ளை நிலையும்* (தொல் 1010:16).

பிள்ளையாட்டு *பெயர்*

வெட்சித் திணையின் துறைகளுள் ஒன்று; போரில் சிறப்புப் பெற்ற அரசகுமாரனுக்கு அரசளித்து மக்கள் கொண்டாடுதல் *நாடு அவற்கு அருளிய பிள்ளையாட்டும்* (தொல். 1010:18).

பிற்படு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

பின்னது ஆதல். *செஞ்சொல் ஆயின் பிற்படக் கிளவார்* (தொல். 769:1-2)

பிற[1] *பெயர்*

மற்றவை *பிற அவண் வரினும் திறவதில் நாடி* (தொல். 1468:2).

பிற[2]-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. தோன்றுதல், உண்டாதல். *தான் இனிது பிறக்கும் தகார நகாரம்* (தொல். 93:3).
2. குழந்தையாகப் பிறவி எடுத்தல். *பிறந்த நாள்வயின் பெருமங்கலமும்* (தொல். 1040:8).

பிற[3] *இடை*

அசைநிலைகளுள் ஒன்று. *பிறபிறக்கு அரோ போ மாது என வரூஉம்* (தொல். 764:2).

பிறக்கு *இடை*

அசைநிலைகளுள் ஒன்று. *பிறபிறக்கு அரோ போ மாது என வரூஉம்* (தொல். 764:2).

பிறப்பு *பெயர்*

1. தோற்றம். *பிறப்பின் ஆக்கம் வேறுவேறு இயல* (தொல். 83:7).

2. மனிதப் பிறவி. *பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு* (தொல். 1222:1).

பிறர் *பெயர்*

மற்றவர். *சிதைவு பிறர்க்கு இன்மையொடு* (தொல். 1210:2).

பிறழ்-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

வரிசைமுறை மாறுதல். *தன்கோள் கூறல், முறை பிறழாமை* (தொல். 1614:10).

பிறள் *பெயர்*

மற்றவள். *கிழவோள் பிறள் குணம் இவை எனக் கூறி* (தொல். 1183:1).

பிறன் *பெயர்*

மற்றவன். *தன்னைப் பிறன்போல் கூறும் குறிப்பின்* (தொல். 932:2).

பிறன்கோட்கூறல் *பெயர்*

32 இலக்கிய உத்திகளுள் ஒன்று; மற்ற நூலாசிரியர்களின் கருத்துகளை எடுத்துக்கூறுதல். *பிறன்கோள் கூறல் அறியாது உடம்படல்* (தொல். 1614:19).

பிறனுடம்பட்டது தானுடம்படுதல் *பெயர்*

32 இலக்கிய உத்திகளுள் ஒன்று; வேறு ஒரு நூலாசிரியரின் கருத்துகளை அப்படியே ஏற்றுக்கொள்ளுதல். *பிறன் உடம்பட்டது தான் உடம்படுதல்* (தொல் 1614:11).

பிறிது *பெயர்*

வேறானது, மற்றொன்று. *அப்பொருள் அல்லாப் பிறிது பொருள் கூறல்* (தொல். 519:2)

பின்[1] *வினையடை*

பிறகு. *பின்வா என்றலும்* (தொல். 1064:10).

பின்[2] *இடை*

1. இடவேற்றுமையாகிய ஏழாம் வேற்றுமையின் சொல்லுருபுகளுள் ஒன்று. *பின்சார் அயல்புடை தேவகை எனாஅ* (தொல். 567:2).

2. காலப் பொருளில் வரும்போது வினையெச்சம் போலச் செயற்படும் ஒரு விகுதி. *பின்முன் கால்கடை வழி இடத்து என்னும்* (தொல் 714:1).

பின்தேர்க்குரவை *பெயர்*

வாகைத் திணையின் துறைகளுள் ஒன்று; போரில் வெற்றிபெற்ற அரசனின் தேருக்குப் பின்னால் வீரர்கள் குரவையிட்டு ஆடுதல் *ஒன்றிய மரபில் பின்தேர்க் குரவையும்* (தொல். 1026:6).

பின்பனி *பெயர்*

இரவின் பிற்பகுதியில் பனி அதிகமாகப் பொழிவதாகிய மாசி, பங்குனி மாதங்கள் அடங்கிய பருவம். *பின்பனி தானும் உரித்து என மொழிப* (தொல். 959:1).

பின்மொழி நிலையல் *பெயர்*

அன்மொழித் தொகையில் பொருளை உணர்ந்துகொள்ள உதவும் குறிப்பு பின்னால் உள்ள சொல்லில் இருக்கும் நிலை. *முன்மொழி நிலையலும் பின்மொழி நிலையலும்* (தொல்.902:2).

பின்றை *வினையடை*

பிறகு; பின்பு. *உணர்ச்சி ஏழினும் உணர்ந்த பின்றை* (தொல். 1064:4).

பின்னர் *பெயரடை*

பிறகு (கூறப்பட்ட); பின்னால் (உள்ள). *பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே* (தொல்.1055).

பின்னர் *வினையடை*

பிறகு. *பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் . யாத்தனர்*(தொல்.' 1095:1-2).

பின்னிலை *பெயர்*

1. குறையிரத்தல்; ஒரு பொருளை வேண்டுதல். *எல்லா வாயிற்கும் பின்னிலைத் தோன்றும்* (தொல் 1117:1-2).

2. இரந்துபின் நிற்றல் என்னும் அகத்துறை, தலைவன் தலைவியைத் தன்னோடு கூட்டுமாறு தோழியிடம் வேண்டுதல். *பின்னிலை முயற்சி பெறான்என மொழிப* (தொல். 1078:2).

பின்னை *வினையடை*

காண்க பின்[1] *பின்னை வந்த வாயிற் கண்ணும்* (தொல் 1101:10).

பின்னோர் *பெயர்*

வணிகரும் வேளாளரும் (இளம்.); வேளாளர் (நச்சர்.). *மன்னர்பாங்கில் பின்னோர் ஆகுப* (தொல் 979).

பீ

பீ *பெயர்*

ப் என்னும் மெய்யெழுத்தின்மேல் ஈகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

பீடு *பெயர்*

பெருமை. *கேடும் பீடும் கூறலும்* (தொல். 1051:18)

பீர் *பெயர்*

சிறிய மஞ்சள் மலர்களையும் உணவுக்குப் பயன்படும் காய்களையும் கொண்ட கொடி; பீரம்; பீர்க்கு *பீர்என் கிளவி அம்மொடும் சிவணும்* (தொல். 366)

பு

பு *பெயர்*

ப் என்னும் மெய்யின்மேல் உகர உயிர் சேரத் தோன்றும் உயிர்மெய்க் குறில்.

புகர் *பெயர்*

குற்றம் *புகர்இன்று என்மனார் புலமை யோரே* (தொல் 370:2)

புகர்ச்சி *பெயர்*

குற்றம். *புறம்படு விளையாட்டுப் புல்லிய புகர்ச்சியும்* (தொல். 1100:11).

புகல்[1] *பெயர்*

நுழைதல்; புகுதல். *அகம்புகல் மரபின் வாயில்கட்கு உரிய* (தொல். 1102:6).

புகல்[2](லு)-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

விரும்புதல் *புகன்ற உள்ளமொடு புதுஓர் சாயற்கு* (தொல் 1097:11).

புகழ்[1] *பெயர்*

ஒருவருக்குப் பிறப்பாலோ, தகுதியாலோ, பதவியாலோ, பண்பாலோ கிடைத்துப் பரவலாக அறியப்பெறும் நற்பெயர், கீர்த்தி *தாவா விழுப்புகழ் பூவை நிலையும்* (தொல். 1010:10).

புகழ்[2]**-தல்** *செயப்படுபொருள் குன்றா வினை*

பாராட்டுதல். *தற்புகழ் கிளவி கிழவன்முன் கிளத்தல்* (தொல் 1130:1)

புகழ்ச்சி *பெயர்*

பாராட்டுரை. *பரவலும் புகழ்ச்சியும் கருதிய பாங்கினும்* (தொல் 1032:2).

புகழ்மை *பெயர்*

கீர்த்தியுடைமை; புகழுடைமை. *கல்வி தறுகண் புகழ்மை கொடைஎன* (தொல் 1206:1)

புகற்சி *பெயர்*

விருப்பம் *கேளிர் ஒழுக்கத்துப் புகற்சிக் கண்ணும்* (தொல் 1096·56)

புகாஅ *பெயர்*

உணவு. *புகாஅக் காலைப்புக்கு எதிர்ப்பட்டுழி* (தொல். 1057.6)

புகு[1]**-த்தல்** *செயப்படுபொருள் குன்றா வினை*

1 செல்லவிடுதல் *தோழி உள்ளுறுத்த வாயில் புகுப்பினும்* (தொல். 1099:1).

2. ஒரு செய்தியைக் கூறத் தொடங்குதல்; நிரம்பச் சொல்லாது தோற்றுவாய் செய்தல் (இளம்.). *புரைதீர் கிளவி தாயிடைப் புகுப்பினும்* (தொல். 1064:42)

புகு[2]**-தல்** *செயப்படுபொருள் குன்றிய வினை*

நுழைதல். *இன்னிழைப் புதல்வனை வாயில்கொண்டு புகினும்* (தொல். 1122:3).

புகுமுகம்புரிதல் *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று, காதலர்கள் தாம் தம் காதலரால் பார்க்கப் படுதலை விரும்புதல். *புகுமுகம் புரிதல் பொறிநுதல் வியர்த்தல்* (தொல். 1210:1)

புடை *இடை*

இடவேற்றுமையாகிய ஏழாம் வேற்றுமையின் சொல்லுருபுகளுள் ஒன்று *பின்சார் அயல்புடை தேவகை எனாஅ* (தொல். 567:2).

புண் *பெயர்*

1 உடம்பில் எரிச்சலையும் வலியையும் உண்டாக்கும் பிளவு, காயம். *புண்கிழித்து முடியும் மறத்தினானும்* (தொல் 1029.4)

2. வருத்தம். *நெஞ்சுபுண் உறீஇ நளியின் நீக்கிய* (தொல் 1097·9-10)

புண்கிழித்து முடியும் மறம் *பெயர்*

காஞ்சித் திணையின் துறைகளுள் ஒன்று; போரில் வீரன் ஒருவன் தன் புண்ணைத் தானே கிழித்துக் கொண்டு வீரமரணம் அடைதல் *புண்கிழித்து முடியும் மறத்தினானும்* (தொல் 1029:4)

புணர்[1]**-த்தல்** *செயப்படுபொருள் குன்றா வினை*

1. கூட்டிச் சொல்லுதல். *மிக்க பொருளினுள் பொருள்வகை புணர்க்க* (தொல். 1168:1).

2. எழுத்து, சொல் முதலியவற்றை இணைத்தல். *தொழிலொடு தொழிலைப் புணர்க்குங் காலும்* (தொல். 109:7)

புணர்[2]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. உடலுறவு கொள்ளுதல்; கலவி செய்தல் *பகற்புணர் களனே புறன்என மொழிப* (தொல்.1082:1).

2. பொருந்துதல், சேர்தல். *உள்நின்று அகன்ற உரையொடு புணர்ந்து* (தொல். 1425:5).

புணர்[3]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

எழுத்து, சொல் முதலியன தம்முட் பொருந்துதல். *ஆஈர் இயல புணர்நிலைச் சுட்டே* (தொல்.108:7).

புணர்ச்சி *பெயர்*

1. எழுத்துகளோ சொற்களோ தம்முள் கூடுதல்; சந்தி. *எழுத்தோரன்ன பொருள்தெரி புணர்ச்சி* (தொல். 142:1).

2. கலவி; உடலுறவு. *முன்உறுபுணர்ச்சி முறைநிறுத் துரைத்தலும்* (தொல். 1064:11).

3. இயைபு; பொருத்தம். *இயைபே புணர்ச்சி* (தொல். 792).

புணர்ந்துழி உண்மை *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; தலைவனோடு சேர்ந்து வாழும் தலைவி தன் உள்ளக் கருத்தில் மாற்றம் எதுவும் இன்றிக் கலவி விருப்பத்தைக் கூறுதல். *புணர்ந்துழி யுண்மை பொழுதுமறுப்பாதல்* (தொல் 1221:3).

புணர்நிலை *பெயர்*

எழுத்துகள் தம்முள் இணைகின்ற தன்மை; எழுத்து மயக்கம். *அடையொடு தோன்றினும் புணர்நிலைக்கு உரிய* (தொல். 111:2).

புணர்வு *பெயர்*

கலவி. *செல்வம் புலனே புணர்வு விளையாட்டு என* (தொல். 1208:1).

புணர்வு மறுத்தல் *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; தலைவன் தன்னைத் திருமணம் செய்துகொள்ளாமல் காலம் தாழ்த்தும்போது தலைவி அவனைச் சேர உடன்படாமை *அச்சத்தின் அகறல் அவன் புணர்வு மறுத்தல்* (தொல். 1220:2)

புதல்வன் *பெயர்*

மைந்தன்; மகன். *புதல்வற் பயந்த புனிறுதீர் பொழுதின்* (தொல். 1096:27).

புதுமை *பெயர்*

முன்பு இல்லாத ஒன்றின் முதல் தோற்றம். *வரைவே கூர்மை காப்பே புதுமை* (தொல். 867:2).

புதுவது *பெயர்*

முன்பு இல்லாத ஒன்று; புதுமை. *புதுவது புனைந்த யாப்பின் மேற்றே* (தொல். 1498:2).

புதுவோர் *பெயர்*

முன்பு அறிமுகம் இல்லாதவர்கள், புதியவர்கள் *புகன்ற உள்ளமொடு புதுவோர் சாயற்கு* (தொல். 1097:11)

புரவி *பெயர்*

நீண்ட கால்களைப்பெற்று வேகமாக ஓடக்கூடியதும், பிடரி மயிரை உடையதும், போரில் பயன்படுத்தப்படுவதும் ஆகிய ஒரு வீட்டு விலங்கு *நடைநவில் புரவியும் களிறும் தேரும்* (தொல். 1574:2).

புரி-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. செய்தல். *அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்* (தொல். 1142:3).
2. பொருந்துதல். *பயனிலை புரிந்த வழக்கத் தான* (தொல். 1260:2).
3. விரும்புதல். *நெய்அணி மயக்கம் புரிந்தோள் நோக்கி* (தொல் 1096:28).

புரை[1] *பெயர்*

1. உயர்வு. *புரை உயர்பு ஆகும்* (தொல். 785)
2. குற்றம். *புரைதீர் காமம் புல்லிய வகையினும்* (தொல் 1031:2)

புரை[2]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

நிகர்த்தல்; ஒப்பாதல். *வானோர் அமிழ்தம் புரையுமால் எமக்கு என* (தொல். 1096:13).

புரை[3]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

தக்கது ஆதல். *பொழுதும் ஆறும் புரைவது அன்மையின்* (தொல் 1061:31).

புரைய *இடை*

உவம உருபுகளுள் ஒன்று. *கடுப்ப ஏய்ப்ப மருளப் புரைய* (தொல். 1239:1)

புரையறத் தெளிதல் *பெயர்*

கற்புக் காலத்துக் காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று, தலைவி இல்லறத்தின் சிறப்பினை உணர்ந்து அதனை நன்கு கடைப்பிடித்தல். *தெய்வம் அஞ்சல் புரைஅறத் தெளிதல்* (தொல். 1221:1).

புல்[1] *பெயர்*

கிளைகள் இல்லாமலும் அடிமரம் உள்ளீடற்றதாகவும் உள்ள தாவர வகை. *எ-டு*.: தென்னை, பனை. *புறக்காழனவே புல்என மொழிப* (தொல். 1588).

புல்[2](லு)-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. புணர்தல், உடலுறவு கொள்ளுதல். *புல்லுதல் மயக்கும் புலவிக் கண்ணும்* (தொல். 1101:1).
2. தழுவுதல் *பயம்கெழு துணை அணைப் புல்லிப் புல்லாது* (தொல். 1096:31).
3. பொருந்துதல். *புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே* (தொல். 1000:6).
4. வருடுதல். *மெல்என் சீறடி புல்லிய இரவினும்* (தொல். 1096:34)

புல்[3](லு)-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

நட்புச்செய்தல். *நல்லாரிடவயின் புல்லிய பாங்கினும்* (தொல். 1026:13 *நச்சர்.*).

புல்ல *இடை*

உவம உருபுகளுள் ஒன்று. *எள்ள விழையப் புல்லப் பொருவ* (தொல் 1238:1)

புல்லிய பாங்கு *பெயர்*

வாகைத் திணையின் துறைகளுள் ஒன்று; பொருந்தாதாரிடத்தின்கண் பொருந்திய பாங்கு - அதாவது பகைவரின் நாடு கைக்கொள்ளல் (இளம்); பகைவரிடத்தும் மனம் மகிழ்ந்து வேண்டியதைக் கொடுத்து நட்புச்செய்தல் (நச்சர்) *ஒல்லாரிடவயிற் புல்லிய பாங்கினும்* (தொல் 1026:13).

புல்வாய் *பெயர்*

கலைமான். *இரலையும் கலையும் புல்வாய்க்கு உரிய* (தொல் 1547).

புல-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

கணவன் மனைவியர் தம்முள் பிணங்குதல். *ஊடலின் தொடக்கநிலையாகக் புலத்தலும் ஊடலும் ஆகியவிடத்தும்* (தொல். 1107:1)

புலம் *பெயர்*

நிலம்; நாடு *வேந்து விடு வினைஞர் வேற்றுப்புலக் களவின்* (தொல் 1007:1).

புலம்பல் *பெயர்*

வருத்தத்தால் அரற்றுதல், வாய்விட்டு அழுதல். *இன்பத்தை வெறுத்தல் துன்பத்துப் புலம்பல்* (தொல். 1219:1).

புலம்பித் தோன்றல் *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று, தலைவனைக் காணப்பெறாத தலைவி பொலிவு இழந்து காணப்படுதல் (இளம்), பல உறவினர்களோடு இருந்தபோதிலும் தனியாளாக உணர்ந்து ஒழுகல் (பேரா.) *புறம்செயச் சிதைதல் புலம்பித் தோன்றல்* (தொல் 1215:1).

புலம்பு *பெயர்*

1 தனிமை. *புலம்பே தனிமை* (தொல். 815:1).

2. வருத்தம். *அகன்ற கிழவனைப் புலம்புநனி காட்டி* (தொல். 1097:12).

புலம்பு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. துயரத்தால் அரற்றுதல், அழுதல் *தனிமகள் புலம்பிய முதுபாலையும்* (தொல். 1029:25).
2. தனிமையுறுதல். *சிறந்த புதல்வனைத் தேராது புலம்பினும்* (தொல் 1100:12).
3 வருந்துதல் *பிரிவின் எச்சத்துப் புலம்பிய இருவரை* (தொல். 1096:37)

புலமையோன் *பெயர்*

கல்வியறிவுடையவன், அறிஞன் *புலன்நன்கு உணர்ந்த புலமையோரே* (தொல். 961:3).

புலவர் *பெயர்*

அறிவுடையோர்; புலமையோர். *நூல்நவில் புலவர் நுவன்று அறைந்தனரே* (தொல். 1414.5).

புலவி *பெயர்*

காதலர்களின் சிற்றூடல், புலத்தல் *புல்லுதல் மயக்கும் புலவிக் கண்ணும்* (தொல். 1101:1).

புலன்[1] *பெயர்*

1. இலக்கண மரபு *புலன்நன்கு உணர்ந்த புலமையோரே* (தொல் 961:3).

2. ஐம்புலன்களால் துய்க்கப்பெறும் நுகர்ச்சி *செல்வம் புலனே புணர்வு விளையாட்டு என* (தொல். 1208:1).

புலன்[2] *பெயர்*

எண்வகைச் செய்யுள் வனப்புகளுள் ஒன்று; அனைவருக்கும் எளிதில் பொருள் விளங்கும்படிச் செய்யுள் அமைத்தல். *புலன் என மொழிப புலன் உணர்ந்தோரே* (தொல். 1500:1).

புலி *பெயர்*

மஞ்சள் உடலில் கருப்புக் கோடுகளைப் பெற்றதும், மிக வேகமாகப் பாய்ந்து இரையைத் தன் கூரிய பற்களால் பற்றுவதும், வலிமை மிக்கதுமாகிய ஒரு காட்டு விலங்கு. *பெற்றம் எருமை புலிமரை புல்வாய்* (தொல் 1544:1).

புள் *பெயர்*

இறகுகளின் உதவியால் வானில் பறக்கவல்ல உயிரினம்; பறவை *நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்* (தொல் 1040:17)

புள்ளி *பெயர்*

1. மெய்யெழுத்தின் வரிவடிவத்தின்மேல் இடம்பெறும் சுழிக்குறி. *மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்* (தொல். 15)

2. மெய்யெழுத்து. *யரழ என்னும் புள்ளி முன்னர்* (தொல். 29 1)

புளி *பெயர்*

எலுமிச்சை, புளி ஆகிய கனிகளின் சுவை, புளிப்பு *ஏனைப் புளிப்பெயர் மெல்லெழுத்து மிகுமே* (தொல். 246).

புளிமரம் *பெயர்*

சிறிய இலைகளையும் மிகப் புளிப்பான காய்கனிகளையும் பெற்று வெப்ப மண்டலத்தில் வளரும் பெரிய மரவகை; புளிய மரம் *புளிமரக் கிளவிக்கு அம்மே சாரியை* (தொல் 245).

புறங்கா-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

பாதுகாத்தல்; காப்பாற்றுதல் *வழிபடு தெய்வம் நிற்புறங் காப்ப* (தொல் 1370:1)

புறஞ்செயச் சிதைதல் *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று, காதலனைப் பிரிந்து வாடும் தலைவிக்குப் பிறர் ஒப்பனை செய்யும்போது அவள் மகிழ்ச்சியின்றிச் சினங்கொள்ளுதல் *புறஞ்செயச் சிதைதல் புலம்பித் தோன்றல்* (தொல். 1215:1)

புறஞ்சொல் *பெயர்*

பிறரைக் காணாதவிடத்து அவர்மீது குற்றம் கூறுதல் *புறஞ்சொல் மாணாக் கிளவியொடு தொகைஇ* (தொல். 1221:6).

புறஞ்சொல் மாணாக் கிளவி *பெயர்*

கற்புக் காலத்துக் காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று, கணவனை மற்றவர்கள் பழித்துரைத்தால் மனைவி அதனைப் பொறுக்காமல் அவர்களை வெறுத்து மறுத்தல். *புறஞ்சொல் மாணாக் கிளவியொடு தொகைஇ* (தொல் 1221:6)

புறத்திணை *பெயர்*

உள்ளத்தால் மட்டுமே உணரப்படுவதாகிய காதலைப் பாடுபொருளாகக் கொண்ட அகப்பொருள் ஒன்றைத்தவிர, இத்தன்மைத்து எனக் கூறி மற்றவர்களுக்கு உணர்த்தப்படும் பொருள்கள் எல்லாவற்றையும் விளக்கும் பொருளிலக்கணப் பகுப்பு. *புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்* (தொல்.1006:2).

புறத்திறை *பெயர்*

வெட்சித் திணையின் துறைகளுள் ஒன்று; பகைவர்களின் மாட்டுத் தொழுவங்களை முற்றுகை இடுவதற்காக அவற்றிற்கு வெளியே சுற்றிலும் தங்கியிருத்தல் *முற்றின் ஆகிய புறத்திறை* (தொல். 1008:4)

புறத்தோர் *பெயர்*

புறப்பெண்டிர்; தாதியரும் கணிகையரும் (இளம்.); அடியோரும் வினைவல பாங்கினோரும் ஆகிய அகப்புறத் தலைவர் (நச்சர்.). *புறத்தோர் ஆங்கண் புணர்வது ஆகும்* (தொல் 1126).

புறத்தோன் *பெயர்*

கோட்டை மதிலை முற்றுகையிட்டு வெளியே காத்திருக்கும் படைத்தலைவன் அல்லது அரசன். *புறத்தோன் வீழ்ந்த புதுமையானும்* (தொல் 1018:6).

புறத்தோன் அணங்கிய பக்கம் *பெயர்*

உழிஞைத் திணையின் துறைகளுள் ஒன்று; கோட்டையை முற்றுகையிட்டு அதன் மதிலுக்கு வெளியே காத்திருக்கும் படைத்தலைவன் அல்லது அரசன் கோட்டைக்கு உரியவனின் போர்த்திறத்தால் வருந்துகின்ற நிலை. *முரணிய புறத்தோன் அணங்கிய பக்கமும்* (தொல்.1017:4-5).

புறத்தோன் வீழ்ந்த புதுமை *பெயர்*

உழிஞைத் திணையின் துறைகளுள் ஒன்று; கோட்டை ஒன்றை முற்றுகையிட்ட எதிரிப்படையினர் போரில் அழிந்து விடுதல். *புறத்தோன் வீழ்ந்த புதுமை யானும்* (தொல். 1018:6).

புறந்தரு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

பேணுதல்; காப்பாற்றுதல். *விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்* (தொல். 1102:3).

புறநிலை *பெயர்*

பாடாண் திணையின் துறைகளுள் ஒன்று; பாட்டுடைத் தலைவனால் வழிபடப்பெறும் கடவுளின் அருளால் அவன் சிறந்து வாழட்டும் என வாழ்த்துகை; புறநிலை வாழ்த்து. *புறநிலை வாயுறை செவியறிவுறூஉ என* (தொல் 1420:1)

புறநிலை வாழ்த்து *பெயர்*

காண்க புறநிலை *ஆவயின் வரூஉம் புறநிலை வாழ்த்தும்* (தொல்.1039:9).

புறப்பாட்டு வண்ணம் *பெயர்*

ஒரு செய்யுளின் ஓசை முடிந்தது போன்று முடியாதாகி வருவது (இளம்.). *புறப்பாட்டு வண்ணம் முடிந்தது போன்று முடியா தாகும்* (தொல் 1484:1).

புறப்பாடு *பெயர்*

வெளிப்பாடு. *பூப்பின் புறப்பாடு ஈர்அறு நாளும்* (தொல். 1137:1).

புறம்[1] *பெயர்*

1. இடம். *இறைச்சி தானே உரிப்புறத்ததுவே* (தொல் 1178).
2. வெளிப்பக்கம். *புறக்காழனவே புல்என மொழிப* (தொல். 1588)
3. உடல்; உடம்பு. *புறஞ்செயச் சிதைதல்* (தொல். 1215:1).

புறம்[2] *இடை*

இடவேற்றுமை ஆகிய ஏழாம் வேற்றுமையின் சொல்லுருபுகளுள் ஒன்று. *கண் கால் புறம் அகம் உள்உழை கீழ்மேல்* (தொல் 567:1).

புறமொழி *பெயர்*

1. *காண்க* புறஞ்சொல். *நிம்பிரி கொடுமை வியப்பொடு புறமொழி* (தொல். 1223:1).
2. எதிரில் உள்ளவரை முன்னிலையாக்காமல் வேறு எவரையோ குறித்துப் பேசுவதைப் போன்ற சாடைப்பேச்சு *முன்னிலைப் புறமொழி எல்லா வாயிற்கும்* (தொல். 1117:1).

புறன்[1] *பெயர்*

வெளியிடம். *பகற்புணர் களனே புறன்என மொழிப* (தொல். 1082:1).

புறன்[2] *பெயர்*

காண்க: புறத்திணை. *வஞ்சி தானே முல்லையது புறனே* (தொல் 1011).

புனல் *பெயர்*

நீர். *வேந்தன்மேய தீம்புனல் உலகமும்* (தொல். 952:3).

புனிறு *பெயர்*

மகவினைப் பெற்றெடுத்த அணிமைக் காலம் *புனிறுஎன் கிளவி ஈன்றணிமைப் பொருட்டே* (தொல். 859)

புனை-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. முறைப்படி அமைத்தல். *சின்மென் மொழியாற் சீர்புனைந்து யாப்பின்* (தொல். 1494:2).
2. செய்யுள் இயற்றுதல். *விருந்தே தானும் புதுவது புனைந்த யாப்பின் மேற்றே* (தொல்.1498).

பூ

பூ[1] *பெயர்*

ப் என்னும் மெய்யின்மீது ஊகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

பூ[2] *பெயர்*

மலர். *வண்டே இழையே வள்ளி பூவே* (தொல் 1044:1).

பூசன்மயக்கம் *பெயர்*

காஞ்சித் திணையின் துறைகளுள் ஒன்று, போரில் பெரும்புகழோடு இறந்துபட்ட வீரன் ஒருவனைச் சுற்றி நின்று அவன் உறவினர்கள் அரற்றுதல் *மாய்ந்த மகனைச் சுற்றிய சுற்றம் மாய்ந்த பூசன் மயக்கத்தானும்* (தொல் 1029:19-20).

பூசன்மாற்று *பெயர்*

வெட்சித் திணையின் துறைகளுள் ஒன்று; ஆநிரை கவரச் சென்ற வீரர்கள் அவற்றை மீட்பதற்காகத் தம்மைப் பின்தொடரும் கரந்தை வீரர்களின் போரை விலக்கித் தம் ஊருக்குத் திரும்புதல். *ஊர்கொலை ஆகோள் பூசன் மாற்றே* (தொல். 1008:5).

பூசை *பெயர்*

வீட்டுவிலங்குவகை, பூனை *வெவ்வாய் வெருகினைப் பூசை என்றலும்* (தொல். 1571:4).

பூதம் *பெயர்*

அடிப்படையான இயற்கைப் பொருள் (நிலம், நீர், தீ, வளி, வெளி என்னும் ஐந்து); பஞ்ச பூதம். *வளிஎன வருஉம் பூதக் கிளவியும்* (தொல். 243:1).

பூப்பு *பெயர்*

மாதவிடாய்; மாதவிலக்கு; வீட்டு விலக்கு *பூப்பின் புறப்பாடு ஈர்அறு நாளும்* (தொல். 1137:1).

பூல் *பெயர்*

மரவகை; பூலா. *பூல்வேல் என்றா ஆல்என் கிளவியொடு* (தொல்: 376:1).

பூவைநிலை *பெயர்*

வெட்சித் திணையின் துறைகளுள் ஒன்று; காயாமலரைப் பார்த்துத் திருமாலின் நிறத்தைப் போன்றது எனப் புகழ்தல் (இளம்), மன்னனைத் திருமால் முதலிய கடவுளர்களோடு ஒப்புமை கூறிப் புகழ்தல் (நச்சர்). *தாவா விழுப்புகழ் பூவை நிலையும்* (தொல்.1010:10).

பெ

பெ *பெயர்*

ப் என்னும் மெய்யெழுத்தின்மேல் எகர உயிர் சேரப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

பெட்டல் *பெயர்*

விரும்புதல்; விழைதல் *காய்தலும் உவத்தலும் பிரித்தலும் பெட்டலும்* (தொல் 1097:40).

பெட்டை *பெயர்*

விலங்கின் பெண்மைப் பெயர். *பேடையும் பெடையும் பெட்டையும் பெண்ணும்* (தொல் 1505.1)

பெட்பு *பெயர்*

விருப்பம், விழைவு *பிணையும் பேணும் பெட்பின் பொருள* (தொல். 822).

பெடை *பெயர்*

பறவைகளின் பெண்மைப் பெயர் *பேடையும் பெடையும் நாடின் ஒன்றும்* (தொல். 1557).

பெண் *பெயர்*

மகடூஉத் தன்மை வாய்ந்த உயிரினம் *பெண்ணும் ஆணும் பிள்ளையும் அவையே* (தொல் 1572)

பெண்டிர் *பெயர்*

மகளிர். *மாலை ஏந்திய பெண்டிரும் மக்களும்* (தொல் 1096:55).

பெண்டு *பெயர்*

பெண் *பெண்டுஎன் கிளவிக்கு அன்னும் வரையார்* (தொல். 422)

பெண்பால் *பெயர்*

பெயர்ச்சொல்லிற்கு உரிய ஐந்து பால்களுள் ஒன்று; உயிரினங்களில் பெண்ணைச் சுட்டும் சொல். *பெண்பால் எல்லாம் பெண் எனற்கு உரிய* (தொல் 1553:2)

பெண்மை *பெயர்*

மகடூஉத் தன்மை, மகளிருக்குரிய பண்பு. *பெண்மை அடுத்த மகன்என் கிளவியும்* (தொல் 651:3)

பெய்-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

விட்டு நிரப்புதல்; வார்த்தல் *பெய்ந்நீர் போலும் உணர்விற்று என்ப* (தொல். 1068:4).

பெயர்[1] *பெயர்*

1. ஒரு மனிதன், பொருள் அல்லது இடத்தைச் சுட்டும் நாமம், இயற்பெயர். *சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாஅர்* (தொல். 1004:2)
2. *காண்க* பெயர்ச்சொல் *எகர ஒகரம் பெயர்க்கு ஈறு ஆகா* (தொல் 273:1).

பெயர்[2]-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. போக்குதல். *நீத்த கணவற் றீர்த்த வேலிற் பெயர்த்த மனைவி ஆஞ்சியானும்* (தொல்.1029:12-13)

2. இழந்த ஒன்றை மீளப்பெறுதல்; மீட்டல். *ஆர்அமர் ஓட்டலும் ஆபெயர்த்துத் தருதலும்* (தொல். 1010:11).

பெயர்[3]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. மீளுதல். *தான்அகம்புகாஅன் பெயர்தல் இன்மையின்* (தொல். 1057:3).

2. இடம்விட்டு மாறுதல். *நிலம்பெயர்ந்து உரைத்தல் அவள்நிலை உரைத்தல்* (தொல் 1119:1)

பெயர்ச்சொல் *பெயர்*

தமிழின் நான்குவகைச் சொற்களுள் ஒன்று; திணை, பால், எண்ணைக் காட்டுவதோடு வேற்றுமை உருபுகளை ஏற்கும் சொல். *மக்கள் என்னும் பெயர்ச்சொல் இறுதி* (தொல் 405:1).

பெயர்நிலைக் கிளவி *பெயர்*

காண்க: பெயர்ச்சொல். *ஒருமை சுட்டிய பெயர்நிலைக் கிளவி* (தொல். 945:1)

பெயர்ப்பயனிலை *பெயர்*

ஒரு வாக்கியத்தில் வினைமுற்று தொக்கிநிற்கப் பெயர்ச்சொல்லே பயனிலையாக நிற்றகை. *எ-டு.:* அவன் பெயர் இராமன். *அன்றி அனைத்தும் பெயர்ப்பயனிலையே* (தொல். 551:4).

பெயரெஞ்சு கிளவி *பெயர்*

தன் கருத்து முற்றுப்பெறுவதற்குப் பெயர்ச்சொல் ஒன்றை எதிர்பார்த்து நிற்கும் வினைக்குறை; பெயரெச்சம். *பெயரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே* (தொல் 917).

பெரிது *பெயர்*

அளவாலோ உருவத்தாலோ தகுதியாலோ பெருமை உடையது; மிக்கது *பெரியோர் ஒழுக்கம் பெரிது எனக் கிளந்து* (தொல் 1100:16)

பெரியவர் *பெயர்*

பெருமை உடையோர்; உயர்ந்தவர். *நல்லார் நாணப் பெரியவர்க் கண்ணி* (தொல். 1026:10).

பெரியோர் *பெயர்*

வயதாலோ, கல்வியாலோ, தகுதியாலோ, பதவியாலோ உயர்ந்தவர் *பெரியோர் ஒழுக்கம் பெரிது எனக் கிளந்து* (தொல். 1100:16)

பெரு *பெயரடை*

பெரிய. *பெற்ற பின்னரும் பெருவளன் ஏத்தி* (தொல். 1040.5).

பெருக்கம் *பெயர்*

மிகுதி. *வயாஎன் கிளவி வேட்கைப் பெருக்கம்* (தொல். 855).

பெருகு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

அளவு மிகுதல்; அதிகமாதல் *நோய்மிகப் பெருகித் தன் நெஞ்சு கலுழ்ந்தோளை* (தொல்.989:6)

பெருஞ்சோற்று நிலை *பெயர்*

வஞ்சித் திணையின் துறைகளுள் ஒன்று; பகைவர்களின்மேல் படையெடுப்பதற்குமுன் அரசன் ஒருவன் தன் படைவீரர்களுக்கு விருந்தோம்பகை *பிண்டம் மேய பெருஞ்சோற்று நிலையும்* (தொல் 1013:9).

பெருந்திணை *பெயர்*

அகப்பொருள் திணைகள் ஏழனுள் ஒன்று; மரபாலும், வயதாலும், மனநிலையாலும் பொருந்தாத பெண் ஒருத்தியை விரும்பும் பொருந்தாக் காமம். *காஞ்சி தானே பெருந்திணைப் புறனே* (தொல். 1027)

பெருப்பு *பெயர்*

பெரிது ஆகுகை; பெருக்கை. *பணையே பிழைத்தல் பெருப்பும் ஆகும்* (தொல். 823).

பெரும் *பெயரடை*

1. மிகுதியான. *பெரும்பகை தாங்கும் வேலினானும்* (தொல். 1026:7).
2. சிறந்த. *பின்முறை ஆகிய பெரும்பொருள் வதுவை* (தொல். 1122:1).

பெரும்பகை தாங்கும் வேல் *பெயர்*

வாகைத் திணையின் துறைகளுள் ஒன்று; பகைவரின் பெரிய படையை அச்சுறுத்தித் தடுத்து நிறுத்தும் வேற்படையினரின் வீரம். *பெரும்பகைதாங்கும் வேலினானும்* (தொல்.1026:7)

பெரும்படைவாழ்த்தல் *பெயர்*

வெட்சித் திணையின் துறைகளுள் ஒன்று;

1. போரில் இறந்துபட்ட வீரனின் பெருமையை அவனுக்குரிய நடுகல்லில் பொறித்தல்.
2. அந்நடுகல்லைத் தெய்வமாகக் கருதி அதற்கு வழிபாடாகப் பலவற்றைப் படைத்தல்.

சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தல் என்று (தொல். 1010:20).

பெருமங்கலம் *பெயர்*

பாடாண் திணையின் துறைகளுள் ஒன்று, ஒருவரின் பிறந்தநாள் விழாச் சிறப்புக் கூறுதல்; நாண்மங்கலம். *பிறந்தநாள்வயின் பெருமங்கலமும்* (தொல். 1040:8).

பெருமிதம் *பெயர்*

கல்வி, வீரம், புகழ், வள்ளன்மை போன்ற சிறப்புகளால் உண்டாகும் உள்ளக் களிப்பு. *சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே* (தொல். 1206:2).

பெருமை *பெயர்*

1. அளவால் பெரியதாகிய நிலை; சிறுமைக்கு மாறானது. *நன்மை தீமை சிறுமை பெருமை* (தொல்.563:3).
2. வீரத்தால் பெறப்படும் சிறப்பு *கற்சிறை போல ஒருவன் தாங்கிய பெருமையானும்* (தொல்.1013:7-8)
3. புகழ். *மாற்றரும் கூற்றம் சாற்றிய பெருமையும்* (தொல்.1029:1)
4. வஞ்சித் திணையின் துறைகளுள் ஒன்று; விளக்கம் எய்திய பெருமை (இளம்.); அரசனுக்குப் படையெடுப்பில் துணையாய் நின்ற மற்றோர் அரசனின் படைகள் பெறும் பெருமை (நச்சர்.). *வயங்கல் எய்திய பெருமையானும்* (தொல். 1013:2)

பென்[ட்]-த[ட]ல் *செயப்படுபொருள் குன்றா வினை*

விரும்புதல். *காய்தலும் உவத்தலும் பிரித்தலும் பெட்டலும்* (தொல். 1097:40).

பெற்றம் *பெயர்*

1. பசு அல்லது எருது, மாடு *எருமையும் மரையும் பெற்றமும் அன்ன* (தொல். 1542)
2. எருமை. *தென்பாண்டி நாட்டார் ஆ எருமை என்பவற்றைப் பெற்றம் என்றும்* (சேனா. தொல் சொல் 400)

பெறு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

பிறர் கொடுக்க ஒருவர் ஒன்றை அடைதல் *பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇ* (*தொல்.* 1040:5).

பே

பே *பெயர்*

ப் என்னும் மெய்யின்மீது ஏகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

பேஎய் *பெயர்*

பேய். *பேஎய் ஓம்பிய பேஎய்ப் பக்கமும்* (*தொல்.* 1029:6)

பேடை *பெயர்*

பறவையின் பெண்மைப் பெயர். *பேடையும் பெடையும் நாடின் ஒன்றும்* (*தொல்.* 1557).

பேண் *பெயர்*

விருப்பம். *பிணையும் பேணும் பெட்பின் பொருள* (*தொல்* 822).

பேணு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. பாதுகாத்தல், ஓம்புதல்; காப்பாற்றுதல். *பேணா ஒழுக்கம் நாணிய பொருளினும்* (*தொல்.*1100:14).
2. விரும்புதல்; விழைதல் *பேணிச் சொல்லிய குறைவினை எதிரும்* (*தொல்.* 1100:26)
3. பொருட்படுத்துதல், இலட்சியம் செய்தல். *வருபகை பேணார் ஆர்எயில் உளப்பட* (*தொல்.*1017:7).

பேதைமை *பெயர்*

அறிவின்மை; மடமை. *கேட்டதனை ஆராயாமல் உண்மை எனக் கொள்ளல்* (*தொல் பொருள்.* 248 *இளம்.*); *சினனே பேதைமை நிம்பிரி நல்குரவு* (*தொல்.* 1194:1).

பேம் *பெயர்*

அச்சம். *பேம்நாம் உரும்என வரூஉங் கிளவி* (*தொல்* 849)

பேய்ப்பக்கம் *பெயர்*

காஞ்சித் திணையின் துறைகளுள் ஒன்று. போரில் புண்பட்டு விழுந்துகிடக்கும் வீரன் ஒருவனைக் காக்க யாரும் இன்மையால் பேயே பாதுகாப்பதாகக் கூறுதல், பேய்க்காஞ்சி. *ஏமச்சுற்றம் இன்றிப் புண்ணோற் பேஎய் ஓம்பிய பேஎய்ப் பக்கமும்* (*தொல்* 1029:5-6)

பேர்[1] *பெயர்*

1. பெயர், நாமம் *ஊரும் பேரும் கெடுதியும் பிறவும்* (*தொல்* 1051:11)
2. தலைவியும் தோழியும் சேர்ந்திருக்கும்போது தலைவன் வந்து தலைவியின் பெயரைக் கேட்கும் களவியலின் துறைகளுள் ஒன்று. பேர் வினாதல் *ஊரும் பேரும் கெடுதியும் பிறவும்* (*தொல்* 1051:11).

பேர்[2] *பெயரடை*

பெரிய *ஏமப் பேர் ஊர்ச் சேரியும் சுரத்தும்* (*தொல்.* 987:1)

பேர்[3]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

குறைதல் *பேராச் சிறப்பின் இருநான்கு கிளவியும்* (*தொல்* 1051:6).

பேராண்பக்கம் *பெயர்*

வஞ்சித் திணையின் துறைகளுள் ஒன்று; பகைவர்களின் ஆற்றலை ஒரு பொருட்டாக மதியாமல் படையைச் செலுத்துகின்ற வீரத்தைக் கூறுதல். *பொருள்இன்று உய்த்த பேராண்பக்கமும்* (*தொல்*. 1013:6).

பேன் *பெயர்*

மக்களின் தலைமுடியிலும் விலங்குகளின் தோற்பகுதியிலும் வாழும் ஓர் உயிரினம். *தானும் பேனும் கோனும் என்னும்* (*தொல்*. 352:1).

பை

பை *பெயர்*

ப் என்னும் மெய்யெழுத்தின்மேல் ஐகார உயிர் ஏறத் தோன்றும் உயிர்மெய் நெடில்.

பையுள் *பெயர்*

துன்பம்; வருத்தம். *பையுளும் சிறுமையும் நோயின் பொருள* (*தொல்*. 825).

பொ

பொ *பெயர்*

ப் என்னும் மெய்யின்மேல் ஒகர உயிர் ஏற உண்டாகும் உயிர்மெய்க் குறில்.

பொங்கு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

வெகுள்தல்; சினத்தல் (இளம்.); பெருக்கம்; பெருமிதம் கொள்ளல் (நச்சர்.). *பொங்குதல் இன்றிப் புரையோர் நாப்பண்* (*தொல்*. 1374:2).

பொச்சாப்பு *பெயர்*

1. மறதி *கையாறு இடுக்கண் பொச்சாப்புப் பொறாமை* (*தொல்*. 1209:8).
2. சோர்வு. *வன்சொல் பொச்சாப்பு மடிமையொடு குடிமை* (*தொல்*. 1223:2).

பொதி-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

நிறைதல். *அருள்முந் துறத்த அன்புபொதி கிளவி* (*தொல்*. 1111:1).

பொது *பெயர்*

ஒருவருக்கோ ஒன்றற்கோ உரிமை ஆகாமல் பலருக்கோ பலவற்றிற்கோ உரிமை ஆகும் தன்மை; பொதுமை. *பொதுமொழி கிளந்த படலத் தானும்* (*தொல்*. 1427:3).

பொதுமொழி *பெயர்*

பல பொருள்களுக்கும் பொருந்துகின்ற பொது இலக்கணம். *பொதுமொழி தொடரின் அது படலம் ஆகும்* (*தொல்*. 1430:2).

பொய் *பெயர்*

இல்லாத ஒன்றைப் புனைந்து கூறும் கூற்று; உண்மை அல்லாதது. *பொருளொடு புணராப் பொய்ம்மொழியானும்* (*தொல்*. 1432:3).

பொய்பாராட்டல் *பெயர்*

களவியலின் துறைகளுள் ஒன்று; இயற்கைப் புணர்ச்சியில் தலைவன் தலைவியை மிகைப்படுத்திப் புகழ்தல். *மெய்தொட்டுப் பயிறல் பொய்பா ராட்டல்* (*தொல்*. 1051:11).

பொய்ம்மை *பெயர்*

காண்க. பொய். *வாய்மையும் பொய்ம்மையும் கண்டோற் சுட்டி* (தொல். 984:4).

பொய்யாக் கோடல் *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; தலைவனின் பிரிவாற்றாமையால் வருந்தும் தலைவி அவன் கூறிய உறுதிமொழிகள் அனைத்தும் பொய் எனக் கொள்ளுதல். *பொய்யாக் கோடல் மெய்யே என்றல்* (தொல். 1219:6).

பொருட்டு[1] *பெயர்*

காரணம்; நிமித்தம். *சுட்டிய சூத்திரம் முடித்தற் பொருட்டா* (தொல். 1606:2).

பொருட்டு[2] *குறிப்பு வினைமுற்று*

பொருளை உடையது. *எற்றுஎன் கிளவி இறந்த பொருட்டே* (தொல். 748).

பொருண்மை *பெயர்*

1. ஒரு வஸ்துவின் தன்மை. *பொருண்மை சுட்டல் வியங்கோள் வருதல்* (தொல். 551:1).

2. ஒரு சொல் உணர்த்தும் கருத்து; அருத்தம். *இருபாற்று என்ப பொருண்மை நிலையே* (தொல். 644:2).

3. கூறப்படும் செய்தி; உட்கருத்து. *தொகையினும் வகையினும் பொருண்மை சுட்டி* (தொல்.1425:4).

பொருத்து-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

கூட்டுதல்; சேர்த்தல். *மனைவியைக் காய்வின்று அவன்வயின் பொருத்தற்கண்ணும்* (தொல்.1101:8).

பொருந்து-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

இசைதல்; அமைவாதல். *பொருந்தச் சொல்லுதல் அவர்க்கு உரித்தன்றே* (தொல். 1576:3).

பொருநர் *பெயர்*

1. போர்வீரர். *பால்அறி மரபில் பொருநர் கண்ணும்* (தொல். 1025:7).

2. ஏர்க்களம்,போர்க்களம் ஆகியவற்றைச் சிறப்பித்துப் பாடுதலைத் தொழிலாக உடைய கூத்தர் இனத்தைச் சேர்ந்த கலைஞர். *கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்* (தொல்.1040:3).

3. வாகைத் திணையின் துறைகளுள் ஒன்று; பொருநர்வாகை; போர்வீரர்களின் வெற்றியைச் சிறப்பித்தல். *பால்அறி மரபில் பொருநர் கண்ணும்* (தொல். 1025:7).

பொருவ *இடை*

உவம உருபுகளுள் ஒன்று. *எள்ள விழையப் புல்லப் பொருவ* (தொல். 1238:1).

பொருள்[1] *பெயர்*

1. ஒரு சொல் உணர்த்தும் கருத்து, அருத்தம். *ஒருசொல் பல பொருட்கு உரிமை தோன்றினும்* (தொல். 782:4).

2. நூல் நுவலும் செய்தி; விஷயம். *அவ்வறு பொருட்கும் ஓரன்ன உரிமைய* (தொல். 719:3).

பொருள்[2] *பெயர்*

1. வஸ்து. *தான்அறி பொருள்வயின் பன்மை கூறல்* (தொல். 507:2)

2. செல்வம். *பொருள்வயின் பிரிதலும் அவர்வயின் உரித்தே* (தொல். 982).

3. அறம், பொருள், இன்பம் ஆகிய உறுதிப் பொருள். *புகழொடும் பொருளொடும் புணர்ந்தன் றாயின்* (தொல். 1388:1)

பொருள்[3] *பெயர்*

நோக்கம். *மைந்து பொருளாக வந்த வேந்தனை* (தொல். 1020:1).

பொருள்[4] *பெயர்*

1. அகம், புறம் என இருவகைப்படும் தமிழின் இலக்கணவகை; பொருள் இலக்கணம். *பொருளதிகாரம்* (தொல். மூன்றாம்பெரும்பிரிவின் தலைப்பு).

2. அகத்திணைப் பாடலில் பயிலும் முதல், கரு, உரி என்னும் மூன்று *முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே* (தொல். 950:1).

3. உவமையால் விளக்கப்படும் ஒன்று, உவமேயம் *உவமமும் பொருளும் ஒத்தல் வேண்டும்* (தொல். 1232)

பொருள்வகை *பெயர்*

செய்யுள் உறுப்புகளுள் ஒன்று; புலவன்தன் கருத்தில் உண்டாக்கிக்கொண்டு இயற்றும் பொருண்மை; இத்திணைக்கு உரியது இது என்னாமல் எல்லாப் பொருள்களுக்கும் பொதுவாக அமைவது; பாடுபொருள் *இதுஆகு இத்திணைக்கு உரிப்பொருள் என்னாது பொதுவாய் நிற்றல் பொருள்வகை என்ப* (தொல் 1467:3-4).

பொருளிடையிடுதல் *பெயர்*

32 இலக்கிய உத்திகளுள் ஒன்று, விதிக்கப்பெற்ற இலக்கணம் இப்பொருளுடைய இந்தச் சொல்லைப் பற்றியது என எடுத்துக்காட்டி உரைத்தல். *பொருளிடை யிடுதல் எதிர்பொருள் உணர்த்தல்* (தொல் 1614:20).

பொருளில கூறல் *பெயர்*

செய்யுட் குற்றங்களுள் ஒன்று, எடுத்துக் கொண்ட செய்திகளுக்குத் தொடர்பு இல்லாதனவற்றைக் கூறுதல் *பொருளில கூறல் மயங்கக் கூறல்* (தொல். 1612:4).

பொருளொடு புணர்ந்த பக்கம் *பெயர்*

வாகைத் திணையின் துறைகளுள் ஒன்று; மெய்ப்பொருளை ஒருவன் தெளிவாக உணர்தலைப் போற்றுதல். *பொருளொடு புணர்ந்த பக்கத்தானும்* (தொல். 1026:21).

பொலி-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. நிகழ்தல், நடத்தல். *காமக் கூட்டம் தனிமையில் பொலிதலின்* (தொல். 1069:1).
2. செழித்து ஓங்குதல் *பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து பொலிமின்* (தொல்.1370:2-3).

பொலிவு *பெயர்*

அழகு. *பொற்பே பொலிவு* (தொல் 819).

பொழிப்பு *பெயர்*

தொடை வகைகளுள் ஒன்று, நாற்சீர் அடி ஒன்றில் எதுகை முதலிய தொடைகள் ஒருசீர் இடைவிட்டு இடம் பெறுதல் *எ-டு.* பொழிப்பு மோனை. *பொழிப்பும் ஒரூஉம் செந்தொடை மரபும்* (தொல். 1350:1)

பொழில் *பெயர்*

சோலை. *வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்* (தொல் 1339:3)

பொழுது *பெயர்*

1. நேரம். *துன்புறு பொழுதினும் எல்லாம் கிழவன் வன்புறுத்தல்லது.* (தொல். 1134:1)

2. பருவம். *அந்நிலம் பொழுதொடு வாரா ஆயினும்* (தொல். 968:2).

பொழுது *பெயர்*

அகத் திணையின் முதற்பொருள்களுள் ஒன்றாகவும், பெரும்பொழுது, சிறுபொழுது என இருவகைப்படுவதாகவும் உள்ள காலம். *முதல் எனப்படுவது நிலம்பொழுது இரண்டின்* (தொல். 951:1).

பொழுது மறுப்பாதல் *பெயர்*

கற்புக் காலத்துக் காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; கணவனுக்கு ஏதாவது இடையூறு நேரும் நேரத்தைப்பற்றி மனைவி கவலைப்படுதல் (இளம்). *புணர்ந்துழி உண்மை பொழுது மறுப்பாதல்* (தொல் 1221:3).

பொற்ப *இடை*

உவம உருபுகளுள் ஒன்று. *புல்லப் பொருவப் பொற்பப் போல* (தொல். 1235:10).

பொற்பு *பெயர்*

பொலிவு, சிறப்பு. *பொற்பே பொலிவு* (தொல். 819)

பொறாமை *பெயர்*

மற்றவர்களின் ஆக்கத்தைக் கண்டு உள்ளம் சகிக்காத பண்பு; *அழுக்காறு கையாறு இடுக்கண் பொச்சாப்புப் பொறாமை* (தொல் 1209:8)

பொறி *பெயர்*

ஊழ்வினை. *பொறியின் யாத்த புணர்ச்சி நோக்கி* (தொல். 1061:17)

பொறிநுதல் வியர்த்தல் *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; முதன்முதலாகக் காதல்வயப்படும் தலைவிக்கு அச்சமும் நாணமும் ஏற்படுவதால் நெற்றியில் குறுவேர்வை அரும்புதல். *புகுமுகம் புரிதல் பொறிநுதல் வியர்த்தல்* (தொல். 1210:1).

பொறு-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஒருவன் தனக்கு நேரும் துன்பங்களைத் தாங்கிக் கொள்ளுதல்; சகித்தல். *பொறுத்த காரணம் குறித்த காலையும்* (தொல் 1064.15)

பொறை *பெயர்*

துன்பங்களைத் தாங்கும் தன்மை, பொறுமை, சகிப்பு *மெல்லியற் பொறையும் நிறையும்* (தொல்.1102:2)

பொன் *பெயர்*

அணிகலன்கள், நாணயங்கள் முதலியன செய்யப் பயன்படுத்தப்படும் விலை உயர்ந்ததொரு மஞ்சள் நிற உலோகம்; தங்கம் *பொன்என் கிளவி ஈறுகெட முறையின்* (தொல். 357:1).

போ

போ[1] *பெயர்*

ப் என்னும் மெய்யின்மீது ஓகார உயிர் ஏறத் தோன்றும் உயிர்மெய் நெடில்.

போ[2]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

ஓர் இடத்தைவிட்டு நீங்குதல், செல்லுதல். *புடைகெடப் போகிய செலவே* (தொல். 1008:2).

போ[3] *இடை*

அசைநிலைகளுள் ஒன்று. பிறபிறக்கு அரோ போமாது என வரூஉம் (தொல். 764:2).

போக்கல் *பெயர்*

தோழி தலைவியைத் தலைவனோடு உடன்போக்காக அனுப்புதல். *போக்கற் கண்ணும் விடுத்தற் கண்ணும்* (தொல். 989:2).

போக்கியல் *பெயர்*

காண்க: சுரிதகம். போக்கியல் வகையே வைப்பெனப் படுமே (தொல். 1396).

போக்கு *பெயர்*

1. குற்றம். போக்குஇன்று என்ப வழக்கின் உள்ளே (தொல். 506:2).

2. செல்கை; போகுகை போக்கு இன்று - போகுதல் இன்று; எனவே, வரும் என்ற பொருளாயிற்று (தொல் சொல். 22 தெய்வச்.).

3. *காண்க:* உடன்போக்கு. *போக்கும் வரைவும் மனைவிகண் தோன்றும்* (தொல். 1174:6).

4. *காண்க:* சுரிதகம். *போக்குஇன்று ஆகல் உறழ்கலிக்கு இயல்பே* (தொல். 1415:2).

போகல் *பெயர்*

நீளம். வார்தல் போகல் ஒழுகல் மூன்றும் (தொல். 801:1).

போத்து *பெயர்*

1. ஓரறிவு பெற்ற உயிரினங்களின் பிள்ளைப் பெயர். *பிள்ளை குழவி கன்றே போத்துஎன* (தொல் 1526:1).

2. சில விலங்குகளின் ஆண்மைப் பெயர் *போத்தும் கண்டியும் கடுவனும் பிறவும்* (தொல்.1504:4).

போந்து *பெயர்*

காண்க: பனை போந்தே வேம்பே ஆர்என வரூஉம் (தொல். 1016:4).

போல்[1]-தல் [போறல்] *செயப்படுபொருள் குன்றா வினை*

நிகர்த்தல்; ஒப்பாதல் *முடிந்தது போன்று முடியாதாகும்* (தொல். 1484:2).

போல்[2] *இடை*

உவம உருபுகளுள் ஒன்று. *தாய்போல் கழறித் தழீஇய மனைவியை* (தொல். 1101:7).

போல *இடை*

உவம உருபுகளுள் ஒன்று. வேம்பும் கடுவும் போல வெஞ்சொல் (தொல். 1372:2).

போலி *பெயர்*

போல, போலும் என்பன போன்ற ஒப்புமையைச் சுட்டும் சொல். ஒப்புஇல் போலியும் அப்பொருட்டு ஆகும் (தொல் 763)

போற்றல் *பெயர்*

கடைப்பிடித்தல். ஆற்றுப்படை மருங்கில் போற்றல் வேண்டும் (தொல். 946:3).

பௌ

பௌ *பெயர்*

ப் என்னும் மெய்யெழுத்தின்மேல் ஔ என்னும் உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ம

ம் *பெயர்*

தமிழ் நெடுங்கணக்கில் பத்தாவது மெய்யெழுத்து.

ம *பெயர்*

ம் என்னும் மெய்யெழுத்தோடு அகர உயிர் சேரத் தோன்றும் உயிர்மெய்யெழுத்து; இரு உதடுகளும் இயைய மூக்கின் வளியால் பிறக்கும் ஒரு மாத்திரை அளவுள்ள மெல்லின உயிர்மெய்க் குறில். *இதழ் இயைந்து பிறக்கும் பகார மகாரம்* (தொல். 97); *மெல்லெழுத்தென்ப ஙஞண நமன* (தொல். 20).

மஃகான் *பெயர்*

ம் என்னும் மெய்யெழுத்து; மகர ஒற்று. *மஃகான் புள்ளிமுன் அத்தே சாரியை* (தொல். 186).

மக்கள் *பெயர்*

1. ஐம்பொறி உணர்வும் மன உணர்வும் உள்ள மனித இனம். *மக்கள் தாமே ஆறு அறிவு உயிரே* (தொல். 1535:1).
2. புதல்வர். *ஏமம்சான்ற மக்களொடு துவன்றி* (தொல். 1142:2).

மக *பெயர்*

குழந்தை. *காமக்கிழத்தி தன்மகத் தழீஇ* (தொல். 1097:18).

மகட்பாடு *பெயர்*

தன் மகளைத் திருமணம் செய்து கொடுத்தல். *மகட்பாடு அஞ்சிய மகட் பாலானும்* (தொல்.1029:15)

மகட்பால் *பெயர்*

காஞ்சித் திணைக்குரிய துறைகளுள் ஒன்று; பழைய குடியைச் சேர்ந்த ஒருவன் தன் மகளை மணக்க விரும்பிய மன்னனுக்குத் தர மறுத்தல்; மகள் மறுத்தல்; மகட்பாற் காஞ்சி. *மகட்பாடு அஞ்சிய மகட்பாலானும்* (தொல். 1029:15).

மகடூஉ *பெயர்*

பெண். *ளஃகான் ஒற்றே மகடூஉ அறிசொல்* (தொல் 490)

மகம் *பெயர்*

இருபத்தேழு விண்மீன்களுள் பத்தாவது விண்மீன் *மகப்பெயர்க் கிளவிக்கு இன்னே சாரியை* (தொல். 219).

மகரம் *பெயர்*

ம் என்னும் மெய்யெழுத்து, மகர ஒற்று. *அரை அளபு குறைதல் மகரம் உடைத்தே* (தொல்.13:1).

மகவு *பெயர்*

உயிரினங்களின் இளமைப்பெயர். *மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்பும்* (தொல். 1516:1).

மகள் *பெயர்*

1. பெண், மகடூஉ. *தனிமகள் புலம்பிய முதுபா லையும்* (தொல். 1029:25).
2. புதல்வி. *தோழி தானே செவிலி மகளே* (தொல். 1075).

மகன் *பெயர்*

1. ஆண்; ஆடூஉ; ஆண்மகன். *முறைமை சுட்டா மகனும் மகளும்* (தொல். 650:5).
2. புதல்வன். *மகன்தாய் உயர்பும் தன் உயர்பு ஆகும்* (தொல். 1124:2).
3. வீரன். *மாய்ந்த மகனைச் சுற்றிய சுற்றம்* (தொல். 1029:19).

மகாரம் *பெயர்*

ம் என்னும் மெய்யெழுத்து; மகர ஒற்று. *ஐந்தன் ஒற்றே மகாரம் ஆகும்* (தொல். 441).

மகிழ்-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

மனம் மகிழ்ச்சி அடைதல்; உவத்தல். *வாள்மலைந்து எழுந்தோனை மகிழ்ந்துபறை தூங்க* (தொல் 1010:17).

மகிழ்ச்சி *பெயர்*

ஒருவருடைய விருப்பம் நிறைவேறியதால் தோன்றும் மன உணர்ச்சி; உவகை; சந்தோஷம். *எஞ்சா மகிழ்ச்சி இறந்துவரு பருவத்தும்* (தொல். 1096:3).

மங்கலம் *பெயர்*

வாழ்த்து. *மங்கல மொழியும் அவைஅல் மொழியும்* (தொல். 1193:1).

மங்கலமொழி *பெயர்*

வாழ்த்துச் சொல் *மங்கல மொழியும் அவையல் மொழியும்* (தொல். 1193:1).

மடந்தப உரைத்தல் *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; காதல்வயப்பட்டு இன்பம் துய்த்த பிறகு, தலைவி தன் கள்ளமறியாத பேதைமை நீங்கச் சிலவற்றைக் கூறுதல். *பாராட்டெடுத்தல் மடம்தப உரைத்தல்* (தொல் 1213:1)

மடம் *பெயர்*

பெண்ணுக்குரிய குணங்களுள் ஒன்று; உய்த்துணராமல் கேட்ட வாறே உணரும் உணர்ச்சி, பேதைமை. *மடம்பட வந்த தோழிக் கண்ணும்* (தொல் 1096:44).

மடல் *பெயர்*

1. தென்னை, பனை முதலிய மரங்களின் இலை; ஏடு. *தோடே மடலே ஓலை என்றா* (தொல்.1590:1).
2. தன் காதலியை அடைய முடியாதபோது தலைவன் ஏறுவதற்காகப் பனங்கருக்கால் குதிரை போலச் செய்யப்படுவதோர் வடிவம்; மடல் மா. இதன் மேல் ஏறி இயங்குதலை மடலேறுதல் அல்லது மடலூர்தல் என்ப. *ஏறிய மடற் றிறம் இளமை தீர் திறம்* (தொல். 1001:1).

மடன் *பெயர்*

1. ***காண்க***: மடம். *மடனொடு நிற்றல் கடன் என மொழிப* (தொல். 1154:3).
2. நகைச்சுவைக்கு உரியவற்றுள் ஒன்று ஆகிய மடம்; கேட்ட செய்தியைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் வேறொன்றாகக் கருதிக் கொள்ளல். *மடன் என்று உள்ளப்பட்ட நகை நான்கு என்ப* (தொல் 1201:1-2)

3. அறியாமை *மடனே வருத்தம் மருட்கை மிகுதியோடு* (தொல். 1185:3)

மடன்மா *பெயர்*

காண்க: மடல் 2. *மடன்மா கூறும் இடனுமார் உண்டே* (தொல் 1051:20).

மடிமை *பெயர்*

சோம்பல். *வன்சொல் பொச்சாப்பு மடிமையொடு குடிமை* (தொல் 1223:2).

மடை *பெயர்*

சேர்த்துகை; பொருத்துகை; மடுக்கை. *மடை அமை ஏணி மிசை மயக்கமும் கடைஇ* (தொல்.1018:2)

மண் *பெயர்*

நீராட்டுதல். (முதனிலைத் தொழிற் பெயர்) *வென்ற வாளின் மண்ணோடு ஒன்ற* (தொல் 1018:11)

மண்டிலம்[1] *பெயர்*

ஒரு மன்னனுக்கு அல்லது அரசாங்கத்துக்கு உரிய நிலப்பகுதி. *மண்டிலத்து அருமையும்* (தொல். 991:17).

மண்டிலம்[2] *பெயர்*

செய்யுள் ஒன்றின் அனைத்து அடிகளும் சீராலும் அளவாலும் ஒத்துவருதல், விருத்தம். *மண்டிலம் குட்டம் என்று இவை இரண்டும்* (தொல் 1377:1).

மண்டு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

நெருங்கிப்போர் செய்தல். *ஒருதான் மண்டிய குறுமையும்* (தொல். 1017:6).

மண்ணுமங்கலம் *பெயர்*

1. உழிஞைத் திணையின் துறைகளுள் ஒன்று; பகைவனின் கோட்டையைக் கைப்பற்றிய மன்னன், அங்குக் கொள்ளும் வெற்றி நீராடல், விஜயாபிஷேகம். *இகன்மதில் குடுமிகொண்ட மண்ணுமங்கலமும்* (தொல் 1018.10).

2 பாடாண் திணையின் துறைகளுள் ஒன்று, அரசன் தான் முடிபுனைந்த ஆண்டுவிழாவில் மங்கல நீராடுகை. *சிறந்த சீர்த்தி மண்ணுமங்கலமும்* (தொல். 1040:9).

3. பாடாண் திணையின் துறைகளுள் ஒன்று, பகைவரின் மதிலையும் நாட்டையும் அழித்து அந்த வெற்றியைக் கொண்டாடும் நாளைப் புகழ்கை *மன்எயில் அழித்த மண்ணுமங்கலமும்* (தொல் 1040:12)

மணல் *பெயர்*

கடற்கரைகளிலும் பாலைநிலங்களிலும் காணப்படும் மிகச்சிறிய கல்துகள்களுடன் கூடிய மண்வகை. *வருணன் மேய பெருமணல் உலகமும்* (தொல். 952:4).

மணி *பெயர்*

பட்டை தீட்டப்பெற்று அணிகலன்களில் பதிக்கப்படும் விலைஉயர்ந்த கல்வகை; இரத்தினம். *நேர்இன மணியை நிரல்பட வைத்தாங்கு* (தொல் 1429:1).

மணை *பெயர்*

இரு ஓரங்களிலும் அடிப்பகுதியில் சட்டங்கள் இணைக்கப்பெற்றதும் தரையில் போட்டு உட்காரப் பயன்படுவதுமான மரப்பலகை. *நூலே கரகம் முக்கோல் மணையே* (தொல். 1573:1).

மத *பெயர்*

1. பேதைமை
2. வலிமை.

மதவே மடனும் வலியும் ஆகும் (தொல். 861).

மதி *பெயர்*

அறிவு. *நன்மதி நாட்டத்து என்மனார் புலவர்* (தொல். 484:5).

மதி *இடை*

முன்னிலை அசைச்சொற்களுள் ஒன்று. *மியாஇக மோமதி இகும்சின் என்னும்* (தொல். 759:1).

மதிப்ப *இடை*

உவம உருபுகளுள் ஒன்று. *கள்ள மதிப்ப வெல்ல வீழ* (தொல். 1238:2).

மதிமை *பெயர்*

அறிவு. *மதிமை சாலா மருட்கை நான்கே* (தொல். 1204:2).

மதியுடம்படுதல் *பெயர்*

தலைவன் தலைவியரின் காதலையும் மெய்யுறு புணர்ச்சியையும் தோழி ஆராய்ந்து உணர்தல். *மதியுடம்படுதல் ஒருமூ வகைத்தே* (தொல். 1077:3).

மதில் *பெயர்*

ஒரு கட்டடம், கோட்டை அல்லது ஊரைச்சுற்றி அதன் பாதுகாப்பிற்காக எழுப்பப்பெறும் வலிமை வாய்ந்த சுவர், அரண். *மதில்மிசைக்கு இவர்ந்த மேலோர் பக்கமும்* (தொல். 1018:9).

மந்தி *பெயர்*

குரங்கினப் பெண்மைப்பெயர். *குரங்கும் முசுவும் ஊகமும் மந்தி* (தொல். 1570).

மந்திரம் *பெயர்*

இயற்கை இகந்த ஆற்றல் பெற்றவர்கள் ஆணையிட்டுக் கூறும் மொழி. *மறைமொழி தானே மந்திரம் என்ப* (தொல். 1437:2).

மயக்கம்[1] *பெயர்*

1. பல பொருள்களின் கலவை. *கலந்த மயக்கம் உலகம் ஆதலின்* (தொல். 1593:2).
2. எழுத்து முதலியன ஒன்றை அடுத்து மற்றொன்று இருக்கும் நிலை; சேர்க்கை. *இயலசை மயக்கம் இயற்சீர்* (தொல். 1274:1).
3. போர்வீரர்கள் கைகலத்தல். *மடை அமை ஏணி மிசை மயக்கமும்* (தொல். 1018:2).

மயக்கம்[2] *பெயர்*

அறிவு உரியவாறு செயல்படாமை. *மறத்தல் மயக்கம் சாக்காடு என்று* (தொல். 1049:4).

மயக்கு[1] *பெயர்*

1. பொருளுணர்வில் ஏற்படும் திரிபு. *மெய்ந்நிலை மயக்கின் ஆஅகுநவும்* (தொல். 933:4).
2. அறிய இயலாத நிலை. *பால்மயக்கு உற்ற ஐயக்கிளவி* (தொல். 507:1).
3. ஒன்றுடன் ஒன்று கலப்பு. *திணைமயக் குறுதலும் கடிநிலை இலவே* (தொல். 961:1).

மயக்கு[2]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

வருத்துதல். *புல்லுதல் மயக்கும் புலவிக் கண்ணும்* (தொல். 1101:1).

மயங்கக் கூறல் *பெயர்*

நூற் குற்றங்களுள் ஒன்று; ஒரு பொருளை விளக்கும்போது தெளிவாகக் கூறாமல் மற்றொன்றாகப் பிழைபட உணருமாறு குழப்பமாகச் சொல்லுதல். *பொருள் இல கூறல் மயங்கக் கூறல்* (தொல்.1612:4).

மயங்கல் *பெயர்*

1. **மாறுபடுதல்.** *மயங்கல் கூடா தம் மரபினவே* (தொல் 495:3).
2. **கலத்தல்.** *அதனிற் கோடல் அதனொடு மயங்கல்* (தொல். 559:3).
3. **வருந்துதல்.** *கண் துயில் மறுத்தல் கனவொடு மயங்கல்* (தொல். 1219:5).

மயங்கியன்மொழி *பெயர்*

தொகையாகும்பொழுது முன்பின்னாக இடம் மாறிய சொற்கள்; முன்பின்னாகத் தொக்க தொகை. *எ-டு.* **நுனி நா.** *மருவின் தொகுதி மயங்கியன் மொழியும்* (தொல். 112:1).

மயங்கு[1]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. **வேறுபடுதல்.** *உரிப்பொ(* *அல்லன மயங்கவும் பெறுமே* (தொல். 962).
2. **மருளுதல்; ஏமாறுதல்.** *அவன் குறி மயங்கிய அமைவொடு வரினே* (தொல்.1083:2).
3. **மனம் கலங்குதல்.** *வேட்கையின் மயங்கிக் கையறுபொழுதினும்* (தொல். 1057:5).

மயங்கு[2]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

ஒன்றோடொன்று சேர்தல், கலத்தல் *தத்தமுள் மயங்கும் உடனிலை இலவே* (தொல். 368:2).

மயில் *பெயர்*

நீண்ட நீலநிறக் கழுத்தையும், அழகான பெரிய வண்ணத் தோகையையும் உடைய பெரிய பறவை; ஓகரம்; பிணிமுகம்; சிகி. *மயிலும் எழாலும் பயிலத் தோன்றும்* (தொல். 1546).

மரபு *பெயர்*

1. **ஒரு பொருள் எப்படி இருக்க வேண்டும் என்னும் வரையறை; இலக்கணம்.** *நடைமிகுந்தேத்திய குடை நிழல் மரபும்* (தொல். 1040:10).

2. **செய்யுள் உறுப்புகளுள் ஒன்று; இயற்சொல் முதலிய நான்கு சொற்களையும் குற்றம் இல்லாமல் யாப்பிலக்கண விதிப்படி அமைக்கை.** *மரபே தானும் நாற்சொல்லியலான் யாப்புவழிப்பட்டன்று* (தொல் 1340).

3. **வகை.** *அன்ன மரபின் காலம் கண்ணிய என்ன கிளவியும்* (தொல். 714:2-3).

4. **வரலாற்று முறைமை.** *தத்தம் மரபில் தோன்றுமன் பொருளே* (தொல். 873:4).

5. **முறைமை; நடைமுறையில் உள்ள சமூக வழக்கம்** *கொடைக்கு உரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே* (தொல். 1092:3).

6. **பயிற்சி; வழக்கத்தில் இருத்தல்.** *தத்தம் மரபில் தோன்றுமன்பொருளே* (தொல். 1241).

7. **இயல்பு; தன்மை.** *வாரா மரபின வரக்கூறுதலும்* (தொல் 905:1).

மரம் *பெயர்*

ஆழமான வேர்களும் வலிவான அடிப்பகுதியும் உள் வயிரமும் கிளைகளும் கொண்டு உயரமாக வளர்ந்து, நீண்ட நாள் உயிர்வாழும் தாவரம். *அகக்காழனவே மரம் என மொழிப* (தொல்.1589).

மரன் *பெயர்*

காண்க. மரம் *புல்லும் மரனும் ஓர் அறிவினவே* (தொல். 1530:1).

மரு *பெயர்*

ஒரு சொல்லின் இயல்பான வடிவிலிருந்து திரிந்த வடிவம்; மரூஉமொழி. *எ-டு:.* யாவர்>யார்; இல்முன்>முன்றில். *அன்னவை எல்லாம் மருவின் பாத்திய* (தொல். 483:10).

மருங்கு *பெயர்*

1. இடம். *தெளி மருங்கு உளவே திறத்தியலான* (தொல். 1244:2).
2. முறைமை. *இலக்கண மருங்கிற் செல்லாறு அல்ல* (தொல். 511:4).

மருட்கை *பெயர்*

1. மெய்ப்பாடு எட்டனுள் ஒன்றாகிய வியப்பு; அதுவரை ஒருவர் அறியாத புதுமை, பெருமை, சிறுமை, ஆற்றல் ஆகியவற்றைக் காணும்போது ஏற்படும் உள்ள நிகழ்ச்சி. *நகையே அழுகை இளிவரல் மருட்கை* (தொல். 1200:1).

2. ஒரு பொருளை மற்றொன்றாகக் கருதி மயங்கும் திரிபுணர்ச்சி. *ஐயமும் மருட்கையும் செல்விதின் நீக்கி* (தொல். 1608:3).

மருட்பா *பெயர்*

வெண்பா அடிகள் சிலவற்றையும் அவற்றையடுத்து அகவல் அடிகள் சிலவற்றையும் கொண்டுள்ள செய்யுள். *மருட்பா ஏனை இருசார் அல்லது* (தொல். 1345:1).

மருதம் *பெயர்*

1. வயலும் வயல் சார்ந்த பகுதிகளும் அடங்கிய நிலப்பகுதி; பெரும்பாலும் வளம்மிக்க ஆற்றங்கரை சார்ந்த ஊர்கள் உள்ள பகுதி. *முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலென* (தொல்.952:5).

2. அன்பின் ஐந்திணைகளுள் ஒன்று; ஊடலும் ஊடல் நிமித்தமும் ஆகிய ஒழுக்கம்; மருதத்திணை. *உழிஞைதானே மருதத்துப் புறனே* (தொல். 1014).

மருவு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

வழக்கமாதல், மரபு ஆதல். *மருவிய மரபின் வழக்கொடு வருமே* (தொல். 1245:2).

மருள் *பெயர்*

குற்றம். *மருள் அறு சிறப்பின் அஃது உவமம் ஆகும்* (தொல். 1233:2).

மருள்(ளு)-தல் [மருடல்] *செயப்படுபொருள் குன்றிய வினை*

ஒன்றை வேறொன்றாகக் கருதி மயங்குதல். *குறியின் ஒப்புமை மருடற் கண்ணும்* (தொல்.1061:24).

மருள *இடை*

உவம உருபுகளுள் ஒன்று *கடுப்ப ஏய்ப்ப மருளப் புரைய* (தொல். 1239:1).

மல்லல் *பெயர்*

வளப்பம்; செழிப்பு. *மல்லல் வளனே* (தொல். 388:1).

மரை *பெயர்*

மான்வகை. *பெற்றம் எருமை புலிமரை புல்வாய்* (தொல். 1544:1).

மலர்-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

பரத்தல், விரிதல் *மலர்தலை உலகத்து மரபு நன்கு அறிய* (தொல். 1029:34).

மலி-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. மிகுதல்; அதிகமாதல். *அகம்மலி ஊடல் அகற்சிக் கண்ணும்* (தொல். 1109:2).

2. மகிழ்தல்; உவத்தல். *பிரிந்தவழிக் கலங்கினும் பெற்றவழி மலியினும்* (தொல். 1061:9).

மலிவு *பெயர்*

மகிழ்ச்சி; உவகை. *மலிவும் புலவியும் ஊடலும் உணர்வும்* (தொல். 1446:3).

மலை[1]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

சூடுதல்; அணிதல். *மாபெரும் தானையர் மலைந்த பூவும்* (தொல். 1010:5).

மலை[2]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

போர்புரிதல். *வாள் மலைந்து எழுந்தோனை மகிழ்ந்து* (தொல். 1010:17).

மழ *பெயரடை*

இளமையான. *மழவும் குழவும் இளமைப்பொருள* (தொல். 795).

மழுங்கல் *பெயர்*

குறைவுபடுதல். *நிறைந்த காதலில் சொல் எதிர் மழுங்கல்* (தொல் 1061:2).

மழை *பெயர்*

நீருண்ட மேகத்தில் குளிர்ந்த காற்றுப் படுகையில் நிலத்தில் விழும் நீர். *மழைஎன் கிளவி வளிஇயல் நிலையும்* (தொல்: 288).

மற்றவன் *பெயர்*

குறித்துக் கூறப்பட்டவன் அல்லாத வேறொரு மனிதன். *மற்றவன் ஒள்வாள் வீசிய நூழிலும்* (தொல். 1022:16-17).

மற்று *இடை*

1. முன் குறித்த வினையினின்றும் வேறானது என்பதைச் சுட்டும் ஓர் இடைச்சொல், வினைமாற்று. *எ-டு:* மற்று ஆங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை (குறள். 15).

2. அசைநிலைகளுள் ஒன்று *எ-டு.:* ஊர்ச்செரு வீழ்ந்த மற்று அதன்மறனும்(*தொல்*.1018:8.). *மற்று என் கிளவி வினைமாற்று அசை நிலை* (தொல் 747:1).

மற்றைய *பெயரடை*

பிறிதொன்றாகிய; வேறொன்றாகிய. *தண்டாது இரப்பினும் மற்றைய வழியும்* (தொல்.1051:15).

மற-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

அயர்த்தல், நினைவில் இருந்து அழிதல்; மறந்துபோதல். *மறத்தல் மயக்கம் சாக்காடு என்று* (தொல். 1049:4).

மறம் *பெயர்*

வீரம். *மறம் கடைக் கூட்டிய குடிநிலை* (தொல் 1009:1).

மறன் *பெயர்*

காண்க. மறம் *ஊர்ச்செரு வீழ்ந்த மற்றதன் மறனும்* (தொல் 1018:8).

மறப்பு *பெயர்*

செய்திகள் நினைவில் நில்லாமை; மறதி. *இன்புறல் ஏழைமை மறப்போ டொப்புமை* (தொல் 1223:3).

மறி[1] *பெயர்*

விலங்கினங்கள் சிலவற்றின் இளமைப்பெயர். *ஓடும் புல்வாய் உளப்பட மறியே* (தொல்.1514:2).

மறி[2]**-தல்** *செயப்படுபொருள் குன்றிய வினை*

இடம் மாறுதல். *அடிமறிச்செய்தி அடிநிலை திரிந்து* (தொல். 891:1).

மறு[1] *பெயர்*

குற்றம். *மறுஇல் செய்தி மூவகைக் காலமும்* (தொல். 1025:4).

மறு[2]**-த்தல்** *செயப்படுபொருள் குன்றா வினை*

ஒரு கருத்தை ஏற்றுக்கொள்ளாது எதிர்த்தல்; உடன்படாமை. *மறுத்துரைப்பதுபோல் நெஞ்சொடு புணர்த்தும்* (தொல். 1146:5).

மறுதலை *பெயர்*

1. மாற்றாரின் கருத்து. *மறுதலை சிதைத்துத் தன்துணிபு உரைத்தல்* (தொல். 1614:18).
2. மாறுபாடு. *மறுதலை ஆயின்மற்று அது சிதைவே* (தொல். 1609:2).

மறுதலை சிதைத்துத் தன்துணிபு உரைத்தல் *பெயர்*

32 இலக்கிய உத்திகளுள் ஒன்று; மற்றவரின் கருத்தை எடுத்துக்காட்டித் தக்க சான்றுகளால் அதனை மறுத்துத் தன் கோட்பாட்டை நிறுவுதல் (தொல். 1614:18).

மறுப்ப *இடை*

உவம உருபுகளுள் ஒன்று *போல மறுப்ப ஒப்ப காய்ப்ப* (தொல். 1240:1).

மறுப்பு *பெயர்*

இடர்ப்பாடு; தடை. *புணர்ந்துழி உண்மை பொழுது மறுப்பாக்கம்* (தொல்.1221:31).

மறை[1] *பெயர்*

1. மந்தணம்; இரகசியம். *மறைவெளிப் படுதலும் தமரிற் பெறுதலும்* (தொல். 1446:1).
2. களவு ஒழுக்கம். *மறை என மொழிதல் மறையோர் ஆறே* (தொல். 1445:4).

மறை[2] *பெயர்*

1. வேதம், நான்மறை. *அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே* (தொல். 102:5).
2. இலக்கணம்; சாத்திரம். *நரம்பின் மறைய என்மனார் புலவர்* (தொல். 33:3).

மறை[2]**-த்தல்** *செயப்படுபொருள் குன்றா வினை*

ஒளித்தல். *நகுநயம் மறைத்தல்* (தொல்.1210:2).

மறை[3]**-தல்** *செயப்படுபொருள் குன்றிய வினை*

ஒளிதல். *மறைந்து அவற் காண்டல்* (தொல். 1061:1).

மறைந்தவை உரைத்தல் *பெயர்*

கற்புக் காலத்து மெய்ப்பாடுகளுள் ஒன்று; களவுக் காலத்தில் மறைவாக நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கற்புக் காலத்தில் தலைவி தானே வெளிப்படையாகக் கூறுதல். *பிரிவாற்றாமை மறைந்தவை உரைத்தல்* (தொல்.1221:5).

மறையோர் *பெயர்*

1. வேதியர்; அந்தணர். *மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்* (தொல். 1041:4).
2. இலக்கண ஆசிரியர்கள். *மறை என மொழிதல் மறையோர் ஆறே* (தொல். 1445:4).

மன்[1] *பெயர்*

அரசன். *மன் பெறு மரபின் ஏனோர்க்கு உரிய*(*தொல்*.1586:3).

மன்[2] *இடை*

1. அசைநிலைகளுள் ஒன்று *முன்னது முடிய முடியும் மன்பொருளே* (*தொல்*. 718:3).

2. ஆக்கப் பொருளில் வந்த இடைச்சொல். *ஆவகை பிறவும் தோன்றும் மன்பொருளே* (*தொல்*. 1063:6).

மன்ற *இடை*

உறுதிப்பொருளைத் தரும் ஓர் இடைச்சொல் *எ-டு*: மடவை மன்ற வாழிய முருகே (*நற்*.34:11). *மன்ற என் கிளவி தேற்றம் செய்யும்* (*தொல்*.750).

மன்றல் *பெயர்*

திருமணம். *மறையோர் தே எத்து மன்றல் எட்டனுள்* (*தொல்*. 1041:4).

மன்னன் *பெயர்*

அரசன்; வேந்தன் *மன்னர் பாங்கிற் பின்னோர் ஆகுப*.(*தொல்*.979:1).

மன்னல் *பெயர்*

நிலைபெறுதல். *மன்னல் வேண்டும் அல்வழியான* (*தொல்*. 424:2).

மன்(னு)-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

நிலைபெறுதல். *மாயோன் மேய மன்பெரும் சிறப்பின்* (*தொல்*.1010:9).

மன்னை *பெயர்*

மன் என்னும் இடைச்சொல். *அம்மூன்று என்ப மன்னைச் சொல்லே* (*தொல்*.737:2).

மன்னை *பெயர்*

காஞ்சித் திணையின் துறைகளுள் ஒன்று; இறந்த ஒருவனுடைய சிறப்புகளை எடுத்துரைத்து இழப்பிற்கு வருந்துகை; மன்னைக் காஞ்சி. *இன்னன் என்று இரங்கிய மன்னையானும்* (*தொல்*.1029:7).

மனங்கோள் இன்மை *பெயர்*

நூற்குற்றங்கள் பத்தனுள் ஒன்று; நூலில் சொல்லப்பட்ட பொருள் கற்பவர்கள் உளங்கொள்ளும்படி (புரிந்துகொள்ளுமாறு) சொல்லப்படாமை. *என்ன வகையினும் மனங்கோள் இன்மை* (*தொல்* 1612:8).

மனம் *பெயர்*

1. உணர்வுகளுக்கும் கருதுகோள்களுக்கும் காரணமாக இருக்கும் அகக்கருவி; உள்ளம். *மனத்தின் எண்ணி மாசறத் தெரிந்து கொண்டு* (*தொல்*. 1614:26).

2. மன உணர்வு. *ஆறு அறிவதுவே அவற்றொடு மனனே* (*தொல்* 1529:6).

மனை *பெயர்*

1. வீடு; இல்லம்; அகம். *ஆய்மனைக் கிழத்திக்கும் உரித்து என மொழிப* (*தொல்*. 1123:2).

2. இல்லக்கிழத்தி; மனைவி. *கடிமனை நீத்த பாலின்கண்ணும்* (*தொல்*. 1026:16).

மனைக்கிழத்தி *பெயர்*

மனைவி; துணைவி; இல்லாள் *ஆய்மனைக் கிழத்திக்கும் உரித்து என மொழிப* (*தொல்* 1123:2).

மனையோள் *பெயர்*

மனைவி, துணைவி; இல்லாள். *மனையோள் கிளவியும் கிழவன் கிளவியும்* (தொல்.1455:1).

மனைவி *பெயர்*

ஒருவனால் முறையாகத் திருமணம் செய்துகொள்ளப்பெற்ற வாழ்க்கைத் துணைவி; இல்லாள். *மனைவிக்கு உறுதி உள்வழி உண்டே* (தொல். 1116:2).

மா

மா[1] *பெயர்*

ம் என்னும் மெய்யெழுத்தின்மேல் ஆகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

மா[2] *பெயர்*

1. நிலத்தின் பரப்பளவுகளுள் ஒன்று, 100 குழி; 1440 சதுரமீட்டர்.*வழங்கு இயன் மா என் கிளவி தோன்றின்* (தொல். 481:2).

2. விலங்கு; ஐயறிவுள்ள உயிர்; மிருகம்; பிராணி. *மாவும் புள்ளும் ஐ அறிவினவே* (தொல்.1534:1).

3. குதிரை; புரவி. *புள் இயற் கலிமா உடைமையான* (தொல். 1144:4).

4. கோடைக் காலத்தில் சுவைமிக்க கனிகளைத் தரும் பெரிய மரவகை. *மாமரக் கிளவியும் ஆவும் மாவும்* (தொல். 232:1).

மா[3] *பெயரடை*

பெரிய. *மா இரும் தூவிமயில் அலங்கடையே* (தொல். 1551:2).

மா[4] *இடை*

வியங்கோள் பொருளில் வரும் ஓர் அசைநிலை. *மா என் கிளவி வியங்கோள் அசைச்சொல்* (தொல். 758).

மாக்கள் *பெயர்*

1. பகுத்தறிவு அற்றவர்கள் *மாவும் மாக்களும் ஐயறிவினவே* (தொல். 1534:1).
2 மாந்தர்; மனிதர் *அவ்வம் மாக்களும் விலங்கும் அன்றி* (தொல் 1468:1).

மாசு *பெயர்*

குற்றம் *மனத்தின் எண்ணி மாசு அறத் தெரிந்து கொண்டு* (தொல்.1614:26).

மாட்சி *பெயர்*

சிறப்பு; மாண்பு. *மரபு நிலை திரியா மாட்சிய ஆகி* (தொல்.995:1).

மாட்டு *பெயர்*

செய்யுளின் பொருள்கோள் வகையுள் ஒன்று; சொற்கள் இடையீடுபட்டு விலகியோ அருகிலோ இருந்தாலும் பொருள் முடிவு நோக்கி அவற்றை ஏற்றபடி கொண்டு கூட்டிப் பொருள்கொள்ளும் முறை. *இயன்றுபொருள் முடியத் தந்தனர் உணர்த்தல் மாட்டு என மொழிப* (தொல் 1469:3).

மாண் *பெயர்*

சிறப்பு, மாட்சி *மாண்நலம் தா என வகுத்தற்கண்ணும்* (தொல்.1100:13).

மாண்(ணு)-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

நன்றாதல். *புறஞ்சொல் மாணாக் கிளவியொடு தொகைஇ* (தொல் 1221:6).

மாண்பு *பெயர்*

சிறப்பு, மாட்சி. *கிழவோள் மாண்புகள் முகம்புகல் முறைமையின் கிழவோற்கு உரைத்தல்* (*தொல்*.1102:4-5).

மாணார் *பெயர்*

பகைவர். *மாணார்ச் சுட்டிய வாள்மங்கலமும்* (*தொல்*.1040:11).

மாத்திரை *பெயர்*

எழுத்துகள் ஒலிக்கப்படும் நேரத்தை அளவிடும் அலகு; கண் இமை அல்லது கைநொடி நேரம் *கண்ணிமை நொடி என அவ்வே மாத்திரை* (*தொல்* 7:1).

மாதர் *பெயர்*

1. காதல். *மாதர் காதல்* (*தொல்*. 812).
2. மகளிர்; பெண்டிர். *ஒண்தொடி மாதர் கிழவன் கிழத்தியொடு* (*தொல்*. 1452:1).

மாது *இடை*

அசைநிலைகளுள் ஒன்று *பிறபிறக்கு அரோபோ மாதுஎன வரூஉம்* (*தொல்*. 764:2).

மாந்தர் *பெயர்*

மனிதர். *வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது* (*தொல்*.1583:1).

மாய்-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

இறத்தல். *மாய்ந்த மகனைச் சுற்றிய சுற்றம்* (*தொல்*.1029:19).

மாயம் *பெயர்*

பொய்ம்மை. *மாயப்பரத்தை உள்ளிய வழியும்* (*தொல்*.1097.33).

மாயோன் *பெயர்*

கரிய நிறமுடையவராகிய திருமால். *மாயோன் மேய மன்பெரும் சிறப்பின்* (*தொல்*.1010:9).

மார் *இடை*

1. அசைநிலைகளுள் ஒன்று. *ஓர் அளபு ஆகும் இடனும் மார் உண்டே* (*தொல்*. 57:1).
2. பலர்பால் படர்க்கை விகுதிகளுள் ஒன்று *மாரைக் கிளவி உளப்பட மூன்றும்* (*தொல்* 491:2). (*மேற்கோளில் மார்+ஐ=மாரை, ஐகாரம் சாரியை*)

மாராயம் *பெயர்*

போர்வீரர்கள் அரசனிடத்திலிருந்து பெறும் சிறப்பு. *மாராயம் பெற்ற நெடுமொழி யானும்* (*தொல்*.1013:5).

மாலை *பெயர்*

1 இயல்பு, பண்பு. *மாலை இயல்பே* (*தொல்*. 797).
2 பகற்பொழுதின் இறுதிப் பகுதி. *காரும் மாலையும் முல்லை* (*தொல்*. 953).
3.மலர்களால் அணிவிப்பதற்கேற்றபடி அழகாகக் கட்டப்படும் அலங்கல்; பூமாலை. (பொன்னாலும் மணிகளாலும் ஆன கழுத்தணியும் ஆம்) *மாலை ஏந்திய பெண்டிரும் மக்களும்* (*தொல்* 1096:55).

மாலைநிலை *பெயர்*

காஞ்சித் திணையின் துறைகளுள் ஒன்று; கணவனை இழந்த மனைவி தீப்புக முயலும்போது தடுப்பவர்களுக்கு மறுமொழி கூறுகை. (நச்சினார்க்கினியர் இதனைப் பாலைநிலை என்பார்). *நல்லோள் கணவனொடு நனியழல் புகீஇச் சொல்லிடை யிட்ட மாலை நிலையும்* (தொல்.1029:31).

மாற்ற *இடை*

உவம உருபுகளுள் ஒன்று. *மாற்ற மறுப்ப ஆங்கு அவை எனா* (தொல்.1235:9).

மாற்றம் *பெயர்*

மறுமொழி; விடை *கூற்றும் மாற்றமும் இடையிடை மிடைந்து* (தொல்.1415:1).

மாற்று-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலையாக்குதல். *சொல்நிலை மாற்றிப் பொருள்எதிர் இயைய* (தொல்.893:2).

மாற்றோர் *பெயர்*

பகைவர். *தோன்றல் சான்ற மாற்றோர் மேன்மையும்* (தொல்.991:18).

மாறு[1] *பெயர்*

வேறுபாடு. *மாறுஇல் ஆண்மையில் சொல்லிய மொழியும்* (தொல்.1193:2).

மாறு[2] *இடை*

ஏதுப்பொருளில் வரும் ஓர் இடைச்சொல். *இது நனி பயக்கும் இதன்மாறு என்னும்* (தொல்.1462:1).

மாறுகொளக் கூறல் *பெயர்*

நூற் குற்றங்களுள் ஒன்று; ஒரே நூலில் முன்னுக்குப்பின் முரண்பட மொழிதல். *கூறியது கூறல் மாறுகொளக்கூறல்* (தொல்.1612:2).

மாறுகொள் எச்சம் *பெயர்*

எதிர்மறை எச்சம். *மாறுகொள்எச்சமும் வினாவும் எண்ணும்* (தொல்.276:1).

மாறுகோள் *பெயர்*

முரண்பாடு. *முதலும் முடிவும் மாறுகோள் இன்றி* (தொல்.1425:3).

மான்(னு)-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

நிகர்த்தல்; ஒத்தல்; போலுதல். *அதுவே தானும் பிசியொடு மானும்* (தொல்.1440).

மான *இடை*

உவம உருபுகளுள் ஒன்று. *அன்ன ஆங்க மான இறப்ப* (தொல்.1236:1).

மானம் *பெயர்*

1. குற்றம். *வல்லெழுத்து மிகினும் மானம் இல்லை* (தொல். 231).
2. பெருமை. *புகழும் மானமும் எடுத்துவற் புறுத்தலும்* (தொல். 991:14).

மி

மி *பெயர்*

ம், என்னும் மெய்யின்மேல் இகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

மிக்கோன் *பெயர்*

பெரியவன்; ஏதாவது ஒன்றை அதிகமாக உடையவன் *மிக்கோன் ஆயினும் கடிவரை இன்றே* (*தொல்*.1042:4).

மிகல் *பெயர்*

எழுத்து இரட்டித்து வருதல். *அத்திறத்து இல்லை வல்லெழுத்து மிகலே* (*தொல்*. 413:2).

மிகற்கை *பெயர்*

மிகுதி. *இயற்கை மருங்கின் மிகற்கை தோன்றலும்* (*தொல்* 158:3).

மிகு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. அளவில் பெரிது ஆதல். *மிக்க காமத்து மிடலொடு தொகை இ* (*தொல்* 1001:3).
2. தகுதியால் சிறப்படைதல்; சிறத்தல். *மிக்கதன் மருங்கின் வினைச்சொற் சுட்டி* (*தொல்*.727:1).

மிகுதி *பெயர்*

பெருக்கம், அதிகம். *மிகுதி செய்யும் பொருள என்ப* (*தொல்*.784:3).

மிகை *பெயர்*

மிகுதி; அதிகம். *மிகை எனக் குறித்த கொள்கைக் கண்ணும்* (*தொல்*.1101:12).

மிகைபடக் கூறல் *பெயர்*

நூற் குற்றங்களுள் ஒன்று; தேவைக்கு மேற்பட்டவற்றைப் பெய்து கூறுதலும் எடுத்துக் கொண்ட பொருளைத் தவிர மற்றவற்றை விரித்தலும் ஆகும். *குன்றக் கூறல் மிகைபடக் கூறல்* (*தொல்* 1612:3).

மிசை *பெயர்*

மேல் இடம்; உயர்ந்த இடம் *மதில்மிசைக்கு இவர்ந்த மேலோர் பக்கமும்* (*தொல்*.1018:9).

மிசை *இடை*

இடவேற்றுமை ஆகிய ஏழாவதன் சொல் உருபுகளுள் ஒன்று. *ஈற்றுமிசை அகரம் நீடலும் உரித்தே* (*தொல்* 312:2).

மிடல் *பெயர்*

வலிமை *மிக்க காமத்து மிடலொடு தொகை இ* (*தொல்*.1001:3).

மிடறு *பெயர்*

ஒலி தோன்றுமிடமாகிய தொண்டை; கழுத்தின் உட்பகுதி. *மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்* (*தொல்*.84:3).

மிடை-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

கலத்தல் *கூற்றும் மாற்றமும் இடையிடை மிடைந்து* (*தொல்*.1415:1).

மியா *இடை*

முன்னிலை அசைச்சொற்களுள் ஒன்று. *ஏவல் குறித்த உரையசை மியாவும்* (*தொல்*.225:3).

மின்[1] *பெயர்*

மின்னல், மழைக்காலத்தில் இடியுடன் வானில் தோன்றும் ஒளிக்கீற்று. *மின்னும் பின்னும் பன்னும் கன்னும்* (தொல்.346:1).

மின்[2] *இடை*

முன்னிலை ஏவல் பன்மை வினைமுற்று விகுதிகளுள் ஒன்று. *இர் ஈர் மின்என வரூஉம் மூன்றும்* (தொல்.709:1).

மீ

மீ[1] *பெயர்*

ம் என்னும் மெய்யின்மேல் ஈகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

மீ[2] *பெயர்*

மேலிடம். *மீஎன மரீஇய இடம்வரை கிளவியும்* (தொல்.251:2).

மீட்டு *வினையெச்சம்*

காண்க: மீண்டு. *மீட்டுவரவு ஆய்ந்த வகையின் கண்ணும்* (தொல்.1096:46).

மீண்டு *வினையெச்சம்*

திரும்பி; மறுபடி. *வினைவயின் பிரிந்தோன் மீண்டுவரு காலை* (தொல்.1144:1).

மீன் *பெயர்*

செதிள்களையும் வாலையும் உடைய நீர்வாழ் உயிரினம். *மீன்என் கிளவி வல்லெழுத்து உறழ்வே* (தொல்.340).

மு

மு[1] *பெயர்*

ம் என்னும் மெய்யெழுத்தின்மேல் உகர உயிர் ஏறத் தோன்றும் உயிர்மெய்க் குறில்.

மு[2] *பெயரடை*

மூன்று ஆகிய. *மும் முதற்பொருட்கும் உரிய என்ப* (தொல் 1366:2).

முக்கோல் *பெயர்*

இதுமூன்று மெல்லிய கோல்களை இணைத்துக் கட்டப்பட்டதும் துறவிகள் கையில் ஏந்துவதுமான கோல்; திரிதண்டம். *நூலே கரகம் முக்கோல் மணையே* (தொல்.1573:1).

முகம்புகு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

முகம் மலர்தல், மகிழ்ச்சி அடைதல் *முகம்புகல் முறைமையில் கிழவோற்கு உரைத்தல்* (தொல்.1102:5).

முகன் *பெயர்*

முகம். *முலையும் முகனும் சேர்த்தி* (தொல்.1029:16).

முசு *பெயர்*

கருங்குரங்கு வகை *குரங்கும் முசுவும் ஊகமும் மந்தி* (தொல்.1570).

முட்டு[1] *பெயர்*

தடை. *மொழியா ததனை முட்டின்றி முடித்தல்* (தொல்.1614:5).

முட்டு[2]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

எதிர்ப்படுதல்; சந்திக்க நேர்தல். *வரையா நாளிடை வந்தோன் முட்டினும்* (தொல்.1062:2).

முட்டுவயிற் கழறல் *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; தலைவியை வெளியே செல்லவிடாமல் அவள் வீட்டில் தடுத்துவிடுவதாலும் தலைவனால் அவளைப்பார்க்க வரமுடியாமற் போவதாலும் சந்திப்பிற்குத் தடை ஏற்படும்போது தலைவி வருந்திக் கூறுதல். *முட்டுவயின் கழறல் முனிவுமெய்ந் நிறுத்தல்* (தொல் 1220·1).

முடி[1] *பெயர்*

அரச நிலையை உணர்த்த அணியப்படும் தலையணி, கிரீடம். *தாரும் முடியும் நேர்வன பிறவும்* (தொல்.1574:3).

முடி[2]-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. நிறைவேற்றுதல். *உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பும்* (தொல்.1017:7).
2. ஒன்றை முற்றுவித்து உரைத்தல். *வந்தது கொண்டு வாராதது முடித்தல்* (தொல்.1614:7).

முடி[3]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. நிறைவேறுதல். *கரணத்தின் அமைந்து முடிந்த காலை* (தொல்.1096:1).
2. இறத்தல் *கணவனொடு முடிந்த படர்ச்சி நோக்கி* (தொல் 1029:22).

முடிந்ததுகாட்டல் *பெயர்*

32 இலக்கிய உத்திகளில் ஒன்று, கூறப்படும் இலக்கணம் முன்பே நிறுவப்பட்டுள்ள ஒன்று என உணர்த்துதல். *முடிந்தது காட்டல் ஆணை கூறல்* (தொல் 1614:15).

முடிந்த நூல் *பெயர்*

முந்தைய இலக்கனம். *தன் நூலானும் முடிந்த நூலானும்* (தொல்.1608.2).

முடிபு *பெயர்*

காண்க. முடிவு. *தன்வினை ஒன்றிய முடிபு ஆகும்மே* (தொல்.920:2).

முடிவு *பெயர்*

நிறைவு; இறுதி. *சொல்லொடும் குறிப்பொடும் முடிவுகொள் இயற்கை* (தொல் 1065:1).

முடுகியல் *பெயர்*

பெரும்பாலும் தனதன தனதன என்னும் வண்ணவாய்பாட்டில் நடக்கின்ற செய்யுளோசை. *முடுகியல் வரையார் முதல் இரண்டு அடிக்கும்* (தொல் 1326).

முடுகு வண்ணம் *பெயர்*

நாற்சீரின் மிக்குவரும் செய்யுளடிகளில் அராகம் பெற்று (தனதன தனதன என்னும் வண்ணக் குழிப்புப் பயின்று) வரும் பாவோசை. *முடுகுவண்ணம் அடியிறந்து ஓடி அதனோரற்றே* (தொல் 1492).

முத்தை *இடை (முந்தை என்பதன் வலித்தல் விகாரம்)*

முன்னர் *முத்தை வரூஉம் காலம் தோன்றின்* (தொல் 165:5)

முதல்[1] *பெயர்*

1. காரணம். *அன்ன பிறவும் அம்முதற் பொருள* (தொல். 557:9).

2. தொடக்க நிலை ஆதி. *மொழிமுதல் ஆகும் எல்லா எழுத்தும்* (தொல். 148:1).

3. அடிப்பகுதி. *ககார ஙகாரம் முதல்நா அண்ணம்* (தொல். 89).

4. ஒரு சொல்லின் முதல் எழுத்து. *நீ என் ஒருபெயர் நெடுமுதல் குறுகும்* (தொல். 180).

5. காண்க: முதனூல். *முதலும் வழியும் என நுதலிய நெறியின* (தொல். 1597:3).

முதல்[2] *பெயர்*

1. பகுதிகளை உடைய முழுப்பொருள்; முதற்பொருள். *முதலும் சினையும் பொருள்வேறுபடாஅ* (தொல். 575:1).

2. நிலம், பொழுது ஆகிய முதற்பொருள். *முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின்* (தொல். 951:1)

3. சொத்து. *கருவியில் துணையில் கலத்தின் முதலின்* (தொல். 565:3).

முதல்[3] *பெயரடை*

தலைசிறந்த. *முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்* (தொல். 1015:1).

முதல்[4] *இடை*

ஐந்தாம் வேற்றுமை உருபு. *ஒன்றுமுதல் ஒன்பான் இறுதி முன்னர்* (தொல். 438).

முதல்வன் *பெயர்*

1. எல்லாவற்றிற்கும் காரணமானவன் *அங்கு அதன் முதல்வன் கிழவன் ஆகும்* (தொல். 1089:2).

2. மூலநூல் ஆசிரியன். *சிதைவு இல என்ப முதல்வன் கண்ணே* (தொல். 1610).

முதலு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

தொடக்கத்தது ஆகுதல்; முதலாவது ஆதல். *முதலா ஏன தம்பெயர் முதலும்* (தொல். 66).

முதனிலை *பெயர்*

1. காரணம். *ஆஎட்டு என்ப தொழில் முதனிலையே* (தொல். 598:5).

2. ஒரு சொல்லின் முதல் எழுத்து *முதனிலை நீடினும் மானம் இல்லை* (தொல். 466).

3. இரு சொற்கள் புணரும்போது முதலில் உள்ள சொல்; நிலைமொழி. *ஒன்பான் முதனிலை முந்து கிளந்தற்றே* (தொல். 464:1).

முதனூல் *பெயர்*

வினைகளின் தொடர்பற்றவரும் குறையற்ற பேரறிவினரும் ஆகிய ஒருவரால் செய்யப்பெற்ற ஆதி நூல் *முனைவன் கண்டது முதல்நூல் ஆகும்* (தொல்.1598:2).

முதிர்வு *பெயர்*

முதிர்ச்சி, நிறைவு, பக்குவம், மிகுதி *வென்று கைக்கொண்டு முற்றிய முதிர்வும்* (தொல்.1018:4).

முது *பெயரடை*

மிகப் பழமையான; தொன்மையான. *முதுகுடி மகட்பாடு அஞ்சிய* (தொல். 1029:14-15).

முதுசொல் *பெயர்*

பழமொழி; முதுமொழி. *அங்கதம் முதுசொல் அவ்வேழ் நிலத்தும்* (தொல். 1339:2)

முதுபாலை *பெயர்*

காஞ்சித் திணையின் துறைகளுள் ஒன்று; உடன்போக்கின்போது பாலைவழியில் தலைவன் இறந்துவிடத் தலைவி தனியளாக வருந்தி அழுகை. *தனிமகள் புலம்பிய முதுபாலையும்* (தொல். 1029:25).

முதுமை *பெயர்*

1. வயது முதிர்ச்சி; கிழத்தனம்; மூப்பு; வயோதிகம் *முதுமை இளமை இறத்தல் இழிதல்* (*தொல்.*563:5).

2. காஞ்சித் திணையின் துறைகளுள் ஒன்று; அறிவாலும் வயதாலும் முதிர்ந்தவர்கள் செல்வம், உடம்பு, இளமை முதலியவற்றின் நிலையாமையை இளைஞர்களுக்கு அறிவுறுத்துகை. *கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும்* (*தொல்* 1029:2)

முதுமொழி *பெயர்*

பழமொழி; முதுசொல் *ஏது நுதலிய முதுமொழி என்ப* (*தொல்.* 1436:4)

முந்து-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

மேல் எழுதல். *உந்தி முதலா முந்துவளி தோன்றி* (*தொல்* 83:1)

முந்து மொழிந்ததன் தலைதடுமாற்று *பெயர்*

32 இலக்கிய உத்திகளுள் ஒன்று; வரிசைப்படுத்திக் கூறிய முறையை மாற்றிக் கூறுவதால் வேறு பொருளைக் குறிப்பாக உணர்த்துதல்; (*தொல்.* 1614:8).

முந்தை *பெயரடை*

1. முன்னர் இருந்த *முந்தை ஒற்றே ளகாரம் இரட்டும்* (*தொல்.* 464:2)

2. முன் சொல்லப்பட்ட *முந்தை ஒற்றே ணகாரம் இரட்டும்* (*தொல்.* 446:2).

முந்துறு[1]-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

தோற்றுவித்தல். *அருள் முந்துறுத்த அன்புபொதி கிளவி* (*தொல்.* 1111:1).

முந்துறு[2]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

முற்படுதல், வெளிப்படுதல். *அச்சமும் மடனும் நாணும் முந்துறுதல்* (*தொல்.* 1048:1).

முந்தையது *பெயர்*

முன்னையது. *ஐந்தன் ஒற்றே முந்தையது கெடுமே* (*தொல்* 455)

முந்நீர் *பெயர்*

கடல் (இளம்.); ஓதல், தூது, பொருள் என்னும் மூன்று நீர்மை (நச்சர்). *முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை* (*தொல்* 984)

முப்பால் *பெயரடை*

மூன்று கூறுகளாகிய *முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன* (*தொல்* 2:4)

முயல் *பெயர்*

நீண்ட காதுகளையும், குட்டையான வாலையும், மென்மையான தோலையும் உடையதும் சுறுசுறுப்பானதும் மரக்கறி உணவுண்புதும் ஆகிய விலங்கு. *நாயே பன்றி புலி முயல் நான்கும்* (*தொல்*:1510:1)

முயற்சி *பெயர்*

ஒரு பொருளை அடைவதற்கு ஊக்கத்துடன் பாடுபடுகை; முயலுகை. *பின்னிலை முயற்சி பெறான்என மொழிப* (*தொல்* 1078:2)

முரசு *பெயர்*

முற்காலத்தில் அரச ஆணையை மக்களுக்குத் தெரியப்படுத்தவும் போர், இறை வழிபாடு, திருமணம், பெருங்கொடை முதலியன நிகழுங்காலங்களிலும் முழக்கப்பெற்ற பறை; அரைக்கோள வடிவில் அமைந்து தோல் போர்த்தப்பெற்ற ஒரு தாளக்கருவி. *படையும் குடையும் கொடியும் முரசும்* (தொல் 1574:1)

முரஞ்சல் *பெயர்*

முதிர்ச்சி; பக்குவம் *முரஞ்சல் முதிர்வே* (தொல். 817).

முரண்[1] *பெயர்*

செய்யுளுக்கு உரிய தொடைகளுள் ஒன்று; சொல்லாலோ பொருளாலோ மாறுபாட்டைத் தோற்றுவிக்கும் செய்யுள் அமைப்பு; முரண்தொடை. *மொழியினும் பொருளினும் முரணுதல் முரணே* (தொல். 1355).

முரண்(ணு)[2]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. மாறுபடுதல் *மொழியினும் பொருளினும் முரணுதல் முரணே* (தொல்.1355).
2. பகைத்தல். *முரணிய புறத்தோன் அணங்கிய பக்கமும்* (தொல். 1017:4-5).

முரள் *பெயர்*

சங்குப்பூச்சிவகை. *நந்தும் முரளும் ஈர் அறிவினவே* (தொல். 1531:1).

முரற்கை *பெயர்*

காண்க: கலிப்பா. *முச்சீர் முரற்கையுள் நிறையவும் நிற்கும்* (தொல். 1330).

முல்லை *பெயர்*

1. ஐவகை நிலப்பிரிவுகளுள் ஒன்று; காடும் காட்டைச் சார்ந்ததுமாகிய நிலப்பகுதி *முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என* (தொல். 952·5)

2. அன்பின் ஐந்திணைகளுள் ஒன்று. தலைவனின் பிரிவாற்றாமையைத் தாங்கிக்கொண்டு தலைவி இருத்தலையும் அதன் நிமித்தத்தையும் உரிப்பொருளாகப் பெற்ற திணை. *வஞ்சி தானே முல்லையது புறனே* (தொல். 1011)

முலை *பெயர்*

மகளிரது மார்பு உறுப்பு, நகில், மார்பகம் *கண்ணும் தோளும் முலையும் பிறவும்* (தொல்.546:1).

முழு *பெயரடை*

சிறிதும் மீதம் இல்லாத; முற்றிலுமான. *முழு முதல் அரணம் முற்றலும் கோடலும்* (தொல் 1015·1)

முழுது *பெயர்*

சிறிதும் எஞ்சாமை; முழுமை *முழுது என் கிளவி எஞ்சாப் பொருட்டே* (தொல். 810).

முழுதும் *வினையடை*

சற்றும் மீதம் இல்லாமல், முற்றிலும் *வெரிந்என் இறுதி முழுதும் கெடுவழி* (தொல். 301:1).

முற்பட *வினையெச்சம்*

1. முன்னர் (கால முன்), ஏற்கெனவே *முற்படக் கிளந்த உருபியல் நிலையும்* (தொல். 379:2).
2. முதலில் அமையுமாறு. *முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே* (தொல். 523).

முற்ற *வினையடை*

முழுமையாக *முற்றத் தோன்றும் இன் என் சாரியை* (தொல். 196:2).

முற்றடி *பெயர்*

நான்கு சீர்களைக் கொண்ட செய்யுள் அடி; அளவடி *முற்றடி இன்றிக் குறைவு சீர்த்து ஆகியும்* (தொல் 1383:2)

முற்றல் *பெயர்*

ஒரு கோட்டையைச் சூழ்ந்து கொள்ளல், முற்றுகை இடுதல். *முழு முதல் அரணம் முற்றலும் கோடலும்* (தொல் 1015:1)

முற்றிய முதிர்வு *பெயர்*

உழிஞைத் திணையின் துறைகளுள் ஒன்று; ஒரு கோட்டையை மதிலுக்கு வெளியேஇருந்து தாக்கும் வீரர்கள் அதனைச் சூழ்ந்துநின்று போரிடல், முற்றுகைப் போர் *முற்றிய முதிர்வும் அன்றி* (தொல். 1018.4)

முற்றியல் மொழி *பெயர்*

செய்கையும், பாலும், செயப்படுபொருளும் தோன்றி மற்றொரு சொல்லை எதிர்நோக்காமல் பொருள் முடிந்து நிற்கும் வினைச்சொல், வினைமுற்று *அவ்வாறு என்ப முற்றியல் மொழியே* (தொல். 911·6).

முற்றியலுகரம் *பெயர்*

தனக்குரிய ஒரு மாத்திரை ஓசை குறையாமல் ஒலிக்கும் 'உ' என்னும் உயிரெழுத்து; முற்றும்மை. *குற்றிய லுகரமும் முற்றிய லுகரமும்* (தொல் 1271:1)

முற்றியவும்மை *பெயர்*

காண்க: முற்றியலுகரம் *முற்றிய உம்மைத் தொகைச் சொல் மருங்கில்* (தொல். 770:1)

முற்று[1] *பெயர்*

காண்க முற்றியல் மொழி *அவ் ஆறு என்ப முற்று இயல் மொழியே* (தொல் 911:6).

முற்று[2] *பெயர்*

கோட்டையைச் சூழும் முற்றுகை *முற்றின் ஆகிய புறத்து இறை* (தொல் 1008:4)

முற்று[3]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

முற்றுகை இடுதல், வளைத்தல் *முற்றிய ஊர்கொலை* (தொல். 1008:4-5)

முற்று[4]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

முடிதல். *பெற்றம் ஆயின் முற்ற இன் வேண்டும்* (தொல் 280).

முறி *பெயர்*

இலையின் தொடக்கநிலைப் பருவம்; கொழுந்து *இலையே தளிரே முறியே தோடே* (தொல்.1591:1).

முறுவல் *பெயர்*

புன்சிரிப்பு *பழிதீர் முறுவல் சிறிதே தோற்றல்* (தொல் 1061:4).

முறை[1] *பெயர்*

இருவருக்கு இடையே ஒருவருக்கு ஒருவர் அமைந்த உறவுநிலை. *முறைக்கொண்டு எழுந்த பெயர்ச் சொற்கிளவியும்* (தொல். 596:4)

முறை[2] *பெயர்*

1. தன்மை; இயல்பு; இயற்கை. *முன்உறு புணர்ச்சி முறைநிறுத்து உரைத்தலும்* (தொல்.1064:11).

2. இலக்கணம். *முறைஉறக் கிளந்த ஒப்பினது வகையே* (தொல். 1222:4).

3. வழக்காறு. *மானம் இலவே சொல் முறையான* (தொல். 597:2)

முறை[3] *பெயர்*

வகை. *எம்முறைச் சொல்லும் நிகழுங் காலத்து* (தொல். 725:2).

முறை[4] *பெயர்*

வரிசை. *அடை சினை முதல் என முறை மூன்றும் மயங்காமை* (தொல் 510:1).

முறை[5] *இடை*

ஒவ்வொன்றும்; ஒவ்வொரு பொழுதும்; தோறும். *சொன்முறை முடியாது அடுக்குற வரினும்* (*தொல்.* 718:2).

முறைப்பெயர் *பெயர்*

உறவுமுறையைக் குறிப்பிடும் பெயர்ச்சொல். *பெண்மை முறைப்பெயர் ஆண்மை முறைப்பெயர்* (தொல். 666:1).

முறை பிறழாமை *பெயர்*

32 இலக்கிய உத்திகளுள் ஒன்று; முன்னர்க் கூறிய பொருள்களை வரிசை மாறாமல் உரிய இடங்களில் விளக்குதல். *தன்கோள் கூறல் முறைபிறழாமை* (தொல். 1614:10).

முறைமை[1] *பெயர்*

இருவருக்கு இடையே உள்ள உறவுநிலை. *முறைமை சுட்டா மகனும் மகளும்* (தொல்.650:5).

முறைமை[2] *பெயர்*

1 மரபு; வழக்கம் *மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே* (தொல். 978)

2. தன்மை *முகம்புகல் முறைமையின் கிழவோற்கு உரைத்தல்* (தொல். 1102:5)

முன் *இடை*

1. ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு (இடமுன்) *அகரம் வரினும் எட்டன்முன் இயல்பே* (தொல்.451:2).

2. ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு (காலமுன்) *சுட்டு முதற்பெயரே முன்கிளந்தன்ன* (தொல் 629)

3 காலப்பொருளில் வினையெச்சம் போலச் செயல்படும் பின்னொட்டுகளுள் ஒன்று. *பின் முன் கால்கடை வழி இடத்து என்னும்* (தொல் 714:1).

முன்தேர்க் குரவை *பெயர்*

வாகைத் திணையின் துறைகளுள் ஒன்று; போரில் வெற்றிபெற்ற வேந்தன் மகிழ்ச்சியோடு தேர்த்தட்டில் நின்றுகொண்டு படைத்தலைவர்களோடு கைகோத்துக் கூத்தாடுதல். *வென்ற கோமான் முன்தேர்க் குரவையும்* (தொல். 1026:5)

முன்தேற்று *பெயர்*

தெய்வம் முதலியவற்றின் எதிரில் சூள் உரைத்தல், கடவுள் சாட்சியாகச் சபதம் செய்தல். *அச்சம் முன்தேற்று ஆ ஈர் ஐந்தும்* (தொல். 867:4).

முன்மொழி நிலையல் *பெயர்*

அன்மொழித்தொகை ஒன்றில் பொருள் உணர்த்தும் குறிப்பு அத்தொடரின் முதற்சொல்லில் இருத்தல் *முன்மொழி நிலையலும் பின்மொழி நிலையலும்* (தொல் 902:2).

முன்னம் *பெயர்*

1. குறிப்பு *தந்தையும் தன்னையும் முன்னத்தின் உணர்ப.* (தொல் 1087).

2. செய்யுள் உறுப்புகளுள் ஒன்று, கூற்று ஒன்றைக் கூறியவர் இவர், கேட்டவர் இவர் என உணரச்செய்யும் குறிப்பு. *இவ்விடத்து இம்மொழி இவர் இவர்க்கு உரிய என்று அவ்விடத்து அவரவர்க்கு உரைப்பது முன்னம்* (தொல்.1466).

முன்னர் *இடை*

ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு. *கிழவி முன்னர்த் தற்புகழ் கிளவி* (தொல் 1131:1).

முன்னிலை *பெயர்*

பெயர்ச்சொல்லிற்கு உரிய இடங்கள் மூன்றில் ஒன்று, பேசுபவருக்கு எதிரில் இருப்பவரைக் குறிப்பது. *முன்னிலை தன்மை ஆ ஈர் இடத்தொடு* (தொல். 711:2)

முன்னிலைப் புறமொழி *பெயர்*

எதிரில் இருப்பவர்களைப் படர்க்கையாளரைப் போலப் பிரித்துவைத்து அன்பின்மையை வெளிப்படுத்தும் பேச்சு *முன் நிலைப் புறமொழி எல்லா வாயிற்கும்* (தொல் 1117:1)

முன்னிலையாக்கல் *பெயர்*

களவியலின் துறைகளுள் ஒன்று, தலைவியை முதன்முதலாகக் கண்டு காதல் கொண்ட தலைவன், அவளிடத்தும் தோன்றும் காதல் குறிப்பை அறிந்து சில சொற்களைக் கூறுதல். *முன்னிலை ஆக்கல் சொல்வழிப் படுத்தல்* (தொல் 1050:1).

முன்னுதல் *பெயர்*

பொருந்துதல். *மூவகை அடியும் முன்னுதல் இலவே* (தொல். 1327:2)

முன்னு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

கருதுதல் *முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே* (தொல் 958:2).

முன்னுறவுணர்தல் *பெயர்*

களவியலின் துறைகளுள் ஒன்று; காதலர்களுக்கு இடையே உள்ள காதலைத் தோழி அறிதல். *குறை அற உணர்தல் முன் உறவு உணர்தல்* (தொல். 1077:1)

முன்னோர் *பெயர்*

பண்டைய நூலாசிரியர்கள். *முன்னோர் கூறிய குறிப்பினும்* (தொல். 1032:3)

முனி-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

வெறுத்தல். *முனிதல் நினைதல் வெரூஉதல் மடிமை* (தொல். 1209:6).

முனிவு *பெயர்*

வெறுப்பு. *முட்டுவயின் கழறல் முனிவுமெய்ந் நிறுத்தல்* (தொல். 1220:1).

முனிவு மெய்ந்நிறுத்தல் *பெயர்*

கற்புக் காலத்துக் காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; தலைவி தன் வெறுப்பை மற்றவர்களுக்குத் தெரியாமல் தனக்குள்ளாகவே அடக்கிக்கொள்ளுதல் (இளம்); தலைவியின் வெறுப்பு நன்கு புலப்படுமாறு வெளியில் காணப்படுதல் (பேரா.) *முட்டுவயின் கழறல் முனிவுமெய்ந் நிறுத்தல்* (தொல் 1220:1)

முனை *இடை*

ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு *இக்கின் இகரம் இகரமுனையற்றே* (தொல். 127).

முனைஞர் *பெயர்*

நாட்டின் எல்லையில் காவல் புரியும் படைவீரர். *வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்* (தொல். 1007·1)

முனைவன் *பெயர்*

முதல்வன், முதல்நூல் ஆசிரியன். *முனைவன் கண்டது முதல்நூல் ஆகும்* (தொல். 1598:2).

முனைவு *பெயர்*

வெறுப்பு *முனைவு முனிவு ஆகும்* (தொல். 870)

மூ

மூ[1] *பெயர்*

ம் என்னும் மெய்யின்மேல் ஊகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

மூ[2] *பெயரடை*

மூன்று ஆகிய *அம் மூ இடத்தும் உரிய என்ப* (தொல் 512:4)

மூக்கு *பெயர்*

1. ஐம்பொறிகளுள் ஒன்று; முகத்தில் அமைந்து பொருள்களின் மணத்தை நுகர்ந்தறிய உதவும் அறிகருவி; நாசி. *மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும்* (தொல் 100:3).

2 நாசியால் நுகர்ந்து அறியப்படும் அறிவு. *மூன்று அறிவதுவே அவற்றொடு மூக்கே* (தொல் 1529:3).

மூங்கா *பெயர்*

கீரிவகை. *மூங்கா வெருகு எலி மூவரி அணிலொடு* (தொல் 1508.1)

மூடு *பெயர்*

விலங்கின் பெண்மைப் பெயர் *மூடும் கடமையும் ஆடுஅல பெறாஅ* (தொல் 1567).

மூதானந்தம் *பெயர்*

காஞ்சித் திணையின் துறைகளுள் ஒன்று; போரில் இறந்துவிட்ட கணவனோடு தானும் உடனே இறந்துபடும் மனைவியைப் புகழ்கை *செல்வோர் செப்பிய மூதானந்தமும்* (தொல் 1029:23).

மூப்பு *பெயர்*

முதுமை *மூப்பே பிணியே வருத்தம் மென்மையோடு* (தொல். 1203:1).

மூவர் *பெயர்*னெள

1. சேர சோழ பாண்டிய மன்னர்கள் *வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்* (தொல்.1339:3).

2 அந்தணர் முதலிய மூன்று பிரிவினர். *மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்* (தொல்.1094:1).

மூவிடம் *பெயர்*

இலக்கணத்தில் கூறப்பெறும் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்கள். *அம் மூவிடத்தான் வினையினும் குறிப்பினும்* (தொல் 911:4).

மூழ்கு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

ஏதாவது ஒரு சிந்தனை அல்லது செயலில் ஆழ்ந்துவிடுதல். *உறுதகை இல்லாப் புலவியின் மூழ்கிய* (தொல். 1100:18).

மூன்று *பெயர்*

இரண்டிற்கும் நான்கிற்கும் இடையில் உள்ள எண் *காலம் தாமே மூன்று என மொழிப* (தொல்.686)

மெ

மெ *பெயர்*

ம் என்னும் மெய்யெழுத்தின்மேல் எகர உயிர் ஏறத் தோன்றும் உயிர்மெய்க் குறில்.

மெய்[1] *பெயர்*

ஒரு சொல்லிற்குரிய பொருள்; அருத்தம். *மெய்பெறக் கிளந்த உரிச்சொல் எல்லாம்* (தொல். 873:1).

மெய்[2] *பெயர்*

1. வடிவம், உருவம். *அப்பால் எட்டே மெய்ப்பால் உவமம்* (தொல் 1239:3)
2. உடல், உடம்பு. *மெய்தொட்டுப் பயிறல்* (தொல் 1051:1)
3. ஒரு முதலின் உறுப்பு, சினை *ஐஞ்சீர் அடுக்கியும் ஆறுமெய் பெற்றும்* (தொல் 1414:2).

மெய்[3] *பெயர்*

1. உண்மை, நிசம் *பொய் என மாற்றி மெய்வழிக் கொடுப்பினும்* (தொல். 1064:38).
2. இயல்பு, நிலை *உருபினும் பொருளினும் மெய்தடுமாறி* (தொல். 587:2)

மெய்[4] *பெயர்*

1. தனித்து இயங்க முடியாதனவும் தம்மேல் உயிரெழுத்து ஏற இடங்கொடுப்பனவும் அரை மாத்திரை ஒலிப்பனவும் ஆகி க் முதல் ன் வரையான பதினெட்டு ஒற்றெழுத்துகள், மெய்யெழுத்து; உடம்பு *மெய்யின் அளபே அரை என மொழிப* (தொல். 11)

2 அசையும் சீரும் தோன்றுவதற்கு இடமாகிய உடல்; எழுத்து *மெய்வகை அமைந்த பதினேழ் நிலத்தும்* (தொல். 1311:2)

மெய்ப்பாடு *பெயர்*

நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்னும் எட்டுவகை அக உணர்ச்சிகள் வெளியே புலப்படும்படி ஒருவரின் உடலில் ஏற்படும் நுண்ணிய மாற்றம். *அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப* (தொல் 1200.3)

மெய்ப்பெயர் *பெயர்*

ஒருவரின் உடலைக் கருத்தில் கொண்டு, அவரைச் சுட்டுவதற்கு வழங்கப்பெறும் இயற்பெயர் *மெய்ப்பெயர் மருங்கின் வைத்தனர் வழியே* (தொல் 1036).

மெய்ம்மயக்கு *பெயர்*

ஓர் ஒற்றெழுத்து மற்றோர் ஒற்றுடன் சேர்ந்து பயிலுதல்; மெய்ம்மயக்கம். *மெய்ம்மயக்கு உடனிலை தெரியுங்காலை* (தொல் 22:2)

மெய்ம்மை *பெயர்*

1. இயல்பு *மெய்ம்மை ஆகலும் உறழத் தோன்றும்* (தொல். 157·4)

2. உண்மை. *மெய்ம்மையாக அவர்வயின் உணர்ந்தும்* (தொல். 1184:2).
3. பொருண்மை *மெய்ம்மையானும் ஈர் இரண்டு ஆகும்* (தொல். 911:5).

மெய்யே என்றல் *பெயர்*

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; தலைவி தலைவன்மீது கொண்டுள்ள பெருங்காதலால் அவன் கூறும் பொய்ம்மொழிகளையும் உண்மை என்றே நம்புதல். *பொய்யாக் கோடல் மெய்யே என்றல்* (தொல். 1219:6).

மெல் *பெயரடை*

மென்மையான; மிருதுவான *மெல் இயற் பொறையும் நிறையும்* (தொல். 1102:2).

மெல்லிசை வண்ணம் *பெயர்*

ஒரு செய்யுளடியில் மெல்லின எழுத்துகள் மிகுதியாகப் பயில்வதால் உண்டாகும் பாவோசை. *மெல்லிசை வண்ணம் மெல்லெழுத்து மிகுமே* (தொல். 1476).

மெல்லெழுத்து *பெயர்*

மென்மையான ஓசையை உடையதும் மூக்கின்வளியால் ஒலிக்கப்படுவதுமாகிய ங, ஞ, ண, ந, ம, ன என்னும் ஆறு எழுத்துகள். *உதிமரக் கிளவி மெல்லெழுத்து மிகுமே* (தொல். 244).

மெல்லொற்று *பெயர்*

மெல்லினத்தைச் சேர்ந்த ங், ஞ், ண், ந், ம், ன் என்னும் ஆறு மெய்யெழுத்து *மெல்லொற்று வலியா மரப்பெயரும் உளவே* (தொல். 417).

மெலி[1]-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

வல்லின எழுத்துகளை அவற்றிற்கு இனமான மெல்லின எழுத்துகளாக மாற்றுதல் *வலிக்கும்வழி வலித்தலும் மெலிக்கும்வழி மெலித்தலும்* (தொல். 887:2).

மெலி[2]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. உடல் இளைத்தல் *வேட்கை ஒருதலை உள்ளுதல் மெலிதல்* (தொல். 1049:1).
2. வருந்துதல். *பண்பிற் பெயர்ப்பினும் பரிவுற்று மெலியினும்* (தொல். 1052:1).

மெலிப்பு *பெயர்*

வல்லின மெய் மெல்லின மெய்யாக மாறுகை *வல்லெழுத்து மிகுவழி மெலிப்பொடு தோன்றலும்* (தொல் 158:2).

மெலிவு *பெயர்*

வருத்தம். *அந்நிலை அறிதல் மெலிவு விளக்குறுத்தல்* (தொல். 1050:3).

மென்மை *பெயர்*

கடினமற்ற தன்மை; மெல்லிய இயல்பு; மிருது. *வன்மை மென்மை கடுமை என்றா* (தொல்.563:4).

மென்மை *பெயர்*

மெல்லெழுத்து. *மென்மையும் இடைமையும் வரூஉங்காலை* (தொல். 131:1)

மென்றொடர் *பெயர்*

மெல்லின மெய்யெழுத்தை அடுத்து வருவது *ஆய்தத்தொடர்மொழி வன்தொடர் மென்றொடர்* (தொல். 407.2)

மென்றொடர் மொழி *பெயர்*

மெல்லின மெய்யை அடுத்துக் குற்றியலுகரம் வருகின்ற சொல். *எ-டு* குரங்கு. *வன்தொடர் மொழியும் மென்றொடர் மொழியும்* (தொல் 415:1)

மே

மே *பெயர்*

ம் என்னும் மெய்யின்மீது ஏகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்

மேய *பெயரெச்சம்*

1. பொருந்திய. *பிண்டம் மேய பெருஞ்சோற்று நிலையும்* (தொல் 1013·9)
2. விரும்பிய *மாயோன் மேய காடுறை உலகமும்* (தொல். 952:1)

மேல் *இடை*

1. ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபுகளுள் ஒன்று. *கண்கால் புறம் அகம் உள்உழை கீழ்மேல்* (தொல் 576:1)
2. முன்னர் (கால முன்) *மேற்கிளந்தன்ன என்மனார் புலவர்* (தொல் 1264.3)

மேல்வரு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

படையெடுத்து வருதல் *நிகர்த்து மேல்வந்த வேந்தனொடு* (தொல். 1029:14)

மேலை *பெயரடை*

முந்தின; முன்னர்க் கூறப்பெற்ற *மேலைக் கிளவியொடு வேறுபாடு இலவே* (தொல். 701:4).

மேலோர் *பெயர்*

1. நான்கு வருணச் சமூக அமைப்பில் வேளாளர் தவிர்ந்த முதல் மூன்று பிரிவினர்; அந்தணர், அரசர், வணிகர் *மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்* (தொல். 1094 1)
2. தேவர். *மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே* (தொல் 978)

மேலோர் பக்கம் *பெயர்*

உழிஞைத் திணையின் துறைகளுள் ஒன்று; கோட்டை மதிலைக் கைப்பற்றக் கருதி, அதன் மேற் பரவிநின்று போரிடுபவர்களின் சிறப்பைக் கூறுகை கோட்டைமதிலில் மட்டுமல்லாமல் ஊர்க் கோவில்மதில்களிலும் ஏறிச் சென்று போரிடப் பரவலாகப் போகும் வீரர்களின் சிறப்பைக் கூறுகை (நச்சர்.) *மதில்மிசைக்கு இவர்ந்த மேலோர் பக்கமும்* (தொல் 1018 9)

மேவல் *பெயர்*

விரும்பித் தங்குதல் *அமர்தல் மேவல்* (தொல் 864)

மேவு[1] *பெயர்*

ஆசை; விருப்பம் *நம்பும் மேவும் நசை ஆகும்மே* (தொல் 813).

மேவு[2]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

பொருந்துதல். *மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய* (தொல் 977:1)

மேற்படு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

அளவு மிகுதல்; எல்லை மீறுதல் *களவு அலர் ஆயினும் காமம்மேற்படுப்பினும்* (தொல் 1065 1)

மேன்மை *பெயர்*

உயர்வு, சிறப்பு *தோன்றல் சான்ற மாற்றோர் மேன்மையும்* (தொல் 991.18)

மேன *இடை*

ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபுகளுள் ஒன்று. *புகர் அறக் கிளந்த அஃறிணை மேன* (தொல் 82:3).

மை

மை[1] *பெயர்*

ம் என்னும் மெய்யின்மேல் ஐகார உயிர் ஏறுவதால் உண்டாகும் உயிர்மெய் நெடில்.

மை[2] *பெயர்*

1. மேகம். *சேயோன் மேய மைவரை உலகமும்* (தொல். 952:2).
2. குற்றம். *மைஅறு சிறப்பின் உயர்ந்தோர்* (தொல். 1067:2).

மைந்து *பெயர்*

வலிமை *மைந்து பொருளாக வந்த வேந்தனை* (தொல். 1020:1).

மொ

மொ *பெயர்*

ம் என்னும் மெய்யெழுத்தின்மேல் ஒகர உயிர் ஏறத் தோன்றும் உயிர்மெய்க் குறில்.

மொய்[1]-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

சூழ்தல். *வேன்மிகு வேந்தனை மொய்த்தவழி* (தொல். 1022:3).

மொய்[2]-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. போரிடுதல் (இளம்.)
2. செறிதல் (நச்சர்) *கணையும் வேலும் துணைஉற மொய்த்தலிற் சென்ற உயிரின் நின்ற யாக்கை* (தொல். 1021:1-2).

மொழி[1] *பெயர்*

1. சொல்; கிளவி; வார்த்தை; பதம். *நெட்டெழுத்து ஏழே ஓர்எழுத்து ஒருமொழி* (தொல். 43)
2. ஒருவர் தம் கருத்தை மற்றவர்களுக்குத் தெரிவிக்கப் பயன்படுத்தும் ஒலிக்கூட்டமாகிய கருவி; பாடை; பாஷை. *மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தல்* (தொல். 1601:1-2).
3. சொல்லப்படும் செய்தி; கருத்து. *இனமொழி கிளந்த ஓத்தி னானும்* (தொல். 1427:2).
4. கூற்று; சொல்லுகை. *மொழி எதிர் மொழிதல் பாங்கற்கு உரித்தே* (தொல். 1132).

மொழி[2]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. சொல்லுதல்; கூறுதல். *குறித்தோன் கூற்றம் தெரித்துமொழி கிளவி* (தொல். 540).
2. உணர்த்துதல் (தெய்வச்.,கல்.). *பால்தெரிபிலவே உடன்மொழிப் பொருள*. (தொல். 675:2).

மொழி[3]-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

தோன்றுதல், வெளிப்படுதல். (இளம்., சேனா., நச்சர்). *பால்தெரிபு இலவே உடன்மொழிப் பொருள* (தொல். 675:2).

மொழிந்த பொருளோடு ஒன்ற அவ்வயின் மொழியாததனை முட்டின்றி முடித்தல் *பெயர்*

32 இலக்கிய உத்திகளுள் ஒன்று;

1. ஒரு நூற்பாவின் சொல்லமைதி பலவாறு பொருள்கொள்ள இடமளித்தால் அதற்கு முந்தைய நூற்பாவை நோக்கி அதற்குப் பொருந்துமாறு பொருள் கொள்ளுதல், நூலாசிரியர் தனியாக

எடுத்துக் கூறாத பொருளை உரையால் முடித்துக் கொள்ளுதல் என இரண்டு (இளம்.).

2. எடுத்துக் கூறப்படுகின்ற செய்திக்குப் பொருந்தும்படி, அதில் சொல்லப்படாத ஒன்றைக் கொள்ள வைத்தல் (பேரா.). (*தொல்.* 1614.4-5)

மொழிநிறைபு *பெயர்*

ஓர் எழுத்தாக நின்று ஒரு சொல்லாகப் பொருள் நிறைவடைதல்; ஓர் எழுத்து ஒருமொழி ஆதல். *குற்றெழுத்து ஐந்தும் மொழிநிறைபு இலவே* (*தொல்.* 44)

மொழிபெயர்-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஒரு மொழியில் உள்ள ஒன்றை வேறு ஒரு மொழியில் மாற்றுதல் *மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தல்* (*தொல்* 1601:1-2).

மொழிமாற்று *பெயர்*

பொருள்கோள் மரபினுள் ஒன்று, செய்யுளில் உள்ள சொற்களைப் பொருளுக்குப் பொருத்தமாக முன்னும்பின்னும் இடம்மாற்றி அமைத்துக்கொண்டு பொருள் கூறுதல் *மொழிமாற்று இயற்கை சொல்நிலை மாற்றிப் பொருள் எதிர் இயைய* (*தொல்.* 893:1-2).

மொழிமுதல் *பெயர்*

சொல்லிற்கு முதலில் வரும் எழுத்து *பன்னீர் உயிரும் மொழிமுதல் ஆகும்* (*தொல்.* 59).

மொழிவாம் என்றல் *பெயர்*

32 இலக்கிய உத்திகளுள் ஒன்று, குறிப்பிட்ட செய்தியைப் பின்னர்க் கூறுவோம் என்று உரைத்தல் *மொழிவாம் என்றல் கூறிற்று என்றல்* (*தொல்.* 1614:13).

மோ

மோ[1] *பெயர்*

ம் என்னும் மெய்யின்மீது ஓகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

மோ[2] *இடை*

முன்னிலை அசைநிலைகளுள் ஒன்று. *மியா இக மோ மதி இகும் சின் என்னும்* (*தொல்* 759:1).

மோத்தை *பெயர்*

விலங்கின் ஆண்பாற்பெயர் *மோத்தையும் தகரும் உதளும் அப்பரும்* (*தொல்* 1550:1).

மோனை *பெயர்*

செய்யுளுக்கு உரிய தொடைகளில் ஒன்று; செய்யுள் ஒன்றின் அடிகளிலோ ஓர் அடியின் சீர்களிலோ முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுத்தல் *அடிதொறும் தலைஎழுத்து ஒப்பது மோனை* (*தொல்* 1352).

மௌ

மௌ *பெயர்*

ம் என்னும் மெய்யெழுத்தின்மேல் ஔகார உயிர்ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ய

ய் *பெயர்*

தமிழ் நெடுங்கணக்கில் பதினோராவது மெய்யெழுத்து.

ய *பெயர்*

ய் என்னும் மெய்யெழுத்தோடு அகர உயிர் சேரப் பிறக்கும் உயிர்மெய்யெழுத்து. அடிநா அடிஅண்ணத்தைப் பொருந்த மிடற்று வளியால் பிறக்கும் ஒரு மாத்திரை அளவுள்ள இடையின உயிர்மெய்க் குறில். *அண்ணம் சேர்ந்த மிடற்றெழு வளியிசை கண்ணுற் றடைய யகாரம் பிறக்கும்* (தொல். 99); *இடையெழுத்து என்ப யரல வழள* (தொல். 21).

யஃகான் *பெயர்*

ய என்னும் எழுத்து; யகரம். *யஃகான் நிற்றல் மெய்பெற் றன்றே* (தொல். 27:2).

யகரம் *பெயர்*

1. ய் என்னும் எழுத்து; யகர மெய். *ஆவோ டல்லது யகரம் முதலாது* (தொல். 65).
2. ய என்னும் எழுத்து. *யகரமும் உயிரும் வருவழி இயற்கை* (தொல். 164).

யகாரம் *பெயர்*

ய என்னும் எழுத்து. *ரகார இறுதி யகார இயற்றே* (தொல். 363).

யா

யா[1] *பெயர்*

ய் என்னும் மெய்யெழுத்தின்மீது ஆகார உயிர் ஏறத் தோன்றும் உயிர்மெய் நெடில்.

யா[2] *பெயர்*

வறண்ட நிலத்தில் வளர்வதும், வயிரம் பாய்ந்த அடிமரத்தையும் மெல்லிய கிளைகளையும் உடையதும், யானைகளால் உண்ணப்படும் பட்டையை உடையதுமாகிய மரவகை. *யாமரக் கிளவியும் பிடாவும் தளாவும்* (தொல். 230:1).

யா[3] *பெயர்*

அஃறிணைப் படர்க்கைப் பன்மை வினாப்பெயர்; எவை, யாவை. *யாது யா யாவை என்னும் பெயரும்* (தொல். 654:5).

யா[3] *இடை*

அசைநிலைகளுள் ஒன்று. *யா கா பிற பிறக்கு அரோபோ மாதுஎன வரூஉம்* (தொல். 764:1-2).

யாஅர் *பெயர்*

உயர்திணை முப்பாலுக்கும் உரிய வினாப்பெயர்; யாவர், யார். *யாஅர் என்னும் வினாவிடன் கிளவி* (தொல். 697:1)

யாக்கை *பெயர்*

உடல். *சென்ற உயிரின் நின்ற யாக்கை* (தொல். 1021:2).

யாடு *பெயர்*

காண்க: ஆடு. *யாடும் குதிரையும் நவ்வியும் உழையும்* (தொல். 1514:1).

யாண்டு *பெயர்*

காண்க: ஆண்டு. *வேண்டிய கல்வி யாண்டு மூன்று இறவாது* (தொல். 1138)

யாணர் *பெயர்*

புதிது. *புதிதுபடற் பொருட்டே யாணர்க் கிளவி* (தொல். 863).

யாணு *பெயர்*

அழகு *யாணுக் கவின்ஆம்* (தொல். 865)

யா-த்தல்[1] *செயப்படுபொருள் குன்றா வினை*

பொருந்துதல். *யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப* (தொல் 1143.4)

யா-த்தல்[2] *செயப்படுபொருள் குன்றா வினை*

விதித்தல், ஆணையிடுதல் *ஐயர் யாத்தனர் கரணம் என்ப* (தொல் 1095:2).

யா-த்தல்[3] *செயப்படுபொருள் குன்றா வினை*

1. கூறுதல், சொல்லுதல். *சூத்திரத்து இயல்புஎன யாத்தனர் புலவர்* (தொல். 1604:8)
2. செய்யுள் இயற்றுதல். *அதர்ப்பட யாத்தலொடு அனைமரபினவே* (தொல் 1601:2)

யாது *பெயர்*

ஒன்றை ஐயமின்றித் தெளிவாக்கிக் கொள்ளும் வினாப்பெயர், எது *யாதுஎவன் என்னும் ஆஇரு கிளவியும்* (தொல் 515:1)

யாப்பு *பெயர்*

1. பொருத்தம். *மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும்* (தொல். 100:3).
2. வலிமையாதல் (தெய்வச்) *அதற்கு யாப்பு உடைமையின்* (தொல் 561:3).

யாப்பு *பெயர்*

1. செய்யுளுக்கு அமையவேண்டிய ஓசை; பாவோசை. *கேட்போர்க்கு இன்னா யாப்பிற்று ஆதல்* (தொல் 1612:5)
2. இலக்கியப் படைப்பு *புதுவது புனைந்த யாப்பின் மேற்றே* (தொல் 1498:2)
3. செய்யுள் இலக்கணம். *யாப்புஎன மொழிப யாப்பு அறிபுலவர்* (தொல். 1338:3).

யாம் *பெயர்*

தன்மைப் பன்மைப் பெயர். *யான்யாம் நாம்என வரூஉம் பெயரும்* (தொல் 649:5).

யாமம் *பெயர்*

நடு இரவு, நள்ளிரவு, நடுந்சி *கூதிர் யாமம் என்மனார் புலவர்* (தொல் 954.2)

யார்க்கும் *பெயர்*

அனைவருக்கும், எல்லோருக்கும் *ஒன்றே யார்க்கும் வரைநிலை இன்றே* (தொல். 1434:2).

யாவர் *பெயர்*

உயர்திணைப் பலர்பால் வினாப்பெயர்; எவர் (பன்மை) *யாவன் யாவள் யாவர் என்னும்* (தொல் 649·6)

யாவள் *பெயர்*

உயர்திணைப் பெண்பால் வினாப்பெயர்; எவள் *யாவன் யாவள் யாவர் என்னும்* (தொல் 649:6).

யாவன் *பெயர்*

உயர்திணை ஆண்பால் வினாப்பெயர், எவன் *யாவன் யாவள் யாவர் என்னும்* (தொல்.649:6).

யாவை *பெயர்*

அஃறிணைப் பலவின்பால் வினாப்பெயர், எவை. *யாதுயா யாவை என்னும் பெயரும்* (தொல் 654:5)

யாழ் *பெயர்*

நரம்புகளால் ஒலியெழுப்பும் ஓர் இசைக்கருவி. (இன்றைய வீணையைப் போன்றது). *யாழின் பகுதியொடு தொகைஇ* (தொல் 967:2).

யாழோர் *பெயர்*

பதினெண் கணத்தினருள் இசைவல்லுநர் ஆகிய தேவ இனத்தார், கந்தருவர். *முதலொடு புணர்ந்த யாழோர் மேன* (தொல் 1056:1).

யாறு *பெயர்*

ஆறு, நதி. *யாறும் குளனும் காவும் ஆடி* (தொல். 1141:1).

யான் *பெயர்*

தன்மை ஒருமைப்பெயர்; நான். *யான்யாம் நாம் என வரூஉம் பெயரும்* (தொல். 649:5).

யானை *பெயர்*

1. வலுவான தும்பிக்கை, கூரிய தந்தங்கள், பெரிய காதுகள் முதலியவற்றை உடையதும் ஊன் உண்ணாததுமான மிகப்பெரிய கரிய விலங்கு *பிடிஎன் பெண்பெயர் யானை மேற்றே* (தொல். 1554).

2. தும்பைத் திணையின் துறைகளுள் ஒன்று; யானைப்படையின் சிறப்பைக் கூறுகை; யானைநிலை. *தானை யானை குதிரை என்ற மூவகை நிலையும்* (தொல். 1022:1-2)

யி

யி *பெயர்*

ய் என்னும் மெய்யின்மீது அகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்

யீ

யீ *பெயர்*

ய் என்னும் மெய்யின்மீது ஈகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்

யு

யு *பெயர்*

ய் என்னும் மெய்யின்மீது உகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

யூ

யூ *பெயர்*

ய் என்னும் மெய்யின்மீது ஊகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

யெ

யெ *பெயர்*

ய் என்னும் மெய்யின்மீது எகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

யே

யே *பெயர்*

ய் என்னும் மெய்யின்மீது ஏகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

யை

யை *பெயர்*

ய் என்னும் மெய்யின்மீது ஐகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்

யொ

யொ *பெயர்*

ய் என்னும் மெய்யின்மீது ஒகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்

யோ

யோ *பெயர்*

ய் என்னும் மெய்யின்மீது ஓகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

யௌ

யௌ *பெயர்*

ய் என்னும் மெய்யின்மீது ஔகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ர

ர் *பெயர்*

தமிழ் நெடுங்கணக்கில் பன்னிரண்டாம் மெய்யெழுத்து

ர *பெயர்*

ர் என்னும் மெய்யெழுத்தோடு அகர உயிர் சேரப் பிறக்கும் உயிர்மெய்யெழுத்து நாக்கின் நுனி அகன்று மேல்அண்ணத்தை வருட மிடற்று வளியால் பிறக்கும் ஒரு மாத்திரை அளவுள்ள இடையின உயிர்மெய்க் குறில் *நுனிநா அணரி அண்ணம் வருட ரகார ழகாரம் ஆஇரண்டும் பிறக்கும்* (தொல். 95), *இடையெழுத்து என்ப யரல வழள* (தொல் 21)

ரஃகான் *பெயர்*

ர் என்னும் எழுத்து *ரஃகான் ஒற்றும் பகர இறுதியும்* (தொல். 491·1)

ரகரம் *பெயர்*

ர் என்னும் எழுத்து *ரகரத்து உகரம் துவரக் கெடுமே* (தொல். 480·3)

ரகாரம் *பெயர்*

ர் என்னும் எழுத்து *ரகார ழகாரம் ஆஇரண்டும் பிறக்கும்* (தொல் 95:2)

ரா

ரா *பெயர்*

ர் என்னும் மெய்யின்மீது ஆகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ரி

ரி *பெயர்*

ர் என்னும் மெய்யின்மீது இகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

ரீ

ரீ *பெயர்*

ர் என்னும் மெய்யின்மீது ஈகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்

ரு

ரு *பெயர்*

ர் என்னும் மெய்யின்மீது உகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

ரூ

ரூ *பெயர்*

ர் என்னும் மெய்யின்மீது ஊகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ரெ

ரெ *பெயர்*

ர் என்னும் மெய்யின்மீது எகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

ரே

ரே *பெயர்*

ர் என்னும் மெய்யின்மீது ஏகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ரை

ரை *பெயர்*

ர் என்னும் மெய்யின்மீது ஐகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ரொ

ரொ *பெயர்*

ர் என்னும் மெய்யின்மீது ஒகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்

ரோ

ரோ *பெயர்*

ர் என்னும் மெய்யின்மீது ஓகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ரௌ

ரௌ *பெயர்*

ர் என்னும் மெய்யின்மீது ஔகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ல

ல் *பெயர்*

தமிழ் நெடுங்கணக்கில் பதின்மூன்றாம் மெய்யெழுத்து

ல *பெயர்*

ல் என்னும் மெய்யோடு அகர உயிர் சேரப் பிறக்கும் உயிர்மெய்யெழுத்து. நாக்கின் ஓரப் பகுதி பருத்து மேற்பல்லின் அடியைப் பொருந்தி அண்ணத்தை ஒற்ற மிடற்றுவளியால் பிறக்கும்

ஒரு மாத்திரை அளவுள்ள இடையின உயிர்மெய்க் குறில் *நாவிளிம்பு வீங்கி அண்பல் முதல்உற ஆவயின் அண்ணம் ஒற்றவும் வருடவும் லகார ளகாரம் ஆஇரண்டும் பிறக்கும்* (தொல். 96); *இடையெழுத்து என்ப யரல வழள* (தொல் 21)

லகரம் *பெயர்*

ல என்னும் எழுத்து *லகரம் நகரவொற்று ஆகலும் உரித்தே* (தொல் 215 2)

லகாரம் *பெயர்*

ல என்னும் எழுத்து *நான்கன் ஒற்றே லகாரம் ஆகும்* (தொல். 468).

லா

லா *பெயர்*

ல் என்னும் மெய்யின்மீது ஆகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்

லி

லி *பெயர்*

ல் என்னும் மெய்யின்மீது இகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

லீ

லீ *பெயர்*

ல் என்னும் மெய்யின்மீது ஈகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்

லு

லு *பெயர்*

ல் என்னும் மெய்யின்மீது உகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்

லூ

லூ *பெயர்*

ல் என்னும் மெய்யின்மீது ஊகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்

லெ

லெ *பெயர்*

ல் என்னும் மெய்யின்மீது எகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்

லே

லே *பெயர்*

ல் என்னும் மெய்யின்மீது ஏகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்

லை

லை *பெயர்*

ல் என்னும் மெய்யின்மீது ஐகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

லொ

லொ *பெயர்*

ல் என்னும் மெய்யின்மீது ஒகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

லோ

லோ *பெயர்*

ல் என்னும் மெய்யின்மீது ஓகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

லௌ

லௌ *பெயர்*

ல் என்னும் மெய்யின்மீது ஔகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

வ

வ் *பெயர்*

தமிழ் நெடுங்கணக்கில் பதினான்காவது மெய்யெழுத்து

வ *பெயர்*

வ் என்னும் மெய்யின்மீது அகர உயிர் சேரப் பிறக்கும் உயிர்மெய்யெழுத்து; மேல்பல் கீழ்உதட்டுடன் சேர மிடற்றுவளியால் பிறக்கும் ஒரு மாத்திரை அளவுள்ள இடையின உயிர்மெய்க் குறில். *பல் இதழ் இயைய வகாரம் பிறக்கும்* (தொல் 98); *இடையெழுத்து என்ப யரல வழள* (தொல். 21)

வ *இடை*

பலவின்பாலைக் குறிக்கும் விகுதிகளுள் ஒன்று. *அ ஆ வஎன வருஉம் இறுதி* (தொல் 493.1)

வஃகான் *பெயர்*

வகர மெய் *வஃகான் மெய்கெடச் சுட்டுமுதல் ஐம்முன்* (தொல் 123.1)

வகரம் *பெயர்*

வ என்னும் எழுத்து *யவ முன் வரினே வகரம் ஒற்றும்* (தொல் 207).

வகாரம் *பெயர்*

வ என்னும் எழுத்து. *மூன்றன் ஒற்றே வகாரம் ஆகும்* (தொல். 467).

வகுத்தல் *பெயர்*

வற்புறுத்திக் கூறுதல் *மாண்நலம் தாஎன வகுத்தற்கண்ணும்* (தொல் 1100:13)

வகு-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. வகைப்படுத்துதல் *வனப்பியல் தானே வகுக்குங் காலை* (தொல் 1494:1).
2. ஏற்படுத்துதல்; நியமித்தல் *தன்வயின் வருதலும் வகுத்த பண்பே* (தொல் 1192:2)

வகுத்து மெய்ந்நிறுத்தல் *பெயர்*

32 இலக்கிய உத்திகளுள் ஒன்று, முன்னர்த் தொகுத்துக் கூறியவற்றைப் பின்னர் வகைப்படுத்தி விளக்குதல் *தொகுத்துக் கூறல் வகுத்துமெய்ந் நிறுத்தல்* (தொல். 1614:3).

வகை *பெயர்*

1. இனம், விதம் *அவ்வாறு எழுத்தும் மூவகைப் பிறப்பின* (தொல் 92)
2. கூறுபாடு; பாகுபாடு *இருவகைப்பட்ட பிள்ளைநிலையும்* (தொல் 1010 16)
3. இயல்பு; தன்மை. *தளைவகை சிதையாத் தன்மை யான* (தொல். 1289 2)
4. வேறுபாடு. *தன்சீர் உள்வழித் தளைவகை வேண்டா* (தொல் 1315·3)

வகைமை *பெயர்*

பகுதி *வழக்கொடு சிவணிய வகைமையான* (*தொல்* 1035:2)

வகையோர் *பெயர்*

பிரிவினர். *இடைஇரு வகையோர் அல்லது நாடில்* (*தொல்* 1579.1)

வசை *பெயர்*

1. பழிமொழி. *செம்பொரு ளாயின் வசைஎனப் படுமே* (*தொல்.* 1385)
2. குற்றம் *சிதைவுஎனப் படுபவை வசைஅற நாடின்* (*தொல்* 1612 1)

வஞ்சி *பெயர்*

1. புறத்திணைகளுள் ஒன்று, தன் நாட்டை வென்று அடிப்படுத்திக்கொள்ள வந்த பகைவனுடன் அரசன் ஒருவன் எதிர்த்துப் போர்புரிதலைக் கூறுகை *வஞ்சி தானே முல்லையது புறனே* (*தொல்.* 1011)

2. வஞ்சித்தளை நிரையசையில் முடியும் மூவசைச்சீருக்கு முன்னால் (கனிச்சீர்) நேர் நிரை அசை வருவதால் ஏற்படும் தளை (கனிமுன் நிரை - ஒன்றிய வஞ்சி, கனிமுன்நேர் - ஒன்றா வஞ்சி). *தூங்கல் வண்ணம் வஞ்சி பயிலும்* (*தொல்* 1489)

3. வஞ்சித்தளையும் வெண்சீர் வெண்டளையும் பெற்று, இருசீர் அல்லது முச்சீர் அடிகளால் நடந்து தனிச் சொல்லை அடுத்த ஆசிரியச் சுரிதகத்துடன் முடியும் செய்யுள், வஞ்சிப்பா. *ஆசிரிய நடைத்தே வஞ்சி* (*தொல்* 1368 1)

வஞ்சிச்சீர் *பெயர்*

வஞ்சிப்பாவிற்கு உரிய கனிச்சீர், வஞ்சியுரிச்சீர் *வஞ்சிச்சீர் என வகைபெற் றனவே* (*தொல்* 1281:1)

வஞ்சித்தூக்கு *பெயர்*

காண்க வஞ்சி 3 *வஞ்சித் தூக்கே செந்தூக் கியற்றே* (*தொல்* 1331)

வஞ்சியடி. *பெயர்*

கனிச்சீர் இரண்டோ மூன்றோ பயின்று வரும் வஞ்சிப்பா அடி *வஞ்சியடியே இருசீர்த்து ஆகும்* (*தொல்* 1306·1)

வஞ்சியுரிச்சீர் *பெயர்*

காண்க வஞ்சிச்சீர். *வஞ்சியுரிச்சீர் ஒன்றுதல் உடைய ஓரோவொரு வழியே* (*தொல்* 1292 1-2)

வஞ்சினம் *பெயர்*

காஞ்சித் திணையின் துறைகளுள் ஒன்று, குறிப்பிட்ட ஒரு செயலை நிறைவேற்றத் தவறின் இன்ன இழிநிலையை அடையக் கடவேன் எனச் சூள் உரைத்தல், வஞ்சினக் காஞ்சி *துன்னருஞ் சிறப்பின் வஞ்சினத்தானும்* (*தொல்* 1029·9)

வடசொல் *பெயர்*

வடமொழி என வழங்கப்படும் சமசுகிருத மொழியின் வார்த்தை *இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்று* (*தொல்* 881.1)

வடவெழுத்து *பெயர்*

தமிழில் பயிலாமல் வடமொழிக்கே சிறப்பாக உரிய எழுத்து *வடசொற் கிளவி வடஎழுத்து ஒரீஇ* (*தொல்* 885:1)

வடிவு *பெயர்*

உருவம். *வண்ணத்தின் வடிவின் அளவின் சுவையின் என்று* (தொல். 899:1).

வடு *பெயர்*

குற்றம். *வடுஅறு சிறப்பின் கற்பில் திரியாமை* (தொல். 1097:39).

வண் *பெயரடை*

மிகுதியான *இடைஇல் வண்புகழ்க் கொடையினானும்* (தொல் 1026:19).

வண்டு *பெயர்*

ஆறு கால்களை உடையதும் தேனை உண்டு வாழ்வதும் விரைவாகப் பறப்பதும் கொட்டும் இயல்புடையதுமாகிய உயிரினம்; தேனீ; தும்பி. *வண்டே இழையே வள்ளி பூவே* (தொல்.1044:1)

வண்ணகம் *பெயர்*

கலிப்பாவின் வகைகளுள் ஒன்று; தரவு, தாழிசை, அம்போதரங்கம், சுரிதகம் ஆகிய உறுப்புகளைப் பெற்று வருகின்ற வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா. *வண்ணகம் ஒருபோகு என இரு வகைத்தே* (தொல். 1399:2).

வண்ணச் சினைச்சொல் *பெயர்*

அடைமொழியாகிய நிறம், உறுப்பு, முதல் என வரிசையாக அமைந்துள்ள சொற்றொடர். *எ-டு.* செங்கால் நாரை *நடைபெற்றியலும் வண்ணச்சினைச்சொல்* (தொல். 510:2)

வண்ணம்[1] *பெயர்*

நிறம் *வண்ணத்தின் வடிவின் அளவின் சுவையின் என்று* (தொல் 899:1).

வண்ணம்[2] *பெயர்*

செய்யுளின் ஓசையை முடிந்த அளவு புலப்படுத்த முயலும் ஓர் உறுப்பு இஃது இருபது வகைப்படும். (பிற்காலத்தில் வண்ணக் குழிப்பை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பெறும் வண்ணம் வேறு; இது வேறு). *வண்ணந்தானே நால்ஐந்து என்ப* (தொல். 1471).

வணங்கு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

பெரியவர்களிடம் பணிந்து ஒழுகுதல். (கைகளைக் கூப்புதலும் ஆம்). *தங்கிய ஒழுக்கத்துக் கிழவனை வணங்கி* (தொல் 1097:15)

வதுவை *பெயர்*

திருமணம் *பெரும்பொருள் வதுவைத் தொன்முறை மனைவி* (தொல். 1122:1-2)

வந்ததுகொண்டு வாராதது முடித்தல் *பெயர்*

32 இலக்கிய உத்திகளுள் ஒன்று; ஓர் இடத்தில் கூறப்பெற்ற செய்திகளை வைத்துக் கூறப்பெறாத செய்திகளை உய்த்துணர வைத்தல் (தொல். 1614:7)

வம்பு *பெயர்*

நிலையின்மை. *வம்பு நிலையின்மை* (தொல். 811)

வய *பெயர்*

வலிமை. *வய வலி ஆகும்* (தொல். 850)

வயங்கியோன் *பெயர்*

தெளிந்தவன்; விளக்கமுற்றவன், அறிஞன் *வழுக்கு இன்று என்மனார் வயங்கியோரே* (தொல் 626:2).

வயங்கு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. ஒளிர்தல், விளங்குதல், பிரகாசித்தல். *வயங்கல் எய்திய பெருமையானும்* (தொல் 1013.2).
2. தெளிவாதல். *வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்* (தொல் 1372.1)

வயவன் *பெயர்*

வீரன். *வயவர் ஏத்திய ஓடாக் கழனிலை* (தொல். 1010:6-7)

வயா *பெயர்*

பெரு வேட்கை; மிக்க ஆசை. *வயாஎன் கிளவி வேட்கைப்பெருக்கம்* (தொல் 855:1).

வயின்[1] *பெயர்*

1. இடம். *ஆவயின் அண்ணம் ஒற்றவும் வருடவும்* (தொல் 96:2)
2. சூழல், சந்தர்ப்பம்; கட்டம். *ஆவயின் நிகழும் என்மனார் புலவர்* (தொல். 1099:2)

வயின்[2] *இடை*

ஏழாம் வேற்றுமைச் சொல் உருபுகளுள் ஒன்று. *விண்என வரூஉங் காயப் பெயர்வயின்* (தொல்.306:1).

வரம்பு *பெயர்*

எல்லை. *தெரிந்தனர் விரிப்பின் வரம்பில ஆகும்* (தொல் 1362)

வரல் *பெயர்*

வருதல். *சேய் வரல் வருத்தம் வீட* (தொல் 1039:3).

வரவு *பெயர்*

வருகை. *சேய்நிலைக்கு அகன்றோர் செலவினும் வரவினும்* (தொல் 990:8).

வரன்முறை *பெயர்*

வழக்கத்தில் உள்ள நிலை; மரபு, வழக்கம். *வரன்முறை வந்த மூன்று அலங்கடையே* (தொல் 1262:3)

வரி *பெயர்*

கோடு. *மூங்கா வெருகு எலி மூவரி அணிலொடு* (தொல் 1508:1).

வருடு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

தடவுதல். *நுனிநா அணரி அண்ணம் வருட* (தொல் 95:1).

வருணன் *பெயர்*

நெய்தல் நிலத் தெய்வம் *வருணன் மேய பெருமணல் உலகமும்* (தொல் 952:4)

வருத்தம் *பெயர்*

துன்பம். *மூப்பே பிணியே வருத்தம் மென்மையொடு* (தொல் 1203:1)

வருதல் *பெயர்*

1. பயிலுதல். *நீட வருதல் செய்யுளுள் உரித்தே* (தொல் 209).
2. தோன்றுதல். *ஆன் இடை வருதல் ஐயம் இன்றே* (தொல் 248:2).

வருதார் தாங்கல் *பெயர்*

வெட்சித் திணையின் துறைகளுள் ஒன்று, எதிர்த்து வரும் பகைவர் முன்னணிப்படையை வீரன் ஒருவன் தடுத்து நிறுத்துதல் (*தொல்* 1010.15).

வருந்து-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

துன்புறுதல். *வரைவிடை வைத்த காலத்து வருந்தினும்* (*தொல்*. 1062:1).

வரை[1] *பெயர்*

1. மலை *சேயோன் மேய மைவரை உலகமும்* (*தொல்* 952:2).
2. எல்லை *உணர்ப்புவரை இறப்பினும்* (*தொல்* 1106:1).
3. மேல்வரம்பு; உச்சவரம்பு *அடிவரை இல்லன ஆறுஎன மொழிப* (*தொல்* 1423:2).

வரை[2]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

அளவுபடுத்துதல் *அரைஎன வருஉம் பால்வரை கிளவிக்கு* (*தொல்*. 166:1).

வரை[2]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

உறுதி செய்தல்; நிருணயித்தல் *களனும் பொழுதும் வரைநிலை விலக்கி* (*தொல்*. 1064.31).

வரை[3]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

விலக்குதல், நீக்குதல் *சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்* (*தொல்*. 886).

வரை[5]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

திருமணம் புரிதல். *வரையா நாளிடை வந்தோன் முட்டினும்* (*தொல்* 1062:2).

வரைப்பு *பெயர்*

உலகம். *இமையோர் தேஎத்தும் எறிகடல் வரைப்பினும்* (*தொல்* 1197:1).

வரைவு[1] *பெயர்*

நீக்கம் *களவும் கற்பும் அலர்வரைவு இன்றே* (*தொல்*. 1112).

வரைவு[2] *பெயர்*

திருமணம். *வேற்று வரைவு வரின்அது மாற்றுதற்கண்ணும்* (*தொல்*. 1061:15).

வரைவு[3] *பெயர்*

வரையறை. *கிழவோற்கு ஆயின் இடம்வரைவு இன்றே* (*தொல்*. 1256).

வல்[1] *பெயர்*

சூதாட்டக் கருவி. *வல்என் கிளவி தொழிற்பெயர் இயற்றே* (*தொல்*. 374).

வல்[2] *பெயர்*

க, ச, ட, த, ப, ற என்னும் வல்லின எழுத்தும் அவற்றின் உயிர்மெய்யும். *குற்றியலுகரம் வல் ஆறு ஊர்ந்தே* (*தொல்*.36:2).

வல்[3] *பெயரடை*

வலிமை மிக்க *வல்லாண் பக்கமும்* (*தொல்*. 1026:9).

வல்லாண்பக்கம் *பெயர்*

வாகைத் திணையின் துறைகளுள் ஒன்று; நெருக்கடியிலும் தன் பெருமையை நிலைநிறுத்தி வாழும் மனவலிமை மிக்கவனின் பெருமையைக் கூறுகை. *புல்லா வாழ்க்கை வல்லாண்பக்கமும்* (*தொல்* 1026.9).

வல்லிசை வண்ணம் *பெயர்*

செய்யுளில் வல்லின எழுத்துகள் மிகுதியாகப் பயில்வதால் தோன்றும் பாவோசை. *வல்லிசைவண்ணம் வல்லெழுத்து மிகுமே* (தொல்.1475)

வல்லு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

செய்ய இயலுதல், செய்ய முடிதல். *பொருட்குத் திரிபு இல்லை உணர்த்தவல்லின்* (தொல்.876).

வல்லெழுத்து *பெயர்*

வலிய ஓசை பெற்றுள்ள க, ச, ட, த, ப, ற என்னும் ஆறு வல்லின மெய்யும் அவற்றின் உயிர்மெய் *வல்லெழுத்து என்ப கசடதபற* (தொல் 19)

வல்லே *வினையடை*

விரைவாக *சொல்லிய நுகர்ச்சி வல்லே பெற்றுழி* (தொல் 1051.4)

வல்லொற்று *பெயர்*

க், ச், ட், த், ப், ற் என்னும் வல்லின மெய்யெழுத்து *வல்லொற்று இறுதி கிளை ஒற்று ஆகும்* (தொல் 415.4).

வல்லொற்றுத் தொடர்மொழி *பெயர்*

வல்லின மெய்யெழுத்தை அடுத்துக் குற்றியலுகரம் வருகின்ற சொல் *எ-டு* பத்து, புற்று *வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து மிகுமே* (தொல் 427).

வல்லோன் *பெயர்*

குறிப்பிட்ட துறையில் தேர்ச்சி மிக்கவன்; வல்லுநன், நிபுணன். *வல்லோன் புணரா வாரம் போன்றே* (தொல் 1611:2).

வலம் *இடை*

இட வேற்றுமையாகிய ஏழன் சொல்லுருபுகளுள் ஒன்று. *முன்இடை கடை தலை வலம் இடம் எனாஅ* (தொல். 567:3).

வலி[1] *பெயர்*

ஆற்றல்; வலிமை, பலம் *எறும்வலி ஆகும்* (தொல் 872).

வலி[2]-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

தெளிதல் (இளம்.); துணிதல் (நச்சர்.) *ஒன்றிய மொழியொடு வலிப்பினும் விடுப்பினும்* (தொல் 991·2).

வலி[3]-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

மெல்லெழுத்தை வல்லெழுத்து ஆக்குதல் *சார்என் கிளவி காழ்வயின் வலிக்கும்* (தொல்.365).

வலிப்பு *பெயர்*

மெல்லின மெய் வல்லின மெய்யாக மாறுகை *வல்லெழுத்து மிகுவழி வலிப்பொடு தோன்றலும்* (தொல். 158:1).

வலியுறுத்து-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

வற்புறுத்துதல், கட்டாயப்படுத்துதல் *பெட்ட வாயில் பெற்று இரவு வலியுறுப்பினும்* (தொல் 1051.10).

வழக்கம் *பெயர்*

இயல்பாக அமையும் ஒன்று; பழகி நடைமுறையில் உள்ள ஒன்று; மரபு. *சேய்மையின் இசைக்கும் வழக்கத்தான* (தொல் 639:3).

வழக்காறு *பெயர்*

மக்களின் பேச்சுவழக்கு. *வழக்காறு அல்ல செய்யுளாறே* (தொல். 502:2).

வழக்கு *பெயர்*

1. மக்களின் இயல்பான பேச்சு மொழி; பேச்சுவழக்கு. *போக்குஇன்று என்ப வழக்கினுள்ளே* (தொல். 506:2).

2. மரபு. *மாட்டுஎன மொழிப பாட்டியல் வழக்கின்* (தொல். 1469:3).

3. தகுதி வழக்கு, இயல்பு வழக்கு என்னும் இருவகையான மொழிமரபு *தகுதியும் வழக்கும் தழீஇயின ஒழுகும்* (தொல்: 501:1).

வழங்கு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

கொடுத்தல், தருதல். *தொல்உயிர் வழங்கிய அவிப்பலியானும்* (தொல். 1026:12).

வழங்கு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

(மொழியில்) பயிலுதல் *வழங்கியன் மருங்கில் மருவொடு திரிநவும்* (தொல் 484:2).

வழாஅல் *வினையெச்சம்*

பிழை செய்யாமல். *செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்* (தொல். 497).

வழி[1] *பெயர்*

1. மரபு; நெறி. *முன்னும் பின்னும் கொள்வழிக் கொளாஅல்* (தொல். 893:3).

2. பின் தலைமுறை; தொடர்கின்ற சந்ததி. *பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து* (தொல்.1370.2).

3. முதல் நூலின் கொள்கைகளைப் பெரும்பாலும் தழுவி இயற்றப்பெறும் நூல்; வழிநூல் *வழி எனப்படுவது அதன்வழித்து ஆகும்.*

4. பிற்காலம்; பின்னால் வரப்போகும் காலம். *வழிநனி பயக்கும் என்று ஓம்படைக் கிளவியின்* (தொல். 1372:3-4).

வழி[2] *பெயர்*

வாயில், மூலம் *மெய்ப்பாடு எட்டன்வழி மருங்கு அறியத் தோன்றும்* (தொல் 1243:1-2).

வழி[3] *பெயர்*

இடம் *ஒன்றுவழி உடைய எண்ணினுள் பிரிந்தே* (தொல் 779:2).

வழி[4] *பெயர்*

4 வழிபாடு. *என்புநெகப் பிரிந்தோள் வழிச்சென்று கடைஇ* (தொல். 1064:27 நச்சர்.) .

வழி[5] *இடை*

காலப்பொருளில் (அப்பொழுது என) வரும் ஒரு சொல். *பின்முன் கால்கடை வழி இடத்து என்னும்* (தொல். 714.1) *கரந்திடத்து ஒழிதல் கண்டவழி உவத்தலொடு* (தொல் 1214:2).

வழிகொள *வினையெச்சம்*

ஏற்கும்படி, பின்பற்றுமாறு *கழிவினும் நிகழ்வினும் எதிர்வினும் வழிகொள நல்லவை உரைத்தலும் அல்லவை கடிதலும்* (தொல் 1103.1-2).

வழிநிலை *பெயர்*

குலத்தின் மரபு (இளம்.); பின் நின்று ஏவல் செய்யும் (தோழியின்) தன்மை (நச்சர்.) *மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது* (தொல் 1064:5).

வழிப்படு[1]-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

பின்பற்றச் செய்தல், ஏற்கச் செய்தல். *முன்னிலை யாக்கல் சொல்வழிப்படுத்தல்* (தொல்.1050.1).

வழிப்படு[2]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

பின்பற்றுதல் *மரபு வழிப்பட்ட சொல்லினான* (தொல். 1594.2).

வழிபடு[3]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

போற்றி ஒழுகுதல். *வழிபடு கிழமை அவட்கு இயலான* (தொல் 1110 3)

வழிபடு[4]-தல் *செயப்படுபொருள்-குன்றா வினை*

வணங்கப்படுதல் *வழிபடு தெய்வம் நிற்புறம் காப்ப* (தொல் 1370.1)

வழிபாடு *பெயர்*

உடன்பாடு (இளம்.), வழிபடும் செயல் (நச்சர்) *வழிபாடு மறுத்தல் மறுத்தெதிர் கோடல்* (தொல் 1061:3).

வழிமொழி-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

பணிவாகக் கூறுதல். *எல்லா மாந்தர்க்கும் வழிமொழிந் தன்றே* (தொல் 1373.3)

வழியசை புணர்த்தல் *பெயர்*

செய்யுளில் ஒரு சீரை அடுத்து மற்றொரு சீர் வராமல் அசை வருமாறு அடி அமைத்தல் *மொழியசை ஆகியும் வழியசை புணர்த்தும்* (தொல் 1383 3).

வழிவழி *வினையடை*

தலைமுறை தலைமுறையாக; பரம்பரையாக *பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து* (தொல்.1370:2).

வழு *பெயர்*

குற்றம் *எழுபது வகையின் வழுவிலது ஆகி* (தொல் 1311:3).

வழுக்கு *பெயர்*

தவறு; குற்றம். *வழுக்கு இன்று என்மனார் வயங்கியோரே* (தொல் 626 2)

வழுத்து *பெயர்*

புகழ்ச்சி. *பரவும் பழிச்சும் வழுத்தின் பொருள* (தொல் 866:1).

வள்ளி *பெயர்*

1. வள்ளிக்கொடி (மேற்கோளில் வாடாவள்ளி என்னும் தொடர் வெளிப்படை ஆட்சியாக வள்ளிக் கூத்தைச் சுட்டியது) *வாடா வள்ளி வயவர் ஏத்திய* (தொல் 1010:6)

2. தண்கதிர்மண்டிலம் (நச்சர்.). (ஆய்வாளர் பலரும் இதற்கு வேறுவேறு பொருள் கூறுவர்) *கொடிநிலை கந்தழி வள்ளி என்ற* (தொல். 1037.1).

3. மகளிரின் தோள்களில் மணப்பொருள்களால் வரையப்படும் கோலம்; தொய்யில் *வண்டே இழையே வள்ளி பூவே* (தொல். 1044·1)

வளம் *பெயர்*

செல்வம். *பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇ* (தொல்.1040:5).

வளன் *பெயர்*

1. செல்வம். *பெற்ற பின்னரும் பெருவளன் ஏத்தி* (தொல். 1040:14).
2. செழிப்பு. *மல்லல் வளனே* (தொல். 788).

வளி *பெயர்*

காற்று *நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்* (தொல்.1593:1).

வற்புறுத்தல் *பெயர்*

வலியுறுத்திச் சொல்லுதல் *புகழும் மானமும் எடுத்து வற்புறுத்தலும்* (தொல். 991:14).

வற்று *இடை*

சாரியைகளுள் ஒன்று. *வற்றுஎன் சாரியை முற்றத் தோன்றும்* (தொல்.190:2).

வறிது *பெயர்*

சிறிது. *வறிது சிறிது ஆகும்* (தொல். 820).

வறும் *பெயரடை*

வெறுமையான *வந்தவன் பெயர்ந்த வறும்களம் நோக்கி* (தொல் 1061:28).

வறுமை *பெயர்*

இல்லாமை; இலம்பாடு; தரித்திரம். *இளிவே இழவே அசைவே வறுமைஎன* (தொல். 1202:1).

வன்சொல் *பெயர்*

கொடுமொழி, கடும் வார்த்தை *வன்சொல் பொச்சாப்பு மடிமையொடு குடிமை* (தொல்.1223.2)

வன்புறு-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

(தலைவியைத் தலைவன்) ஆற்றுவித்தல். *வன்புறுத்து அல்லது சேறல் இல்லை* (தொல்.1134:2).

வன்புறை *பெயர்*

தலைவன் தலைவியின் வருத்தத்தைத் தணித்து வற்புறுத்துகை. *வன்புறை குறித்தல் தவிர்ச்சி ஆகும்* (தொல்.1135:2).

வன்முதல் *பெயர்*

வல்லின எழுத்தை முதல்எழுத்தாக உடைய சொல். *நாள்முன் வரூஉம் வன்முதல் தொழிற்கே* (தொல் 125:2).

வன்மை *பெயர்*

வலிமை *வன்மை மென்மை கடுமை என்றா* (தொல். 563:4).

வன்றொடர் *பெயர்*

க், ச், ட், த், ப், ற் என்னும் ஆறு வல்லின மெய்யெழுத்தை அடுத்துக் குற்றியலுகரம் பெறுவது *வன்தொடர் மொழியும் மென்தொடர் மொழியும்* (தொல் 415.1).

வனப்பியல் *பெயர்*

பெரும்பான்மையும் பல உறுப்பும் திரண்டவழிப் பெறும் செய்யுள் அழகு; வனப்பு. *வனப்பியல் தானே வகுக்குங் காலை* (தொல். 1494:1).

வனப்பு *பெயர்*

அழகு, எழில். *மிகுதியும் வனப்பும் ஆகலும் உரித்தே* (தொல் 862).

வா

வா *பெயர்*

வ் என்னும் மெய்யின்மேல் ஆகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்

வா-தல் (வருதல்) *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. வருகை தருதல் *மைந்து பொருளாக வந்த வேந்தனை* (தொல் 1020:1).
2. உண்டாதல். *நீக்கலின் வந்த தம்உறு விழுமமும்* (தொல். 989 3)
3. நேர்தல், பொருந்துதல். *இடையிட்டு வந்த எதுகைத்து ஆகும்* (தொல் 1474·2)

வாகை *பெயர்*

புறத்திணைகளுள் ஒன்று, ஒருவரின் பண்புகளை உயர்த்திக் கூறுதல் *வாகை தானே பாலையது புறனே* (தொல் 1023).

வாடாவள்ளி *பெயர்*

வெட்சித் திணையின் துறைகளுள் ஒன்று, வள்ளிக் கூத்து (வாடுதல் இல்லாத வள்ளி எனக் கூத்தினைச் சுட்டியது வெளிப்படை ஆட்சி) *வாடா வள்ளி* (தொல் 1010:6).

வாடு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. உலர்தல்; காய்ந்து போதல். *வாடா வள்ளி வயவர் ஏத்திய* (தொல் 1010·6)
2. மெலிதல் *உடம்பும் உயிரும் வாடியக் கண்ணும்* (தொல் 1152:1).

வாண்மங்கலம் *பெயர்*

பாடாண் திணையின் துறைகளுள் ஒன்று; பகை வெல்ல உதவிய படைக்கலங்களைப் புகழ்தல் *மாணார்ச் சுட்டிய வாண்மங்கலமும்* (தொல் 1040:11)

வாணிகம் *பெயர்*

வாணிபம்; வாங்கி விற்றல், வியாபாரம் *வைசியன் பெறுமே வாணிக வாழ்க்கை* (தொல் 1580:1).

வாய்[1] *பெயர்*

1. முகத்தில் அமைந்து (மக்களுக்குப் பேசவும், மற்ற உயிரினங்கட்கு) ஒலியெழுப்பவும் உண்ணவும் பயன்படும் உறுப்பு *செவ்வாய்க் கிள்ளையைத் தத்தை என்றலும்* (தொல் 1571:3).
2. உண்மை, வாய்மை *வரைவு இன்று என்ப வாய்மொழிப் புலவர்* (தொல் 1335:2).
3. இடம் *சொல்வாய் நாடில் பிணைஎனப் படுமே* (தொல் 1560·1)

வாய்[2]-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

தப்பாமல் நிச்சயமாக நிகழ்தல், வாள்வீச்சு தவறாமல் தாக்கிப் பகைவரை அழித்தல். *வாள்வாய்த்து இருபெரு வேந்தர்தாமும் சுற்றமும் ஒருவரும் ஒழியாத் தொகைநிலைக் கண்ணும்* (தொல்.1022:11-13).

வாய்[3]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

பெறுதல். *படையும் கண்ணியும் வாய்ந்தனர் என்ப* (தொல் 1584:1-2).

வாய்[4] *இடை*

இடவேற்றுமையாகிய ஏழன் சொல்லுருபுகளுள் ஒன்று. *புணர்ச்சி வாயின் இன்ன என்னும் எழுத்துக்கடன் இலவே* (தொல் 143:2).

வாய்மை *பெயர்*

உண்மை. *வாய்மையும் பொய்ம்மையும் கண்டோர் சுட்டி* (தொல்.989:4).

வாய்மொழி *பெயர்*

சொல்லப்பட்ட செயல் தப்பாமல் நடைபெறப் புரியும் சொல்; மந்திரம். *பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே* (தொல்.1339·1).

வாயில் *பெயர்*

1. இலக்கணம் (நச்சர்.); புலன், அஃதாவது உணரப்படுவது (தெய்வச்.). *உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே* (தொல். 877).

2. தலைவாசல், வாயிற்கடை. *சேய்வரல் வருத்தம் வீட வாயிற் காவலர்க்கு உரைத்த* (தொல்.1039:3-4).

3. (இன்பத்திற்கு) முதற்படி ஆகிய அன்பு. *உருவு நிறுத்த காம வாயில்* (தொல். 1222:2).

4. தலைவனும் தலைவியும் ஒன்றுபடத் துணைபுரிபவர்கள்; காதல் தூதுவர். *தோழி தாயே .. அறிவோர் கண்டோர் யாத்த சிறப்பின்வாயில்கள் என்ப* (தொல். 1143).

வாயிற்காவலர் *பெயர்*

ஓர் அலுவலகம், தொழிற்சாலை, மாளிகை முதலியவற்றின் தலைவாயிலில் இருந்து காவல் புரிவோர். *சேய்வரல் வருத்தம் வீட வாயிற் காவலர்க்கு உரைத்த கடைநிலை யானும்* (தொல் 1039:3-4).

வாயுறு-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

உண்மையை வலியுறுத்துதல். *ஓம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே* (தொல் 1372:4).

வாயுறை *பெயர்*

காண்க: வாயுறை வாழ்த்து. *செவியறி வாயுறை புறநிலை என்று இவை* (தொல்.1419:2).

வாயுறை வாழ்த்து *பெயர்*

பாடாண் திணையின் துறைகளுள் ஒன்று, ஒருவனை நல்வழிப்படுத்தக் கடுஞ் சொற்களைக் கூறி வாழ்த்துகை. *வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்* (தொல்.1372:1).

வார்-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

நீளுதல்; நெடுமையாதல். *வார்கோட்டு யானையும் பன்றியும் அன்ன* (தொல். 1539).

வாரம் *பெயர்*

1. கூறுபாடு, பகுதி. *செம்பால் வாரம் சிறுமைக்கு எல்லை* (தொல். 1411:2).

2. ஒருவர் பாடுவதை வாங்கிக்கொண்டு மற்றொருவர் மீண்டும் பாடுதல்; பின்பாட்டு. *வல்லோன் புணரா வாரம் போன்றே* (தொல். 1611:2).

3. கலிப்பாவின் இறுதிப்பகுதி ஆகிய சுரிதகம் *அடக்கியல் வாரம் தரவோடு ஒக்கும்* (தொல்.1404).

வாராக் காலம் *பெயர்*

எதிர் காலம். *வாராக் காலத்து வினைச்சொற் கிளவி* (தொல் 730:1).

வாராததனால் வந்தது முடித்தல் *பெயர்*

32 இலக்கிய உத்திகளுள் ஒன்று, கூறப்பெற்ற பொருள் ஒன்றைப் பகுத்துக் கூறியவழி அந்த இடத்தில் வாராததற்குக் கூறிய இலக்கணத்தை வந்த பொருளினிடத்தும் வருவித்து உணர்தல். *வாராததனால் வந்தது முடித்தல்* (தொல் 1614:6).

வாழ்-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

வாழ்க்கை நடத்துதல்; சீவித்தல். *கடல்வாழ் சுறவும் ஏறு எனப்படுமே* (தொல் 1543).

வாழ்க்கை *பெயர்*

1. உயிர் வாழ்தலுக்கு உரிய தொழில், சீவனம் *வைசியன் பெறுமே வாணிக வாழ்க்கை* (தொல் 1580).

2. இல்லறம்; இல்வாழ்க்கை *உரித்து என மொழிப வாழ்க்கையுள் இரக்கம்* (தொல் 1175.2).

வாழ்ச்சி *பெயர்*

வாழ்வு, வாழ்க்கை. *ஆறன் மருங்கின் வாழ்ச்சிக் கிழமைக்கு* (தொல் 584.1)

வாழ்ச்சிக்கிழமை *பெயர்*

குறிப்பிட்ட இடத்தில் வாழ்வதால் கிடைக்கின்ற உரிமை *ஆறன் மருங்கின் வாழ்ச்சிக் கிழமைக்கு* (தொல்.584:1)

வாழ்த்தல் *பெயர்*

போற்றுதல். *தோழியை வினாவலும் தெய்வம் வாழ்த்தலும்* (தொல் 1065·7).

வாழ்த்தியல் *பெயர்*

தலைவன் ஒருவனை வாழ்த்தும் துறை *வாழ்த்தியல் வகையே நாற்பாக்கும் உரித்தே* (தொல்.1369).

வாழ்த்து *பெயர்*

1. நல்லாசி. *அடுத்து ஊர்ந்து ஏத்திய இயன்மொழி வாழ்த்தும்* (தொல் 1039.2)

2. போற்றுகை, தோத்திரம், துதி *கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே* (தொல்.1037:3).

வாழிய *வியங்கோள் வினைமுற்று*

வாழ்வாயாக *வாழிய என்னும் செய்வென் கிளவி* (தொல் 212.1).

வாள் *பெயர்*

1. ஒளி. *வாள் ஒளி ஆகும்* (தொல் 851).

2. போர்க்கருவியாகிய கத்தி; உடைவாள், வாட்படை *வாள் மலைந்து எழுந்தோனை மகிழ்ந்துபறை தூங்க* (தொல் 1010.17).

3. உழிஞைத் திணையின் துறைகளுள் ஒன்று, முற்றுகையிட்டுள்ள அரசன் கோட்டையுள் புகுவதற்குக் குறிப்பிட்ட நாளில் தன் வாளை முன்னே செலவிடுத்தல், வாள் நாள்கோள். *குடையும் வாளும் நாள்கோள்* (தொல் 1018:1)

வாள்வாய்த்துக் கவிழ்தல் *பெயர்*

வெட்சியின் துறைகளுள் ஒன்று. வெட்சிப் போரில் வீரன் ஒருவன் மாற்றானின் வாளால் தாக்குண்டு இறந்து படுதல் *வருதார் தாங்கல் வாள்வாய்த்துக் கவிழ்தல்என்று* (தொல் 1010:15).

வாளாண் *பெயர்*

வாட்போர் வல்லமை; வாள்வீரம், வாள்வீச்சுத் திறமை *வாளாண் எதிரும் பிரிவினானும்* (தொல்.1057:9).

வாளின் மண் *பெயர்*

உழிஞைத் திணையின் துறைகளுள் ஒன்று; போரில் வெற்றி பெற்ற மன்னன் அதற்குக் காரணமான வாட்படைக்குச் சிறப்பு நீராட்டுதல். *வென்ற வாளின் மண்ணோடு ஒன்ற* (தொல். 1018:11).

வானோர் *பெயர்*

ஆகாயத்தில் வாழும் தேவர்கள்; விண்ணோர்; மேல்உலகினர்; அமரர். *நீகை தொட்டது வானோர் அமிழ்தம் புரையும் ஆல் எமக்கு என* (தொல். 1096:12-13).

வி

வி *பெயர்*

வ் என்னும் மெய்யெழுத்தின்மேல் இகர உயிர் ஏறத் தோன்றும் உயிர்மெய்க் குறில்.

விசும்பு *பெயர்*

வானம், ஆகாயம் *நிலம்தீ நீர்வளி விசும்போடு ஐந்தும்* (தொல் 1593:1).

விசை *பெயர்*

1. விரைவு; வேகம். *வருவிசைப் புனலைக் கற்சிறை போல* (தொல்.1013:7).
2. மரவகை. *இல்ல மரப்பெயர் விசைமர இயற்றே* (தொல்.314).

விடல் *பெயர்*

நீங்குதல், விடுதல். *தீர்தலும் தீர்த்தலும் விடற்பொருட்டு ஆகும்* (தொல்.802).

விடியல் *பெயர்*

புலர்காலைப் பொழுது; அதிகாலை; வைகறை. *வைகுறு விடியல் மருதம்* (தொல்.956).

விடு[1]-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. விலக்குதல், நீக்குதல் *அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே* (தொல்.1262:1).
2. அனுப்புதல்; விடையளித்தல் *செல்லாக் காலைச் செல்கென விடுத்தலும்* (தொல்.1097:17).

விடு[2]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. நீங்குதல்; விலகுதல். *பற்றுவிடு கிளவியும் தீர்ந்துமொழிக் கிளவியும்* (தொல்.596:7).
2. ஏவுதல், அனுப்புதல். *வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்* (தொல் 1007:1).

விடை *பெயர்*

விடை பெறுதல், புறப்படுதல் *நடைவயிற் றோன்றிய இருவகை விடையும்* (தொல்.1040:15).

விண் *பெயர்*

வானம்; விசும்பு; ஆகாயம். *விண்என வரூஉம் காயப்பெயர்வயின்* (தொல்.306:1).

வித-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

மற்றவற்றினின்றும் ஒன்றைச் சிறப்பித்துக் கூறுதல். *வேழக்கு உரித்தே விதந்து களிறு என்றல்* (தொல்.1536).

விதி-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

இன்னவாறு செய்க அல்லது செய்யற்க என ஆணையிடுதல்; கட்டளையிடுதல். *விதித்தலும் விலக்கலும் என இருவகையொடு* (தொல் 1603:3).

விதிர்ப்பு *பெயர்*

நடுக்கம். *அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கம் செய்யும்* (தொல்.800).

வியங்கோள் *பெயர்*

முன்னிலையில் ஏவற்பொருளைக் கருதியும் கருதாமலும் வருகின்ற வினைச்சொல். *மாஎன் கிளவி வியங்கோள் அசைச்சொல்* (தொல் 758)

வியப்ப *இடை*

உவம உருபுகளுள் ஒன்று. *நேர வியப்ப நளிய நந்த என்று* (தொல் 1240.2).

வியப்பு *பெயர்*

அதிசயம்; ஆச்சரியம் *ஐ வியப்பு ஆகும்* (தொல் 869).

வியர்-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

வெப்பம், உழைப்பு, அச்சம், நாணம் முதலியவற்றால் உடலின்மேல் நீர்த்துளி (வியர்வை) தோன்றுதல் *புகுமுகம் புரிதல் பொறிநுதல் வியர்த்தல்* (தொல் 1210·1).

வியல் *பெயர்*

அகலம். *வியல்என் கிளவி அகலப் பொருட்டே* (தொல் 848).

விரவு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

பல பொருள்கள் ஒன்றோடொன்று கலத்தல் *ஒருநெறி இன்றி விரவிய பொருளால்* (தொல் 1430:1).

விரவுப்பெயர் *பெயர்*

உயர்திணை, அஃறிணை ஆகிய இரு திணைக்கும் பொதுவான பெயர்ச்சொல், பொதுப்பெயர் *பலவயினானும் எண்ணுத்திணை விரவுப்பெயர்* (தொல் 535·1).

விரிச்சி *பெயர்*

வெட்சித் திணையின் துறைகளுள் ஒன்று; சகுனமாகக் கருதப்படும் நற்சொல்; நற்குறிச் சொல். *படைஇயங்கு அரவம் பாக்கத்து விரிச்சி* (தொல் 1008:1).

விரித்தல் *பெயர்*

செய்யுள் விகாரங்கள் ஆறனுள் ஒன்று. யாப்பியல் காரணங்களுக்காக ஒரு சொல்லொடு (மரபு மாறாமல்) ஒன்றிரண்டு எழுத்துகளைச் சேர்த்தல் *எ-டு:* தண் துறைவர்→தண்ணந்துறைவர். *விரிக்கும்வழி விரித்தலும் தொகுக்கும்வழித் தொகுத்தலும்* (தொல்· 887:3).

விரி-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. ஒரு பொருளை விளக்கிக் கூறுதல். *தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்து* (தொல்.1601:1).

2. (கூந்தல் முதலியவற்றை) அவிழ்த்து நெகிழ விடுதல் *கூழை விரித்தல் காதொன்று களைதல்* (தொல் 1211:1).

விரிவு *பெயர்*

விரிவுரை. *விட்டகல்வு இன்றி விரிவொடு பொருந்தி* (தொல் 1606 1).

விருந்தினர் *பெயர்*

உறவினர் அல்லாத புதியவர். *பாணன் பாடினி இளையர் விருந்தினர்* (தொல் 1143:2).

விருந்து *பெயர்*

1. புதியவராக வருபவரை அன்போடு வரவேற்று உணவு முதலியன கொடுத்து உபசரிக்கை. *பகாஅ விருந்தின் பகுதிக் கண்ணும்* (தொல் 1057:7).

2. புதியவராக வருபவர்கள், விருந்தினர் *விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்* (தொல்.1102:3)

3. செய்யுளுக்கு உரிய எண்வகை வனப்புகளுள் ஒன்று, புலவர் தாம் விரும்பியவாறு புதுநெறி படைத்துக்கொண்டு செய்யுள் (தனிப்பாடல், சிற்றிலக்கியம் அன்று) இயற்றுகை. *விருந்தே தானும் புதுவது புனைந்த யாப்பின் மேற்றே* (தொல்.1498).

விருப்பு *பெயர்*

ஆசை *கவர்வு விருப்பு ஆகும்* (தொல்.846).

விரும்பு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஆசைப்படுதல். *பாகனொடு விரும்பிய வினைத்திற வகையினும்* (தொல் 991:20).

விரை-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

வேகமாதல் *விரைந்த பொருள என்மனார் புலவர்* (தொல்.726:4).

விரைவு *பெயர்*

வேகம் *கதழ்வும் துனைவும் விரைவின் பொருள* (தொல்.799).

வில் *பெயர்*

மூங்கில், நாணல் முதலிய கழிகளை வளைத்து, இருமுனைகளையும் நாண்கயிற்றால் இணைத்து, அம்பு செலுத்தப் பயன்படுத்தப்படும் படைக்கருவி; சிலை. *வில்லும் வேலும் கழலும் கண்ணியும்* (தொல் 1586.1).

விலக்கு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஒன்றைச் செய்யலாகாது என விதித்தல்; செயலைத் தடுத்தல். *களனும் பொழுதும் வரைநிலை விலக்கி* (தொல் 1064:31).

விலங்கு *பெயர்*

உயரமாக வளராமல் குறுக்காக வளரும் உயிரினம்; மனிதர்கள், தாவரங்கள் தவிர்ந்த உயிரினம், மிருகம் *கடலே கானல் விலங்கே மரனே* (தொல்.1459:2).

விலங்குறு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

வேறுபடுதல், மாறுதல் (இளம்.), இடையூறு நேர்தல், தடை உண்டாதல் (நச்சர்.). *அவள் விலங்குறினும் களம்பெறக் காட்டினும்* (தொல் 1064:39).

விழி-த்தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

தெளிவாதல்; விளங்குதல் *மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா* (தொல்.878).

விழு *பெயரடை*

சிறந்த *தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்* (தொல். 1010:10)

விழுமம் *பெயர்*

துன்பம் *வேற்று நாட்டகல்வயின் விழுமத்தானும்* (தொல். 1096:45)

விழுமியது *பெயர்*

சிறந்த பொருள், நல்லது. *இழும் என் மொழியால் விழுமியது நுவலினும்* (தொல். 1497:1).

விழைய *இடை*

உவம உருபுகளுள் ஒன்று. *எள்ள விழைய புல்ல பொருவ* (தொல். 1238:1)

விழைவு *பெயர்*

விருப்பம். *விழைவின் தில்லை தன்னிடத்து இயலும்* (தொல் 745).

விளக்கம் *பெயர்*

1. ஒளி. *விரைவே விளக்கம் மிகுதி சிறப்பே* (தொல். 867:3).
2. புகழ். *வென்றோர் விளக்கமும் தோற்றோர் தேய்வும்* (தொல் 1013:10).

விளக்கு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

தெளிவாகச் சொல்லுதல், விரித்துரைத்தல். *முன்னிய காலம் மூன்றுடன் விளக்கி* (தொல்.986:5).

விளக்குநிலை *பெயர்*

பாடாண் திணையின் துறைகளுள் ஒன்று; விளக்கு ஏதுவாக வெற்றியைக் காட்டுதல் (இளம்.); வேல்போன்று ஓங்குவித்த விளக்கைப் புகழ்தல் (நச்சர்). *வேலை நோக்கிய விளக்கு நிலையும்* (தொல். 1039:7).

விளக்குறு-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

தெளிவாகப் புலப்படுத்துதல். *அந்நிலை அறிதல் மெலிவு விளக்குறுத்தல்* (தொல். 1050:3)

விளங்கு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

தெளிவாதல்; புலப்படுதல். *நாடுதல் இன்றிப் பொருள்நனி விளங்க* (தொல்.1428:4)

விளம்பு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

கூறுதல்; சொல்லுதல். *விளம்பிய இயற்கையின் வேறுபடத் தோன்றின்* (தொல் 484:3)

விளி[1] *பெயர்*

1. படர்க்கையை முன்னிலையாக்கும் எட்டாம் வேற்றுமை; *விளி வேற்றுமை அன்றி அனைத்தும் விளிகோள் இலவே* (தொல். 624:3).
2. விளி ஏற்கும் பெயர்ச்சொல். *இன்மை வேண்டும் விளியொடு கொளலே* (தொல் 641:4)

விளி[2]**-த்தல்** *செயப்படுபொருள் குன்றா வினை*

அழைத்தல், கூப்பிடுதல். *விளம்பிய நெறிய விளிக்குங்காலை* (தொல் 637 2)

விளிம்பு *பெயர்*

ஓரம்; நுனிப்பகுதி. *நாவிளிம்பு வீங்கி அண்பல் முதல்உற* (தொல் 96:1)

விளிவு *பெயர்*

கேடு; அழிவு. *விளிவு இல் கொள்கை அழுகை நான்கே* (தொல். 1202:2)

விளையாட்டு *பெயர்*

மகிழ்ச்சியோடு பொழுது கழியவும் உடலுக்குப் பயிற்சியாகவும் அமையும் செயல். *கெடவரல் பண்ணை ஆஇரண்டும் விளையாட்டு* (தொல். 803)

விளைவு *பெயர்*

ஒரு செயலின் பயன். *ஆற்றது பண்பும் கருமத்து விளைவும்* (தொல். 1120:1).

விறப்பு *பெயர்*

செறிவு. *விறப்பும் உறப்பும் வெறுப்பும் செறிவே* (தொல். 831).

விறல் *பெயர்*

வெற்றி. *காதல் சிறப்பே செறற்சொல் விறற்சொல் என்று* (தொல். 541:5).

விறலி *பெயர்*

பாடலின் கருத்தைத் தன் மெய்ப்பாடுகளால் நன்கு புலப்படுத்தி ஆடவல்லவள்; ஆடல்மகள்; நடிகை; நாட்டியப்பெண். *கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்* (தொல். 1040:3).

வினா *பெயர்*

1. ஒருவர் அல்லது ஒன்றைப்பற்றி அறிந்துகொள்ளக் கேட்கப்படும் கேள்வி. *செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்* (தொல். 497).
2. வினாச்சொல். *யாஎன் வினாவும் ஆஇயல் திரியாது* (தொல். 176).
3. வினாவெழுத்து. *ஆஏஓ அம் மூன்றும் வினா* (தொல். 32).

வினாவல் *பெயர்*

கேட்டல். *தோழியை வினாவலும் தெய்வம் வாழ்த்தலும்* (தொல். 1065:7).

வினை *பெயர்*

1. தொழில்; செயல்; காரியம். *மகன்வினை கிளப்பின் முதனிலை இயற்றே* (தொல். 360).
2. *காண்க:* வினைச்சொல். *சொல் எனப்படுப பெயரே வினை என்று ஆ இரண்டு* (தொல்.645:1-2).
3. ஊழ்; பாவ புண்ணியமாகிய இருவினை. *வினையின் நீங்கிய விளங்கிய அறிவின்* (தொல்.1598:1).
4. உபகாரம் (சேனா.); பயன்பாடு (நச்சர்.). *அதற்குவினை உடைமையின்* (தொல். 561:1).

வினைக்கிளவி *பெயர்*

காண்க: வினைச்சொல் *அதனோடு இயைந்த ஒருவினைக் கிளவி* (தொல். 559:4).

வினைக்குறிப்பு *பெயர்*

காலத்தை வெளிப்பட உணர்த்தாமல் குறிப்பால் உணர்த்தும் வினைச்சொல்; குறிப்புவினை. *எவ்வழி வரினும் வினையே வினைக்குறிப்பு* (தொல். 556:3).

வினைச்சொல் *பெயர்*

தமிழின் நால்வகைச் சொற்களுள் ஒன்று; ஒரு செயலைக் காலக் குறிப்போடு சுட்டும் சொல். *எ-டு* படித்தான், உழைக்கிறான், உயரும் *வாராக் காலத்து வினைச்சொற் கிளவி* (தொல்.730:1)

வினைப்பால்உவமம் *பெயர்*

நான்கு வகை உவமங்களுள் ஒன்று; ஒன்றன் அல்லது ஒருவரின் செயலுக்குப் பொருந்திய உவமை. *கண்ணிய எட்டும் வினைப்பால் உவமம்* (தொல். 1236:3).

வினைப்பெயர் *பெயர்*

செயல் ஒன்றைக் கூறும் பெயர்ச்சொல்; தொழிற்பெயர். *எ-டு.:* கற்பித்தல். *வினைப்பெயர்க் கிளவியும் பண்புகொள் பெயரும்* (தொல் 655:3)

வினைமாற்று *பெயர்*

முற்கூறிய தொழில் அன்றிப் பிறிது ஒரு தொழில் என்னும் பொருண்மை. *மற்றுஎன் கிளவி வினைமாற்று அசைநிலை* (தொல். 747:1).

வினைமுதல் *பெயர்*

(வாக்கியத்தில் சொல்லப்பட்டுள்ள) செயலைச் செய்பவர்; எழுவாய்; கருத்தா. *வினைமுதற் கிளவியும் வினையும் உளப்பட* (தொல்.719:2).

வினையின் தொகை *பெயர்*

அறுவகைத் தொகைகளுள் ஒன்று; காலத்தைக் காட்டாத பெயரெச்சத்தொடர்; வினைத்தொகை. *எ-டு.*: எரிதழல். *வினையின் தொகையே பண்பின் தொகையே* (தொல். 895:2).

வினையெஞ்சு கிளவி *பெயர்*

திணை, பால், இடம் ஆகியவற்றை உணர்த்தாமல், காலத்தை மட்டும் காட்டித் தன்பொருள் முற்றுப்பெற வேறொரு வினைச்சொல்லை வேண்டி நிற்கும் வினைச்சொல்; வினையெச்சம். *எ-டு.*: விரைந்து வந்தான். *வினையெஞ்சு கிளவியும் உவமக் கிளவியும்* (தொல். 205:1).

வினைவலர் *பெயர்*

ஏவலாளர். *அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்* (தொல். 972:1).

வீ

வீ *பெயர்*

வ் என்னும் மெய்யின்மீது ஈகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

வீங்கு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

மேல் நோக்கிச் செல்லுதல். *நாவிளிம்பு வீங்கி அண்பல் முதல்உற* (தொல். 96:1).

வீசு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

(வாளைச்) சுழற்றிப் போர் புரிதல் *ஒள்வாள் வீசிய நூழிலும்* (தொல் 1022:17).

வீடு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

தீர்தல்; ஒழிதல் *சேய்வரல் வருத்தம் வீட* (தொல் 1039:3).

வீழ்[1] *பெயர்*

ஆல் முதலிய சில மரங்களின் கிளைகளிலிருந்து இறங்கும் வேர்த்தொகுதி, விழுது. *வீழோடு என்று ஆங்கு அவையும் அன்ன* (தொல் 1592:2)

வீழ்[2]**-தல்** *செயப்படுபொருள் குன்றா வினை*

விரும்புதல்; விழைதல் *அகத்தோன் வீழ்ந்த நொச்சியும்* (தொல் 1018:5 *நச்சர்*).

வீழ்[3]**-தல்** *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. இறத்தல் *அகத்தோன் வீழ்ந்த நொச்சியும்* (தொல். 1018:5 இளம்)
2. நிலம் தோயச் சாய்தல், காலில் விழுதல். *அடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கி* (தொல்.1097:29).

வீழ *இடை*

உவம உருபுகளுள் ஒன்று *கள்ள மதிப்ப வெல்ல வீழ* (தொல் 1238:2)

வீறு *பெயர்*

வேறுபாடு, வகைமை. *உம்மையெச்சம் இருவீற்றானும்* (தொல். 920:1).

வு

வு *பெயர்*

வ் என்னும் மெய்யின்மீது உகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

வூ

வூ *பெயர்*

வ் என்னும் மெய்யின்மீது ஊகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

வெ

வெ *பெயர்*

வ் என்னும் மெய்யின்மீது எகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

வெகுள்(ளு)-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

சினத்தல்; கோபித்தல் *தான் வெகுண்டு ஆக்கிய தகுதிக் கண்ணும்* (தொல். 1100:22).

வெகுளி *பெயர்*

சினம்; கோபம். *அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று* (தொல். 1200:2).

வெட்சி *பெயர்*

புறத்திணைகளுள் ஒன்று; பகைவரின் ஆநிரைகளைக் களவில் கைப்பற்றி வருதல். *வெட்சி தானே குறிஞ்சியது புறனே* (தொல். 1006:3).

வெண்சீர் *பெயர்*

வெண்பாவிற்கு உரியனவாகிய ஈரசைச்சீர்களும் காய்ச்சீரும். *வெண்சீர் ஈற்றசை நிரையசை இயற்றே* (தொல். 1290)

வெண்டளை *பெயர்*

மாமுன் நிரை, விளம்முன் நேர், காய்முன் நேர் என அமைந்து வெண்பாவிற்குச் சிறப்புரிமை வாய்ந்த தளை *வெண்டளை விரவியும் ஆசிரியம் விரவியும்* (தொல். 1323:1).

வெண்பா *பெயர்*

நால்வகைப் பாக்களுள் ஒன்று; நாள், மலர், காசு, பிறப்பு என்னும் நான்கனுள் ஏதாவதொரு வாய்பாட்டால் முடியும் சிந்தடி ஈற்றடியாகவும் ஏனையவை அளவடிகளாகவும் அமையும் பாவகை, இது குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, சவலை வெண்பா, இன்னிசை வெண்பா, நேரிசை வெண்பா, பஃறொடை வெண்பா, கலிவெண்பா என ஏழுவகைப்படும். *வெண்பா ஈற்றடி முச்சீர்த்து ஆகும்* (தொல். 1332).

வெண்பாவுரிச்சீர் *பெயர்*

வெண்பாவிற்குரிய காய்ச்சீர் *வெண்பாவுரிச்சீர் ஆசிரியவுரிச்சீர்* (தொல். 1284:1).

வெதிர் *பெயர்*

புறக்காழ் உடையதும் பல்லாண்டுகள் வாழ்ந்து ஒருமுறை மங்கிய வெண்ணிறப் பூக்களைப் பூப்பதுமாகிய புதர்ச்செடி; பெருமூங்கில், கழை; உந்தூழ். *ஆரும் வெதிரும் சாரும் பீரும்* (தொல்.364:1)

வெம் *பெயரடை*

கடுமையான *வேம்பும் கடுவும் போல வெம்சொல்* (தொல் 1372:2).

வெம்மை *பெயர்*

1. விருப்பம். *வெம்மை வேண்டல்* (தொல். 818).
2. சூடு; வெப்பம். *தண்மை வெம்மை அச்சம் என்றா* (தொல். 563:2).

வெயில் *பெயர்*

கதிரவன் ஒளி; சூரிய வெளிச்சம். *இருள்என் கிளவி வெயில் இயல் நிலையும்* (தொல். 403).

வெரிந் *பெயர்*

முதுகு. *வெரிந் என் இறுதி முழுதும் கெடுவழி* (தொல். 301:1)

வெரு *பெயர்*

அச்சம்; பயம் *வெறியாட் டிடத்து வெருவின் கண்ணும்* (தொல் 1061:23).

வெருகு *பெயர்*

பூனை. *வெவ்வாய் வெருகினைப் பூசை என்றலும்* (தொல். 1571:4)

வெரூஉ *பெயர்*

காண்க: வெரு *விறப்பே வெரூஉப் பொருட்டும் ஆகும்* (தொல் 832:2).

வெரூஉதல் *பெயர்*

அஞ்சுதல்; பயப்படுதல். *முனிதல் நினைதல் வெரூஉதல் மடிமை* (தொல். 1209:6).

வெல்(லு)-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

வெற்றி பெறுதல்; செயித்தல். *வென்ற கோமான் முன்றேர்க் குரவையும்* (தொல் 1026:5)

வெல்ல *இடை*

உவம உருபுகளுள் ஒன்று. *கள்ள மதிப்ப வெல்ல வீழ* (தொல். 1238:2).

வெவ் *பெயரடை*

கொடுமையான *வெறிஅறி சிறப்பின் வெவ்வாய் வேலன்* (தொல்.1010.1)

வெள்ளடி *பெயர்*

வெண்டளை பயிலும் செய்யுளடி. *இயற்சீர் வெள்ளடி ஆசிரிய மருங்கின்* (தொல் 1322:1).

வெள்ளை *பெயர்*

காண்க. வெண்பா *அளவும் சிந்தும் வெள்ளைக்கு உரிய* (தொல் 1318:1)

வெளிப்படு-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. எடுத்துக் கூறுதல்; அறிவித்தல். *தேர்ந்து வெளிப்படுத்த ஏனை மூன்றும்* (தொல் 101 2)
2. பிறர் அறியச் செய்தல் *அம்பலும் அலரும் களவு வெளிப்படுத்தலின்* (தொல். 1089.1).

வெளிப்படு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1. பொருள் விளக்கமாதல்; புலப்படுதல், விளங்குதல். *வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா* (தொல் 783:1)
2. (வாயிலிருந்து ஒலிபோல) வெளியே வருதல். *எல்லா எழுத்தும் வெளிப்படக் கிளந்து* (தொல். 102:1)

3. பிறர் அறியுமாறு தோற்றுதல். *வெளிப்பட வரைதல் படாமை வரைதல் என்று* (தொல் 1090:1)

வெளிப்படை *பெயர்*

பலரும் அறிந்தது; மந்தணம்இரகசியம் அல்லாதது. *வெளிப்படை தானே கற்பினோடு ஒப்பினும்* (தொல். 1091:1)

வெறி *பெயர்*

முருகக் கடவுளின் ஆவேசம் பெற்றானாக ஒருவன் ஆடுகை; வெறியாட்டு (ஆடுபவன் வேலன் எனப்படுவான்) *வெறிஅறி சிறப்பின் வெவ்வாய் வேலன்* (தொல். 1010:1).

வெறியாட்டு *பெயர்*

காண்க: வெறி. *வெறியாட்டிடத்து வெருவின் கண்ணும்* (தொல். 1061:23).

வெறுத்தல் *பெயர்*

விரும்பாதிருத்தல் *இன்பத்தை வெறுத்தல் துன்பத்துப் புலம்பல்* (தொல். 1219:1).

வெறு-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

சினத்தல், கோபித்தல். *வெறுப்ப வந்த வெகுளி நான்கே* (தொல். 1207:2).

வெறுப்பு *பெயர்*

செறிவு. *விறப்பும் உறப்பும் வெறுப்பும் செறிவே* (தொல் 831).

வென்றி *பெயர்*

மற்றவரோடு போராடியோ போட்டியிட்டோ வெல்லுகை; வெற்றி; செயம். *தேரோர் தோற்றிய வென்றியும்* (தொல் 1026:4)

வென்றோர் விளக்கம் *பெயர்*

வஞ்சித் திணையின் துறைகளுள் ஒன்று; போரில் வெற்றி பெற்ற மன்னன்மாட்டுக் காணப்படும் சிறப்பு (இளம்); போரில் வென்றபிறகு திறைவாங்கும் அரசனுக்குக் கிடைக்கும் சிறப்பு (நச்சர்.) *வென்றோர் விளக்கமும் தோற்றோர் தேய்வும்* (தொல். 1013:10).

வே

வே *பெயர்*

வ் என்னும் மெய்யின்மீது ஏகார உயிர் ஏறத் தோன்றும் உயிர்மெய் நெடில்.

வேட்கை *பெயர்*

விருப்பம் *வயாஎன் கிளவி வேட்கைப் பெருக்கம்* (தொல். 855)

வேட்டல் *பெயர்*

விரும்புதல் *தன்வயின் கரத்தலும் அவள்வயின் வேட்டலும்* (தொல். 1154:1).

வேட்டுவர் *பெயர்*

குறிஞ்சி நிலத்திற்குரிய ஆண்மக்கள் *ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்* (தொல்.970:1).

வேண்டு[1]-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1 பணிவோடு கேட்டல் *வரைதல் வேண்டி தோழி செப்பிய* (தொல். 1057:11).

2. விரும்புதல் *புணர்ச்சி வேண்டினும் வேண்டாப் பிரிவினும்* (தொல் 1064:22).

வேண்டு²-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

இன்றியமையாதது ஆதல்; தேவையாதல். *தன்சீர் உள்வழித் தளைவகை வேண்டா* (*தொல்*.1315:3).

வேந்தன் *பெயர்*

மன்னன்; அரசன் *சீர்சால் வேந்தன் சிறப்பெடுத்துரைத்தலும்* (*தொல்*. 1010:12)

வேந்தன் சிறப்பெடுத்துரைத்தல் *பெயர்*

வெட்சித் திணையின் துறைகளுள் ஒன்று, வெட்சி அரசனின் பெருமையை விளக்கிக் கூறுதல் *சீர்சால் வேந்தன் சிறப்பெடுத்துரைத்தல்* (*தொல்* 1010:12).

வேந்தனது சிறப்பு *பெயர்*

உழிஞைத் திணையின் துறைகளுள் ஒன்று, தான் நினைத்ததை முடிக்க வல்ல மன்னனின் மாட்சியைக் கூறுதல் *உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பு* (*தொல்*. 1017.2)

வேந்து *பெயர்*

மன்னன். *வேந்துவிடு தொழிலில் படையும் கண்ணியும்* (*தொல்*.1584:1).

வேம்பு *பெயர்*

இளவேனிற் காலத்தில் கொத்துக்கொத்தாக நறுமணமிக்க வெண்ணிறப் பூக்களை மலர்விப்பதும், பெரிய அடிமரத்தை உடையதும், நீண்டநாள் உயிர்வாழக் கூடியதும், மருத்துவப் பயன்மிக்கதும் ஆகிய மரம், வேப்ப மரம். *போந்தே வேம்பே ஆர்என வரூஉம்* (*தொல்*.1010:4)

வேய் *பெயர்*

வெட்சித் திணையின் துறைகளுள் ஒன்று, பகைவர் நாட்டு நடப்புகளை உளவறிந்துவந்து தன் அரசுக்குத் தெரிவித்தல்; ஒற்று அறிதல் *ஒற்றின் ஆகிய வேயே* (*தொல்* 1008:3).

வேல் *பெயர்*

1. மரவகை *பூல்வேல் என்றா ஆல்என் கிளவியொடு* (*தொல்*. 376:1).

2. போர்க் கருவிகளுள் ஒன்று; வேலாயுதம்; ஈட்டி, குந்தம். *வில்லும் வேலும் கழலும் கண்ணியும்* (*தொல்*. 1586:1).

வேலன் *பெயர்*

வெறியாடுபவன். *வெறிஅறி சிறப்பின் வெவ்வாய் வேலன்* (*தொல்*. 1010:1).

வேழம் *பெயர்*

யானை. *வேழக்கு உரித்தே விதந்து களிறு என்றல்* (*தொல்*. 1536)

வேள்வி *பெயர்*

இறைவனுக்குரிய படையல் பொருள்களை நெய்யுடன் நெருப்பில் இட்டுச் செய்யும் வழிபாட்டு வகை; யாகம்; ஓமம். *கபிலை கண்ணிய வேள்வி நிலையும்* (*தொல்* 1039:6).

வேள்விநிலை *பெயர்*

பாடாண் திணையின் துறைகளுள் ஒன்று; யாகம் புரிந்த அந்தணர்களுக்குக் கறவை மாடுகளை வழங்கும் அறக்கொடையைச் சிறப்பிக்கை *கபிலை கண்ணிய வேள்வி நிலையும்* (*தொல்*.1039:6)

வேளாண் *பெயர்*

1. பயிர்த்தொழில்; விவசாயம். *வேளாண் மாந்தர்க்கு உழுதூஉண் அல்லது* (தொல். 1583:1).

2 விருந்தோம்பல்; உதவிபுரிதல் வேளாண் எதிரும் விருப்பின் கண்ணும் (தொல். 1057:8)

வேற்றுமை *பெயர்*

1. வேறுபாடு *யாப்பினும் பொருளினும் வேற்றுமை உடையது* (தொல். 1409:5).

2. பெயர்ச்சொல் ஒன்றைச் செயப்படுபொருள், கருவி, கொள்வோன், நீக்கம், உடைமை, இடம் முதலியனவாக வேறுபடுத்தும் இலக்கணச் செய்கை. *வேற்றுமை குறித்த புணர்மொழி நிலையும்* (*தொல்* 113:1)

வேற்றுமைக்கிளவி[1] *பெயர்*

உண்மையான அன்புடையார்மாட்டும் அவர்களை அயலார்போலக் கருதிச் சொல்லப்படும் சொற்கள், மனவேறுபாடு காட்டும் மொழிகள். *வேற்றுமைக் கிளவி தோற்றவும் பெறுமே* (*தொல்*. 1109:3)

வேற்றுமைக் கிளவி[2] *பெயர்*

வேற்றுமை உருபு. *ஐஎனப் பெயரிய வேற்றுமைக் கிளவி* (தொல். 556:2).

வேற்றுமைத்தொகை *பெயர்*

ஆறு தொகை மொழிகளுள் ஒன்று; ஒரு சொற்றொடரில் வேற்றுமை உருபு மறைந்திருகை. *வேற்றுமைத் தொகையே வேற்றுமை இயல* (தொல் 896:2)

வேற்றுமையல்வழி *பெயர்*

காண்க அல்வழி வேற்றுமை *யல்வழித் திரிபிடன்* இலவே (தொல். 148:3)

வேற்றுமையுருபு *பெயர்*

பெயர்ச்சொல்லோடு பின்னொட்டாக இணைந்து வேற்றுமைப் பொருண்மையை உணர்த்தும் இடைச்சொல் *அவ்வாறென்ப வேற்றுமையுருபே* (தொல். 114:2).

வேறு *பெயர்*

சொல்லப்பட்டதைத் தவிர மற்றொன்று; பிறிதொன்று. ஒருபொருள் குறித்த வேறுபெயர்க் கிளவி (தொல். 526:1)

வேறுபடு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

1 மற்றொரு விதமாக ஆதல்; மாறுதல் சொல்லிய தொடையொடு வேறுபட்டு இயலின் (தொல் 1360.1)

2 தனிமையாதல். *அறிவும் புலனும்* வேறுபட *நிறீஇ* (தொல். 1146:9).

வேறுபாடு *பெயர்*

மாற்றம். மேலைக் கிளவியொடு வேறுபாடு இலவே (தொல். 706:10).

வேறுவேறு *பெயரடை*

மாறுபட்ட; வெவ்வேறான; வித்தியாசமான. *பிறப்பின்* ஆக்கம் வேறுவேறு *இயல* (தொல்.83:7).

வேனில் *பெயர்*

கோடைக்காலம் நடுவு *நிலைத் திணையே நண்பகல் வேனிலொடு* (தொல். 958:1).

வை

வை[1] *பெயர்*

வ் என்னும் மெய்யின்மீது ஐகார உயிர்சேரப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

வை[2] *பெயர்*

கூர்மை. *வையே கூர்மை* (தொல் 871).

வை[3]-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

1. அமைத்தல். *கூற்றிடை வைத்த குறிப்பினான* (தொல். 1424:6).

2. ஓர் இடத்தில் இடுதல், இருக்கச் செய்தல். *சீருடைப் பெரும்பொருள் வைத்தவழி மறப்பினும்* (தொல். 1100:5)

வைகறை *பெயர்*

கதிரவன் தோன்றும் காலம்; அதிகாலை. *வைகறை விடியல் மருதம்* (தொல். 956 இளம் பாடம்).

வைகுறு *பெயர்*

இரவின் பிற்கூறு. *வைகுறு விடியல் மருதம்* (தொல். 956 நச்சர் பாடம்)

வைசிகன் *பெயர்*

வணிகன். *வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை* (தொல். 1580 பதிப்புப்பாடம்).

வைசியன் *பெயர்*

வாணிபம் புரிபவன்; வணிகன் *வைசியன் பெறுமே வாணிக வாழ்க்கை* (தொல். 1580 ஆய்வுப்பாடம்).

வைப்பு *பெயர்*

கலிப்பாவின் இறுதி உறுப்பாகிய சுரிதகம். *போக்கியல் வகையே வைப்பெனப் படுமே* (தொல்.1396:1)

வையம் *பெயர்*

உலகம் *படுதிரை வையம் பாத்திய பண்பே* (தொல் 949:3)

வொ

வொ *பெயர்*

வ் என்னும் மெய்யின்மீது ஒகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்

வோ

வோ *பெயர்*

வ் என்னும் மெய்யின்மீது ஓகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

வௌ

வௌ *பெயர்*

வ் என்னும் மெய்யின்மீது ஔகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ழ

ழ் *பெயர்*

தமிழ் நெடுங்கணக்கில் பதினைந்தாம் மெய்யெழுத்து.

ழ *பெயர்*

ழ் என்னும் மெய்யின்மீது அகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்யெழுத்து; நாக்கின் நுனி மேல்நோக்கிச் சென்று மேல்அண்ணத்தை வருட மிடற்று வளியால் பிறக்கும் ஒரு மாத்திரை அளவுள்ள இடையின உயிர்மெய்க் குறில். *நுனிநா அணரி அண்ணம் வருட ரகார ழகாரம் ஆயிரண்டும் பிறக்கும்* (தொல் 95); *இடையெழுத்து என்ப யரல வழள* (தொல். 21).

ழகரம் *பெயர்*

ழ் என்னும் எழுத்து. *ழகரவுகரம் நீடிடன் உடைத்தே* (தொல். 262:1).

ழகரவுகரம் *பெயர்*

உகர உயிர் எறிய ழ் என்னும் மெய்; ழு. *ழகரவுகரம் நீடிடன் உடைத்தே* (தொல். 262:1)

ழகரம் *பெயர்*

ழ் என்னும் மெய்யெழுத்து. *ரகர ழகாரம் குற்றொற்று ஆகா*(தொல். 49:2).

ழா

ழா *பெயர்*

ழ் என்னும் மெய்யின்மீது ஆகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ழி

ழி *பெயர்*

ழ் என்னும் மெய்யின்மீது இகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

ழீ

ழீ *பெயர்*

ழ் என்னும் மெய்யின்மீது ஈகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ழு

ழு *பெயர்*

ழ் என்னும் மெய்யின்மீது உகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

ழூ

ழூ *பெயர்*

ழ் என்னும் மெய்யின்மீது ஊகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ழெ

ழெ *பெயர்*

ழ் என்னும் மெய்யின்மீது எகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

ழே

ழே *பெயர்*

ழ் என்னும் மெய்யின்மீது ஏகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ழை

ழை *பெயர்*
ழ் என்னும் மெய்யின்மீது ஐகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ழொ

ழொ *பெயர்*
ழ் என்னும் மெய்யின்மீது ஒகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

ழோ

ழோ *பெயர்*
ழ் என்னும் மெய்யின்மீது ஓகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ழௌ

ழௌ *பெயர்*
ழ் என்னும் மெய்யின்மீது ஔகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ள

ள் *பெயர்*
தமிழ் நெடுங்கணக்கில் பதினாறாம் மெய்யெழுத்து.

ள *பெயர்*
ள் என்னும் மெய்யின்மீது அகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்யெழுத்து; நாக்கின் நுனி பருத்து மேற்பல்லின் அடிப்பகுதியை வருட மிடற்று வளியால் பிறக்கும் ஒரு மாத்திரை அளவுள்ள இடையின உயிர்மெய்க் குறில் *நாவிளிம்பு வீங்கி அண்பல் முதல் உற ஆவயின் அண்ணம் ஒற்றவும் வருடவும் லகார ளகாரம் ஆயிரண்டும் பிறக்கும்* (தொல். 96); *இடையெழுத்தென்ப யரல வழள* (தொல். 21).

ளஃகான் *பெயர்*
ள் என்னும் மெய்யெழுத்து. *லளஃகான் முன்னர் யவவும் தோன்றும்* (தொல் 24:2)

ளகாரம் *பெயர்*
ள் என்னும் மெய்யெழுத்து. *ளகார இறுதி ணகார இயற்றே* (தொல் 397)

ளகாரை *பெயர்*
ள் என்னும் மெய்யெழுத்து *ஞகாரை முதலா ளகாரை ஈற்று* (தொல் 1499:1)

ளா

ளா *பெயர்*
ள் என்னும் மெய்யின்மீது ஆகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ளி

ளி *பெயர்*
ள் என்னும் மெய்யின்மீது இகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்

ளீ

ளீ *பெயர்*

ள் என்னும் மெய்யின்மீது ஈகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ளு

ளு *பெயர்*

ள் என்னும் மெய்யின்மீது உகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

ளூ

ளூ *பெயர்*

ள் என்னும் மெய்யின்மீது ஊகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ளெ

ளெ *பெயர்*

ள் என்னும் மெய்யின்மீது எகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

ளே

ளே *பெயர்*

ள் என்னும் மெய்யின்மீது ஏகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ளை

ளை *பெயர்*

ள் என்னும் மெய்யின்மீது ஐகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ளொ

ளொ *பெயர்*

ள் என்னும் மெய்யின்மீது ஒகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

ளோ

ளோ *பெயர்*

ள் என்னும் மெய்யின்மீது ஓகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ளௌ

ளௌ *பெயர்*

ள் என்னும் மெய்யின்மீது ஔகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ற

ற் *பெயர்*

தமிழ் நெடுங்கணக்கில் பதினேழாம் மெய்யெழுத்து.

ற *பெயர்*

ற் என்னும் மெய்யின்மீது அகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்யெழுத்து; நாக்கின் நுனிப்பகுதி

மேலே சென்று மேல்அண்ணத்தை ஒற்ற நெஞ்சு வளியால் பிறக்கும் ஒரு மாத்திரை அளவுள்ள வல்லின உயிர்மெய்க் குறில். *அணரி நுனிநா அண்ணம் ஒற்ற றஃகான் னஃகான் ஆஇரண்டும் பிறக்கும்* (தொல். 94); *வல்லெழுத்து என்ப கசட தபற* (தொல் 19).

றஃகான் *பெயர்*
ற் என்னும் மெய்யெழுத்து *னஃகான் றஃகான் நான்கன் உருபிற்கு* (தொல். 124)

றகரம் *பெயர்*
ற் என்னும் மெய்யெழுத்து. *இல்என் கிளவிமிசை றகரம் ஒற்றல்* (தொல். 356:2)

றகாரம் *பெயர்*
ற் என்னும் மெய்யெழுத்து. *நான்கன் ஒற்றே றகாரம் ஆகும்* (தொல் 443)

றா

றா *பெயர்*
ற் என்னும் மெய்யின்மீது ஆகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

றி

றி *பெயர்*
ற் என்னும் மெய்யின்மீது இகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

றீ

றீ *பெயர்*
ற் என்னும் மெய்யின்மீது ஈகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

று

று *பெயர்*
ற் என்னும் மெய்யின்மீது உகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்

றூ

றூ *பெயர்*
ற் என்னும் மெய்யின்மீது ஊகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

றெ

றெ *பெயர்*
ற் என்னும் மெய்யின்மீது எகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

றே

றே *பெயர்*
ற் என்னும் மெய்யின்மீது ஏகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

றை

றை *பெயர்*
ற் என்னும் மெய்யின்மீது ஐகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

றொ

றொ *பெயர்*

ற் என்னும் மெய்யின்மீது ஒகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

றோ

றோ *பெயர்*

ற் என்னும் மெய்யின்மீது ஓகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

றௌ

றௌ *பெயர்*

ற் என்னும் மெய்யின்மீது ஔகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

ன

ன் *பெயர்*

தமிழ் நெடுங்கணக்கில் பதினெட்டாவது மெய்யெழுத்து.

ன *பெயர்*

ன் என்னும் மெய்யின்மீது அகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்யெழுத்து; நாக்கின் நுனிப்பகுதி மேலே சென்று மேல்அண்ணத்தை ஒற்ற மூக்கு வளியால் பிறக்கும் ஒரு மாத்திரை அளவுள்ள மெல்லின உயிர்மெய்க் குறில். *அணரி நுனிநா அண்ணம் ஒற்ற றஃகான் னஃகான் ஆஇரண்டும் பிறக்கும்* (தொல். 94); *மெல்லெழுத்து ஆறும் பிறப்பின் ஆக்கம் சொல்லிய பள்ளி நிலையின ஆயினும் மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும்* (தொல். 100); *மெல்லெழுத்து என்ப ஙஞண நமன* (தொல். 20).

னஃகான் *பெயர்*

ன் என்னும் மெய்யெழுத்து. *னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல்* (தொல். 489).

னகரம் *பெயர்*

ன் என்னும் மெய்யெழுத்து. *அகர முதல னகர இறுவாய் முப்பஃது என்ப* (தொல். 1:2).

னகாரம் *பெயர்*

ன் என்னும் மெய்யெழுத்து. *னகார இறுவாய்ப் பதினெண் எழுத்தும் மெய்என மொழிப* (தொல் 9).

னகாரை *பெயர்*

ன் என்னும் மெய்யெழுத்து. *னகாரை முன்னர் மகாரம் குறுகும்* (தொல் 52).

னா

னா *பெயர்*

ன் என்னும் மெய்யின்மீது ஆகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

னி

னி *பெயர்*

ன் என்னும் மெய்யின்மீது இகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

னீ

னீ *பெயர்*
ன் என்னும் மெய்யின்மீது ஈகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

னு

னு *பெயர்*
ன் என்னும் மெய்யின்மீது உகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

னூ

னூ *பெயர்*
ன் என்னும் மெய்யின்மீது ஊகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

னெ

னெ *பெயர்*
ன் என்னும் மெய்யின்மீது எகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

னே

னே *பெயர்*
ன் என்னும் மெய்யின்மீது ஏகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

னை

னை *பெயர்*
ன் என்னும் மெய்யின்மீது ஐகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

னொ

னொ *பெயர்*
ன் என்னும் மெய்யின்மீது ஒகர உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய்க் குறில்.

னோ

னோ *பெயர்*
ன் என்னும் மெய்யின்மீது ஓகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்.

னௌ

னௌ *பெயர்*
ன் என்னும் மெய்யின்மீது ஔகார உயிர் ஏறப் பிறக்கும் உயிர்மெய் நெடில்

பிற்சேர்க்கை:1

பனம்பாரனார் சிறப்புப்பாயிரம்

(எண்-அடிஎண்)

அத்து *இடை*

சாரியைகளுள் ஒன்று. *செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு* (6).

அதங்கோட்டாசான் *பெயர்*

அதங்கோடு என்னும் ஊரைச் சேர்ந்த ஆசிரியர். *அதங்கோட்டாசாற்கு* (11).

அரில் *பெயர்*

ஐயவினா (இளம்.); குற்றம் (நச்சர்.) *அதங்கோட்டாசாற்கு அரில்தபத் தெரிந்து* (11).

அவை *பெயர்*

மன்னனின் கொலு மண்டபம், (கற்றோர் நிறைந்த கூட்டமும் ஆம்). *நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து* (9).

அறம் *பெயர்*

மெய் (இளம்.); தருமம் (நச்சர்.). *அறம்கரை நாவின் நான்மறை முற்றிய* (10).

அறு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

இல்லாமல் போதல். *புலம்தொகுத்தோனே போக்குஅறு பனுவல்* (8).

ஆய் *பெயரெச்சம்*

ஆகிய. *வழக்கும் செய்யுளும் ஆய் இரு முதலின்* (4).

ஆயிடை *பெயர்*

அவ்விடம் *வடவேங்கடம் தென்குமரி ஆயிடை* (1-2).

இயற்கை *பெயர்*

இயல்பு. *செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு* (6).

இரு *பெயரடை*

இரண்டு ஆகிய. *வழக்கும் செய்யுளும் ஆஇரு முதலின்* (4).

உலகம் *பெயர்*

மக்கள் (இளம்.), ஆசிரியர் (நச்சர்.). *தமிழ்கூறு நல் உலகத்து* (3).

எண்ணு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஆராய்தல். *முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணி* (7).

எழுத்து *பெயர்*

எழுத்திலக்கணம் *எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி* (5).

என *வினையெச்சம்*

என்று (சொல்லும்படி). *தொல்காப்பியன் எனத் தன்பெயர் தோற்றி* (14).

ஐந்திரம் *பெயர்*

இந்திரனால் இயற்றப்பெற்ற இலக்கணம். *ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்* (13-14).

காண்(ணு)-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

கூர்ந்து நோக்குதல்; ஆழமாக ஆராய்தல். *முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணி* (7)

கரை-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

சொல்லுதல் *அறம்கரை நாவின் நான்மறை முற்றிய* (10)

காட்டு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

தெரிவித்தல், அறிவித்தல்; உணர்த்துதல். *மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி* (12).

குமரி *பெயர்*

ஓர் ஆறு, குமரி முனை. *வடவேங்கடம் தென்குமரி* (1)

கூறு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

சொல்லுதல், பேசுதல். *தமிழ் கூறும் நல் உலகத்து* (3).

சிவணு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

பொருந்துதல். *செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு* (6).

செந்தமிழ் *பெயர்*

செம்மையான தமிழ்மொழி. *செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு* (6).

செம் *பெயரடை*

செம்மையான; சிறப்புகள் அனைத்தும் உடைய. *செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு*(6).

செய்யுள் *பெயர்*

இயற்றப்பெற்ற நூல்கள். *வழக்கும் செய்யுளும் ஆஇரு முதலின்* (4).

சொல் *பெயர்*

சொல் இலக்கணம். *எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி* (5).

தபு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

கெடுதல். *அரில்தபத் தெரிந்து* (11)

தமிழ் *பெயர்*

தமிழ்மொழி *தமிழ்கூறு நல் உலகத்து* (3)

தரு *பெயரெச்சம்*

அளிக்கின்ற. *நிலம்தரு திருவிற் பாண்டியன்* (9).

தன் *பதிலிப் பெயர்*

தன்னுடைய *தொல்காப்பியன் எனத் தன்பெயர் தோற்றி* (14).

திரு *பெயர்*

செல்வம். *நிலம்தரு திருவிற் பாண்டியன்* (9).

தெரி-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஆராய்ந்து கூறுதல் *அரில்தபத் தெரிந்து* (11).

தென் *பெயரடை*

தெற்குத் திசையில் உள்ள. *வடவேங்கடம் தென்குமரி* (1).

தொகு-த்தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

திரட்டுதல் *புலம் தொகுத்தோனே* (8).

தொல்காப்பியன் *பெயர்*

நூலாசிரியரின் பெயர் *தொல்காப்பியன் எனத் தன்பெயர் தோற்றி* (14)

நல் *பெயரடை*

நன்மை பொருந்திய. *தமிழ்கூறு நல் உலகத்து* (3)

நாடு-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

ஆராய்தல். *எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி* (5).

நா *பெயர்*

நாக்கு *அறம்கரை நாவின் நான்மறை முற்றிய* (10)

நால் *பெயரடை*

நான்கு ஆகிய *நான்மறை முற்றிய அதங்கோட்டாசாற்கு* (10-11).

நிலம் *பெயர்*

நாடு. *செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு* (6)

நிலந்தரு திருவிற் பாண்டியன் *பெயர்*

பாண்டிய மன்னன் ஒருவன். *நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து* (9)

நிறுத்து-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

நிலைபெறச்செய்தல், நிலைநாட்டுதல். *பல்புகழ் நிறுத்த படிமையோனே* (15).

நிறை-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

அறிவு நிரம்புதல் *ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்* (13-14).

நீர் *பெயர்*

கடல். *மல்குநீர் வரைப்பின்* (13)

நூல் *பெயர்*

இலக்கணம் *முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணி* (7)

படிமையோன் *பெயர்*

தவசி. *பல்புகழ் நிறுத்த படிமையோனே* (15)

பல் *பெயரடை*

பலவாகிய *பல்புகழ் நிறுத்த* (15).

பனுவல் *பெயர்*

நூல் *புலம் தொகுத்தோனே போக்கறு பனுவல்* (8)

பாண்டியன் *பெயர்*

செழிய மரபினன்; பாண்டி நாட்டு மன்னன். *நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து* (9)

புகழ் *பெயர்*

பெருமை பாராட்டும் சொல்; இசை, கீர்த்தி *பல்புகழ் நிறுத்த படிமையோனே* (15)

புலம் *பெயர்*

இலக்கணம். *புலம் தொகுத்தோனே போக்கறு பனுவல்* (8).

பெயர் *பெயர்*

ஒருவரைச் சுட்டும் குறியீடு; நாமம். *தொல்காப்பியன் எனத் தன்பெயர் தோற்றி* (14).

பொருள் *பெயர்*

பொருள் இலக்கணம் *எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி* (5)

போக்கு *பெயர்*

நூலின் குற்றம். *புலம் தொகுத்தோனே போக்கு அறு பனுவல்* (8).

மயங்கு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

ஒன்றைப் பிறிதொன்றாகக் கருதுதல்; குழம்புதல்; மருளுதல். *மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி* (12).

மரபு *பெயர்*

முறைமை. *மயங்கா மரபின் எழுத்து முறை காட்டி* (12)

மல்கு-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

நிறைதல்; நிரம்புதல். *மல்குநீர் வரைப்பின்* (13)

மறை *பெயர்*

வேதம். *நான்மறை முற்றிய அதங்கோட்டாசாற்கு* (10-11).

முதல் *பெயர்*

காரணம் (இளம்.); அடி (நச்சர்.). *வழக்கும் செய்யுளும் ஆஇரு முதலின்* (4)

முந்து-தல் *செயப்படுபொருள் குன்றிய வினை*

முற்படுதல் *முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணி* (7)

முற்று-தல் *செயப்படுபொருள் குன்றா வினை*

கற்றுத் தேர்தல், முழுப்புலமை பெறுதல் *அறம்கரை நாவின் நான்மறை முற்றிய* (10)

முறை *பெயர்*

அடைவு; அமைதி; இலக்கணம். *மயங்கா மரபின் எழுத்து முறை காட்டி* (12).

முறைப்பட *வினையெச்சம்*

ஒழுங்காக; அடைவாக; சரியாக *முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணி* (7)

வட *பெயரடை*

வடக்குத் திசையில் உள்ள *வடவேங்கடம் தென்குமரி* (1)

வரைப்பு *பெயர்*

உலகம். *மல்குநீர் வரைப்பின்* (13).

வழக்கு *பெயர்*

பேச்சுமொழி. *வழக்கும் சொல்லும் ஆஇரு முதலின்* (4).

வேங்கடம் *பெயர்*

திருமலை; திருப்பதியில் உள்ள மலை. *வடவேங்கடம் தென்குமரி* (1).

பிற்சேர்க்கை : 2

தொல்காப்பிய நூல் அமைப்பைப் பற்றிய பழைய பாடல்கள்

(பாடியோர் பெயரும் காலமும் அறியப் பெறாதவை)

(வெண்பாக்கள்)

எழுத்ததிகாரத்தின் இயல்வரிசை

நூலின் மரபு மொழிமரபு நுண்பிறப்பு
மேலைப் புணர்ச்சி தொகைமரபு - பாலாம்
உருபியலின் பின்னுயிர் புள்ளி மயக்கம்
தெரிவரிய குற்றுகரம் செப்பு (1990)

எழுத்ததிகார நூற்பாத் தொகை

எழுத்தி காரத்துச் சூத்திரங்க ளெல்லாம்
ஒழுக்கிய வொன்பதோத் துள்ளும் - வழுக்கின்றி
நானூற் றிருநாற்பான் மூன்றென்று நாவலர்கள்
மேனூற்று வைத்தார் விரித்து. (1991)

சொல்லதிகாரத்தின் இயல்வரிசை

கிளவியாக் கம்மே கிளர்வேற் றுமைசொல்
உறவேற் றுமைமயக்க மோங்கும் - விளிமரபு
தேற்றும் பெயர்வினைச்சொல் சேரும் இடையுரிச்சொல்
தோற்றிய வெச்சவியல் சொல். (1992)

சொல்லதிகார நூற்பாத் தொகை

தோடவிழ்பூங் கோதாய் சொல்லதி காரத்துள்
கூடிய வொன்பதியற் கூற்றிற்கும் - பாடமாம்
நானூற் றறுபத்து நான்கேநன் னூற்பாக்கள்
கோனூற்று வைத்த குறி (1993)

(எழுசீர் விருத்தம்)

கிளவியோர் அறுபான் இரண்டுவேற் றுமையில்
கிளர்இரு பஃதிரண்(டு) ஏழ்ஐந்(து)
உளமயங் கியலாம் விளியின்முப் பான்ஏழ்
உயர்பெயர் நாற்பதின் மூன்று

தெளிவினை யியல்ஐம் பானுடன் ஒன்று
செறியிடை யியலில்நாற் பான்எட்(டு)
ஒளிர்உரி யியல்ஒன் பதிற்றுப்பத் துடன்எட்(டு)
ஒழி(பு)அறு பானின்மேல் ஏழே (1994)

(வெண்பாக்கள்)

பொருளதிகாரத்தின் இயல் வரிசை

ஈட்டும் அகத்திணையும் ஏய்ந்த புறத்திணையும்
காட்டும் களவியலும் கற்பியலும் - மீட்டும்
பொருளியல்மெய்ப் பாடு(உ)வமம் போற்றிய செய்யுள்
மரபியலும் ஆம்பொருளின் வைப்பு. (1995)

பொருளதிகார நூற்பாத் தொகை

பூமலிமென் கூந்தால் பொருளியலின் சூத்திரங்கள்
ஆவஅறு நூற்றறுபத் தைந்தாகும் - மூவகையால்
ஆயிரத்தின் மேலும் அறுநூற்றுப் பஃதென்ப
பாயிரத்தொல் காப்பியங்கற் பார். (1996)

இப்பழம் பாடல்களைத் திரு மு. இராகவையங்கார் தம் பெருந்தொகையில் தொகுத்துள்ளார். இங்கே கொடுக்கப் பட்டிருப்பவை அத்தொகுப்பின் தொடர் எண்கள் ஆகும்.

சொல்லதி காரத்துச் சூத்திரங்கள் எல்லாம்
சொல்லிய ஒன்பான்ஓத் துள்ளுமே - சொல்லிய
நானூற் றறுபத்து மூன்றிரண்டு நாவலவர்
மேல்நூற்று வைத்தார் விரித்து.

டாக்டர் உ.வே.சா நூலகச் சுவடி 73-இல் உள்ள வெண்பா.

பிற்சேர்க்கை:3

அதிகார இயல் பெயர்விளக்கம்*

சிறப்புப்பாயிரம்

ஒரு நூலைப் படிப்பவருக்கு அறிமுகப்படுத்தும் முன்னுரை. அதில் நூலாசிரியரின் பெயர், நூலின் வகைமை (முதல், வழி, சார்பு), வழங்கும் நிலப்பரப்பு, நூலின் பெயர், கூறப்படும் பொருண்மை, நூலைக் கற்பதற்கு உரியவர் (அதிகாரி), நூல் எழுந்த காரணம், கற்பதனால் பெறும் பயன், நூல் அரங்கேற்றப்பெற்ற இடம், காலம் ஆகிய செய்திகள் இடம்பெறும்.

1. எழுத்ததிகாரம்

எழுத்திலக்கணம் உணர்த்தினமையான் பெற்ற பெயர்.

1.1. நூன்மரபு

எழுத்ததிகாரத்தில் சொல்லப்படும் எழுத்திலக்கணத்தினை ஒருவகையில் தொகுத்து உணர்த்துதலின் இப்பெயர்த்து (இளம்.).

தொல்காப்பியம் என்னும் நூற்கு மரபு ஆம் துணைக்கு வேண்டுவனவற்றைத் தொகுத்து உணர்த்தினமையின் இப்பெயர்த்து ஆயிற்று (நச்சர்.).

1.2. மொழிமரபு

மொழிகளுக்கு (சொற்கள்) எழுத்தான்வரும் மரபு உணர்த்தினமையின் மொழிமரபு எனப்பட்டது (இளம்.)

மேல் எழுத்து உணர்த்திய பின்னர், அவை தம்முள் தொடருமாறும் உணர்த்தி, அவ்வெழுத்தான் ஆம் மொழியது மரபு உணர்த்துகின்றமையின், இவ்வோத்து மொழிமரபு எனக் காரணப்பெயர்த்து ஆயிற்று (நச்சர்.).

1.3. பிறப்பியல்

எழுத்துகளது பிறப்பு உணர்த்தினமையான் பெற்ற பெயர்.

1.4. புணரியல்

மொழிகள் புணர்தற்குரிய கருவியின் இயல்பு கூறினமையின் புணரியல் எனப்பட்டது (இளம்.).

மொழிமரபில் கூறி மொழிகளைப் பொதுவகையால் புணர்க்கும் முறைமை உணர்த்தினமையில் புணரியல் என்பது இவ்வோத்திற்குப் பெயர் ஆயிற்று (நச்சர்.).

1.5. தொகைமரபு

மேல் அகத்து ஓத்தினுள் இருபத்து நான்கு ஈற்றினும் விரிந்து முடிவனவற்றை எல்லாம் தொகுத்து முடித்தலின் தொகைமரபு எனப்பட்டது (இளம்.).

** தொல்காப்பிய நூற்பகுதிகள் உணர்த்தும் இலக்கணச் செய்திகளைத் தொடர்ச்சியாக அறிந்து கொள்ள வாய்ப்பாக இங்கு அதிகார இயல்பெயர்கள் அகரவரிசையில் தரப்படாமல் நூலில் உள்ள வரிசையில் கொடுக்கப்பட்டுள்ளன*

உயிர்ஈறும் புள்ளி ஈறும் மேலை அகத்து ஓத்தினுள் முடிக்கும்வழி ஈறுகள் தோறும் விரித்து முடிப்பனவற்றை ஈண்டு ஓரோவொரு சூத்திரத்தான் தொகுத்து முடிபு கூறினமையின் இவ்வோத்துத் தொகைமரபு என்னும் பெயர்த்து ஆயிற்று (நச்சர்.).

1.6. உருபியல்

உருபுகளோடு பெயர் புணர் இயல்பு உணர்த்தினமையான் பெற்ற பெயர்.

1.7. உயிர்மயங்கியல்

உயிர்ஈறு வன்கணத்தொடும் சிறுபான்மை பிற கணத்தொடும் மயங்கிப் புணரும் இயல்பு உணர்த்தலின் பெற்ற பெயர்.

1.8. புள்ளிமயங்கியல்

புள்ளி ஈறு (மெய்யெழுத்து இறுதி) வன்கணத்தோடும் சிறுபான்மை பிற கணத்தோடும் மயங்கிப புணரும் இயல்பு உணர்த்தினமையான் பெற்ற பெயர்.

1.9. குற்றியலுகரப் புணரியல்

குற்றியலுகர ஈறு வருமொழியொடு புணரும் இயல்பு உணர்த்தினமையின் குற்றியலுகரப் புணரியல் எனப்பட்டது (இளம்.).

குற்றியலுகரம் என்று கூறப்பட்ட எழுத்துப் பொருட்பெயரோடும் எண்ணுப்பெயர் முதலியவற்றோடும் புணரும் முறைமை உணர்த்தினமையில் குற்றியலுகரப் புணரியல் என்னும் பெயர்த்து ஆயிற்று (நச்சர்.).

2. சொல்லதிகாரம்

சொல் இலக்கணம் உணர்த்தினமை காரணத்தால் சொல்லதிகாரம் என்னும் பெயர்த்து (இளம். முதலியோர்).

மேற்சொல்லப்பட்ட எழுத்தான் இயன்று பொருள் அறிவிக்கும் சொற்களைப் பாகுபடுத்துவதால் சொல்லதிகாரம் என்னும் பெயர்த்து (தெய்வச்.).

2.1. கிளவியாக்கம்

கிளவிகள் பொருள்மேல் ஆமாறு உணர்த்தினமையின் கிளவியாக்கம் என்னும் பெயர்த்து (இளம்.,கல்.).

வழுக்களைந்து சொற்களை ஆக்கிக் கொண்டமையான் இவ்வோத்துக் கிளவியாக்கம் ஆயிற்று (சேனா., நச்சர்.).

கிளவியாக்கம் கிளவியது ஆக்கம் என விரியும். அதற்குப் பொருள் சொல்லினது தொடர்ச்சி என்றவாறு. சொற்கள் ஒன்றோடு ஒன்று தொடர்ந்து பொருள்மேல் ஆகும் நிலைமையைக் கிளவியாக்கம் என்றார் (தெய்வச்.).

2.2. வேற்றுமையியல்

வேற்றுமை எனப்பட்ட சிலபொருள் உணர்த்தினமையின் வேற்றுமை இயல் என்னும் பெயர்த்து (இளம்., கல்.).

இவ்வோத்து செயப்படுபொருள் முதலியனவாகப் பெயர்ப்பொருளை வேறுபடுத்து உணர்த்தலின் வேற்றுமை ஓத்து என்று காரணப்பெயர் பெற்றது (நச்சர்., தெய்வச்.).

2.3. வேற்றுமை மயங்கியல்

வேற்றுமை தம்மின் மயங்கினமை உணர்த்தினமையின் வேற்றுமை மயங்கியல் என்னும் பெயர்த்து (இளம்.).

தன்பொருளின் தீராது பிறிது ஒன்றன் பொருட்கண் செல்லும் பொருள் மயக்கமும், தன் பொருளின் தீர்ந்து பிறிது ஒன்றன் பொருட்கண்செல்லும் உருபு மயக்கமும் என்னும் இருவகை மயக்கமும் உணர்த்தலின் வேற்றுமை மயங்கியல் என்னும் பெயர்த்து ஆயிற்று (நச்சர்.).

உருபும் பொருளும் உடன் மயங்குதலும், ஒரு வழி உருபே மயங்குதலும் ஒன்றற்குரியதனோடு ஒன்று மயங்குதலும் இரண்டும் ஒத்து மயங்குதலும், ஒரு பொருண்மை ஒன்றற்கே உரியது ஆகாது பலவற்றோடு மயங்குதலும், ஒன்றனது ஒரு பொருளோடு ஒன்று மயங்குதலும், ஒன்றனது பல பொருளோடு ஒன்று மயங்குதலும், ஒன்றற்கு உரிமை பூண்டு எடுத்து ஓதின பொருள்வழி மயங்குதலும், ஓதாத பொருள்வழி மயங்குதலும், ஒன்று தன் மரபாய் மயங்குதலும், இலக்கணவழக்கு உள்வழி மயங்குதலும், இலக்கணம் இல்வழி மயங்குதலும், மயக்க வகையான் மயங்குதலும், ஒன்றனொடு பொருள் முடியாது தொடர்ந்து அடுக்கி மயங்குதலும், தொகையுள் மயங்குதலும், தொகை இல்வழி மயங்குதலும், உருபு வேற்றுமையாய் மயங்குதலும், உருபும் உருபும் மயங்குதலும் என்று இன்னோரன்ன வேற்றுமை மயக்கம் பல கூறலின் வேற்றுமை மயங்கியல் என்னும் பெயர்த்து ஆயிற்று (கல்.)

ஒன்றற்கு உரிய மரபு ஒன்றனோடு மயங்குதலும், ஒன்றற்கு உரிய பொருள் ஒன்றனொடு மயங்குதலும் கூறினமையால் பெற்ற பெயர் (தெய்வச்.).

2.4. விளிமரபு

விளிவேற்றுமையது இலக்கணம் உணர்த்தினமையான் பெற்ற பெயர்.

2.5. பெயரியல்

பெயர்ச்சொல் உணர்த்தினமையான் பெற்ற பெயர்.

2.6. வினையியல்

வினைச்சொல் ஆமாறு உணர்த்திய எடுத்துக்கொண்டான். அதனால் இவ்வோத்து வினையியல் என்னும் பெயர்த்து ஆயிற்று (இளம்., சேனா.).

வினை இலக்கணம் உணர்த்தினமையின் இவ்வோத்து வினையியல் எனக் காரணப்பெயர் பெற்றது (நச்சர்., கல்.).

வினைச்சொல் உணர்த்தினமையாற் பெற்ற பெயர் (தெய்வச்.).

2.7. இடையியல்

இடைச்சொல் உணர்த்திய எடுத்துக்கொண்டார். அதனான் இவ்வோத்து இடையியல் என்னும் பெயர்த்து ஆயிற்று (சேனா., நச்சர்., தெய்வச்.).

இடைச்சொல் இலக்கணம் உணர்த்துதலான் இடைச்சொல் ஓத்து என்னும் பெயர்த்து (கல்.).

2.8. உரியியல்

உரிச்சொல் உணர்த்தினமையான் பெற்ற பெயர்.

2.9. எச்சவியல்

எல்லா ஓத்தினுள்ளும் எஞ்சிய பொருள்களை உணர்த்தினமையான் பெற்ற பெயர்.

3. பொருளதிகாரம்

பொருளினது இலக்கணம் உணர்த்தினமையின் இது பொருளதிகாரம் என்னும் பெயர்த்து ஆயிற்று (நச்சர்.).

3.1. அகத்திணையியல்

அகத்திணைக்கு எல்லாம் பொது இலக்கணம் உணர்த்துதலின் அகத்திணையியல் என்னும் பெயர்த்து ஆயிற்று (நச்சர்.).

3.2. புறத்திணையியல்

புறப்பொருள் உணர்த்தினமையால் பெற்ற பெயர்.

3.3. களவியல்

களவியல் என்பது களவொழுக்கத்தை உணர்த்தினமையால் பெற்ற பெயர்.

3.4. கற்பியல்

கற்பியல் என்பது கற்புக்கு இலக்கணம் உணர்த்தினமையால் பெற்ற பெயர்(இளம்.).

களவு கற்பு என்னும் கைகோள் இரண்டனுள் கற்பு உணர்த்தினமையின் கற்பியல் என்னும் பெயர்த்து ஆயிற்று (நச்சர்.).

3.5. பொருளியல்

பொருள் இயல்பு உணர்த்தினமையால் பெற்ற பெயர் (இளம்.).

இவ்வோத்துப் பொருள் இலக்கணம் உணர்த்தினமையில் பொருளியல் என்னும் பெயர்த்து ஆயிற்று (நச்சர்.).

3.6. மெய்ப்பாட்டியல்

மெய்ப்பாட்டியல் என்பது மெய்ப்பாடு உணர்த்தினமையால் பெற்ற பெயர் (இளம்.).

மெய்ப்பாடு என்பன சிலபொருள் உணர்த்தினமையின் மெய்ப்பாட்டியல் என்னும் பெயர்த்தாயிற்று (பேரா.).

3.7. உவம இயல்

ஒருபுடை ஒப்புமைபற்றி உவமை உணர்த்தினமையால் பெற்ற பெயர்.

3.8. செய்யுளியல்

செய்யுள் இலக்கணம் உணர்த்தினமையால் பெற்ற பெயர்.

3.9. மரபியல்

பொருட்கு மரபு உணர்த்தினமையான் பெற்ற பெயர்.

பிற்சேர்க்கை:4

தொல்காப்பியம் நூற்பாத்தொகை

தொல்காப்பியம்
(1-1614)

- **எழுத்ததிகாரம்** (1-484) 484 நூற்பாக்கள்
  1. நூன்மரபு (1-33) 33 நூற்பாக்கள்
  2. மொழிமரபு (34-82) 49 நூற்பாக்கள்
  3. பிறப்பியல் (83-103) 21 நூற்பாக்கள்
  4. புணரியல் (104-143) 40 நூற்பாக்கள்
  5. தொகைமரபு (144-173) 30 நூற்பாக்கள்
  6. உருபியல் (174-203) 30 நூற்பாக்கள்
  7. உயிர்மயங்கியல் (204-296) 93 நூற்பாக்கள்
  8. புள்ளி மயங்கியல் (297-406) 110 நூற்பாக்கள்
  9. குற்றியலுகரப் புணரியல் (407-484) 78 நூற்பாக்கள்
- **சொல்லதிகாரம்** (485-947) 463 நூற்பாக்கள்
  1. கிளவியாக்கம் (485 - 546) 62 நூற்பாக்கள்
  2. வேற்றுமையியல் (547-569) 23 நூற்பாக்கள்
  3. வேற்றுமை மயங்கியல் (570-604) 35 நூற்பாக்கள்
  4. விளி மரபு (605-641) 37 நூற்பாக்கள்
  5. பெயரியல் (642-684) 43 நூற்பாக்கள்
  6. வினையியல் (685-733) 49 நூற்பாக்கள்
  7. இடையியல் (734-781) 48 நூற்பாக்கள்
  8. உரியியல் (782-880) 99 நூற்பாக்கள்
  9. எச்சவியல் (881-947) 67 நூற்பாக்கள்
- **பொருளதிகாரம்** (948-1614) 667 நூற்பாக்கள்
  1. அகத்திணையியல் (948-1005) 58 நூற்பாக்கள்
  2. புறத்திணையியல் (1006-1040) 35 நூற்பாக்கள்
  3. களவியல் (1041-1091) 51 நூற்பாக்கள்
  4. கற்பியல் (1092-1144) 53 நூற்பாக்கள்
  5. பொருளியல் (1145-1197) 53 நூற்பாக்கள்
  6. மெய்ப்பாட்டியல் (1198-1224) 27 நூற்பாக்கள்
  7. உவமையியல் (1225-1262) 38 நூற்பாக்கள்
  8. செய்யுளியல் (1263-1502) 240 நூற்பாக்கள்
  9. மரபியல் (1503-1614) 112 நூற்பாக்கள்

பிற்சேர்க்கை:5

தொல்காப்பியப் பொருளடைவு
எழுத்ததிகாரம்

(எண்கள் : நூற்பா எண்கள்)

1. நூல்மரபு (1-33)

முதல் எழுத்துகள்:1; சார்பு எழுத்துகள்:2; குறில்கள்:3; நெடில்கள்:4-6; மாத்திரை:7; உயிர் எழுத்துகள்:8; மெய் எழுத்துகள்:9-12; மகரக்குறுக்கம்:13-14 வரிவடிவம்:15-16; உயிர்மெய் எழுத்துகள்:17-18; வல்லினம்:19; மெல்லினம்:20; இடையினம்:21; மெய்ம்மயக்கம் :22-30; சுட்டு:31; வினா:32; அளவு இறந்து உயிர்த்தல்:33.

2. மொழிமரபு (34-82)

குற்றியலிகரம்:34-35; குற்றியலுகரம்:36-37; ஆய்தம்:38-40; உயிரளபெடை:41-42; ஓர் எழுத்து ஒரு மொழி:43-44; எழுத்தின் அடிப்படையில் சொல்வகை:45; தனி மெய் ஒலிக்கும் முறை:46; மெய்ம்மயக்கப்புறநடை:47; ஈர் ஒற்று உடனிலை:48; தனிக்குறிலை அடுத்து வராத மெய்கள்:49; குறிலிணையைஅடுத்த மெய் நெடில்அடுத்த மெய்யாகக் கருதப்படும்:50; செய்யுளில் ‘போலும்’ என்பது ‘போன்ம்’ என வரும்:51-52; சொல்லில் எழுத்தின் நிலை.53; எழுத்துப்போலி:54-56; ஐகாரக்குறுக்கம்:57; யகரத்திற்கு இகரம் போலி:58; மொழி முதல் எழுத்துகள்:59-68; மொழி இறுதி எழுத்துகள்:69-81; மகர னகரம் மயங்காத சொற்கள்:82.

3. பிறப்பியல் (83-103)

எழுத்துகளின் பொதுப்பிறப்பு இடமும் முயற்சியும்:83; உயிர் மிடற்றுவளியில்:84; அ.ஆ அங்காத்தல்:85; இ,ஈ,எ,ஏ,ஐ ஐந்தும் அண்பல் முதல் நாவிளிம்பு:86; உ,ஊ,ஒ, ஓ,ஔ ஐந்தும் இதழ் குவிதல்:87-88; க,ங முதல் நா அண்ணம்:89; ச,ஞ இடை நா அண்ணம்:90 ட,ண நுனி நா அண்ணம்:91; இவை ஆறும் மூவகை:92; த,ந:93; ற,ன:94; ர,ழ:95; ல,ள:96; ப,ம:97; வ:98; ய:99; மெல்லெழுத்துகள் மூக்குவளியிசையால்:100; சார்பு எழுத்துகளின் பிறப்பு:101; வடமொழி மறையில் எழுத்து அளவீடு:102; தமிழில் எழுத்து அளவீடு 103

4. புணரியல் (104-143)

எல்லாச் சொற்களின் முதலும் ஈறும் உயிரும் மெய்யுமாய் அடங்கும்:104; மெய் ஈறு புள்ளி பெறும்:105; குற்றியலுகரஈறு:106; உயிர்மெய் ஈறு:107; நிறுத்த சொல்லும் வரு சொல்லும்:108; சொற்கள் புணரும் நிலை:109; திரிபின் மூவகை:110; அடைச்சொற்களும் புணரும்:111; மருஉ மொழிகளும் புணரும்:112; வேற்றுமை,அல்வழி,சாரியை:113; வேற்றுமை உருபுகள்:114; கு,கண் உருபுகளின் புணர்ச்சி:115; அது உருபின் அகரம் கெடுதல்:116; வேற்றுமை உருபுகளின் இடம்:117; பெயர்வகை உயர்திணை அஃறிணை:118; சாரியைகளின் இடம்:119; சாரியைகள்:120; இன் சாரியையின் இகரம் ‘ஆ’ முன் கெடுதல்:121, இன் சாரியையின் னகரம் றகரமாதல்:122; வற்றுச் சாரியை அற்று ஆதல்:123; கு உருபுமுன் னகரம் றகரம் ஆதல்:124; அன் சாரியையின் ஈறு ற் ஆதல்.125; அத்துச்

சாரியையின் அகரம் கெடுதல்:126; இக்குச் சாரியையின் இகரம் கெடுதல்:127-128; அக்குச் சாரியை அ ஆதல்:129; அம் சாரியை திரிதல்:130; அம் சாரியை இயல்பாய் நிற்றல்:131; இன் உருபிற்கு இன் சாரியை வராது:132; சாரியைகட்குப் பொது இலக்கணம்:133; அத்து, வற்றுச் சாரியைப் புணர்ச்சி:134; எழுத்துச் சாரியைகள்:135-138; உடல்மேல் உயிர்:139; உயிர் பிரிந்த மெய்:140; உடம்படு மெய்:141; புணர்ச்சியில் ஓசை வேறுபட்டால் பொருள் மாற்றம்:142-143

5. தொகை மரபு (144-173)

கசதப முன் மெல்லினம் தோன்றுமிடம்:144; வருசொல் இயல்பாகும் இடம்:145; அதற்குப் புறனடை:146; ணன ஈற்றுப் புணர்ச்சி:147-149; லகர னகர ஈற்றுமுன் தகர நகரம்:150; ணளமுன் தகர நகரம்:151; முன்னிலை வினைமுன் வன்கணம்:152; அதற்குப் புறனடை:153; உயர்திணைப் பெயர்ப்புணர்ச்சி:154; அதற்குப் புறனடை:155; விரவுப் பெயர் இயல்பாதல்:156; மூன்றாம் வேற்றுமைத் திரிபு:157; இரண்டாம் வேற்றுமைத் திரிபு:158; இகர ஐகார ஈற்றுப் பெயர்களுக்கு அல்வழி முடிபு:159; இகர ஐகார ஈற்று ஏழாம் வேற்றுமைப் புணர்ச்சி:160; நெடில் குறில்முன் மெய்கள்:161; குறில்முன் ஒற்று இரட்டா இடம்:162-163; புள்ளி இறுதி யகரம் பெறாத இடம்:164; அளவு நிறை எண்ணுப் பெயர்களின் புணர்ச்சி:165; அரை என்பதோடு புணர்ச்சி:166; குறை என்பதனோடு புணர்ச்சி:167; குற்றியலுகர ஈற்றுக்கு இன் சாரியை:168; கலம் அத்துச் சாரியை பெறுதல்:169; பனையும் காவும் இன் சாரியை பெறுதல்:170; அளவு நிறைப் பெயர்களின் மொழிமுதல்:171; இவ்வியலுக்குப் புறனடை:172; யாவர் யாது என்னும் சொற்களின் மரூஉ முடிபு:173.

6. உருபியல் (174-203)

உயிர் நெடில் ஈறுகள்:174; அகர ஈற்றுப் பன்மைக்கு வற்றுச் சாரியை:175; யா என் வினாவுக்கும் வற்றுச் சாரியை:176; உகர ஈற்றுச் சுட்டு:177; ஐகார ஈற்றுச் சுட்டு:178; ஐகார ஈற்று வினா:179; நீ உருபேற்கையில் நின் ஆகும்:180; ஓகார ஈற்றுப் பெயர்:181; அ, ஆ ஈற்று மரப்பெயர்:182; ஞ ந மெய்யீற்றுக்கு இன் சாரியை:183; வகர ஈற்றுச் சுட்டுக்கு வற்றுச் சாரியை:184; ஏனை வகரத்திற்கு இன் சாரியை:185; மகர ஈற்றுக்கு அத்துச் சாரியை:186; சில மகர ஈற்றுக்கு இன் சாரியை:187; நும் என்ற சொல் சாரியை பெறாது:188; தாம், நாம், யாம் என்பவை உருபொடு புணர்தல்:189; எல்லாம் என்னும் சொல்:190-191; எல்லாரும் எல்லீரும் என்பன உருபொடு புணர்தல்:192; தான், யான் என்பன:193; அழன் புழன் என்பன:194; ஏழ் என்பதற்கு இன் சாரியை:195; குற்றியலுகரத்திற்கு இன் சாரியை:196; நெடிலடுத்த குற்றுகரம் இரட்டும்:197; அவை இன் சாரியை பெறா:198; குற்றுகர ஈற்று எண்ணுப் பெயர் அன் சாரியை பெறும்:199; பஃது அன் சாரியை பெறும்:200; யாது, அஃது அன் சாரியை பெறும்:201; திசைப்பெயர் ஏழனுருபொடு புணர்தல் 202; இவ்வியற்குப் புறனடை:203.

7. உயிர் மயங்கியல் (204-296)

அகர ஈற்றுக்கு வன்கணம் அல்வழியில்:204; அகர ஈற்று வினை, இடை:205; அகரச் சுட்டு மென்கணத்தோடு:206; அகரச் சுட்டு இடைக்கணம்:207; அகரச்சுட்டு உயிர்க்கணம்:208; அகரச்சுட்டு செய்யுளில் நீளும்:209; சாவ வன்கணம் வருவழி இறுதி

வகரம் கெடுதல்:210; அகர ஈற்றுள் இயல்பு:211; வாழிய என்பதில் இறுதி அகரம் கெடுதல்:212; அம்ம இறுதி நீடல்:213; பல என்னும் சொல்:214; பல,சில என்பன தம்முன் தாம் வருதல்:215-216; அகர ஈற்றுப் பெயர்க்கு வன்கணம் வேற்றுமையில்:217; அகர ஈற்று மரப்பெயர்ப் புணர்ச்சி:218; மகப் பெயர்ச் சாரியை:219-220; பல என்பது வற்றுச் சாரியை பெறும்:221; ஆகார ஈறு அல்வழியில் அகர ஈறு போன்றது:222; செய்யா என்னும் வினையெச்சம்:223 உம்மைத்தொகை முடிபு:224; ஆகார ஈற்றுள் இயல்பு:225; ஆகார ஈற்று வேற்றுமைப் புணர்ச்சி:226; அகர எழுத்துப் பேறு:227; இரா என்பதற்கு எழுத்துப் பேறு வராது:228; நிலா என்பது அத்துச் சாரியை பெறும்:229; ஆகார ஈற்று மரப்பெயர்கள்:230-232; ஆ என்பது னகர ஒற்றும் அகரச் சாரியையும் பெறும்:233; ஆன் முன் பவ்வீ:234; ஆகார ஈற்றில் சிலவற்றிற்குச் செய்யுள் முடிபு:235; இகர ஈற்றுப் பெயர்க்கு வேற்றுமை முடிபு:236; இனி அணி என்னும் இடைச்சொற்களும், வினையெச்சமும், சுட்டும்:237; இன்றி என்பதற்குச் செய்யுள் முடிபு:238; இகரச் சுட்டுப் புணர்ச்சி:239; தூணி பதக்கொடு புணர்தல்:240; நாழி உரியொடு புணர்தல்:241; பனி என்னும் காலப்பெயர்:242; வளி என்னும் பூதப்பெயர்:243; உதி மரப்பெயர்:244; புளி மரப்பெயர்:245; சுவைப் புளி:246-247; நாளின் பெயருக்கு வன்கணம் வரின் ஆன் சாரியை:248; திங்களின் பெயருக்கு இக்குச் சாரியை:249; ஈகார ஈற்றுப் பெயர் அல்வழி:250; ஈகார ஈற்றில் இயல்பு முடிபு:251-252; ஈகார ஈற்று வேற்றுமைப் புணர்ச்சி:253; நீ நின் ஆதல்:254; உகர ஈற்றுப் பெயர் அல்வழி:255; உகரச் சுட்டு:256-259; உகர ஈறு வேற்றுமை முடிபு:260; எரு, செரு என்பன:261; ழுகர ஈறு:262; ஒடு மரப்பெயர்:263; சுட்டுப் பெயர்ச் சாரியை:264; ஊகார ஈறு அல்வழி:265; ஊகார ஈற்று வினைச்சொற்கள்:266; ஊகார ஈறு வேற்றுமை:267; உகர எழுத்துப் பேறு:268; பூ என்பது வன்கணம் வந்துழி:269; ஊ ஊன் ஆதல்:270; அக்குச் சாரியை பெறுதல்:271; ஆடுஉ மகடூஉ என்பன:272; எகர ஒகர ஈறு அல்வழி:273; எகர ஒகர இடைச்சொற்கள்:274; ஏகார ஈறு அல்வழி:275; ஏகார ஈற்று இடைச்சொற்கள்:276; ஏகார ஈறு வேற்றுமை:277-278; சே மரப்பெயர்:279; சே விலங்குப் பெயர்:280; ஐகார ஈற்றுப் பெயர் வேற்றுமை முடிபு:281; சுட்டு முதல் ஐகார ஈறு:282; விசை, ஞெமை, நமை மரப்பெயர்கள்:283; பனை, விரை, ஆவிரை:284-286; ஐகார ஈற்று மாதப் பெயர்:287; மழை என்னும் சொல்:288; வேட்கை+அவா=வேணவா:289; ஓகார இறுதிப்பெயர் அல்வழி:290; ஓகார இடைச்சொல் முடிபு:291; ஒழியிசை ஓகாரம்:292; ஓகார ஈற்றுப்பெயர் வேற்றுமை:293; கோமுன் இல் கோயில்:294; ஓகார ஈற்றுக்கு ஒன் சாரியை:295; ஔகார ஈற்றுப்பெயர் இருவழியிலும்:296.

8. புள்ளிமயங்கியல் (297-406)

ஞகார ஈற்றுத் தொழிற்பெயர் வல்லெழுத்தின்முன்:297; அது ஞ, ந, ம, வ முன்:298; நகர ஈறு அல்வழிப் புணர்ச்சி:299; அது வேற்றுமைப்புணர்ச்சி:300; வெரிந் என்னும் சொல்:301-302; ணகர ஈறு:303-310; மகர ஈறு:311-332; னகர ஈறு:333-357; யகர ஈறு: 358-362; ரகர ஈறு:363-366; லகர ஈறு:367-378; வகர ஈறு:379-383; ழகர ஈறு:384-396; ளகர ஈறு:397-405; புறனடை:406.

9. குற்றியலுகரப் புணரியல் (407-484)

குற்றியலுகரவகைகள்:407; இடைத்தொடரில் ஈர் ஒற்று வாரா:408; அல்வழி வேற்றுமை இரண்டிலும் குற்றுகரம் வரும்:409; வன்தொடர்:410; குற்றியலிகரம்:411; நெடில் உயிர்த்தொடர் குற்றுகரம்:412-413; இடை, ஆய்தத்தொடர்:414; வன், மென் தொடர்:415; குற்றுகர மரப்பெயர்:416-417; நெடில் வன்தொடர்கள் அம் சாரியை பெறுதல்:418; மென்தொடர் அக்குச் சாரியை பெறல்:419; எண்ணுப்பெயர்:420; வண்டு,பெண்டு:421-422; வினா சுட்டுப் பெயர்கள்:423-425; குற்றியலுகரம் அல்வழிப் புணர்ச்சி:426; வன்தொடர்:427; மென்தொடர்:428-430; உண்டு என்னும் சொல்:431; திசைப்பெயர்:432-433; எண்ணுப்பெயர்:434-481; புறனடை:482-484.

சொல்லதிகாரம்

1. கிளவியாக்கம் (485-546)

திணைவகை:485; பால்:486-487; பேடி முதலிய சொற்கள்:488; ஆண்பால் ஈறு:489; பெண்பால் ஈறு:490; பலர்பால் ஈறு:491; ஒன்றன்பால் ஈறு:492; பலவின்பால் ஈறு:493; இந்த ஈறுகள் வினையிலும் வருதல்:494; பெயரும் வினையும் பால் ஒத்து வர வேண்டும்:495; பேடி என்னும் சொல்:496; வினா விடைகள்:497-500; தகுதி இயல்பு வழக்குகள்:501; செய்யுள் வழக்கு:502; இயற்கைப்பொருளைக் கூறும் முறை:503; செயற்கைப் பொருள்:504; காரணப்பொருள்:505; ஐயக்கிளவிகள்:506-509; வண்ணச் சினைச்சொல்:510; பால் வழுவமைதி:511; இடம் உணர்த்தும் சொற்கள்:512; தன்மை முன்னிலைக்கு உரியன.513; படர்க்கைக்கு உரியன:514; யாது எவன் என்பன:515-516; சினைமுதற் சொல் உம்மை பெறும்:517; நிலை இல்லாப் பொருள் உம்மை பெறும்:518; வணிக மரபு:519-520; சுட்டுப்பெயர்:521-524; சிறப்புப்பெயர்:525; ஒரு பொருளைக் குறிக்கப் பல சொற்கள் வரும்போது பயனிலை ஒன்றாக இருக்கவேண்டும்:526; தன்மையும் அஃறிணைச் சொல்லும் விரவி வருதல் உண்டு:527; ஒருமைக்கு உரிய சொற்கள்:528; வியங்கோள்.529; பொதுவினை:530-531; இரட்டைக்கிளவி:532; பெயர் இடும் முறை:533; எழுவாய்க்கு ஏற்புடைய வினைச்சொல் வரவேண்டும்:534; திணை விரவுப் பெயர் முடிபு:535; பல பொருள் ஒரு சொல்:536-540; திணைக்குப் புறனடை:541; பாலுக்குப் புறனடை:542; இடத்துக்குப் புறனடை:543; அஃறிணை ஈறு திரிந்து உயர்திணை முடிபு பெறுதல்:544; ஒரு சொல் தனக்கு இனமான மற்றவற்றையும் குறிக்கும்:545; சினைப்பெயரின் சாதியொருமை:546.

2. வேற்றுமையியல் (547-569)

வேற்றுமைகள் ஏழு:547; விளியோடு எட்டு:548; வேற்றுமையின் பெயரும் முறையும்:549; எழுவாய் வேற்றுமை:550-555; இரண்டாம் வேற்றுமை:556-557; மூன்றாம் வேற்றுமை:558-559; நான்காம் வேற்றுமை:560-561; ஐந்தாம் வேற்றுமை:562-563; ஆறாம் வேற்றுமை:564-565; ஏழாம் வேற்றுமை:566-567; வேற்றுமைத் தொகையை விரித்தல்:568-569.

3. வேற்றுமை மயங்கியல் (570-604)

இரண்டும் ஏழும் மயங்கல்:570-572; ஆறும் இரண்டும்:573; முதல் சினைப்பெயர்களில் முறையே இரண்டன் ஏழன் உருபுகள் சேரும்:574-575; பிண்டப்பெயரில்:576; ஒடுச் சொல்லுக்கு உரிய மரபு:577; மூன்றும் ஐந்தும் மயங்கல்:578; இரண்டன் உருபு ஏதுப்பொருளில் மூன்று ஐந்தாம் உருபுப்பொருள் தருதல்:579; ஆறும் நாலும் மயங்கல் :580; தடுமாறு தொழிற்பெயர்:581-582; ஓம்படைக் கிளவிக்கு இரண்டும் மூன்றும்:583; வாழ்ச்சிக்கிழமையில் ஆறும் ஏழும்:584; நாலும் ஆறும் மயங்கல்:585; ஐந்தும் இரண்டும் மயங்கல்:586; வேற்றுமை மயக்கம் மரபிற்கேற்ப வரவேண்டும்:587; உருபுகள் அடுக்கி வருதல்:588; உருபுகள் விரிந்து நிற்கும் இடங்கள்:589; உருபுகள் மாறியும் தொக்கும் வருதல்:590; தொடர் இறுதிக்கண் தொகாத உருபுகள்:591; வேற்றுமை உருபைப் பொருள் கொள்ளுதல்:592; எதிர்மறையிலும் வேற்றுமை பொருந்தும்:593; கு,ஐ,ஆன் உருபுகள் செய்யுளில் இறுதியில் அகரம் ஆகலும் ஆகாமையும்:594-595; நான்கன் வேற்றுமை மயக்கம்:596; ஏனை உருபுகளும் மயங்கும்:597; வேற்றுமை தோன்றக் காரணங்கள்:598-599; ஆகுபெயர்:600-604.

4. விளிமரபு : (605-641)

விளிவேற்றுமையின் இயல்பு:605-606; உயிர் ஈறுகள்:607-612; மெய் ஈறுகள்:613-636; விரவுப் பெயர்கள்:637; அஃறிணைப் பெயர் விளியேற்றல்:638; புறனடை:639; அம்ம என்னும் இடைச்சொல்:640; விளி ஏற்காத உயர்திணைப் பெயர்கள்:641.

5. பெயரியல் (642-684)

சொற்கள் பொருளைக் குறிப்பன:642-643; குறிப்பும் வெளிப்படையும்:644; சொற்களின் பாகுபாடு:645-646; பெயர்ச்சொல்:647-648; உயர்திணை:649-653; அஃறிணை:654-658; விரவுப்பெயர்:659-662; இயற்பெயர்:663; சினைப்பெயர்:664; சினைமுதற்பெயர்:665; முறைப்பெயர்:666; பெண்மைப்பெயர்:667; ஆண்மைப்பெயர்:668; பன்மைப்பெயர்:669; ஒருமைப்பெயர்:670; தாம் என்னும் சொல்:671; தான் என்பது:672; எல்லாம் என்பது:673-674; நீயிர், நீ, ஒருவர் என்பன:675-680; பெண்மகன் என்பது பெண் வினை கொள்ளும்:681; பெயர் ஈறு செய்யுளில் திரிதல்:682-684.

6. வினையியல் (685-733)

வினைச்சொல் இலக்கணம்:685; காலம்:686-687; வினைச்சொல் வகை:688; தன்மை வினைமுற்று:689-690; செய்கு வினைமுற்று:691; படர்க்கை வினைமுற்று:692-694; உயர்திணை வினைமுற்று:695-699; குறிப்பு வினைமுற்று:700-701; அஃறிணை வினைமுற்று :702-706; விரவு வினை:707-708; முன்னிலைப் பன்மை வினைமுற்று:709; இருதிணை ஐம்பாற்கும் உரியன:710; வியங்கோள் வினை:711; செய்யும் என்னும் முற்று:712; வினையெச்சம்:713-718; பெயரெச்சம்:719-723; செய்து என்னும் வினையெச்சம் எதிர்காலத்திலும் முடியும்:724; முக்காலத்திற்கும் உரிய இயற்கையை நிகழ்காலத்தில் கூறவேண்டும்:725; கால மயக்கம்:726-727; செயல்வேண்டும் வாய்பாட்டு முற்று:728; எதிர்மறைப் பொருளில் வினா:729; கால மயக்கம்:730; செயப்படுபொருளை வினைமுதல் போல் வழங்குதல்:731; கால மயக்கம்:732-733.

7. இடையியல் (734-781)

இடைச்சொல் இலக்கணம்:734; வகைகள்:735; நிற்குமிடம்:736; பல இடைச்சொற்கள்:737-766; குறிப்புப்பொருள் தருவன:767; உம்மை பற்றியன:768-770; ஈற்றேகாரம் ஒரு மாத்திரை பெறுதல்:771; எண்ணிடைச் சொற்கள்:772-779; இடைச்சொற் பொருள்:780; புறனடை:781.

8. உரியியல் (782-880)

உரிச்சொல் இலக்கணம்:782; உரிச்சொல் அரும்பொருளன:783; பல உரிச்சொற்கள் :784-872; உரிச்சொல் பொருள் உணர்த்தும் முறை:873; உரிச்சொற்கள் வேறு பொருளிலும் வரும்:874; பொருளுணர்ச்சி:875-878; உரிச்சொற்களை எழுத்துப் பிரித்துப் பார்த்தல் கூடாது:879; புறனடை:880.

9. எச்சவியல் (881-947)

செய்யுட்குரிய சொல்வகை:881; இயற்சொல்:882; திரிசொல்:883; திசைச்சொல்:884; வடசொல் 885-886; செய்யுள் விகாரம்:887; பொருள்கோள்:888-893; உறவுப்பெயர்கள் பிரியா:894; வேற்றுமை முதலிய தொகைகள்:895-904; வினைச்சொல் மரபுகள் சில:905; சொல் அடுக்கு:906-910; வினைமுற்று:911-913; எச்சங்கள்:914-925; அவையல் கிளவி:926-927; ஈ தா கொடு:928-932; இலக்கண வரையறை பெறாத சொல்வகைகள்:933; செய்யாய்:934; முன்னிலை ஈறு ஈ,ஏ:935; புதிய சொற்களை ஏற்றல்:936; குறைச்சொற்கள்:937-938; இடைச்சொல் மரபு:939; உரிச்சொல் மரபு:940; வினையெச்சம்:941; சொற்பொருள் அறிதல்:942-943; ஒருபொருட் பன்மொழி:944; ஒருமைப் பெயர் பன்மைக்கு ஆதல்:945; ஆற்றுப்படை மரபு:946; சொல்லதிகாரப் புறனடை:947.

பொருளதிகாரம்

1. அகத்திணையியல் (948-1005)

அகப்பொருளின் திணைகள்:948-949; பொருள்கள் மூன்று:950; முதல் பொருள்:951-962; உரிப்பொருள்:963-966; கருப்பொருள்:967-973; பிரிவு:974-984; மகளிர் மடலேறுதல் இல்லை:985; நற்றாய் கூற்று:986; தாயர் செல்லும் இடங்கள்:987-988; தோழிகூற்று:989; கண்டோர் கூற்று:990; தலைவன் கூற்று:991; மற்றவர்கள்:992; நிகழ்ந்ததை நினைத்தலும் கூறலும் திணையே:993-994; கூற்றுகளின் மரபு:995; உள்ளுறை உவமம்:996-999; கைக்கிளை:1000; பெருந்திணை:1001-1002; அகத்திணைக்குரிய யாப்பு:1003; அகத்திணையில் இயற்பெயர் பயிலாது:1004-1005.

2. புறத்திணையியல் (1006-1040)

வெட்சித்திணை:1006-1010; வஞ்சி:1011-1013; உழிஞை:1014-1018; தும்பை:1019-1022; வாகை:1023-1026; காஞ்சி:1027-1029; பாடாண்:1030-1040.

3. களவியல் (1041-1091)

களவு ஒழுக்கத்தின் இயல்பு:1041; ஊழால் விளைவது களவு:1042; ஐயம்:1043-1044; நோக்குதல்:1045-1046; ஆடவர் பண்பு:1047; மகளிர் இயல்பு:1048; களவொழுக்க

மனநிலை:1049; தலைவன் தன்மை:1050; தலைவன் கூற்றுகள்:1051-1052; பாங்கன்:1053-1056; தலைவியின் கூற்றுகள்:1057-1063; தோழியின் கூற்றுகள்:1064; செவிலி கூற்று:1065 நற்றாய்:1066-1067; தலைவி தன் வேட்கையை வெளிப்படுத்தாமை:1068; காதலர்களே தூதுவர் ஆதல்:1069; குறியிடம் சுட்டுதல்:1070-1072; தலைவி தலைவனுக்குத் தோழியைச் சுட்டுதல்:1073; செவிலியின் தன்மை:1074; தோழி செவிலியின் மகள்:1075; தோழியின் திறன்:1076; மதியுடம்படுதல்:1077; தோழியின் செயல்பாடு:1078-1079; பகல் இரவுக் குறிகள்:1080; இரவுக்குறி:1081; பகற்குறி:1082; அல்ல குறி:1083; குறியிடம் அன்றியும் அளவளாவல் உண்டு:1084; களவில் கூட்டத்திற்கு நாளும் நேரமும் கருதுதல்:1085; வரும் வழியின் இன்னல்களால் கூட்டம் தடை பெறாமை:1086; தலைவியின் பெற்றோர் முதலியோர்:1087-1088; தலைவனின் போக்குவரவால் அலர் தோன்றுதல்:1089; பிறர் அறியவோ அறியாமலோ மணத்தல்:1090; திருமணம் இல்லாமல் ஓதல் முதலிய பிரிவு இல்லை:1091.

4. கற்பியல் (1092-1144)

திருமணம்:1092-1095; தலைவனின் கூற்றுகள்:1096; தலைவி கூற்று:1097-1099; தோழி கூற்று:1100; காமக்கிழத்தியர் கூற்று:1101; பிற வாயில்களின் கூற்று:1102; செவிலி கூற்று:1103; அறிவர் கூற்று:1104-1105; தலைவன் ஊடும் இடங்கள்:1106; தலைவன் ஊடியபோது தோழி கூற்று:1107-1108; தலைவி ஊடல்:1109; தலைவனின் பணிவுப்பேச்சு:1110; தலைவியின் அன்புமொழி:1111; அலர்:1112-1114; வாயில்களின் வரையறை:1115-1117; கூத்தரின் கூற்று:1118-1119; இளையோர் கூற்று:1120-1121; தலைவனின் கலக்கத்திற்கு உரிய இடங்கள்:1122; தலைவி செயல்:1123-1124; போர்க்களத்திற்கு அகத்திணை மகளிர் செல்ல மாட்டார்கள்:1125-1126; பகைவரின் பிரிவில் பார்ப்பார் கூற்று:1127; வாயில்களின் தன்மை:1128-1129; தலைவிக்குத் தற்புகழ்ச்சி இல்லை:1130; தலைவனுக்குத் தற்புகழ்ச்சி உண்டு:1131; பாங்கன் தலைவனை எதிர்த்தல் உண்டு.1132-1133; வன்புறை:1134-1135; பாசறைப் புலம்பல்:1136; பரத்தையிற் பிரிவு:1137; கல்விப்பிரிவு.1138; காவல் பிரிவு:1139; பொருள்வயிற் பிரிவு:1140; வெளியிடங்களுக்குச் சென்று இன்பம் நுகர்தல்:1141; வயது முதிர்ந்தபின் தவவாழ்க்கை:1142; வாயில்களாவார்:1143; வினைமுற்றி மீளும் தலைவன் இடையில் தங்குதல் இல்லை:1144.

5. பொருளியல் (1145-1197)

பொருளின் தன்மை:1145; தலைவன் தலைவியர் கூற்றுகள்:1146; காதலர் கனவு:1147; தாயின் கனவு:1148; தோழி முதலிய நால்வர்:1149-1150; பிரிவின்கண் தலைவி இயல்பு:1151-1154; அறத்தொடு நிற்றல்:1155-1156; தாயர் களவை உணர்தல்:1157; பெண்மையின் நிறை:1158; வரைவு கடாதல்.1159-1160; தலைவனின் ஊர்திகள்:1161; சொல்மரபு:1162; பரிசப்பொருள்:1163; இற்செறிப்பு:1164-1165; உலக வழக்கை ஏற்றல்:1166; அறம்அல்லன பழிக்கப்பட்டன ஆகும்:1167-1168; எல்லா என்னும் சொல்:1169; உரிமையால் விளையும் ஒருமைப்பாடு.1170; அகப்பொருட் பாடல்களில் எண்:1171; இன்பம் என்பது உயிர்களின் இயல்பான வேட்கை:1172; பரத்தைமைக்கு நிலப்பாகுபாடு இல்லை:1173; உடன்போக்கு:1174; இரக்க உணர்வு:1175; புலவி:1176-1177; இறைச்சிப்பொருள்:1178-1180; தலைவன் புகழ்ந்தால் பிரிவானோ என அச்சம்:1181; ஊடல்:1182-1183; தலைவி

தலைவனை எதிர்ப்பட்டபோது கடிதல் இல்லை:1184; பிரிவாற்றாத சொற்கள்:1185; படைத்து மொழிதல் முதலிய உரைவகைகள்:1186-1190; உள்ளுறை:1191-1193; விலக்கப்பட்ட சில பண்புகள் சில நேரங்களில் சிறப்பு நோக்கி ஏற்கப்படும்:1194; அகத்திணையின் சொல்மரபுகள்:1195-1197.

6. மெய்ப்பாட்டியல் (1198-1224)

மெய்ப்பாடுகள்·1198-1200; நகை:1201; அழுகை:1202; இளிவரல்:1203 மருட்கை:1204; அச்சம்·1205; பெருமிதம்:1206; வெகுளி:1207; உவகை:1208; மெய்ப்பாட்டிற்கு உரிய பிற நிலைக்களன்கள்:1209; ஐந்திணைக்கு உரிய மெய்ப்பாடுகள்:1210-1218; பிரிவுக்கால மெய்ப்பாடுகள் 1219; அழிவில் கூட்டம்:1220-1221; காதலர்களுக்கு இருக்கவேண்டிய ஒப்புமை:1222; இருக்கக் கூடாதன:1223; மெய்ப்பாடுகள் மிக நுட்பமானவை:1224.

7. உவமையியல் (1225-1262)

உவமை வகை:1225-1226; உயர்ந்தனவே உவமை ஆகும்:1227; உவமையின் நிலைக் களன்கள்:1228-1229; முதல் சினை பற்றி வரும்:1230; உவமத்தொகை:1231; உவமை பொருளோடு ஒத்தல் வேண்டும்·1232; பொருள் உவமம்:1233; பெருமையும் சிறுமையும் கலந்து வரலாம்.1234; உவம உருபுகள்:1235-1241; நான்கு எட்டும் ஆகும்:1242; எட்டு மெய்ப்பாடுகளின்வழி சிறுமைபெருமை:1243; உவமப்பொருளை உணர்தல்:1244-1245; இரட்டைக் கிளவி:1246; உள்ளுறை உவமம்:1247-1258; ஏனை உவம வகைகள்:1259-1262.

8. செய்யுளியல் (1263-1502)

செய்யுள் உறுப்புகள்:1263; மாத்திரை எழுத்து:1264; அசை:1265-1268; குற்றியலிகரம் அலகு பெறா:1269; உகரங்கள்:1270-1272; சீர்:1273-1292; அடி:1293-1301; சீர்க்குரிய மரபுகள்:1302-1304; ஒற்றுகள் எழுத்தாக எண்ணப்படா:1305; வஞ்சியடி:1306-1308; அசை கூன் ஆதல்:1309; சீர் கூன் ஆதல்·1310; ஐவகைச் செய்யுளடிகள்:1311-1315; ஆசிரியத் தளை:1316; வஞ்சித்தளை:1317; வெண்பாவிற்கு உரிய அடிகள்:1318; கலிப்பா அடியும் தளையும்:1319-1321; இயற்சீர் வெள்ளடி:1322; ஐஞ்சீர் அடி:1323; அறுசீர்:1324; எழுசீர்:1325; முடுகியல் அடி:1326-1328; அகவலின் ஈற்றயலடி:1329; முச்சீரடிகள்:1330-1335; கலிப்பா ஈற்றடி:1336-1337; யாப்பு:1338-1339; மரபு·1340; அகவலோசை:1341; செப்பலோசை:1342; துள்ளல் ஓசை:1343; தூங்கல் ஓசை:1344; மருட்பா ஓசை:1345; தூக்கு இவ்வளவே·1346-1347; தொடைவகை:1348-1351; மோனை:1352; எதுகை:1353; எதுகை மோனைக்குக் கிளைஎழுத்துகளும் உரியன:1354; முரண்:1355; இயைபு:1356; அளபெடைத் தொடை:1357; பொழிப்புத் தொடை:1358; ஒரூஉத் தொடை:1359; செந்தொடை:1360; தொடைகளின் விரி:1361-1363; நோக்கு:1364; பா வகை:1365; பா நுவல் பொருள்:1366 இரு பாக்கள் முதன்மையானவை:1367-1368; வாழ்த்தியல் வகை:1369; புறநிலை வாழ்த்து:1370; வாயுறை வாழ்த்து முதலியன.1371; வாயுறை வாழ்த்து:1372; அவையடக்கியல்:1373; செவியுறை:1374; பாக்கள் சிலவற்றின் இயல்புகள்:1375-1377; வெண்பா வகை·1378; கைக்கிளை மருட்பா:1379; பரிபாடல்:1380-1382; சொற்சீர்:1383; அங்கதம்:1384-1386; செய்யுள் வெண்பா:1387-1389; கலிப்பாக்களின் வகை:1390;

ஒத்தாழிசைக்கலி:1391-1412; கலிவெண்பா:1413; கொச்சகக்கலி:1414; உறழ்கலி:1415; பாக்களின் அடி வரையறை:1416-1424; நூல்:1425-1431; உரை:1432-1434; பிசி:1435; முதுமொழி:1436; மந்திரம்:1437; குறிப்பு மொழி:1438; பண்ணத்தி:1439-1443; திணை:1444; களவு:1445; கற்பு:1446-1447; கூற்று:1448-1459 களம்:1460; காலம்:1461; பயன்:1462; மெய்ப்பாடு:1463-1464; எச்சம்:1465; முன்னம்:1466; பொருள்:1467; துறை.1468; மாட்டு:1469-1470; வண்ணம்:1471-1493; அம்மை:1494; அழகு:1495; தொன்மை:1496; தோல்:1497; விருந்து:1498; இயைபு:1499; புலன்:1500; இழைபு:1501; செய்யுளியலின் புறனடை.1502.

9. மரபியல் (1503-1614)

இளமைப்பெயர்கள்:1503; ஆண்பால் பெயர்கள்:1504; பெண்பால் பெயர்கள்:1505; பார்ப்பு,பிள்ளை:1506-1507; குட்டி, பறழ், குருளை:1508-1512; பிள்ளை:1513; மறி:1514; குட்டி:1515; மகவு,பிள்ளை,பறழ்,பார்ப்பு:1516; கன்று:1517-1520; குழவி:1521-1525; பிள்ளை,குழவி,கன்று,போத்து:1526-1527; இளமைப்பெயர்கள் வேறு இல்லை:1528; உயிர்களின் அறிவு 1529; ஓர் அறிவு உயிர்கள்:1530; ஈர் அறிவு உயிர்கள்:1531; மூவறிவு உயிர்கள்:1532; நாலறிவு உயிர்கள்:1533; ஐந்து அறிவு உயிர்கள்:1534; ஆறு அறிவு உயிர்கள்:1535; விலங்குகளின் ஆண்பால் பெயர்கள்:1536-1553; விலங்குகளின் பெண்பால் பெயர்கள்:1554-1570; சில விலங்குகளின் பால் நுவல் சொற்கள்:1571; பால் நுவல் கிளவிகள் இவ்வளவே:1572; அந்தணர்க்கு உரியன:1573; அரசர்க்கு உரியன:1574; அந்தணர்க்கு உரியன அரசர் பெறுவர்:1575-1576; ஊர், பெயர், கருவி:1577; தலைமையைக் குறிக்கும் மரபு:1578; போர்க்கருவிக்கு உரியவர்:1579 வணிகர்:1580; எண்வகைக் கூலங்கள்:1581; கண்ணி,தார் 1582; வேளாளர்:1583-1584; அந்தணருக்கு அரசுரிமை இல்லை:1585; குறுநில மன்னருக்கு உரியன 1586-1587; புறக்காழ்த் தாவரப் பெயர்:1588; அகக்காழ்த் தாவரப் பெயர்:1589; புல்வகையின் உறுப்புகள்:1590; மரவகையின் உறுப்புகள்:1591-1592; ஐம்பூதங்களின் கலப்பே உலகம்.1593; மரபு மீறலாகாது:1594-1595; வழக்கு:1596; இருவகை நூல்கள் 1597; முதல்நூல்.1598; வழிநூல்:1599; வழிநூல் வகைகள்:1600--1601; நூல்:1602-1603; நூற்பாவின் இயல்பு:1604; உரை வகைகள்:1605-1608; நூற் சிதைவு:1609; முதல்நூலில் குற்றம் இருக்காது:1610; வழிநூல்களில் குற்றம் ஏற்படலாம்:1611; நூற்குற்றங்கள் பத்து:1612; குற்றங்களின் மறுதலை குணங்கள் ஆகும்:1613; இலக்கிய உத்திகள் முப்பத்திரண்டு:1614.